# அழகான தவறு நீ

# 2

## இன்ஃபா

# அத்தியாயம் 1

நிஹாசினி பேசிய பேச்சுக்கள், ராஜாவை வெகுவாக காயப்படுத்தியிருக்க, தன் மன உணர்வுகளை முதல் முறையாக அவளிடம் கொட்டி முடித்தவன், அதன் கனம் தாளாமல் துவண்டு போனான்.

ஏற்கனவே ஒரு அட்டாக் வந்திருக்க, அடுத்ததாக ஒரு பேரதிர்ச்சியை தாங்க முடியாமல், அவன் இதயம் பலகீனமாகிப் போனது. கண்கள் செருக.., தலை துவள அவன் சரிய.., இந்த உலகத்தில் இருந்து தன் பயணத்தை முடிக்கத் துவங்கியிருந்தான் ராஜ்.

அவன் நிலையைப் பார்த்த நிஹாசினிக்கு நடப்பவற்றை நம்பவே சற்று நேரம் பிடித்தது.

‘‘ராஜ்..’’ தன் உயிரைக் கொடுத்து அலறியவள், அவனை உலுக்கி நினைவுக்கு கொண்டுவர போராடினாள்.

‘‘இங்கே பாருங்க.., உங்களால் என்னை விட்டு போக முடியாது. நான் போக விட மாட்டேன்..’’ பிதற்றியவள், அவனை உலுக்குவதை நிறுத்தவில்லை.

அவனுக்கு நேர்வது இன்னதென்று உணர்ந்தவள், தன் பலம் கொண்ட மட்டும் அவன் இதயத்தின்மேல் தன் இடக்கரத்தை வைத்து, வலக்கையால் குத்தினாள்.

‘‘ராஜ்.., ராஜ்..’’ ஒவ்வொரு குத்துக்கும் அவனை நினைவுக்கு கொண்டுவர போராடுவதை நிறுத்தவில்லை.

அவன் சற்று கூட அசையாமல் போகவே.., இதற்குமேல் தாமதிப்பது முடியாது எனப் புரியவே.., ‘‘அக்கா.., அக்கா..’’ வீறிட்டவள்.., தன் குரல் அவர்களை எட்டுமோ எட்டாதோ என்ற சந்தேகம் தோன்றவே..,

லிப்ட் இருப்பதையும் மறந்து படிகளில் தாவினாள்.., ‘‘அக்கா.., ராஜ்.., வாங்க..’’ அவள் அலறலில் வீடே அதிர..., சுஜாவுக்கும், தாரிணிக்கும் எட்டாதா என்ன?

‘‘அக்கா.., நிஹா அலறுற மாதிரி இருக்கு..’’ தாரிணி கேட்கும் முன்னர், சோபாவில் இருந்து எழுந்து ஓடியிருந்தார்.

‘‘நிஹா என்னம்மா..?’’ கேட்டவர், தன் வயதையும் மீறி படிகளில் ஏறினார் சுஜா.

‘‘அக்கா மெதுவா..’’ தாரிணி பதற, அதை அவர் கண்டுகொள்ளவே இல்லை.

‘‘அக்கா.., வாங்க.., ஐயோ.., வாங்களேன்..’’ அலறியவள்.., வந்த வேகத்தில் கால் தடுக்க, படிகளில் உருண்டாள்.

‘‘அம்மா..’’ அவள் ஆலற..,

‘‘அம்மாடி.., என்ன ஆச்சு.., ஐயோ.., என்ன இது..?’’ படிகளில் உருண்டவாறு வந்த நிஹாவைப் பார்த்து பரிதவித்தனர்.

‘‘என்னம்மா.., எதுக்கு இப்படி அழற..?’’ அவர் கேட்கும் முன்பே..

‘‘அக்கா.., ராஜ்.., ஹார்ட்.., வாங்க..’’ அவள் நெற்றியில் இடித்துக்கொண்டு, லேசாக கசிந்த ரத்தத்தை கூட அவள் கண்டுகொள்ளவில்லை.

‘‘ராஜா..., அவனுக்கு என்ன..?’’ படிகளில் மூன்று பெண்களும் ஓட, கூடவே லஷ்மியும், மற்ற வேலைக்காரர்களும் தொடர்ந்தனர்.

அறைக்குள் நுழைந்தவர்கள், ராஜா இருந்த நிலையைப் பார்த்து துடித்தே போனார்கள். ‘‘ராஜா...’’ மூன்று பெண்களும் அவனை சூழ்ந்துகொள்ள,

வீறிட்ட குழந்தையை, அவர்கள் பின்னால் வந்த லஷ்மி கைகளில் அள்ளிக் கொண்டாள்.

‘‘ஐயோ.., ராஜாவுக்கு என்ன..? பதறித் துடித்து அவனை எழுப்ப முயன்றனர்.

‘‘என்ன ஆச்சு..?’’

“அக்கா.., ராஜை பாருங்க.., ஏதாவது செய்ங்களேன்..” அவர் கைகளை பற்றிக் கொண்டாள்.

“அக்கா.., நான் அப்படி ஒரு அர்த்தத்தில் சொல்லவே இல்லை.., அவர்கிட்டே சொல்லுங்களேன்..” துடித்தாள்.

“ராஜா.., கண்ணா.., அம்மாவைப் பாருடா..” சுஜாவுக்கும் எதுவும் ஓடவில்லை.

அந்த நேரம் சற்று தெளிந்தவள் தாரிணி மட்டுமே.., இன்டர்காமுக்கு அருகில் ஓடியவர், தங்கள் பேமிலி டாக்டருக்கு அழைத்து, ஆம்புலன்ஸை வர வைத்தார்.

ராஜா உணர்வற்ற மரக்கட்டையாக கிடக்க, அவன்மேல் விழுந்து புரண்டு அழுது கொண்டிருந்தாள் நிஹாசினி.

சுஜாவும் அவனை உலுக்க.., தான் தைரியமாக இருக்கவேண்டிய நேரம் இதுவென உணர்ந்த தாரிணி, உணர்ந்து செயல்பட்டார். அவருக்கும் ராஜாவின் நிலை பெரும் அதிர்ச்சிதான். ஆனால், சுஜாவுக்கு அது பேரிடி என்பதை அவர் உணர்ந்து கொண்டார்.

அடுத்த அரைமணி நேரத்தில், அவர்கள் பேமிலி டாக்டர் அவனை பரிசோதிக்க அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டான் ராஜா.

சுஜா பித்துபிடித்த நிலையில் இருக்க, நிஹாவோ துடிதுடித்து புரண்டு அழுது கொண்டிருந்தாள்.

‘‘அக்கா.., எனக்கு ராஜ் வேணும்.., அவர் இல்லாமல்.., ஹையோ.., நான் அந்த அர்த்தத்தில் சொல்லவே இல்லையே..’’ விடாமல் அரற்றிக் கொண்டிருந்தாள்.

அவளை ஆறுதல்படுத்தக்கூட யாருக்கும் தெம்பில்லை. அவளது புலம்பல் வேறு அவர்களை எட்ட.., ‘இவள்தான் எதையோ சொல்லிவிட்டாள்..’ இரு பெண்களையும் ஒன்றுபோல் எண்ண வைத்தது.

தாரிணிக்கு கோபம் உச்சத்தில் ஏற.., ‘‘அப்படி என்னதான் சொல்லித் தொலைச்ச? எங்க புள்ள இப்படி உயிரை விடவே துணிஞ்சுட்டானே..’’ அவளைப் பிடித்து உலுக்க, அப்பொழுதுதான் சுஜா கலைந்தார்.

‘‘தாரிணி.., சும்மா இரு..’’

‘‘என்னக்கா சொல்றேள்..? சும்மா இருக்கறதா? இத்தனை மாசமா அதைத்தானே செஞ்சுண்டு இருக்கோம்.., இப்போ.., பாத்தேளா..? ராஜா..’’ அவர் கண்ணிலும் கண்ணீர் வழிய, பேச்சு தடை பட்டது.

‘‘இப்போ இவளை கோச்சுகிட்டா எல்லாம் சரியா போய்டுமா..?’’ தொண்டை அடைத்தது சுஜாவுக்கு.

“அதானே.., இவளை எப்போ தட்டி வச்சிருக்கணுமோ, அப்போவே செஞ்சிருக்கணும்.., சும்மா இருந்தோமே.., அதுதான் நாம பண்ண தப்பு..” அவளுக்கு ஆத்திரம் குறையவே இல்லை.

“என்னை என்ன வேண்ணா சொல்லுங்க. எனக்கு ராஜைப் பாக்கணும்..” எழுந்து ஓடியவள், சுஜாவின் கரத்தை பற்றிக் கொண்டாள்.

“எதுக்கு.., கொஞ்சம் நஞ்சம் இருக்க உசுரையும் பிடுங்கவா..?” வார்த்தைகள் அவளை மீறி வெளியேற,

“தாரிணி..” சுஜா பதற.., “அக்கா..” துடித்தே போனாள்.

“உங்க வாயால் அப்படி சொல்லாதீங்க.., எல்லாம் என் தப்புதான்.., என்னை கொன்னு போட்டுடுங்க..” தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

அது விஐபிக்கள் மட்டுமே அனுமதிக்கும் ப்ளாக் ஆகையால்.., இவர்களைத் தவிர அங்கே யாரும் இருக்கவில்லை.

“இப்போ அழுதால் ஆச்சா..? தப்பு பண்ணாத மனுஷங்க உலகத்தில் உண்டா..” தாரிணிக்கு இப்படித்தான் தன் அன்பை வெளிப்படுத்த முடிந்தது.

அவனை முதலில் வெறுத்து ஒதுக்கினாலும், தனக்கு குழந்தை பிறக்காது என தெரிந்த பிறகு, எத்தனையோ முறை,

சுஜாவும் தனாவும் ஒரு குழந்தையை தத்தெடுக்கச் சொல்லி கட்டாயப்படுத்திய பிறகு கூட, தங்கள் வீட்டுப் பிள்ளை, ராஜாவின்மேலேயே தன்னால் உள்ளார்ந்த அன்பை செலுத்த முடியாத பொழுது, வேறொரு பிள்ளையை தத்தெடுப்பது வெளி வேஷமே எனப் புரியவே அதை மறுத்தவர்.

அதைவிட, அவன் அன்பை பெறுவது மட்டுமே பிரதானம்.., தான் செய்த தவறுக்கு தண்டனையாக அவனது பாராமுகத்தை தாங்கத் தயாரானவள். அன்றுமுதல், அவன்மேல் அதீத பாசத்தை மனதுக்குள் வளர்த்தவள்.., தன் பாசத்தை மனதுக்குள் பொத்தி வைத்திருந்தவள்.

சில நாட்களாகத்தான் என்றாலும்.., அவன் தங்களோடு உரையாடுவதில் நெகிழ்ந்து போயிருந்தவருக்கு, அவன் நிலை பெரும் கவலையைக் கொடுத்தது. எனவேதான் அதை வார்த்தைகளில் கொட்டினாள்.

அவசரசிகிச்சைப் பிரிவுக்குள்ளோ.., மருத்துவர் தங்கவேலு அவன் உயிரைக் காக்க போராடிக் கொண்டிருந்தார். எலக்ரிக் ஷாக் கொடுத்து அவன் இதயத்துடிப்பை மீட்க அவர் போராட.., அவனோ.., அவருக்கு ஒத்துழைக்க மறுத்து பிடிவாதம் பிடித்தான்.

“சிஸ்டர்.., குயிக்..” ஜெல்லைத் தடவி, அவன் இதயத்தின் மேல் வைத்து எடுக்க, ஒரு முறை அவன் உடல் தூக்கிப் போட்டது. ஆனால்.., பலன் எதுவும் இருக்கவில்லை.

இரண்டாம் முறையும் அதுவே தொடர.., மூன்றாம் முறையோ.., அவர் அவன் இதயத்தில் வைக்கப்போன அந்த நிமிடம், வாசலில் இருந்த செவிலியை தள்ளி விட்டுவிட்டு, அறைக்குள் புயலென நுழைந்திருந்தாள் நிஹாசினி.

“ராஜ்..” அவர் அவன் இதயத்தில் வைக்கவும்.., அவள் வீறிடவும் சரியாக இருக்க, துடித்து அடங்கிய அவன் உடலும்.., கூடவே.., “ஹ்..ஆ..” அவன் சுவாசம் திரும்பவும் சரியாக இருந்தது.

“கோ அவுட்...” அவள் பக்கம் திரும்பி கத்தியவர்.., அடுத்த கட்டமாக சில உபகரணங்களை அவன் மேனியில் செலுத்த, அவளை இழுத்துக்கொண்டு செவிலி வெளியேறினாள்.

“என்னை விடுங்க.., நான் அவரைப் பாக்கணும்..” அவள் கைகளில் இவள் திமிற, அவளை அடக்குவதே பெரும் பாடாக இருந்தது.

அதைப் பார்த்த சுஜா.., “நிஹா.., கொஞ்சம் அமைதியா இரு. அவனுக்கு எதுவும் ஆகாது..” அவள் படும் துன்பம் பொறுக்காமல் அவளுக்கு ஆறுதல் அளித்தார். கட்டிய

மனைவியை விட, அவன்மேல் வேறு யாருக்கும் அதிக உரிமை கிடையாதே.

சில உண்மைகளை, நமக்கு கடினமாக இருந்தாலும் ஏற்றுத்தான் ஆகவேண்டும் என்ற உண்மை புரிந்தவர் ஆயிற்றே.

“ஆகாது தானே.., அவர் வேணும்.., நான் அவரோடவே இருக்கணும்.., என்னை உள்ளே விடச் சொல்லுங்க அக்கா.., சொல்லுங்களேன்..” அவர் கைகளை கெட்டியாக பற்றிக் கொண்டாள்.

அதே நேரம்.., தனாவும் குணாவும் வேகமாக வர.., வந்த வேகத்தில்.., “சுஜா, ராஜாவுக்கு என்ன? லஷ்மி போன் பண்ணி என்னவோ சொல்றா..? எங்களுக்கு ஒரு போன் பண்ணணும்னு உனக்குத் தோணவே இல்லையா..?” அவரும் பதறிபோயிருப்பது தெரிந்தது.

“இங்கே..” அவசரசிகிச்சைப் பிரிவைப் பார்வையால் தழுவியவரின் கண்களில் சிறு கலவரம்.

“தனா..” அவ்வளவு நேரமாக பிரம்மை பிடித்து இருந்தவர், தனக்கு ஆதரவு கொடுக்க ஒரு தோள் கிடைத்த தைரியத்தில்.., கண்ணீர் வழிய தழுதழுத்தார்.

அவரால் விஷயம் இன்னதென்று சொல்ல முடியவில்லை. உயிராய் இருக்கும் மகனுக்கு ஹார்ட் அட்டாக் என்று அவரால் எப்படிச் சொல்ல முடியும்?

தாரிணியிடம் குணா வினவ, ‘‘ராஜாவுக்கு ஹார்ட் அட்டாக்..’’ சின்னக் குரலில் உரைக்க, ஆண்களால் அதை நம்பவே முடியவில்லை.

‘‘ஹார்ட் அட்டாக்.., இங்கே என்ன நடக்குது சுஜா.., எதுவோ சரியில்லைன்னு நான் கேட்டப்போ எல்லாம்.., மொத்தமா மறைச்சுட்டு.., இப்போ.., எங்கே வந்து நிறுத்தியிருக்கு பாத்தியா..?’’ தன் ஒட்டுமொத்த சந்தேகமும் திரும்ப, சுஜாவை வன்மையாக சாடினார்.

‘‘இப்படி ஆகும்னு நான் நினைக்கலையே.., என் புள்ளை எல்லாத்தையும் மனசுக்குள் போட்டு புழுங்கி.., இப்போ உயிருக்கு போராடுறானே.., நான் என்ன செய்ய..? தனா.., டாக்டர் கிட்டே என்னன்னு கேளுங்க..’’ கணவனிடம் கெஞ்சினார்.

அழும் மனைவியிடம் தன் கோபத்தை கூட காட்ட முடியாமல், அமைதியாக அங்கிருந்த இருக்கையில் அமர்ந்துவிட்டார்.

‘‘எப்போ..? எப்படி..?’’ அவருக்கு அறிய வேண்டி இருந்தது. இதயத்தில் இரண்டு அடைப்பு இருக்கும் தானே.., மருந்து மாத்திரைகளில் ஓடிக் கொண்டிருக்க, வாழவேண்டிய அவன் மருத்துவமனையில், அதுவும் ஹார்ட் அட்டாக்கில் படுத்திருப்பதை அவரால் ஏற்கவே முடியவில்லை.

அவர் சோர்ந்துபோய் அமர்ந்ததைப் பார்த்த சுஜா பதறிப் போனாள். ‘‘என்னங்க.., நீங்க மனசை தளர விடாதீங்க.., அவன் வந்துடுவான்..’’ அவர் அருகில் அமர்ந்தார்.

கணவனின் உடல்நிலை அவருக்குத் தெரியுமே.., ‘‘இந்த உயிர் அவ்வளவு சீக்கிரம் போகாது சுஜா..’’ விரக்தியில் பேசினாரா? சாதாரணமாக உரைத்தாரா? சுஜாவால் அறிய முடியவில்லை.

‘‘அத்திம்பேர் என்ன பேசறேள்..’’ தாரிணிதான் குரல் கொடுத்தாள்.

‘‘வீட்ல பொம்பளைங்க எல்லாம் சேர்ந்து.., இல்ல.., நான் எதுவும் சொல்லலை.., எனக்கு அப்போவே தெரியும்.., இப்படி எதிலாவது கொண்டுவந்து நிறுத்துவீங்கன்னு.., ஆனா.., ராஜா..’’ அவரை மீறி, கண்களில் நீர் துளிர்த்தது.

அவர் அருகில் ஓடிய நிஹாசினி, ‘‘மாமா.., அக்காவை எதுவும் சொல்லாதீங்க.., எல்லாம் நான்தான்.., என்னால்தான்..,

கொஞ்சம் கொஞ்சமா அவர் நிம்மதியை கெடுத்து..,'' இன்னும் என்ன சொல்லியிருப்பாளோ..,

''நிஹா.., போதும்..?'' சுஜாவின் கண்டிக்கும் குரல் அவளைத் தேக்கியது.

''இன்னும் என்னத்த மறைக்கப் போறீங்க..? அதான் எல்லாம் வெட்ட வெளிச்சம் ஆகிடுச்சே..'' தாரிணி குமுற,

''இப்போ நம்ம பிள்ளை முக்கியமா.., இல்ல.., இவளை குற்றம் சுமத்துவது முக்கியமா? இப்படித்தான் நடக்கணும்னு விதி இருந்தால் யாரால் என்ன செய்ய முடியும்..?'' நிஹாவை அவ்வளவு சுலபமாக அவரால் விட்டுகொடுக்க முடியவில்லை.

ராஜா அவளை எவ்வளவு விரும்பினான் என்பதும்.., அவள்மேல் எவ்வளவு காதல் இருந்திருந்தால் அனைத்தையும் மனதுக்குள் போட்டுகொண்டு வளைய வந்திருப்பான்..' அவர் சிந்தித்தார்.

''அக்கா.., நான் பாவிக்கா.., அவர் மனசை புரிஞ்சுக்காமல்.., ஆண்டவா.., என் உயிரை வேண்ணா எடுத்துக்கோ.., அவரை விட்டுடு..'' தரையில் விழுந்த மீனாக அவள் துடிக்க, அங்கிருந்த யாராலும் அவளை கண்கொண்டு பார்க்க முடியவில்லை.

தனா சுஜாவை ஏறிட.., அவர் பார்வை உணர்ந்து, ஓடிபோய் அவளை தாங்கிக் கொண்டார்.

தனாவுக்கு சுஜாவிடம் கேட்க ஆயிரம் கேள்விகள் இருந்தாலும், இப்பொழுது ராஜாவின் நிலைதான் தெரிந்தாக வேண்டும் என்பதால், அமைதியாக அமர்ந்து கொண்டார். குணாவும் இறுக்கமாக இருக்க, அவன் பார்வையோ மனைவியை சுட்டது.

அவள் தன்னை நேருக்கு நேர் பார்க்காததில் இருந்தே.., விஷயம் எதுவோ இருக்கிறது என்பதை உணர்ந்தவன், தன் கோபத்தை கட்டுபடுத்திக்கொண்டு நின்றிருந்தான்.

ராஜாவின் நிலை தெரிய வேண்டும்.., மருத்துவரின் வரவுக்காக காத்திருக்கத் துவங்கினார்கள். அவர்களது பொறுமையை முழுதாக சோதித்த பிறகு,

ஐசியூவில்.., ராஜாவுக்கு சிகிச்சை கொடுத்த மருத்துவர், அவன் இதயத்துடிப்பு சற்று சீரானதை உணர்ந்த பிறகு, செவிலியின் கண்காணிப்பில் அவனை விட்டவர், உடை மாற்றிவிட்டு வெளியே வந்தார்.

அவர் வெளியே வரவே.., அனைவரும் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள். ‘‘வேலு.., ராஜா..’’ தனாதான் அவரிடம் கேட்டார்.

‘‘முதல்ல ரூமுக்கு வா..’’ அவரை அழைத்துக்கொண்டு அறைக்குச் சென்றார்.

அவரோடு செல்ல சுஜா வர, “நானும் குணாவும் போயிட்டு வரோம்.., நீங்க இங்கேயே இருங்க..” அவர்களை நிறுத்திவிட்டார்.

அறைக்கு வந்த பிறகும் வேலு அமைதியாக இருக்க, “டேய்.., ஏதாவது சொல்லுடா.., நீ இப்படி அமைதியா இருக்கறதைப் பார்த்தால் வயித்தை கலக்குது..”.

“நான் உன்கிட்டே இதை எப்படி சொல்றதுன்னு யோசிச்சுட்டு இருக்கேன்.., பேசாமல் சுஜாவை வரச் சொல்லேன்..” அவர் இவ்வாறு உரைக்கவே, குணா புரியாமல் அவரை ஏறிட்டான்.

“என்ன குணா.., நாங்க பேசுறது எதுவுமே புரியலை இல்ல..” சிறு கோபமாய் அவனை ஏறிட்டார் வேலு.

அவர் கோபத்தைப் பார்த்து அவன் திகைக்க, “வேலு.., இப்போ எதுக்கு தேவையில்லாதது எல்லாம்.., நீ ராஜாவுக்கு எப்படி இருக்குன்னு மட்டும் சொல்லு..” தனா கோபம் காட்டினார்.

“ஹும்.., சொன்னாலும் நீ கேக்கப் போவதில்லை...” ஒரு பெருமூச்சை விட்டவர், “இன்னும் பன்னிரண்டுமணி நேரத்துக்குப் பிறகுதான் எதையும் சொல்ல முடியும். அதற்கு முன்னாடி

இன்னொரு அட்டாக் வந்தால்..” மீதியை அவர்களது யூகத்துக்கே விட்டார்.

“இப்படி ஒரு பதிலைக் கேக்கவா அவனை இங்கே கூட்டி வந்திருக்கோம்? உன்னால் முடியலன்னா சொல்லு.., லண்டன்ல இருந்து ஸ்பெசலிஸ்ட்டை வர வச்சுக்கலாம்..” இத்தனை வருடங்களாக அவரது கண்காணிப்பில் தான் இருக்கிறோம் என்பதே அவருக்கு மறந்து போனது.

‘பிள்ளை என வருகையில் எமோஷனல் ஆவது சகஜம்..’ எண்ணிய வேலு, “உனக்கு எது சரின்னு படுதோ அதைச் செய்..” நிதானமாக உரைக்க, தன் தவறு புரிய சட்டென அமைதியானார்.

“இப்போ நான் என்ன செய்யட்டும்..?” எதுவும் செய்ய இயலாத கையறு நிலை. கோடிக்கணக்கில் பணம் இருந்தாலும், சில விஷயங்களை அடைய முடியாது என்ற நிதர்சனம் முகத்தில் அறைய, தலையை கைகளால் தாங்கிக் கொண்டார்.

“வெயிட் பண்ணுவதைத் தவிர வேற வழியே இல்லை..” பேப்பர் வெயிட்டை உருட்டியவாறு அவர் உரைக்க, தலையை அசைத்துவிட்டு வெளியே வந்தார்.

வீட்டிற்கு அவர்களைப் போகச் சொன்னதற்கும் மறுத்துவிட, குடும்பமே அங்கே தவம் இருந்தது. தாரிணியும், சுஜாவும்

தெய்வத்தை சரணடைய.., நிஹாவோ கண்ணீர் வற்றிபோய் சுவற்றை வெறித்தவாறு அமர்ந்துவிட்டாள்.

அவர்களுக்கென இரண்டு அறை ஒதுக்கப்பட, அங்கே செல்லக்கூட யாரும் தயாராக இருக்கவில்லை. ஒரு கட்டத்தில் நெஞ்சு கனத்து வலியெடுக்கவே, அப்பொழுதுதான் குழந்தையின் நினைவே நிஹாவுக்கு வந்தது.

‘ஹையோ.., குழந்தை..’ பதறியவள், அங்கே இருந்த செவிலியிடம் கேட்டு, வீட்டுக்கு அழைத்தாள். தொலைபேசி எடுக்கப்பட்டவுடன் குழந்தையின் அழுகையே அவளை முதலில் எட்டியது.

‘‘லஷ்மி.., அலை.., அழறாளா..? பால் குடித்தாளா..?’’ தாயுள்ளம் பரிதவித்தது.

‘‘இல்லம்மா.., பால் கலந்து கொடுத்தால் குடிக்கவே இல்லை.., தூக்கம் வேற வருது போல..’’ இந்த நேரத்தில் இப்படி சொல்கிறோமே என்ற வருத்தம் அவளிடம்.

‘‘குழந்தையை கூட்டி வா..’’ அவள் டிரைவரை அழைத்துக்கொண்டு மருத்துவமனைக்கு வரவே, குழந்தையை அள்ளிக் கொண்டவள்.., தங்களுக்கு ஒதுக்கிய அறைக்குச் சென்று பசியாற்ற முயன்றாள்.

அவளுக்கு இருக்கும் பிடிவாதம் அவள் குழந்தைக்கு இருக்காதா? இவ்வளவு நேரம் என்னை தவிக்க விட்டாயே என.., அவள் மார்புக் காம்பில் வாயை வைக்காமல் அடம் பிடித்தவள், வீறிடவே செய்தாள்.

குழந்தையை அங்கே பார்த்த பிறகுதான் சுஜாவுக்கு குழந்தையின் நினைவே வந்தது. 'என்ன ஆனாலும் பெற்றவள் பெற்றவள்தான்..' இவ்வளவு நேரமாக எங்கள் யாருக்குமே தோன்ற வில்லையே.., எண்ணிக் கொண்டார்.

''அம்மா மேலே கோவமா என் செல்லத்துக்கு.., அம்மா இங்கே தாண்டா இருக்கேன். என் செல்லம் இல்ல..'' தன் கவலை மறைத்து, குழந்தைக்கு ஆயிரம் சமாதானம் சொன்னவள், குழந்தைக்கு பசியாற்றி, அவள் உறங்கி விடவே, தூக்கி வந்து லஷ்மியிடம் கொடுத்தாள்.

''நைட் எழுந்தால் பால் கலக்கி கொடு..'' குழந்தையை லஷ்மியிடம் கொடுத்தவள், பழைய இடத்திலேயே சென்று அமர்ந்து கொண்டாள். லஷ்மி சுஜாவிடம் செல்ல, ''குழந்தையை பாத்துக்கோ..'' அவளை அனுப்பி வைத்தார்.

தங்கவேலு கூட வீட்டுக்குச் செல்லவில்லை. எந்த நேரம் தன் தேவை ஏற்படுமோ என அங்கேயே இருந்தார்.

நொடி முட்கள் நகர மறுத்து நகர, நரகமாய் கடந்த நேரத்துக்குப் பிறகு, மெதுவாக அசைந்தான் ராஜா. அவன் அசைவை உணர்ந்த செவிலி, வேலுவை அழைக்க விரைய, அனைவரும் பரபரப்பாக எழுந்தார்கள்.

‘‘ஒரு நிமிஷம்..’’ உள்ளே விரைந்த வேலு,

‘‘ராஜா.., ராஜா.., நான் பேசுறது கேக்குதா..?’’ மென்மையாக குரல் கொடுக்க, முயன்று கண் திறந்தான்.

அவன் எதையோ பேச முயல, ‘‘நோ.., நோ.., எதுவும் பேச வேண்டாம்.., நீங்க நல்லா இருக்கீங்க.., ஓகே..’’ முதல் விதை நம்பிக்கை.., அதை விதைத்தார்.

அவன் கண்கள் சுழல, ‘‘என்ன.., அம்மா.., அப்பாவை பாக்கணுமா..?’’ அவர் கேள்விக்கு, இமைகளை மூடித் திறந்தான்.

‘‘வரச் சொல்றேன்...’’ வெளியே சென்றவர்.., ‘‘ராஜா ஆபத்து கட்டத்தை தாண்டிட்டான்...’’ அவர்கள் கேட்க விரும்பிய பதிலை முதலில் உரைத்தார்.

‘‘நாங்க பாக்கலாமா..?’’ தனா கேட்க,

‘‘ஐசியூகுள்ளே யாரையும் நாங்க அலவ் பண்றது கிடையாது. ஆனா.., நீங்க பார்க்கலாம். யாரும் கிட்டே போகக் கூடாது, அழக் கூடாது.., எமோஷனல் ஆகி, அவரை

திரும்பவும் கிரிடிக்கல் பண்ணிட கூடாது புரியுதா? வாங்க..'' அழைத்தவர் முன்னால் சென்றார்.

அவர்களை சற்று தூரத்தில் நிறுத்தியவர், ''ராஜா.., மென்மையாக அழைக்க, மூடியிருந்த விழிகளைத் திறந்தான்.

தனா, குணா, சுஜா.., தாரிணி.., என ஒவ்வொருவராக சற்று முன்னால் வந்து அவனைப் பார்க்க.., சோம்பலான விழிகளோடு அவர்களைப் பார்த்திருந்தான்.

அவர்கள் துன்பம் விழிகளில் தெரிந்தாலும், ஆறுதல் சொல்ல முடியாத நிலை. தலையை முயன்று மறுப்பாக அசைத்து அவர்களைத் தேற்றினான். கலங்கத் துவங்கிய மனதை கட்டுப்படுத்தி நின்றிருந்தார் சுஜா.

அவன் கண்கள் வேறு யாரையும் தேட விரும்பவில்லை. ஆனால் மனம்.., அவன் இதயத்துடிப்பு சற்று மாறுவதை கருவி உறுதிபடுத்த.., ''ராஜா, ரிலாக்ஸ்..'' அவனிடம் உரைத்தவர், பார்வையால் செவிலியிடம் கட்டளை இட.

அதை உணர்ந்தவள், ஊசி மருந்தை தயார் செய்ய, நிஹாசினி சற்று முன்னே வர, அழுது வீங்கியிருந்த அவள் முகம்.., கண்களில் குளம் கட்டியிருந்த கண்ணீர்.., அதைப் பார்த்தவனுக்கு, நடந்து முடித்த பேச்சு முதலில் நினைவிற்கு வர,

மருத்துவரின் கட்டளையை மீறி.., “நான்.., நான்..” வார்த்தைகளை உரைக்கத் துவங்கவே, அவனுடன் பொருத்தியிருந்த கருவி வித்தியாசமாக ஒலியெழுப்பி அவன் உடல்நிலையை பறைசாற்றியது.

அவன் நிஹாவைப் பார்த்து உணர்ச்சிவசப்படுவது புரிய, “ராஜா நோ.., சிஸ்டர்..” மருத்துவர் செவிலியிடம் பார்வையால் அவசரமாக கட்டளையிட, வேகமாக செயல்பட்டு, ஊசியில் மருந்தை எடுத்து மருத்துவரிடம் கொடுத்தாள்.

பார்த்துக்கொண்டிருந்த அனைவரும் பதற, அவ்வளவுதான்.., அடுத்த நிமிடம் அந்த அறையில் இருந்து வெளியே ஓடத் துவங்கியிருந்தாள் நிஹாசினி.

# அத்தியாயம் 2

நிஹாசினியால் தாங்கவே முடியவில்லை. தன்னைக் கண்ட அந்த நிமிடம், அவனது இதயத்துடிப்பு சீர் இல்லாமல் போனதையும், அந்த நிமிடம் கூட, அவனது போராட்டத்தையும் கண்டவளால்.., அங்கே இருக்கவே முடியவில்லை.

தானே அவனது உயிருக்கு எமனாகப் போய்விட்டோம்.., என்ற உண்மை முகத்தில் அறைய.., அந்த நிஜத்தை ஏற்க முடியாமல் துடித்துப் போனாள். இதற்குமேல் அங்கே இருந்தால்.., அவனது கொஞ்ச நஞ்ச உயிரையும் வாங்கி விடுவோமோ என்ற பயத்தில்.., அங்கிருந்து ஓடினாள்.

எங்கே செல்கிறோம்? என்ன செய்கிறோம்.., என்ற நினைவே இல்லாத ஓட்டம். எவ்வளவு தூரம் ஓடினாளோ தெரியாது. காலையில் குழந்தையை தூக்கிக்கொண்டு காரில் வந்துகொண்டிருந்த லஷ்மியின் பார்வையில், நிஹாசினி தூரத்தில் ஓடி வருவது தெரிய அவசரமாக காரை நிறுத்தி இறங்கினாள்.

அவள் ஓடிவந்த விதத்திலேயே எதுவோ சரியில்லை என்பது புரிந்ததால்.., வழியிலேயே இறங்கி, தன்னைத் தாண்டி ஓட முயன்ற அவளைத் தடுத்தாள். அதற்குள்ளாகவே அவளது நினைவு கண்டதையும் எண்ணி கலங்கியது.

“அம்மாடி.., என்ன..? எதுக்கு இப்படி ஓடி வரீங்க..? ராஜா தம்பிக்கு..?” அவள் கேட்பதை கூட கவனிக்காமல்..,

“என்னை விடு.., நான் போகணும்..” அவளிடமிருந்து விடுபட முயன்றாள்.

“அம்மாடி.., நீ இப்போ நிதானமா இல்லை. வாம்மா.., ஹாஸ்பிடல் போகலாம். குழந்தை வேற பசியில் அழறா.., பாரும்மா..” அவள் கவனத்தை திருப்ப முயன்றாள்.

அது சரியாக வேலை செய்தது. “அலை..” குழந்தையை கைகளில் வாங்கியவள், தன்னோடு இறுக்கிக் கொண்டாள்.

அவள் இறுக்கியது தாளாமல் குழந்தை அழ.., “கார்ல ஏறும்மா.., எல்லாரும் வேடிக்கை பாக்கறாங்க..” அவளை காரில் ஏற்ற முயன்றாள்.

“இல்ல.., நான் ஹாஸ்பிடல் வரலை.., வந்தா..” மீதியைச் சொல்ல முடியாமல் அழ, குழந்தையும் அழத் துவங்கியது.

“சரிம்மா.., அப்போ வீட்டுக்கு போகலாம். தூங்கி எழுந்தால் எல்லாம் சரியா போய்டும்..” அவள் மனநிலை சரியாக இல்லை என்பதை உணர்ந்து சொன்னாள்.

“இல்ல.., மாட்டேன்..” எந்த முகத்தோடு அங்கே செல்வதாம்? அவள் மனம் கேள்வி கேட்டது.

நிஹாசினியை அப்படியே விட்டுச்செல்ல அவளுக்கு மனமில்லை. எனவே.., “சரிம்மா.., அங்கே வேண்டாம்.., அம்மா வீட்டுக்கு போகலாம்.., வாங்க.., குழந்தையை கையில் வச்சுகிட்டு இங்கேயே நிக்க முடியாது..” அவளை கட்டாயப்படுத்தி அமர வைத்தவள், நிஹாசினியின் வீட்டுக்கு வண்டியை விடச் சொன்னாள்.

அந்த காலை வேளையில்.., தன் வீட்டின் அழைப்புமணி ஒலிப்பது அபூர்வம் என்பதால்.., சிறு கேள்வியோடு வெளியே வந்த துளசி, சத்தியமாக அந்த நேரம், அந்த கோலத்தில் தன் மகளை எதிர்பார்க்கவில்லை.

“நிஹா.., என்னடி இந்த நேரத்தில்.., அதுவும் குழந்தையோட.., தனியா.., மாப்பிள்ளை வரல..” கிரில்லை திறந்தவாறே கேட்டவரது குரல், இறுதியில் கோபத்தில் முடிந்திருந்தது.

ஏற்கனவே அவள் செய்துவைக்கும் காரியம் அவருக்குத் தெரியுமே. எனவே., இப்பொழுது எதைச் செய்துவிட்டு இங்கே வந்திருக்கிறாளோ.., என்ற கோபம் அவரிடம்.

“அம்மா..” வீறிட்டவள்.., தாவிச் சென்று தாயின் தோளில் விழுந்தாள்.

என்னதான் அவள்மேல் கோபம் என்றாலும், அழும் மகளை விலக்கித் தள்ளிவிடும் அளவுக்கு அவர் ஒன்றும் கல்நெஞ்சம் படைத்தவர் இல்லையே.

‘‘என்னடி..? ஏன் இப்படி அழற..? என்ன ஆச்சு..? சொல்லிட்டு அழுடி.., மனசு பதறுது..’’ இறுக்கிக் கொண்டார்.

குழந்தை இடையில் அழுது தன் இருப்பை உணர்த்த.., குழந்தையை தன் கைகளில் வாங்கிக் கொண்டார்.

அவர் பேசுவதில் இருந்தே.., அவருக்கு விஷயம் தெரியவில்லை என்பதை உணர்ந்த லஷ்மி.., ‘‘அம்மா.., உங்களுக்குத் தெரியாதா..? ராஜா தம்பியை ஹாஸ்பிடல்ல சேர்த்திருக்கு.., தம்பிக்கு..’’ அதை எப்படிச் சொல்வது எனத் திணறியவள், சொல்லித்தான் ஆகவேண்டும் என்பதால் விஷயத்தை உரைக்க...,

‘‘என்ன..? என்ன சொல்றீங்க..?’’ அலறியே விட்டார்.

அவருக்கே.., இருபது வருட வாழ்க்கைக்குப் பிறகே தனிமரமாக நிற்பது கொடுமையாக இருக்க, மகளது கணவன்.., மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறான் என்பதை அறிந்து துடித்துப் போனார்.

“என்னைக்கு..? எப்போ..?” குழந்தையை ஒற்றை கையில் தாங்கியவர், மகளை விலக்கிவிட்டு லஷ்மியின் அருகில் விரைந்தார்.

“நேத்தைக்கு சாயங்காலம்..” சொல்லிவிட்டு, கண்களில் துளிர்த்த கண்ணீரை துடைத்துக் கொண்டாள்.

“நிஹா.., குழந்தைக்கு முதல்ல பசியாத்து போ..” அதற்குமேல் அவளிடம் ஒரு வார்த்தை பேசவில்லை.

“அம்மா..” பரிதாபமாக அழைத்த மகளைக் கண்டு உயிர் உருகினாலும், ‘இவள் எதுவும் செய்யவில்லை என்றால், இங்கே இப்படி வந்திருக்க மாட்டாள்..’ அவரது உள்மனம் அடித்துச் சொல்ல, அவளைப் பார்க்கவும் அவருக்கு பிடிக்கவில்லை.

அவரது பார்வை அவளை தீயாய் சுட, அதற்குமேல் அவரிடம் எதையும் உரைக்கும் தைரியமற்றவளாய், சோர்ந்த நடையோடு உள்ளே சென்றாள். நான்குமாத குழந்தைக்கு அவர்கள் சூழ்நிலை என்ன தெரியும்.., அவள் பாலூட்ட அமர, தனக்கு உணவு கிடைக்கபோகிறது என்ற சந்தோஷத்தில், பொக்கை வாய் திறந்து அவளைப் பார்த்து பூவாய் சிரித்தது.

“அலை..” குழந்தையைத் தூக்கி முகம் முழுக்க முத்தமிட்டவள், கண்ணீர் வழிய அவளுக்கு பசியாற்றத் துவங்கினாள்.

துளசியின் கோபத்தைப் பார்த்த லஷ்மிக்கே ஒரு மாதிரியாகப் போயிற்று. “அம்மா.., நிஹா பாப்பாவை எதுவும் சொல்லாதீங்க. அதுவே மனசொடிஞ்சு வந்திருக்கு. அங்கே என்ன நடந்ததுன்னு எனக்குத் தெரியலை. ஆனா.., பாப்பா அப்படி ஓடி வரதைப் பாத்து, நானே பதறிப் போயிட்டேன்.

“நடக்க எதுக்கும் நாம காரணம் தேட முடியாது. இதுதான் நடக்கணும்னு விதி இருந்தால், அதை யாராலையும் மாத்த முடியாது.., பாப்பாவை பாத்துக்கங்க” அவளுக்கு மனதே கேட்கவில்லை.

பொங்கிய துக்கத்தை கட்டுப்படுத்தியவர்.., “எந்த ஹாஸ்பிடல்? நீ இப்போ எங்கே போற..? அங்கேயா..?” உடனே அங்கே செல்லும் வேகம் அவரிடம்.

“ஹாஸ்பிடல் தாம்மா கிளம்பினேன்.., குழந்தையை கொடுக்கத்தான் போனேன். இப்போ சாப்பாடு செஞ்சு எடுத்துட்டு வந்தேன்.. நைட் செஞ்சு கொண்டுபோனதை யாருமே தொட்டு கூட பார்க்கலை.., இப்போவும்.., அப்படியே விட முடியாதே..” கவலை அவள் குரலில் மண்டிக் கிடந்தது.

“ஒரு நிமிஷம் இரு.., நானும் வரேன்..” வீட்டுக்குள் சென்றவர், சின்ன மகளை எழுப்பி விஷயத்தை சொல்லிவிட்டு,

“உப்புமா கிண்டி சாப்ட்டு கிளம்பு, மதியத்துக்கும் அதையே எடுத்துக்கோ.., நான் கிளம்பறேன்..” உடை மாற்றச் சென்றார்.

“என்னம்மா சொல்றீங்க..? மாமாவுக்கா..? நானும் வரேன்..” அவள் அடம் பிடிக்க, “சரி கிளம்பு..” அவர் உரைக்கவே, இருவரும் கிளம்பிச் சென்றார்கள்.

தன்னிடம் ஒரு வார்த்தை கூட சொல்லிச் செல்லாத தாயின் கோபம் புரிய, அமைதியாக கண்ணீர் வடிப்பதைத் தவிர நிஹாவால் எதுவும் செய்ய முடியவில்லை.

மருத்துவமனைக்குள் சென்ற துளசி.., சுஜாவைப் பார்த்து விரைய.., அவர் பின்னால் ஓடினாள் வினோ.

“சம்பந்தியம்மா.., தம்பிக்கு எப்படி இருக்கு..? லஷ்மி என்னென்னவோ சொல்றா..?” கேட்கும் முன்பே குரல் நடுங்கியது.

“இப்போ ஆபத்தை தாண்டிட்டான்.., ஆனாலும்..” அவராலும் அழத்தான் முடிந்தது.

அந்த நேரம் அங்கே பரபரப்பாக வந்த தாரிணி.., “அக்கா.., நிஹாவை எங்கேயும் காணோம்...” பதட்டமாக உரைத்தவள், துளசியைப் பார்த்த பிறகே சற்று தெளிந்தாள்.

“நிஹா.., வீட்டில் இருக்கா.., லஷ்மிதான் கூட்டி வந்தா..” அவர் லஷ்மியைக் காட்ட, விஷயத்தை விளக்கினாள்.

சற்று நேரத்துக்கு என்ன பேசுவது என்றே யாருக்கும் தெரியவில்லை. ‘‘தம்பிக்கு இப்போ ஒண்ணும் இல்லையே.., பாக்கலாமா..?’’ அவனைக் கண்ணால் கண்டால் பரவாயில்லை என துளசியின் மனம் தவித்தது.

‘‘கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கண் முழித்தான்.., நாங்க பார்த்தோம்..’’ நடந்தவற்றை அவரிடம் உரைக்கவே சற்று கடினமாகத்தான் இருந்தது.

‘‘உங்க பொண்ணு முகத்தை பாத்ததுதான்..’’ ‘‘தாரிணி..’’ அவள் துவங்கவே.., சுஜாவின் குரல் வழக்கம்போல் இடையிட, துளசிக்கோ.., பெரும் சங்கடமாகப் போயிற்று.

‘‘தாரிணி.., என் பொண்ணு எந்த தப்பு பண்ணியிருந்தாலும் அவளை மன்னிச்சுடுங்கன்னு கேக்குற தகுதியை நான் இழந்துட்டேன். ஆனா.., என் பொண்ணை தயவு செய்து யாரும் வெறுத்துடாதீங்க..’’, அவர் கை கூப்ப, தாரிணிக்கே ஒரு மாதிரியாகப் போயிற்று.

‘‘அவ நல்லவதான்.., ஆனா.., ஏதோ ஒரு கோபம்.., அவளை இப்படி ஆட்டிப் படைக்குது.., அவளை ஒதுக்கிடாதீங்க. என் பொண்ணு தாங்க மாட்டா..’’ விட்டால் அவர்கள் காலிலேயே விழுந்துவிடுவேன் என்ற நிலையில் இருந்தார்.

அவர்கள் பேசவே.., அவர்களை விட்டு விலகிய லஷ்மி.., தனாவின் அலைபேசிக்கு அழைத்தாள். தாரிணியே நிஹாவைத் தேடி இருக்கிறாள் என்றால்.., ஆண்கள் இருவரும் அவளைத் தேடித்தான் சென்றிருப்பார்கள் என்பது அவளது எண்ணம்.

‘‘ஏன் இப்படி பெரிய வார்த்தை எல்லாம் பேசறீங்க? எங்களுக்கு அவள்மேல் கோபம் எல்லாம் எதுவும் இல்லை. வருத்தம்தான்..’’ சுஜா அவர் கைகளை ஆதரவாக அழுத்தினார்.

‘‘உங்க பொண்ணு மேலே அக்கறை இல்லாமலா, இப்படி பேசுற இவளே.., அவளைத் தேடி அலைஞ்சுட்டு வருவா..?’’ அவரைத் தேற்றினார்.

அதுதானே.., நிஹாவை நொடிக்கொருதரம் சாடினாலும், அவள் ஓடியதைக் கண்ட தாரிணி தானே, அவளைத் தேட விரைந்தாள். துளசிக்கு சற்று நிம்மதியாக இருந்தது. தாரிணியின் கைகளைப் பற்றிக் கொண்டவர், கண்ணீர் சிந்தினார்.

‘‘நான் கோவத்தில் படபடன்னு பேசுவேன்தான்.., அதுக்காக.., உங்க பொண்ணு எங்க வீட்டு மருமக இல்லன்னு ஆயிடுமா? நான் எதுக்கு சத்தம் போடறேன்..? எங்களுக்குள்ளே என்ன சொத்து தகறாரா? ராஜா கூட வாழலையே என்ற கோபத்தில் சும்மா சொல்வதுதான்.

“ஆயிரம்தான் இருந்தாலும்.., ராஜா எங்ககிட்டே பேச முழு முதல் காரணமே அவதானே. அந்த நன்றி கொஞ்சமாச்சும் எனக்கு இருக்காதா என்ன..?” ஒருவர் மனதை காயப்படுத்தினால் எப்படி வலிக்கும், என அவரது அனுபவப் பாடம் கற்றுக் கொடுத்திருந்ததே.

“எனக்கு இது போதும்..” ஒரு தாய்க்கு இதைவிட வேறு என்ன வேண்டும். ஆனால்.., இதையெல்லாம் உணர மறுத்த மகளின் பிடிவாதம், ராஜாவை எங்கே கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறது என்பதை அறிந்தவருக்கு, துக்கம் பெருகியது.

அதே நேரம்.., தனாவும் குணாவும் அங்கே வர.., துளசி அழுவதைப் பார்த்த தனா.., “ராஜாவுக்கு ஆபத்து எதுவும் இல்லை.., நீங்க வருத்தப்படாதீங்க..” ஒரு வேளை அதற்காக அழுகிறாரோ என்று வேகமாக உரைத்தார்.

“ராஜாவை பாக்க முடியுமா..?” சேலைத் தலைப்பால் முகம் துடைத்தவர், கலங்கிய குரலில் கேட்டார்.

“இல்ல.., இப்போ ஏதோ டெஸ்ட் எடுத்துட்டு இருக்காங்க. அது முடிஞ்ச பிறகு பார்க்கலாம்.., நிஹா.., வீட்டுக்கு வந்தாளா..?” தன்மையாகவே கேட்டார்.

“ஆமா..” உரைத்தவர், “எனக்கு இப்போதான் விஷயம் தெரியும்..” தாமதமாக வந்ததற்கு அவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்களோ என்ற கவலையில் உரைக்க,

“அதனால் என்ன.., நைட் தொல்லை செய்ய வேண்டாம்னுதான் உங்களுக்குச் சொல்லலை. வயசுப் பொண்ணை வச்சுட்டு ஏன் அலையணும்னுதான்..”, துளசியிடம் உரைத்தவர், வினோவைப் பார்த்துவிட்டு, “எப்படிம்மா இருக்க..?” அவள் தலையை வருடியவரின் பார்வையில், பாசம் மட்டுமே நிரம்பி வழிந்தது.

“நல்லா இருக்கேன் அங்கிள்.., மாமா இப்போ எப்படி இருக்காங்க..?” அவள் முகத்திலும் கவலை அப்பிக் கிடந்தது. தன்னோடு விளையாடி, நல்ல தோழனாக, ஆசானாக இருந்த அவனிடம் அவளுக்கு எப்பொழுதும் அன்பு அதிகமே.

“அவ்வளவு சீக்கிரம் அவனை போக விட்டுடுவோமா என்ன..? நீ வா.., வந்து அவனை நல்லா நாலு போடு..” அவர்களது விளையாட்டு அவருக்கும் தெரியுமே.

லஷ்மி அனைவரையும் சாப்பிட அழைக்க.., தனாவுக்கு வேளைக்கு மருந்து கொடுக்க வேண்டும் என்ற கட்டாயத்தால் அவரை பிடிவாதமாக சாப்பிட வைக்க, அவர் மனைவிக்கு

உணவு ஊட்ட.., இப்படியாக அவர்களது காலை உணவு கடந்தது.

அங்கிருந்த சூழல் சற்று இலகுவாக.., ராஜாவின் பரிசோதனை முடிவுக்காக அனைவரும் காத்திருந்தார்கள்.

ரிப்போர்ட் வந்த பிறகும்.., ராஜா கண் விழிக்காமல் இருக்கவே.., வேலுவுக்கே அவனது நிலை சற்று புரியத்தான் இல்லை. அறிக்கை உரைக்கும் உண்மை பொய்யாக வாய்ப்பில்லை என்பது வேறு ஒரு பக்கம் இருக்க, அதை இரண்டு மூன்றுமுறை படித்து விட்டார்.

ஒரு முடிவுக்கு வந்தவராக தனாவை அழைக்க, சுஜா தானும் பிடிவாதமாக வருவேன் என உரைக்கவே.., வேறு வழியின்றி அனைவரும் பின்தொடர தங்கவேலுவின் அறைக்குள் நுழைந்தார்.

தனாவும் குணாவும் இருக்கையில் அமர்ந்திருக்க, பெண்கள் மூவரும் வெளியே நின்றார்கள். வினோவை ஐசியூ முன்பே நிறுத்திவிட்டு வந்திருந்தார்கள்.

சற்று நேரம் அமைதியில் கழிய.., “தனா.., ராஜாவுக்கு முதல் அட்டாக் எப்போ வந்தது..?” அவரது கேள்விக்கு அனைவரும் ஆடிபோய் நின்றிருந்தனர்.

# அத்தியாயம் 3

**ரா**ஜாவுக்கு அட்டாக் வந்ததிலேயே ஆடிப் போயிருந்தவர்கள், வேலு கேட்ட கேள்வியில் திகைத்தே போனார்கள்.

“வேலு.., என்ன சொல்ற..?” தனா திகைக்க, சுஜா வெளியே தள்ளாடி, தரையில் அமர்ந்தே விட்டார். துளசிக்கோ.., மயக்கமே வந்துவிடும் அளவுக்கான நிலை. இப்படி ஒரு விஷயத்தை ராஜா மறைத்திருக்கிறான் என்றால்? அதற்கு தன் மகளைத் தவிர வேறு என்ன காரணம் இருக்க முடியும்?

“அக்கா..” தாரிணி அவளை தாங்கிக் கொள்ள.., சுஜாவால், தான் கேட்டதை நம்பவே முடியவில்லை. தன் பிள்ளை தன்னிடம் ஒன்றை மறைத்திருக்கிறான் என்றால்.., அதுவும் எவ்வளவு பெரிய விஷயம்.., “இல்ல.., நான் நம்ப மாட்டேன்..” சுஜா புலம்பினார்.

“நான் சொல்லலை.., அவனோட ரிப்போர்ட் சொல்லுது...” அவர் நிறுத்தி அவர்களை ஏறிட்டார்.

“இல்ல.., அதுக்கு வாய்ப்பே இல்லை..” தனா அடித்துப் பேசினார்.

“உங்களுக்குத் தெரியலைன்னு வேண்ணா சொல்லுங்க. அதை விட்டு.., ஓகே.., சமீப நாட்கள்ல.., என்னைக்காவது.., ராஜாவின் நடவடிக்கையில் மாற்றம், திடீர்ன்னு ரெண்டு நாள்.., இல்ல மூணு நாள் வெளியூர் பயணம்.., இப்படி ஏதாவது இருந்ததா..?” விஷயத்தை சேகரிக்க முயன்றார்.

“இல்லையே.., அவன் இது வரைக்கும் அப்படி போனதே இல்லையே. மெட்டீரியல் வாங்கணும்னா கூட, டீலரை இங்கேயே வர வைத்து பேசுவானே தவிர.., அப்படி எங்கேயும் போகவே மாட்டான்.., எங்களை விட்டு தனியா இருப்பது அவனால் முடியாத விஷயம்...” அவர் கேட்ட விஷயத்தை ஜீரணிக்கவே அவருக்கு நேரம் தேவைப்பட்டது.

அந்த நேரம்.., வேகமாக எதையோ யோசித்த துளசி.., “டாக்டர்.., எனக்கு ஒரு சின்ன சந்தேகம்..” அவர் தயங்க..,

“நீங்க..?” அவரை கேள்வியாக ஏறிட்டார் வேலு.

“ராஜாவோட அத்தை..” குணா விளக்க, “சொல்லுங்க..”.

“ராஜா தம்பி.., குழந்தை பொறந்த அன்னைக்கு காலையில் போனவர் நைட் வரவே இல்லை. காலையில் வந்தப்போவும்.., ரொம்ப டயடா இருந்தார்..” இதற்கும் அதற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமோ.., என்ற யூகத்தில் அவர் சொல்ல, அனைவரின் புருவமும் உயர்ந்தது.

‘‘ஒரு நைட் மட்டும்னா.., சாத்தியம் குறைவுதான். ஓகே.., விசாரிக்கலாம்..’’ வேலு யோசிக்க,

‘‘தனா.., உடனே அந்த விநாயகத்துக்கு போன் போடுங்க.., அவன்தான் அன்னைக்கு ராஜாவை ரூமிலேயே இருக்க விடாமல் தொல்லை செய்தான்..’’ வேகமாக எழுந்தார்.

அடுத்த அரைமணி நேரத்தில்.., பதறியடித்து ஓடி வந்தான் விநாயகம். ‘‘ஆன்ட்டி.., ராஜாவுக்கு என்ன ஆச்சு..? மறுபடியும் அட்டாக்கா.., நான் அப்போவே சொன்னேன்.., டேப்லட்டை விடாமல் சாப்ட்டு.., செக்கப் பண்ணுன்னு.., என் பேச்சை அவன் கேக்கவே இல்லை..’’ குரலில் அவ்வளவு பதட்டம்.

‘‘பாவி.., என் கையால் எத்தனை வேளை உனக்கு சாப்பாடு போட்டிருப்பேன்.., அந்த நன்றி கொஞ்சம் கூட இல்லாமல்.., இவ்வளவு பெரிய விஷயத்தை என்கிட்டே இருந்து மறச்சுட்டியே.., சொல்லுடா.., ஏன் சொல்லலை..’’ அவன் சட்டையைப் பிடித்து உலுக்கினார் சுஜா.

‘‘ஆண்ட்டி..., நான் வேணும்னு இதை உங்ககிட்டே மறைக்கலை. ராஜாதான் உங்ககிட்டே சொல்லவே கூடாதுன்னு என்கிட்டே சத்தியம் வாங்கிட்டான்.., இப்போ அவனுக்கு எப்படி

இருக்கு..?'' அவரது உலுக்கலை தாங்கிக் கொண்டவன், அவரை விலக்கவே இல்லை.

தனா ஓடி வந்து அவரைத் தடுக்க.., ''இப்படி பண்ணிட்டானேங்க.., அவனுக்கு நம்ம மேலே கொஞ்சமாவது பாசம் இருந்திருந்தால், இவ்வளவு பெரிய விஷயத்தை மறைத்திருப்பானா..?'' அழுது கரைந்தார்.

''சுஜா., கொஞ்சம் அமைதியா இரு..'' மனைவியை தாங்கிக் கொண்டார்.

''மிஸ்டர் விநாயகம்.., அவரோட பழைய ரிப்போர்ட் ஏதாவது உங்ககிட்டே இருக்கா..?'' அவர் கேட்க, தான் கொண்டுவந்திருந்த ஃபயிலை அவர் கையில் கொடுத்தான்.

''சுஜா மேம்.., கண்ட்ரோல் யுவர்செல்ப்..'' அவரை அழைத்து இருக்கையில் அமர்த்தியவர், அவற்றை வேகமாக பரிசோதித்தவர்.., ''நான் சந்தேகப்பட்டது சரிதான். ராஜாவின் இதயத்தில் அடைப்போ.., ஹெல்த்தில் எந்த பாதிப்பும் இல்லை. ஆனா.., இதய பலகீனம்.

மனசுக்குள்ளேயே எல்லாத்தையும் போட்டு அழுத்தி, அதனால் ஏற்படும் பாதிப்பு இது..'' மேலும் பல மருத்துவ பெயர்களை அவர் உரைக்க, கேட்டுக் கொள்வதைத் தவிர அவர்களுக்கு வேறு வழி இல்லை.

‘‘இப்போ, அவரோட இதயம் ஸ்தம்பித்தது கூட.., அவரோட எக்ஸ்ட்ரீம் ரியாக்ஷன்தான். அதாவது., உயிர்வாழவே விருப்பமில்லை என்னும்போது.., நம்ம மனசே சில விஷயங்களை கற்பனை பண்ணிக்கும். கூடவே.., டென்ஷன், பிரஷர் எல்லாம் சேர்ந்தால்..?

‘‘அதோட வெளிப்பாடுதான் இது. அவனோட இதயம் ரொம்ப பலகீனமா இருக்கு. இப்போதைக்கு அவனுக்குத் தேவை.., நல்ல நிம்மதி. எதைப் பற்றியும் நினைக்காத மனநிலை, ஓவர் சந்தோசம், துக்கம்.., இப்படி எதையும் அவனால் இப்போதைக்கு தாங்க முடியாது..’’ அவர் நிறுத்த, சுஜா வெடித்து அழவே துவங்கிவிட்டார்.

‘‘என் பிள்ளைக்கா இப்படி ஒரு நிலைமை..? நிஜமாகவே ராஜாவாகத்தானே அவனை வளர்த்தேன்.., இப்போ.., நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்னு சொல்லுவாங்களே.., அந்த கொடுப்பினை என் பிள்ளைக்கு இல்லையா?

‘‘இனிமேல் இது உன் குடும்ப விஷயம்னு தள்ளி வைத்தேனே.., அதுதான் நான் செய்த மிகப்பெரிய தப்பு..’’ ஜீரணிக்கவே முடியாமல் போராடினார்.

‘‘சுஜா.., நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை. கொஞ்சநாள்.., மெடிசின், கண்காணிப்பு, மனசை தெளிவா

வச்சுக்கிறது.., இப்படி இருந்தாலே அவனால் நாளடைவில் நார்மல் லைப்க்கு வந்துட முடியும்.

‘‘முதல்ல அவரை பேஷன்ட் மாதிரி டிரீட் பண்ணுவதை நிறுத்துங்க. நல்ல சாப்பாடு, கவனிப்பு.., மனசுக்குள்ளே இருக்கும் கோபம், வெறுப்பு எல்லாத்தையும் மனசுவிட்டு பேச வைங்க.., எல்லாம் சரியாயிடும்..’’ வேகமாக உரைத்தார்.

‘‘இருந்தாலும்..’’ அவரால் அதைவிட்டு வெளியே வரவே முடியவில்லை.

‘‘அவன் பல்ஸ்.., நார்மல் ஆகாததன் காரணம் என்ன வேலு..?’’ அவன் இதயம் ஒழுங்கற்று துடிப்பதாக உரைக்கவே அவ்வாறு கேட்டார்.

‘‘என்ன சொல்ல..? இந்த நிமிஷம்.., அவனுக்குள் எதுவோ பெரிய பாதிப்பு.., அதோட வெளிப்பாடுதான் இது. அவரோட மனைவியைப் பார்த்ததும் அவரோட ரியாக்ஷன் மாறவும் அதுதான் பிரதானம். ஒரு ரெண்டு மூணு நாளைக்கு, அதாவது அவரோட இப்போதைய தாக்கம் அடங்கும் வரைக்கும், அவரை மயக்கத்திலே வைத்திருந்தால் எல்லாம் சரியாயிடும்.

‘‘நாம கவனிப்பதில் அதற்குப் பிறகு நார்மல் ஆகிடுவார். கொஞ்ச நாளைக்கு உங்கள் அனைவரோட ஒத்துழைப்பு

அவசியம்.., அவ்வளவுதான்..'' மேலும் அவர்களுக்கு தைரியம் சொல்லி அவர்களை அனுப்பினார்.

''ஒரு நிமிஷம்.., நீங்க இங்கேயே இருக்க வேண்டும் என்ற அவசியம் கிடையாது. ஐசியூவில் இருக்கும் வரைக்கும் உங்களால் அவரோட இருக்க முடியாது..., சோ.., நீங்க கிளம்புங்க.., அவரை ரூமுக்கு மாற்றிய பிறகு, யாராவது ஒரு ஆள் இருந்தால் போதும்..'' அவர் உரைக்கவே, ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டனர்.

விநாயகம், கைகளைப் பிசைந்தவாறு நிற்க, யாருக்கு என்ன பேசுவது என்றே தெரியவில்லை. ''டாக்டர்.., ஒரு நிமிஷம் அவரைப் பார்க்கலாமா?'' துளசி திரும்பி வந்து கேட்க, சம்மதமாக தலை அசைத்தார்.

வினோவை வெளியே நிறுத்தியவர், செவிலியிடம் அனுமதி வாங்கி உள்ளே நுழைய, அறை முழுவதும் நிரம்பியிருந்த உபகரணம்.., அவன் மேனியைச் சுற்றியிருந்த வயர்கள்.., செயற்கை சுவாசக் கருவி.., அனைத்தையும் பார்த்தவருக்கு அழுகை வெடித்தது.

அவன் அருகில் செல்ல முயலவே.., ''இல்ல.., இங்கே இருந்தே பாருங்க. பேஷண்டுக்கு இன்பெக்ஷன் ஆயிடும்..'' அவரைத் தடுத்தாள்.

அவன் முகம் காண முடியாமல் மாஸ்க் மறைக்க.., இமை மூடி அவன் படுத்திருந்த விதம்.., நெஞ்சை அடைத்தது. தன்னிடம் அவன் மனதில் (தன் மகள்மேல்) இருந்த காதலைச் சொன்ன ராஜா.., தனக்கு ஒரு மகனாக மாறிய ராஜா., வினோவுக்கு ஒரு ஆசானாக, தந்தைக்கு இணையான பாசத்தை பொழிந்த ராஜா.

மனக் கவலையை இறக்கி வைத்த ராஜா.., மன்னிப்பை வேண்டிய ராஜா..,' அவன் உருவம் கண்களுக்குள் உலா போனது. அதே நேரம், மகள்மேல் கட்டுக்கடங்காத கோபம் பெருக.., வேகமாக அங்கிருந்து வெளியேறினார்.

ஆனாலும்.., உடனடியாக வீட்டுக்குச் செல்ல முடியவில்லை. நேற்றுமுதல் அவர்கள் யாரும் வீட்டுக்கே செல்லவில்லை என்பதால்.., ‘‘சம்பந்தியம்மா.., நீங்க எல்லாம் வீட்டுக்கு கிளம்புங்க.., நான் சாயங்காலம் வரை இங்கேயே இருக்கறேன்..’’ அனைவரது முகமும் அப்பட்டமாக களைப்பை வெளியிட அவ்வாறு உரைத்தார்.

‘‘இல்ல.., என் பிள்ளை எழுந்து நடக்குற வரைக்கும் நான் எங்கேயும் வர மாட்டேன்..’’ சுஜா பிடிவாதமாக அங்கே அமர,

“அக்கா.., உங்களுக்கு ஆயிரம் வேலை இருக்கு.., எனக்குதான் வேலையே கிடையாது. நான் இங்கே இருக்கறேன்..” தாரிணி உரைத்தாள்.

“அண்ணா.., அண்ணி.., நீங்க கிளம்புங்க. என்னால் ஆபீஸ்லையும் எதையும் முழுசா செய்ய முடியாது. இதையாவது செய்யறேன்..” குணா முன்னால் வந்தான்.

அவ்வளவு நேரமாக பேசாமல் இருந்த தனா.., “எல்லாரும் வீட்டுக்கு கிளம்புங்க. அதான் வேலுவே எல்லாத்தையும் பாத்துக்கறேன்னு சொல்லிட்டானே.., அது மட்டும் இல்லை.., ராஜா இப்போ மயக்கத்தில்தான் இருக்கறான். இங்கே யாரும் இருக்கணும்னு அவசியம் இல்லை. வாங்க போகலாம்..” மருத்துவர் உரைத்த விஷயங்களைக் கேட்ட பிறகு, ராஜாவின் நிலைக்கான உண்மை காரணம் அவருக்கு தெரிய வேண்டி இருந்தது.

அவர் குரலில் கோபத்தை உணர்ந்த தாரிணிக்கு அடி மனதில் பயம் பிடித்துக் கொண்டது. எதுவும் சமாதானம் சொல்ல முடியாமல், அவர் பேச்சையும் மீற முடியாமல் கையைப் பிசைந்தார்.

அவர் பேச்சுக்கு எப்பொழுதும் எதிர்பேச்சு யாரும் பேசிப் பழக்கமில்லை என்பதால், அனைவரும் கிளம்பி விட்டார்கள்.

‘‘குணா.., சம்பந்தியம்மாவை அவங்க வீட்டில் விட்டுட்டு சீக்கிரம் வா..’’ அவர் குரலே, அவர் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதை அறிவுறுத்தியது.

அவரை தன்னாலும் மறுத்து பேச முடியாமல், ‘‘சாயங்காலம் வரேன்..’’ துளசியும் வினோவை அழைத்துக்கொண்டு கிளம்பிவிட்டார். மனதில் கனன்ற கோபத்தை அடக்கும் வழி அவருக்குத் தெரியவே இல்லை.

‘‘இல்ல.., நாங்களே போய்க்கறோம்..’’ அவர் பேச்சை அங்கே யாரும் கேட்கும் நிலையில் இல்லை.

‘‘நீ இங்கே என்னடா பண்ணப்போற.., கிளம்பு..’’ விநாயகத்திடம் உரைக்க,

‘‘இல்ல.., நான் பாத்துக்கறேன்.., நீங்க கிளம்புங்க..’’ விஷயத்தை அவர்களிடம் ஏற்கனவே சொல்லாத குற்ற உணர்வு அவனை தின்றுகொண்டிருந்தது.

‘‘டேய்.., உன்னைபத்தி எங்களுக்குத் தெரியும்டா.., உன் ப்ரண்டு பேச்சை தானே நீ கேட்ட.., இதெல்லாம் பாக்கணும் என்பது எங்க விதி.., வேற என்ன சொல்ல.., நீ போ..’’ அவன் தோளைத் தொட்டு திருப்பினார்.

‘‘அங்கிள்.., இப்படியெல்லாம் ஆகும்னு எனக்கு சத்தியமா தெரியாது. அப்படித் தெரிந்திருந்தால்.., அவனை இப்படி ஒரு

நிலை ஆகுற வரைக்கும் விட்டிருக்க மாட்டேன்..'' கண் கலங்கினான்.

''ஹம்.., வீட்டுக்குள்ளே இருப்பவங்களே எதுவும் சொல்லாதப்போ.., நீ சொல்லாதது ஒண்ணும் பெருசில்லை..'' மனைவியை அவர் பார்வை சுட்டது. சுஜாவும், தாரிணியும் தலை குனிந்தார்கள்.

துளசிக்கும் அவரது பேச்சு நெஞ்சை சுட, அமைதியாக இருந்தார். ''ம்.., கிளம்பலாம்..'' அனைவரும் கிளம்பி விட்டார்கள்.

காரில் மயான அமைதி நிலவ, குணாவின் முகத்தை நிமிர்ந்து பார்க்கக் கூட துளசிக்கு துணிவில்லை. எந்த முகத்தை வைத்துக்கொண்டு அதைச் செய்வதாம்?

வீடு வரவே, காரிலிருந்து அமைதியாக இறங்கி வீட்டுக்குள் சென்றவர், ''வினோ.., நீ ஹால்ப் டே ஸ்கூல்க்கு கிளம்பு.., எனக்கு உங்க அக்காகிட்டே கொஞ்சம் வேலை இருக்கு..'' தாயின் கண்டிப்பில், மறு பேச்சின்றி கிளம்பி விட்டாள்.

அவள் செல்லவே.., கோபமாக ஹாலில் அமர்ந்து கொண்டார். இந்த நேரம் நிஹாசினியின் அறைக்குச் சென்றால்..., தன் கட்டுப்பாட்டை தானே இழந்துவிடுவோம் என அவருக்குப் புரிந்தது.

தாய் வந்துவிட்டார் என அறிந்த நிஹாவுக்கோ.., அவரிடம் ஓடிபோய், ராஜாவின் நிலை பற்றி கேட்க காலும், மனமும் பரபரத்தது. ஆனால்.., அவனது நிலைக்கு தானே காரணம் என்கையில்.., இரவில் ஒரு பொட்டு கூட உறங்காத பொழுதும், கண்கள் மூட மறுக்க, பிரம்மை பிடித்து சுவரையே வெறித்திருந்தாள்.

மகள் வெளியே வருவாள் என துளசி எதிர்பார்க்க.., அவள் வராமல் போனது.., இன்னும் துளசியை கோபப்படுத்தியது.

வேக வேகமாக எழுந்தவர்.., படாரென அவள் அறைக் கதவைத் தள்ள, சுவற்றில் பட்டு அது பெரும் ஓசை எழுப்ப, உறங்கிக் கொண்டிருந்த குழந்தை அலறி எழுந்தாள்.

அதைக் கண்டு சற்று வேகம் தணிந்தாலும்.., "ஏண்டி.., உன் மனசென்ன கல்லா..?" வெடித்தவர், அதற்குமேல் பேசாமல் வெளியேறினார்.

குழந்தையை தட்டி உறங்க வைத்தவள், தாயைத் தேடி ஓடி வந்தாள்.

"அம்மா.., ராஜ்.." முழுதாக கேட்க கூட அவளால் முடியவில்லை.

"இன்னும் உயிரோடதான் இருக்கார்.." மனதை கல்லாக்கிக் கொண்டு அவர் உரைக்க..,

‘‘அம்மா..’’ வீறிட்டாள்.

‘‘வேற என்னடி சொல்லச் சொல்ற..? நீயும் இன்னைக்கு புரிஞ்சுப்ப, நாளைக்கு புரிஞ்சுப்பன்னு நானும் எதிர்பார்த்தால்.., மாப்பிள்ளையோட சேர்த்து, என்னையும் நீ நல்லா ஏமாத்திட்டடி. நான் படிச்சு, படிச்சு சொன்ன எதுவுமே உன் காதில் ஏறவே இல்லை இல்ல..’’ ஆத்திரமாக கேட்க, கண்ணீரையே பதிலாக்கினாள்.

‘‘மாப்பிள்ளையை என்னடி சொன்ன..? சொல்லுடி.., எனக்குத் தெரிஞ்சாகணும்..’’ அவளைப் பிடித்து உலுக்கினார்.

மறுப்பாக தலை அசைத்தவள்.., ‘‘அவர் தப்பா புரிஞ்சுகிட்டாரும்மா..’’ ஒரு தாயிடம் இதற்குமேல் அவளால் சொல்ல முடியவில்லை.

‘‘நீ சரியா புரிஞ்சுக்கற மாதிரி பேசலைன்னு சொல்லுடி.., என்னைக்காவது.., ஒரு நாள்.., அவர் சந்தோஷப்படுற மாதிரி பேசியிருக்கன்னு உன் நெஞ்சில் கை வைத்து சொல்லு பார்ப்போம்..’’ அவர் கேள்விக்கு, மௌனமாக கண்ணீர் வடிப்பதைத் தவிர அவளால் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

‘‘அவர் செய்ததைப் பற்றி விமர்சிக்க நான் தயாரா இல்லை. நடந்து முடிந்ததைப் பற்றி பேசுவதில் எந்த பலனும் இல்லை. நீ

கேட்டியே.., அவர் நல்லவர் என்பதால் என்னை கல்யாணம் பண்ணிக்க சொல்றீங்க. இதுவே அவர் இடத்தில் ஒரு அயோக்கியன் இருந்திருந்தால் இப்படி சொல்லியிருப்பீங்களான்னு கேட்டியே..,

‘‘அன்னைக்கு நான் பதில் சொல்லலை.., ஆனா.., இன்னைக்கு சொல்றேன்.., உன் கேள்வியிலேயே பதில் இருக்கும்போது.., அதை நீ புரிஞ்சுக்காமல் இருந்தால் என்ன செய்யட்டும்?

‘‘உன்னை திட்டம்போட்டு கடத்தி.., பிடிவாதமாக அவர் ஆசையை நிறைவேற்றியிருந்தால், நானே அவனை வெட்டிப் போட்டிருப்பேன்.., ஆனா.., இதில் யாரைடி நான் குற்றம் சொல்லட்டும்..?’’ கலங்கினார்.

‘‘உன் மனசாட்சியில் கை வைத்து சொல்.., உங்களுக்குள் நடந்த விஷயத்தை நீ என்கிட்டே சொல்லவே இல்லையேடி.., அப்போ.., அது உங்களுக்குள் நடந்த பெர்சனல்ன்னு நீ நினைக்காமல், நீ நினைக்கப் போய்தானே அதைச் செய்தாய்..

‘‘அதுவரைக்கும் நல்லாத்தானே போச்சு.., பிறகு என்னதான்டி உனக்கு பிரச்சனை.., உன்னை எந்த பேய் பிடித்து ஆட்டுது? ஒரு அம்மாவா ‘அதை’ நான் சாதாரணமா எடுக்க முடியாதுதான்..,

“ஆனா.., ஒரு தவறு நடக்க முன்னாடி அதை தடுக்க முயற்சி செய்யணும்.., அது நடந்து முடிந்த பிறகு.., அதை எப்படி சரி செய்யணும்னு பார்க்கணுமே தவிர.., நடந்ததையே பேசிகிட்டு இருந்தால், யாருக்கும் எந்த பலனும் கிடையாது.., அது உனக்கு புரியவே இல்லையா..?” ஆற்றாமையாக அவர் வினவ, பதில் சொல்ல முடியாமல் திகைத்திருந்தாள்.

“ராஜா சொன்ன மாதிரி.., உன்னை ஆபீஸ்க்கு அனுப்பாமல் இருந்திருந்தால், இப்படி ஒரு பிரச்சனையே வந்திருக்காது. எல்லாம் என் தவறுதான்.., அதைச் செய்யாமல் போனேனே.., அதை அப்போவே செய்திருந்தால்.., இன்னைக்கு அந்த பிள்ளை இப்படி உயிருக்கு போராடிட்டு இருந்திருக்க மாட்டார்..” அவர் கண்களில் கண்ணீர் வடிந்தது.

“அம்மா.., தப்பு பண்ணிட்டேம்மா.., பெரிய தப்பு பண்ணிட்டேன்..” தாயின் காலை வந்து கட்டிக் கொண்டாள்.

மகளின் செய்கையில் தன் மொத்த உயிரும் பதறினாலும்.., மகள்மேல் இருந்த கோபம் அதை தடுத்தது.

“என்கிட்டே எதுக்குடி மன்னிப்பு கேக்கற..? நீ செஞ்சியா..? உன் காலில் விழாத குறையா மாப்பிள்ளை மன்னிப்பு கேட்டாரே.., நீ மன்னித்தாயா?” அவர் கேள்விக்கு, உயிர் உருக துடித்துக் கொண்டிருந்தாள்.

‘அவர் என் காலிலேயே விழுந்தாரே..’ எண்ணியவள், புழுவாய் துடித்தாள்.

‘‘மன்னிப்பு கேட்பவன் மனுஷன்.., மன்னிக்கிறவன் பெரிய மனுஷன்னு சொல்லுவாங்க.., அவர் செய்த தப்பை ஒரு பொண்ணா அவ்வளவு சீக்கிரம் மன்னிக்க முடியாதுதான்.., ஆனா.., தவறை சரி செய்ய முயற்சி எடுக்கும் மனிதனுக்கு.., மன்னிப்பை கொடுக்கவில்லை என்றாலும்.., காயப்படுத்தாமலாவது இருக்கலாமே..’’

‘‘எத்தனை நாள் சொன்னேன்.., அமைதியா இரு.., உன் காயம் ஆறும் வரைக்கும் பொறுமையா இரு.., எதுவும் பேசாதேன்னு. இப்போ.., எல்லாத்தையும் கொட்டிக் கவிழ்த்துட்டு..’’ அவள் அருகில் மண்டியிட்டவர்,

‘‘ஏண்டி இப்படிப் பண்ண..? நான் ஒருத்தி தாலியறுத்துட்டு இருக்குறது போதாதா? நீயும்..’’ வேகமாக அவர் வாயை அடைத்தவள், அவர் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

‘‘அப்படிச் சொல்லாதீங்கம்மா.., அவருக்கு எதுவும் ஆகாது. அப்படி ஏதாவதுன்னா.., நானும் இருக்க மாட்டேன்.., நானும் அவர்கிட்டேயே போய்டுவேன்..’’ அவள் துடிக்க,

‘‘சாகத் தயாரா இருக்கறவ, ஏண்டி அவரோட வாழ நினைக்கலை...? செய்த தவறை உணர்ந்து, மனப்பூர்வமாக

மன்னிப்பு கேட்ட மனிதனை மன்னிக்காமல், துடிக்க துடிக்க அவரை தண்டிக்கிறாயே.., அது எவ்வளவு பெரிய அரக்க குணம் தெரியுமா?

“அவர் செய்த தவறுக்கு.., மரணம்தான் தண்டனையா..? அப்போ அவர் உயிரையே எடுக்கத் துணிந்து இருக்கிறாயே.., உனக்கு என்ன தண்டனை கொடுப்பது..?” அவளை உலுக்க, தாயின் கழுத்தை கட்டிகொண்டவள் விடவே இல்லை.

“ஒரு அம்மாவா நான் இதைச் சொல்லக் கூடாது.., ஆனா.., மனசை கல்லாக்கிகிட்டு சொல்றேன். நீ ஹாஸ்பிடல் போக வேண்டாம். ராஜா உயிரோட இருக்கணும்னு நான் ஆசைப்படறேன்.., அதனால்.., இனிமேல் நீ போகாதே.., உன் வறட்டு பிடிவாதத்தை கட்டி அழு..., போ..” அவளை இழுத்துபோய் அவள் அறையில் விட்டவர், கதவை பூட்டினார்.

தாயின் செய்கையை விக்கித்துபோய் பார்த்திருந்தாள் நிஹாசினி.

# அத்தியாயம் 4

**வீ**ட்டுக்கு வந்த தனா, நேராக தன் அலுவலக அறையில் சென்று அமர, அவரை சமாதானம் செய்யும் விதம் தெரியாமல், கைகளைப் பிசைந்தவாறு நின்றிருந்தார் சுஜா.

எவ்வளவு நேரம் அப்படியே இருக்க முடியும்? ‘‘தனா..’’ மென்மையாக அழைக்க, அவர் பார்த்த பார்வையில், மறு பேச்சே அவருக்கு எழவில்லை.

துளசியை வீட்டில் விட்ட குணா, வேகமாக அங்கே வர.., தனாவின் கோபத்தைப் பார்த்தவன், தாரிணியின் அருகில் சென்று அவள் கன்னத்தில் அறைந்தான்.

அவன் இப்படிச் செய்வான் என எதிர்பாராத தாரிணி, கன்னத்தைப் பிடித்துகொண்டு விக்கித்து நிற்க, ‘‘தம்பி.., என்ன இது..? பொண்ணுங்களை கை நீட்டுறது..? யார் உங்களுக்கு கத்துக் கொடுத்தது..?’’ தாரிணியை தனக்குப் பின்னால் மறைத்தவர், அவனிடம் சாடினார்.

‘‘யாரும் கத்துக் கொடுக்க வேண்டியதில்லை.., அவங்க அவங்க நடந்துக்கறதைப் பார்த்தால்.. இதுவே லேட்.., உங்க

மனசில் கை வைத்து சொல்லுங்க அண்ணி.., உங்களுக்கு ஏன்னு தெரியலன்னு..'' அவன் பார்வை மனைவியை சுட்டது.

அவன் கேள்விக்கு சட்டென பதில் சொல்ல முடியாமல் தடுமாறியவர், தனாவை ஏறிட்டு பார்த்தார். தனாவின் பார்வையோ.., 'இதைத்தான் நானும் செய்ய நினைத்தேன்..' என அவரிடம் உரைக்க, குற்றவாளிக் கூண்டில் பெண்கள் நின்றார்கள்.

''அண்ணி.., நான் பொறுப்பில்லாதவன் தான், வீட்டில் எதையும் நான் கண்டுகொள்வது கிடையாதுதான்.., அலுவலகத்திலும் திறமை கிடையாதுதான். ஆனா.., ராஜாவை எனக்கு நல்லா தெரியும் அண்ணி. கிட்டத்தட்ட ஒரு வருஷத்துக்கு மேலா.., அவன் முகத்தில் சந்தோஷமே இல்லை.

''நானும் காதலிச்சு கல்யாணம் பண்ணிகிட்டவன். காதலிச்சு கல்யாணம் பண்ணிக்கிறவன் எப்படி இருப்பான்..? எவ்வளவு சந்தோஷமா இருப்பான்? எப்படி நடந்துப்பான்.., இப்படி எல்லாம் எனக்குத் தெரியும். ஆனா.., அவன் முகத்தில் ஒரு நாள் கூட அந்த சந்தோஷத்தை நான் பாக்கலையே..

''முன்னாடி.., அவளை காதலிக்கறேன்னு சொன்னப்போ இருந்த நிம்மதி, அவன் கல்யாணத்தப்போ ஏன் காணாம போச்சு? கல்யாணத்துக்கு முன்னாடி.., அவன் எதையோ இழந்ததுபோல் இருந்ததுக்கான காரணம் என்ன?

‘‘இப்படி எத்தனையோ விஷயம்.., ஒவ்வொரு நாளும்., அதுக்கான காரணம் என்னன்னு நான் இவகிட்டே கேட்டால்.., சரியான பதிலே சொல்லலை. ஆனா.., அந்த காரணம் என்னன்னு இவளுக்கு கண்டிப்பா தெரியும்னு எனக்குத் தெரியும்.

‘‘கட்டாயப்படுத்தி கேட்டால்.., புருஷன் பொண்டாட்டிகுள்ளே ஆயிரம் இருக்கும்னு என் வாயை அடைத்தாளே தவிர.., ஒரு வார்த்தை உண்மையை சொல்லலையே.., இப்போ.., எல்லாம் சேர்ந்து அவனை எங்கே கொண்டுபோய் நிறுத்தியிருக்கு பாத்தீங்களா?

‘‘இன்னும் இது புருஷன் பொண்டாட்டியின் தனிப்பட்ட விஷயம்னு எங்களை ஒதுங்கிப் போகச் சொல்றீங்களா? இவளோட வாதத்துக்கே வந்தாலும், எங்களுக்குள் வர சண்டை இரண்டு நாளுக்குமேல் தாக்குப் பிடிப்பதில்லையே. அப்படி இருக்கும்போது.., ஒரு வருடத்துக்கு மேலாக நிஹாசினியின் கோபம் இருக்கிறது என்றால்..?’’ நிறுத்தியவன், இரு பெண்களையும் அழுத்தமாக ஏறிட்டான்.

அவனுக்கு இவ்வளவு பேசத் தெரியும் என்றே இன்றுதான் அவர்கள் கண்டு கொண்டார்கள். அவன் கேட்பதற்கு பதில் சொல்லக் கூட முடியாமல் திகைத்திருந்தார்கள்.

ஒரு நொடி அவர்கள் பதிலுக்காக காத்திருந்தவன், "அவளுக்கு அவ்வளவு கோபம் வரும் அளவுக்கு ராஜா என்ன செய்தான்? அப்படி அவன் தவறு செய்யாமல் இருந்திருந்தால்.., அவன் இவ்வளவுதூரம் இறங்கிப் போகவும், இறுகிப் போகவும் காரணம் இல்லை. இப்போ எங்களுக்கு உண்மை தெரிய வேண்டும்..

"இப்போ நீங்க சொல்லவில்லை என்றால்.., சம்பந்தியம்மா வீட்டுக்குப் போய் நாங்க பேச வேண்டி வரும். இவ்வளவு வெறுப்பை சுமந்துகொண்டு அவள் இங்கே இருக்க வேண்டாம்.." எதைச் சொன்னால் பெண்கள் வாயைத் திறப்பார்கள் எனக் கணித்து சரியாக அடித்தான்.

"இல்ல.., அவங்ககிட்டே எல்லாம் கேட்க வேண்டாம். அதேபோல்.., நிஹாசினியின் முடிவை எடுக்க வேண்டியது நீங்களோ, நானோ இல்லை. ராஜாதான்.." சுஜா படபடத்தாள்.

"இதற்கு இவ்வளவு பேசும் நீ.., ராஜாவோட இந்த நிலைக்கு என்ன பதில் சொல்லப் போகிறாய்..?" தனா வெடிக்க, அங்கே ஊசிவிழுந்தால் கூட ஓசை கேட்கும் அளவுக்கு அமைதி நிலவியது.

"பதில் சொல்ல மாட்ட இல்ல. இந்த வீட்டை நீ முழுதாக பார்த்துக் கொள்கிறாய் என்ற நம்பிக்கையில், என் வேலையில்

நான் மூழ்கிப் போனால்..? என் நம்பிக்கையை ஒரேடியா சாகடிச்சுட்டு.., இவ்வளவு தூரம் ஆன பிறகும், வாய் திறந்து உண்மையை சொல்ல மாட்டேன் என்கிறாயே..'' இருக்கையை உதறிவிட்டு அவர் எழ,

''தனா ப்ளீஸ்.., டென்ஷன் ஆகாதீங்க..'' கணவனிடம் விரைந்தார்.

''டென்ஷன் ஆகாமல்.., இப்போ நீ உண்மையை சொல்லப் போகிறாயா? இல்ல, நானும் குணாவும் சம்பந்தியம்மா வீட்டுக்குப் போய் நிஹாசினியை கேட்கவா..?'' அவரது உச்ச கோபத்தை அன்றுதான் முதல்முதலாகப் பார்த்தார்கள்.

''இது அவங்களோட பெர்சனல்..'' அப்படியாவது விட்டுவிட மாட்டாரா என இறுதியாக முயன்றார்.

''அது அவங்க ரெண்டுபேருக்கு நடுவில் மட்டும் முடிந்துபோயிருந்தால் பரவாயில்லை. ராஜா...'', தொண்டை அடைக்க, அதை சரி செய்தவர், ''அவன் உயிருக்கே போராடும் நிலைக்கு வந்த பிறகு.., எனக்கு தெரிந்தாகணும்..'' பிடிவாதமாக நின்றார்.

சுஜா, எப்படிச் சொல்வார்.., ராஜா செய்தது சிறிய பிழையா என்ன? உண்மை தெரிந்த பிறகு, ஆண்கள் இருவரும் எப்படி

செயல்படுவார்கள் என்று தெரியாதபோது.., பரிதாபமாக அவரை ஏறிட்டார்.

தனாவும் குணாவும் பிடிவாதமாக இருக்கவே, ‘‘நான் உண்மையை சொன்ன பிறகு நீங்க கோபப்படக் கூடாது.., டென்ஷன் ஆகக் கூடாது..’’ சுஜாவின் குரல் நடுங்கியது.

‘‘தாரிணி.., நீயே சொல்..’’ சுஜாவால் சொல்ல முயன்றும் முடியாமல் போக,, தாரிணியை சொல்லச் சொன்னார்.

‘‘அக்கா.., நான்..’’ அவளும் தயங்க, சுஜாவின் பார்வையில் இருந்த கெஞ்சலில், மிகப்பெரும் தயக்கத்தோடு, ஒரு வழியாக விஷயத்தை உரைத்து முடிக்க, தனாவுக்கும், குணாவுக்கும் தாங்கள் கேட்டவற்றை நம்பத்தான் முடியவில்லை.

‘ராஜாவா அப்படி..’ இருவரின் எண்ணமும் ஒன்றாகத்தான் இருந்தது.

‘‘அப்படியென்றால்.., நிஹாசினியின் விருப்பம் இல்லாமல்தான் இந்த திருமணம் நடந்ததா..?’’ தனாவுக்கு அதை நினைக்கவே பயங்கரமாக இருந்தது.

‘‘அப்படியெல்லாம் இல்லைங்க.., அவளோட சம்மதத்தோடுதான் நடந்தது..’’ வேகமாக உரைத்தார்.

‘‘ஓ.., அப்போ, அவளோட அடி மனதில் அந்த கோபம் இன்னும் கனன்றுகொண்டே இருக்கிறது அப்படித்தானே..?’’ அவரது கேள்விக்கு மறுக்க முடியாமல் அமைதியாக நின்றார்.

‘‘இவ்வளவு பெரிய விஷயம் நடந்திருக்கு.., அதை எங்ககிட்டே சொல்லணும்னு கூட உங்களுக்கு தோணலை இல்ல.., நிஹா என்ன நினைத்திருப்பாள்..? இந்த வீட்டுக்குள் எங்களைக் காணும்போது, அவ எப்படி கூனி குறுகி போயிருப்பா.

‘‘வளைகாப்பு, டெலிவரி.., எல்லாம் சீக்கிரம் இருந்ததற்கு காரணம் கேட்டப்போ, எவ்வளவு அழகா சம்மாளிச்ச. மத்தவங்க கேள்விக்கு அவ ஆளாகியிருந்தால்.., அதை அவளால் எப்படி தாங்கியிருக்க முடியும்? ஒரு பொண்ணா இருந்துட்டு, உன்னால் இதை ஏத்துக்க முடிஞ்சதா?

‘‘பிள்ளைப்பாசம் அந்த அளவுக்கா உன் கண்ணை மறைத்து விட்டது? அவ கோபப்பட்டதிலும், விலகி இருந்ததிலும் நியாயமான காரணம் இருந்தது அப்படித்தானே..?’’ இந்த சூழ்நிலையை எப்படி எடுத்துக்கொள்ள, கையாள என்றே தெரியவில்லை.

‘‘எனக்கு அவகிட்டே பேசணும்.., வரச்சொல்.., இப்படியே இதை வளர விட முடியாது. அவளுக்கு விருப்பமில்லாத

வாழ்வை அவள் தொடர வேண்டாம். அவளும் துன்பப்பட்டு, அவனையும் காயப்படுத்தி.., இப்படி ஒரு வாழ்க்கை அவர்களுக்கு வேண்டாம்..'' உடனடியாக ஏதாவது செய்துவிடும் வேகம்.

‘‘அவனது உயிருக்கே எமனாகும் அளவுக்கு அவளது கோபம் இருக்கிறது என்றால்.., அவளோட மனதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது..'' சுஜா இடையில் பேச வருவதை கண்டுகொள்ளாமல் சொல்லிக்கொண்டே போனார்.

‘‘தனா.., அவர்கள் வாழ்க்கையைப் பற்றிய முடிவை எடுக்க வேண்டியது ராஜாவும், நிஹாசினியும்தான்.., இதில் நாம் தலையிட முடியாது.., கூடாது..'' அவருக்கு புரிய வைக்க முயன்றாள்.

‘‘உள்ளங்கை நெல்லிக்கனி மாதிரி விஷயம் நமக்கு புரியும்போது.., இன்னும் எதற்காக காத்திருக்கணும்..?'' அவருக்குப் புரியவில்லை.

‘‘தப்பு தனா.., நம்ம மனசு குழம்பியிருக்கும்போது நாம எடுக்கும் எந்த முடிவும் தவறாகத்தான் முடியும்.., வேண்டாம்.., நான் சொல்வதைக் கேளுங்க..'' கிட்டத்தட்ட கெஞ்சினாள்.

‘‘அண்ணே.., அண்ணி சொல்வதும் சரிதான். நிஹாசினி அவனை எவ்வளவு கஷ்டப்படுத்தியிருந்த பொழுதும், ராஜா

அவன் உயிரை விடத் துணிஞ்சிருக்கானே தவிர, நம்மகிட்டேயோ.., அவகிட்டேயோ ஒரு வார்த்தை பேசலை.

‘‘முதல் அட்டாக் வந்தப்போவே அவன் நம்மகிட்டே சொல்லாமல் மறைத்திருக்கான்னா.., அவளை விட்டு எந்த சூழ்நிலையிலும் பிரிய முடியாது என அவன் நினைத்திருப்பதுதானே காரணம். அண்ணி சொல்வதை மாதிரி.., அவன் வாழ்க்கையின் முடிவை அவன்தான் எடுக்கணும்.

‘‘அவன் முதல்ல வீட்டுக்கு வரட்டும்.., அதற்குப் பிறகு என்ன சொல்வான்னு பார்க்கலாம். அதைவிட.., ஹாஸ்பிட்டல்ல நிஹாசினி அழுததைப் பார்க்கும்போது.., அவளும் இப்படி ஆகும்னு எதிர்பார்த்து எதையும் செய்த மாதிரி இல்லை.

‘‘அவளும் ஏதோ கோபத்தில் பேசிட்டான்னுதான் தோணுது. ராஜாவோட முடிவு என்னன்னு தெரியாமல், நாம முடிவெடுப்பது சரியில்லண்ணா.., அவன் இன்னும் அவளோட வாழணும்னு விரும்பினால்..?’’ குணா கேட்க, அதில் இருந்த உண்மை புரியவே யோசித்தார்.

‘‘அவளுக்கு விருப்பம் இல்லையென்றால்..?’’ அவர் திருப்பிக் கேட்க, குணாவால் பதில் சொல்ல முடியவில்லை.

‘‘நிஹாவைப் பார்த்த உடனேயே.., அவனோட நிலையை காலையில் பாத்த தானே.., இப்படி ஒரு சூழலில்..,

எல்லாத்தையும் விட, ராஜா நமக்கு முக்கியம் குணா. இந்த வீட்டின் ஒற்றை வாரிசு.., அவனோட வாழ்க்கை நல்லா இருக்கணும் என்ற ஒற்றை வேண்டுதலைத் தவிர, எனக்கு வேற எதுவும் வேண்டாமே.

“ஆனா.., அதுவே இப்போ.., அலை.., அவளை விட்டு நம்மால் எப்படிடா இருக்க முடியும்? நிஹாசினி வேறு முடிவு எடுத்துவிட்டால், ராஜாவும் மனம் மாறிட்டா.., இப்படி ஆகும்னு நான் நினைக்கவே இல்லையேடா..” தன்னை மீறி அழுகையில் குலுங்கிவிட்டார்.

தானாடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்பதை மற்றவர்கள் உணர்ந்த நிமிடம். அவ்வளவு நேரமாக நிஹாசினிக்காக யோசித்தவர், ராஜாவின் பக்கம் சிந்திக்கையில்.., ஆயிரம்தான் அவன் குற்றம் செய்தாலும், பிள்ளை என வரும்பொழுது அதை மன்னிக்கவே தோன்றியது.

தனாவே அழுதுவிட, மற்றவர்கள் அனைவரும் பதறிவிட்டார்கள். “தனா.., அப்படியெல்லாம் எதுவும் ஆகாது.. எல்லாம் சரியாயிடும்.., கொஞ்ச நாள்.., எல்லாருமே ரொம்ப பொறுமையா இருக்க வேண்டிய நேரம் இது. ராஜா முதல்ல மீண்டு வரட்டும்.., பிறகு பார்க்கலாம்...” அவரை அமைதி படுத்தினார்.

அன்றும் சரி.., அடுத்த நாளும் சரி.., எதை உண்டார்கள்.., என்ன உண்டார்கள், உறங்கினார்களா இல்லையா..? எதுவுமே தெரியாத நிலை. இரண்டு நாட்கள் கடந்த பிறகும், நிஹாசினி மருத்துவமனைக்கு வராமல் போக, அவர்களுக்கு என்ன நினைப்பது என்றே தெரியவில்லை.

துளசி தினமும் வந்தாலும்.., யாரும் அவரிடம் எதையும் கேட்கவில்லை. அவர்கள் அவ்வாறு கேட்காததே அவர் நெஞ்சை அறுக்க, ராஜாவின் விழிப்பையும், மயக்கத்தையும் வேடிக்கை பார்ப்பதை தவிர யாராலும் எதுவும் செய்ய முடியவில்லை.

குழந்தை அலை வேறு அவர்களுக்குள் சூறாவளியை மூட்ட, அவளை பார்க்காமல் இருப்பது அதைவிட பெரும் அவஸ்தையாக இருந்தது.

அன்றும் வழக்கம்போல் காலையில் துளசி வர, “சம்பந்தியம்மா.., நிஹாசினி..” கேட்கக் கூடாது என சுஜா நினைத்தாலும், அவருக்கு மனம் கேட்கவில்லை.

அவர் அவ்வாறு கேட்கவே.., சட்டென துளசி அழ, தாரிணி வேகமாக அவர் அருகில் வந்தார். “நிஹாசினி எதுவும்..?” கேட்கும் முன்பே அனைவரது நெஞ்சும் பதறியது.

“அவளுக்கென்ன.., நல்லாத்தான் இருக்கா.., அவளே மாப்பிள்ளையோட உசுருக்கு எமனா இருக்கும்போது.., அவளை எப்படி இங்கே வர அனுமதிக்க, அதான்..” பெற்றவள் மகளை ஆயிரம் குறை சொல்லலாம். ஆனால்.., அடுத்தவர் ஒரு வார்த்தை பேசினாலும் அவரால் தாங்க முடியாதே.

“பரவாயில்லை.., நாளைக்கு அவளை வரச் சொல்லுங்க..” தனா அங்கே வர, கண்ணீரோடு தலை அசைத்தார்.

நான்கு நாட்களுக்குள்.., அரை உயிருக்கு கீழாக போய்விட்ட மகளைப் பார்த்துக்கொண்டுதானே அவரும் இருக்கிறார். அவரின் பேச்சை மீறி வரவும் முடியாமல், வீட்டில் இருக்கவும் முடியாமல் அவள் படும் துன்பம், கண்கொண்டு பார்க்க முடியவில்லை.

மறுநாள் காலையில்.., தன்னை மருத்துவமனைக்கு அழைத்த தாயை வியப்பும் நன்றியும் கலந்து ஏறிட்டாள். அதைக் கண்டுகொள்ளாமல், அவளை அழைத்துக்கொண்டு செல்ல, மருத்துவமனைக்குள் நுழைந்தவளுக்கு, உடனடியாக ராஜாவைக் காணும் வேகம்.

கால்கள் ரெக்கையென மாறத் துடிக்க, கட்டுப்படுத்தியவாறு நடந்து வந்தாள். ஐசியூவின் வாயிலை நெருங்க.., கண்கள் தானாகவே கண்ணீரை வடித்தது.

அலையோ.., சுஜாவைப் பார்த்தவுடன், அவள் கைகளில் இருந்து, கை, காலை அசைத்து, சுஜாவிடம் செல்லத் துடிக்க,சுஜா ஓடிவந்து குழந்தையை வாங்கிக் கொண்டு முத்தமழை பொழிந்தார்.

“அக்கா.., ராஜ்..” இதழ் துடிக்க, கண்களை கண்ணீர் மறைக்க, உயிரைக் கண்களில் தேக்கி கேட்டாள்.

“இன்னும் மயக்கத்தில்தான் வச்சிருக்காங்க..” அவளுக்குத் தேவையான பதிலைக் கொடுத்தவர் குழந்தையோடு ஒதுங்கிக் கொண்டார்.

அங்கே தாரிணி இல்லை என்பதால்.., அறைக்குச் செல்லலாமா.., கூடாதா.., எனத் திண்டாடி நின்றிருந்தாள். அவன் முகம் காண, உடலும் மனமும் பரிதவிக்க, அதைச் செய்ய முடியாமல், திண்டாடிப் போனாள்.

இவை அனைத்தையும் தினமும் கவனித்துக் கொண்டிருந்தான் விநாயகம். அவனுக்கு நடப்பவை என்னவென்று புரியவில்லை. வந்த அன்றுமுதல், நிஹாசினியை ஏன் காணவில்லை என்ற மிகப்பெரும் வினா அவனிடம் இருந்தாலும், விடை தேட முடியவில்லை.

இப்பொழுது கூட, நிஹாசினியை கண்டுகொள்ளாமல், சுஜா குழந்தையோடு ஐக்கியமாகி விட்டதும், துளசியும், நிஹாசினியும் அனாதரவாக நிற்கும் கோலம்.., அவனால் தாங்க முடியவில்லை.

‘‘அம்மா.., ஒரே ஒரு நிமிஷம்.., ராஜை நான் பாக்கணும்..’’ தாயிடம் கேட்காமல், வேறு யாரிடம் அவளால் கேட்க முடியும்?

விநாயகம் அவர்களிடம் செல்ல முயல்கையில், அங்கே வந்தார் தனா. அவரைப் பார்க்கவே.., ‘‘மாமா..’’ அவள் விசும்ப, ‘‘வாம்மா..’’ அவளை அழைத்துக்கொண்டு, அவர்களுக்காக ஒதுக்கியிருந்த அறைக்குச் சென்றார்.

ஐசியூவாயிலை ஏக்கமாகப் பார்த்தவாறு, அவரைப் பின்தொடர்ந்தாள் நிஹாசினி. துளசிக்கோ.., என்ன கேட்பது எனப் புரியாத நிலை. சுஜாவை நெருங்கியவர், அவர் அருகில் அமர்ந்து கொண்டார்.

அறைக்குள் நுழைந்த தனாவோ.., அங்கிருந்த இருக்கையை அவளுக்குக் காட்டியவர், மற்றொரு இருக்கையில் அமர்ந்தார்.

‘‘நிஹா.., நான் எதைபற்றியும் உன்கிட்டே பேசி, உன் காயத்தை கிளற விரும்பலை. ஆனா.., ஒரே ஒரு விஷயம்..’’ அவர் நிறுத்த, ‘என்ன..’ என்ற பாவனையில் அவரை ஏறிட்டாள்.

‘‘எனக்கு கொள்ளிவைக்க என் பிள்ளை எனக்கு வேணும் நிஹா..’’ அவர் கைகளைக் கூப்பி வேண்ட.., கண்கள் இருள, உலகம் தட்டாமாலை சுற்றியது.

# அத்தியாயம் 5

**த**னா தன்னிடம் தனியாக பேச விரும்பியபொழுதே.., எதுவோ நடக்கப் போகிறது என அவள் மனம் உரைத்தது. ஆனால்.., இவ்வளவு பெரிய பேரதிர்ச்சியை கொடுக்கும் விஷயமாக இருக்கும் என அவள் கனவிலும் எண்ணியிருக்கவில்லை.

‘எனக்கு கொள்ளி வைக்க என் பிள்ளை வேணும் நிஹா..’ அவர் உரைத்தபொழுது, மனதுக்குள் செத்துப் போனாள்.

‘‘மாமா..’’ உயிர் துடிக்க, அதிர்ந்துபோய் அவள் அழைக்க,

‘‘எனக்குத் தெரியும் நிஹா.., இதை உன்கிட்டே நான் கேட்டிருக்கக் கூடாது. ஆனா.., ஒரு சராசரி அப்பாவா.., எனக்கு என் பிள்ளையோட உயிர்தான் பெருசா போச்சு. அவன் இவ்வளவு பெரிய காரியத்தை செய்திருக்கான்னு எனக்கு முன்னாடியே தெரிந்திருந்தால்.., என்ன செய்திருப்பேனோ? ஆனா இப்போ..,

‘‘இப்பவும் எனக்கு உன்னோட கோபம் நியாயமாகத்தான் தோன்றுது. ஆனா.., அதையும் மீறி.., அவன் இல்லாத ஒரு வாழ்க்கையை இந்த ஜென்மத்தில் என்னால் நினைத்து கூட

பார்க்க முடியலை. எப்போ அவன்மேல் இவ்வளவு பாசம் வைத்தேன்னு தெரியலை.

‘‘சுஜாவை அவனுக்கு அம்மாவா அழைச்சுட்டு வர அளவுக்கு அவன்மேல் பாசம் வைத்திருந்தேன்னு அவ சொல்லும் வரைக்கும் எனக்குத் தெரியாது. இப்போ அவன் உயிருக்குப் போராடும் பொழுது.., வாழ்ந்து முடித்த என் உயிரை எடுத்துக்கோ கடவுளேன்னு சொல்லுற அளவுக்கு அவன்மேல் உயிராய் இருக்கிறேன்.

‘‘எனக்கு பிள்ளை இல்லையேன்னு ஒரு நாள் கூட நான் வருத்தப்பட்டதே கிடையாது. ஆனா இப்போ.., புத்திர சோகம் தாங்கும் அளவுக்கு எனக்கு மனசிலும் சரி.., உடம்பிலும் சரி தெம்பில்லை..’’ தொண்டை அடைக்க அவர் உரைக்கையில், நிஹா மூச்சு விடவே மறந்திருந்தாள்.

‘‘நீ இல்லாமல் அவன் சந்தோஷமா இருப்பானா என்று தெரியவில்லை. ஆனா.., இப்போதைக்கு அவன் மனம் எதையும் தாங்கும் சக்தியில் இல்லை. கொஞ்ச நாள்.., நீ..’’ அவர் வார்த்தையை முடிக்க முடியாமல் தடுமாற,

‘‘அவரை விட்டுப் போனால்.., நான் இல்லாமலே போய்டுவேன் மாமா..’’ ஆவி துடிக்க அவள் உரைக்க, தனாவால் தாங்க முடியவில்லை.

‘‘நிஹா.., அப்படிச் சொல்லாதம்மா..’’ அவளை தன் தோளில் சாய்த்துக் கொண்டார். ‘ராஜாவை நிஹா கொஞ்சநாள் பார்க்காமல் இருப்பது பெட்டர்’.., மருத்துவர் உரைத்ததை எப்படி அவளிடம் உரைப்பதாம்? அவரால் முடியவில்லை.

‘‘எனக்கு அவரைப் பிடிக்கலை.., அவரை வெறுத்துத்தான் அவர்மேல் கோபமாக இருக்கிறேன், அதனாலதான் அவரை காயப்படுத்தி இப்படி ஒரு நிலைக்கு தள்ளிவிட்டேன் என நினைச்சு பேசறீங்களா மாமா.., பிடிக்காத வாழ்க்கையை நான் வாழ வேண்டாம்னு நினைத்து இப்படி ஒரு முடிவுக்கு வந்தீங்களா?

‘‘பிடிக்காத வாழ்க்கையை கஷ்டப்பட்டு வாழாமல்.., பிரிந்து நிம்மதியா போய்டுன்னு சொல்ல முடியாமல்.., உங்களை நான் தவறாக நினைத்தாலும் பரவாயில்லை என்று இப்படி பேசறீங்களா? ’’ அவர் மனதுக்குள் நினைத்ததை அவள் அப்படியே உரைக்க, விக்கித்துதான் போனார்.

அவர் அமைதியே அவளுக்கான பதிலை உரைக்க, ‘‘நான் அவர்மேல் அதிகமா பாசம் வைத்ததுதான் இவ்வளவு பிரச்சனைக்கும் காரணம் மாமா. மனசுக்குள் இருந்த காதலை நான் வெளிப்படையா சொல்லாததுதான் எல்லாத்துக்கும் காரணம்.

“அதை நான் சொல்ல நினைக்கையில்.., எல்லாம் கைமீறி போய்டுச்சு மாமா. எங்கே அவர் என்னைப் பார்த்தால்.., ஏதாவது ஆயிடுமோன்னு நீங்க பயப்படுறது எனக்குப் புரியுது. எனக்கு இதில் கொஞ்சம் கூட வருத்தமே இல்லை. ஏன்னா.., இப்படி ஒரு நிலைக்கு என்னை நானே கொண்டு வந்து நிறுத்திட்டேன்.

“நீங்க எல்லோரும் என்மேல் கோபப்பட்டாலும்.., எனக்கு அதில் கொஞ்சம் கூட வருத்தமே இல்லை. என்மேல் கோபப்படணும்.., அப்படி இல்லன்னா.., என்னை நானே தண்டிச்சுப்பேன் மாமா..” விரக்தியும், தன்னிரக்கமும் போட்டி போட்டது அவள் குரலில்.

“அம்மாடி..” அவள் தலையை அவர் ஆதரவாக தடவ, ஆன மட்டும் அழுது கரைந்தாள். அவருக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை. இத்தனை நாட்களில், சில நேரங்களில் கண்விழித்து அமர்ந்திருக்கும் ராஜா ஒரு வார்த்தை கூட பேசாமல் இருக்கும் அவன் செய்கை, அதை எப்படி எடுத்துக் கொள்வது என்றே யாருக்கும் தெரியவில்லை.

அவனாக நிஹாசினியைப் பற்றி கேட்பானா என அவர்கள் காத்திருக்க, அவளைப் பற்றி மறந்தும் கூட அவன் கேட்கவில்லை. அவர்களாக அவளைப் பற்றி பேசவும் பெரும்

தயக்கமாக இருந்தது. அப்படி இருக்கையில், நிஹாசினியை எப்படி அவன் முன்னால் நிறுத்துவது?

பெரியவர்களின் இந்த போராட்டமே.., சில நாட்கள் அவர்கள் பிரிந்திருந்தால் பரவாயில்லை என்ற கடினமான முடிவை எடுக்க வைத்தது. நிஹாசினியிடம் யார் இதைப்பற்றி பேசுவது எனக் கேட்க, சுஜாவோ, தாரிணியோ அதற்கு தயாராக இருக்கவில்லை.

எனவேதான் தனாவே அவளிடம் பேச முடிவெடுத்தார். பேசிவிட முடிவெடுத்தாலும், அதை செயல்படுத்துவது மிகவும் கடினமாகத்தான் இருந்தது. எனவேதான்.., பேச்சை அவ்வாறு துவங்கினார். ஆனால்.., அதுவுமே இப்பொழுது தோல்வியில் முடிய, என்ன செய்வது எனத் தெரியாமல் அமர்ந்திருந்தார்.

நிஹாசினிக்கு ஒன்று தெளிவாகப் புரிந்தது.., நிஜமான அன்பை ஒரு முறை இழந்த பிறகு, அதே அன்பை அதே விதத்தில் பெறுவது என்பது இயலாத காரியம் என்று. மனம் கனத்துப் போனது. தனாவின் தோளில் ஆதரவாக சாய்ந்து அழுதவள், அமைதியாக விலகினாள்.

தனா அவளை பாவமாய் பார்க்க.., "எனக்கு அவரை ஒரே ஒரு முறை பாக்கணும் மாமா.." தைரியமாக பேச முயன்றாள்.

கடின மனதுடன் மறுப்பாக தலை அசைத்தவர், அறையில் இருந்து வெளியேறினார். அவரைப் பின்தொடர்ந்தவள், சுஜா,

துளசி அருகில் சென்றாள். குழந்தை சுஜாவோடு அவள் மொழியில் எதையோ சொல்லிக் கொண்டிருக்க, குழந்தையிடம் மூழ்கி இருந்தார் சுஜா.

துளசி மகளை ஏறிட.., உணர்வுகளைத் துடைத்திருந்த அவள் முகம்.., அடிவாயிற்றை கலங்கச் செய்தது. ஐசியூ வாயிலை ஒரு நொடி வெறித்தவள், உள்ளே விரையத் துடித்த கால்களை கட்டுப்படுத்தவே மிகுந்த சிரமமாக இருந்தது.

‘ராஜ்.., ராஜ்..’ உள்ளுக்குள் உயிர் துடிக்க, தன் புலம்பல் அவனை எட்டுமா? உள்ளம் பரிதவித்தது. கண்கள் எட்டும் தூரத்தில் அவன், கால்கள் சென்றுவிடும் தூரத்தில் அவன்.., ஆனாலும்.., நெருங்க முடியாமல், காண வழியில்லாமல்.., காலத்தின் கோரம்..

‘ஐயோ..’ உள்ளம் கதற.., வெளியிட முடியாத துயரம்.., இங்கே இருந்தால் அடுத்த நொடி அலறிவிடுவேன் என உள்ளம் விம்ம, தன்னை அடக்கியவள்,

“அம்மா.., போகலாம்..” அவள் உரைக்க, இருக்கையில் இருந்து எழுந்தவர், அவளை திகைப்பாய் ஏறிட்டார்.

சுஜாவும் எழுந்துகொள்ள, குழந்தையை வாங்க கை நீட்டினாள். “இவளை நான் வீட்டுக்கு கூட்டி போயிட்டு,

சாயங்காலம் கொண்டுவந்து விடறேனே..'' குழந்தையை பிரிய முடியாத ஏக்கம் அவரிடம்.

''ம்..'' மௌனமாக சம்மதித்தவள், முன்னால் நடந்தாள்.

''ஏய்.., என்னடி.., வந்துட்டு மாப்பிள்ளையை பாக்காமலே வர..'' துளசி கோபமாக அவளைப் பின் தொடர்ந்தார்.

பொங்கும் துக்கத்தை இதழ் கடித்து அடக்கியவள்.., ''என்னை இங்கே வெடிக்க வச்சுடாதம்மா..'' வார்த்தைகளை கோர்த்து அவள் உரைக்க, துளசிக்கே தாளவில்லை. லிப்ட்டுக்குள் ஏறிக்கொள்ள, தானும் உடன் ஏறிக் கொண்டார்.

எப்படி வீட்டுக்கு வந்தாள்.., தாய் கேட்டதற்கு என்ன பதில் சொன்னாள்.., எதுவும் நினைவில்லை. படுக்கையில் விழுந்து கதறியவள், உண்ணவோ, நீர் அருந்தவோ கூட எழவில்லை.

இத்தனை நாட்களாக அவள்மேல் கோபமாக இருந்த துளசிக்கு.., இன்றைய அவளது நிலையை, கண்கொண்டு பார்க்கவே முடியவில்லை. பெற்ற வயிறு துடித்தது.

''நிஹா.., எழுந்து ஒரு வாய் சாப்பிடு..'' மகளை சாப்பிட அழைத்தால் வர மாட்டாள் என்பதால், உணவைப் பிசைந்து கொண்டு வந்து அமர்ந்தார்.

''எனக்கு வேண்டாம்மா..'' பரிதாபமாக உரைக்க, நெஞ்சே கலங்கியது அந்த தாய்க்கு.

“எல்லாத்தையும் தாங்கித்தான் ஆகணும் நிஹா.., தும்பை விட்டு வாலைப் பிடிக்கும் நிலைக்கு வந்தாச்சு. இதற்கு மேலேயும் தாமதிக்க முடியாது. அதையே நினைச்சுட்டும் இருக்க முடியாது.., குழந்தைக்கு பால் கொடுக்க வேண்டியாவது கொஞ்சம் சாப்பிடு..” வலுக்கட்டாயமாக எழுப்பி அமர வைத்தார்.

“அம்மா..” அழுகை மட்டுமே அவளுக்கு துணை ஆனது.

“என்னை பாக்க கூட விடலியேம்மா.., ராஜ் எப்படி இருக்கார்ன்னு ஒரு வார்த்தை சொல்லலியே., அவர் என்னை மொத்தமா வெறுத்துட்டாராம்மா?” அவரிடம்தான் பதில் இருக்கிறது என எண்ணினாளா?

“ராஜாவாலே அது முடியும்னு நீ நினைக்கறியா..? பயித்தியக்காரி.., வாயைத் தொற..” தாய் உரைத்த அந்த வார்த்தைகள் ஆயிரம் அர்த்தங்களைச் உரைக்க, நம்ப முடியாத வியப்போடும்.., நீ சொல்வது உண்மைதானா..? என்ற எதிர்பார்ப்போடும் மறுக்காமல் உண்டாள்.

மறுநாள் முதல்.., அவள் மருத்துவமனைக்குச் செல்வதும், ராஜாவைக் காண முடியாமல் திரும்புவதும் வாடிக்கை ஆனது. மருத்துவரின் அறிவுரைப்படி என்றாலும்.., பெரியவர்கள்

அவ்வாறு செய்வதை விநாயகத்தால் பார்த்துகொண்டு இருக்க முடியவில்லை.

‘கட்டுன பொண்டாட்டியைப் பார்த்தால் அவன் உயிர் போயிடுமாம்.., என்ன ஒரு முட்டாள்த்தனம்..’ மனதுக்குள் பொருமத்தான் முடிந்தது.

ராஜாவின் உடல்நிலை தேறுகிறதா..? எனக் கேட்டால் வேலுவால் பதில் சொல்ல முடியவில்லை. கொடுக்கும் மருந்துக்கு அவன் உடல் வேலை செய்தாலும்.., அவன் விரும்பாமல் எதையும் அவன் உடல் ஏற்கவில்லை.

ராஜாவை எத்தனை நாளைக்குதான் மயக்கத்திலே வைத்திருக்க முடியும்? பகல் வேளையில் அவனை விழித்திருக்கச் செய்ய.., எதையோ நினைத்துக்கொண்டு மாலைக்குள் அவன் பல்ஸ் எகிறத் துவங்கியது.

மருத்துவத்துக்கே புரியாத புதிராக மாறிக் கொண்டிருந்தான். சுஜா, தாரிணி, தனா, குணா.., அனைவரும் பேசினால்.., அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தானே தவிர, எதற்கும், யாருக்கும் பதில் கொடுக்கவில்லை.

அவன் கண்கள் வேறு யாரையும் தேடவும் இல்லை. “ஏதாவது பேசு ராஜா..” சுஜா கேட்கையில்.., “தூக்கம் வருதும்மா..” ஒற்றை வார்த்தையில் முடித்துவிட்டு படுத்துக்

கொள்வான். இதுவே தொடர்கதையாக, விநாயக்தான் மண்டை காய்ந்து போனான்.

‘இங்கே என்னதாண்டா நடக்குது..?’ ஆத்திரத்தில் கத்த துடித்த வாயை கட்டுப்படுத்திக்கொண்டு வெளியேறினான்.

அவனால் நிஹாசினியை ஏறிட்டு கூட பார்க்க முடியவில்லை. ஏற்கனவே பெரியவர்கள் முன்னிலையில் கூனிக் குறுகி இருக்கும் அவளை, தானும் சென்று அவள் முன்னால் நின்று கஷ்டப்படுத்த விரும்பவில்லை.

அன்று மருத்துவரைக் காண அவன் சென்றபொழுது.., ராஜாவைப் பார்க்க வேண்டி அவரிடம் கெஞ்சிக் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

“ப்ளீஸ் டாக்டர்.., ஒரே ஒரு முறை..” அழுகையோடு கெஞ்சினாள். நிஹாசினியால் அதிரடியாக ஐசியூவிற்குள் நுழைய முடியும்தான். ஆனால்.., முன்னறையில் இருக்கும் செவிலியைத் தாண்டி அவளால் உள்ளே செல்ல முடியாது.., எனவேதான் இந்த போராட்டமே.

“ராஜா ஹெல்த் கண்டிஷன் சரியாக இருந்திருந்தால், நான் மறுக்கவே மாட்டேன். ஆனா இப்போ.., அவன் எப்படி ரியாக்ட் செய்வான்னே தெரியாதப்போ.., சாரி..” அவர் எழுந்து சென்றுவிட்டார்.

அவர் வெளியே வரவே.., சட்டென அருகே இருந்த படிகளில் மறைந்தவனுக்கு, நெஞ்சு தணலாய் சுட்டது.

‘அவ ராஜாவை பார்க்காமலே இருப்பதால்தான் அவன் சரியாகவே மாட்டேன் என்கிறான்னு யார் இவர்களுக்கு புரிய வைப்பது..?’ எப்படியாவது நிஹாசினியை ராஜாவை பார்க்க வைப்பது என முடிவெடுத்தான்.

ஐசியூக்குள் நுழைந்தவன்.., அங்கிருந்த டியூட்டி நர்ஸ் ரதியை நெருங்கினான். ராஜாவைப் பார்க்க, அவன் நல்ல உறக்கத்தில் இருப்பது தெரிந்தது.

அறைக்கு வெளியே குணா அமர்ந்திருந்தான். ‘‘சிஸ்டர்.., ராஜா எப்போ கண் முழிப்பான்..?’’ அவளிடம் கேட்டான்.

‘‘இவ்வளவு நேரம் முழிச்சுட்டு தான் இருந்தார். இப்போதான் இன்ஜெக்ஷன் போட்டேன்.., ஒரு போர் ஹவர்ஸ் ஆகும்..’’ உரைத்தவள், தன் கையில் இருந்த ராஜாவின் ரிபோர்டில் கவனமானாள்.

‘‘சிஸ்டர்.., எனக்கு ஒரு சின்ன ஹெல்ப் பண்ண முடியுமா..?’’.

‘‘சொல்லுங்க..’’ அவனை ஏறிட்டாள்.

‘‘உங்களுக்கே தெரியும்.., ராஜாவோட வைப் ரொம்ப நாளா.., அவனை கண்ணால் கூட பார்க்க முடியாமல் வெளியே

தவிச்சுட்டு இருக்காங்க. ஒரே ஒரு நிமிஷம்.., அவங்களை பாக்க அலவ் பண்ணீங்கன்னா போதும்..’’.

‘‘வாட்.., என்ன விளையாடுறீங்களா? பேஷன்ட் எமோஷனல் ஆகக் கூடாது என்பது டாக்டரோட ஸ்ட்ரிக்ட் ஆடர். முதல்நாள் அவரோட பல்சை நார்மல்க்கு கொண்டுவரவே போராட வேண்டியதா போச்சு. இப்போ.., இதுமட்டும் அவருக்கு தெரிந்தது..?

‘‘அது மட்டும் இல்லை.., பேஷண்டோட உயிரோட நான் ரிஸ்க் எடுக்க முடியாது..’’ சின்னக் குரலில் என்றாலும் அழுத்தமாக மறுத்தாள்.

‘‘ப்ளீஸ் சிஸ்டர்.., புரிஞ்சுகோங்க.., அவங்க அவனைப் பார்த்தால் போதும்.., வேற எதுவும் வேண்டாம். ராஜா தூங்கிட்டு தானே இருக்கான்.., நான் கூடவே இருக்கிறேன். எது நடந்தாலும் நான் பொறுப்பேத்துக்கறேன். நீங்க என்னை காவலுக்கு வச்சுட்டு ரெஸ்ட் ரூம் போனதா சொல்லிக்கோங்க.

‘‘வெளியே குணா இருக்கிறார்.., அவரை இந்த மருந்தை எல்லாம் வாங்கிட்டு வரச் சொல்லி அனுப்பிடுங்க.., ப்ளீஸ்.., நிஹாவை நீங்களே இத்தனை நாளா பாக்கத்தானே செய்யறீங்க. அவங்களா இவன் உயிருக்கு எமனாகப் போய்டுவாங்க..,

ப்ளீஸ்..'' ரதிக்குமே நிஹாவின் பரிதவித்த முகம் கண்முன் நிழலாடியது.

அவள் சற்று இளகுவதை உணர்ந்த விநாயகம்.., மேலும் அவளைக் கரைத்து, அவளை ஒப்புகொள்ள வைத்தான். அவளும் அரை மனதாக சம்மதித்தவள், ''ஒன்லி பைவ் மினிட்ஸ் ஓகே..'' அங்கிருந்து வெளியேறியவள் குணாவை அனுப்பிவிட்டு, ஓய்வறைக்குச் செல்லாமல், வராண்டாவில் நின்றுகொண்டாள்.

அவள் செல்லவே.., அங்கிருந்த ஹாலில் அமர்ந்திருந்த நிஹாவிடம் ஓடியவன், ''நிஹா.., என்னோட வாங்க..'' அவசரமாக அழைத்தான்.

''விநாயக்.., நீங்க.., எப்போ வந்தீங்க..?''.

''அதைச் சொல்லவெல்லாம் நேரமில்லை.., ஐஞ்சு நிமிஷம் உங்களுக்கு டைம்.., ராஜாவைப் பாக்க.., வாங்க..'' கிட்டத்தட்ட அவளை அழைத்துக்கொண்டு ஓடினாள்.

அதற்குமேல் அவனிடம் ஒரு வார்த்தை கேட்கவில்லை. அவனோடு ஐசியூ அறைக்குள் நுழைந்தவள், கண்களை படுக்கையில் நிலைக்கவிட்டாள். கிட்டத்தட்ட பத்து நாட்கள் ஆகி விட்டது.., ராஜாவை முழுதாகப் பார்த்து.

கண்களை நீர் மறைக்க, வேகமாக சுண்டி எறிந்தவள்.., ஒரே பாய்ச்சலில் அவனை நெருங்கினாள்.

‘‘ராஜ்.., ராஜ்.., என்னைப் பாருங்க..’’ அவனது ஆக்சிஜன் மாஸ்க்கை கழட்டியவள், அவன் முகம் முழுக்க முத்தமிட்டாள்.

‘‘நிஹா.., என்ன பண்றீங்க..’’ அவளை விலக்கிவிட்டு.., ராஜாவுக்கு மாஸ்கை பொருத்த முயன்றான் விநாயக்.

‘‘விநாயக்.., ப்ளீஸ்.., உங்க கால்ல வேண்ணாலும் விழறேன்..’’ அவள் கை கூப்பி விழப் போக, பதறி விலகியவன்.., செயலற்று நின்றான்.

‘‘நான் அவர்கிட்டே தனியா பேசணும்.., அவருக்கு என்னால் எதுவும் ஆகாது..’’ கண்ணீர் குரலில் அவனிடம் மன்றாடினாள். விநாயக்கால் தாங்க முடியவில்லை. அவளது கணவனைக் காண தன் காலில் விழுவதா? இந்த அன்பையா மற்றவர்கள் தடுக்கிறார்கள்’ எண்ணம் ஓட, செயலற்று நின்று போனான்.

அவனிடம் எதிர்ப்பு இல்லாமல் போகவே, அவள் ராஜாவின் ஆக்சிஜன் மாஸ்க்கை மீண்டும் எடுக்க, விநாயக்குக்கு இதயம் நின்று துடித்தது.

ஒரு நொடி அவன் நின்று, ராஜாவைக் கவனிக்க, அவனது இதயத்துடிப்பு சீராக இருப்பதாக கருவி காட்டிய பிறகே நிம்மதியானான்.

“ராஜ்..” மெல்லிய கதறலாக அழைத்தவள், அவன் கன்னம் தாங்கிக் கொண்டாள். எப்பொழுதும் தான் என்ன சொன்னாலும் அதையெல்லாம் மறந்துவிட்டு தன்னிடம் வரும் ராஜ். தன் மனக் காயத்தை மறைத்துவிட்டு, வளைய வரும் ராஜ்.., தன்னை புரிய வைக்க முயன்று தோற்றுப் போய் திரும்பும் ராஜ்.

எந்த நேரத்திலும் தன்னை உயிராய் தாங்கும் ராஜ்.., சில வேளைகளில் தன் தேவையை தெரிவிக்க முடியாமல் மருகும் ராஜ்.., இப்படியாக பல ராஜ்கள் அவள் விழிகளுக்குள் ஊர்வலம் போனான்.

‘எனக்கு இவரைப் பிடிக்காதா..?’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள்.

‘யார் சொன்னது..? இவர் என் உயிர்..’ மனசாட்சி உடனே பீறிட்டுக்கொண்டு வெளியேற கண்ணீரும் சேர்ந்தே வெளியேறியது.

‘பிறகு ஏன்..? எதற்காக அவரை இவ்வளவு நோகடித்தாய்..?’ மீண்டுமாக தன்னிடமே கேட்டுக் கொண்டாள்.

விநாயகம் அவள் செய்கையை.., அவள் முகத்தில் வந்து போகும் பாவங்களையே கவனித்துக் கொண்டிருந்தான்.

ராஜாவின் முகம் முழுக்க ஈர உதடுகளால் ஒற்றி எடுத்தவள், “சாரி ராஜ்.., ரியல்லி சாரி.., இந்த சாரியால் எதுவும் சரியாகாதுன்னு எனக்குத் தெரியும். ஆனாலும்.., சாரி.., சாரி..” அவன் இதயத்தின் மேலாக இறுதியாக தன் முத்தத்தை நிறுத்தியவள், சற்று நேரம் எழவே இல்லை.

எவ்வளவு நேரம் நீடித்ததோ.., முதலில் தெளிந்தவன் விநாயகம்தான். எங்கே குணா வந்துவிடுவானோ என எண்ணியவன், நிஹாவை அழைக்க முயன்றான்.

ஆனால்.., ராஜாவிடம் ஒன்றிவிட்ட அவளைக் கலைக்க அவனுக்கு மனம் வரவில்லை. இறுதியாக.., ஒரு முடிவுக்கு வந்தவன், ‘நிஹா பேசுவது ராஜாவுக்குத் தெரிய வேண்டும்.., என்ன செய்ய..?’ அவள் கேட்ட மன்னிப்பே, அவனை இவ்வாறு எண்ணத் தூண்டியது.

அவனது வழக்கமான குணம் தலை தூக்க, தன் மொபைல் கேமராவை ஆன் செய்தவன், அவளை போக்கஸ் செய்யுமாறு வைத்துவிட்டு, அந்த அறையில் இருந்து வெளியேறினான் விநாயகம்.

# அத்தியாயம் 6

**வி**நாயகம் அறையில் இருந்து வெளியே சென்றது கூடத் தெரியாமல், ராஜாவிடம் மூழ்கிப் போனாள் நிஹாசினி. அவன் இதயத்தில் ஏற்பட்ட வலிக்கு, தன் முத்தமே மருந்தாக எண்ணியவள், அவன் இதயத்தில் அழுந்த முத்தமிட்டாள்.

கண்ணீர் துளிகளும் சேர, துளித்துளியாக அவன் இதயத்தில் அவள் கண்ணீர்த்துளிகள் சிந்தியது. சிறிது நேரம் கழித்து கலைந்தவள், மெதுவாக அவனை விட்டு விலகினாள்.

அவன் சிகை கோதியவள், அவன் தாடையில் முளைத்திருந்த தாடியில் தன் கை தாங்கி, அவன் முகத்தையே இமைக்காமல் பார்த்திருந்தாள். இத்தனை நாட்களாக அவன் முகத்தை இவ்வளவு ஆழ்ந்து பார்த்ததாக அவளுக்கு நினைவில்லை.

ஆழ்ந்த உறக்கத்திலும், அவன் முகத்தில் கவிழ்ந்திருந்த வேதனை நெஞ்சைச் சுட, அவன் முள் தாடையில் இதழ் பதித்தாள்.

“ஏன் ராஜ் அப்படிப் பண்ணீங்க..? ஏன் பண்ணீங்க?” முதல் முறையாக தன் மனம் திறக்கத் துவங்கினாள்.

“என்னை அவ்வளவு ஆசையாக எடுத்துக்கொண்ட பிறகு, ஏன் என்னைவிட்டு விலகி ஓடிப் போனீங்க? ஏன் கோழை மாதிரி ஒளிந்து கொண்டீங்க..? அதை.., அதைத்தான் என்னால் தாங்க முடியலை.., ஆனா.., என் அடிப்படை கோபத்துக்கே ஆதாரம் இல்லை என்பதை, நீங்க வாய் திறந்து சொல்லும்வரைக்கும் நான் அறியாமலே போயிட்டேனே.., அதுதான் இத்தனைக்கும் காரணம்.

“என் செய்கைக்கும் பின்னால்.., என் கோபத்துக்குப் பின்னால்.., என் வார்த்தைகளுக்குப் பின்னால்.., என் வதைப்புக்குப் பின்னால் என்ன காரணம் இருந்தது என்பதை நான் உங்ககிட்டே சொல்லியே ஆகணும்..” அவன் கரத்தை இறுக பற்றிக் கொண்டாள்.

“ஒரு பொண்ணோட மனசுக்குள்ளே என்ன இருக்குன்னு அவளா வாய் திறந்து சொல்லாதவரை எந்த ஒரு மனிதர்களாலும் அதை உணர்ந்துகொள்ள முடியாது. ஆனா.., என் மனசுக்குள் நீங்க இருக்கீங்க என்பதை உணர முடிந்த உங்களால்.., அடுத்த பாதியை ஏன் உணர்ந்துகொள்ள முடியவில்லை..?” அவன் கரத்தை தன் கண்ணீரால் நனைத்தாள்.

“உங்க மனசுக்குள் நான் முழுமையாக நிறைந்து, என்னோடு மனதளவில் நீங்க வாழத் துவங்கி.., மனைவியாகவே

வரித்துக்கொண்ட பிறகுதானே என்னை நீங்க எடுத்துக் கொண்டீங்க. அப்படி இருக்கும்போது.., நம் இருவருக்குள் நடந்த அந்தரங்கத்தை எப்படி நீங்க வெளியே சொல்லலாம்?

‘‘எனக்கு நம்பிக்கை இருந்தது ராஜ்.., நடந்த தவறை நிச்சயம் நீங்க சரிபண்ணிடுவீங்க என்ற நம்பிக்கை மலையளவு இருந்தது. ஆனா.., அதை சரி பண்ணறேன்னு குழப்பி வச்சுட்டீங்களே.., என்னால் அதைத்தான் தாங்கவே முடியலை.

‘‘நீங்க வராதபொழுது கூட.., ஏதோ ஒரு காரணம் இருக்கும் என சமாதானப்பட்டுக்கொள்ள முடிந்த என்னால்.., அடுத்தடுத்து நடந்த அதிர்சிகளைத்தான் தாங்கவே முடியலை.

‘‘நான் என் கன்னித்தன்மையை இழந்துட்டேன்னு பெத்த அம்மாகிட்டேயே சொல்லவில்லையே.., பிறகு நீங்கமட்டும் ஏன்..? நீங்க என்னை ஆசைப்பட்டு கல்யாணம் பண்ணிகிட்டதாகத்தான் இருக்கணும்.., நடந்த தவறை சரி செய்ய என்று இருக்கக் கூடாது என நான் நினைத்தேன்..,

‘‘ஆனா.., எது நடக்கக் கூடாது என நான் நினைத்தேனோ.., அதையே நீங்க செஞ்சு வச்சுட்டீங்களே.., என்னால் எப்படி அவர்கள் முகத்தை பார்க்க முடியும்? என் மதிப்பு மட்டும் இல்லை.., உங்கள் கௌரவத்தையும் நான் காப்பாற்ற

போராடினால்.., நீங்க.., மொத்தமா கெடுத்துட்டீங்களே..'' தன் நினைப்பு எங்கே தவறியது எனப் புரியாமல் அழுதாள்.

''என் அம்மாவின் முன்னாடி.., உங்க உறவுகளின் முன்னாடி.., என்னை தனியா தவிக்க விட்டுட்டு.., என் கண் வட்டத்தில் கூட வராமல் போயிட்டீங்களே.., அவங்க எல்லாரும் சொல்றாங்க.., நீங்க ரொம்ப நல்லவராம்.., ஏன் அது எனக்குத் தெரியாதா?

''அந்த கோபம்தான்.., அவங்க என்ன உங்களைப்பற்றி எனக்கே சொல்வது என்ற கோபம்.., அதுதான் என்னை முரண்டு பிடிக்க வைத்தது. இவை எல்லாம் விட.., நான் திருமணத்துக்கு மறுத்த உடனே.., எனக்கு மாப்பிள்ளை பாத்தீங்களே.., அதை நான் எப்படி மன்னிப்பேன்.., மறப்பேன்..?

''அந்த கோபத்தைத்தான் உங்கள்மேல் காட்டினேனே தவிர.., நீங்க என்னை எடுத்துகொண்டதால் இல்லை..'' வெடித்துக் கிளம்பிய அழுகையை கஷ்டப்பட்டு அடக்கினாள்.

''சதா சர்வ காலமும்.., என்னை மன்னிச்சுடு.., மன்னிச்சுடு என்று சொன்னால்? நான் எதுக்கு உங்களை மன்னிக்கணும்? என் ராஜைப் பற்றி எனக்குத் தெரியாதா? எந்த பெண்ணையும் மனத்தால் கூட நீங்க தீண்டியது இல்லைன்னு நான் நம்பறேன் ராஜ்..,

‘‘அப்படிப்பட்ட நீங்க.., அன்னைக்கு அப்படி நீங்க நடந்துகொண்டீர்கள் என்றால்.., அதைப் புரிந்துகொள்ள முடியாத அளவுக்கு நான் என்ன ஜடமா?’’ அவனை உலுக்கி எழுப்பி கேள்விகேட்கும் வேகத்தை அடக்கியவள், தொண்டையில் தடுக்கிய வார்த்தைகளை அப்படியே நிறுத்தினாள்.

‘‘எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு ராஜ்.., எனக்கு மயக்கம் தெளிந்து, நான் கண் விழித்தப்போ.., பரிதவிப்பில் இருந்த உங்கள் முகம், பயத்தை காட்டிய உங்கள் கண்கள்.., அதிவேகத்தில் துடித்த உங்கள் இதயத்துடிப்பு.., அனைத்தும் எனக்குப் புரிந்ததே.

‘‘எனக்கு என்னவோ நேர்ந்துவிட்டது.., உங்களைவிட்டு நான் போய்விடுவேனோ என்ற பயம்.., அதையும் மீறி.., நான் கண் விழித்த அந்த நிமிடம் ஏற்பட்ட உங்களது அளவிட முடியாத சந்தோசம்.., அதை எப்படி வெளிப்படுத்த எனத் தெரியாமல், நீங்கள் நடந்துகொண்டது..

‘‘இன்னும் உங்கள் ஈர இதழ்களின் கதகதப்பை என்னால் உணர்ந்துகொள்ள முடிகிறதே.., அது ஏற்படுத்திய தாக்கம்.., எனக்கு சற்று அதிர்ச்சியாகத்தான் இருந்தது. அதனால்தான் உங்களை நான் விலக்கப் போராடினேன்.

‘‘வயதுக்கு வந்தது முதல்.., என் தாயைக் கூட பார்க்க அனுமதிக்காத என் தோற்றம், உங்கள் கைகளுக்குள் நான் அந்த நிலையில் இருக்கிறேன் என்ற அதிர்ச்சி.., பெண்ணுக்கே உரிய தற்காப்பு குணம் தலை தூக்க.., உங்களிடமிருந்து விடுபட நான் போராடினேன்.

‘‘ஆனா.., அது என்னால் முடியவில்லை.., அதற்குக் காரணம்.., என் பலவீனம் ஒரு காரணம் என்றால்.., இன்னொரு மிகப்பெரிய காரணம்.., நீங்க சொன்னீங்களே.., அந்த வார்த்தைதான்.., ‘எனக்கு இப்போ.., இந்த நிமிஷம் நீ வேணும் ஹாசினி.., அடுத்த நிமிஷமே எனக்கு மரணம் வந்தால் கூட பரவாயில்லைன்னு’ நீங்க சொன்னீங்களே.., அதைக் கேட்ட பிறகு, எனக்கு உங்களை தவிர்க்க மனமில்லை.

‘‘உங்களை மீறிய.., உணர்ச்சிவசப்பட்ட அந்த நிலையில் கூட, என்னோடு வாழ்ந்துவிட்டுப் போகணும்னு நீங்க சொன்ன வார்த்தை.., அந்த நிலையில் கூட என்னைத் தாக்கியது என்றால், அடுத்த நிமிடம் நானும் உங்களோட வாழத் தயார் ஆகிட்டேன்.

‘‘துவக்கம் வேண்டுமானால் பிழையாக இருக்கலாம்.., ஆனா.., முடிவு.., நானும் முழு மனசோடுதான் இணைந்தேன்..., இதைச் சொல்வதில் எனக்கு எந்த விதமான தயக்கமோ,

அவமானமோ இல்லை. நீங்க என்னை ஏமாற்றிவிடுவீங்க என்ற பயம் ஒரு சதவீதமாவது இருந்திருந்தால், அடுத்த நாளே நான் வேறு முடிவைத் தேடி இருப்பேன்..

“ஆனா.., எனக்குத்தான் அந்த பயம் இல்லவே இல்லையே. உங்கள் உயரம் தெரிந்த பொழுது.., முதல்நாள் உங்களை அடித்ததற்கு பழிவாங்க காதல் நாடகம் நடந்த்தறீங்களான்னு கேட்ட நானே.., அந்த தவறு நடந்த பிறகு, என்னை பழிவாகத்தான் அப்படி நடந்துகிட்டீங்கன்னு ஒரு நொடி கூட நினைக்கவே இல்லையே.

“ஏன்னா.., அந்த அளவுக்கு உங்கள்மேல், நீங்க என்மேல் வைத்த காதல்மேல் எனக்கு நம்பிக்கை இருந்தது.என் மொத்த ஏமாற்றம் என நான் சொன்னது.., நம் தனிப்பட்ட அந்தரங்கத்தை வெளியிட மாட்டீங்க என நான் கொண்ட நம்பிக்கையை ஏமாற்றிவிட்டீங்க என்பதைத்தானே தவிர.., வேறு எதுவும் இல்லை..”

“அதை நான் தெளிவாகச் சொல்லாமல் போனது என்னோட பெரும் பிழை...” உரைத்தவள், அவன் அருகில் அமர்ந்து, அவன்மேல் சாய்ந்துகொண்டாள்.

அவன் தோளில் கை கோர்த்தவள், மென்மையாக அவனை அணைத்துக் கொண்டாள். “எத்தனையோ தடைகள், என்

கோபம், வெறுப்பு, அனைத்தையும் தாண்டி.., நான் உங்கள் மனைவியான பிறகு.., உங்கள்மேல் நான் காட்டிய வெறுப்புக்குக் காரணம் நீங்க இல்லை.

‘‘நான்தான்.., என் மனசுதான் அதற்குக் காரணம். முதல்நாள் என் முன்னால் வந்து நின்று.., ‘பியூட்டி..’ன்னு கூப்ட்டீங்களே.., அப்போ.., அந்த நிமிஷம், என்னால் புரிந்துகொள்ள முடிந்தது.., நான் உங்களை எவ்வளவு மிஸ் பண்ணியிருக்கேன்னு.

‘‘என் எல்லா கோபத்தையும் மீறி.., ஓடிவந்து உங்க நெஞ்சில் விழணும்னு தோணிச்சே.., அந்த நிமிஷம்.., எனக்கு என்மேலேயே எழுந்த கோபம்.., அதுதான் அவ்வளவு வன்மமா வார்த்தைகளில் வெடித்ததே தவிர, உங்கள்மேல் உள்ள கோபம் இல்லை...’’ அவன் நெற்றியில் இதழ் பதித்தவள், புலம்பித் தீர்த்தாள்.

‘‘முதல் இரவிலும் சரி.., அதைத் தொடர்ந்த நாட்களிலும் சரி.., உங்கள் அருகாமையும், அணைப்பும் எனக்கு வேணும்னு என் மனசு அடம் பிடித்தது. அப்படி எதிர்பார்க்கும் என்மேலேயே வெறுப்பு.., ஆத்திரம்.., அதையெல்லாம் தாங்க முடியாமல்தான்.., அப்படி உங்களை வார்த்தையால் சுட்டேன்.., என்னை மன்னிச்சுடுங்க...

‘‘மற்றபடி.., நீங்க சொன்ன மாதிரி.., உங்களைத் தூண்டி விட்டு, அதில் குளிர்காய நினைக்கவே இல்லை. அதோட.., சில வேளைகளில்.., என் அருகாமை உங்களை தவிக்க வைப்பதை உணர்ந்து, நான் தவித்துப் போயிருக்கிறேன்.

‘‘அன்னைக்கு அப்படித்தான்.., நான் வேண்டும் எனக் கேட்டவர்.., சட்டுன்னு விலகிப் போனது மட்டும் இல்லாமல், அந்த கார்த்திகாவிடம் பேசியவாறு, அறையை விட்டு வெளியே போனால்.., நான் என்ன நினைக்கட்டும்? எனக்கான தேடலுக்கான தேவையைத் தவிர்க்க, அவகிட்டே பேசறீங்களோன்னு கோபம்..

‘‘அதைத் தடுக்க முடியாமல்தான் அப்படி கோபப்பட்டேன். மற்றபடி, உண்மையாகவே நான் உங்களை தப்பா நினைக்கவே இல்லை ராஜ்..’’ மெல்லிய கதறலாக உரைக்க, அவனிடம் மெல்லிய அசைவு தெரியவே, சட்டென தன் வாயை கையால் மூடியவள், மூச்சடக்கி அவனைப் பார்த்தாள்.

அவன் கண்விழித்தால்.., எப்படி நடந்துகொள்வான் என்ற பயம் மனதைக் கவ்வ, கண்களில் அடை மழையின் ஊர்வலம்.

அவனிடம் மேலே அசைவின்றி போகவே.., ‘‘என்கிட்டே உரிமையா பேசவில்லை.., உரிமையாக நடந்துகொள்ளவில்லை.., ஆனா.., என் தங்கை கிட்டே அவ்வளவு உரிமையா பேசி,

சண்டை போடவே.., எனக்குள் இருந்த உரிமை உணர்வுதான் அவளிடம் அப்படி நடந்துகொள்ளத் தூண்டியது.

‘‘நீங்க சொன்னீங்களே.., பெண் குழந்தை பற்றிய பேச்சு.., ஒரு பெண்ணோட மனசு உங்களுக்குப் புரியலையே என்ற கோபத்தில் சொன்னதுதானே தவிர, நீங்க நினைப்பது மாதிரி இல்லை ராஜ்.., பிரசவ அறையில்.., நீங்க என்னோட இருக்கணும்னு நான் விரும்பித்தான் இருக்க வைத்தேனே தவிர, என் வலியை நீங்க பார்க்கணும் என்ற குரூர எண்ணம் காரணம் இல்லை ராஜ்..’’ உயிரே விண்டு போகும் வலியில் உரைத்தவள், அவன் காலை பற்றிக் கொண்டு கதறினாள்.

‘‘நீங்க என்கிட்டே பேசாததற்கே உங்கமேலே கோபமா இருக்கும் நான்.., எனக்கே எனக்கான அந்த அழைப்பில்.., குழந்தையாகவே இருந்தாலும் அவளை அழைத்தால் என்னால் எப்படி தாங்கிக்க முடியும்? உங்களுக்கு பியூட்டியா நான் மட்டும்தான் இருக்கணும்..

‘‘அந்த பொசசிவ் குணம் தலை தூக்க.., என்ன சொல்றோம்.., எப்படி சொல்றோம்னே தெரியாமல் வார்த்தையை நான் சிதற விட, அதை நீங்க தவறாகப் புரிந்துகொண்டு.., ராஜ்.., நம்ம குழந்தையை நீங்க கையில் தூக்கவில்லை என்று

கோபப்பட்ட நான் எப்படி, அப்படி ஒரு அர்த்தத்தில் பேசுவேன்னு நினைத்தீங்க..?'' குமுறி அழுதாள்.

''உங்களுக்கு தண்டனை கொடுக்கணும்னு சொன்னது கூட, ஜெயில் தண்டனை இல்லை. உங்களை அப்படி ஒரு இடத்தில் என்னால் கற்பனை கூட பண்ண முடியலையே..., அப்படி இருக்கும்போது.., ராஜ்.., ராஜ்.., பயித்தியக்காரி மாதிரி எதையோ நினைச்சுட்டு..'' அவளால் அழ மட்டுமே முடிந்தது.

''என் மனசுக்குள்ளே புல்லா நீங்கதான் இருக்கீங்க. ஐ லவ் யூ ராஜ். இதை நான் ரொம்ப லேட்டா சொல்றேன்னு தெரியும்..., ஆனாலும்..'' மெல்லியதாக விசும்பியவள்,

''எனக்கு நல்லா புரியுது ராஜ்.., உங்க செய்கைக்கு பின்னாடி இருந்த காரணம் எனக்கு தெளிவா புரியுது.. உங்க அம்மாவின் வளர்ப்பு தப்பா போய்விட்டதோ என்ற உங்கள் தவிப்பு.., அந்த பழி உங்க அம்மாவை சார்ந்துவிடுமோ என்ற உங்கள் பயம்..,

''இவையெல்லாம் சேர்ந்துதான் உங்கள் தவிப்பை அதிகரித்து, அவங்ககிட்டே உண்மையை சொல்ல வைத்திருக்கு.

''அதேபோல்.., என்னை திருமணம் செய்ய நீங்க என் அம்மாவிடம் பேசியதோ? பெரியவர்களின் முடிவோ.., அவங்க உங்கமேல் வைத்திருக்கும் பாசமோ..., நம்பிக்கையோ.., எதுவுமே எனக்குத் தெரியாமல் போச்சு. அப்படித்

தெரிந்திருந்தால், நான் இவ்வளவு கோபப்பட்டிருக்கவே மாட்டேன்.

‘‘நான் எதையோ நினைத்து பேச, அது உங்களை இவ்வளவு காயப்படுத்தி இருக்குன்னு நினைக்கும்போது.., எனக்கே என்னை பிடிக்கலை ராஜ். நீங்க சொன்னீங்களே.., உங்கள் உணர்வுகளை கொஞ்சம் கொஞ்சமா கொன்னுட்டேன்னு.., அதேபோல்.., கடைசியா உங்க மனசையும் கொன்னுட்டேனே..,

‘‘அதை எப்படி நான் உயிர்ப்பிக்க வைக்கப் போகிறேன்..? எனக்கு தெரியலையே ராஜ்..., ஒன்று மட்டும் சொல்றேன் ராஜ்.., எனக்கு நீங்க வேணும். உங்கள் கோபத்தை மட்டுமே இனிமேல் நீங்க காட்டுவதாக இருந்தாலும், கோபம் காட்டவாவது எனக்கு நீங்க வேணும்.

‘‘நம்ம பொண்ணுக்கு அப்பாவா நீங்க வேணும்.., என் வாழ்நாள் முழுக்க உங்கள் அன்பை அனுபவிக்கணும்னு ஆசைப்பட்டேன். அது இனிமேல் நடக்குமான்னு எனக்குத் தெரியலை.., ஆனா.., என்னை விட்டு மட்டும் போய்டாதீங்க ராஜ்.., திரும்ப வந்துடுங்க.

‘‘நீங்க உங்களது வாழ்நாளிலேயே செய்த ஒரே தப்பு இதுதான்னு சுஜா அக்கா சொன்னாங்க. ஆனா.., நான் சொல்றேன்.., அது தப்பே இல்லை. ரொம்ப அழகான தவறு..,

ஆமா.., அதனால் தானே நமக்கு அலை கிடைத்தாள்..'' உரைத்தவள், அவன்மேல் மென்மையாக சாய்ந்து, அவனை கரங்களால் அணைத்துக் கொண்டாள்.

தலையை அவன் நெஞ்சில் புதைத்து, ''அதே மாதிரி.., ரொம்ப அழகான தவறு நீ டா..'' இப்பொழுது அவள் மனம் லேசாகி இருந்தது.

இதையெல்லாம் அவனிடம் விளக்கிச் சொல்ல அவளுக்கு ஆசைதான். ஆனால்.., அவன் கேட்பானா என்பதுதான் பெரும் வினாவாக இருந்தது. இனிமேல் வாழ்க்கை எப்படிப் போகும் என நினைக்கவே அவளுக்கு பெரும் கலக்கமாக இருந்தது.

# அத்தியாயம் 7

தன் மனதில் இருந்ததை எல்லாம் கொட்டிக் கவிழ்த்தவள், மனம் லேசாக, அவன்மேல் சாய்ந்து கண் மூடியவள், கடந்த சில நாட்களாக உறக்கம் தொலைத்த அவளது விழிகள் மௌனமாக கண் அயர்ந்தது.

தான் பேசியதை ராஜா ஒரு சதவீதம் கூட கேட்கவில்லை என்றாலும், தன் மன பாரம் இறங்கியதில் அவளுக்குள் அவ்வளவு நிம்மதி.

எவ்வளவு நேரமோ தெரியாது.., விநாயகம் சற்று பரபரப்பாக உள்ளே வந்தவன், ராஜாவின் படுக்கையில், அவன் அருகில் அமர்ந்து, அவன்மேல் சாய்ந்திருந்த நிஹாசினியைப் பார்க்க, அவள்மேல் இரக்கம் சுரந்தது.

ராஜாவைப் பார்க்க.., அவ்வளவு நேரமாக அவன் முகத்தில் கவிழ்ந்திருந்த இறுக்கம் தளர்ந்து, ஒரு நிம்மதியான உறக்கத்தில் இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. அது தன் மன பிரம்மையோ.., என கேட்டுக் கொண்டவன், எதுவாக இருந்தாலும் சரி.., அவன் நிம்மதி மட்டுமே முக்கியம் என எண்ணிக் கொண்டான்.

ஆனாலும்.., இத்தனை நாட்களில், ஒரு நாள் கூட நிஹாசினியை பார்க்க வேண்டும் என அவன் கேட்காதது ஆத்திரத்தை ஏற்படுத்தினாலும், அட்டாக்கில் விழுந்து படுத்திருக்கும் அவன்மேல் கோபம் கொள்ள அவனால் முடியவில்லை.

தான் முதலிலேயே சொல்லியிருந்தால் இப்படி ஒரு சூழலை தவிர்த்திருக்கலாமோ..., என்ற அவனது குற்ற உணர்வே அதைச் செய்ய விடாமல் தவிர்த்தது.

நிஹாசினியைப் பார்க்க, அவளது சலனமே இல்லாத சீரான மூச்சே.., அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பதை உணர்த்த, அதைப் பார்த்தவனுக்கு பெரியவர்கள்மேல் கட்டுக்கடங்காத கோபம் பெருகியது.

அவர்கள் தானே இதற்கெல்லாம் காரணம்.., நிஹாவை தினமும் பார்க்க அனுமதித்திருந்தால்.., அவள் இவ்வளவு துன்பப்படவே நேர்ந்திருக்காதே.., எண்ணியவனுக்கோ.., எதுவும் செய்ய இயலாத கையாலாகாத கோபம் கிளர்ந்தது.

முதல் வேலையாக தனது அலைபேசியை எடுத்தவன், வீடியோவை சேவ் செய்து, தனது மெயிலுக்கு அதை அனுப்பிவிட்டு அதை டெலீட் செய்தான். அவள் என்ன பேசினாள்.., ஏது பேசினாள் என அவனுக்கு தெரிந்துகொள்ள ஆர்வம் இருக்கவில்லை.

மாறாக.., என்றாவது ஒரு நாள் அதை ராஜாவிடம் காட்ட வேண்டும் என முடிவெடுத்தான். அப்படிச் செய்யும் நாள்.., ராஜாவின் கடும் கோபத்துக்கு தான் ஆளாக வேண்டி இருக்கும் என்பது அவனுக்கு உறுதியே. அதையும் மீறி அவன் இப்படி ஒரு காரியத்தை செய்யத் துணிந்ததே.., அவர்களுக்குள் எதுவோ சரியில்லை என உணர்ந்ததாலேயே.

அதையும் அவளது முதல் வார்த்தைகளே உறுதி செய்ய.., அவள் சொல்ல வருவதை ராஜா என்றாவது ஒரு நாள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதாலேயே அதைச் செய்தான்.

தன் நினைவிலேயே மூழ்கி இருந்தவனுக்கு, குணாவின் குரல் வெளியே கேட்கவே.., அப்பொழுதுதான், குணா வேறு வெளியே காத்திருக்க, நர்ஸ் ரதி அவனிடம் பேசிக் கொண்டிருப்பதே நினைவிற்கு வர, மனமே இல்லாமல் நிஹாசினியை எழுப்ப முயன்றான்.

“நிஹா..” இரண்டுமுறை குரல் கொடுத்தும் அவள் அசையாமல் போகவே.., அவள் தோளை லேசாகத் தொட்டு உலுக்கினான்.

சட்டென உறக்கத்தில் இருந்து கலைந்தவள், திடுக்கிட்டு எழுந்து, தான் கட்டிலில் அமர்ந்திருந்தோம் என்பதை மறந்தவளாக தாவி எழவே.., படுக்கையில் இருந்து தவறி விழப் போனாள்.

நொடியில் அவளைத் தாங்கியவன்.., ‘‘நிஹா.., பாத்து..’’ சற்று பதறிபோய் அவளைத் தாங்கினான்.

அவளை நேராக நிற்க வைத்தவன், ‘‘சாரி.., வெளியே.., குணா அண்ணா.., அதான்..’’ தான் அவளை எழுப்பிய காரணத்தை மிகுந்த சங்கடத்தில் உரைக்க, அவளுக்கோ.., ‘விநாயகம் இவ்வளவு நேரமாக இங்கேயா இருந்தான்..?’ எண்ணம் மனதுக்குள் ஓட, அது அவள் முகத்தில் தெளிவாகத் தெரிந்தது.

‘‘குணா அண்ணா வரவேதான் உங்ககிட்டே சொல்ல வேண்டி வந்தேன்..’’ அவளது குன்றலை பார்த்தவாறு வேகமாக உரைத்தான்.

‘‘ஓ..’’ உரைத்தவளது பார்வையோ.., ஏக்கமாய் ராஜாவைத் தழுவியது. இங்கிருந்து சென்றே ஆகவேண்டும்.., எதார்த்தம் முகத்தில் அறைய, அங்கிருந்து செல்ல முடியாமல் கால்கள் தள்ளாடியது.

வெளியே செல்ல காலடி எடுத்து வைத்தவள்.., சட்டென திரும்பி, ‘‘ராஜ்..’’ கேவலாக அழைத்து அவன் நெற்றியில் இதழ் பதித்தவள், விலகவே மனமின்றி தடுமாறினாள்.

விநாயகத்தால் அவள் படும் துன்பத்தை கண்கொண்டு பார்க்க முடியவில்லை. பார்வையைத் திருப்பியவன், கண்களில் துளிர்த்த கண்ணீரை நாசூக்காய் துடைத்துக் கொண்டான்.

“விநாயக்.., அவங்களை..” பார்த்துகொள்ளச் சொல்லித் துவங்கியவள், தான் சொல்வது எவ்வளவு பெரிய அபத்தம் எனப் புரிய, வார்த்தைகளை அப்படியே நிறுத்திக் கொண்டாள்.

நகர மறுத்த கால்களை அசைத்து வெளியே வந்தவள், குணாவை எதிர்கொள்ள, அவளைப் பார்த்தவன் ஒரு நொடி திகைத்தாலும், “ராஜா பேசினானாம்மா..?” தன்மையாகவே கேட்டான். வாழ்க்கையில் சில அடிகளை பட்ட பிறகு, நிதானம் தானாகவே கை கூடிவிடும் என்பதற்கு குணாவே ஒரு உதாரணம்.

‘இல்லை.’ என மறுப்பாக தலை அசைத்தவள், மார்பில் வலி எடுப்பதை உணர்ந்து, குழந்தைக்கு பாலூட்ட வேண்டும் என நினைவிற்கு வந்தவளாக,அவனிடம் விடைபெறும் முகமாக தலை அசைத்தவள் அங்கிருந்து கிளம்பினாள்.

அவள் சென்ற சில நொடிகளில் கார்த்திகா அங்கே வர.., “அத்திம்பேர்.., ஏன் என்கிட்டே சொல்லவே இல்லை? நான் டெல்லிக்கு தானே டூர் போயிருந்தேன்.., இந்த உலகத்தை விட்டே போய்டலியே.., பிறகு ஏன்..? எங்கே அத்தான்..?

எப்படி இருக்காங்க..?’’ கேட்டவள் ஐசியூவிற்குள் வேகமாக நுழைந்தாள்.

குணா அவளைத் தடுக்கும் முன்பாகவே நுழைந்தவள், அங்கே படுத்திருந்த ராஜாவைப் பார்த்து குரல் எடுத்து அழவே துவங்கிவிட்டாள்.

‘‘ஹல்லோ.., பெர்மிஷன் இல்லாமல் உள்ளே வந்ததே தப்பு.., இதில் அழுகை வேற., பேஷண்டை டிஸ்டப் பண்ணாமல் வெளியே போங்க..’’ ரதி சத்தம் போட, அவளை முறைத்தாள்.

‘‘என் அத்தானைப் பார்க்க நீங்க என்ன பெர்மிஷன் கொடுக்குறது..?’’ அவளிடம் எகிறியவள், ‘‘அத்தான்.., எழுந்திரிங்க.., உங்களுக்கு ஒண்ணும் இல்லை. எனக்குத் தெரியும்.., இப்படி உள்ளே அடைத்தே ஒரு வழி பண்ணிடுவாங்க.., அத்தான்..’’ அவனை உலுக்கினாள்.

‘‘கார்த்தி.., என்ன பண்ற..’’ குணா அவளைப் பிடித்து தடுக்க, அவளோ அவனைக் கண்டுகொள்ளவே இல்லை.

‘‘டாக்டர் ரவுன்ஸ் வர நேரம்.., இங்கே என்ன கலாட்டா.., முதல்ல வெளியே போங்க..’’ ரதி அவளை வெளியேற்றும் முயற்சியில் இறங்கினாள்.

அங்கே நடந்த களேபாரத்தில்.., கண்விழித்த ராஜா.., ‘‘கார்த்தி..’’ சோம்பலாகக் குரல் கொடுத்தான்.

அதைப் பார்த்த விநாயகத்துக்கு இன்னும் ஆத்திரமாக வந்தது. ‘பொண்டாட்டி வந்து அவ்வளவு கதறிட்டு போறா.., அப்போ எல்லாம் கல்லு மாதிரி இருந்துட்டு.., இப்போ என்னன்னு கேக்கறான் பார்..’ மனதுக்குள் பொருமினான்.

ராஜாவுக்கோ.., முதல் முறையாக பெரும் தெம்பு வந்த உணர்வு. “சிஸ்டர்.., ஐ’ம் ஓகே.., அவளை விடுங்க..” ராஜா குரல் கொடுக்க, ரதியால் எதுவும் செய்ய முடியவில்லை.

“ஆமா.., இப்போ சொல்லுங்க.., ஐ’ம் ஓகேன்னு.., பத்து நாளா எல்லாரையும் படுத்தி வச்சிருக்கீங்க.., வீட்டுக்குப் போனால் என்னவோ இழவு வீடு மாதிரி இருக்கு..” அவனிடம் கத்தினாள்.

அதைக் கண்டுகொள்ளாமல்.., மெதுவாக எழுந்து அமர.., “சார்.., வேண்டாம்..” ரதி பதறினாள்.

“ஹலோ.., என்ன வேண்டாம்.., அவர் ஒண்ணும் பேஷன்ட் இல்லை. நீங்க போங்க..” கார்த்திகா அவளைத் தடுத்தாள்.

மெல்லியதாக சிரித்த ராஜா.., தன் நெற்றியில் ஏதோ ஈரமாக உணர்ந்தவன், தன் நெற்றியைத் தொட்டுப் பார்க்க, அவன் கரம் ஈரத்தை உணர்ந்தது. கூடவே.., அவன் நெஞ்சிலும் ஈரம் சொட்டு

சொட்டாக உறைந்திருப்பதைப் பார்த்தவன், தன் மேனியில் மனைவியின் வாசம் உணர்ந்தான்.

‘வந்திருக்கிறாள்.., அழுதிருக்கிறாள்..’ அவன் பார்வை முதல் முறையாக ஒரு தேடலோடு சுழன்றது.

அங்கே இருந்த குணாவோ, விநாயகமோ.., கார்த்திகா, ரதியின் வாக்குவாதமோ.., எதுவும் அவன் கருத்தில் பதியவில்லை.

வந்தது முதல் அவன் முகத்திலேயே கவனமாக இருந்த விநாயகம்.., “யாரைத் தேடற ராஜா..?” அவனைக் கலைக்க, “நான் யாரைத் தேடப் போறேன்..” விட்டேற்றியாக பதில் சொன்னவன், கார்த்திகாவிடம் தன் கவனத்தைப் பதித்தான்.

ஆனால்.., இத்தனை நாளாக கண் விழித்தவுடன் மனதை அழுத்தும் பாரத்தில் இருந்து விடுதலை அடைந்திருப்பதை முழுதாய் உணர்ந்தான். ‘அவளது வருகைக்கேவா..’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

‘அவளைக் காண வேண்டும்..’ ஒரு மனம் யாசிக்க, ‘கண்டு..’ மற்றொரு மனம் அவனிடம் வினவியது. இதயத்தை மீண்டுமாக வருடியவனுக்கு.., ஏதோ கதகதப்பாய்.., நிம்மதியாய்.., இதமாய் இருந்தது. ஒரே நாளில் தனக்குள் நேர்ந்த மாற்றத்தை அவனாலேயே நம்ப முடியவில்லை.

அதே நேரம்.., அங்கே மருத்துவர் வர.., ‘‘இதென்ன மீன் மார்க்கெட்டா..? எதுக்கு இங்கே இவ்வளவு கூட்டம். சிஸ்டர்.., இதான் நீங்க பேஷண்டைப் பாக்குற லட்சணமா..?’’ கோபமாக குரல் கொடுக்க, சட்டென அங்கே ஒரு அசாத்திய மௌனம்.

‘‘அவுட்..’’ அனைவரையும் ஒரு பார்வை பார்க்க, ரதியைத் தவிர மற்றவர்கள் அனைவரும் வெளியேறினர்.

விநாயகம் மட்டும் ரதி எப்பொழுதும் அமர்ந்திருக்கும் இடத்தில் நின்றவன், மௌனமாக அவர்களைப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

‘‘ஆக்சிஜன் மாஸ்க்கை யார் எடுத்தது..? இதை யார் ரிமூவ் பண்ணா..?’’ அவன் நெஞ்சின்மேல் ஒட்டியிருந்த கருவி உருவி கிடப்பதைப் பார்த்தவர், ரதியை சூடாகப் பார்த்தார்.

‘‘அங்கிள்.., அவங்க கிட்டே ஏன் கோபப்படறீங்க? நான்தான் அன்கம்போர்ட்டா பீல் பண்ணேன்.., அதனால் நான்தான் உருவிப் போட்டேன். எனக்கு இதெல்லாம் அவசியமே இல்லை. நான் வீட்டுக்கு கிளம்பறேன்...’’ தெளிவாகப் பேசும் ராஜாவை வியப்பாய் ஏறிட்டார்.

நேற்றுவரைக்கும் ஒருவித அழுத்தத்தில் இருந்தவன்.., அவன் இறுக்கம் தளர்த்த, மருந்தை வலுக்கட்டாயமாக செலுத்த வேண்டிய நிலையில் வைத்தவன், இன்று இவ்வளவு தெளிவாக

இருப்பது..? வேகமாக அவன் பிரிஸ்கிரிப்ஷன் பேடை எடுத்துப் பார்த்தவர், வழக்கமான மருந்து மட்டுமே கொடுத்திருப்பதை உறுதி செய்து கொண்டார்.

‘அப்படியென்றால் நான் நினைத்தது சரிதான்.., இவன் உடம்பில் வியாதி இல்லை.., மனதில்தான் வியாதி..’ எண்ணியவர்..,

‘‘ரதி.., பேஷண்டைப் பார்க்க காலையில் யார் வந்தா..?’’ அவருக்கு அறிந்துகொள்ள வேண்டி இருந்தது.

‘‘அது.., அது.., வழக்கமா வரவங்கதான்.., இப்போதான்.., அந்த பொண்ணு.., அதான் வெளியே இருக்காங்களே.., அவங்க வந்தாங்க..’’ திடுக்கிட்டு, திணறி பதில் உரைத்தாள். ராஜாவின் மனைவியை அறைக்குள் அனுமதிக்கக் கூடாது என்பது அவரது கட்டளை ஆயிற்றே.., அதை மீறிவிட்டேன் எனச் சொல்ல அவளுக்கு தெம்பில்லை.

‘‘ஓ.., அன் பிலீவபிள்..’’ தனக்குள் முனகியவர்.., ராஜாவை பரிசோதிக்கத் துவங்கினார்.

ராஜாவோ ‘இவள் ஏன் மறைக்கிறாள்..? ஹாசினி வந்து சென்றிருப்பதை என்னால் உணர்ந்துகொள்ள முடிகிறதே.., பிறகு ஏன்..?’ அவனுக்குப் புரியவில்லை.

ராஜாவின் பிபி முதல்.., இதயத்துடிப்பு வரை அனைத்தும் நார்மலாக இருக்க, ‘இவன் அட்டாக்கில் இங்கே அட்மிட் ஆனவன் தானா?’ வேலுவுக்கே ஒரு நொடி சந்தேகம் வந்துவிட்டது.

செவிலியிடம் திரும்பியவர்.., ‘‘சிஸ்டர்.., இந்த மெடிசின் எல்லாம் ஸ்டாப் பண்ணிடுங்க. நான் வேற எழுதி தரேன். ட்ரிப்ஸ் இன்னைக்கு மட்டும் போதும். ராஜாவை ரூமுக்கு ஷிப்ட் பண்ணிடலாம்..’’ அவனுக்கு தேவையான மருந்துகளை மாற்றி எழுதியவர்,

‘‘இனிமேல் இதை மட்டும் கண்டினியூ பண்ணுங்க..’’ உரைத்துவிட்டு குழப்பமாகவே வெளியேறினார்.

‘ஒரு சில மணிநேரங்களுக்குள் என்ன மாயம் நடந்திருக்கும்..?’ அவருக்குப் புரியவில்லை. ஆனாலும்.., ராஜா இவ்வளவு தெளிவாக, சீக்கிரமே தேறி விட்டதில் அவருக்கு சந்தோஷமே.

அவர் அறையை விட்டு வெளியே வர, குணா அவரை நெருங்கினார். ‘‘ரொம்ப நல்ல இம்ப்ரூமென்ட் இருக்கு. இன்னைக்கே ரூமுக்கு மாத்திடலாம்’’ அவர் உரைக்க, குணா இந்த சந்தோஷமான விஷயத்தை தன் வீட்டில் இருப்பவர்களுக்கு அறிவிக்க விரைந்தார்.

மருத்துவர் செல்லவே.., செவிலியிடம் திரும்பிய ராஜா.., “சிஸ்டர்.., நிஜமாகவே என்னைப் பார்க்க வேற யாரும் வரலையா..?” அவன் கேட்டுக் கொண்டிருக்க, அவள் பதில் சொல்லும் முன்பாக கார்த்திகா அறைக்குள் நுழையவே, ஒரு விடுதலை உணர்வோடு அங்கிருந்து அகன்றாள் ரதி.

தன் புருவ மத்தியில் முடிச்சு விழ யோசித்தவன், கார்த்திகாவிடம்.., “கார்த்தி.., கொஞ்சம் ரெஸ்ட் எடுக்கணும்..” சிறு யோசனையோடு அவன் உரைக்க, சம்மதமாக தலை அசைத்தாள்.

வாயில் பக்கம் நகர்ந்தாள்.., “நிஹாசினி கிட்டே உங்களுக்கு அப்படி என்ன கோபம் அத்தான்..? உன்ககிட்டே நான் இதை எதிர்பார்க்கவே இல்லை. ஒரு விஷயம் தெரியுமா? நிஹாசினி இப்போ உங்க வீட்டில் இல்லை. அது உங்க சம்மதத்தோடுதான் நடந்ததா..?” சிறு கோபமாக வினவியவள், அவன் என்னவென்று கேட்கும் முன்பே அங்கிருந்து வெளியேறினாள்.

‘இவ என்ன சொல்றா..? ஹாசினி வீட்டில் இல்லையா..? அப்படியென்றால்?’ அவனுக்கு சிந்திக்கவே முடியவில்லை.

‘கடந்த சில நாட்களாக ஹாசினி என்னைப் பார்க்க வரவே இல்லை.., ஹாசினி இங்கே வந்ததை நர்ஸ் மறைக்கிறாள்.., அம்மாவும் அவளைப்பற்றி ஒரு வார்த்தை கூட பேசவே

இல்லை.., என்னைச் சுற்றி என்ன நடக்கிறது?' தன் இதயத்தை கைகளால் வருடினான்.

நிஹாசினியின்மேல் கட்டுக்கடங்காத கோபமும், வருத்தமும் இருக்கிறதுதான் அதற்காக.., அவளை அப்படியே விலக்கிவிட முடியுமா? தன்னையே கேட்டுக் கொண்டவனுக்கு விடைதான் கிடைக்கவில்லை.

'விருப்பமே இல்லாதவளை பிடித்து வைக்க முடியுமா? கட்டாயத்துக்காக வாழ்வது வாழ்க்கையா?' மற்றொரு மனம் கேள்வி கேட்க, குழப்பம் மட்டுமே மிஞ்சியது.

அடுத்த சிலமணி நேரங்களில்.., அவனை அறைக்கு மாற்ற, மொத்த குடும்பமும் அங்கே ஆஜர் ஆனது. நீண்ட நாட்களுக்குப் பிறகு அனைவரின் மனமும் சந்தோஷத்தில் திளைத்திருந்தது. தாயின் முகத்தை ஒரு நொடி யோசனையாக கவனித்தவன், அவர்களிடம் எதையும் கேட்கவில்லை. விநாயகத்தின் முகத்தைப் பார்த்தவனுக்கு, அவன் முதல் முறையாக சீரியசாக இருப்பதை உணர்ந்து கொண்டான்.

அவனிடம் பேச வேண்டும்..' குறித்துக் கொண்டவனுக்கு, அவன் கண்களில் தெரிந்த கோபத்துக்கான காரணம் மட்டும் புரியவே இல்லை.

''அம்மா.., அலை எங்கே..?'' அவன் கேள்வியில் அவர் முகம் விகசிக்க, ''நிஹாசினியோட இருக்கறாப்பா..'' அவர்

உரைக்க, அவனும் எங்கே என கேட்கவில்லை, அவரும் எங்கே எனச் சொல்லவில்லை.

ஆனால்.., அவனது அழைப்பு.., ‘என் மகன் கோபமாக இருக்கிறான்..’ சுஜாவை எண்ண வைக்க, அவன் தலையை மெல்லியதாக கோதினார்.

“எதையும் யோசிக்காதே..” முனகலாக உரைக்க, அமைதியாக விழிகளை மூடிக் கொண்டான்.

கார்த்திகா கேட்டுவிட்டுபோன கேள்விகள் வேறு மனதைக் குடைய, யாரிடம் என்ன கேட்பது என அவனுக்குப் புரியவில்லை. அவன் நெஞ்சைச் சுடும் மனைவியின் கண்ணீரை தாங்கும் வல்லாமல் தனக்கு இல்லாமல் போவதை அதிர்வாக உள்வாங்கிக் கொண்டான்.

அன்றைய இரவில் விநாயகம் மட்டும் அவனோடு இருக்க, மற்றவரை கட்டாயப்படுத்தி வீட்டுக்கு அனுப்பினான். இரவு எட்டுமணியளவில், வேலுவோடு.., இன்னொரு மருத்துவரும் உடன் வர, கேள்வியாக அவர்களை ஏறிட்டான்.

“ராஜா.., இவர் சைகாட்ரிஸ்ட் மிஸ்டர் பார்த்திபன். ஒரு பத்து நிமிஷம் இவர்கிட்டே பேசிட்டு இருங்க.., நான் பிறகு வரேன்..” அவர் விநாயகத்தையும் உடன் அழைத்துச் செல்ல, கேள்வியாய் அவரைப் பின் தொடர்ந்தான்.

“என்ன விநாயகம்.., என்னடா உங்க ப்ரண்டை அவர்கிட்டே விட்டுட்டு வந்ததில் குழப்பமா இருக்கா?” அவர் கேட்க, இல்லை என்பதாக தலை அசைத்தான்.

“அவனோட பிரச்சனை என்னன்னு டாக்டர் கண்ணன் என்கிட்டே ஏற்கனவே சொல்லிட்டார். நானும் எவ்வளவோ சொல்லிப் பாத்துட்டேன்.., ஒய்ப் மேலே என்ன கோபம், வருத்தம் என்றாலும் அவகிட்டே வெளிப்படையா சொல்லிடுன்னு சொன்னதை அவன் ஏற்கவே இல்லை.., எனக்கும் என்ன செய்யன்னு தெரியலை..” அவர் எதிரில் அமர்ந்து கொண்டான்.

“ம்.., இந்த முறை நிச்சயம் பலன் இருக்கும்..” அவர் உரைக்க, மௌனமாக கேட்டுக் கொண்டான்.

அடுத்த ஒருமணி நேரம் பார்த்திபனிடம் உரையாடியவனுக்கு, மனம் தெளிவாக இருந்தது. மேலும் தான் செய்ய வேண்டியது இன்னதென்று புரிந்தது. அவருக்கு நன்றி சொல்லி அவன் அமர்ந்திருக்க, அறைக்குள் நுழைந்தார் வேலு.

“என்னப்பா.., எல்லாம் தெளிவாயிடுச்சா? கண்ணன் சொன்ன பொழுதே இதை நீ செய்திருந்தால் எல்லாம் சரியா நடந்திருக்கும். ஓகே.., இப்பவும் எதுவும் தாமதம் ஆகலை...” ஒரு நொடி நிறுத்தியவர்..,

‘‘உன்கிட்டே முக்கியமான விஷயம் ஒண்ணு சொல்லணும். தனா இருக்கானே.., கடந்த ரெண்டு வருஷமா என்கிட்டே டிரீட்மென்ட் எடுத்துட்டு இருக்கான். அவன் ஹார்ட்ல ரெண்டு அடைப்பு இருக்கு.., அதை சர்ஜரி பண்ணணும்னு நானும் சொல்லிட்டே இருக்கேன்..., அவன் என்னன்னா.., தம்பி கடையெல்லாம் பாத்துக்கற பொறுப்பில் வரட்டும், பிறகு வரேன்னு சொல்லி தட்டிக் கழிச்சுட்டே வரான்..’’ அவர் உரைக்க அதிர்ந்து போனான்.

‘‘டாக்டர்.., என்ன சொல்றீங்க..?’’ அவனால் நம்பவே முடியவில்லை.

‘‘சுஜாகிட்டே எத்தனையோ முறை உன்னை அழைச்சுட்டு வரச் சொன்னேன்.., ஆனா அவங்க கேக்கவே இல்லை. உன்னை நானே மீட் பண்ணணும்னு நினைச்சுட்டு இருக்கும்போது.., இப்படி ஒரு சூழலில் உன்னை சந்திக்க வேண்டியதா போச்சு..’’ இனிமேல் நீ என்ன செய்யப் போகிறாயோ செய்.., உரைத்தவர், பார்த்திபனை ஒரு பார்வை பார்த்தார்.

‘‘பீ பிரேவ் யங் மேன்.., இதற்கே உடைந்து போனால்.., இன்னும் வரும் காலங்கள் இதைவிட கடினமாகத்தான்

இருக்கும்..'' அவன் தோளைத் தட்டிக் கொடுத்தவர்கள் சென்றுவிட்டார்கள்.

ராஜாவுக்கோ.., தனாவிற்கு இதயத்தில் அடைப்பு என்பதைக் கேட்டு உலகமே தன் இயக்கத்தை நிறுத்திய உணர்வு. 'ச்சே.., அவர்களை நான் கவனிக்க வேண்டிய நேரத்தில்.., கொஞ்சம் கூட பொறுப்பே இல்லாமல், தேவையில்லாமல் மனதை குழப்பிக் கொண்டோமே..' தன்னையே நொந்து கொண்டான்.

விநாயகம் அமைதியாகச் சென்று அங்கிருந்த மற்றொரு படுக்கையில் அமர்ந்து கொண்டான். பேச்சற்ற மௌனம்.., கடிகாரத்தில் ஓசை மட்டுமே அங்கே கேட்டது. அந்த அமைதி கொடூரமாக இருக்க, ''என்னடா.., எதுவும் பேசாமல் அமைதியா இருக்க..'' ராஜாவே துவங்கினான்.

''என்ன பேச.., நீ தூங்கு..'' தன் அலைபேசியை நோண்டினான்.

''வாயைத் தொறந்தால் விடாமல் பேசுவ.., இப்போ என்னடா..?''

''பேசத்தான் ஆசையா இருக்கு.., ஆனா இப்போ வேண்டாம்..'' நெஞ்சை முட்டும் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டான்.

“பத்து நாளா வீட்டுக்கு கூட போகலையாம்.., அம்மா சொன்னாங்க. ஆபீஸ் எப்படி போகுது? யார் பாத்துக்கறா..?” ஏனோ பேசினால் தேவலாம் என்று தோன்றியது.

“ஸ்ரீதர்..” அவன் கேள்விக்கு ஒற்றை வார்த்தையில் பதில் அளிக்க, ராஜாவுக்கு அலுப்பாக இருந்தது.

“டேய்.., இங்கே எனக்குதானே உடம்பு சரியில்லை.., இல்ல உனக்கா? ரொம்ப அளந்து பேசுற..?” அவனது செய்கை வித்தியாசமாகத்தான் இருந்தது.

“உனக்கு தெரியலன்னா என்னால் எதுவும் செய்ய முடியாது..”

“எதுவா இருந்தாலும் தெளிவா பேசு விநாயக்.., இப்படி பூடகமா பேசாதே.., தைரியமா கேளு.., உயிரை விடும் ஸ்டேஜ் எல்லாம் நான் தாண்டிட்டேன்..”.

“லூசு மாதிரி உளறாதடா.., இப்போ நான் ஏன் கோபமா இருக்கேன்னு உனக்குத் தெரியணும்.., அவ்வளவு தானே.., நான் ஒண்ணு கேக்கறேன்.., நீ எப்போ குதிரைக்கு கடிவாளம் போட்ட மாதிரி மாறின?” விநாயகத்தின் குரலில் கொஞ்சம் சூடு.

“நான் ஒரே இடத்தில் தேங்கிட்டேன்னு ரொம்ப லேட்டா புரியுதுடா..” அவன் குரலில் வருத்தம்.

‘‘நிஹா அப்படி என்ன தப்பு பண்ணான்னு நான் கேக்கப் போறதில்லை. ஆனா.., பத்து நாளா.., கட்டிய புருஷனை.., அதுவும் உயிருக்குப் போராடும் அந்த நேரத்தில் கூட, பார்க்க விடக் கூட முடியாத அளவுக்கு அவங்க என்னடா பாவம் பண்ணாங்க.

‘‘அந்த வராண்டா மூலையில் உக்காந்து அவங்க அழுத அழுகை.., உன் அறையின் கதவையே அப்பாவியா பாத்துட்டு இருந்த விதம்.., இந்த கதவுக்கு இதயம் இருந்திருந்தால் அதுவே திறந்து வழி விட்டிருக்கும். ஆனா.., அதுக்கு இதயம் இல்லையே.., என்ன செய்ய..?’’ நிஹாசினியின் அழுகைத் தோற்றம் கண்முன் விரிய, பேச்சை ஒரு நொடி நிறுத்தினான்.

ராஜாவுக்கோ.., தான் எப்படி உணர்கிறோம் என்றே புரியாத நிலை. ‘‘உன்னை ஒரு நொடி பார்க்க வேண்டி.., நர்ஸ் முதல், டாக்டரோட காலைப் பிடிக்கும் அளவுக்கு அவங்க போயும்.., ஒருத்தருக்கு கூட மனசு இரங்கலையேடா..

‘‘அதைவிட.., மயக்கம் தெளிந்து எழுபவன்.., அவங்களை பார்வையால் கூட தேடாமல்.., உன்னால் எப்படிடா இருக்க முடிந்தது..? அவங்க வீட்டுக்கு வரவில்லை என்னும்போது.., உன் பொண்ணை கட்டாயப்படுத்தி கூட்டிட்டு போகத் தெரியும் அவங்களுக்கு…

‘‘உயிரை கண்களில் தேக்கி அவங்களைப் பார்க்கும் நிஹாவோட பார்வையின் தவிப்பு எப்படிடா புரியாமல் போகும்? உன் உயிர் அவங்களைத் தவிர வேற யாருக்குடா அவ்வளவு முக்கியமா இருக்கும்? அவ்வளவு விரும்பி திருமணம் செய்த நீ இப்படி நடந்துகொள்வதைத்தான் என்னால் தாங்கவே முடியலடா.

‘‘போடா.., நீயும் எல்லா ஆம்பளைங்க மாதிரித்தான்னு எனக்கு நல்லா புரிய வச்சுட்டடா. என்ன இருந்தாலும் அவங்க அடுத்த வீட்டு பொண்ணு தானே. இதுவே.., அந்த கார்த்திகா இப்படிச் செய்திருந்தால் அவங்க இப்படித்தான் நடந்திருப்பாங்களா..?’’ தன் கோபம் முழுவதையும் வார்த்தைகளால் கொட்டி அவனைச் சாடினான்.

‘‘போதும் விநாயக்.., என் அம்மாவைப் பற்றி எனக்குத் தெரியும். அவங்க ஒண்ணு செய்யிறாங்கன்னா ஏதாவது காரணம் இல்லாமல் இருக்காது..’’ அந்த நேரத்திலும் தாயை விட்டுக் கொடுக்காமல் பேசும் அவனை ஆத்திரமாக முறைத்தான்.

‘‘அப்படி என்ன புடலங்கா காரணம் வேண்ணா இருந்துட்டு போகட்டும். நிஹாசினியோட அழுகை அவங்களை கொஞ்சம் கூடவா இளக வைக்காது’’ அவனுக்குப் புரியவே இல்லை.

“இப்போ கூட.., நிஹாசினியைப் பற்றி கவலைப்படாமல்.., அம்மாவுக்கு சப்போட் பண்ற பாரு.., உன் அம்மா பாசத்தை நான் மெச்சறேண்டா..” நக்கலாக மொழிந்தான்.

“உயிர்பயத்தால் வரும் அன்பில் நிலைப்புத்தன்மை இருக்காது விநாயக்..” வேதனையாக ராஜா உரைக்க, அவ்வளவு நேரமாக வாதாடிக் கொண்டிருந்தவனின் வார்த்தைகள் சட்டென நின்று போனது.

“ராஜா...” அதிர்ச்சியாக அவன் அழைக்க, இமைகளை அழுத்தமாக மூடிக் கொண்டான்.

“நான் எங்கே தப்பு பண்ணேன்னு எனக்குத் தெரியலடா. ஆனா, ஒண்ணு மட்டும் சொல்றேன். இனிமேல் எங்கள் நடுவில் யாரும் வராமல் பாத்துக்கறேன்.., சில முடிவுகள் கடினமாக இருந்தாலும் நான் செய்தே ஆகவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறேன்..” இமைகளை பிரிக்காமல் அவன் உரைக்க, கடவிழியோரம் நீர் துளிர்த்து இறங்கியது.

அதைப் பார்த்து பதறிய விநாயகம்.., வேகமாக அவனைத் தோள் தொட்டு அழுத்தியவன், “அவசரத்தில் எடுக்கும் எந்த ஒரு முடிவும் சரியா இருக்காது ராஜா. நிஹாகிட்டே பேசு.., எதுவா இருந்தாலும் பேசினால் தீராத பிரச்சனை எதுவுமே

கிடையாது…” எதையும் தன் நண்பன் சரியாகத்தான் முடிவெடுப்பான் என தெரிந்த பிறகும், சொன்னான்.

“பேசி தீர்க்கும் கட்டத்தை தாண்டிட்டேன் விநாயக்.., ஆனா.., நாளைக்கே இதற்கு ஒரு முடிவு கட்டறேன். என் மனைவியை அவ்வளவு சுலபமாக மற்றவர் கையில் கொடுத்துவிட மாட்டேன்..” தீர்மானமாக உரைக்க, நண்பர்கள் இருவரும் நீண்ட நாட்களுக்குப் பிறகு மனம்விட்டு உரையாடியவாறு உறங்கிப் போனார்கள்.

# அத்தியாயம் 8

மறுநாள் மாலையில் டிச்சார்ஜ் ஆகலாம் என மருத்துவர் உரைக்க, அவனுக்கு என்ன உணவு கொடுக்கலாம் எனத் துவங்கி.., எத்தனைநாள் மருந்து, எத்தனை வேளை மருந்து என அனைத்தையும் கேட்டு அறிந்து கொண்டார் சுஜா.

காலையிலேயே அவர் மருத்துவமனைக்கு வந்துவிட, மற்றவர்களும் ஒருவர் பின் ஒருவராக வந்து சேர்ந்தார்கள். அனைவரையும் ஒரு பார்வை பார்த்தவன், படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தான்.

‘‘அம்மா.., ஹாசினி எங்கே..?’’ திடுமென அவன் கேட்க, அங்கிருந்த அனைவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள்.

அவர் பதில் சொல்லத் தயங்கவே.., ‘‘கேட்டதுக்கு பதில் சொல்லுங்கம்மா.., ஹாசினி எங்கே?’’ அவன் நிதானமாக வினவினாலும், அதில் விரவியிருந்த கோபத்தை அவர்களால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

தாரிணி எதையோ சொல்லத் துவங்கவே.., அவள் கையை அழுத்தமாக பற்றி தடுத்தார். ‘ஏன்..’ கேள்வியோடு அவள் ஏறிட.., எச்சரிக்கையாய் அவளைப் பார்த்தார்.

அவர் செயலில் நிச்சயம் ஏதாவது காரணம் இருக்கும் என்பதை உணர்ந்து கொண்டவள், அங்கே இருந்த பொருட்களை சேகரிக்கத் துவங்கினார்.

அவர்கள் பதில் சொல்லப்போவதில்லை என்பதை உணர்ந்தவன், ‘‘அப்போ.., ராஜா என்ற உங்க புள்ளைக்கு மட்டும்தான் முக்கியத்துவம்.., மற்றபடி, அவன் மனைவி, குழந்தை எல்லாம் ரெண்டாம் பட்ச்சமா? ஒரு வேளை நான் உங்களையெல்லாம் விட்டுப் போயிருந்தால்..

‘‘ராஜா..’’ அனைவரும் ஒன்றாக குரல் கொடுத்தார்கள்.

‘‘நெருப்புன்னு சொன்னால் வாய் வெந்துடாது.., எனக்குத் தெரிந்தாகணும்.., நான் போயிருந்தால்.., ஹாசினியை அப்படியே விலக்கி வைத்திருப்பீங்களா? என் பொண்ணு வேணும்.., நான் வேணும்.., ஆனா.., என்னோட சரி பாதியாகி.., என் உயிருக்கு உருவம் கொடுத்த அவ வேண்டாம் அப்படித்தானே..’’ அவன் கேள்விக்கு அங்கிருந்த யாரும் பதில் கொடுக்க தயாராக இருக்கவில்லை.

‘‘என்னோட இந்த நிலைக்கு நானேதான் காரணம்மா.., எல்லாம் என் தவறால் வந்ததுதான். அப்படி இருக்கும்போது.., உங்கள் கோபமெல்லாம் அவள்மேல் பாய்வதேன்..?

‘‘அவ என்னை கொன்னு போட்டாலும் அதற்கு அவளுக்கு சரியான காரணமும், முழு உரிமையும் இருக்கும்மா. ஆனா.., அவளை தடுக்க உங்களுக்கு என்ன காரணம் இருக்கு?’’ அந்த நேரத்தில் கூட.., உனக்கு என்ன உரிமை இருக்கிறது என கேட்காத அவன் தன்மையை எண்ணி, அவன் பாசத்தை எண்ணி வியந்து போனார் சுஜா.

அதை விட, உயிர் போகும் நிலைக்கு தன்னை தள்ளிய பிறகும், நிஹாவுக்கு ஒன்று என்றால் துடிக்கும் அவனது செய்கை.., அவனை ஒரு சிறந்தவனாக வளர்த்ததில் அவ்வளவு பெருமை. கூடவே.., அவன் வாழ்க்கை நல்லபடியாக அமையவில்லையே என்ற கவலை.., அதை நாசூக்காக மறைத்துக் கொண்டார்.

‘‘எனக்கும் அவளுக்கும் நடுவில் ஆயிரம் என்ன.., லட்சம் சண்டை, கோபம், வருத்தம் இருக்கலாம். உங்களுக்கும் அவளுக்கும் நடுவில் எதுவுமே கிடையாதேம்மா.., ஒரு நாளைக்காவது என்மேல் இருக்கும் கோபத்தை அவ உங்கள்மேல் காட்டி இருக்கிறாளா? இல்லையே..,

“அப்போ.., நீங்க மட்டும் ஏன்? நான் இல்லன்னா.., அவளை அனாதையா விட்டுடுவீங்களாம்மா..? நான் செய்யும் எல்லா தவறுக்கும் தண்டனை அவளுக்கா? இது எந்த விதத்தில் நியாயம்..?” அவன் கேட்க, அனைவரின் நெஞ்சமும் கலங்கித்தான் போனது.

தன்னை மீட்டுக் கொண்ட சுஜா.., “போதும் ராஜா.., நீ ரொம்ப பேசக் கூடாதுன்னு டாக்டர் சொல்லியிருக்கிறார்.., கொஞ்ச நேரம் அமைதியா இரு..” அவனை கடிந்து கொண்டார்.

“நான் கேட்டதுக்கு இது பதில் இல்லையேம்மா..” வேதனையாக உரைக்க,

“உன் வாழ்க்கை.., உன் முடிவு.., இதில் நாங்க யாரும் தலையிட தயாரா இல்லை ராஜா. என்னைக்குமே உன் முடிவுக்கு நான் துணையாகத்தான் இருந்திருக்கிறேன்.., அதேபோல்.., இப்பொழுதும் உன் முடிவுதான் என் முடிவும்..” சுஜா நடந்துகொள்வதற்கான அர்த்தம் அவனுக்கு புரியவே இல்லை.

குழப்பமாக அவரை ஏறிட.., “நிஹாசினியை நாங்க யாரும் வீட்டுக்கு வர வேண்டாம்னு சொல்லவே இல்லை ராஜா..” தாரிணி இடை புகுந்தார்.

“போனவளை கூப்பிடவும் இல்லையே மன்னி., ஒரு பொண்ணுக்கு புருஷன் சரியா இருக்கணும்னு சொல்றது சரிதான்

இல்ல.., நான் ஒழுங்கா இருந்திருந்தால் எல்லாம் சரியாக நடந்திருக்கும். சரி.., என் வாழ்க்கையின் முடிவை நானே எடுத்துக்கறேன்..'' உரைத்தவன்,

''விநாயக்..'' ஒதுங்கி நின்ற நண்பனை அழைக்க, அவன் வேகமாக அருகில் வந்தான்.

''ஹாசினியை போய் அழைச்சுட்டு வா..'' உத்தரவிட்டான்.

''டேய்.., நான் எப்படி..? நான் கூப்ட்டா அவங்க எப்படி வருவாங்க? நீயே கூப்பிடு..'' அழகாக ஒதுங்கிக் கொண்டான்.

''ஓ.., அப்போ நானே பாத்துக்கறேன்.., எனக்கு வேண்டி ஒரே ஒரு விஷயம் பண்ணு.., நான் ஈவினிங் வீட்டுக்கு போறேன்னு அவளுக்கு தகவல் மட்டுமாவது சொல்லிடு..'' அவன் உரைக்க, அதைச் செய்வதாகச் சொன்னான்.

தனாவும், குணாவும் கடைக்கு கிளம்பிச் செல்ல, பெண்கள் இருவர் மட்டும் அங்கேயே இருந்தார்கள். ராஜா சோர்வாக சாய்ந்து உறங்கத் துவங்கவே.., வெளியே வந்தவர்கள், வரண்டாவில் போட்டிருந்த இருக்கையில் அமர்ந்தார்கள்.

''என்னக்கா.., ராஜா இப்படி பேசிட்டான்?'' தாரிணி கேட்க,

''அவனே தெளியணும்னு தானே நாம இத்தனை நாளா பேசாமலே இருந்தோம்.., பிறகேன்.., விடு.., கொஞ்ச நாள்.., அவன் என்ன முடிவெடுத்தாலும் அதில் பார்வையாளர்களாக

மட்டுமே நாம இருக்கணும். அவங்களுக்கு நடுவில் நாம போனால்.., அவன் யோசிக்கவே மாட்டான். அதான்.., அவனுக்கு பதில் கொடுக்கலை..'' அவன் பேசியதில் அவருக்கும் வருத்தம்தான்.

ஆனால்.., குடும்பம் சிதையாமல் இருக்க, சில கடினமான முடிவுகளை அவர் எடுத்தே ஆகவேண்டிய கட்டாயத்தில் அவர் இருந்தார். அதை புரிந்துகொண்ட தாரிணியும் அமைதியாகவே இருந்தாள்.

‘‘அக்கா.., ராஜாவும், நிஹாவும் சேர்ந்து வாழ்வாங்களா? இல்ல..'' நினைக்கவே கஷ்டமாக இருந்தது.

‘‘வாழணும்..'' முடித்துக் கொண்டார்.

மாலையில் ராஜா வீட்டுக்கு வர, அவனை எதிர்கொண்டாள் நிஹாசினி. கையில் இருந்த குழந்தை தகப்பனைக் கண்ட குஷியில், அவள் கைகளில் இருந்து நழுவி இறங்க, ராஜாவின் முகத்திலேயே கவனமாக இருந்தவள், அதை கவனிக்க மறந்தாள்.

ராஜா ஒரு நொடி அவளை நேராகப் பார்த்தவனது முகத்தில், அளவிட முடியாத வலி பரவ, கூடவே.., அவளது இறுதி வார்த்தைகள் நினைவிற்கு வர, குழந்தையிடமிருந்து பார்வையைத் திருப்பிக் கொண்டான்.

அவன் செய்கையில் செத்துக் கொண்டிருந்தாள் நிஹாசினி. அவன் குழந்தையைப் பார்ப்பதை தவிர்த்த விதம்.., ‘ஹையோ..’ உயிர் துடிக்கும் வலி, குழந்தையை இறுக்கினாள்.

‘அவன் முன்னால் அழக்கூடாது..’ தாய் கட்டளை இட்டிருக்க, கலங்கிய மனதை இறுக்கியவாறு நின்றிருந்தாள்.

“வாங்க சம்பந்தி.., எப்போ வந்தீங்க..? காபி ஆச்சா?” சுஜா, துளசியிடம் வினவ, அப்பொழுதுதான் அவர் இருப்பதையே பார்த்தான்.

“எல்லாம் ஆச்சு..” அவருக்கு பதில் கொடுத்தவர், “தம்பி.., இப்போ பரவாயில்லையா?” அவனிடம் வினவினார்.

“ம்..” மௌனமாக தலை அசைத்தவன், இத்தனைநாள் நிஹாசினி அவர்கள் வீட்டில் இருந்தபொழுது எப்படி தவித்திருப்பார்?’ எண்ணுகையிலேயே சங்கடமாக உணர்ந்தான்.

அங்கே ஒரு தேவையற்ற அமைதி கவிழ, குழந்தையோ.., அழுகையில் அதைக் கலைக்க முயன்றாள். “அம்முகுட்டி.., ஏன் அழறாங்க..?” சுஜா குழந்தையை அவளிடமிருந்து வாங்கிக் கொள்ள, இன்னுமே தன் பார்வையை அவனிடமிருந்து விலக்கிக் கொள்ளாமல் நின்றிருந்தாள் நிஹா.

“ராஜா.., உன் ரூமுக்கு போய் ரெஸ்ட் எடு..” தனா உரைக்க,

“அம்மா.., நான் கீழே கெஸ்ட் ரூமில் தங்கிக்கவா.., மேலே படியேறிப் போக கஷ்டமா இருக்கு..” ராஜா கேட்க, ஒவ்வொருவரின் மனமும் ஒரு விதத்தில் சிந்தித்தது.

துளசி மகளை ஆறுதலாய் நோக்க, வெடித்துக் கிளம்பிய அழுகையை தொண்டைக் குழியில் புதைத்துக் கொண்டிருந்தாள் நிஹாசினி.

“அதுக்கென்னப்பா.., தாராளமா இரு..” லிப்ட் இருக்கையில் படிகளைபற்றி கவலையே பட வேண்டியதில்லையே.., அவர் எண்ணினாலும் எதையும் உரைக்கவில்லை.

“நான் கொஞ்சம் படுத்துக்கறேன்..” பொதுவாக உரைத்துவிட்டு அறைக்குள் சென்று படுத்துக் கொண்டான்.

“சம்பந்தியம்மா நான் கிளம்பறேன்.., சின்னவ வீட்டில் தனியா இருக்கா..” துளசி, மகளிடம் ஆறுதலாக பேச விரும்பினாலும், சில கஷ்டங்களை அவள் தாங்கியே ஆகவேண்டும் என்பதை அந்த தாயுள்ளம் அறிந்தே இருந்தது.

நிஹாசினியை அவர்கள் அழைத்ததே இப்போதைக்கு பெரிதென இருக்க, கண்களால் மகளிடம் விடை பெற்றவர், கனத்த இதையத்தோடு அங்கிருந்து வெளியேறினார்.

குணாவும் தனாவும் தங்கள் அறைக்குச் செல்ல, சுஜா, தாரிணியோடு ஓரமாக நின்றிருந்தாள் நிஹாசினி.

“தாரிணி.., குழந்தையை வாங்கிக்கோ..” அவள் கையில் குழந்தையைக் கொடுத்தவர், தாரிணி செல்லவே, நிஹாசினியை நெருங்கினார்.

“நிஹா..” திக்குத் தெரியாத காட்டில், தனித்து நிற்பவள்போல் நின்றிருந்த அவள் தோளைத் தொட, “அக்கா..” அவர் தோளில் சாய்ந்தவள், குலுங்கி அழுதாள்.

அவளை ஆதரவாக அணைத்துக் கொண்டவர்.., “அழுகையால் எதையும் சாதிக்க முடியாது நிஹா. நீ ரொம்ப தைரியமா இருக்க வேண்டிய நேரமிது..” அவளைத் தேற்றினார்.

“எனக்கு.., அவரோட பேசணும்..” அவர் கழுத்தை கட்டிகொண்டவள் புலம்பினாள்.

“உன் புருஷன்கிட்டே பேச என்கிட்டே எதுக்கு பெர்மிஷன் கேக்கற.., போ.., போய் பேசு..”.

“அவர் என்னோட பேசுவாரா..?” இதற்கு அவர் என்ன பதில் சொல்வார்?

“மூடியிருக்கும் கதவைத் திறந்தால்தானே தெரியும்.., அங்கே இருப்பது சிங்கமா? இல்லையென்றால் தேவதையா என்று..” அவளை அனுப்பினார்.

தயக்கமாக சென்றவள்.., அதே தயக்கத்தோடு கதவைத் தட்ட முயன்றாள். ஆனால்.., வந்தவுடன் அவனைத் தொல்லை செய்ய மனமற்று வேகமாகத் திரும்பிவிட்டாள்.

அவள் செய்கையைப் பார்த்துக் கொண்டிருந்த சுஜாவுக்கு வருத்தமாக இருந்தது. ஆனால்.., கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்போல்.., சிந்திய பாலுக்கு வருத்தப்பட்டு யாருக்கு என்ன பயன்? எண்ணியவர், இரவு உணவைக் கவனிக்கச் சென்றார்.

அன்றைய இரவு உணவை அனைவரும் சேர்ந்து உண்ண, நிஹாசினியோ.., குழந்தையை கவனிக்கும் சாக்கில் விலகிக் கொண்டாள். ராஜா அதைப்பற்றி வருந்தியதாகத் தெரியவில்லை. ஆனால்.., அவன் முகமோ.., எதையோ ஆழமாக சிந்தித்துக் கொண்டிருந்தது.

அனைவரும் உணவருந்திச் செல்ல.., இன்டர்காமில் அவளை உண்ண அழைத்தார் சுஜா. “எனக்கு பசியில்லை அக்கா..” கலங்கிய குரலில் அவள் உரைக்க, அவளுக்கான உணவை எடுத்துக்கொண்டு மாடி ஏறினார்.

அறைக்கதவை அவர் தட்டிவிட்டு உள்ளே வர, குழந்தையை மடியில் போட்டுகொண்டு விட்டத்தை வெறித்தவாறு அமர்ந்திருந்த அவளைக் கண்டு அவர் நெஞ்சமும் கலங்கித்தான் போனது.

தான் வந்ததைக் கூட அறியாமல் அவள் அமர்ந்திருக்க.., “நிஹா..” அவள் தோளைத் தொட்டு உலுக்கினார்.

“அக்கா.., நீங்க..” அவர் கையில் இருந்த சாப்பாட்டுத் தட்டைப் பார்த்தவள், “நான்தான் வேண்டாம்னு சொன்னேனே அக்கா..” பசி அவளுக்கு மரத்துதான் போயிருந்தது.

இந்த அறைக்குள் நுழைந்த அந்த நிமிடம் முதல்.., ஆக்டோபசாக சுற்றிகொண்ட அவன் நினைவுகளை உதற முடியாமல் அவள் திணறிக் கொண்டிருக்கையில் பசி எங்கிருந்து எடுக்கும்?

அவன் நின்ற இடம்.., அவன் படுக்கும் இடம்.., அவன் உடை.., அவனது வாசம்.., அதைவிட.., அவன் இங்கே இருந்துதான் தன்னை பரிதாபமாய் நோக்குவான்.., இங்கேதான் என்னிடம் மன்னிப்பை வேண்டினான்.., இறுதியாக.., இங்கேதான் இதயம் துடிக்க விழுந்தான்.., நினைக்கவே நெஞ்சை அடைத்துக்கொண்டு வந்தது.

‘ஏன் ஆண்டவா இப்படி..?’ அவள் பார்வையில் விரவியிருந்த வலியில், சுஜாவால் இறைவனைத்தான் நொந்துகொள்ள முடிந்தது.

தான் கொண்டுவந்த பாத்திரங்கள் அடங்கிய டிரேயை அவள் அருகில் வைத்தவர், குழந்தையை தூக்கிக் கொண்டார்.

‘‘உனக்காக இல்லை என்றாலும்.., குழந்தைக்காகவாவது கொஞ்சம் சாப்பிடு நிஹா. அவளுக்கு பால் கொடுக்க வேண்டியாவது உன் வயிற்றுக்கு உணவு போக வேண்டும்..’’ அவள் கையில் தட்டைக் கொடுத்தார்.

அவரது வேண்டுகோளுக்காக ஒரு கவளம் வாயில் திணித்தவள், ‘‘சாப்பாடு இறங்கலைக்கா..’’ பரிதாபமாக உரைக்க, அவளை தன் தோளோடு அணைத்துக் கொண்டார்.

‘‘நான் ஊட்டறேன்..’’ குழந்தையை அருகில் படுக்க வைத்தவர், அவள் கையில் இருந்து தட்டை வாங்கி, சாப்பாட்டை அவளுக்கு ஊட்டினார்.

கண்களில் கண்ணீர் வழிய வாங்கிக் கொண்டவள்.., கஷ்டப்பட்டு மூன்று வாய் வாங்கியவள், தண்ணீரைக் குடித்து உணவை உள்ளே தள்ளினாள்.

‘‘போதும்க்கா..’’ அவரைத் தடுக்க,

இத்தனை நாட்களுக்குள் அவள் பாதியாக இளைத்திருப்பதைக் கண்டு வருந்தியவர்.., ‘‘இப்படிச் சாப்பிட்டால்.., காற்றில் காணாமலே போய்டுவ. இன்னும் ரெண்டு வாய் சாப்பிடு..’’ கட்டாயப்படுத்தி சாப்பிட வைத்தவர், கொண்டுவந்த பாலையும் அவளை அருந்த வைத்தார்.

குழந்தையோ.., தவழ்ந்து வந்து.., அருகில் இருந்த பாத்திரங்களை உருட்டப் பார்க்க, “எங்க மம்முக்கு அதுக்குள்ளே மம்மு சாப்பிடணுமா..?” அவளை கைகளில் அள்ளியவர், பாத்ரூம் சென்று வந்த நிஹாவை கைபிடித்து தன் அருகில் அமர வைத்தார்.

குழந்தை உறக்கத்துக்குச் சிணுங்க.., “குழந்தைக்கு பசியாற்று நிஹா..” அவளிடம் உரைக்க, “நீங்க வர முன்னாடிதான் பால் குடித்தாள்.., இப்போ தட்டிக் கொடுத்தால் தூங்கிடுவா..” பதில் கொடுக்கவே.., குழந்தையை தோளில் போட்டவர்.., அறைக்குள்ளேயே நடந்து அவளை உறங்க வைத்தார்.

குழந்தை உறங்கிவிடவே, அவளை அலுக்காமல் அவளது சிறிய கட்டிலில் படுக்க வைத்தவர், நிஹாவை அழைத்துக்கொண்டு பால்க்கனிக்குச் சென்றார்.

இவ்வளவு நேரமாக விட்டத்தை வெறித்தவள், இப்பொழுது இருளை வெறித்தாள். அங்கிருந்த மூங்கில் கூடையில் அமர வைத்தவர், தானும் அவள் அருகில் அமர்ந்தார்.

“இருட்டுக்குள் வாழ்க்கையை தேட முடியாது நிஹா..” அழுத்தமாக உரைக்க, தவிப்பாய் அவரை ஏறிட்டாள்.

“ராஜாவோட பிடிவாதம் தெரிந்த அளவுக்கு, எனக்கு அவனது கோபத்தைப் பற்றி தெரியாது. ஏன்னா.., அவனோட

கோபத்தை இதுவரை நாங்க யாருமே பார்த்ததில்லை. இப்போ கூட.., அவன் கோபமா இருக்கானா.., இல்ல பிடிவாதமா இருக்கனான்னு எனக்குத் தெரியலை.

“ஒன்று மட்டும் சொல்றேன்.., அவனோட பிடிவாதத்துக்கு முன்னால், எந்த சமாதானமும் செல்லுபடி ஆகாது. தாரிணியிடம் அவன் நடந்துகொண்ட முறையை வைத்து சொல்கிறேன்..” அவர் நிறுத்த, அவரை பயப் பார்வை பார்த்தாள்.

“நீ பயப்பட வேண்டி இதைச் சொல்லவில்லை. நீ பொறுமையாக இந்த சூழ்நிலையை பேஸ் பண்ண வேண்டித்தான் இதைச் சொல்கிறேன். இதில் உனக்கு சாதகமான ஒரே விஷயம்.., தப்பு அவன்மேல் இருக்கிறது என அவன் தெளிவாக இருப்பதுதான்...”

“எனக்குத் தெரிந்து ரெண்டுபேருக்கும் நடுவில் இருக்கும் பிரச்சனையே.., நீங்க எதையுமே மனசு விட்டு பேசிக் கொள்ளாததுதான். இனிமேல் அவன் அதற்கு இடம் கொடுப்பானா என்று எனக்குத் தெரியலை. ஆனா.., உன் வாழ்க்கையின் முடிவை உன் கையில் அவன் கொடுத்து விடுவான் என்பது என்னோட எண்ணம்..” அவர் உரைக்க, அதிர்ந்துபோய் அவரைப் பார்த்தாள்.

‘‘ஆமா.., இது நடக்கும்.., அப்போ நீ உடைந்துபோகக் கூடாது என்பதற்காகத்தான் இதை உன்கிட்டே சொல்ல வந்தேன்’’.

‘‘அவர் என்னை விலக்கி விடுவாரா?’’ பதைப்பாய் கேட்க,

‘‘நான் சொன்னதை நீ சரியா புரிஞ்சுக்கவே இல்லை நிஹா. முடிவை உன் கையில் கொடுப்பான்னு சொன்னேன்..’’ அவளைத் திருத்த, அவள் முகத்தில் மெல்லிய தெளிவு.

‘‘உன் அழுகை அவனை பலவீனப் படுத்துமே தவிர.., அது எந்த பலனையும் அளிக்கப் போவதில்லை. வாழ்க்கையில் சில கட்டங்களில் மிக கடுமையான சோதனைகளைத் தாண்டி நாம வர வேண்டி இருக்கும். அந்த நேரங்களில்தான் நாம ரொம்ப வலிமையா இருக்கணும்.

‘‘ஒரு மனம் உடைந்து போனது போதும் நிஹா.., அதை சரி செய்யவாவது நீ தைரியமா இருக்கணும். அவனை நெருங்கினால் என்ன செய்வான்..? நெருங்க முடியுமா..? முடியாதா..? இப்படி எதையும் நினைக்காதே. உனக்கு என்ன தோணுதோ அதைச் செய்.

‘‘கோபத்தில் அவன் திட்டினால் கூட, கொஞ்ச நாள்.., உங்க நல்லதுக்காக அதை தாங்கிக்கோ.., நான் சொல்வது புரியுதா?’’ அவளிடம் கேட்க, தலை அசைத்தாள்.

‘‘இத்தனை நாள் யார் பேச்சையும் கேக்காமல், முட்டாள்த்தனமா இருந்துட்டேன். இனிமேல் நிச்சயம் கேட்டு நடந்துக்கறேன்..’’ தைரியமாக உரைத்து விட்டாலும்.., மனதைக் கவ்வும் பயத்தை என்ன செய்வது?

‘‘சரி.., கண் முழிச்சு உடம்பைக் கெடுத்துக்காமல் போய் தூங்கு.., ஏதாவது வேணும்னா.., தயங்காமல் என்னைக் கூப்பிடு..’’ அவளை அழைத்து வந்து, படுக்கையில் படுக்க வைத்த பிறகே அங்கிருந்து சென்றார்.

அவர் செல்லப் போகையில்.., ‘‘அக்கா.., அவர் என்னை ஏத்துப்பார் தானே..’’ தவிப்பாய் கேட்க, ‘‘அது உன் கையில்தான் இருக்கு நிஹா..’’ பூடகமாய் பேசிச் செல்லும் அவரை திகைப்பாய் பார்த்திருந்தாள் நிஹா.

இரண்டடி எடுத்து வைத்தவர்.., ‘‘முற்றுபுள்ளின்னு நாம நிறுத்தும் இடத்தில் கூட, அந்த முற்றுபுள்ளிக்குப் பின்னால் ஒரு கமா போட்டால் அது தொடரும்னு அர்த்தம்..’’ முதல் திகைப்பே முடியாமல் இருக்க, இது..?

# அத்தியாயம் 9

**கா**லையில் எழுந்து காலைக் கடனை முடித்த ராஜா.., அறைக்குள்ளேயே சற்று நேரம் பத்மாசனத்தில் அமர்ந்தவன், நினைவுகளை ஒருமுகப்படுத்த முயன்றான்.

இரவில் சிந்தையில் ஓடிய குழப்பங்கள் அனைத்தும் அப்படியே உலா போக, ஒருமுகப்படுத்துதல் கைவராமலேயே அவனுக்கு ஆட்டம் காட்டியது. புதிய அறை, புதிய சூழல்.., இரவில் ஆழ்ந்த உறக்கம் இல்லாமல் போயிருக்க, அந்த குழப்பத்திலும் சில தெளிவான முடிவுகளை எடுத்திருந்தான்.

என்னவெல்லாம் செய்ய வேண்டும்.., தன் கடமை.., அடுத்து எடுக்க வேண்டிய முடிவுகள்.., கார்த்திகாவின் விஷயம்.., என அனைத்தையும் சிந்தித்தவன், ஒவ்வொன்றாய் பட்டியல் இட்டிருந்தான்.

என்னதான் முயன்றாலும்.., நிஹாசினியைப் பற்றி நினைக்கையிலேயே எழும் ஒரு அழுத்தம்.., அதை தவிர்க்க முடியாமல் திணறினான். முயன்று.., மூச்சுபயிற்சியை செய்தவன்.., அதில் கவனத்தை குவித்தான்.

எவ்வளவு நேரமோ தெரியாது.., அறைக்கதவு மெல்லியதாக தட்டப்பட, கையில் குழந்தையோடு உள்ளே நுழைந்தாள் லஷ்மி.

குழந்தையில் மெல்லிய குழறலான மொழி அவனைத் தீண்ட, விழி திறந்தான்.

‘என்ன..?’ என்பதுபோல் அவரை ஏறிட,

“குழந்தையை கொஞ்ச நேரம் இங்கே விடச் சொன்னாங்க சின்னம்மா..” சொன்னவள், குழந்தையை அவன் அருகில் இருந்த படுக்கையில் கிடத்தினாள்.

அவ்வளவு நேரமாக இருந்த இதம் தொலைந்து போக, “குழந்தையை தூக்கிட்டு போங்க..” கிட்டத்தட்ட கத்தினான்.

அவன் கோபத்துக்கான காரணம் புரியாமல் திகைத்தவள், உடல்நிலை சரியில்லாதவனை மேலும் டென்ஷன் செய்ய விரும்பாமல், குழந்தையோடு வெளியேற, அதை எதிர்பார்த்தே இருந்தவள்போல், நிஹாசினி அவளை எதிர்கொண்டவள், குழந்தையை தான் வாங்கிக் கொண்டாள்.

அவள் அறைக்குள் செல்ல முயலவே.., “அம்மாடி.., தம்பி கோவமா இருக்கு..” தயக்கமாக அவளைத் தடுத்தாள்.

“நான் பாத்துக்கறேன்..” தைரியம்போல் காட்டிக்கொண்டு, கலங்கிச் செல்லும் அவளைப் பார்த்து, லஷ்மிக்கு இரக்கம் சுரந்தது.

அறைக்கதவைத் திறந்தவள்.., ராஜாவை நேர் பார்வை பார்த்து.., “குழந்தையை கொஞ்ச நேரம் பாத்துக்கோங்க..” அவன் கைகளில் கொடுக்க முயன்றாள்.

அவனோ.., அவளைப் பார்ப்பதை தவிர்த்து முகத்தை திருப்பியவன், “குழந்தையை தூக்கிட்டு போ..” லஷ்மியிடம் உரைத்ததற்கு சற்றும் குறைவில்லாமல் தெறித்தது கோபம்.

“ஏன்..?” சாதாரணமாக கேட்டாலும்.., அவனது பாராமுகம் நெஞ்சை சுட, அவன் அடுத்த வார்த்தைகள் என்னவாக இருக்கும்? நெஞ்சம் பதறியது. அதை வெளியே காட்டாமல் நின்றிருந்தாள்.

“நான் இன்னும் அதே ராஜாதான்.., அவ இன்னும் அதே குழந்தைதான். எந்த நம்பிக்கையில் கொடுக்கிறாய்..? பத்து நாளில் எதுவும் மாறி விடலை..” சூடாக உரைத்தான்.

“ராஜ்..” அவன் கோபம் நெஞ்சை சுட, கலங்கிபோய் அழைத்தாள்.

“ராஜ்.., ராஜ்.., இந்த அழைப்பை உன் வாயில் இருந்து கேட்க பிச்சைக்காரன் மாதிரி உன் வாயையே பார்த்திருந்த நாட்கள் எத்தனை தெரியுமா? ஆனா இப்போ.., அந்த அழைப்பை கேட்டா..” ஆத்திரமாக தரையில் கையைக் குத்தியவன்,

“அந்த ராஜ் செத்துபோய் பத்து நாள் ஆச்சு.., இங்கே இருப்பது ராஜா.., ராஜசேகர் அவ்வளவுதான்.., நமக்குள் எல்லாம் முடிஞ்சு போச்சு..” அவளுக்கு முதுகு காட்டி நின்றான்.

நெஞ்சை பதறவைக்கும் அவன் வார்த்தைகளைக் கேட்டவளுக்கு, கண்கள் இரண்டும் கலங்கத் துவங்க, அதை இமை கொட்டி அடக்கியவள், அவன் முன்னால் வந்து நின்றாள்.

அப்பொழுதும் அவன், அவளை முகம் காண மறுக்க, “இல்ல ராஜ்.., அவ்வளவு சீக்கிரம் நமக்குள் எதுவுமே முடிஞ்சுடாது. ஒரு நிமிஷம்.., இவளைப் பாருங்க..” குழந்தையை அவன் முகத்துக்கு நேராக காட்ட, அவளோ, தகப்பனைக் கண்ட சந்தோஷத்தில், கை காலை அசைத்து அவனிடம் செல்லத் துடித்தாள்.

அவ்வளவுதான்.., குழந்தையை வாரி அணைக்க கைகள் இரண்டும் பரபரக்க, அந்த நொடி.., ஹாசினி உரைத்த வார்த்தைகள் அவன் காதில் ஒலிக்க, இமைகளை அழுத்தமாக மூடிக் கொண்டான்.

அவன் முகத்தில் வந்துபோன உணர்வுகளைப் பார்த்தவளுக்கு தன் உயிர் இப்படியே போய்விடாதா.., நெஞ்சம் தகித்தது. ‘என் குழந்தைக்கு அப்பா வேண்டும்.., அப்பாவின்

அரவணைப்பு வேண்டும்.., பாசம் வேண்டும்..' தாயுள்ளம் துடிக்க,

"நான் அப்படி ஒரு அர்த்தத்தில்தான் பேசியிருப்பேன்னு இன்னும் நீங்க நம்பறீங்களா ராஜ்..?" எவ்வளவுதான் மறைக்கத் நினைத்தாலும், குரல் இறுதியில் நடுங்கியே விட்டது.

இமைகளை மூடியவன், அசைவே இல்லாமல் நிற்க, அதுவே அவளுக்கு 'ஆம்' என உரைத்தது.

"நம்ம குழந்தையை நீங்க தூக்க வேண்டும் என்பதற்காக.., பால் கட்டி மார்பு வலியெடுத்த பிறகும் கூட, அவள் பசி ஆற்றாமல், பிடிவாதமாக உங்களை இவளை தூக்க வைத்த நான்.., அப்படி ஒரு அர்த்தத்தில் பேசியிருப்பேன்னு இப்போ நீங்க நம்பறீங்களா..?" அவனது எந்த கோபத்தையும் தாங்கிக் கொள்ளும் அவளால்.., குழந்தையை அவன் விலக்குவதை தாங்கிக் கொள்ளவே முடியாமல் கேட்டாள்.

அவள் இதைக் கேட்க.., அவன் கருவிழி மூடிய இமைகளுக்குள் சுழல்வதைப் பார்த்தவள், அவன் உள்ளுக்குள் தவிப்பதை உணர்ந்து கொண்டாள். அவன் மனதுக்குள்ளோ பிரளயம்.., 'அப்படியென்றால் அவள் கோபத்துக்கு காரணம் என்ன..?' அவன் மனம் கேள்வி கேட்கத் தவிக்க, குழந்தையோ.., அவன் தூக்கவில்லை என்ற கோபத்தில்

சிணுங்கத் துவங்கி இருக்க, அதற்குமேல் அமைதியாக அவனால் இருக்க முடியவில்லை.

அவளது கேள்வி.., தனது குழப்பம்.., குழந்தையின் அழுகை.., அவனை பித்துக்கொள்ள வைக்க, “அம்மா..” தன் அறையில் இருந்து விருட்டென வெளியேறியவன், கூச்சல் போட்டான்.

“ராஜா..”, அவன் அழைப்புக்கு ஓடி வந்தார்.

அவன் முகத்தில் அப்பட்டமான கோபத்தைப் பார்த்தவர், “ஏன் ராஜா இவ்வளவு கோபம்..? நீ சத்தமா பேசக் கூடாதுன்னு டாக்டர் சொல்லி இருக்கார் நீ என்னன்னா..?” பதறித்தான் போனார்.

“அவளை ரூமை விட்டு வெளியே போகச் சொல்லுங்க. இந்த எமோஷனல் ப்ளாக்மெயில் எல்லாம் தாண்டும் நிலைக்கு நான் வந்துட்டேன்னு சொல்லுங்க..” விடு விடுவென வெளியேறியவன், தோட்டத்தில் சென்று அமர்ந்து கொண்டான்.

நிஹாசினியோ விக்கித்துபோய் நின்றிருந்தாள். குழந்தையிடம் கூட இளகாத அவன் நிலை.., மடிந்து அமர்ந்தவள், குழந்தையை மார்போடு கட்டிக் கொண்டாள். மூடிய இமைகளில் இருந்து நீர் நிற்காமல் வழிய, அவள் தோளை ஆதரவாக பற்றினார் சுஜா.

தன்னிடம் ஒரு நாள் கூட அதிர்ந்து பேசியிராத ராஜாவின் கோபம், பாராமுகம், ஒதுக்கம்.., நிஹாசினியை துடிக்க வைத்தது.

“அக்கா..” நீர் நிறைந்த விழிகளோடு அவள் ஏறிட, “முதல் படியிலேயே தோல்வியைக் கண்டு துவண்டால் எப்படி..?” சுஜாவுக்குமே ராஜாவின் கோபத்தைப் பார்த்து கலக்கம்தான். அதை சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டார்.

“குழந்தையைக் கூட..” அவளால் அதைத்தான் தாங்க முடியவில்லை. வார்த்தைகள் திணற ஒரு நொடி நிறுத்தியவள், “என் வயிற்றில் பிறந்ததைத் தவிர இவ வேற எந்த தப்பும் பண்ணலையே அக்கா..” கதறினாள்.

“அவனோட தடுமாற்றத்தை, பயத்தை மறைக்க கோபப்பட்டுட்டு போறான். அதற்கு நீ ஏன் கலங்குகிறாய்..? முதல்ல எழுந்து வா. இந்த அழுகையை நிறுத்தச் சொன்னால் கேட்க மாட்டாயா..?” மென்மையாக கடிந்து கொண்டார்.

“அவர் முன்னாடி அழலை..” புறங்கையால் கண்ணீரைத் துடைத்தவாறு அவள் உரைக்க, சுஜாவுக்கோ உருகித்தான் போயிற்று.

“சரி.., சரி.., வா.., குழந்தை வேற பசியிலும் பயத்திலும் அழறா அவளை சமாதானப்படுத்து..” கை பற்றி அழைத்து வந்தார்.

தாரிணி அவர்களை எதிர்கொண்டவர்.., ‘‘இவ இன்னும் இந்த அழுகையை விடலியா? ராஜாவோட சத்தம் மேலே வரைக்கும் கேட்டது.., அதான் ஓடி வந்தேன்..’’ கேட்டவர், அவர்களோடு சேர்ந்து தானும் சோபாவில் அமர்ந்தார்.

நிஹாசினிக்கோ.., இவர்கள் துணையும் இல்லையென்றால் தான் என்னவாகி இருப்போம் என்ற எண்ணம் எழ, அதையே அவர்களிடம் வார்த்தையில் கேட்டாள்.

‘‘ராஜா எனக்கு மகனாக இருந்தாலும்.., உன்னையும் நான் மகளாகத்தான் பார்க்கிறேன் நிஹா. பொண்ணோட வாழ்க்கையை எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்றுதான் ஒவ்வொரு அம்மாவும் நினைப்பாங்க. அப்படித்தான் நானும்..’’ சுஜாவின் தாய்மை பாசம் அவளை வீழ்த்தியது என்றே சொல்லலாம்.

நம்ப முடியாத ஆச்சரியத்தில் அவளை நோக்க.., ‘‘ஹாஸ்பிட்டல்ல ஒவ்வொரு நாளும் நீ அழுது கரையும்போது அக்கா எவ்வளவு தவிச்சு போவாங்க தெரியுமா.., ஆனா கூட, மனசை கல்லாக்கிகிட்டு பேசாமல் இருப்பாங்க. எல்லாத்துக்கும் காரணம்..,

‘‘நாங்க உன்னை அரவணைத்தால், ராஜா உன்னை கண்டுகொள்ளாமல் இருந்து விடுவான் என்பதால் தான். நான் பேச வந்தால் அதைக் கூட தடுத்து விடுவாங்க. ஏன்னு

எனக்குப் புரியவே இல்லை. ஆனா.., கடைசியா.., ராஜாவின் வாயாலேயே உன்னை எங்கே என்று கேட்க வைக்கும் வரைக்கும் அவங்க விடவே இல்லை தெரியுமா..?'' தாரிணி வேகமாக உரைத்தார்.

‘‘அக்கா.., நீங்க என்மேல் கோபமா இருக்கீங்கன்னு நான் ரொம்ப பயந்துட்டேன் தெரியுமா..'' அவர் தோளில் சாய்ந்து கொண்டாள்.

சற்று நேரம் அங்கே அமைதி நிலவ.., ‘‘அக்கா.., இந்த ராஜா இப்படி முரடனா மாறிட்டானே.., இவனை எப்படி வழிக்கு கொண்டு வரது..?'' கவலையாக கேட்டாள் தாரிணி.

‘‘கொஞ்ச நாள் அவன் போக்கில்தான் விடணும்.., அவன் என்ன செய்தாலும் நாம பொறுமையா இருந்துதான் ஆகணும். நிஹா.., நீ மட்டும் தைரியத்தை இழந்து விடாதே. எல்லா நேரத்திலும் நாங்க உனக்கு துணை இருக்கிறோம்..'' அவளுக்கு தைரியம் அளித்தார்கள்.

‘‘எனக்கு ஒரு பெரிய சந்தேகம் என்னன்னா.., உனக்கு விருப்பம் இல்லாமல் இந்த திருமணம் நடந்துவிட்டதோ என்பதுதான்..'' சுஜா மெதுவாக கேட்க,

‘‘அவர் என் உயிர்க்கா.., என் மனசுக்குள் நான் வளர்த்த என்னோட கோபம்தான்.., எல்லாத்துக்கும் காரணம். என்

கோபத்தை காட்டிய நான்.., என் காதலை உணர்த்த தவறிட்டேன்..'' குற்ற உணர்வில் குறுகினாள்.

''அதான் இப்போ தெளிஞ்சுட்டியே.., சந்தர்ப்பம் கிடைக்கும் போது அவனுக்கு புரிய வைத்துவிடு..'' சுஜா உரைக்க, அப்படி ஒரு நாள் வருமா? என்ற கேள்விதான் அனைவர் மனதிலும் நிறைந்தது.

தோட்டத்தில் தஞ்சம் புகுந்த ராஜாவுக்கோ.., எதுவும் செய்ய இயலாத கோபம், ஆத்திரம்.., நிஹாவின் பேச்சில் தடுமாறிய தன் மனம், குழந்தையின் அழுகையில் குழைந்த தன் நிலை.., 'எத்தனை பட்டாலும் உனக்கு புத்தியே வராதா..?' தன்னைத்தானே கடிந்து கொண்டான்.

'அன்று அவ்வளவு பேசியவள்.., இன்றைக்கு வந்து ஒரு காரணம் சொன்னால், உடனே நான் ஏற்றுக் கொள்வேனா..?' தனக்குள் பொருமியவனுக்கு, அவள் முகம் பார்த்து கோபம் கொள்ள முடியாததை எண்ணி ஆத்திரமாக வந்தது.

தான் செய்த தவறும் அதற்கு ஒரு காரணம் என எண்ணுகையில்.., 'விருப்பம் இல்லாத அவளை தீண்டி விட்டேனா..? அவளுக்கு விருப்பம் இல்லாமல் என்னோடு வாழ்கிறாளா..?' அந்த நினைவு கொடுக்கும் வலியை அவனால் சுமக்கத்தான் முடியவில்லை.

‘இதற்குமேல் அவளை பிடித்து வைக்க வேண்டாம்..’ ஒரு மனம் உரைக்க, மற்றொரு மனமோ.., ‘மாபெரும் தவறை செய்துவிட்டு, அவ்வளவு சுலபமாக கை கழுவி விடுவாயா..?’ சாடியது.

‘அவள் இல்லாத வாழ்க்கை உனக்கு சாத்தியமா..?’ உள்ளிருக்கும் ராஜா கிளர்ந்து வெளியே வர, துவண்டுதான் போனான்.

‘உன்னைத்தான் அவளுக்கு பிடிக்கவே இல்லையே.., தொலைந்து போ..’ ராஜசேகர் வெளியேற, ராஜா அடங்கித்தான் போகவேண்டி இருந்தது.

எந்த நேரத்திலும் ராஜா வெளியே வருவது தனக்கு ஆபத்து என உணர்ந்தவன், எடுத்த முடிவில் உறுதியானான்.

வீட்டுக்குள் வந்தவன்.., சுஜாவை ஏறிட, ‘‘அம்மா.., டிபன்.., ரூமுக்கே கொண்டு வாங்க..’’ உரைத்தவன் தன் அறைக்குள் சென்று புகுந்து கொண்டான்.

மினி இட்லி அவனுக்காகவே தயாராகி இருக்க.., ஒரு பவுலில் இட்லி, சாம்பாரை ஊற்றி எடுத்துக்கொண்டு வந்தவர், அவனுக்கு கொடுக்கப் போனவர், நிஹாசினியின் பார்வையில் வழிந்த எதிர்பார்ப்பில், நேராக அவள் கரத்தில் கொடுத்தார்.

‘‘போ நிஹா..’’ அவர் உரைக்க, கண்களில் கலவரத்தோடு எழுந்தவள், சிறு எதிர்பார்ப்போடு அறைக்குள் நுழைந்தாள்.

‘‘ராஜ்.., டிபன்..’’ அவள் குரல் கொடுக்க, அவள் அதை டீபாவின்மேல் வைக்கும் வரைக்கும் அமைதியாக இருந்தவன்,

‘‘இவ்வளவு கஷ்டப்பட்டு நீ எந்த வேலையும் எனக்குச் செய்ய வேண்டியதில்லை. அதைவிட, எனக்கு கையும் காலும் நல்லாத்தான் இருக்கு. யாரோட உதவியும் இல்லாமல் என்னால் சாப்பிட முடியும்..’’ குரல் இறுக அவன் உரைக்க,

அவனுக்கு கையில் அடிபட்டிருந்த பொழுது தான் கொண்ட கோபம் அவள் நினைவிற்கு வந்து திகைக்க வைத்தது.

அன்று தான் எந்த சூழ்நிலையில் கோபம் கொண்டோம்.., எண்ணியவள், அவனுக்கு விளக்கிவிடும் நோக்கத்தில்.., ‘‘அன்னைக்கு..’’ வேகமாகத் துவங்க,

‘‘எனக்கு தெரிய வேண்டாம்..’’ காரணம் தெரியாமல் தண்டிக்கப் பட்டதன் வலி அவனிடம் வெளிப்பட்டது.

‘‘என்னை மன்னிக்கவே மாட்டீங்களா ராஜ்..’’ உயிர் துடிக்க கண்களில் கெஞ்சலோடு அவனை ஏறிட்டாள்.

அவள் முகம் பார்க்க மறுப்பவனுக்கு அவள் உணர்வுகள் எங்கே புரியும்?

‘‘மன்னிக்கிற அளவுக்கு நான் உத்தமன் இல்லை நிஹா..’’ ‘நிஹா..’ அந்த அழைப்பு அவளுக்கு கொடுத்த வலி.., இதயத்தில் யாரோ கத்தியை வைத்து திருகும் அளவிற்கு இருக்க, அந்த வலியை இதழ் கடித்து அடக்கினாள்.

‘ஹாசினி..’ உயிர் உருகும் குரலில் அவன் அழைப்பது நினைவிற்கு வந்து வதைக்க, அவன் மனதை இவ்வளவு கடினமாக மாற்றி விட்டோமே.., தனக்குத் தானே கேட்டுக் கொண்டாள்.

‘‘நீ எப்பொழுதும்போல் இருந்தால் போதும்.., இந்த.., நடி..’’ , ‘நடிப்பு..’ என சொல்ல வந்து திருத்தியவன், ‘‘இந்த பணிவிடை எல்லாம் எனக்குத் தேவையே இல்லை..’’ ஒரு மாதிரி தன் கோபத்தை சம்மாளித்துக் கொண்டான்.

ஆனால்.., அவன் சொல்ல வந்து திருத்திய வார்த்தை.., ‘நடிப்பு..’ ‘நான் நடிக்கிறேனா? எதற்காக? இவரிடம் நடித்து எனக்கு என்ன கிடைக்கப் போகிறது..?’ உள்ளே எழும் வலியை முகத்துக்கு வராமல் தடுப்பது எவ்வளவு கொடுமை என்பதை அவள் அந்த நொடி உணர்ந்து கொண்டாள்.

ஒரு நாளில் எத்தனை அடிகளைத்தான் அவளும் தாங்குவாள்?

“என்னைப் பார்த்தால் நடிக்கிற மாதிரியா இருக்கு..? நீங்க என்னோட உயிர் ராஜ்.., உங்களுக்கு நான் செய்யாமல் யார் செய்வா..? அதோட..”.

“போதும்.., எனக்கு எதுவும் தெரிய வேண்டாம்னு சொல்லிட்டேன். அதேபோல்.., இந்த உயிர் போய்விடக் கூடாது என்பதுதானே உன் பயம். நிச்சயமா.., எனக்காக இல்லை என்றாலும்.., உன் பயத்துக்காகவாவது இந்த உயிர் போகாமல் பார்த்துக் கொள்கிறேன்.. போதுமா..” கோபம் உள்ளடக்கிய குரலில் வெடிக்க, அவன் கோபத்தைக் கண்டு உடைந்து போனாள்.

அவளுக்கு முதுகுகாட்டி திரும்பியவன், தன் எதிரில் இருந்த பிம்பத்தில் அவள் முகம் தெரிய, அவள் கண்களில் தெரிந்த வலியில் திகைத்துப் போனான்.

அதே நேரம்.., அவன் தோளைத் தொட அவள் கரங்கள் நீள.., அதை கண்ணாடி வழியாகவே கண்டவன்.., வேகமாய் அவளை விட்டு விலகி நின்றான்.

“ராஜ்..” தன் தொடுகையை அவன் தவிர்த்த விதம்.., விலகிய வேகம்.., தன் தொடுகை அவ்வளவு பெரிய தீண்டத்தகாத செயலா? எண்ணியவள்.., கைகளை கீழே இறக்கக் கூட முடியாமல் உறைந்து போனாள்.

அவள் நிலையைக் கண்ட ராஜாவுக்கோ.., தான் எடுத்த முடிவை உடனே செயல்படுத்தும் வேகம் எழுந்து ஆக்கிரமித்தது.

# அத்தியாயம் 10

நிஹாசினி அறைக்கதவை திறந்துகொண்டு வெளியே ஓட, அதை கண்ணாடி வழியே பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு அந்த நிலையிலும் அவனால் தாங்க முடியவில்லை.

அவள் கண்களில் விரவியிருந்த வலி.., அதை அவள் அடக்க முயன்ற விதம்.., அதைக் கண்டவனுக்கு, ‘அப்பொழுது எனக்கும் இப்படித்தானே இருந்தது..’ மகிழ முடியவில்லை.

‘எனக்கு வலித்ததுபோல் அவளுக்கும் வலிக்குமோ..?’ இப்படித்தான் எண்ண முடிந்தது.

தான் செய்வது சரியா? தவறா? எதுவும் புரியவில்லை. கடந்த ஒரு வருடத்தில், ஒரு நாள் கூட அவனுக்காக எதையும் செய்யத் தயங்கியவள், இப்பொழுது தனக்கு உடல்நிலை சரியில்லை என்று சொன்னவுடன் செய்வதை ஏற்க முடியவில்லை.

அது ஒரு புறம் என்றால்.., அவளது தொடுகையை தான் தவிர்த்தது.., தானா இப்படி செய்தோம்? அவனால் நம்பவே முடியவில்லை. கடந்த நாட்களில், தான் அவளை நெருங்குகையில் ஒரு நாள் கூட இவ்வளவு வெளிப்படையாக

அவள் விலகியது இல்லை..' என்பதை எண்ணிப் பார்த்தவனுக்கு, தலையை வலிப்பதுபோல் இருந்தது.

அந்த சிந்தையை அப்படியே நிறுத்தினான். சிந்தைகள் அனைத்தும் இதயத்தை தாக்குவதை உணர்ந்து, அவற்றை அழுத்தமாக மாற்றுவதை முயன்று தவிர்க்கத் துவங்கி இருந்தான். தன் கடமைகள் அனைத்தும் கண்முன் விரிய, நிஹாசினியைப் பற்றி நினைப்பதை அடியோடு தடை செய்தவன், உணவை உண்ணத் துவங்கினான்.

உணவை முடித்தவன், விநாயகத்தை அழைத்தான்.

"சொல்லுடா மச்சான்.., எப்படி இருக்க?" தூக்கக் கலக்கத்தில் அவன் குரல் ஒலிக்க, இத்தனைநாள் தனக்காக இரவு பகல் பாராமல் மருத்துவமனையில் பழியாகக் கிடந்த நண்பனை நினைத்து நெஞ்சம் நனைந்தது.

"சாரிடா.., தூக்கத்தில் டிஸ்டப் பண்ணிட்டேனா?" சற்று குற்ற உணர்வில் கேட்டான்.

"ஆமாடா.., இப்போதான் நயன்தாரா கூட நயாகராவில் டூயட்டுக்கு இறங்கினேன் கரெக்டா மூக்கில் வேர்த்து கால் பண்ணிட்ட.., நீவேற ஏண்டா.., எதுக்கு கூப்ட்ட முதல்ல அதைச் சொல்லு.." கடுப்பானான்.

“உன் முகரைக்கு நயன்தாரா ஒண்ணுதான் குறைச்சல்.., இப்படி தூங்கிட்டு இருந்தால் ஆபீஸ்சை யார்டா பாக்குறது..?” பழைய ராஜா திரும்பினான்.

“ம்.., இதுதான் என் ராஜா.., நானே ஒரு நிமிஷம் ஆள் மாறி பேசிட்டு இருக்கனோன்னு பயந்துட்டேன். சொல்லுடா மச்சான்.., காலையிலேயே கால் பண்ணியிருக்க..” விஷயம் இல்லாமல் பேச மாட்டான் என்பது அவனுக்குத் தெரியும்.

“ஆபீஸ் விஷயம் பேசணும் அதான்.., காலையில் ஆபீஸ் போக முன்னாடி, இப்போ செய்யிற ஆட் பத்தின டீட்டெயில் எல்லாம் எடுத்துட்டு என்னை வந்து பார்..”.

“என்னடா.., நேத்துதான் ஹாஸ்பிடல்ல இருந்து வந்திருக்க.., அதுக்குள்ளே.., இன்னும் ஒரு ரெண்டு நாள் போகட்டும்..” தயங்கினான்.

“ம்ச்.., வெட்டியா உக்காந்து கண்டதையும் நினைக்க வேண்டி இருக்கு. நான் சொன்னதை மட்டும் செய்..” அழைப்பை துண்டித்தவன், அவன் வரக் காத்திருந்தான்.

ராஜாவின் அறையில் இருந்து எப்படி வெளியே வந்தாள்.., எப்படி தன் அறைக்கு வந்து சேர்ந்தாள்.., எதுவும் அவளுக்கு நினைவில்லை. ஆனால்.., சத்தம் போட்டு கதறியவள்.., அதை அடக்கும் வகை தெரியாமல் தொடர்ந்தாள்.

‘நடிக்கிறேனா? நான் நடிக்கிறேனா?’ ஹோ.., வென நெஞ்சை அடைக்கும் உணர்வு. இதுதான்.., இந்த வலிதான் தனக்கு நிரந்தரம்.., தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். ஆனமட்டும் அழுதவள், கண்களை அழுந்த துடைத்துக் கொண்டாள்.

காலையில் தங்களது வழக்கமான நடையை முடித்துவிட்டு வந்த குணாவும், தனாவும் ராஜாவைப் பார்த்து பேசச் சென்றார்கள்.

‘‘ராஜா.., நைட் நல்லா தூங்கினாயா..? டிபன் ஆச்சா? டேப்லட் எடுத்துகிட்டியா..?’’ தனா அவனை ஆதூரமாகப் பார்த்தார்.

‘‘எல்லாம் நானா இழுத்து வச்சது.., பெருசா எதுவும் இல்லை. என்னைப் பற்றி கவலைப் படுவதை விடுங்க. கடைக்கு ஆர்டர் எல்லாம் சரியா வருதா? நாளைக்கே நான் கடைக்கு வந்து எல்லாம் பாக்கறேன்..’’ இயல்பாய் உரையாடினான்.

‘‘என்ன.., நாளைக்கே வரியா? அதெல்லாம் எதுவும் வேண்டாம். ஒரு மாசம் உனக்கு புல் ரெஸ்ட் தான். எல்லாத்தையும் நானும் குணாவும் பாத்துக்கறோம். குணா இப்போ பத்து கடையை அவனே பாத்துக்கறான். நான் ஜஸ்ட்

மேற்பார்வைதான் பாக்கறேன். நீ உடம்பை பாத்துக்கோ..'' வேகமாக உரைத்தார்.

''அப்பா.., உங்களுக்கு ரெஸ்ட் கொடுக்க வேண்டிய நேரத்தில்.., எதையுமே யோசிக்காமல்.., சரி விடுங்க.., நான் ஓடத் தயார் ஆகிட்டேன். இனிமேல் உங்களுக்கு புல் ரெஸ்ட் தான்..'' அவரைத் தடுத்தான்.

''எனக்கு ரெஸ்ட்டா..? எதுக்கு..? எனக்கு அவ்வளவு வயசாகிடுச்சா என்ன? இன்னும் பத்து கடை துவங்கி நடத்தும் தெம்பு எனக்கு இருக்கு..'' மீசையை நீவினார்.

''கண்டிப்பா உங்களால் முடியும்ப்பா.., ஆனா.., அதுக்கு முன்னாடி.., தங்கவேலு டாக்டர் கிட்டே நாம பேசிடலாம்..'' அவன் திடுமென உரைக்க, சற்று திடுக்கிட்டுத்தான் போனார்.

''ஏன்..? எதுக்கு அவரைப் பாக்கணும்..?'' அவர் தடுமாற,

அவர் கரத்தைப் பற்றியவன், ''இன்னும் எத்தனைநாள் மறைக்கலாம்னு இருக்கீங்க? எல்லாம் எனக்குத் தெரியும்ப்பா.., என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லணும்னு உங்களுக்குத் தோணவே இல்லை இல்ல. ஒரு வேளை, இவன்கிட்டே சொல்லி என்ன ஆகப் போகுதுன்னு நினைச்சீங்களா?'' அவன் குரல் இடறியது.

“டேய்.., அப்படியெல்லாம் எதுவும் இல்லை..” அதற்குமேல் அவரால் எதுவும் சொல்ல முடியவில்லை.

“மறைக்கும் விஷயமா இது..? அம்மாகூட..” வார்த்தையை நிறுத்தியவன், “அம்மா என்னை பொறுப்பை கொஞ்சம் கவனிச்சுக்க சொன்னபொழுதே நான் யோசித்து இருக்கணும்.., அதைச் செய்யாதது என் தவறுதான்..” சிறு குற்ற உணர்ச்சியில் சொன்னான்.

“உன்மேல் விருப்பம் இல்லாத சுமையை சுமத்த வேண்டாம்னு நினைத்தோம், அவ்வளவுதான்.., உன்கிட்டே சொல்லாமல், வேற யார்கிட்டே சொல்லி இருப்பேனாம்?” அவனை அணைத்துக் கொண்டார்.

“நீங்க ரெண்டுபேரும் தனியாவே இதைத் தாங்கி இருக்கீங்க இல்ல. பிறகு பிள்ளைன்னு நான் எதுக்கு இருக்கேனாம்..?” உரிமையாய் சண்டை போட்டான்.

“பிள்ளையோட நிம்மதிதானே பெத்தவங்களுக்கு முக்கியம்..” அவனை சமாதானப்படுத்தினார்.

“இன்னும் ஒரே மாசம்.., மும்பை போறோம்.., அதுக்கு முன்னாடி எல்லாத்தையும் செட் பண்ண வேண்டியது என்னோட கடமை..” தானும் அவரை அணைத்துக் கொண்டான்.

அவர்கள் தங்கள் உலகில் இருக்க, ‘‘எல்லாத்திலும் நான் பார்வையாளன் மட்டும்தான் இல்ல. உண்மையில் நான்தான் இங்கே உதவாக்கரை.., இப்படி ஒதுங்கி இருந்தே என் காலம் முடிஞ்சுடுமா?’’ குணாவின் குரல் இடையிட, ராஜாவும் தனாவும் திகைத்துப் போனார்கள்.

‘‘குணா.., என்னடா இப்படி சொல்லிட்ட.., தம்பி உடையான் படைக்கு அஞ்சான்னு சொல்வாங்க. என் எப்பவும் என் தம்பிடா.., உன்னை எப்படி நான் விலக்கி வைக்க முடியும்..?’’ தனா அவனை அருகே அழைத்தான்.

ராஜாவுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை என்றாலும்.., தமையனை சொந்தமாய் பார்வையில் தழுவினான்.

அதுவே குணாவுக்கு போதுமானதாக இருக்க, ‘‘ராஜா, என்ன செய்யவேண்டும் என்று சொன்னால் அதை நான் சரியாகச் செய்வேன். எனக்கு சொந்த புத்தி கொஞ்சம் குறைவுதானே தவிர, சொல்புத்தி உண்டு..’’ தன் உதவி தேவையான தருணத்தை அவன் நழுவ விடத் தயாராக இல்லை.

‘‘கண்டிப்பா அண்ணா.., இனிமேல் தனா அண்ணாவுக்கு எல்லாவற்றிலும் இருந்து விடுதலை. நாம ரெண்டுபேரும் பார்த்துக் கொள்ளலாம்..’’ மேலும் சற்று நேரம் உரையாட, அங்கே வந்தான் விநாயகம்.

“என்னடா.., காலையிலேயே வந்துட்ட.., அதுவும் லேப்டாப்பும் கையுமா?” தனா அவனிடம் வினவ,

“அப்பா.., ஆபீஸ் விஷயமா நான்தான் வரச் சொன்னேன். கொஞ்ச நாளைக்கு ஆபீசை ஸ்ரீதர் பொறுப்பில் விடலாம்னு பாக்கறேன். அதான்..” ராஜா இடையிட்டான்.

“ஓ..” அமைதியாய் கேட்டுக் கொண்டார்.

“சரி.., நீங்க பாருங்க.., குணா வா..” அவர்கள் வெளியேற, விநாயகத்தை அழைத்துக்கொண்டு அலுவலக அறைக்குச் சென்றான்.

அதைப் பார்த்த சுஜா, “ராஜா, உடனே உடம்பை அலைக்கணுமா? ஒரு வாரம் கழித்து பார்த்தால் போதாதா?”.

“இல்லம்மா.., சின்ன வேலைதான்.., இப்போ முடிஞ்சுடும்..” அவருக்கு பதில் கொடுத்தவன், தன் வேலையைப் பார்க்கப் போனான்.

ஒரு பெருமூச்சோடு விலகிச் சென்றார் சுஜா.

அடுத்த இரண்டுமணி நேரம் தன் வேலையில் மூழ்க, அவர்களுக்கு ஜூஸ் எடுத்து வந்தாள் நிஹா.

“வாங்கண்ணா.., ஆபீஸ் விஷயமா வந்தீங்களா?” கேட்டவள், ஜூஸ் கப்பை அவனிடம் கொடுத்தாள்.

“ஆமா நிஹா..” உரைத்தவன், திகைப்பாய் அவளை ஏறிட்டான். அவளது அண்ணா என்ற அழைப்பு.., அவனை என்னவோ செய்தது.

“எப்படி இருக்கீங்க..?” தன்னை மீறி கேட்டவன், நண்பனை ஓர விழியில் நோக்கினான். அவனோ அவர்களை கண்டுகொண்டதாகவே இல்லை.

“உங்களை உரிமையா அண்ணான்னு கூப்பிடுறேன்.., நீங்க மரியாதை கொடுத்து தள்ளி வைக்கறீங்களே..” அவள் குறைபட, குடித்த ஜூஸ் சட்டென அவனுக்கு புரை ஏறியது.

“அண்ணா பாத்து..” அவள் கரிசனையாக உரைக்க, ‘என்ன இது புதிதாக..’ என்பதுபோல் விழித்தான். அவள் கண்களில் வழிந்த நன்றியில், அவனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

விநாயக் நண்பனைப் பார்க்க.., அப்பொழுதும் அவன் நிமிர்ந்து பார்க்கவே இல்லை. நிஹாவின் பார்வை ராஜாவின் குனிந்திருந்த தலையிலேயே நிலைத்திருக்க, அமைதியாக தன் ஜூசைப் பருகினான்.

ராஜாவுக்கான ஜூசை அவன் பக்கம் நீட்ட, அவளை நிமிர்ந்து பார்க்காமலே, அருகில் கையைக் காட்டி அங்கே வைக்கச் சொன்னான். அமைதியாக அதைச் செய்தவள்,

‘‘ஆபீஸ்ல எல்லோரும் எப்படி இருக்காங்க? வேலை எல்லாம் நல்லபடியா போகுதா?’’ ஏனோ அங்கிருந்து செல்ல அவளுக்கு மனமில்லை.

‘‘எல்லாரும் நல்லா இருக்காங்க நிஹா. ரேவதிதான் உங்களை வந்து பாக்கணும்னு சொல்லிட்டு இருந்தா. ஆனா.., ஆபீஸ்ல கொஞ்சம் வேலை அதிகம்.., ராஜா இல்லாத நேரத்தில் ரொம்ப கவனமா செய்யணும்னு எல்லோரும் கவனமா இருக்காங்க.., அதான் வர முடியலை..’’ அப்பொழுதும் ராஜா நிமிரவில்லை.

அதே நேரம்.., ராஜா தெரியாமல் செய்தானா.., இல்லையென்றால் தெரிந்தே நேர்ந்ததா எனத் தெரியவில்லை.., அவன் கை பட்டு, அவன் அருகே வைத்திருந்த ஜூஸ் டம்பளர் கீழே விழுந்து சிதற, விக்கித்துப் போனாள்.

நிச்சயம் அவன் தவறுதலாக செய்யவில்லை என்பது அங்கிருந்த மற்றவனுக்குப் புரிய, விநாயகத்தின் முன்னால் நேர்ந்த அவமானம் தாளாமல் சற்று குறுகித்தான் போனாள்.

‘என்னை தவிர்க்க செய்தாரா? இல்லையென்றால் நான் கொடுத்தேன் என்பதாலா?’ மனம் வெகுவாக காயப்பட்டது.

சட்டென துளிர்த்த விழி நீரோடு அவள் வெளியேற, “உன்கிட்டே இதை எதிர்பார்க்கலை ராஜா..” அதிர்வாக உரைத்தான் விநாயக்.

“அவ அண்ணான்னு சொன்ன உடனே பாசம் பொங்குதோ..?” ஆத்திரமாக கேட்க, சட்டென வாய் மூடிக் கொண்டான்.

“நிஹா முகம் சுண்டிப் போச்சுடா..” அமைதியாக இருக்க முடியாமல், தன்னை மீறி உரைத்தான்.

“அதுக்கு நான் எதுவும் செய்ய முடியாது..” இரக்கமே இல்லாமல் உரைத்தான்.

“ராஜா, நீயா இப்படி?” விநாயகத்தால் நம்ப முடியவில்லை. “இப்படி அவங்களை படுத்துவதற்குதான் கூட்டி வரச் சொன்னியா?”.

ஒரு நொடி தன் கை வேலையை நிறுத்தியவன், அவன் சொன்னது காதிலேயே விழாததுபோல் பாவித்து கணினியிலேயே பார்வையை பதித்திருந்தான்.

அவன் அமைதி விநாயகத்தை பயமுறுத்த, “உன்கிட்டே ஒண்ணு சொல்லணும் ராஜா..” அன்றைய அவளது பேச்சு, தன் மெயில் டிரைவில் இருப்பதை அவனுக்கு அனுப்ப வேண்டி மெதுவாய் துவங்கினான்.

“தாராளமா சொல்.., ஆனால்.., அது ஆபீஸ் விஷயமா இருந்தால் மட்டும்..” அழுத்தமாக உரைக்க, அதை மீறும் துணிவு அவனுக்கு இருக்கவில்லை.

‘என்றைக்கு இதற்கு ஒரு விடிவு பிறக்கும்?’ அவனால் எண்ணத்தான் முடிந்தது. அவர்களுக்குள் இருக்கும் பிரச்சனை சிறிதென அவனுக்குத் தோன்றவில்லைதான்.., ஆனாலும்.., நிஹாசினியின் தவிப்பை பார்க்கையில், அவர்களுக்குள் அனைத்தும் சரியாகிவிட்டால் பரவாயில்லை என்ற நினைப்பு எழுவதை தவிர்க்க முடியவில்லை.

‘அவன் கோபத்தையும் மீறி நிஹாசினி பேசியதைப் பற்றி சொல்லிவிடுவோமா? அப்படிச் சொன்னால் என்ன செய்வான்? அதன் விளைவுகள் என்னவாக இருக்கும்? அவன் தன் யோசனையிலேயே மூழ்கி இருக்க,

அடுத்த அரைமணி நேரத்தில் அனைத்து பொறுப்புகள், வேலைகள் என அனைத்தையும் பிரித்துக் கொடுத்தவன், “ஒரு ஆறு மாதம்.., என் வேலையை ஸ்ரீதரைப் பார்க்கச் சொல்.., ஏதாவது டவுட் இருந்தால் என்னை காண்டெக்ட் பண்ணச் சொல்லு புரியுதா..” மடிக்கணினியை அவன் கையில் கொடுத்தான்.

அமைதியாக அதைப் பெற்றுக் கொண்டவன், ஜூஸ் டம்ப்ளரை டீபாவின்மேல் வைத்துவிட்டு கிளம்பினான்.

அறைக்கு வெளியே செல்கையில், நிஹாசினியை எதிர் கொள்ளும் தைரியம் அவனுக்கு இருக்கவில்லை. அண்ணா என அவள் அழைக்கும் முன்பே, அவளை தன் தங்கையாக கருதியவன் அவன். அதனால்தான், மருத்துவமனையில் அவள் பட்ட துன்பங்களைக் காணச் சகிக்காமல், பிடிவாதமாக ராஜாவைக் காண வைத்தான்.

அப்படி இருக்கையில்.., தன் முன்னால் அவளுக்கு நேர்ந்த அவமானம்.., அவள் காயப்பட்ட அளவுக்கு அவனுக்கும் வலிக்கவே செய்தது. ஆனாலும், நண்பனையும் காயப்படுத்த முடியாமல்தான் அமைதியாக திரும்பிச் செல்கிறான்.

அவன் வாசலை நெருங்க, ‘‘என்னப்பா.., வந்த உடனே கிளம்பிட்ட.., டிபன் சாப்ட்டு போ..’’ சுஜா அழைக்க, மறுப்பாக தலை அசைத்தான்.

‘‘இல்ல ஆன்ட்டி.., இன்னொரு நாள் சாப்பிடறேன். நம்ம ராஜா..’’ எதையோ சொல்லத் துவங்கியவன் அதை பாதியிலேயே நிறுத்தினான்.

‘‘ஏதோ சொல்ல வந்துட்டு நிறுத்திட்ட.., என்ன?’’.

“ராஜாகிட்டே நீங்களாவது சொல்லக் கூடாதா ஆண்ட்டி..” அவர் சொன்னால் அவன் எதையும் கேட்பான் என்பதால் மனத்தாங்கலாகவே உரைத்தான்.

“என்ன ஆச்சு..? உன் முன்னாடியே நிஹாவை ஏதாவது சொன்னானா என்ன?” சிறு அதிர்வாய் கேட்டார்.

“சொன்னாத்தானா..?” நண்பன் செய்ததை உரைக்க,

ஒரு நொடி அமைதியாக இருந்தவர்.., “வாழ்க்கையில் சில விஷயங்களை நாம சொல்லி புரிய வைக்கவே முடியாது விநாயக். சூட்டோட முடிக்கிறதுக்கு இது ஒண்ணும் அவ்வளவு ஈஸி இல்லை. அதேபோல்.., சில நேரம் அவங்களோட உணர்வுகளுக்கும் நாம மதிப்பு கொடுக்கணுமே..” அமைதியாகவே உரைத்தார்.

“புரியுது ஆண்ட்டி.., அப்போ நான் கிளம்பறேன்..” அவன் செல்ல, சுஜாவுக்கோ இது எப்பொழுது சரியாகும் என கவலையாகிப் போனது.

ராஜாவுக்கோ.., அறைக்குள் இருக்கவே மூச்சு முட்டும் உணர்வு. கீழே சிதறியிருந்த கண்ணாடிச் சில்லைக் காண்கையில், தன் மனமும் இதேபோல் சிதறிப் போயிருக்கும் உணர்வு.

ஆழமாக மூச்செடுத்து தன்னை நிலைக்கு கொண்டுவரப் போராடியவன், தன் இடப்பக்கம் இருந்த மொபைல் போனை

வெறித்தான். நிஹா அறைக்குள் நுழைந்து, வெளியேறும் வரைக்கும், அவள் முகத்தை மொபைல் திரை வழியாக, அவள் பிம்பம் தெரிவதை பார்த்துக் கொண்டுதான் இருந்தான்.

தன்னுடனேயே இருக்க விரும்பும் அவள் செய்கை.., தன்னிடம் பேசத் துடிக்கும் அவள் உடல்மொழி, அதைச் செய்ய முடியாத தவிப்பு.., சிதறிய தன் மனதை ஒன்றுதிரட்ட அவன் போராடுகையில், இடையிடும் அவள் பிரசன்னம், அவனை சிதறிப் போகச் செய்வதை அவனும் என்னதான் செய்ய?

அவளை வெளியே போகச்சொல்ல அவனால் முடியாமல் போகவேதான்.., அவளை காயப்படுத்தி அனுப்பி வைத்திருக்கிறான். ஆனால்.., அந்த செய்கை தன்னையே தாக்குவதை என்ன செய்ய?

‘இப்படியே அவளை காயப்படுத்திக் கொண்டே இருந்து விடுவேனா?’ நினைக்கவே அவனுக்கு அச்சமாக இருந்தது.

‘மாபெரும் தவறை அவளுக்குச் செய்துவிட்டு, இது வேறா?’ அவனுக்கு தலையை வலிப்பதுபோல் இருந்தது.

‘சில நாட்கள் அவளைக் காணாமல் இருந்தால் சரியாகிவிடுமா?’ தனக்குள் கேட்டுக்கொள்ள, விடைதான் தெரியவில்லை.

அவசரத்தில் எடுக்கும் எந்த ஒரு முடிவும் சரியாக இருக்காது என அவனுக்குத் தெரியும். ஆனால்.., தன்

செய்கைகளைப் பார்க்கையில், அவளை காயப்படுத்தி குத்திக் கிழித்துவிடுவோமோ என நினைக்கையில், சில அவசர முடிவுகளை எடுத்தே ஆகவேண்டிய கட்டாயத்துக்கு அவன் தள்ளப்பட்டான்.

அதை செயல்படுத்தவும் முயன்றான். தொடர்ந்த நாட்கள்.., நிஹாவை அவன் தவிர்க்க முயல, விடாமல் துரத்தும் அவளிடம் இருந்து தப்பிக்க முடியாமல், தனக்குத் தெரிந்தே அவளை காயப்படுத்தினான்.

நிஹாவுக்கோ.., அவனை விட்டு விலகினால்.., எங்கே ஒரேயடியாக தன்னை தவிர்த்து விடுவானோ என்ற பயம்.., அவன் காயப்படுத்தினாலும் தொடரத் தூண்டியது.

அவனது பாராமுகம், கோபம்.., நிஹாவை தூங்க விடாமல் செய்ய, பல இரவுகள் தூங்கா இரவானது. உடல் மெலிந்து, கண்களில் கருவளையம் பூக்க, அதைக் கண்டும் காணாமல் நடிக்கக் கூட அவனால் முடியவில்லை. அதே நேரம்.., தன் பிடிவாதத்தை தளர்த்தி, அவளிடம் பேசக்கூட முடியவில்லை என்பதுதான் கொடுமையே.

அவள் நிலை பார்த்து வீட்டில் அனைவருமே தவிக்க, அதை யாரும் ராஜாவிடம் வெளியிடவில்லை. அவனும் ஒரு பக்கம் தவிப்பதை அவர்களும் உணர்ந்திருக்கையில், தனியாக என்ன சொல்ல என அனைவரும் தவிர்த்தார்கள்.

ஆனால்.., அவர்கள் பேச வேண்டிய சூழலை ராஜாவே அவர்களுக்கு ஏற்படுத்தினான்.

# அத்தியாயம் 11

“அம்மா.., நான் இன்னைக்கு ஆபீஸ் போயிட்டு பிறகுதான் நம்ம கடைக்கு போவேன். சோ.., குணா அண்ணாவை கடைக்கு கொஞ்சம் சீக்கிரமா போய் பாக்கச் சொல்லுங்க. அப்பாவை கொஞ்ச நாள் கடைக்கு வர வேண்டாம்னு சொல்லிடுங்க..” கையில் இருந்த அலைபேசியில் எதையோ டைப் பண்ணியவாறு உரைத்தவன், அவர் முகம் பாராமல் உரைத்துச் சென்றான்.

தன் பதிலைக் கூட எதிர்பாராமல், தன்போக்கில் சொல்லிச் சென்ற ராஜாவின் முதுகை வெறித்த சுஜாவுக்கு பெருமூச்சு எழுந்தது.

இப்பொழுதெல்லாம் ராஜா இயல்பாக இருப்பது போன்றே தெரியவில்லை. எப்பொழுதும் ஒரு இறுக்கம்.., ஒரு தீவிர சிந்தை. உடம்பை அலைக்கணுமா எனக் கேட்டால்.., ‘வீட்டிலேயே இருந்தால் பயித்தியமே புடிச்சுடும்மா..’ தலையை கைகளில் தாங்கி உரைக்கையில், அவரால் எதுவும் செய்ய முடியவில்லை.

அதைவிட.., அவனது 'அம்மா..' என்ற அழைப்பே அவன் உள்மனதை உணர்த்த, ஆறுதல் சொல்ல முடியாமல் பரிதவித்தார்.

அவனது விடாத கோபத்திலும், நிஹாசினியின் மனதையும், உடல்நிலையையும் கருத்தில் கொண்டு, மாடியில் அவன் போர்ஷனுக்கு போனது மட்டுமே சிறு ஆறுதல். அதிலும்.., அவன் அறையை விடுத்து, அருகில் இருக்கும் அறையில் தாங்கிக்கொள்ள, வருத்தப்படுவதைத் தவிர அவரால் எதையும் செய்ய முடியவில்லை.

தனாவை பிடிவாதமாக கடைக்கு வருவதை தடுத்தவன், மருத்துவரிடம் தானே அழைத்துச் சென்று அவர் உடல்நிலையை பேண முயன்றான். ஆனால்.., தனாவின் வயதின் காரணமாக இதயத்தின் அடைப்புகள் மருந்தில் சரியாகும் நிலையைக் கடந்திருக்க, இன்னும் இரண்டு மாதத்தில் டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கூட்டிச் செல்வதாக முடிவெடுத்தான்.

ஆனால்.., அதற்கு முன்பாக முடிக்க வேண்டிய வேலைகள் அதிகமிருக்க, பம்பரமாய் சுழன்று கொண்டிருந்தான். விடாது தன்னை பிசியாக வைத்திருந்தாலும், நிஹாசினியின் நினைவுகள் விடாமல் துளைப்பதை அவனால் தவிர்க்க முடியவில்லை.

காலையில் எழுந்தது முதல், இரவு உறங்கப்போகும் வரைக்கும், தான் வீட்டில் இருக்கும் நேரங்களில் தன்னைச் சுற்றிவரும் அவள் செய்கை.., ஏற்றுக்கொள்ள மனம் மறுத்தது.

காரில் பயணித்தவனின் சிந்தை அவளையே சுற்றிவர, தன்னை ஏறிட்டு பார்க்கக் கூட மறுக்கும் அவன் செய்கையை எண்ணி துடித்துக் கொண்டிருந்தாள் நிஹாசினி.

ஒரே வீட்டில் தனித்தனி தீவுகளாய் விலகி இருப்பதை நினைக்கையிலேயே உள்ளம் நைந்தது. அவன் கோபத்தை தாங்கும் அவளால், அவன் உதாசீனத்தை தான் தாங்க முடியவில்லை.

நாலு வார்த்தைகள் கோபமாகப் பேசினாலாவது அதை வைத்து அவன் அருகில் இருக்க முடியும். ஆனால்.., அறைக்கதவை அழுத்தமாக மூடிவிட்டு அமர்ந்திருக்கையில்.., கதவை இடித்து திறக்கும் அளவுக்கு அவள் மனதிலோ, உடலிலோ தெம்பிருக்கவில்லை.

ஒரு அளவுக்குமேல் அவளாலும் இறங்கிச் செல்ல முடியவில்லை. தான் செய்துவைத்த செயலின் தாக்கம்.., அவளை அரித்து தின்கையில், எப்படி அவளால் அவனை நெருங்க முடியும்?

ராஜாவுக்கோ.., அவளை வார்த்தைகளில் வதைப்பதை விட, ஒதுங்கிப் போவது சிறப்பாகப் பட்டது. ஆனாலும்.., அறைக்கு

வெளியே அவள் தன்னை எதிர்பார்த்திருப்பாள் என்ற எண்ணமே அவனை நிம்மதி இழக்கச் செய்தது.

அவளது அன்பை ஏற்க முடியாமல் தடுமாறியது அவன் மனம். ஒரு முறை பட்ட சூடு அவனை மிகவும் நிதானிக்கச் செய்தது. இருக்கும் சூட்டோடு அவளிடம் பேசி, சமாதானம் ஆனாலும், என்றாவது ஒரு நாள், அவள் தன்மேல் கொண்ட இரக்கம் காணாமல் போய்விட்டால்...

ஆம்.., நிஹா காட்டும் அன்பை இரக்கம் என்றே அவனுக்கு மொழி பெயர்க்க முடிந்தது. அவளது இரக்கம் எனக்கு வேண்டாம்.., அவன் காதல் கொண்ட மனம் கதறி தவித்தது.

‘கோபம் வார்த்தைகளில் இருக்கலாம்.., செயலில் இருக்கக் கூடாது. அன்பு செயலில் இருக்க வேண்டும், வார்த்தைகளில் மட்டும் இருக்கக் கூடாது. இங்கே.., நிஹா அன்பை வார்த்தையில் மொழிபெயர்க்க முயல, அந்த வார்த்தைகளை கேட்கும் பொறுமையோ, மனநிலையோ அவனிடம் இப்பொழுது இருக்கவில்லை.

ஒவ்வொருநாளும் அதன் கனத்தை அவனால் சம்மாளிக்கவே முடியவில்லை. அன்றும் அப்படித்தான்.., இரவு உணவை முடித்துவிட்டு, அறைக்குள் சற்று நேரம் வேலை செய்தவன்.., உறக்கம் இப்போதைக்கு வரப்போவதில்லை

என்பது புரிய, மொட்டை மாடியில் சற்று நேரம் காலார நடக்கலாம் என அறையை விட்டு வெளியேறினான்.

கூடத்தைக் கடந்து, மாடிக்குச் செல்லும் படியில் காலை வைக்க, “அ.., ம்.., ஹ்..” குழந்தையில் மழலைமொழி அவனைத் தீண்ட, படியில் கால்வைத்தவன், வேகமாக குரல் வந்த திசையில் பார்த்தான்.

பால்க்கனியில்.., சுற்றுக்கம்பியை பிடித்தவாறு நிஹாசினி நின்று கொண்டிருக்க, அவள் தன்னை தூக்க வேண்டி, கீழே படுத்திருந்த குழந்தை, கை காலை அசைத்து குரல் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

குழந்தையை கண்களால் பார்த்து கூட அதிக நாட்கள் ஆகி இருக்க, அவளை அள்ளிக்கொள்ள உள்ளம் பரபரத்தது. அவன் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே, குப்பற விழுந்தவள், நிஹா நின்ற இடத்தை நோக்கி வயிற்றால் இழைந்து முன்னேறினாள்.

நிஹாசினியை அவன் கண்கள் நோக்க.., அவளோ.., குழந்தையின் குரலையோ, அவளது வருகையையோ உணராமல், அசையாமல் நின்றிருந்தாள். வெண்மை நிற இரவு உடையில்.., ஊதா வர்ண சிறிய பூக்கள் விரவியிருந்த உடையில், இரவு நிலவாய் ஜொலித்தான்.

விரிந்திருந்த அவள் கூந்தல் காற்றில் அசைந்தாட.., அவள் நின்ற கோலமே, அவளது கவனம் இங்கே இல்லை என்பதை

அவனுக்கு உணர்த்தியது. அவளையும் வதைத்து, தானும் நிம்மதியாக இல்லாமல்.., ‘இது என்ன வாழ்க்கை?’ அவனுக்கு வெறுத்துப் போனது.

கடந்த ஒரு வருடமாக தன்னிடம் கோபத்தை மட்டுமே காட்டிய அவளது அக்கறையும், அன்பையும் இப்பொழுது ஏற்க முடியாமல் மனம் தடுமாறியது. அவளை விட்டு இருக்கவும் முடியாமல், அவள் அன்பை ஏற்கவும் முடியாமல், நாட்கள் நரகமாய் கழிந்தது.

‘‘அ.., அ.., உ..’’ தாயை நெருங்கும் ஆவலில் உற்சாக துள்ளலும், குரலும் அதிகரிக்க, அவன் யோசனையை கைவிட, நிஹாசினியோ அவள் குரலில் கலைந்ததாகவே தெரியவில்லை.

‘அப்படியென்ன யோசனை.., குழந்தை குரல் கொடுப்பது கூட தெரியாமல்..’ மெல்லியதாய் கோபம் கொண்டான்.

சில நொடிகளில் தாயை நெருங்கிவிட்டவள், தாய் பார்க்காமல் போகவே, ‘‘க்கு.., க்கு..’’ தாயின் கவனத்தை தன்பக்கம் திருப்ப விக்கித்து அழத் துவங்கினாள்.

அவள் அழுகுரல் அதிகரிக்கத் துவங்கவே.., ராஜாவால் அதற்குமேல் அமைதியாக இருக்க முடியவில்லை. கைகள் இரண்டும் அவளை அள்ளிகொள்ளச் சொல்லி பரபரக்க, எது தன்னை தடுக்கிறது என்று தெரியாமலேயே திணறிப் போனான்.

அவர்களை நெருங்கியவன், ‘‘நினைப்பை எங்கே வச்சுட்டு இருக்க? குழந்தை அழறா பார்..’’ அவள் பின்னால் இருந்து குரல் கொடுத்தான்.

சட்டென அவன் குரலில் கலைந்தவள், தன் காலின் அருகில் தவழ்ந்து வந்திருந்ததைப் பார்த்தாள். கூடவே.., தன் அழுகையை நிறுத்தியவள், தந்தையின் குரலில், அவன் பக்கம் பார்த்தவள், கையையும் காலையும் நீச்சலிடிக்கும் பாவனையில் அசைத்தவள், தகப்பனை தூக்கச் சொன்னாள்.

அதைப் பார்த்த நிஹா.., ‘‘குழந்தையை தூக்கியிருக்கலாமே ராஜ்..’’ கேட்டவள், அவன் அதை செய்யப்போவதில்லை என்பதை உணர்ந்து, குழந்தையை கைகளில் அள்ளிக் கொண்டாள். அவள் கைகளில் இருந்தவளோ.., தகப்பனிடம் போக வேண்டி தவித்து, தாயின் கரத்தில் துள்ளினாள்.

அவன் எங்கே அதைப் பார்த்தான்? பார்வையை அவர்கள் மேலிருந்து விலக்கிக் கொண்டவன்.., அவள் கேள்விக்கு பதில் சொல்லாமல் தன் அறைக்கு திரும்பிச் சென்றான்.

‘‘ராஜ்..’’ அவள் குரல் அவனைத் தொடர, அதை அவன் கண்டுகொள்ளவே இல்லை. ‘உன் அப்பாவை உனக்கு கொடுப்பேன் அலை.., நிச்சயம் கொடுப்பேன்..’ மகளை இறுக்கிக்

கொண்டவளுக்கு அதை எப்படி செய்யப் போகிறோம் என்பதுதான் தெரியவில்லை.

தனக்கு பேசவே சந்தர்ப்பம் அளிக்காமல் செல்லும் அவன் செய்கை.., குழந்தையை கூட தவிர்க்கும் அவன் நடவடிக்கை.., அவனை எப்படி அணுகுவது எனத் தெரியாமல் திணறிப் போனாள்.

இந்த ஒரு மதமாக அவனிடம் தன் பக்க நியாயத்தை ஒரு வார்த்தையாவது எடுத்துச் சொல்ல போராடவே செய்கிறாள். ஆனால்.., அவன் தன்னோடு சேர்த்து குழந்தையையும் விலக்கி நிறுத்தும் விதம்.., அழுகை நெஞ்சை முட்டியது.

ராஜா தன்னை தூக்காமல் சென்றுவிட்ட விதத்தில், குழந்தை அழுகையைத் தொடர, அவளை சமாதானம் செய்யக் கூட நிஹாவால் முடியவில்லை. தனக்கே ஆறுதல் தேவைப்படும் வேளையில்.., குழந்தையை எப்படி சமாதானம் செய்வதாம்?

அறைக்குள் நுழைந்த ராஜாவுக்கோ.., அவளை காயப்படுத்த கூடாது என்றுதான் ஒதுங்கிச் செல்கிறேன். ஆனாலும்.., தன்னை மீறி செய்யும் செய்கைகள்.., அவள் கேள்விக்கு பதில் கொடுக்க ஒரு நொடி போதாது. ஆனால்.., அதைக் கேட்டு அவள் துடித்துப் போவாள் என்பதாலேயே பதில் சொல்லவில்லை.

ஒரு பக்கம்.., அவளுக்கு எந்த விதத்திலும் தான் நியாயம் செய்யவில்லை என தன்னையே திட்டிக் கொண்டான். அவளிடம்

காதலை வளர்த்தது தான்.., அதை முழுதாக அனுபவிக்க விடாமல், ஒரு நொடியில் தடுமாறி, அனைத்தையும் குழி தோண்டி புதைத்தவன் தான்..

இப்பொழுது.., அவளிடம் பேசாமல் வதைத்து, சில நேரம் செய்கைகளால் காயப்படுத்தி.., அவளை சித்திரவதை செய்கிறேன்.., இது தொடரக் கூடாது. மனதுக்குள் புலம்பினான்.

தன் மௌனம் கூட அவளை வதைக்கும் என்பதில் அவனுக்கு சந்தேகம் இல்லை. ஆனால்.., இருக்கும் சூழலில் எதுவும் அவ்வளவு சீக்கிரம் சரியாகும்போல் தெரியவில்லை.

இதற்குமேல் தாமதிப்பது முட்டாள்த்தனம்.., முடிவெடுத்தவன், வேகமாக தன் அலைபேசியை எடுத்தவன்.., சில எண்களை அழுத்திவிட்டு காத்திருந்தான்.

‘‘ஹல்லோ..’’ அந்தப்பக்கம் உறக்கக் கலக்கத்தில் அவரது குரல் கேட்க, அப்பொழுதுதான் நேரம் பார்த்தான். அதுவோ.., நள்ளிரவை நெருங்கப் போவதைக் காட்ட.., தன் தலையிலேயே லேசாக தட்டிக் கொண்டான்.

‘‘ஓ.., சாரி அங்கிள்.., டைம் பார்க்காமல் கால் பண்ணிட்டேன். நான் மார்னிங் கூப்பிடறேன்..’’ வேகமாக அலைபேசியை வைக்கப் போனான்.

‘‘ராஜா.., இட்ஸ் ஓகே.., டைம் பாக்காமல் கூப்பிட்டு இருக்கன்னா.., நிச்சயம் ஏதாவது அத்தியாவசியமாகத்தான் இருக்கும். நீ சொல்லு..’’ மதன் தன் தூக்கத்தை விரட்டியவாறு எழுந்து அமர்ந்தார்.

‘‘என்னங்க.., நடு ராத்திரி போன்.., முதல்ல அதை ஆப் பண்ணி தூக்கிப் போடுங்க..’’ அவர் மனைவி தூக்கத்திலேயே கடிந்துகொள்வது அவனுக்குக் கேட்க, சங்கடமாக உணர்ந்தான்.

‘‘இல்லம்மா.., ஒரு முக்கியமான கால்.., நான் பேசிட்டு வரேன்.., நீ தூங்கு..’’.

‘‘சரி.., சீக்கிரம் வாங்க.., இல்லன்னா நானே வந்துடுவேன். நீங்க நல்லா ரெஸ்ட் எடுக்கணும்னு டாக்டர் சொல்லியிருக்கார்..’’ சிறு கண்டிப்புடனே அனுமதி வழங்க, ஐம்பது வயதிலும் அந்த கணவன் மனைவிக்கு நடுவில் இருக்கும் அன்பும் புரிதலும் அவனை சற்று பொறாமை கொள்ளவே வைத்தது.

அறைக்குள் இருந்து வெளியே வந்தவர்.., அறைக்கதவை மெதுவாக சாற்றிவிட்டு, ‘‘சாரிப்பா.., வயசானாலே ஒவ்வொரு வியாதியா வந்துடுது. இப்போ பிபி கொஞ்சம் அதிகமா இருக்கா.. அதான்.., கல்யாணி கொஞ்சம் பயப்படுறா அதான். நீ சொல்லுப்பா.., என்ன இந்த நேரம் கால் பண்ணியிருக்க?’’ அங்கிருந்த சோபாவில் அமர்ந்தார்.

“அங்கிள்.., நான் ஏற்கனவே உங்ககிட்டே சொல்லி கேட்டிருந்ததுதான். எனக்கு எம்பிஏ க்கு ஒரு சீட் வேணும். அதுவும் இந்த அக்காடமிக் இயரே வேணும்..” பிடிவாதமாக ஒலித்தது அவன் குரல்.

“ஏம்ப்பா ராஜா.., காலேஜ் சீட்டுக்கு வேண்டியா இந்த ராத்திரி போன் பண்ண?” அவரது உறக்கம் இப்பொழுது சுத்தமாக தொலைந்து போயிருந்தது.

“ம்ச்.., அதான் டைமை கவனிக்கலன்னு சொன்னேனே..” சலித்துக் கொண்டான்.

“சரி.., சரி.., சீட் கண்பாம்னு அப்போவே சொல்லிட்டேனே பிறகு என்ன? ஆனா.., இந்த அக்காடமிக் இயரேன்னா.., ஏற்கனவே ஒரு செம் முடியப் போகுது, அப்படி இருக்கையில்..” யோசனையாக இழுத்தார்.

“எனக்கு அதெல்லாம் தெரியாது.., சீட் உண்டா இல்லையா? முடியாதுன்னா சொல்லுங்க.., நான் வேற காலேஜ் பாத்துக்கறேன்..” சற்று கோபமானான்.

“நான் எப்போ முடியாதுன்னு சொன்னேன்? ஹப்பா.., கோபம் மட்டும் மூக்குக்கு மேலே வந்துடுமே. இப்போ என்ன சீட் வேணும் அவ்வளவு தானே. கேண்டிடேட் யாரு.., ஆணா பொண்ணா? நேரம் காலம் பார்க்காமல் கால் பண்ற…? அப்படி

யாருக்குப்பா சீட்? உனக்கு ரொம்ப வேண்டியவங்களா?'' சற்று ஆர்வமானார்.

''ஆமா.., நிஹாசினிக்குதான் சீட்..'' அவன் சொல்ல, அவன் சொன்னதை கிரகிக்கவே அவருக்கு சற்று நேரம் பிடித்தது.

''என்னப்பா சொல்ற..? உன் பொண்டாட்டிக்கா சீட்..? ஒரு வருஷம் போகட்டும்னு அன்னைக்கு சொன்ன.., இப்போ என்னன்னா..? குழந்தைக்கு ஒரு வயசு ஆகிடுச்சா என்ன? நான் என்னவோ வேற யாருக்கோ கேக்கறன்னு நினைத்தேன்..'' நம்ப முடியாமல் கேட்டார்.

''இப்போ அதெல்லாம் உங்களுக்கு எதுக்கு? என் பொண்டாட்டிக்குன்னா சீட் கொடுக்க மாட்டீங்களோ?'' அவர் கேள்வி அவனை சற்று அசைத்துதான் பார்த்தது. அதை அடக்கியவன் அவரிடம் கோபம் காட்டினான்.

''நீ யாருக்கோ கேட்டாலே கொடுப்பேன்.., என் மகளுக்கு கொடுக்க மாட்டேனா என்ன? நாளைக்கே வேண்ணாலும் கூட்டி வா. சரி சென்னைல எந்த பிரான்ச்ல வேணும். சொல்லிட்டன்னா நான் ப்ரின்சிபலுக்கு போன் பண்ணி சொல்லிடுவேன்..'' அதற்குமேல் அவனிடம் விவாதிக்க அவர் விரும்பவில்லை.

''சென்னையில் வேண்டாம் அங்கிள்.., விழுப்புரம் காலேஜ்ல கொடுத்தீங்கன்னா போதும். வித்தின் ஒன் வீக்ல நான்

போய்டுவேன்..” அவன் உரைக்க கேட்டுக் கொண்டிருந்தவருக்குத்தான் தலை சுற்றியது.

“நீ இங்கே இருக்கும்போது.., விழுப்புரத்தில்..., தினமும் போயிட்டு வர முடியாதே ராஜா..” கேள்வியாக இழுத்தார்.

“அதான் ஹாஸ்டல் இருக்குல்ல.., அங்கேயே தங்கிப்பா..” அவன் ஒரு முடிவை எடுத்துவிட்டு பேசுவதை உணர்ந்து கொண்டார்.

அவனிடம் பேசி புரியவைக்க முடியாது என உணர்ந்தவர்.., “சரிப்பா.., நீ சொன்ன மாதிரியே செய்யலாம். ரெண்டு நாள்ல திருப்பி கூப்பிடு.., இப்போ வச்சுடவா..” கேட்டவர் அலைபேசியை வைத்துவிட்டார்.

உடனடியாக தனாவிடம் பேச வேண்டி எண்ணியவர்.., நேரம் நள்ளிரவைத் தாண்டியதை உணர்ந்து அந்த நினைப்பை ஒத்தி போட்டார்.

அவர் யோசனையில் அமர்ந்திருக்க.., “இதுதான் நீங்க அஞ்சு நிமிஷத்தில் வரதா? இங்கே உக்காந்து என்ன யோசனை..? முதல்ல எழுந்து வந்து படுங்க..” கணவரை கையோடு அழைத்துச் சென்றார்.

“கல்யாணி..., நாளைக்கு தனாவோட வீட்டுக்குப் போகணும்.., நீயும் என்னோட வா..” அவர் உரைக்க,

‘‘என்னங்க திடீர்ன்னு.., போன மாசம்தானே போய் குழந்தையை எல்லாம் பாத்துட்டு வந்தோம்..’’ புரியாமல் கேட்டார்.

‘‘எல்லாத்தையும் காலையில் சொல்றேன்.., நீ தூங்கு..,’’ யோசனையோடு படுத்துக் கொண்டார்.

காலையில் எழுந்து கிளம்பியவர்கள்.., முதல் வேலையாக தனாவின் வீட்டுக்குச் செல்ல.., ‘‘வாங்க.., உள்ளே வாங்க..’’ அவரை அழைத்த சுஜா, தனாவிடம் அலுவலக அறைக்கு அழைத்துச் சென்றார்.

‘‘மதன்.., வாடா.., என்ன இவ்வளவு காலையிலேயே வந்திருக்க.., பொண்ணுக்கு ஏதும் விசேஷம் வச்சிருக்கியா என்ன?’’ கேட்டவர் அவரது எதிரில் அமர்ந்தார்.

‘‘பொண்ணுக்கு விசேஷம் வச்சா இப்படி வெறும் கையோடையா வருவேன்.., இது வேற..’’ உரைத்தவர் மனைவியைப் பார்த்தார்.

‘நீயே சொல்..’ அவர் பார்வை உரைக்க, ‘நீங்களே சொல்லுங்க..’ இருவரும் பார்வையாலேயே பேசிக்கொள்ள, தனாவும், சுஜாவும் ஒருவர் மற்றவரைப் பார்த்துக் கொண்டார்கள்.

‘‘என்ன.., எதுவும் பிரச்சனையா..?’’ சுஜாதான் கேட்டார்.

‘‘ராஜா எங்கே..?’’ கல்யாணி பார்வையைச் சுழற்ற,

“அவன் காலையிலேயே ஆபீஸ் போய்ட்டான்.., அவனைப் பார்க்கத்தான் வந்தீங்களா?”

“இல்ல.., உங்களைப் பாக்கத்தான் வந்தோம். தம்பி ஏதோ எம்பிஏக்கு சீட் வேணும்னு கேட்டானாம்..” கல்யாணி தயங்க,

“ஓ.., காலேஜ்ல இடம் இல்லையா..? அதான் நேர்ல சொல்ல வந்தீங்களா?” இதற்காகவா இவ்வளவு தூரம் வந்தார்கள் என்ற யோசனை ஓடியது.

“இடம் இல்லன்னா கூட, ஒரு சீட் கொடுப்பதில் எங்களுக்கு பிரச்சனை கிடையாதே. இது வேற.., என்னங்க.., நீங்களே சொல்லுங்க..” கணவனை இடித்தார்.

“அட.., என்னன்னு சொல்லுங்க..” தனா இடை புகுந்தார்.

“தனா.., தம்பி.., அவன் பொண்டாட்டிக்கு வேண்டி கேட்டான். அது பரவாயில்லை..., ஆனா.., சென்னையில் வேண்டாம்.., விழுப்புரத்தில் வேணும்.., அதுவும் இந்த மாசமே வேணும்னு சொல்றாப்ல. எனக்கு என்ன சொல்லன்னு தெரியலை.., அதான்.., உங்ககிட்டே ஒரு வார்த்தை சொல்லலாம்னு வந்தேன்..” நான் என்ன செய்யட்டும் என்னும் விதமாக கேட்டார்.

பெரியவர்கள் இருவரும் ஒருவர் முகத்தை மற்றவர் பார்த்துக் கொண்டார்கள். ‘‘ஓ.., அவன் கேட்ட மாதிரியே செஞ்சுடுங்க..’’ சுஜாதான் உரைத்தார்.

‘‘இதை ஏன் சொல்ல வந்தேன்னா..? ஒரு வருஷத்துக்கு முன்னாடி போன் பண்ணி, போன வருஷமே வேணும்னு கேட்டான். பிறகு திடீர்ன்னு இல்ல.., ரெண்டு வருஷம் போகட்டும்னு சொன்னான். நேத்து நைட் போன் பண்ணி, இந்த வாரமே வேணும்னு சொல்றான்.

‘‘எனக்கென்னவோ.., அவன் டிசைட் பண்ண தடுமாறுற மாதிரி ஒரு பீல். பெரியவங்க நீங்க பேசினால் நல்லா இருக்கும்னு நினைத்தேன் அதான் நேர்லயே வந்தேன்..’’ அவர் உரைக்க, அவன் நிலை மாற்றத்துக்கான காரணம் புரிந்தவர்களுக்கோ.., என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

முதலில் தெளிந்த தனா.., ‘‘அது ஒண்ணுமில்லை.., என்னால் இப்போ பழைய மாதிரி கடையை கவனிச்சுக்க முடியலை. குணாவைப் பத்தி உனக்கே தெரியும்..., ராஜாவுக்கு அவன் ஆபீஸ், கடைன்னு ஓட கொஞ்சம் கஷ்டமா இருக்கு போல.., அவனுக்கு துணைக்கு ஒரு ஆள் இருந்தால் நல்லா இருக்கும்னு பீல் பண்றான்.

“அதான்.., அவனோட மனைவிக்கு நல்ல நிர்வாகத்திறமை இருக்கு.., அதை கொஞ்சம் இம்ப்ரூவ் பண்ணலாம்னு பாக்கறான்.., வேற எதுவும் இல்லை..” அவரை சமாதானம் செய்தாலும், எதார்த்தத்தை ஏற்க சற்று கடினமாகவே இருந்தது.

“ஓ.., அப்போ சரி.., நானும் என்னவோ ஏதோன்னு கொஞ்சம் பயந்துட்டேன். நேத்து நடு ராத்திரி போன் பண்ணான்.., கூடவே.., விழுப்புரத்தில் போதும், இங்கே வேண்டாம்னு சொல்லவே கொஞ்சம் பயந்துட்டேன் வேற எதுவும் இல்லை.

“நீ சொன்ன பிறகுதான் தெரியுது.., ஏன் விழுப்புரம், ஹாஸ்டல் வேணும்னு சொன்னான்னு.., பொண்டாட்டி படிப்பில் மட்டுமே கவனம் செலுத்தணும்னு நினைக்கறான் போல.., ரொம்ப சந்தோசம்..” மேலும் கொஞ்ச நேரம் பேசியவர், கிளம்பிவிட்டார்.

அவர் செல்லவே.., தனாவும் சுஜாவும் சிறு யோசனையோடு அமர்ந்து விட்டார்கள். இப்படி ஒரு திருப்பத்தை அவர்கள் எதிர்பார்க்கவில்லை. குழந்தையை நினைத்துதான் பெரும் கவலை எழுந்தது.

“சுஜா.., நாம எதையோ எதிர்பார்த்தால்.., திடீர்ன்னு.., என்ன இது? எதுக்கு இப்படிப் பண்றான்?” சத்தியமாக அவருக்குப் புரியவே இல்லை.

“அவன் மனசுக்குள் என்ன இருக்குன்னு தெரியவே இல்லையே.., எப்படியும் நம்மகிட்டே சொல்வான்.., பார்க்கலாம்..” அவர்கள் உரையாட, அவர்களைத் தேடி லஷ்மி வேகமாக வந்தாள்.

“அம்மா.., வக்கீல் ஐயா உங்களை பாக்கணும்னு காத்துட்டு இருக்கார்..” அவள் வந்து உரைத்துச் செல்ல, இருவரும் பதட்டமாக பார்த்துக் கொண்டார்கள்.

“சுஜா.., நாம எதிர்பார்த்ததுதான் வந்திருக்கா.., இல்ல..” கவலையாக கேட்க, “வாங்க.., என்னன்னு கேக்கலாம்..” இருவரும் ஹாலுக்கு விரைந்தார்கள்.

வக்கீல் சொன்னதைக் கேட்ட இருவருக்கும், இதைத்தான் எதிர்பார்த்தார்கள் என்றாலும்.., அதை ஏற்றுக்கொள்ள கடினமாகத்தான் இருந்தது.

# அத்தியாயம் 12

**க**டையில், தன் அறையில் எதையுமே செய்யப் பிடிக்காமல், யோசிக்க கூட பிடிக்காமல் அமர்ந்திருந்தான் ராஜா. எடுத்துவிட்ட முடிவுகளின் தாக்கம் எப்படி இருக்கும் என்ற பயம் ஒரு பக்கம் என்றால், அது சரியானது தானா என்ற கவலை மறு பக்கம் அழுத்தியது.

எந்த காரணத்தை கொண்டும் தான் மீண்டும் ஒரு நோயாளி ஆவதை அவன் விரும்பவில்லை. அவன் இப்பொழுது செயல்பட்டே ஆகவேண்டிய நேரம். அவனையே அவன் கவனித்துக் கொண்டு இருக்க முடியாது.

கடையின் பொறுப்புகள் ஒரு பக்கம் என்றால், தனாவின் உடல்நிலையை பராமரிப்பது, அதைப் பற்றிய விளக்கங்கள் அறிவது, அதை நிவர்த்தி செய்ய வேண்டிய விதம்.., என ஒரு பக்கம் அழுத்தினால், கார்த்திகாவின் விஷயத்தை யோசிக்கையிலேயே குற்ற உணர்வாகப் போயிற்று.

‘அதான் நீ பாத்துக்கறேன்னு சொல்லிட்டல்ல.., பிறகு என்ன கவலை..’ என அவள் நம்பிக்கையாக உரைத்துவிட்டாள்.

ஆனால்.., அதற்காக எதையுமே செய்யாமல் தான் படுத்துவிட, இப்பொழுது அங்கே நடக்கும் பிரச்சனைகளை கேள்விப் பட்டவனுக்கு நிம்மதி என்பதே சிறிதும் இல்லை.

இவையெல்லாம் ஒரு பக்கம் என்றால், ஹாசினி.., நினைக்கவே நெஞ்சை அடைக்கும் உணர்வு. ஏனோ அவள் முகத்தை கூட இயல்பாக பார்க்க முடியாத நிலை, அவளது தவிக்கும் பார்வைகள், யாசிக்கும் உணர்வுகள், அதை கண்டும் காணாமல் இருக்கும் விதம், தன்னையே அவனுக்கு பிடிக்கவில்லை.

தன்னை சுற்றி இருக்கும் எதைப் பற்றியும் யோசிக்க விடாமல், ஹாசினி மட்டுமே தன்னை ஆக்கிரமிக்க, அதை தவிர்த்தே ஆகவேண்டிய கட்டாயம் அவனுக்கு. அவள் தன்னுடனே இருந்தால், எதையுமே தான் செய்யப் போவதில்லை என்ற பயம்..,

அவளையும் பலமாக காயப்படுத்தி விடுவோம் என்ற பரிதவிப்பு.., அவளை காயப்படுத்திவிடக் கூடாது என்ற கவனம்.., ஏனோ அவள் அருகே இருந்தால் அதைச் செய்ய முடியும் என்றே தோன்றவில்லை. எனவேதான் அவளுக்காக கல்லூரியில் இடம் எடுத்து தூரமாக அனுப்ப முடிவு செய்தான்.

ஆனால் அந்த வக்கீல் விஷயம்.., அந்த முடிவு அவசியமா? தன்னையே கேட்டுக் கொண்டான். அதே நேரம்..,

ஒரு வேளை அவளுக்கு விருப்பம் இல்லாமல் என்னோடு வாழ்ந்துகொண்டிருந்தால்? அதை அவள் தொடர வேண்டாமே.., தனது செய்கைக்கு சமாதானம் செய்தாலும்,

அவளுக்கு அப்படி ஒரு கொடுமையை தவறை இழைத்துவிட்டு, அவள் உன்னோடு இழையவேண்டும் என எதிர்பார்க்கிறாயா? இப்பொழுது அவளையே வாழ்க்கையில் இருந்து அனுப்பும் முடிவையும் எடுக்கிறாயே என ஒரு மனம் சாட, நிம்மதியை அடியோடு இழந்து கொண்டிருந்தான்.

‘‘இல்ல.., அவளை என்னால் விட்டுக் கொடுக்க முடியாது. ஆனால், அவளுக்கு அப்படி இல்லையே.., கட்டாயத்துக்காக என்னோடு இருக்கும் துயர் அவளுக்கு வேண்டாம்..’’ வாய் விட்டே புலம்பியவன், கையால் தலையை அழுத்திக் கொண்டான்.

‘போய்விடுவாளோ..?’ ஒரு மனம் பதற, ‘போக மாட்டாள்..’ மறு மனம் சப்போட்டுக்கு வர, ‘ஒரு வேளை அவள் பிரிவை தேர்ந்தெடுத்தால்..?’ ஹையோ இந்த நினைவுகள் கொடுக்கும் அழுத்தத்தை அவனால் தாங்க முடியவில்லை.

அவள் பேசுவதை கேட்டுவிடேன்.., ஒரு மனம் குரல் கொடுக்க, இந்த ஒன்றரை வருடத்தில் ஒரு நாள் கூட, பார்வையால் கூட நேசத்தை வெளிப்படுத்தாதவள், இப்பொழுது

மட்டும் அப்படி என்ன சொல்லிவிடுவாளாம்? அப்படியே சொன்னாலும் அதில் எந்த அளவுக்கு உண்மை இருக்கும்?

என் உயிர்மேல் அவள் கொண்ட அக்கறையாகவே அது தெரிகிறதே. அப்படியே நேசம் இருந்தால், இந்த பிரிவு எனக்கு அதை உணர்த்தட்டும், அவள் வார்த்தைகளை விட, அவள் செய்கை எனக்கு புரிய வைக்கட்டும்.., எண்ணியவன், அறைக்குள் மூச்சு முட்ட, கடையை சுற்றிப் பார்க்க கிளம்பிவிட்டான்.

நிச்சயம் வீட்டில் விஷயம் தெரிய வந்திருக்கும் என்ற நினைவே அவனை சற்று நிம்மதி இழக்கச் செய்தது. ஆனால், எதையும் செய்ய இயலாதவனாக உலாவினான்.

கூடவே, என் கடமையைச் செய்ய, பெர்சனல் வாழ்க்கையை சற்று ஒற்றி வைக்க வேண்டும் என்ற முடிவுக்கு வந்த பிறகே அவனால் நிம்மதியாக முடிந்தது.

அதே நேரம், வக்கீல் பாலன் வந்து விஷயத்தை உரைத்துவிட்டு சென்ற பிறகு, தனாவும், சுஜாவும் சற்று நேரத்துக்கு என்ன பேசுவது என்றே தெரியாமல் அமர்ந்து விட்டார்கள்.

ராஜா ஏதோ முடிவு எடுக்கப் போகிறான் என அவர்கள் எண்ணியது என்னவோ உண்மை. அதிலும் சுஜாவோ.., தீர்மானமாக அவன் இதைச் செய்வான் என உறுதியாகவே

எண்ணினார். ஆனாலும்.., அதை நேரடியாக கேட்கையில் கஷ்டமாகத்தான் இருந்தது.

அதைவிட, இப்படி ஒரு முடிவெடுக்க அவன் எவ்வளவு வேதனை பட்டிருப்பான்? நினைக்கவே அவ்வளவு கஷ்டமாக இருந்தது. ஆனாலும், அந்த கஷ்டத்திலும் அவன் எடுக்கும் மிகக் கடினமான முடிவுகள்.., அவன் யாரை பரீட்சிக்க முயல்கிறான்?

அவனையா.., இல்லை அவன்மேல் நிஹாவுக்கு இருக்கும் நேசத்தையா? இவர்களுக்கு நடுவில் அலை.., அவளைப் பற்றி நினைக்கவே முடியவில்லை. தாய் தந்தையின் பாசத்தில் வளர வேண்டிய குழந்தை, அவர்களது பாராமுகத்துக்கு நடுவில் வளர்வதை என்னவென்று சொல்ல..? தன் நினைவில் அவர் இருக்க..

“என்னசுஜா.., அவன் என்னவோ மியூச்சுவல் கன்சன்ல டிவோஸ்க்கு அப்ளை பண்ண என்ன ப்ரோசீஜர்ன்னு கேட்டு பேப்பர் எல்லாம் ரெடி பண்ண சொல்லியிருக்கான்.., கேட்ட எனக்கே திக்குன்னு இருக்கு. நீ என்ன இப்படி அமைதியா இருக்க?” அவர் அமைதி தாளாமல் வெடித்தார்.

“இது இப்படித்தான் ஆகும்னு நமக்குதான் ஏற்கனவே தெரியுமே.., பிறகு.., இதில் அதிர்ச்சி அடைய என்ன இருக்கு..?” தன்னை சற்று மீட்டுக் கொண்டார் சுஜா.

“எம்பிஏ சீட்.., டிவோஸ்.., அதைவிட.., அவளை விழுப்புரத்துக்கு அனுப்பறான்.., அப்போ குழந்தை.., உனக்கு இது சரின்னு படுதா? நீ சொன்னால் அவன் கேப்பான்.., அப்படியிருக்கும்போது..” ஆத்திரத்தில் வெடித்தார்.

“நான் சொன்னால் கண்டிப்பா கேப்பான்.., ஆனா.., ஏற்கனவே மனசு ஒடிஞ்சு போயிருக்க அவனை, வலிக்க வலிக்க அவன் நெஞ்சில் குத்த சொல்றீங்களா? என்னால் அது முடியாது..” மெல்லியதாக விசும்பினார்.

சுஜாவுக்கு மட்டும் அவன் செய்வது உடன்பாடா என்ன? ஆனால்.., கொஞ்ச நாளைக்கு என் போக்கில் விடுங்கம்மா என கண்ணில் உயிரைத்தாக்கி அவன் கெஞ்சுகையில் அவரும் என்னதான் செய்வதாம்?

“என்ன சுஜா இப்படி பேசற..?” பதறினார்.

“வேற எப்படித்தான் பேசச் சொல்றீங்க? கொஞ்சநாள்.., அவ கோபத்தை பெரிதா எடுத்துக்காதேன்னு அவன்கிட்டேயும் சொல்லிட்டேன். அதைவிட, அவனை புரிஞ்சுக்க முயற்சி

பண்ணு.., வார்த்தைகளை விடாதேன்னு நிஹாகிட்டேயும் சொல்லிட்டேன்.

‘‘எல்லாத்தையும் அமைதியா கேட்டுகிட்டவங்க, அதை செய்யவே இல்லைன்னு தெரியும்போது.., நான் என்ன செய்யட்டும்? இப்படி எதுவும் ஆகக் கூடாது.., அவங்க உறவு முறிந்துவிடக் கூடாதுன்னு ஒரு அம்மாவா ஆன மட்டும் போராடிட்டேன்.

‘‘ஆனா.., அவங்க கர்மாவை அவங்க அனுபவித்தே ஆகவேண்டும் என்னும்போது என்னால் எதுவும் செய்ய முடியாதுங்க. தள்ளி நின்னு ஒரு பார்வையாளனா வேடிக்கை பார்ப்பதைத் தவிர இதில் எதுவும் செய்ய முடியாது..’’ வீட்டில் இருந்த நிம்மதி, சந்தோசம் அனைத்தும் எங்கே ஓடி ஒளிந்தது எனத் தெரியாமல் பரிதவித்தார்.

‘‘இந்த வீட்ல இருக்குறவங்க நிம்மதியா சாப்ட்டு, தூங்கி எத்தனை நாள் ஆச்சு.., சில உறவுகள் அருகே இருந்து காயப்படுவதை விட, விலகி இருந்து அதை காத்துக் கொள்வது எவ்வளவோ பரவாயில்லை. விடுங்க.., எல்லாம் விதிப்படிதான் நடக்கும்..’’ பொங்கிய துக்கத்தை தொண்டைக்குழியில் புதைத்தாலும், சிறு விம்மல் அவரிடம் வெளிப்பட்டது.

“சுஜா.., சாரி.., தெரியாமல் சொல்லிட்டேன். அழாதே.., இப்போ என்ன.., கொஞ்ச நாள் அவன் போக்கில் விடணும் அதானே.., சரி.., நாம வேடிக்கை மட்டும் பார்க்கலாம் விடு..” அவர் சுஜாவை சமாதானப்படுத்த, அங்கே வந்தாள் நிஹாசினி.

“மாமா.., அக்கா ஏன் அழறாங்க..?” வேகமாக அவரை நெருங்கினாள்.

“அவங்க ஏன் அழறாங்கன்னு கேக்கறியே.., சொன்னா நீ தாங்க மாட்ட.., கேக்கறா பார்.., அழாமல் வேற என்னதான் செய்யறது..?” தாரிணியும் கண்களில் வழிந்த கண்ணீரை துடைத்தவாறே வெளியே வந்தாள்.

“என்னக்கா சொல்றீங்க..?” கேட்கும் முன்பே அவள் குரல் தடுமாறியது.

“இந்தா.., அவளை உள்ளே கூப்ட்டு போய் பேசுங்க. அவன் போட்டு உடைச்சாம்ன்னா தாங்க மாட்டா.., போங்க..” பெண்கள் அனைவரையும் உள்ளே அனுப்பினார். அவர் கண்களும் கலங்கித்தான் இருந்தது.

தங்கள் மகனது வாழ்க்கையும், சந்தோஷமும், நிம்மதியும் தங்கள் கண் முன்பாகவே கொஞ்சம் கொஞ்சமாக கலைந்து போவதை அவர்களால் எப்படி தாங்க முடியும்?

தங்கள் அறைக்கு அவளை கூட்டி வந்த சுஜா.., அங்கிருந்த சோபாவில் அவளை அமர வைத்தார்.

அவரது பேச்சையும் அழுகையும் கேட்டவாறே வந்தவள் தானே.., எனவே.., “நீங்க ஏங்க்கா அழறீங்க..? அழவேண்டிய நானே தைரியமாத்தானே இருக்கேன்..” தொண்டை அடைக்கும் விதத்தில் உரைக்க, சுஜாவும் தாரிணியும் அவளை அதிர்வாய் ஏறிட்டனர்.

“வக்கீல் வந்ததைப் பாத்துட்டுதான் நான் கீழே வந்தேன்..” சொன்னவள் முகத்தை மூடிக்கொண்டு குலுங்க, சுஜா வேகமாக அவளை அணைத்துக் கொண்டார்.

அனைத்தையும் பார்வையாளராக இருந்து கவனிக்க முடிவெடுத்தாலும், அவளது அழுகையைக் கண்கொண்டு பார்க்க முடியாமல் போனது. ‘ஏதாவது செய்ய வேண்டும்..’ தனக்குள் உரு போட்டவர், வேகமாக சிந்தித்தார்.

அவரை கட்டிக் கொண்டவள், விம்மி அழுதாள். சற்று தெளிந்தவள், “என்னைப் பிரியிறதுதான் அவருக்கு நிம்மதின்னா அதை நான் செய்யறேன்” சுஜா சொன்னதைக் கேட்டவள், இதுதான் சரியாக இருக்கும் என எண்ணினாள். அவள் திக்கித் திணறி உரைக்க, சுஜாவின் தோளில் இருந்தவளை ஒரே

இழுப்பில் விலக்கிய தாரிணி, ஓங்கி அவள் கன்னத்தில் அறைந்தார்.

‘அக்கா..’ குரல் எழுப்ப முடியாமல், கண்களில் அதிர்ச்சியை தேக்கி, அவர் அடித்த கன்னத்தை கைதாங்கி அவள் விழிக்க, சுஜாவோ தாரிணியை தடுக்க முயலவே இல்லை. பிரிவு ஒன்றுதான் முடிவென்றால் அவர்கள் ஏன் இவ்வளவு பாடு பட வேண்டும்?

‘‘ஏன் அடிச்சேன்னு பாக்கறியா..? அப்படி மட்டும் நீ செய்தால் அவன் உயிரோட சமாதி ஆயிடுவாண்டி. உனக்கு இன்னுமா அவனைப் புரியலை..? ஏண்டி இப்படி இருக்க..?’’ தன் தலையிலேயே அடித்துக் கொண்டார்.

இப்பொழுதும் புரியாமல் மலங்க விழித்தவள், தன் அதிர்ச்சியை மாற்றிக் கொள்ளவே இல்லை.

‘‘அ..க்..கா..’’ அவள் திக்க,

‘‘உன் உயிர் போனா கூட அதில் கையெழுத்து போட மாட்டேன்னு எனக்கு சத்தியம் பண்ணுடி..’’ தன் கரத்தை அவள் முன்னால் நீட்டினாள்.

அவர் கரத்தின்மேல் தன் கையைப் பதித்தவள், ‘அவர் போட்டிருந்தால்..?’ அவள் பார்வை அவரிடம் கேட்க,

“அவன் போட்டிருந்தா என்ன செய்யிறதுன்னு கேக்கறியா? அப்படி அவன் செய்வான்னு நீ நம்பறியா..?” அவளிடம் ஆத்திரமாக கேட்க, அவளுக்கோ பதில் சொல்ல முடியவில்லை.

தன் முகம் காண மறுப்பவன், தன் நிழல் தொடும் தூரத்தில் கூட வர தயங்குபவன், ஒரு வார்த்தை பேச தயங்குபவன்.., இறுகிப்போய் எக்கின் தன்மையில் இருப்பவனை எந்த கணக்கில் அவள் சேர்ப்பது? ஒரு வேளை தன் பிரிவு அவனை உயிர்பிக்கும் என்றால்.., அதைச் செய்ய இப்பொழுது தயாராக இருந்தது அந்த பேதை உள்ளம்.

தன் மனதில் இருப்பதையெல்லாம் கொட்டி முடித்தவள் மீண்டும் அழ, “உனக்கு அவனைப் பிடிக்கவில்லை என்று நினைத்துதான் அவன் இப்படியெல்லாம் செய்யறான்னு உனக்கு எப்போதாண்டி புரியும்? இப்போ., அதை உண்மை என நிரூபிக்க கையெழுத்து வேற போட்டு கொடுக்கப் போறேன்னு சொல்றியே.., உன்னை என்ன செய்ய..?” அவள் தோளைப் பிடித்து உலுக்கினார்.

“என்னைப் புரிய வைக்க ஒரு சந்தர்ப்பம் கூட அவர் கொடுக்கலையே..?” அவள் தேம்ப..,

“ஓ.., அப்போ ஒண்ணரை வருஷமா நீங்க அவனுக்கு என்ன சான்ஸ் கொடுத்தீங்களாம்..?” அவர் கேள்விக்கு அவள் தலை கவிழ்ந்தாள்.

“தப்புதான்..” சின்னக்குரலில் அவள் தவறை ஒத்துக்கொள்ள, அவர்களுக்கு ஒரு நொடி என்ன சொல்வது என்றே தெரியவில்லை. அதே நேரம், தாரிணியும், சுஜாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

ராஜாவின் கோபத்தை அவர்கள் யாருமே பார்த்தது இல்லை. ஆனால் பிடிவாதம்.., தாரிணி, குணாவை ஒதுக்கி வைத்த விதத்திலேயே அது தெரியுமே. எத்தனை வருடங்கள்.., ஒரு வார்த்தை கூட பேசாமல் அவனால் விலகியிருக்க முடிந்தது.

அப்படி நிஹாவிடம் பேசக் கூடாது என அவன் முடிவு செய்துவிட்டால், யாரால் அவனை மாற்ற முடியும்? அந்த பயமே அவனிடம் வெளிப்படையாக பேச முடியாத சூழலை உருவாக்கியிருந்தது.

கெட்டதிலும் ஒரு நல்ல விதமாக, நிஹாவை விட்டு பிரியும் முடிவை எடுத்தவன், அதை அதிரடியாக செய்யாமல், அவளுக்கு படிக்க ஏற்பாடு செய்வது, தன் கோபம்

ஆறுவதற்காகவே அவளை தூரமாக படிக்க வைக்க ஏற்பாடு செய்கிறான் என்பது வரைக்கும் அவர்களுக்கு புரிந்தது.

அனைத்தும் அவர்களது யூகம்தானே தவிர, அவன் மனதுக்குள் இருப்பதை துல்லியமாக அவர்களால் கணிக்க முடியாதே. அதை நினைத்தவர்கள் நிஹாவைப் பார்க்க,

‘‘ஏன் நிஹா.., உன் வாழ்க்கையயின் முடிவை உன் கையில் கொடுப்பான்.., அப்போ தைரியமா முடிவெடுக்கணும்னு நான் சொன்னது உனக்குப் புரியவே இல்லையா..?’’ சுஜா முதல் முறையாக வாய் திறக்க, அதிர்ந்துபோய் விழித்தாள்.

‘‘அப்படின்னா..?’’ அவள் திணற,

‘‘நீ எடுக்கப்போற முடிவில் உன் வாழ்க்கை மட்டும் இல்லை.., ராஜாவோட நிம்மதி, சந்தோசம்.., குழந்தையோட எதிர்காலம்.., இப்படி எல்லாம் இருக்குன்னு உனக்குப் புரியவே இல்லையா..?’’ வேதனையாக கேட்டார்.

‘‘இல்லக்கா.., அவளுக்குப் புரியாது.., மியூச்சுவல் கண்செர்ன்ல லம்ப்பா ஒரு அமவுண்ட் கிடைக்கும்.., அதை வாங்கிட்டுபோய் நிம்மதியா இருக்கலாம்னு முடிவு பண்ணிட்டா போல..’’ ஆத்திரமாக தாரிணி இடை புக, ஓடிபோய் அவர் காலில் விழுந்தாள்.

‘‘ஐயோ.., அப்படி நான் நினைக்கவே இல்லை. ‘அலை’யை உங்ககிட்டே கொடுத்துட்டு அப்படியே போய் செத்து ஒழியணும்னுதான் நினைத்தேனே தவிர..’’ அவர் காலை கட்டிக்கொண்டு கதறினாள்.

‘‘நீ செத்துப்போனால் இந்த வீட்டில் தொலைந்துபோன நிம்மதி திரும்ப கிடைக்குமாடி..’’ ஆங்காரமாக அவளைப் பிடித்து எழுப்பினார்.

‘‘எனக்குத் தெரியலையே..’’ உடைந்துபோய் அவள் பதில் கொடுக்க, கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

‘‘நிஹா.., இங்கே வா..’’ சுஜா அழைக்க, தாரிணி அவளை அழைத்து வந்து அவர் அருகில் அமர வைத்தார்.

வாழ்க்கை என்றால் என்னவென்றே தெரியாத ஒரு குழந்தையாகத்தான் அப்பொழுது அவள், அவர் கண்களுக்குத் தெரிந்தாள்.

‘‘சரி.., இப்போ சொல்லு.., அவன் கேட்ட உடனே கையெழுத்து போட்டுக் கொடுத்துட்டு நீ என்ன செய்யப் போற? அவனை விட்டு, அலையை விட்டு உன்னால் இருக்க முடியுமா? செத்துப் போவேன்னு சொல்லாதே.., உன்னை சாக விட்டு வேடிக்கை பார்க்கும் அளவுக்கு இங்கே யாரும் இல்லை..’’

அழுத்தமாக அவர் வினவ, சிறிது நேரம் யோசித்தவளுக்கு எதுவும் புரியவே இல்லை.

‘‘நீங்க சொல்லுங்கக்கா.., நான் என்ன செய்யட்டும்? எனக்கு என்ன செய்யன்னு சுத்தமா புரியலை...’’ தன் கண்ணீரை புறங்கையால் துடைத்துக் கொண்டாள்.

சுஜா ஒரு முடிவுக்கு வந்தவராக, ‘‘நிஹா.., ராஜா டிவோஸ்க்கு மட்டும் ஏற்பாடு பண்ணலை.., உனக்கு எம்பிஏ படிக்க விழுப்புரத்தில் ஏற்பாடு பண்ணியிருக்கான்.., அதுவும் அடுத்த வாரமே..’’ அவர் சொல்ல, அதிர்ந்து விழித்தாள்.

‘‘அக்கா.., குழந்தையை விட்டு.., அவரை விட்டு.., உங்களை எல்லாம் விட்டு.., நான் எப்படி..?’’ முணுக்கென கண்ணில் கண்ணீர் வழிந்தது.

‘‘ராஜா உன்னைப்பற்றியும், அவனைப் பற்றியும் மட்டுமே யோசித்திருப்பான்னு நினைக்கறேன். அலையைப் பற்றி அவன் நினைக்கவே இல்லை போல.., அதுதான் நம்மளோட துருப்புச் சீட்டு..’’ அவர் உரைக்க, புரியாமல் விழித்தாள்.

‘‘அப்போ.., அவர்கிட்டே அதைச் சொல்லி நான் போக மாட்டேன்னு சொல்லவா?’’ அப்பாவியாக வினவ,

‘‘அக்கா.., இவ சுத்தமா வேலைக்கே ஆக மாட்டா. அலையைப் பத்தி சொல்லி நீ இங்கேயே இருந்தால்..,

அவனோட கோபமும் பிடிவாதமும் இன்னும்தான் அதிகமாகும்..” தாரிணி உரைக்க, ‘ஆமாம்..’ யோசனையோடு சுஜாவை ஏறிட்டாள்.

“நிஹா.., இப்போதைக்கு ராஜா சொல்வதை கேட்டு அப்படியே செய். அதேபோல்.., அலையைப் பத்தியும், உன்னைப் பத்தியும் அவன் யோசிக்கணும்.., அது எப்படின்னு ஒரு மனைவியா உனக்குத் தெரியணும்.., அதை நான் சொல்ல மாட்டேன். அதேபோல்.., அந்த பேப்பர்ல கையெழுத்து போடச் சொன்னால்.., தைரியமா முடியாதுன்னு சொல்லு.., இல்லன்னா.., நீ அவன் மனைவிதானே.., அதற்கு ஏற்ற மாதிரி பேசு.

“எல்லா நேரத்திலும் எங்க ஆதரவு உனக்கு உண்டு. இந்த காலகட்டத்தில் நீ கண்டிப்பா நிறைய கஷ்டப்பட வேண்டி இருக்கும்..” அவர் உரைக்க, ஆமோதிப்பாய் தலை அசைத்தாள்.

கூடவே.., “அக்கா.., அலைக்கு ஒரு வேளை பால் கொடுக்கவில்லை என்றாலே என்னோட நிலைமை ரொம்ப கஷ்டமா போய்டும்.., இதில்.., மொத்தமான்னா..?” தாய்மையின் பரிதவிப்போடு நிச்சயம் அதில் பயம் அதிகம் இருந்தது.

அலை பிறந்த முதல் ஒரு வாரம் மட்டுமே பால் ஊற்று குறைவாக இருந்தது. அதன் பிறகு.., இந்த ஐந்து மாதங்களில் புட்டிப்பால் என்பது தவிர்க்க முடியாத வேளைகளில் மட்டுமே

அலைக்கு கொடுக்கப்பட்டதே தவிர, மற்றபடி தாய்ப்பால் மட்டுமே அவள் உணவாக இருந்தது.

மனதின் தன்மைக்கும்.., பாலூறும் விதத்துக்கும் சம்பந்தம் உண்டு என்பது நிஹாசினியின் விஷயத்தில் நூறு சதவீதம் உண்மை. ராஜாவின்மேல் கோபமாக இருந்த பொழுது பாலூற்று குறைவாக இருக்க, அவன் அருகில் இருக்கும் வேளைகளில்.., குழந்தை பசியாக இருப்பாளோ.., என எண்ணும் நேரங்களில் கூட பாலூறும் உணர்வை அவள் உணர்ந்திருக்கிறாள்.

அப்படி இருக்கையில்.., ஒரு வேளை கூட பால் கொடுக்கவில்லை என்றால்.., பால் கட்டி தன் நிலை என்னவாகும் என பயமாக இருந்தது. அதையே அவள் வார்த்தையில் வெளியிட, ‘‘சில கஷ்ட்டங்களை நீ தாங்கித்தான் ஆகவேண்டும் என நான் சொன்னது.., இதையும் சேர்த்துதான்..’’ அவர் கண்கள் கலங்கியது.

‘‘என்னால் முடியாதுக்கா.., குழந்தைக்கு பசியாற்றணும்னு நான் நினைத்தாலே.., என் மேலாடை ஈரமாகையில்.., நான் என்ன செய்யட்டும்..?’’ ஒரு தாயின் பரிதவிப்பு அவளிடம் முழுமையாக வெளிப்பட்டது.

‘‘தப்பு செய்த எனக்கு தண்டனை சரி.., என் பொண்ணு..’’ ஓ வென கதறினாள்.

‘‘நிஹா..’’ தாரிணியும் சுஜாவும் அவளை சேர்த்து தாங்கிக் கொண்டார்கள்.

‘‘அவ புட்டிபால் கூட குடிக்க மாட்டாளே..’’ விடாமல் புலம்ப, அவர்களால் ஆறுதல் சொல்லவே முடியவில்லை.

‘‘அப்போ., இன்னும் ஒரு வாரம்தான் எனக்கும் என் பொண்ணுக்குமான நாட்களா..?’’ ஆதங்கமாக, வேதனையாக வினவ, அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை.

இறுதியில்.., அவள் அழுவது தாங்காமல்.., ‘‘நிஹா.., இங்கே பார்.., மிஞ்சி போனால் ஒரு வாரம்.., அதற்குள் ராஜா கண்டிப்பா புரிஞ்சுப்பான். அதுவரைக்கும் கொஞ்சம் பொறுத்துக்கம்மா. வாழ்க்கையை காப்பாத்திக்க போராடும்போது.., சில தியாகங்களை நாம செய்தே ஆகணும்..’’ அவளைத் தேற்றினார்.

‘‘ஒரு வாரத்தில் முடியலன்னா..?’’ தாயாக அவள் கேள்வி கேட்க,

‘‘நான் குழந்தையை தூக்கிட்டு உன்னைப் பாக்க ஓடி வந்துடுவேன். இல்லையா.., நீ கிளம்பி வந்துடு.., ஆனால்.., அப்படியெல்லாம் ஆகாதும்மா’’ அவர் ஆறுதல் படுத்த, அவளால்தான் சமாதானம் ஆகவே முடியவில்லை.

ஆனவரைக்கும் அவளுக்கு ஆறுதல் கொடுத்தவர்கள்.., ஒரு வாறாக அவளை சம்மதிக்க வைத்தார்கள். அன்று மாலையில் வீட்டுக்கு வந்த ராஜா, ஹாலில் அனைவரும் குழுமி இருப்பதைப் பார்த்தே.., விஷயத்தை அவர்கள் அறிந்து கொண்டார்கள் என்பதை உணர்ந்து கொண்டான்.

மதனிடமும், பாலனிடமும் கேட்கும்பொழுதே அவர்கள் மூலம் வீட்டில் விஷயம் தெரியவரும் என்பது அவன் அறிந்தது தானே.., நாளை மறுநாள் விழுப்புரத்துக்கு கிளம்ப வேண்டி இருக்கையில், தானும் விஷயத்தை உரைக்கும் முடிவில்தான் அவன் இருந்தான்.

கண்களை கூடத்தில் சுழற்ற, அங்கே நிஹாசினி இல்லை என்பதை அவன் கண்கள் உறுதி படுத்தியது. “அம்மா.., காபி..” தாயை நேருக்கு நேராக காண முடியாமல் தயங்கியே கேட்டான்.

அவர் காபி கொண்டுவந்து கொடுக்கவே.., அமைதியாக குடித்து முடித்தவன், சின்னக் குரலில் என்றாலும் திடனாகவே தன் முடிவை உரைத்தான்.

“என்னப்பா இதெல்லாம்..?” தனாதான் தாங்க முடியாமல் கேட்டார்.

“ப்ளீஸ்ப்பா.., என்கிட்டே யாரும் எதுவும் கேக்காதீங்க.., என் முடிவுகளுக்கு நானே பொறுப்பு..” அவன் பார்வை இப்பொழுது தாயிடம் கெஞ்சிற்று.

அவர் விருட்டென அங்கிருந்து தன் அறைக்குச் செல்ல, அவர் பின்னால் எழுந்து ஓடியவன், தாயின் முன்னால் சென்று நின்றான்.

“அம்மா.., என் மேல் கோவமா?” அவர் கரத்தை பற்றிக் கொண்டான்.

“எனக்கெதுக்குப்பா கோவம்..? அதான் யாரும் எதுவும் கேக்காதீங்கன்னு சொல்லிட்டியே.., நான் எதுவும் கேக்கலப்பா..” அவனிடமிருந்து தன் கையை உருவிக்கொண்டு அறைக்குள் சென்று மறைந்தார்.

தானும் ஓடியவன்.., “அம்மா.., நான் தப்பு பண்றேன்னு நினைக்கறீங்களா?” வேதனையாக அவன் கேட்க, இந்த முடிவை எடுக்க அவன் மனம் என்ன பாடுபட்டிருக்கும் என்பதை அறிந்தவர் பதில் எதுவும் கொடுக்கவில்லை.

“ஏதாவது பேசுங்கம்மா..?” தாயை வேண்டினான்.

“அவளை வேண்டாம்னு சொல்லிட்டு.., நீ என்ன செய்யிறதா இருக்க?” அவர் கேட்க,

“அவளை நான் வேண்டாம்னு சொல்லுவதா..?” உயிர் துடிக்க கேட்டவன், “இப்பவும் அவளுக்குப் பிடித்ததை செய்யணும்னுதாம்மா இந்த முடிவையே எடுத்தேன். என்னை நல்லா தெரிஞ்ச நீங்களே இப்படிச் சொன்னால்..” தாயை அமர்த்தி, அவர் மடியில் முகம் புதைத்தவன் குலுங்கி அழுதான்.

“அவளுக்கு இதுதான் பிடித்திருக்கு என்று உன்கிட்டே சொன்னாளா?” அவர் நேரடியாக கேட்க,

“இரக்கத்தால் வரும் அன்பு நிலைக்காதும்மா.., அதோட.., ப்ளீஸ்.., நாம இதைப்பற்றி பேச வேண்டாம். நான் எடுத்த இந்த முடிவால், நான் ஒண்ணும் சந்தோஷப் பாட்டுக்கலை.., அதைமட்டும் சொல்லிக்கறேன்..” தான் செய்வது சரியா, தவறா.., எனத் தெரியாத குழப்பம் கலந்த வலியோடு அவன் உரைக்க, அவருக்கு உருகிப் போயிற்று.

கூடவே.., தன் மகன் அப்படியொன்றும் நிஹாவை வெறுத்துவிடவில்லை என்ற எண்ணம் கொடுத்த ஆறுதல் அதிகமிருக்க, சற்று நிம்மதியானார்.

அவன் அழுவது பொறுக்காமல்.., “சரி.., உன் இஷ்டப்படியே செய்.., ஆனா.., இது உன்னோட வாழ்க்கை என்பதை மட்டும் ஞாபகத்தில் வச்சுக்கோ. உன் சந்தோஷமும்,

நிம்மதியும்தான் எங்களுக்கு முக்கியம்..'' அவனை ஆதரவாக தலை கோதினார்.

சற்று நேரம் அவர் மடியில் புதைந்திருந்தவன், நிஹாசினியிடம் சொல்ல வேண்டி அவளைத் தேடிச் சென்றான். நினைக்கையில் சுலபமாக இருந்த விஷயம்.., அவளிடம் உரைக்கப் போகையில் மிகவும் கடினமாகத்தான் இருந்தது.

அவன் நீண்ட நாட்களுக்குப் பிறகு தன் அறைக்குள் நுழைய, நிஹாசினியோ, குழந்தையை அப்பொழுதுதான் குளிக்க வைத்திருப்பாள் போல.., டவ்வலால் உடல் துடைத்துக் கொண்டிருந்தாள்.

''ம்கும்..'' சற்று நேரம் வரைக்கும் அவள் கவனம் கலையாமல் போகவே, தன் வரவை அவளுக்கு உணர்த்தினான்.

அவன் கனைப்பில் நிமிர்ந்தவள்.., அவனை இமைக்க மறந்து வெறித்தாள். அவள் பார்வையை தாங்கி நின்றவன், அடிமேல் அடி வைத்து அவளை நெருங்கினான்.

அந்த அறைக்குள் அவன் வரவே மாட்டானா? எத்தனையோ நாள் ஏங்கித் தவித்த நிஹாவுக்கு.., அவன் வரவை எண்ணி மகிழத்தான் முடியவில்லை. அவன் கையில் இருந்த கற்றை காகிதம் சொன்னது.., அவன் எதற்காக வந்திருக்கிறான் என்று.

‘உன்னால் முடியுமா..?’ அவள் பார்வை அவனிடம் மௌனமாக கேள்வி கேட்க, உணர்வுகளைத் துடைத்த முகத்தோடு அவளைப் பார்த்திருந்தான்.

தகப்பனின் வரவை உணர்ந்த அலையோ.., சட்டென குப்புற விழப் பார்க்க, கட்டிலின் ஓரத்தில் படுத்திருந்ததால் கீழே விழப் பார்த்தாள். அதைப் பார்த்தவன், ஒரே எட்டில் குழந்தையைக் கையில் தாங்கியவன், நடக்கவிருந்த விபரீதத்தை எண்ணி, ஒரு நொடி தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

அடுத்த நொடியே.., அவளை கீழே இருந்த படுக்கையில் கிடைத்த, அதைத் தாங்க முடியாத குழந்தை அழத் துவங்கினாள். அவனது செய்கையில் வெகுவாக காயப்பட்டுப் போனாலும், முகம் மாறாமல் காத்தாள் நிஹாசினி.

‘உன் அப்பாவை உனக்கு கொடுப்பேன் அலை. எனது எந்த வார்த்தைகள் அவரை காயப்படுத்தி உன்னை தவிர்க்க வைத்திருந்தாலும், என் உயிரையே கொடுத்தேனும் உன் அப்பாவை கொடுப்பேன்..’ ஒரு விதத்தில் அவள் இந்த பிரிவை ஏற்க தயாராகத் துவங்கினாள். ஆனால், அது அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை.

“உன்கிட்டே ஒண்ணு சொல்லணும்..” உரைத்தவன், அவள் கையில் கொண்டுவந்த பேப்பரைக் கொடுக்க, கைகள் நடுங்க அதைப் பெற்றுக் கொண்டாள். ஏற்கனவே தெரிந்த

விஷயம்தான்.., ஆனாலும்.., தன் வாழ்க்கை ஒரு காகிதத்தில் தீர்மானிக்கப்படுவதை நினைக்கையில் இதயம் விண்டு போனது.

‘‘பிரித்துப் பார்..’’ அவன் உரைக்க.., சட்டென அவனுக்கு முதுகு காட்டி திரும்பியவள்.., கண்கள் குளமாக.., தன் உணர்வுகளை இதழ் கடித்து அடக்கி, இதயம் விம்ம.., தொண்டைக்குழியில் தன் துக்கத்தை விழுங்கியவாறு அதைத் திறக்க, அதுவோ.., அவளது எம்பிஏ படிப்புக்கான ஃபாம்(farm).

அதை நம்ப முடியாமல் வெறித்தவள், சட்டென அவன் பக்கம் திரும்பினாள். ‘‘நான் ஃபில் பண்ணிட்டேன்.., உன்னோட சைன் மட்டும்தான் வேணும்..’’ இவ்வளவு நேரமாக அவள் உணர்வுகளை எதிரில் தெரிந்த கண்ணாடியில் தெரிந்த பிம்பத்தின் வழியாக பார்த்துக் கொண்டிருந்தவன், முயன்று தன் உணர்வுகளை கட்டுப் படுத்தினான்.

ஆனாலும், அவனை மீறி.., அவள் கண்களில் தெரிந்த வலியில், ஒரு காதலனாக அவன் மனம் ஒரு ஓரத்தில் நிம்மதி அடைந்தது. ‘என்னை விட்டு பிரிய அவள் விரும்பவில்லை..’ அந்த நினைப்பு கொடுத்த ஆறுதல் அளப்பறியதே.

‘‘ம்..’’ இதழ் கடித்து, தன்னை மீட்டுக்கொண்டு அவள் முனக, அவன் அருகில் இருந்த டீபாயின்மேல் சில பேப்பர்களை வைத்தான்.

“இதையும் பார்..” டீபாயை அவள் பக்கம் நகர்த்தினான்.

‘உங்களால் என் கையிலேயே கொடுக்க முடியாதபொழுது.., நான் மட்டும் எப்படி..?’ விழிகளால் கேட்டவள், அதை கைகளில் எடுத்தாள்.

ஒரு சாதாரண காகிதம்.., இரும்பைப்போல் கனக்க முடியுமா? அது கனத்தது. பேப்பருக்குள் அணுகுண்டை அடைக்க முடியுமா? அதில் இருந்த எழுத்து ஒவ்வொன்றும் ஒவ்வொரு அணுகுண்டாய் அவளைத் தாக்கியது.

“இது..?” இதழ் துடிக்க அவள் வினவ,

“இ..து.” அடைத்த தன் தொண்டையை செருமி மீட்டவன், “இதிலும் உன் சைன் தான் வேணும்..” சாதாரணமாக அவன் உரைக்க முயன்றாலும், வார்த்தைகளில் விரவிய வலியை அவனால் தடுக்க முடியவில்லை.

“ஏன் ராஜ்.., உங்களால் இதை என் கையில் கூட கொடுக்க முடியாத போது.., என்னால் மட்டும் எப்படி..?” கன்னங்களில் கண்ணீர் வழிய, அதே வலியோடு வெளிவந்தன வார்த்தைகள்.

“உடனே சைன் பண்ணணும்னு இல்லை.., உன் படிப்பு முடியும் வரைக்கும் டைம் எடுத்துக்கோ..” கோர்வையாக சொல்ல முயன்றாலும், இடையில் திணறித்தான் போனான்.

“அதுக்குப் பிறகு..?” அதையும் நீயே சொல்லிவிடு.., என அவனிடமே கேட்டாள்.

“நீதான் முடிவு எடுக்கணும்..” பந்தை அவள் பக்கமே தள்ளினான்.

“எனக்கு சொல்லிட்டீங்க.., அலை.., அவளுக்கு என்ன சொல்லப் போறீங்க?” உள்ளம் துடிக்க கேட்டாள். அலையைப் பற்றி அவனிடம் கேட்கக் கூடாது என நினைத்திருந்தாலும், ஒரு தாயாக அவளால் அமைதியாக இருக்க முடியவில்லை.

அவன் பதில் சொல்ல முடியாமல் தடுமாற.., “அவ உங்க வீட்டு வாரிசு என்பதால் உங்களுக்குத்தான் சொந்தம்னு வாதாடுவீங்களா? அப்போ நான்., கழுத்தில் தாலி ஏற முன்னாடியே உங்க உயிரை என் கருவறையில் தாங்கி, எங்கே அம்மாவுக்குத் தெரிந்தால் என்ன ஆகுமோன்னு.., மசக்கை வாந்தியை கூட பயந்து பயந்து எடுத்து, அவளை காத்து உருவாக்கி வளர்த்தேனே..,

“எனக்கு என்ன பதில் சொல்லுவீங்க..? என்னோடவே வச்சுக்க சொல்வீங்களா? அப்போ.., என்னோடவே வச்சுக்க வேண்டியா இவ்வளவு கஷ்டப்பட்டு, அவமானத்தை தாங்கி, உங்க கையால் தாலி வாங்கிகிட்டேன்? சொல்லுங்க..” கண்ணீர்

குரலில் அவள் கேட்ட எந்த கேள்விக்கும் அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

அதில் இருந்த உண்மைகள் அவனை அவ்வளவு சுட்டது. இத்தனை துன்பத்துக்கும் நான்தானே காரணம்.., இப்பொழுதும் தண்டனையை அவளுக்கே கொடுக்கிறேனா..?' அவன் நெஞ்சம் ஊமையாய் அழுதது.

அலையை அவ்வளவு சீக்கிரம் விட்டுக் கொடுக்க முடியாது என அவன் மனம் அடித்துச் சொன்னது. இந்த வீட்டின் ஒட்டுமொத்த சந்தோசம் அவள்.., அவளை விடுத்து..' ஒரு மனம் குமுற, 'அப்படியென்றால் நிஹாசினியை விட்டு விடுவாயா..?' மற்றொரு மனம் முரண்டியது.

அவன் மனப் போராட்டத்தை அவன் முக இளக்கம் காட்டிக் கொடுக்க, "சொல்லுங்க ராஜ்.." அவனைத் தூண்டினாள்.

"அலையை விட்டு.." இதழ் உரைத்தாலும், உன்னையும் விட முடியாதே.., அவன் மனம் ஊமையாய் கதறியது. "இங்கே.., அவ இல்லாமல்.." அவளிடமிருந்து கட்டாயப்படுத்தி அலையை அவனால் வாங்க முடியுமா என்ன? திணறினான்.

"என்னாலும் அலையை கொடுக்க முடியாது ராஜ்..", அவன் அதிர்ந்து நோக்க, சற்று இடைவெளி விட்டவள், " ஆனா.., உங்களுக்கு வாரிசு வேணும்னா நான் பெத்துக் கொடுக்க தயாரா

இருக்கிறேன்..” அவள் உரைக்க, தான் கேட்டதை நம்ப முடியாமல் ஸ்தம்பித்தான் ராஜா.

## பகுதி – 13.

ராஜாவால் தான் கேட்டதை நம்ப முடியவில்லை. 'எனக்கு வாரிசு பெற்றுக் கொடுக்கிறேன் என்றா சொன்னாள்? இல்லையென்றால் என் காதில் தவறாக விழுந்ததா?' தன் செவியைத் தீண்டிய வார்த்தைகளை மீண்டும் ஆராய முயன்றான்.

நிஹாசினிக்கோ.., தன் நேசத்தை வெளிக்காட்டிவிடும் வேகம்.., அவனை விடவே முடியாது என்பதை கொட்டிவிடும் தாக்கம்.., அவனை விட்டு இருக்க முடியாது என்பதை தெரிவிக்கும் தவிப்பு.., அவன் மௌனத்தையும், பாராமுகத்தையும் தாங்க முடியாத பரிதவிப்பு.., அவனையே இமைக்க மறந்து நோக்கினாள்.

அவனுக்குள் சட்டென ஒரு கோபம்.., "எனக்கு வாரிசு வேண்டும் என்றா உன்னை தீண்டினேன்..?" அதில் விரவிய வலி, வேதனை.., 'என் நேசத்தை புரிந்துகொள்ளவே மாட்டாயா என்ற தவிப்பு.., ஹாசினி சோர்ந்து போனாள்.

'உனக்கு வாரிசை பெற்றுக் கொடுக்கிறேன் என்றால், உன்னோடு இணைந்து வாழ விரும்புகிறேன் என உனக்கு தோன்றவில்லையா? காதல் இல்லாமல் ஒரு பெண்ணால் இந்த வார்த்தையை சொல்ல முடியுமா? வெறும் உடல் அளவில் சேர்ந்து ஒரு குழந்தையை கொடுக்க ஆணால் முடியும், ஆனால், மனதில் காதல் இல்லாமல் ஒருவனுக்கு வாரிசை பெற்று கொடுக்கிறேன் எனச் சொல்ல ஒரு பெண்ணால் முடியாதே.., அது ஏன் உங்களுக்கு புரியவில்லை..' அவள் எண்ணங்கள் அனைத்தும் விழிகளில் வழிய,

ராஜா அவள் முகத்தை நோக்க.., அதில் தெரிந்த பாவத்தில் நிலை தடுமாறிப் போனான். 'எதையோ தவறாக சொல்லிவிட்டேன்.., புரிந்து கொண்டேன்..' உணர்ந்தவன், சட்டென அவளுக்கு முதுகு காட்டி திரும்பி, "அவசரத்தில் எடுக்கும் எந்த முடிவும் சரியாக இருக்காது ஹாசினி.." 'என்ன தவறாக சொன்னேன்?' அவன் சிந்தை துழாவ,

"இதுவே ரொம்ப லேட் ராஜ்.." என்னை புரிந்துகொள்ளேன்.., அவள் குரல் மன்றாடியது.

“ஆமா ரொம்ம்ம்ப லேட்..” அவள் சொன்னதையே அழுத்தமாக திருப்பிச் சொன்னவன், வேகமாக அங்கிருந்து வெளியேறினான்.

தான் எதைச் சொன்னால்.., அவன் எதை சொல்லிச் செல்கிறான் என்பதை எண்ணியவளுக்கு அழுகை மட்டுமே துணை ஆனது. கல்லூரிக்குச் செல்ல மாட்டேன் என அவள் சொல்ல ஒரு நொடி போதாது.., ஆனால்.., அதன் பிறகு.., மீண்டும் துவங்கிய இடத்துக்கே வந்து நிற்கவேண்டிய தன் நிலையை எண்ணி துவண்டு போனாள்.

அழும் குழந்தையை அள்ளி அவள் பசியாற்றத் துவங்க, தன் மார்பில் முட்டிய குழந்தையை ஆசையாகப் பார்த்திருந்தாள். ‘இவளை விட்டு..’ குழந்தையை தன் மார்போடு அழுத்த, குழந்தை மூச்சுக்கு சற்று திணறித்தான் போனாள்.

‘ம்கும்..’ அவள் திமிற, அதன் பிறகே தன் தவறு உணர்ந்து பிடியைத் தளர்த்தினாள்.

“அம்மாவை விட்டு இருந்துடுவியா அலை..?” என்னவோ அவள் விடை சொல்வாள் என கேள்வி கேட்க, தாய் தன்னிடம் பேசுவதை உணர்ந்து, பசியாறுவதை விடுத்து அவள் முகம் பார்த்து, தன் பொக்கைவாய் திறந்து சிரித்தாள்.

அதைப் பார்த்து மேலும் அவள் கண்ணீர் பெருகியதே தவிர குறையவே இல்லை.

தன் அறைக்குள் சென்று அடைந்த ராஜாவுக்கோ.., தேகம் முழுவதும் ஒரு பரபரப்பு. நீண்ட நாட்களுக்குப் பிறகு, தன் உணர்வுகள் வெளிக்காட்டும் விதம்.., மேஜைமேல் இருந்த தண்ணீரை வேகமாக எடுத்துப் பருகினான்.

தேகத்தின் கொந்தளிப்பை நீர் அடக்குமா என்ன? ‘உங்களுக்கு வாரிசு வேணும்னா நான் பெத்துக் கொடுக்க தயாராக இருக்கிறேன்..’ நிஹாரசினியின் வார்த்தைகள்.., இதயத்தை இம்சித்தது.

‘ஆண்டவா.., என்ன இது..?’ அவள் உரைத்த அந்த நிமிடம்.., காற்றுகூட புக முடியாத அளவு அவளை இறுக்கி.., அவள் இதழ்களுக்குள் புதையத்

துடித்த தன் நிலை.., அதைத் தவிர்க்க முடியாமல் திண்டாடித்தான் போனான்.

அதையும் மீறி.., அவளது பழைய பேச்சுக்கள் மேலெழ, அவசர முடிவு வேண்டாம் என உரைத்தான். மேலும்.., தன்னை இழந்துவிடக் கூடாது என்பதற்காக அவள் எடுத்த முடிவாகவே அதை நினைக்க முடிந்தது. தாலியை காத்துக்கொள்ள அவள் போராடும் போராட்டமாகவே அவனுக்கு அது தெரிந்தது.

முன்பு ஒரு முறையேனும் தன் காதலை அவள் வெளிப்படுத்தியிருந்தால் இப்படி எண்ணியிருக்க மாட்டானோ என்னவோ.., ஆனால் இப்பொழுது, காலம் கடந்த அவளது வார்த்தைகள்.., ஏற்க முடியாமல் அவனை கொன்று கூறு போட்டது.

அவள் கல்லூரிக்கு போகமாட்டேன் எனச் சொல்வாளா..? அவனது ஒரு மனம் அவளைப் பிரிய முடியாமல் புலம்பியது என்னவோ உண்மை. அதை அவள் செய்யாமல் போகவே.., பெரும் ஏமாற்றமாக உணர்ந்தான்.

மனித மனதின் விந்தை.., அவளை சில நாட்கள் விலக்கி வைக்க நினைப்பதும், அவள் விலகப் போகையில் தவிப்பதும்.., தன்னை நினைத்தே அவனுக்கு கோபமாக வந்தது.

'இப்போ வாழனும்னு சொல்றவ.., அப்போ ஏன் சொல்லலை..?' அவன் கண்களும் கலங்கியது. 'தாலியை காத்துக்கொள்ள என்று அவள் எதையும் செய்ய வேண்டாம்..' ஆத்திரமாக தன் கன்னத்தில் வழியத் துடித்த நீரை சுண்டி எறிந்தவன், கீழே இறங்கிச் சென்றான்.

அடுத்த இரண்டு நாட்களில் நிஹாசினியின் முன்பு கூட வராமல் அவன் விலக, அவளோ.., குழந்தையை மடியை விட்டு இறக்கவும் மறுத்தாள். முன்பானால் பசியாற்றிவிட்டு சுஜாவிடமோ, தாரிணியிடமோ குழந்தையைக் கொடுப்பவள், அந்த நாட்களில் உறங்கும் குழந்தையைக் கூட மடியில் இருந்து இறக்கவில்லை.

அவள் நிலையைப் பார்த்த தாரிணியும், சுஜாவும் கலங்க, "நிஹா.., இப்படியே இருந்தால் எப்படி? உன் மனசை கொஞ்சம் தேற்றிக்கொள்.." சுஜாவால் சொல்லத்தான் முடிந்தது.

"என்னால் முடியலையேக்கா.., நாளைக்கு நான் விழுப்புரம் கிளம்பணும்.., அதை நினைத்தாலே.." தேகமும் குரலும் நடுங்க அவள் குழந்தையை அணைத்துக்கொள்ள, அதை கண்கொண்டு பார்க்க முடியவில்லை.

"காலையில் காலேஜ் போயிட்டு, சாயங்காலம் வந்துவிடுவேன் என்றால் கூட பரவாயில்லை. ஆனா.., ஒரேடியா.." போகவேண்டும் என்ற கட்டாயத்தில் இருப்பது என்பது வேறு.., போகச்சொல்லி கட்டாயப்படுத்துவது என்பது வேறாயிற்றே.

"இவ்வளவு பாசம் இருக்குறவ, முதல்ல எப்படி குழந்தைக்கு தாய்ப்பால் கூட கொடுக்க மாட்டேன்னு சொன்னியாம்.." தாரிணி ஆற்றாமையாக கேட்க,

"தாரிணி.., இப்போ எதுக்கு அதெல்லாம்..?" நிஹாவே வேதனையில் இருக்கையில், அவளை மேலும் காயப்படுத்துவதுபோல் கேட்டால்.., எனவே அவளை அடக்கினார்.

"நீங்க கேட்டு மறுத்த நான்.., என்னைக்காவது அவர் குழந்தையை தூக்கி வந்தால் மறுத்திருக்கிறேனா?" கலங்கிய குரலில் கேட்க, தாரிணி திகைத்தார்.

"என்ன சொல்ற..?"

"குழந்தையை அவர் என்னைக்காவது ஆசையா தூக்கி கொஞ்சி பாத்திருக்கீங்களா? அதுக்கு காரணம் என்னோட பேச்சுதான்.., அதை நான் இல்லன்னு சொல்லலை.., அதுக்காக.., அவரை அப்படியே விட்டுட முடியுமா? அதான்.." முதல் முறையாக தன் செய்கைக்கு பின்னால் இருந்த காரணத்தை விளக்க, பெண்கள் இருவரும் வாயடைத்துப் போயினர்.

"நிஹா.., ரொம்ப ஈசியா செய்திருக்க வேண்டிய விஷயத்தை, இவ்வளவு சிக்கலா மாத்தி வச்சுட்டியே. அவனை மாத்தணும்னு நீ நினைத்தது தப்பில்லை. ஆனா.., அதற்காக கையாண்ட விதம்தான் தப்பு.." சுஜா உரைக்க, ஆமோதிப்பாக தலை அசைத்தாள்.

"அக்கா.., எனக்கு ஒரு சந்தேகம்.., இவ அவனை லவ் பண்ணிதானே கல்யாணம் பண்ணிகிட்டா..? லவ்வை தவிர வேற எல்லாம் நடந்திருக்கு

INFAA ALOCIOUS

இவங்க கல்யாண வாழ்க்கையில்.., பெருமாளே.., இவளை என்ன செய்யன்னே தெரியலை.." தாரிணி வாய்விட்டே புலம்பினார்.

"நீங்க புருஷன் பொண்டாட்டியாவாவது வாழ்ந்தீங்களா இல்லையா?" அவருக்கு அவ்வளவு ஆத்திரம்.

"தாரிணி என்ன இது..?" கணவன் மனைவிக்கிடையே இருக்கும் நெருக்கத்தை ஆராய்கிறாரே என கண்டிக்கும் குரலில் அழைக்க, தன் தவறை உணர்ந்து அமைதியானார்.

அதே நேரம்.., நிஹாவின் அமைதி, இரு பெண்களையும் அதிர்ச்சியின் உச்சத்துக்கு அழைத்துச் சென்றது.

"நிஹா.." ஆத்திரமாக தாரிணி எதையோ சொல்லத் துவங்க, வேகமாக அவள் கரத்தை பிடித்து அழுத்திய சுஜா, கண்களை உருட்டி, 'எதுவும் சொல்லாதே..' என தலை அசைத்தார்.

தாரிணியை அடக்கி விட்டாலும், ஒரு வருடத்துக்கும் மேலாக ஒற்றை படுக்கையறையில் கணவன் மனைவிக்கான அவர்களது வாழ்க்கை எப்படி இருந்திருக்கும் என்பதை நினைத்தவருக்கு மனம் ஆறவில்லை.

கணவன் மனைவி தாம்பத்தியம் இரு உடல்களுக்கான இணைப்பு மட்டுமில்லை, மாறாக.., அது ஒரு தேடல்.., அது ஒரு ஆத்மார்த்த நெருக்கம், அன்பின் உச்சம்.., நீ என் தேவை, தேடல், தீண்டல் என்ற அர்ப்பணிப்பு. நீயின்றி வேறில்லை என்ற பிணைப்பு.., அது ஒரு ஆத்மார்த்த பந்தம்.., இப்படி எதுவும் இல்லாமல்....

வெகு சுலபமாக ராஜா பிரிவை நாட இதுவும் ஒரு காரணமோ? தாரிணியால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. இயற்கையின் படைப்பில் பெண்ணின் உலகம் உணர்வுகளால் பிணைக்கப்பட்டது என்றால், ஒரு ஆணுக்கு பெரும்பாலும் உணர்சிச்களால் பின்னியதே.

ஒரு பெண்ணோடு மனம் ஒத்து இருந்தாலும், ஒரு உடல் சங்கமம் இல்லாமல் ஆண் பெண் வாழ்க்கை நிறைவுற்றது என்பது ஆணின் எண்ணம். அப்படியிருக்கையில், இவர்கள் வாழ்க்கையை எந்த விதத்தில்

சேர்ப்பது? சுஜாவுக்கும், தாரிணிக்கும் என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

சுஜா தாரிணியிடம், "கோபமாய் எதையும் சொல்லிவிடாதே.., அவளே நொந்து போய் இருக்கா. வேற ஏதாவது சொல்லணும்னா சொல். இல்லையா, வா போகலாம்.." அவருக்கு மனம் பாரமாய் கனத்தது.

சில நொடிகள் மௌனத்தில் கழிய, மூன்று பெண்களும் தெளிந்தார்கள். "அக்கா.., நீங்க கிளம்புங்க.., நான் இவளுக்கு சில விஷயம் சொல்லிக்கொடுக்க வேண்டி இருக்கு.." அவள் உரைக்க,

"ஏய்.., அவ சின்னப் பொண்ணு.., ஏற்கனவே குழப்பத்தில் வேற இருக்கா. நீவேற எதையாவது பண்ணி வைக்காதே.." சுஜா கண்டித்தார்.

"ம்கும்.., சின்னப்பொண்ணு.., நீங்கதான் மெச்சிக்கணும்.." அவர் நொடித்துக்கொள்ள, நிஹாவின் முகம் மாறிவிட்டது.

'அங்கே பார்..' சுஜா, பார்வையால் அவளைச் சுட்ட,

"நிஹா.., முதல் விஷயம்.., இந்த வரிகளுக்கு நடுவில் அர்த்தம் கண்டுபிடிக்கிறதுன்னு இங்கிலீஷ்ல ஒரு சேயிங் சொல்லுவாங்க.., அதை அடியோட நிறுத்திடு. எல்லாத்தையும் எதார்த்தமா எடுக்க படி. ராஜா கோபத்தில் ஏதாவது சொன்னால் கூட, கொஞ்ச நாள்.., அதை ஈசியா எடுத்துக்கோ.., பிறகு.." இன்னும் விலாவரியாக விளக்க, திறந்தவாய் மூடாமல், அதிர்ச்சியாக அனைத்தையும் கவனித்திருந்தாள்.

இடை இடையே அவஸ்த்தையாக எச்சில் விழுங்க.., "தாரிணி போதும்.." சுஜாவுக்கே வெட்கமாகப் போய்விட்டது.

"என்னக்கா போதும்..? இவளுக்கு ஏதாவது ப்ரண்ட்ஸ் இருந்தால் அவங்களாவது சொல்லிக் கொடுப்பாங்கன்னு எதிர்பாக்கலாம். எங்கே.., இவதான் யார்கிட்டேயும் வாயைத் தொறந்து பேச மாட்டேங்கறாளே.., நாமதான் ஏதாவது பண்ணணும்.., அதான்.." போலியாக அலுத்துக் கொண்டார்.

"அங்கே பார்.., உன்னை அரண்டுபோய் பாக்கறா.." சுஜா சிரிப்பாய் உரைக்க, நிச்சயம் நிஹாவின் முகம் அப்படித்தான் இருந்தது.

"ஏய்.., உனக்காதான் புரியலை.., சொல்றதாவது புரியுதா இல்லையா..?" அவளை உலுக்கினார்.

"அக்கா.., அப்போ மாமா உங்களையே சுத்திவர இதுதான் காரணமா..?" ஆச்சரியம், அதிர்ச்சி கலந்து வினவ, தன் தலையிலேயே அடித்துக் கொண்டார்.

"இந்த.., அடிமடியிலேயே கை வைக்கிற விஷயம் ஒண்ணு சொல்லுவாங்களே.., அது இதுதான்.." அவர் கோபமாக,

"ஐயோ.., நான் சும்மாதான்.." அவள் பதற, தாரிணியும், சுஜாவும் சிரித்துக் கொண்டார்கள். என்னவோ நீண்ட நாட்களுக்குப் பிறகு சற்று இலகுவாக சிரித்தாள் நிஹாசினி. அதைப் பார்த்த பெண்கள் இருவரும், அவளை ஆளுக்கொரு பக்கமாக அணைத்துக் கொண்டார்கள்.

"நிஹா.., தாரிணி சொல்வது எல்லாம் அவளோட பக்கத்து வாதம்தான். ஒரு வேளை அது உனக்கு சரி வராமல் போகலாம். ஆனா.., உன் ராஜாவை உன்னால் ஸ்டடி பண்ண முடியும். அதைச் செய்.., நாளைக்கு குழந்தையை உன்னோட கூட்டி போ.., அவன் மறுத்தால் பிறகு பார்க்கலாம்.." அவர் உரைக்க, அதை அப்படியே கேட்டுக் கொண்டாள்.

மறுநாள் காலையில் அவன் எழுந்து, அவளையும் தயாராகச் சொல்லவே.., "எத்தனை மணிக்கு கிளம்பணும்..?" அவனிடம் கேட்டாள்.

"எட்டு மணிக்கு கிளம்பினால் அங்கே போக சரியா இருக்கும்.." உரைத்தவன் சென்றுவிட்டான்.

தானும் குழந்தையோடு எழுந்து தயாரானவள், ஒரு புடவையை எடுத்து கட்டிக் கொண்டாள். அதைப் பார்த்தவன்.., "சுடிதார் போட்டிருக்கலாமே.., டிராவல்க்கு அதுதானே வசதியா இருக்கும்.." அவன் கேட்க,

"இல்ல.., புடவையே இருக்கட்டும்.." குழந்தையை தூக்கிக் கொண்டாள்.

அவர்கள் கீழே வர.., "ராஜா.., முதல் முறையா வெளியே சேர்ந்து போறீங்க.., கோயிலுக்கு போயிட்டு போங்க.." சுஜா உரைக்க, சம்மதமாக தலை அசைத்தான்.

கோவிலுக்கு சென்றுவிட்டு.., கார் பைப்பாசில் வேகம் எடுக்க, குழந்தையோ அவள் கரத்திலேயே உறங்கி விட்டிருந்தாள்.அதைப் பார்த்தவன், காரை ஓரம்மாக நிறுத்தி, "குழந்தையை பின்னாடி படுக்க வை.." அவன் உரைக்க, மறுக்காமல் அதைச் செய்தாள். அதற்குள் அவள் அமர்ந்திருந்த சீட்டை அட்ஜஸ் செய்தவன்.., "நீயும் கொஞ்ச நேரம் தூங்கு.." அவன் உரைக்க, அவன் கையை கட்டிக்கொண்டு, அவன் தோளில் சாய அவள் உள்ளம் பரபரத்தது.

இந்த அக்கறை.., தன்னை பார்த்தது முதல்.., தனக்காக ஒவ்வொன்றையும் அவர் பார்த்து பார்த்து செய்த விதம்.., இன்றும், அவன் கோபத்தில் இருக்கும்பொழுதும் அது தொடர, அவன் அன்பில் அவள் மனம் நனைந்தது.

"இல்ல.., எனக்கு தூக்கம் வரலை.." அவள் முனக,

"நைட் பாப்பா தூங்கவே இல்லையே.., பிறகு எப்படி வராமல் போகும்.., கண்ணை மூடு, தூக்கம் தன்னால் வரும்.." அவன் கண்டிப்பாய் உரைக்க, 'அப்போ இவரும் தூங்கலையா..?' எண்ணியவள் அவனைப் பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தாள்.

எவ்வளவு நேரமோ தெரியாது.., குழந்தையின் சிணுங்களில் அவள் கண் விழிக்க, "அலை.., அம்மா இதோ இருக்கேன்டா செல்லம்.." பின்னால் திரும்பி குழந்தையை எட்டி எடுத்துக் கொண்டாள்.

"இடம் வந்துடுச்சா..?" குழந்தையை தோளில் போட்டு தட்டியவாறு அவனிடம் கேட்க,

"இன்னும் அரைமணிநேரமாகும்.." உரைத்தவன் காரை பறக்க விட்டான். அது ஆடி கார் ஆகையால் உள்ளே எந்தவிதமான அதிர்வுகளும் தெரியவில்லை. குழந்தையோ.., பசியில் சிணுங்க.., முடிந்த அளவுக்கு அவளை சமாதானப் படுத்தினாள்.

குழந்தையோ.., அவள் மடியில் படுத்து.., முந்தானையை விலக்குவதில் முனைய, இதற்குமேல் முடியாது என்பதுபோல்.., "இந்த சீட்டை கொஞ்சம் ஸ்ட்ரெயிட்டா வைங்களேன்.." அவள் கேட்டதைச் செய்ய, தன் காலின்

அருகில் இருந்த பையில் இருந்து பால் புட்டியில் அவளுக்கு பால் கலந்து கொடுத்தாள்.

குழந்தையோ அதை கைகளால் தள்ளி விட்டவள்.., அவள் முந்தானைக்குள் தன் முகத்தைப் புதைக்க, குழந்தையின் அழுகை அதிகரிப்பதைப் பார்த்தவன், "காரை நிறுத்தணுமா..? கார் டிராவல் அவளுக்கு ஒத்துக்கலையா..?" அவனுக்குப் புரியவில்லை.

"இல்ல.., வேண்டாம்.." அவனுக்கு பதில் கொடுத்தவள்.., "த்.., த்..த்.., என் செல்லம் இல்ல.., கொஞ்சம் குடிங்க.." குழந்தையை சமாதானப்படுத்த எதுவும் வேலைக்கு ஆகவில்லை.

குழந்தை பெரும் குரலில் வீறிட.., காரை ஓரமாக நிறுத்தியே விட்டான். "ஏன் இப்படி அழறா..? உடம்பு சரியில்லையா..? ஜுரம் அடிக்குதா..?" தவித்துதான் போனான்.

"நல்லாத்தான் இருக்கா.." பால் புட்டியை அருகில் வைத்துவிட்டு, தோளில் போட்டு தட்ட.., பசியில் இருக்கும் குழந்தை சமாதானம் ஆகுமா என்ன?

"நல்லாத்தான் இருக்கான்னா.., பிறகு ஏன் அழறா? வீட்டுக்கு திரும்பி போய்டலாமா? ஹாஸ்பிட்டல் போகணுமா..?" மூடிய காருக்குள் அவன் என்னதான் செய்ய..?

"ஹாசினி.., ஏதாவது சொல்.." அவள் அமைதி அவனை கோபப்படுத்தியது.

இதற்குமேல் தயங்க எதுவும் இல்லை என முடிவெடுத்தவள்.., குழந்தையை மடியில் கிடத்தி.., தன் உடையை சற்று தளர்த்தி விட்டு, குழந்தையை தன் மார்போடு அழுத்த.., சிறு சப்புகொட்டலோடு பால் அருந்தத் துவங்கினாள்.

ஒரு நொடி, அவனுக்கு என்ன சொல்வது என்றே தெரியவில்லை.

குழந்தை தன் காலால், அவன் கையை உதைக்க, அப்பொழுதுதான் அவ்வளவு நேரமாக அவளை வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்தவனாக தன் பார்வையை வேகமாக நிஹாசினியின் முகத்துக்கு திருப்பினான்.

அவளோ.., ஜன்னல் பக்கம் முகத்தை திருப்பிக்கொண்டு அமர்ந்திருக்க, 'இதற்குத்தான் புடவை கட்டினாளா..?' எண்ணியவன்.., குழந்தையின் ஷூ அணிந்திருந்த காலை மென்மையாக பற்றிக் கொண்டான்.

"இதை முதலிலேயே செய்யிறதுக்கு என்ன..? குழந்தையை இப்படி அழ விடணுமா..?" ஒரு வேளை தன்னக்கு முன்னால் குழந்தைக்கு பசியாற்ற தயங்கினாளோ.., என்ற கோபம் அவனிடம்.

அந்த கோபத்தை விடுத்து, குழந்தைக்கு நிஹாரசினியின் அத்தியாவசியத்தை அறிந்திருந்தால் வரப்போகும் அனர்த்தங்களை தவிர்த்திருக்கலாமோ? இல்லையென்றால் அவனுக்கு விதியும் சதி செய்ததோ?

"நான் எதார்த்தமா செய்யப்போய்.., அதை நீங்க வேற மாதிரி புரிஞ்சுகிட்டா., நான் என்னதான் செய்யட்டும் ராஜ்.." அவள் தன் அழுகையை அடக்கப் போராடுவது அவள் குரலில் தெரிந்தது.

"ஷிட்.., ஷிட்.." அடக்கப்பட்ட கோபத்தில் ஸ்டியரிங் வீலை குத்தியவன், தன் கோபத்தை அடக்கப் போராடினான்.

"இப்படி ஒவ்வொரு விஷயத்திலும் போராடியே நம்ம வாழ்க்கை முடிஞ்சுடுமா ராஜ்.." அவள் கேட்க.., அவ்வளவுதான்.., காரை அசுர வேகத்தில் எடுத்தவன், மறந்தும் அவள் பக்கம் திரும்பவில்லை.

கல்லாக இறுகி இருந்த அவன் தாடையைப் பார்க்கவே சிறு பயமாகத்தான் இருந்தது. அதன் பிறகு அவர்களுக்கு நடுவில் பேச்சு என்பதே இருக்கவில்லை. கல்லூரிக்குச் சென்று.., அங்கே பீஸ் கட்டிய பிறகு, ஹாஸ்டலில் ரூம் இல்லை எனச் சொல்ல, அவனோ தனி அறை வேண்டும் என வாதிட, இறுதியில் மதன் தலையிட்டு, லெச்சர் அறையில், ஒன்றை ஒதுக்கச் சொன்னார்.

அங்கேயும் ஒரு ஆசிரியயை இருப்பார் என உரைக்கவே.., தான் அவரோடு இருந்து கொள்வதாக அவள் உரைக்க, அரை மனதாக சம்மதித்தான். ஆனாலும், மதனிடம் அதிகமாக சாடிவிட்டே அடங்கினான். அவன் கோபம் பார்த்து சற்று மிரண்டுதான் போனாள்.

இன்னும் இரண்டு நாட்களில் வருவதாக சொல்லிவிட்டு கிளம்பினார்கள்.

அங்கிருந்து கிளம்ப காரில் ஏறிய பிறகும் அவன் கோபம் அடங்கவில்லை. “ராஜ்.., அதான் அட்ஜஸ் பண்ணிக்கறேன்னு சொல்லிட்டேனே..” அவனை சமாதானப்படுத்த முயன்றாள்.

“நீ அட்ஜஸ் பண்ணிட்டு போறதுக்கா நான் இவ்வளவு கஷ்டப்படுறேன்” இரு பொருள்பட உரைக்க, தோய்ந்துபோய் இருக்கையில் அமர்ந்து கொண்டாள். ‘இந்த அக்கறை, இந்த அன்பு.., அதை இழக்கப் போகிறோம்’ என்பதை நினைக்கையில் நெஞ்சம் வலித்தது.

கார் அதி விரைவில் பயணிக்க.., மதிய உணவைக் கூட உண்ண மறுத்தவளை பிடிவாதமாக உண்ண வைத்து அழைத்து வந்தான். அப்பொழுதும் அவன் நேசம் நெஞ்சை நனைத்தது. சென்னையை நெருங்குகையில்.., “ராஜ்.., அம்மா வீட்டுக்கு அழைச்சுட்டு போறீங்களா..?” அங்கே நிலவிய மௌனத்தை கலைத்தாள்.

அவள் கண்ணால் பார்த்தாலே அந்த ஆசையை நிறைவேற்றுபவன்.., அவள் வாய் விட்டு கேட்டால் சும்மா இருப்பானா? மறுக்காமல் அழைத்துச் சென்றான். விஷயத்தை கேள்விப்பட்ட துளசி, ஒரு வார்த்தை கூட அவளிடம் பேசவில்லை.

“அம்மா..” தாயைத் தேடும் கன்றாக அவள் அழைக்க, “அந்த ஆண்டவன் இதையெல்லாம் தாங்குற சக்தியை உனக்கு கொடுக்கணும்னு வேண்டிக்கறேன்..” அவள் தலையை ஆதரவாக கோத, அவர் மடியில் தலை வைத்து படுத்துக் கொண்டாள்.

அறைக்கு வெளியே.., வினோ, அலையோடு விளையாடியவள், “மாமா.., அலை அப்படியே உங்களை மாதிரி.., எப்படி சிரிக்கறா பாருங்க.., சரியான அப்பா கோண்டு.., பாருங்க.., உங்ககிட்டேயே வரணுமாம்..” வாய் ஓயாமல் பேசிக் கொண்டிருந்தாள்.

“வினோ.., படிப்பெல்லாம் எப்படி போகுது..?” அவன் கேட்க, “அதான் எல்லாம் நீங்க பக்காவா ஏற்பாடு பண்ணி கொடுத்திருக்கீங்களே.., தூங்க கூட செய்யாமல் படிக்கறேன். உங்க பேரை காப்பாத்தணுமே.., எனக்கு

அப்பா இல்லாத குறையே தெரியலை மாமா.., நானும் அலை மாதிரி இருந்திருக்கலாம்னு தோணுது.." ஏக்கமாக உரைக்க,

"இப்போ நீயும் எனக்கு இன்னொரு அலைதான் வினோ.." அவள் தலையை பிடித்து ஆட்டியவன், தன் அருகிலேயே அவளை இருத்திக் கொண்டான்.

"மாமா.., வெளியே போகலாமா..? ரொம்ப நாள் ஆச்சு.." ஏக்கமாக கேட்டாள்.

"சரி வா.." துளசியிடம் உரைத்துவிட்டு அவளை அழைத்துச் சென்றான். அவர்களை ஏக்கமாகத் தொடர்ந்தது நிஹாவின் பார்வை. அன்று அவர்கள் அங்கேயே தங்க.., நீண்ட நாட்களுக்குப் பிறகு, நிஹாவோடு ஒற்றை அறையை பகிர்ந்தான்.

அவன் உறங்கிய பிறகும்.., அவன் முகம் பார்த்தவாறு விழித்திருந்தாள் நிஹா. இப்படி ஒரு சந்தர்ப்பம் இனிமேல் தனக்கு கிடைக்குமா என்பது அவளுக்குத் தெரியவே இல்லை.

INFAA ALOCIOUS

## பகுதி – 14.

காலையில் எழுந்தது முதல் நடைபிணமாய் உலாவிக் கொண்டிருந்தாள் நிஹாரசினி. இன்றைக்கு கல்லூரிக்குச் செல்ல வேண்டிய நாள். இன்றைக்குப் போனால் திரும்பி வர ஒரு வாரத்துக்கு மேல் ஆகலாம். அதைவிட.., பாதி செமஸ்டரில் செல்லுகையில் நோட்ஸ் எடுக்கவே நாள் ஆகலாம்.

அப்படி இருக்கையில், வார இறுதி நாளில் கூட வர முடியுமா என்பது கேள்விக்குறியே. சுஜா குழந்தையை தூக்கிக்கொண்டு வந்துவிடுவேன் எனச் சொன்னாலும்.., அவள் எப்படி பசியாறுவாள் என எண்ணுகையிலேயே மனம் கனத்துப் போனது.

கிச்சனுக்கு குழந்தையை தூக்கிச் சென்றவள்.., "லஷ்மி.., குழந்தைக்கு வேளா வேளைக்கு பால் கலக்கிக் கொடு.., குளிக்க வைக்கும்போது பாத்து பண்ணு. காலுக்கு எண்ணெய் கொஞ்சம் நல்லா தேய்ச்சு நீவி விடு.." இதுவரை ஆயிரம் முறையாவது இதைச் சொல்லிவிட்ட நிஹாவை, கனிவு போங்க பார்த்தாள் லஷ்மி.

"அம்மாடி.., நான் பாத்துக்கறேம்மா.." அவளும் பொறுமையாகவே ஒவ்வொரு முறையும் பதில் கொடுத்துக் கொண்டிருந்தாள்.

"நீ பாத்துப்பன்னு தெரியும்.., ஆனாலும்.." பாழும் மனம் கேட்கவில்லையே.., மனம் ஊமையாய் அழுதது.

"என்னத்துக்கும்மா இந்த கஷ்டம்..? பேசாம அங்க போகலன்னு தம்பிகிட்டே ஒரு வார்த்தை சொல்லிடுங்களேன்.." அவள் படும் பாடு தாளாமல் சொல்லியே விட்டாள்.

"இல்.." தன் அழுகையை அவளுக்கு காட்டாமல் ஓடியே போனாள். லஷ்மியும் சுஜாவிடமும், தாரிணியிடமும் அவள் வரம்பையும் மீறி சொல்லிப் பார்த்துவிட்டாள். அவளால் முடிந்தது அவ்வளவே.., ஒரு பெருமூச்சை வெளியேற்றியவள், வேலையைத் தொடர்ந்தாள்.

INFAA ALOCIOUS

'எப்படி இருந்த வீடு.., இந்த வீட்டில் அந்த பழைய சந்தோஷமே வராதா..' எண்ணியவள், கலங்கிய தன் கண்களை முந்தானையில் துடைத்துக் கொண்டாள்.

நிஹாரசினியோ, குழந்தைக்கு பசியாற்றும் விதத்தில் நொடிக்கொருமுறை குழந்தையை கவனிக்க, ஒருமுறை பசியாறிய குழந்தை, அடுத்த ஒரு மணி நேரத்திற்கு முன்பாக எப்படி பால் குடிக்கும் என்பதைப் பற்றியெல்லாம் அவள் சிந்திக்கும் நிலையில் இல்லை.

குழந்தையை வாங்க காத்திருந்த தாரிணிக்கு.., கண்கள் கலங்குவதை தவிர்க்கவே முடியவில்லை. இறுதியாக நேரம் செல்லவே.., "அக்கா.., குழந்தை..., பாத்துக்கோங்க.." குழந்தை முகத்தில் ஆயிரம் முத்தமிட்டு அவள் கரத்தில் கொடுக்க,

தாய் தன்னைவிட்டு செல்வதை உணர்ந்தாளோ என்னவோ.., சட்டென எட்டி தாயின் சுடிதார் துப்பட்டாவை பற்றிக் கொண்டாள். அவள் செய்கையில் அழுகை முட்ட, சட்டென மீண்டும் குழந்தையை வாங்கியவள், தன்னோடு இறுக்கிக் கொண்டு கண்ணீர் வடித்தாள்.

இவையெல்லாம் பார்க்க முடியும் என்றே தோன்றாமல்.., அன்று காலை முதல் அறையை விட்டு வெளியே வரவே இல்லை ராஜா.

அவளை முதல்நாள் கல்லூரியில் சேர்க்கச் சென்றவன், இன்று டிரைவரை அனுப்ப, நிஹாசினிக்கோ துக்கம் தொண்டையை அடைத்தது.

"நிஹா.., டைம் ஆகிட்டே இருக்கு.." மனமே இல்லாமல் நினைவூட்டினாள் தாரிணி.

"ம்.." குழந்தையை அவள் கரத்தில் கொடுத்தவள்.., "அவர்.." தன்னை மீட்டுக்கொள்ள போராடியவளாக கேட்டாள்.

"அவன் ரூமை விட்டு வெளியே வரவே இல்லை.., நீ போய் பாரு.." குழந்தையை வாங்கிக்கொண்டு அகன்றாள்.

அவன் அறைக்குச் செல்ல அவள் கால்கள் பின்னியது. தன்னை கொண்டு விட வராமல் அவன் தவிர்க்கும் விதம் அவளுக்குப் புரியாமல் இல்லை.

அதற்காக.., தன்னை தனிமையில் அனுப்புவது மட்டும் சரியா? மனம் ஊமையாய் அழுதது.

அவன் தங்கியிருந்த அறைக் கதவைத் தட்டியவள், அவனைத் தேடிச் செல்ல, பால்க்கனியில், அவளுக்கு முதுகு காட்டி நின்றிருந்தான். அடிமேல் அடி வைத்து அவனை நெருங்க.., மனமோ.., அவள் அனுமதி இன்றியே ஓடிப்போய் அவன் நெஞ்சில் விழுந்து கதறியது.

மனதின் சக்தி அவளுக்கு இல்லையே.., நடை தள்ளாட அவனை நெருங்கியவள், தன்னை திடனாக்கிக் கொள்ள, ஆழ்ந்து மூச்சுக்களை எடுத்துக் கொண்டாள்.

“ராஜ்..” மெதுவாக அழைக்க, சட்டென அவள் பக்கம் திரும்பினான்.

உணர்வுகளைத் துடைத்து வைத்திருந்தது அவன் முகம். கண்கள் மட்டும் சிவந்திருக்க, அவனிடம் அதற்குமேல் எந்த வித்தியாசமும் இருக்கவில்லை.

“நான் கிளம்பறேன் ராஜ்..” திடனாக சொல்ல முயன்றாலும், குரல் ஒத்துழைக்க மறுத்தது.

அமைதியாக தலை அசைத்தவன் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. “நான் கிளம்பறேன்னு சொன்னேன் ராஜ்..” ஏதாவது சொல்லேன்.., அவள் குரல் கெஞ்சிற்று.

“ம்.., சரி..” அவன் முனக, “அவ்வளவுதானா..?” கேட்டவள் அவனை நெருங்க, அவனால் பதில் சொல்ல முடியவில்லை.

இந்த பிரிவு இவ்வளவு வலிக்கும் என்று அவன் எதிர்பார்க்கவில்லையே. அவளை படிக்க அனுப்பவே முடியவில்லை என்றால், விவாகரத்து.., அதை உன்னால் கொடுக்க முடியுமா? தனக்குத் தானே கேட்டவனுக்கு, நிச்சயம் முடியாது என்றே தோன்றியது.

“நீங்க கொடுத்த தண்டனையை நான் ஏத்துக்க தயாராகிட்டேன்..” அவள் குரல் உடைய உரைக்க, தொண்டைக்குழி ஏறி இறங்கியதைத் தவிர, அவனிடம், வெளியே வேறு எந்த மாற்றமும் இருக்கவில்லை. மனமோ.., அப்படியே அவளை இறுக்கி, தன்னோடு அணைத்துக் கொள்ள கைகள் இரண்டும் பரபரத்தது.

அவளை போகாதே என்று சொல்ல ஒரு நொடி கூட ஆகாது.., ஆனால்.., நாட்கள் இதே விதத்தில் நரகமாய் கழிவதைப் பார்க்கும் சக்தி அவனுக்கு இல்லை. எனவே தன்னை அடக்கியவாறு நின்றிருந்தான்.

"அப்போ பதில் பேச மாட்டீங்க இல்ல.., சரி பரவாயில்லை.., நீங்க பேச வேண்டாம்.., ஒரே ஒரு விஷயம் சொல்றேன்.., அதை மட்டும் கேக்கறீங்களா?" அவள் கேட்க, பார்வையை அவள்மேல் இருந்து திருப்பாமல் நின்றிருந்தான்.

"குழந்தை அழுதால்.., நீங்க ஒரே ஒரு குரல் கொடுங்க.., அதே மாதிரி.., பால் குடிக்க அடம் பண்ணா.., தூக்கி வச்சுகிட்டீங்கன்னா கண்டிப்பா பால் குடிப்பா. இல்லன்னா.., அவ கிட்டே இருந்தீங்கன்னா கூட போதும்.." தொண்டையில் அடைத்த வார்த்தைகளை சிரமப்பட்டு விழுங்கியவாறு உரைத்து முடித்தாள்.

'இதென்ன புதுசா..?' புரியாமல் அவளை ஏறிட்டான்.

"நான் சொன்னால் உங்களுக்குப் புரியாது.., ஆனா.., கண்டிப்பா.." எழும் விம்மலை இதழ் கடித்து அடக்கியவள்.., தன்னை சமானப்படுத்த இதழ் குவித்து காற்றை வேகமாக உள்ளிழுத்து வெளியிட்டாள். அவன் முன்னால் அழுது, அவனை மேலும் கலங்க வைக்க அவள் விரும்பவில்லை.

'ஏண்டி இப்படி கஷ்டப்படுற..?' அவளை இழுத்து தன்னோடு இறுக்கிக் கொள்ள எழுந்த வேகத்தை சிரமப்பட்டு அடக்கினான்.

தன்னை ஒரு நிலைக்கு கொண்டு வந்தவள்.., "என்னைப் பாக்க வருவீங்களா ராஜ்?" இதழ் துடிக்க அவள் வினவ, தன் கரத்தால் தலையை அழுத்தமாக கோதிக் கொண்டான்.

'ஏன் என்னை புரிந்துகொள்ளவே இல்லை ஹாசினி.., என்னை நீ விரும்பவே இல்லையா..?' அவன் மனம் அரற்றியது அவளுக்கு கேட்கவே இல்லை.

அவளுக்கோ.., அவன் நெஞ்சில் போய் விழுந்து கதறவேண்டும்போல் இருந்தது. ஆனால்.., அன்று தான் அவன் தோள் தொடப்

போகும்பொழுதே அவன் விலகியிருக்க.., இன்று அவனை நெருங்கி, அவன் விலகிச் சென்றால், அதைத் தாங்கவே முடியாது என்பதால் தவித்துப்போய் நின்றிருந்தாள்.

அவள் கண்களில் வழிந்த ஏக்கம்.., கண்டும் காணாமல் இருக்க அவன் என்ன இரும்பா? அவள்மேல் உயிரையே வைத்திருக்கும் ஆருயிர் காதலன்.., கணவன்.., அப்படி இருக்கையில்..,அவனுக்கும் அதே வேகம் இருக்க.., அதைச் செய்ய முடியாமல் தேங்கினான்.

இப்பொழுதெல்லாம் உணர்ச்சிவசப்படும் நேரங்களை தன் வசமாக்க அவன் பழகி விட்டிருந்தான். ஒரு முறை உணர்சிவசப்பட்டதற்கு தான் கொடுத்த விலை என்னவென்று அவனுக்குத் தெரியுமே.

ஆனால்.., அப்பொழுது அவன் காதலன் மட்டுமே.., இப்பொழுதோ.., அவன் ஒரு கணவன் என்பதை மறந்து விட்டிருந்தானா? இல்லை நினைவுவைத்துக்கொள்ள தயங்கினானா என்பது புரியவில்லை.

'கிளம்பு.., என அவனால் சொல்லவே முடியவில்லை. இப்படியே ஒருவர் முகத்தை மற்றவர் எவ்வளவு நேரம் பார்த்துக்கொண்டு இருக்க முடியும்?

அவளுக்கோ.., அவன் ஆறுதல் அணைப்பு வேண்டும் என்ற தாகம்.., வாய்விட்டு கேட்கவும் முடியாமல், அதைச் செய்யவும் முடியாமல் திண்டாடியவள், அவன் அசையவே போவதில்லை என்பதை உணர்ந்து.., "ராஜ்.., கடைசியா.., ஒரே ஒரு முறை.." முகத்தை மூடிக்கொண்டு விம்ம,

அடுத்த நொடி.., அவனது இறுகிய அணைப்புக்குள் இருந்தாள். அவள் முகத்தை தன் நெஞ்சோடு அழுத்தியவன்.., அவளை தனக்குள் புதைத்துவிடும் வேகத்தில் இறுக்கினான்.

அவன் கைக்கடியில் கைகள் கோர்த்து அவன் முதுகை வளைத்தவள்.., தன்னால் முடிந்தவரை அவனை அணைத்துக் கொண்டாள். "ராஜ்.., ராஜ்.." விடாமல் புலம்பியவள்.., தன் இதழ்களை அவன் நெஞ்சில் ஒற்றினாள். தன் இதழ்களை அங்கிருந்து பிரிக்கும் எண்ணமே அவளுக்கு இருக்கவில்லை.

'இப்படியே இருந்துவிடு..' அவள் மனம் போராட..., அவன் தன் பிடியை தளர்த்திய பிறகும், அவனை விட்டு விலக விரும்பவில்லை.

அவனுக்கோ.., அவள் இதழ்கள் பூக்களின் ஒத்தடமாக இருக்க, அந்த ரோஜா இதழ்களை தன் இதழ்களில் பூட்டிகொள்ளும் வேட்கை கிளர்ந்தது.

ஆனால்.., அதைச் செய்யவே கூடாது.., அவன் முடிவு அவனை கட்டிப்போட, அவள் செய்கைக்கு உடன்பட்டு நின்றிருந்தான். அவளை விலக்கிவிட ஒரு நொடி போதாது.., ஆனால்.., அதை அவனால் செய்ய முடியாது.

தன் வேகம் குறைந்தவள்.., அவன் கைகளுக்குள் இருந்தவாறே நிமிர்ந்து பார்க்க, அவன் கண்ணீர்த்துளி அவள் கன்னத்தில் விழுந்து சிதறியது. வேகமாக தன் கைகளால் அவன் கன்னம் துடைத்தவள், தன் இதழ்களை அவன் கன்னத்துக்கு நகர்த்த முனைந்தாள். ஆனால், அவனது அசையாத பார்வையில் தோல்வியுற்று.., வேகமாக அவனை விட்டு விலகி.., கிட்டத்தட்ட ஓடினாள்.

அவள் பின்னால் விரையத்துடித்த கால்களை கட்டிப் போட்டவன்.., அங்கிருந்த இருக்கையில் அமர்ந்துகொண்டான்.

நிஹாசினியோ.., அதன் பிறகு யாரையும் நிமிர்ந்து பார்க்கவும், விடைபெறவும் தைரியம் அற்றவளாய்.., காரில் சென்று அமர்ந்து கொண்டாள். ஏற்கனவே அவளது பொருட்கள் அடங்கிய பெட்டியை காரில் வைத்துவிட்டிருக்க.., கார் கிளம்பியது.

அதே நேரம்.., குழந்தையின் அழுகை அவளை எட்ட.., காரில் இருந்து இறங்கத் துடித்தவள்.., இமைகளை இறுக மூடி.., பின்னால் சாய்ந்து கொண்டாள். மூடிய இமைகளில் இருந்து கண்ணீர் கடைவிழியோரம் வழிந்துகொண்டே இருந்தது.

ராஜாவுக்கோ.., அதற்குமேல் வீட்டில் இருக்க முடியாமல், வேகமாக கடைக்கு கிளம்பிவிட்டான். குழந்தையின் அழுகுரலைத் தவிர அங்கே எந்த சத்தமும் இருக்கவில்லை.

கல்லூரிக்கு சென்றவளுக்கோ.., மனதுக்குள் ஒரு வெறுமை பலமாகத் தாக்கியது. ஏற்கனவே அவள் வருவது தெரியுமாகையால்.., கல்லூரி முதல்வரே அவளை வரவேற்றார்.

“உங்க ரூமை முகேஷ் காட்டுவான். லதா லெச்சர் காலேஜ்க்கு வந்துட்டாங்க. சோ.., இப்போ ரூம் பிரீயாதான் இருக்கும். நீங்க நாளையில் இருந்து காலேஜ் வந்தால் போதும்.., மிச்சத்தை லதாவே உங்களுக்கு சொல்வாங்க..” அவளை அனுப்பினான்.

முகேஷ் அவளது லக்கேஜை எடுத்துக்கொள்ள.., கல்லூரிக்கு வெளியே.., காம்பவுண்டுக்கு பின்னால் இருந்த ஹாஸ்டலுக்கு கூட்டிச் சென்றவன், “இதுதான் உங்க ரூம்.., கீயை லதா மேம் கொடுத்துட்டு போயிருந்தாங்க..” சொன்னவன் அறையைத் திறந்து விட்டு, கீயை அவள் கையில் கொடுத்தான்.

“தேங்க்ஸ்..” உரைத்தவள், அவன் கையில் இருபதுரூபாய் நோட்டை கொடுக்க, முகமெல்லாம் பல்லாக அதை பெற்றுகொண்டவன், அங்கிருந்து கிளம்பினான்.

கதவை சாற்றியவள், அறைக்குள் நுழைந்து பார்க்க.., வலது மூலையிலும், இடது மூலையிலுமாக இரண்டு படுக்கை போடப்பட்டிருப்பதைப் பார்த்தவள், இடது ஓரத்தில் இருந்த படுக்கையில் ஒரு இரவு உடை பாதி மடிக்கப்பட்டு கிடக்கவே, வலது ஓரத்தில் இருந்த படுக்கையில் சென்று அமர்ந்தாள்.

ஹாஸ்டல் வாசம் என்பது அவளுக்கு இதுதான் முதல் முறை. சாதாரண ஆட்களுக்கே அது பெரும் துன்பம் என்கையில்.., பால்கொடுக்கும் குழந்தையை விட்டு வந்திருக்கும் அவளுக்கு எவ்வளவு கடினமாக இருக்கும்.

படுக்கையில் விழுந்தவள் குமுறி அழ.., “ராஜ்.., எனக்கு இங்கே பிடிக்கலை.., எனக்குப் பிடிக்கலைன்னு ஆபீஸ் விஷயத்தில் எவ்வளவு ஹெல்ப் பண்ணீங்க.., இப்போ.., நீங்களே..” வாய் விட்டு புலம்பியவள், வாய்விட்டே அழுதாள்.

அங்கே அந்த நேரம் யாரும் இல்லை என்பதால்.., அவளது அழுகை யாருக்கும் தெரியாமலே போனது.

எவ்வளவு நேரம் எனத் தெரியாது.., கதவைத் தட்டும் ஓசையில் திடுக்கிட்டு எழுந்தவள், 'யார் தூக்கத்தில் எழுப்பியது..? யாரும் இப்படி செய்ய மாட்டார்களே..' நினைத்தவள் விழிகளைத் திறக்க, அப்பொழுதுதான் தான் தன் வீட்டில் இல்லை என்பதே உறைத்தது.

"வரேன்.." பதில் கொடுத்தவள், கலங்கிய தன் கண்களை சீர்படுத்திக் கொண்டு கதவைத் திறந்தாள்.

"லஞ்ச் சாப்பிட வரச் சொன்னாங்க.., க்ரவுண்ட் ப்ளோர் தான் ஹால்.." ஒரு பெண்மணி வந்து சொல்ல,

"இல்ல.., எனக்கு லஞ்ச் வேண்டாம்.." அவளை அனுப்ப முயன்றாள்.

"இல்லம்மா.., கையோட கூட்டி வரச் சொன்னாங்க.." கல்லூரி முதல்வரோடு, ஹாஸ்டல் வார்டனும் சேர்த்து பிரத்தியேகமாக அவளை கவனிக்க சொல்லியிருக்கையில், வேண்டாமென்றால் போ.., என தள்ளிவிட்டு அவளால் செல்ல முடியவில்லை.

'இதென்னடா சோதனை..' அவளுக்கு அலுப்பாக வந்தது. யாரிடமும் கோபத்தைக் காட்டி பழக்கமில்லை என்பதால் அமைதியாகவே நின்றிருந்தாள்.

"பரவாயில்லை.., நான் வேண்டாம்னு சொன்னேன்னு போய் சொல்லுங்க.." மேலும் அவள் எதையும் கேட்கும் முன்பு, "ப்ளீஸ்.." அவள் கெஞ்ச.., "சரிம்மா.., நான் சொல்லிடுறேன்.." திரும்பிவிட்டாள்.

கட்டிலில் வந்து அமர்ந்தவளுக்கு மார்பில் பால் கட்டி வலியெடுக்க, கொஞ்சம் குறைந்திருந்த கண்ணீர் மீண்டும் உடைப்பெடுத்தது. "அலை.." புலம்பியவள், வேகமாக தன் அலைபேசியை தேடி எடுத்தாள்.

அவசரமாக சுஜாவின் எண்ணை அழுத்த, அவளது அழைப்புக்காகவே காத்திருந்தாற்போல் ஒரே ரிங்கில் போன் எடுக்கப்பட, கூடவே குழந்தையின் அழுகுரல் அவளை அறைந்தது.

"அலை.., குட்டிமா.., செல்லம் அழாதீங்க.., அலை.., அலை.." கிட்டத்தட்ட அலறினாள். போன் யாரிடம் இருக்கிறது.., தன் பேச்சு அவளைத் தீண்டுமா எதைபற்றியும் அவள் கவலைப்படவில்லை.

ஆனால்.., அவளது அழைப்பை கேட்டாற்போல்.., குழந்தையின் அழுகை நின்றுபோக.., குழந்தையோ., தன் தாய் எங்கே என தலையைத் திருப்பி, பார்வையைச் சுழற்றினாள்.

"அலை.., செல்லம்.., அம்முகுட்டி.., பசிக்குதா..?" கேட்கும் முன்பே அவள் மேலாடை நனையத் துவங்கியது. தன் கையால் மார்பை அழுத்தியவளுக்கு., கண்ணில் ரத்தமே வழிந்தது.

குழந்தையோ.., தன் தாயின் முகம் தெரியாமல் போக, ஒரு நிமிடம் அழுகையை நிறுத்தியவள்.., இதழ் பிதுக்கி அழுகைக்கு தயாராக, "தாரிணி.., குழந்தையை இப்போ மடியில் போட்டு பால் புட்டியைக் கொடு.." சுஜா அவசரப்படுத்தினாள்.

தன் தாய்ப்பால் இங்கே வீணாகப் போக.., குழந்தைக்கு புட்டிப்பால் கொடுக்கும் அவலம்.., கட்டிலில் இருந்து தரையில் விழுந்தவள்.., வெடித்த அழுகையை, கையால் வாய் மூடி அடக்கினாள்.

"அம்மு.., பால் குடிங்க.., என் செல்லமில்ல.." தாயின் குரல் கேட்டதாலா.., இல்லை அவ்வளவு பசியில் இருந்ததாலா எனத் தெரியவில்லை. புட்டிப்பாலை மெதுவாக சுவைக்கத் துவங்கிய குழந்தை.., வேகமாக குடிக்கத் துவங்கினாள்.

"ங்..கா.., ங்.." கூடவே அவளது தேம்பலும் கேட்க, அலைபேசியை அணைத்து கட்டிலில் தூக்கிப் போட்டாள். இதற்குமேல் வலியெடுக்கும் மார்பை தாங்க முடியாது எனத் தோன்ற.., தன் பேகில் வைத்திருந்த வெள்ளைத் துணியை எடுத்துக் கொண்டு, பாத்ரூமுக்கு ஓடினாள்.

கையால் பாலைப் பீச்ச.., "அம்மா.." அழுகை வெடித்தது. பாலை வெளியேற்றி முடித்தவள், துணியை அலசி, அங்கிருந்த கம்பியில் போட்டவள்.., தன் உடையையும் மாற்றி, குளித்துவிட்டு ஓய்ந்துபோய் அமர்ந்தாள்.

அதே நேரம்.., அலைபேசி ஒலியெழுப்ப, அதில் ஒளிர்ந்த சுஜாவின் எண்ணைப் பார்த்தவள், "அக்கா.." விம்மினாள்.

"நிஹா.., இப்படியே அழுது உடம்பை கெடுத்துக்கப் போறியா? எல்லாம் சரியாயிடும். முதல்ல அழுகையை நிறுத்து.." அவர் குரலும் கண்ணீரில் நனைந்தே இருந்தது.

"அக்கா.., அலை.." விசும்பினாள்.

"தூங்கிட்டா.., உன் குரலை கேட்ட பிறகுதான் சமாதானம் ஆனா.."

"பால் குடித்தாளா..?"

"ஆமா.., நீ சாப்ட்டியா..?" அவர் கேள்விக்கு மௌனத்தையே பதிலாக்கினாள்.

"நிஹா, அக்கா சொல்வதை கேப்பன்னு எனக்கு வாக்கு கொடுத்திருக்க.., முதல்ல போய் சாப்பிடு.., குழந்தையை நாங்க பாத்துக்கறோம்.., நீ அவளை நினைத்து கவலைப் படாதே.." முடிந்த அளவு அவளுக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வைத்து விட்டார்.

ஆனால்.., ஆறுதல் வார்த்தைகளில் அடங்கிவிடும் துயரமா அவளுடையது? வெடிக்கும் விம்மல் அதிகம்தான். அப்படியே சிலைபோல் அமர்ந்திருந்தாள், மனதுக்குள் வெறுமை மட்டுமே குடி கொண்டிருந்தது.

மீண்டும் கதவு தட்டும் ஓசை கேட்கவே.., 'நான்தான் சாப்பாடு வேண்டாம் எனச் சொன்னேனே.., என்னை நிம்மதியா இருக்கவே விட மாட்டாங்களா?' எண்ணியவள், சிறு கோபத்துடனே கதவைத் திறந்தாள்.

"ஹாய்.., நிஹா.., ஐ'ம் லதா.." சொன்னவள், அவளைத் தாண்டி அறைக்குள் வர, அப்பொழுதுதான் லதா யார் என்பதே அவளது நினைவிற்கு வந்தது.

"ஓ.., ஹாய் மேம்.." சட்டென உரைத்தாள்.

"மேம்.., ஓ மை காட்.., மிஞ்சிப்போனால் உன்னைவிட ஒரு நாலு வயசுதான் எனக்கு அதிகம் இருக்கும். ஹாஸ்டல்ல என்னை லதான்னே சொல்லு.., காலேஜ்ல மேம்.., ஓகே யா? இங்கே தனியா இருந்து போர்

அடிச்சுப்போய் இருக்கேன். துணைக்கு நீ வந்ததில் ரொம்ப சந்தோசம்.." இயல்பாய் உரையாடியவள்..,

"இஃப் யூ டோன்ட் மைன்ட்.." அவள் நிறுத்த, 'என்ன..' என்பதுபோல் அவளைப் பார்த்தாள்.

"ஐ வாட் டு செஞ் மை ட்ரெஸ்.., இப்படியே இருக்க முடியாது அதான்..".

"ஓ.., நான் வேண்ணா.." அவள் வெளியே செல்ல முயல,

"நிஹா.., நீ பொண்ணுதானே.." திடுமென அவள் கேட்க, "ஆ..மா.." அவள் கேட்க வருவது சுத்தமாக அவளுக்குப் புரியவில்லை.

"ஹா..ஹா..ஹா.., ஆண்டவா.., ஓகே.., நீ நார்மலா இல்லன்னு தெரியுது. நானே சொல்லிடுறேன். இருக்குறது நாம ரெண்டே பேர்.., ஒவ்வொரு முறையும் ட்ரெஸ் செஞ் பண்ணும்போது வெளியே போறதுன்னா.., உப்.., அது முடியாது.

"அதே மாதிரி டாய்லெட் போறதுன்னா.., அது.., அதைவிட கஷ்டம்.., நான் அந்த பக்கம் திரும்பி மாத்திக்கறேன்.., நீ கண்ணை மட்டும் மூடிக்கோ.., அது போதும்.." கண்ணைச் சிமிட்டி அவள் உரைக்க, முதல் முறையாக அவள் முகத்தில் மெல்லிய புன்னகை.

"ஹப்பா சிரிச்சுட்டியா.., எங்கே உனக்கு சிரிக்கவே தெரியாதோன்னு நினைத்தேன்.., ஓகே.., புடவையை மாத்திட்டேன்.., பாத்ரூம்ல போய் ஜஸ்ட் பாடிவாஷ் பண்ணிட்டு வரேன்.., சேர்ந்து காபி குடிக்கப் போகலாம்.." உரைத்தவள், தோளில் போட்ட டவ்வலோடு பாத்ரூமுக்குள் புகுந்து கொண்டாள்.

திரும்பி வருகையில்.., அந்த டவ்வலில் தன்னை சுற்றிக்கொண்டு வெளியே வர.., இப்பொழுது அவசரமாக தன் பார்வையை திருப்பிக் கொண்டாள் நிஹா.

"வெக்கத்தை பாருடா.." மெல்லிய கமெண்டோடு தன் உடையை மாற்றி, நைட்டியை மாற்றியவள், "ஓகே.., லெட்ஸ் கோ.." அவளை அழைத்தாள்.

"இல்ல.., நான் வரலை.., நீங்க போயிட்டு வாங்க.."

"ஏன்.., காபி குடிக்க மாட்டியா..?" ஆச்சரியமாக வினவ,

"குடிப்பேன்.." இழுத்தாள்.

"பிறகு என்ன.., வா.., ரூமுக்குள்ளேயே இருந்தால் போர் அடிக்கும்.." அவளை கட்டாயப்படுத்தி இழுத்துச் சென்றாள்.

போகும் வழியில் மாணவிகள் லதாவுக்கு மாலை வணக்கம் உரைக்க, அவர்களிடம் ஒரு தலை அசைப்போடு விலகி நடந்தாள். அறைக்குள் பார்த்த லதாவுக்கும், இவளுக்கும் ஆறு வித்தியாசம் இல்லை.., அறுபது வித்தியாசம் சொல்லலாம் என்பதான ஒரு தோற்றம்.

கண்களில் கவனம்.., முகத்தில் சிறு இறுக்கம்.., புன்னகை அற்ற துடைத்த முகம் என அவளது பரிமாணம் வியப்பை அளித்தது. 'இதில் யார் உண்மையான லதா..' குழம்பிப்போய் உடன் நடந்தாள்.

அதே நேரம்.., அவளது மகளோ.., மூச்சு விடாமல் அழுது கொண்டிருந்தாள். வீட்டுக்குள் நுழைந்த ராஜாவுக்கு, அவளது அழுகை பெரும் துன்பத்தை அளிக்க, அவனுக்கு காபி கொடுத்த லஷ்மியிடம், "குழந்தை ஏன் அழறா?" கேட்டான்.

"பசிக்கி அழறா.." உரைத்தவள்.., விலகினாள்.

தன் காபியை அருந்த துவங்கியவனுக்கு.., குழந்தையின் அழுகையை மீறி குடிக்கவே முடியவில்லை. "அம்மா.., குழந்தையை ஏன் அழ விடறீங்க..?" அங்கிருந்தே கத்தினான்.

"ஆமா.., எங்களுக்கு ஆசை பாரு.., அதான்.." தாரிணி பதில் கொடுத்தவள், பால் புட்டியோடு விரைந்தாள்.

அவள் கையில் பால் புட்டியைப் பார்த்தவனுக்கு, அப்பொழுதுதான் நினைவிற்கு வந்தது.., அன்று நிஹாசினியிடம் பால் குடிக்க வேண்டி, பால் புட்டியை அவள் வாங்கவே இல்லை என்று. கூடவே.., நிஹாசினி ஹாஸ்டலுக்குச் செல்லும் முன்பு உரைத்ததும் நினைவிற்கு வர, தன் கையில் இருந்த கப்பை அப்படியே வைத்துவிட்டு எழுந்துவிட்டான்.

தாயின் அறைக்குள் நுழைய..., அவரோ..., குழந்தையை தோளில் போட்டுக் கொண்டு அவளை சமாதானம் செய்ய போராடிக் கொண்டிருந்தார். தாரிணியோ பால் புட்டியோடு அவர்கள் பின்னால் சுற்றிக் கொண்டிருந்தாள்.

"அம்மா.." அவன் குரல் அவர்களை எட்ட முடியாத அளவுக்கு, அலையின் அழுகை இருந்தது.

"அம்மா.." உரக்க அழைத்தவன் அவர்களை நெருங்கினான். "வாப்பா.." உரைத்தவர்..., "விடாமல் அழறா..., என்ன செய்யன்னே தெரியலை.." புலம்பினார்.

அதைக் கேட்டவன்..., "அலை..., இங்கே பாருங்க.." கை விரலால் சொடக்கு போட்டவன், அவள் கவனத்தை தன் பக்கம் திருப்பினான்.

அவ்வளவுதான்..., அவ்வளவு நேரமாக இருந்த அழுகை சுவிட்ச் போட்டாற்போல் நிற்க, அவனிடம் செல்ல கைகளை அசைத்து, அவனிடம் தாவ முயன்றாள்.

"அலை..., அப்பாகிட்டே வரியா.." கேட்டவன்..., நொடியும் தாமதிக்காமல் அவளை கைகளில் அள்ளிக் கொண்டான். பார்த்துகொண்டிருந்த அவர்களுக்கு ஆச்சரியம் தாளவில்லை. குழந்தையை கைகளில் அள்ளிக் கொண்டவனுக்கு, தேகம் முழுவதும் சிலிர்த்தது.

'இத்தனைநாள் எதற்காக இவளை தவிர்த்தேன்? ஏன் தவிர்த்தேன்? ஹாசினி சொன்னாள் என்பதற்காகவா? அப்படியென்றால், அவள் அப்படி ஒரு அர்த்தத்தில்தான்..' நினைவை முடிக்கவே அவனால் முடியவில்லை. அவனது ஹாசினி நிச்சயம் அப்படி ஒரு கீழ்த்தரமான அர்த்தத்தில் பேசியிருக்க மாட்டாள் என்று புரிந்தது.

"ராஜா..., உன் பொண்ணுக்கு உன்னை எப்படி அடையாளம் தெரியுது பார். இந்தா..., அப்படியே இந்த பாலை அவளுக்குக் கொடு.." அவனை அமர வைத்து, குழந்தையை வாகாக அவன் கையில் கிடத்த, தன் நினைவில் இருந்து கலைந்தான்.

“பேச்சுகொடுத்துட்டே கொடுப்பா..” பால் புட்டியை அவன் கையில் கொடுத்தார்.

“ங்.., ங்க.., ம்..” கால்களை உதைத்தவாறு.., இரண்டு சப்பு சப்புவதும்.., விலகுவதும்.., பிறகு பசியில் மீண்டுமாக புட்டியை வாய்க்குள் திணிப்பதுமாக அவள் இருக்க.., நிஹாசினி சொல்லிச் சென்றதை எண்ணியவனுக்கு..,

‘அவளுக்குத் தெரியுமா? என் குரலுக்கும், அருகாமைக்கும் அலை கட்டுப்படுவாள்.., பதில் கொடுப்பாள் என முன்னமே தெரியுமா? அப்படியென்றால்.., குழந்தை பாலுக்கு அழும் வேளைகளில்.., என்னை அருகே அமர்த்திக் கொண்டதன் காரணம் இதுவா?

‘நான் நினைத்தாற்போல்.., என்னை தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கும் எண்ணமில்லையா? அப்படியென்றால்.., நான்தான் அவளை, அவள் செய்கையை புரிந்துகொள்ளவில்லையா?’ இதயம் அதிர்ந்தது.

# அத்தியாயம் 15

இரவின் தனிமையில்.., குழந்தையை தன் நெஞ்சில் படுக்க வைத்து உறங்க வைத்துக் கொண்டிருந்தான் ராஜா. மாலையில் தான் வந்தது முதல்.., தன்னிடம் ஒட்டிக்கொண்டு நகர மறுத்த குழந்தையை தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

அலையே நிஹாசினியை இவ்வளவு தேடினால், தாயின் நிலை என்னவென்று அவன் சிந்திக்கவே இல்லை. சீனிவாசன், கார்த்திகா விஷயம் அவள் வீட்டுக்குத் தெரிந்து பிரச்சனை ஆகியிருக்க, குழந்தையோடு இருந்தாலும், அதன் தாயைப் பற்றி சிந்திக்க அவனுக்கு முடியவில்லை.

அலை, கொஞ்ச நேரம் மற்றவர்களோடு விளையாடியவள்.., பசி வந்தாலோ..., கொஞ்ச நேரம் அதிகமானாலோ.., தன் தாயைத் தேடத் துவங்கியவள், தாய் வராமல் போகவே.., தகப்பனிடம் சரண் புகுந்தாள்.

உறக்கம் வந்தபொழுது கூட.., அவன் கையால் புட்டிப்பால் குடித்தவள், தாரிணியின் தோளில் படுத்துக்கொள்ள கூட மறுத்தாள். குழந்தையை தோளில் போட்டி தட்டிக் கொடுத்தவன், அறையின் நீளத்தை அளந்தான்.

குழந்தையை அணைத்துக் கொண்டாலும்.., நிஹாசினியின் நினைவே அவனை அதிகம் இம்சித்தது. அவள் இங்கே இருந்த வரைக்கும் பாராமுகமாக இருந்தவன், அவள் சென்ற பிறகு ஏற்பட்ட வெறுமையை அகற்றவே முடியவில்லை.

வேலையில் கவனம் செலுத்தலாம் என்றாலோ..., வீட்டில் நிஹாசினி இல்லை என்ற நினைப்பே, அவனை வேலை செய்ய விடாமல் தடுத்தது.

முயன்ற அளவுக்கு அங்கே இருந்தவன்.., மாலையிலேயே வீட்டுக்கு திரும்பிவிட்டான். குழந்தையின் அழுகை.., அதனைத் தொடர்ந்த நிகழ்வுகள்., தான் நிஹாசினியை புரிந்துகொள்ளவே இல்லை என்ற உண்மை முகத்தில் அறைந்தது.

கூடவே.., குழந்தையை தான் தூக்கிக்கொள்ள வேண்டி அவள் செய்த செயல்கள், கொண்ட கோபம்.., அனைத்திற்கு பின்னாலும், அலை தன்னை தேடிய விதம் இருந்திருக்கிறது என்பதை நினைக்கையிலேயே.., இதயம் பாரமாய் கனத்தது.

'ஏன் ஹாசினி.., குழந்தை என்னோட உடனிருப்பை விரும்புகிறாள்.., தேடுகிறாள்ன்னு உன்னால் என்கிட்டே ஒரு வார்த்தை நேரில் சொல்ல முடியவில்லையா? அதைச் சொல்ல முடியாத அளவுக்கா நான் வேண்டாதவன் ஆகிப் போனேன்..? ஏன் இப்படி செய்தாய்..?' அவனால் தாங்கவே முடியவில்லை.

ஆனாலும்.., இங்கிருந்து செல்லும் முன்னர்.., நிஹா குழந்தையை கவனிக்கச் சொன்னதாலேயே செய்தோம் என்பதை நினைக்கையில், அந்த வேதனை கொஞ்சம் குறைந்தாலும், தன்னிடம் சொல்லவே முடியாத அளவுக்கு தான் அவளுக்கு என்ன பாவம் செய்தோம்..? நெஞ்சம் கலங்கியது.

அதே நேரம்.., ஒவ்வொரு நிமிடமும் தன் தாயைத் தேடும் அலையின் செய்கை, தான் குழந்தைக்கு நியாயம் செய்யவில்லை என்ற உண்மை முகத்தில் அறைந்தது.

குழந்தையைப் பற்றி எண்ணியவனுக்கு.., நிஹாசினியும் அதே அளவுக்கு துன்பப்படுவாள் என்பதை எண்ணிப் பார்க்கவே இல்லை. இது சுயநலமா? இல்லையென்றால் அவள்மேல் கொண்டிருந்த கோபத்தாலா? அது அவன் மட்டுமே அறிந்த உண்மை.

குழந்தையை பூப்போல் தன் அருகில் கிடத்தியவன்.., அவளை அணைத்தவாறு படுத்துக் கொண்டான். படுக்கையில் இருந்து எழுந்த நிஹாசினியின் வாசம்.., அவன் நாசிக்குள் ஏறி இம்சித்தது மட்டும் உண்மை.

ஹாஸ்ட்டலிலோ.., மாலை காபியை அருந்தியவளுக்கு.., ஸ்நாக்ஸ்சையும் லதா எடுத்துக் கொடுக்க.., மௌனமாகவே அதையும் உண்டாள்.

“அப்படியே கிரவுண்ட்ல ஒரு வாக் போயிட்டு வரலாமா? மார்னிங் இங்கே இருக்கும் கேட்டை பூட்டி வச்சிருப்பாங்க.., சோ குறுக்கு வழியா போக முடியாது. ஆனா.., நைட் ஒப்பன் பண்ணிடுவாங்க.., அதனால் போகலாம்..” அவளை அழைத்துக்கொண்டு, அங்கே இருந்த புன்னை மரத்தின் அடியில்.., அதைச் சுற்றி வட்டமாக அமைக்கப்பட்டிருந்த திண்டில் அமர்ந்தார்கள்.

“வேற சொல்லு.., ஏன் ஒரு செம் முடியப்போற இந்த நேரத்தில் வந்திருக்க? உன்னைப் பார்த்தால் கல்யாணம் ஆனவன்னு மட்டும்தான் தெரியுது.., மிச்சத்தை நீதான் சொல்லணும்..” அவளைப் பார்த்து மறந்தாள்.

“அது.., சும்மா..” முதல் நாளே அவளிடம் என்ன பேசுவது எனத் தெரியாமல் தேங்கினாள்.

“ஓகே.., உடனே எதுவும் சொல்ல முடியாதுதான். எப்படியும் இன்னும் ரெண்டு வருஷம் என்னோடவேதானே இருப்ப.., அப்போ பாத்துக்கலாம்..” அவளை துருவவில்லை.

“நான் ஒண்ணு கேக்கவா..?” தன் அலைபேசியில் பார்வையை பதித்திருந்தவளை கலைத்தாள்.

“ஒண்ணென்ன.., ஒன்பது கேளு சொல்றேன்..” அவள் முகம் பார்த்தாள்.

“இல்ல.., என்கிட்டே ஒரு மாதிரி பேசறீங்க.., ஹாஸ்டல்ல ஒரு மாதிரி..” கேட்பது சரியா தவறா எனத் தெரியாமல் தடுமாறினாள்.

கூடவே.., அவள் அங்கே இருக்கையில்.., அவளுக்கு பின்னால் இருந்த இரு பெண்கள்.., “என்னடி.., நம்ம முசுடு கூட ஒரு பொண்ணு.., பாத்தா சின்ன பொண்ணு மாதிரி இருக்கு.., புது லெச்சரா என்ன..?” “யாருக்குத் தெரியும்..? அது கூடவே இருந்து இதுவும் முசுடாகாம இருந்தா சரி.., வா போகலாம்..” தங்களுக்குள் உரையாடியவாறு போய்விட்டார்கள்.

நிஹாசினிக்கு திகைப்பாக இருந்தது. அறைக்கு வந்ததுமுதல் வாய் ஓயாமல் பேசும் லதாவை முசுடு என கற்பனை பண்ணக்கூட அவளுக்கு முடியவில்லை. அப்படி இருக்கையில்..

“ஓ.., அதைக் கேக்கறியா..? எங்க டிப்பார்ட்மெண்டில் நான் மட்டும்தான் ஒரே லேடி.., அதைவிட.., ஸ்டூடண்ட் கிட்டே கொஞ்சம் சிரிச்சுட்டா போதும்.., அப்படியே தலைமேலே ஏறி உக்காந்துப்பாங்க.., அதான்.., காலேஜ்ல ரொம்ப ஸ்ட்ரிக்ட்.., அங்கே அப்படி இருப்பதால் ஹாஸ்டல்ல யாரும் என்கிட்டே வந்து பேச மாட்டாங்க.., நானும் கெத்தை மெயின்டெயின் பண்றேன்..” அவள் விளக்க, அமைதியாக கேட்டுக் கொண்டாள்.

“நானும் ஸ்டூடண்ட் தானே..” தனக்கு மட்டும் என்ன ஸ்பெஷல்.., மனதுக்குள் எண்ணியவள், அவளிடம் கேட்கவில்லை.

“அது ஒண்ணும் இல்லை.., இந்த ஆறு மாசத்தில்.., வாயை மூடிகிட்டே இருந்து, எங்கே எனக்கு பேச்சே மறந்து போய்டுமோன்னு எனக்கே ஒரு சந்தேகம்.., அதான்.., எல்லா நேரத்திலும் நடிச்சுகிட்டே இருக்க முடியாதே.., சோ.., உன்கிட்டே இயல்பா இருக்கேன்.., அவ்வளவுதான்..” தோளைக் குலுக்கிக் கொண்டாள்.

“சரி.., கரஸ் உனக்கு சொந்தமா என்ன..?” திடுமென அவள் கேட்க,

“தெரியலை..” உண்மையை உரைத்தாள். இதென்ன பதில் என லதாதான் குழம்பிப் போனாள்.

“சொல்ல விருப்பம் இல்லையென்றால் அதை சொல்லிட்டுப்போ.., அதை விட்டுட்டு..”.

“ஐயோ.., நிஜமாவே எனக்குத் தெரியாது. என் ஹஸ்பண்டுக்கு தெரியும்னு நினைக்கறேன்..” அவன் அன்று அவரிடம் சாடியதை வைத்து உரைத்தாள்.

“சரி.., உனக்கு கல்யாணமாகி எத்தனை வருஷமாகுது..?”

“ஒண்ணரை வருஷம்..” பதில் உரைக்க, “கிழிஞ்சுது.., நீ என்னைவிட ரொம்ப மோசமா இருக்க.., எனக்கு மேரேஜ் ஆகி ஆறுமாசம் ஆகுது. அவர் அமெரிக்காவில் ஆன்சைட் ப்ராஜெக்ட்டுக்கு வேண்டி போயிருக்கார். மூணு வருஷம் கழிச்சுதான் வருவார்..” ஒரு ஏக்கப் பெருமூச்சு அவளிடம்.

“ஓ..” அதற்குமேல் எதையும் இருவரும் பேசிக்கொள்ளவில்லை.

லதாவின் அலைபேசியில் வீடியோ அழைப்பு வர, “என் ஹஸ்பன்ட் தான்.., நான் வர கொஞ்ச நேரமாகும்.., வெயிட் பண்ணு..” உரைத்தவள்.., நிஹாவுக்கு எதிரில்.., விளக்கு கம்பத்தின் அடியில் நகர்ந்தாள்.

“என்னங்க.., சொல்லுங்க.., எழுந்திருச்சுட்டீங்களா? என்ன பிரேக்பாஸ்ட்..? கிளைமேட் எப்படி இருக்கு..?” லதாவின் குரல் ஒருவித உற்சாகத்தில் ஒலிக்க, தன் பார்வையை அங்கிருந்து விலக்கிக் கொண்டாள்.

மேலும் ஒரு மணி நேரம்.., என்ன பேசினார்கள் என்றே தெரியாமல், கணவன் மனைவி பேச்சில் மூழ்கிவிட, நிஹாசினியின் நினைவோ.., ராஜாவைச் சுற்றி வந்தது. கூடவே.., குழந்தையின் நினைவு வேறு இம்சிக்க, இவ்வளவு நேரமாக

லதாவிடம் பேசியதால் மறந்திருந்த நினைவுகள்.., ஆக்டோபஸ்போல் அவளைச் சுற்றிக் கொண்டது.

“நிஹா..” லதா அவள் தோள் தொட்டு உலுக்கிய பிறகே.., நடப்புக்குத் திரும்பினாள்.

“ஹேய்.., என்ன உக்காந்துட்டே தூங்கறியா?” அவள் வினவ, அமைதியாக எழுந்துகொண்டாள்.

நேரம் இரவு உணவுக்கு சென்றிருக்க.., உணவு அருந்திவிட்டே அறைக்குத் திரும்பினார்கள். நிஹாசினி தன் பொருட்களை அங்கே இருந்த கபோடில் அடுக்க, அவளுக்கு உதவினாள் லதா. அதில் இன்னும் சிறிது நேரம் செல்ல, அவரவர் படுக்கையில் ஏறி படுத்துக் கொண்டார்கள்.

“நிஹா.., காலையில் என்னோடவே காலேஜ் வரியா இல்ல நீயே போய்டுறியா..?”

“நான் உங்களோடவே வரேன்..” உரைத்தவள், இமைகளை அழுத்தமாக மூடிக் கொண்டாள். இமைகள் அவளை மீறி மூடிக் கொண்டது. நேற்று முழு இரவும் உறங்கியிராத காரணத்தால்.., உறக்கம் அவளைத் தழுவியது.

“ஓகே.., குட் நைட்..” லதாவும் திரும்பி படுத்துக் கொண்டாள்.

நள்ளிரவில் யாரோ முனகும் ஓசையில் லதா கண்விழிக்க, 'நிஹாவா முனகறா..?' எண்ணியவள், எழுந்து அறையின் விளக்கைப் போட, நிஹாதான் உறக்கத்தில் முனகிக் கொண்டிருந்தாள்.

'ஏன்..?' வேகமாக அவளை நெருங்கியவள், "நிஹா.., இங்கே பார்.., எந்திரி.., என்ன பண்ணுது..?" அவள் தோளை உலுக்கினாள்.

"ஹாங்.." திடுக்கிட்டு எழுந்து அமர்ந்தவள்.., தாங்க முடியாத மார்பு வலியில் துவண்டு போயிருந்தாள்.

"நிஹா.., ஜுரம் அடிக்குதா என்ன..?" வேகமாக அவள் நெற்றியில் தன் புறங்கையைப் பதித்தவள், அது நார்மலாக இருப்பதைப் உணர்ந்த பிறகே நிம்மதியானாள்.

"அதெல்லாம் இல்லை.., நான் வரேன்.." வேகமாக பாத்ரூமில் புகுந்தவள், இதயம் கனக்க, அங்கே காயப்போட்டிருந்த வெள்ளைத் துணியை கையில் எடுத்துக் கொண்டாள்.

பாத்ரூமில் இருந்து நிஹாவின் அடக்கப்பட்ட அழுகை சிறு விம்மலாக லதாவைத் தீண்ட, திடுக்கிட்டாள்.

"நிஹா.., மன்த்லி ப்ராப்ளமா? பேட் வேணுமா? டேப்லட் போட்டுக்கறியா?" கதவைத் தட்டினாள்.

“லதா ப்ளீஸ்..” என்னைத் தனியாக விடேன்.., என்ற பாவனையில் அவள் குரல் ஒலிக்க, அமைதியாக தன் படுக்கையில் வந்து அமர்ந்துகொண்டாள்.

முழுதாக பத்து நிமிடங்களுக்குப் பிறகு வெளியே வந்தவள், லதாவின் முகம் பார்க்கவே தயங்கி.., “சாரி.., உங்க தூக்கத்தையும் கெடுத்துட்டேன். இனிமேல் இப்படி ஆகாமல் பாத்துக்கறேன்..” அழுகையில் வீங்கியிருந்த அவள் முகத்தைப் பார்த்தவள், மேலே எதையும் கேட்கவில்லை.

“இட்ஸ் ஓகே.., ஆர் யூ ஓகே..?” இன்னும் லதா பதட்டமாகவே இருந்தாள்.

“ம்.., படுத்துக்கலாம்..” தன் படுக்கையில் படுத்தவள், முதுகு குலுங்க, அழுவது லதாவுக்குத் தெரிந்தாலும், எதுவும் செய்ய முடியாமல் படுத்துக் கொண்டாள்.

காலையில் எழுந்து கல்லூரிக்குக் கிளம்ப, நிஹாவோ ஒரு வார்த்தை கூட பேசவில்லை. இரவு நடந்ததைப் பற்றி கேட்கலாம் என்றாலோ.., அவள் முகத்தில் இருந்த கவலை அதைச் செய்யவிடாமல் தடுத்தது.

நேரமின்மையும் சேர்ந்துகொள்ள.., மாலையில் பார்த்துக் கொள்ளலாம் என கிளம்பிவிட்டார்கள்.

***ராஜாவோ.., குழந்தையை தூக்கிக்கொண்டு கீழே வந்தவன், சுஜாவிடம் குழந்தையைக் கொடுத்தான்.

‘‘நைட் எழுந்தாளா ராஜா..’’ கேட்டவாறு வாங்கிக்கொள்ள, ‘‘ஒரு டைம் எந்திரிச்சாம்மா.., இப்போ பால் கலந்து கொண்டு வாங்க.., கொடுத்துட்டு கிளம்பறேன்.., அம்மா.., இன்னைக்கு கார்த்திகா வீட்டில் சீனிவாசனைப் பத்தி பேசப் போகணும்.., நீங்க என்னம்மா சொல்றீங்க..?’’ அவர் முகம் பார்த்தான்.

‘‘நான் என்னப்பா சொல்லட்டும்.., சீனி வேற ஆளுங்க.., கார்த்தி வீட்டில் எந்த அளவுக்கு ஒத்துப்பாங்கன்னு தெரியலையே..’’ சற்று கவலையானார்.

‘‘அதுக்குன்னு அப்படியே விட முடியாதேம்மா.., இப்போவே ரொம்ப லேட் ஆகிடுச்சு.., இதுக்குமேலே அதை தள்ளிப்போடவும் முடியாது அதான்..’’ அவனுக்கும் அந்த கவலை இருக்கவே செய்தது.

‘‘கார்த்தி என்ன சொல்றா?’’

‘‘அவ என்ன சொல்லுவா.., சீனிகிட்டே என்னை இப்படியே கூட்டி போய்டுன்னு சொன்னாளாம். அதென்ன அவ்வளவு ஈசியா? அவன் ஜாப்.., அதோட பொறுப்புணர்வு எதுவும் இருந்த மாதிரியே தெரியலை. அவங்க வீட்டில் விஷயம் தெரிஞ்சு

மாப்பிள்ளை பார்க்க வேற ஆரம்பிச்சுட்டாங்க போல..'' கவலையானான்.

''ஐயோ.., இவ எதுவும் ஏடாகூடமா செய்யாம இருக்கணுமே..'' பதறினார்.

''உங்களுக்குத் தெரியுது.., அந்த லூசுக்கு தெரியணுமே.., பாக்க வந்த மாப்பிள்ளை கிட்டே.., நான் ஒருத்தரை விரும்பறேன்னு எல்லார் முன்னாடியும் சொல்லியிருக்கா. அவங்களும்.., இப்போ காதல் கீதல்ன்னு இல்லாதவங்க யார் இருக்கா.., எனக்கு ஒண்ணும் பரவாயில்லைன்னு சொன்னாங்க போல..'' அவன் நிறுத்த..,

''ஆமா.., சும்மா தங்க விக்ரகம் மாதிரி இருக்கவளை யார்தான் வேண்டாம்னு சொல்லுவாங்க..?'' சுஜா பதில் கொடுக்க,

''இந்த லூசு அதைக் கேட்டுட்டு.., கண்ட மாதிரி உளறி வச்சிருக்கு. அங்கே ஒரே பிரச்சனை.., சீனி போன் பண்ணி புலம்பறான். எனக்கு என்ன செய்யன்னே தெரியலை. அதான்.., நாங்களே நேர்ல போகலாம்னு பாக்கறோம்..'' ஒரு பெருமூச்சை வெளியேற்றினான்.

''என்னப்பா சொல்ற..? இவதான் விளையாட்டு பேச்சிலேயே விவகாரமா பேசி வைப்பாளே..'' பதறினார்.

“ம்.., அதேதான்.., அவங்க என்னன்னா.., அவளுக்கு சாப்பாட்டில் விஷம் வைக்கிற அளவுக்கு போய்ட்டாங்க..”

“என்னப்பா சொல்ற..? எனக்கு மனசே பதறுது..”.

“அவங்க ஜாதி வெறி.., என்னவேண்ணா செய்யச் சொல்லும். எனக்கு கேள்விப்பட்டதில் இருந்து மனசே சரியில்லை. அதான்..”

“ராஜா.., பாத்துப்பா.., சின்னஞ்சிறுசுக.., வாழ வேண்டிய வயசில்.., எதுவும் தப்பான முடிவுக்கு போய்டாம பாத்துக்கோ. வேண்ணா.., தாரிணியை கூட்டி போறியா?” அவர் கேட்க,

“ம்ச்.., அவங்க மேலேயும் கோபமா இருக்காங்க..” அது எதனால் எனப் புரிய, சட்டென அமைதியானார்.

பேசிக்கொண்டே குழந்தைக்கு பால் புகட்டி முடித்திருக்க, “சரிம்மா.., அங்கே போய் பேசிட்டு.., உங்களுக்கு கால் பண்றேன்..” குழந்தையை கொடுத்துவிட்டு கிளம்பிவிட்டான்.

செல்லும் வழியில் சீனிவாசனையும் கூப்பிட்டுக் கொண்டவன்.., அவன் டென்ஷனாக இருப்பதைப் பார்த்து, “விடுடா மச்சான் பாத்துக்கலாம். அதான் கார்த்தி தன் முடிவில் ஸ்ட்ராங்கா இருக்காளே பிறகென்ன..” அவனுக்கு நம்பிக்கை அளித்தான்.

“என் பயமே அதுதாண்டா. அவ உயிரா.., என் காதலான்னு வரும்போது.., எனக்கு அவ உயிர்தான் பெருசா இருக்குடா. ஆனா அவ.., உயிரை வேண்ணா விடுவேன்.., காதலை விட மாட்டேன்னு சொல்றாளே.., எல்லாம் என்னால் வந்ததுடா.., சும்மா இருந்தவ மனசில் ஆசையை விதைச்சுட்டு இப்போ..” தான் ஒரு ஆண்மகன், உயர்ந்த பதவியில் இருப்பவன் என்பதையும் மீறி கண் கலங்கினான்.

“ம்ச்.., முடிந்து போனதைப் பற்றி பேசி எந்த பிரயோஜனமும் இல்லை. இனிமேல் நடக்க வேண்டியது என்னன்னு மட்டும்தான் பாக்கணும்..” காரை கார்த்திகாவின் வீட்டுக்கு செல்லும் பாதையில் திருப்பினான்.

“அவங்க ஒத்துப்பாங்களாடா..?” தவிப்பாய் கேட்டான்.

நிச்சயம் மாட்டார்கள் என தெரிந்ததை சொல்ல முடியாமல் அமைதியானவன், “ஒத்துக்க வைக்கணும்.., அதுக்குத்தானே போறோம்..” அவன் மனதிலும் திகில்தான்.

காரை கார்த்திகாவின் வீட்டுக்கு முன்னால் நிறுத்தியவன், “வாடா..” அழைத்துக்கொண்டு, அந்த இரண்டடுக்கு வீட்டின் முன்னால் சென்று நின்றார்கள்.

அழைப்புமணியை அழுத்த.., கதவைத் திறந்த கார்த்திகாவின் தாய் பாமா.., ராஜாவைப் பார்த்து

புன்னகைத்தவர், அவனுடன் இருந்த சீனிவாசனைப் பார்த்து சற்று திடுக்கிட்டார்.

‘‘என்ன அத்த.., உள்ளே கூப்பிட மாட்டீங்களா..?’’ ராஜா கேட்க,

‘‘வாங்கோ..’’ விலகி வழி விட்டவர், அவர்களை அமரச் சொல்லிவிட்டு, தன் கணவனை கூப்பிட விரைந்தார்.

‘‘என்னை ஏண்டி அழைச்சுண்டு வர.., உனக்கே சொல்ல முடியலையோ.., அப்படியே வாசலோட அனுப்பாமல்.., உள்ளே வேற உக்காத்தி வச்சியா..?’’ அவர் கோபமாக இரைவது இவர்களுக்கு கேட்டது.

‘‘செத்த சும்மா இருங்கோ.., நம்ம பொண்ணோட வாழ்க்கை.., கொஞ்சம் பொறுமையா பேசுங்கோ..’’ தாயுள்ளம்.., மகளின் வாழ்க்கையை எண்ணி தவித்தது.

‘‘பொண்ணாடி பெத்து வச்சிருக்க.., இவளைத் தலைமுழுகி பிண்டம் வைக்கணும்..’’ கார்த்திகாவைப் பார்த்தவரது பார்வையில் கோபம் கொப்பளித்தது.

‘‘ஏன்னா.., அப்படிச் சொல்லாதேள்..’’ ஒற்றை மகளை உயிரோடு இருக்கையிலேயே பிண்டம் வைக்க வேண்டும் என்று சொன்னால் அவர் எப்படித் தாங்குவார்.

கோபமாக வெளியே வந்தவர்.., ‘‘கார்த்திகாவைப் பற்றி பேசுவதாக இருந்தால் இப்படியே எந்திரிச்சு போய்டுங்க..’’ வந்த வேகத்தில் வெடித்தார்.

‘‘மாமா.., ஒரு நிமிஷம்.., நான் சொல்வதைக் கேளுங்க..’’ ராஜா அவரை அமைதிபடுத்த முயன்றான்.

‘‘ஏண்டாப்பா.., எங்க வீட்டு கொல்லைப்பக்கம் கூட ஒதுங்க விட மாட்டோம்.., ஆனா.., உனக்கு எங்க வீட்டு பொண்ணு கேக்குதா?’’ கார்த்திகாவின் பாட்டி வேகமாக அங்கே வந்தார்.

அவரது வார்த்தைகள் சீனிவாசனை வெகுவாகத் தாக்கினாலும், கார்த்திகாவுக்காக பொறுத்துக் கொண்டான்.

‘‘அம்மா.., உன்னை யார் இப்போ இங்கே வரச் சொன்னது.? முதல்ல உள்ளே போ.., அதான் நான் பேசிட்டு இருக்கேனே..’’ தாயிடம் சாடியவர் அவர்கள் பக்கம் திரும்பினார். அவருக்கோ மகளது செயல் ஒரு பக்கம் வருத்தம் என்றால், தாயை எதிர்த்து பேச முடியாத அவர் நிலை கவலைக்கிடமாகவே இருந்தது.

மனைவியிடம் கோபமாக பேசினாலும், ஒற்றை மகளது விருப்பத்தை நிறைவேற்றிவிட மனதின் ஓரம் அவருக்கும் விருப்பம் இருக்கிறதுதான். ஆனால், அவரைப் பெற்றவளை மீற அவரால் முடியவில்லை. ஒரு தலைமுறைக்கு முந்திய

மனுஷிக்கு, அவர்கள் குல பெருமை அதிகமிருப்பதை என்ன செய்ய?

‘‘ராஜா.., இந்த சம்பந்தம் ஒத்துவராது.., நீங்க கிளம்புங்க..’’ தன் பொறுமையை அவர் இழுத்து பிடிப்பது தெரிந்தது. கூடவே தாயை அடக்கும் பார்வை பார்த்தார்.

‘‘மாமா.., அவங்க ஒருத்தருக்கொருத்தர் விரும்பறாங்க. இவனும் சாதாரணமானவன் இல்லை. ஐபிஎஸ் முடிச்சிருக்கான், அவளை நல்லா பாத்துப்பான்..’’ அவருக்கு புரிய வைக்க முயன்றான்.

‘‘இவன் அம்பானியாவே இருந்தாலும்.., எங்க பொண்ணை நாங்க கொடுக்குறதா இல்லை..’’ பாட்டி தன் பிடியில் இருந்து இறங்குவதாகவே இல்லை.

‘‘சார்.., நான் கார்த்திகாவை உயிரா விரும்பறேன்.., அவளை நல்லா பாத்துப்பேன்..’’ சீனிவாசன் இடை புகுந்தான்.

‘‘எங்க வீட்டு டம்ப்ளரில் எச்சப்படக்கூடாதுன்னு தூக்கி குடிக்கிறவங்க நாங்க.., அதில் நாய் வாய் வைக்க விட்டுடுவோமா..? பாட்டி எகிற.., அங்கே பாய்ந்து வந்தாள் கார்த்திகா.

‘‘சீனி.., எந்திரிங்க.., நான் இப்படியே உங்களோட வரேன்.., என்னை கூட்டி போய்டுங்க..’’ அவன் அவமானப்படுவதை அவளால் தாங்க முடியவில்லை.

‘‘இல்ல கார்த்தி.., பெரியவங்களை மீறி..’’ அவன் அப்பொழுதும் அவள் வீட்டிலிருந்து பிரித்து அழைத்துச் செல்ல விரும்பவில்லை.

‘‘அதான் இவ்வளவு தெளிவா சொல்றாங்களே முடியாதுன்னு.., இன்னும் எவ்வளவு அவமானத்தைதான் தாங்குவீங்க..’’ அவள் விம்ம,

‘‘ஏய்.., நீ உள்ளே போடி..’’ பாட்டி அவள் கையைப் பிடித்து இழுத்தார்.

‘‘ப்ளீஸ் பாட்டி.., வேண்டாம்..’’ அவரைத் தடுக்க முயன்றான் சீனிவாசன்.

‘‘ச்சீ வாயைக் கழுவுடா.., யாருக்கு யார்டா பாட்டி..’’ வெடித்தார்.

இப்படி ஒரு சூழலை ராஜா நிச்சயம் எதிர்பார்க்கவில்லை. அவன் திணற, ‘‘சீனி.., அப்போ என்னை இவங்களை மீறி அழைச்சுண்டு போக மாட்டீங்க.., சரி.., இவங்களும் ஒத்துக்கப்போவதில்லை.., நீங்களும் நான் கேட்டதை செய்யப்

போவதில்லை. இதுக்கு என்னதான் முடிவு..?'' அவனிடம் கேட்டவள்,

''என்னை கை கழுவலாம்னு முடிவு பண்ணிட்டீங்களா?'' ஆங்காரமாக கேட்டாள்.

''ஏய்.., கோபம்ன்னா என்ன வேண்ணா பேசுவியா..? உன்னை கை கழுவணும்னா அவன் எதுக்கு இங்கே வந்து இவ்வளவு அவமானத்தை தாங்கிட்டு நிக்கறான்..'' ராஜா கோபமானான்.

''என்னை இப்படியே இங்கேயே விட்டால்.., இவங்க கௌரவத்தை காப்பாத்திக்க என்னை கொலையும் செய்வாங்க.., அப்போ பரவாயில்லையா? சாவுறதுக்காகவாடா காதலிச்சோம்..? எனக்கு உன்னோட வாழணும் புரியுதா?'' பாட்டியிடமிருந்து கையை உருவியவள், சீனியின் சட்டையை கொத்தாக பற்றிக் கொண்டாள்.

அவன் திணற.., ''ஓ.., இழுத்துட்டு போனால் உன் கௌரவம் குறைஞ்சுடுமோ?'' கோபத்தில் பொரிந்தாள்.

''அப்படி இல்லம்மா.., உன் அம்மா அப்பாகிட்டே இருந்து பிரிச்சு உன்னை எப்படி நான் அழைச்சுட்டு போவேன்..?'' அவள் பிடியிலேயே இருந்தான்.

“அதான் உன் மனசு அவங்களுக்குப் புரியலையே.., பிறகு..” மேலும் அவனை உலுக்கியவள்.., “சரி.., நீ என்னை அழைச்சுட்டு போக வேண்டாம். நான் இங்கே, இவங்களோடவே இருந்துடறேன்.., ஆனா நான் கேட்பதை செய்யணும்.., என்ன செய்யறியா..?” அவள் கேட்க, ‘என்ன’ என்பதுபோல் அவளை ஏறிட்டான்.

“என்கூட வாழ்ந்து எனக்கு ஒரு புள்ளையை மட்டும் கொடுத்துடு.., அதை வளத்துட்டே நான் என் வாழ்க்கையை பாத்துக்கறேன். இவங்க எப்போ சம்மதிக்கறாங்களோ அப்போ என் கழுத்தில் தாலி கட்டி கூட்டி போ. என்ன செய்யறியா..?” அவ்வளவுதான்.., அங்கே ஊசி விழுந்தாலும் கேட்கும் அளவுக்கான அமைதி நிலவியது.

# அத்தியாயம் 16

**கா**ர்த்திகா இப்படி பேசுவாள் என்பதை அங்கிருந்த யாருமே எதிர்பார்த்திருக்கவில்லை. அவ்வளவு நேரமாக வாய் ஓயாமல் கத்திக் கொண்டிருந்த பாட்டி கூட ஒரு நிமிடம் அமைதியாகிவிட்டது.

ஆனால்.., அடுத்த நிமிடமே.., கார்த்திகாவை அவர் பேசிய பேச்சுக்கள்.., அச்சில் கோர்க்க முடியாத அளவுக்கு மீறிப்போக.., அவ்வளவு நேரமாக அவர்கள் சம்மதம் வேண்டி காத்திருந்த சீனிக்கு, தன்னை எவ்வளவு பேசியபொழுதும் கேட்டுகொண்டிருந்தவனால்.., கார்த்திகாவைப் பேசுவதைத் தாங்க முடியவில்லை.

“என்னோட வந்துடு.., இனிமேல் ஒரு நிமிஷம் கூட நீ இங்கே இருக்க வேண்டாம்..” அவளை தன் தோளோடு அணைத்துக் கொண்டான்.

“ராஜா.., ஒரு ப்ரெஸ் மீட் மட்டும் ஏற்பாடு பண்ணு.., மிச்சத்தை நான் பாத்துக்கறேன்..” நண்பனின் உதவியை நாடினான்.

‘‘என்னடா சொன்ன..? எங்க வீட்டு படியேறி.., எங்க கண்ணு முன்னாடியே அவளை கூட்டி போய்விடுவாயா? எப்படி செய்கிறாய் என நானும் பார்க்கிறேன்..’’ கார்த்திகாவின் பாட்டிதான் எகிறினார்.

‘‘என் பதவி தெரியாமல் பேசறீங்கன்னு நினைக்கறேன். மொத்த குடும்பத்தையும் தூக்கி உள்ளே வைக்க எனக்கு ஒரு நிமிஷம் ஆகாது. இத்தனைநாள்.., இவளைப் பெத்தவங்க என்பதால் மட்டுமே எல்லாத்தையும் பொறுத்துப் போனேன்.

‘‘அதுவும்.., அவளுக்கு அம்மா அப்பா சப்போட் வேணும் என்பதால் மட்டுமே செய்தேன். இப்போ நீங்க இவ்வளவு தூரம் பேசிய பிறகு.., இதற்குமேலேயும் அவளை நான் இங்கே விட்டுப் போனால்.., இந்த மீசை வைத்ததுக்கே அர்த்தம் இல்லாமல் போய்டும்.

‘‘எனக்கோ.., இவளுக்கோ ஏதாவது தொல்லை கொடுக்கணும்னு நினைச்சீங்க.., இந்த சீனியோடோ சுயரூபத்தை நீங்க பார்க்க வேண்டி இருக்கும். நான் சொல்றது புரியுதா..’’ ஒரு ஐபிஎஸ் அதிகாரியின் தோரணையும், நிமிர்வும் அவனிடம் வந்திருந்தது.

இவ்வளவு நேரமாக அவனை சாடியவர்கள் அனைவரும், அவனது இந்த பரிமாணத்தில் திகைத்துத்தான் போயிருந்தார்கள்.

இப்படி ஒரு திருப்பம் வரும் என்பதை அவர்கள் யாரும் எதிர்பார்த்திருக்கவே இல்லை. சீனிவாசன் அவளை அழைத்துச் செல்ல மாட்டேன் என்று சொன்ன தைரியதாலேயே இதுவரை ஆடிக் கொண்டிருந்தார்கள்.

இப்பொழுதோ.., சட்டென முடிவெடுத்துவிட.., அவர்களால் எதுவும் செய்ய இயலவில்லை. அடுத்த அரைமணி நேரத்தில்.., பத்திரிக்கையாளர்களை சந்தித்தவர்கள்.., விஷயத்தைச் சொல்லி.., கூடிய சீக்கிரம் தங்கள் திருமணம் நடைபெறும் என அறிவிக்க.., அடுத்த இரண்டு நாட்கள் இது பரபரப்பாகவே பேசப் பட்டது.

மூன்றாம் நாளே வேறு விஷயம் அவர்களுக்கு கிடைக்க.., இது பிசுபிசுத்துப் போனது.

கார்த்திகாவை தன் வீட்டுக்கு அழைத்து வந்த ராஜா.., தாய்வீட்டு முறைமைகள் அனைத்தையும் அவர்களே செய்து.., ஒரு சுபயோக தினத்தில் அவர்கள் திருமணத்தை தாங்களே நடத்திக் கொடுப்பதாக உரைக்க, சீனிவாசனும் அதை ஒத்துக் கொண்டான்.

அனைத்தையும் சுஜா மூலமாக அறிந்த ஹாசினிக்கு.., ராஜா தன்னிடம் எதையும் உரைக்கவில்லையே என்ற மிகப்பெரும் கவலை எழுந்தாலும், தான் நடந்துகொண்ட முறைக்கு அதை எதிர்பார்க்க முடியாது என்றே அவளுக்குத் தோன்றியது.

கல்லூரிப் பாடங்கள் மலைபோல் குவிந்திருக்க, நோட்ஸ் எடுப்பது, பாடங்களில் இருக்கும் சந்தேகங்களை ஆசிரியர்களிடம் கேட்பது என அவளது நாட்கள் கடினமாகத்தான் நகர்ந்தது.

அதைவிட.., அவள் ஏங்கிய படிப்பு.., நிர்வாகம்.., அவளுக்கான களம் என அவள் முடிவெடுத்திருந்த படிப்பு.., கைக்கெட்டாமல் போயிருந்த கனவு.., அது இப்படி ஒரு கடினமான தருணத்தில் கிடைத்தாலும், படிப்பை தன் நிலை பாதிப்பதை அவள் விரும்பவில்லை.

இடையில் சுஜா வருவதாக இருந்தது வேறு கார்த்திகாவின் விஷயத்தால் தள்ளிப் போயிருக்க.., தன் நிலையை சீராக்கிக் கொள்ளவென்றே பாட வேளைகளின் இடையில் கூட, ஹாஸ்டல் அறையை நாட வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானாள்.

அடுத்த பாடவேளை துவங்கும் முன்னர் வகுப்பிற்கு செல்ல முடியாமல் போக, அதற்கு வேறு அவர்களிடம் திட்டு வாங்கவேண்டி இருந்தது.

‘‘லதா.., உன் ரூம்மேட் அடிக்கடி ஹாஸ்டல்க்கு ஓடிப் போறாளே ஏன்? இதையெல்லாம் நீ கேக்க மாட்டியா? அவ வந்ததே லேட்.., இதில் இந்த ரோதனை வேற.., என்ன கேட்டாலும் பதிலே சொல்ல மாட்டேங்கறா.., ப்ரின்சிகிட்டே

சொன்னா.., ‘அவங்க இஷ்டத்துக்கு விடுங்கன்னு’ நமக்கே அட்வைஸ்..

“பணக்கொழுப்பு இருந்தால் அதை அவங்களோடவே வச்சுக்க வேண்டியதுதானே.., எதுக்கு இங்கே வந்து நம்ம உசுரை வாங்குதுக.., கொஞ்சம் கண்டிச்சு வை..” ஹாசினியின் ஆசிரியை ஒருவர் லதாவிடம் உரைத்துச் செல்ல, லதா யோசனையானாள்.

‘என்ன.., அவ இடையில் ரூமுக்கு போறாளா? அதனால்தான் கீயை அவள் வாங்கி வைத்திருக்கிறாளா?’ கோபம் கிளர்ந்தது.

ஹாசினியிடம் தான் எவ்வளவு பேசினாலும்.., அவளது கூட்டைத்தாண்டி அவளால், ஹாசினியை நெருங்கவே முடியவில்லை. பாதி நேரம் படிப்பு, மீதி நேரம் எதையோ பறிகொடுத்தாற்போன்ற வெறித்த பார்வை, சில நேரங்களில் விடாத அழுகை.., என்னவென்று கேட்டால் பதிலே வராது. இதில்.., அவளுக்கு பெருமூச்சு எழுந்தது.

அன்று கல்லூரி முடிந்து அறைக்குச் செல்ல, அங்கே அவளுக்கு முன்பாகவே வந்திருந்தாள் ஹாசினி.

“நிஹா.., காபி ஆச்சா?” லதா கேட்க, “இல்லை.., நீங்க வந்த பிறகு போகலாம்னு வெயிட் பண்ணிட்டு இருந்தேன்..”

சொன்னவள்., லதா தயாராகி வரவே.., இருவரும் சாப்பாட்டு அறைக்கு விரைந்தார்கள்.

அங்கே அந்த நேரம் கூட்டம் குறைவாக இருக்க.., “நிஹா.., காலேஜ் டைம்ல ஹாஸ்டலுக்கு வரியாமே..” அங்கே கல்லூரி வேளையில் ஹாஸ்டலுக்கு வரக் கூடாது என்பது விதி. எனவே அதை வைத்து வினவினாள்.

“ம்..” மெதுவாக அவள் முனக, “ஏன்..? அப்படியென்ன அவசியம்..? அதுவும் ரெண்டு மூணு வேளை வரியாம்..” ஒரு ஆசிரியையின் கண்டிப்பில் வினவினாள்.

ஹாசினி அமைதியாக இருக்கவே.., “பணம் இருந்தால் என்ன வேண்ணா செய்யலாமா? நீ இங்கே ஒரு ஸ்டூடண்ட் தான்.., அந்த நிலையில் இருக்க முடியவில்லை என்றால்.., ஏன் காலேஜூக்கு படிக்க வர..?” சூடாகவே கேட்டாள்.

அவளது பேச்சில் கண்கள் குளமாக.., பரிதாபமாக அவளை ஏறிட்டாள்.

“என்ன கேட்டாலும் உடனே கண்ணீரை காட்டிவிடு.., ச்சே.., உன்கிட்டே நான் இதை எதிர்பார்க்கலை.., இவ்வளவு அமைதியா இருக்கும் உனக்குள், இப்படி ஒரு பொண்ணா..? என்னால் நினைக்கவே முடியலை..” கண்டிப்பு தொனியை கொஞ்சம் கூட அவள் மாற்றவே இல்லை.

“எனக்குத் தெரிஞ்சாகணும்.., காலேஜ் டைம்ல எதுக்கு ஹாஸ்டலுக்கு வர? இந்த காலேஜ் ப்ரின்சி வேண்ணா உனக்கு பயப்படலாம்.., நான் பயப்பட மாட்டேன்.., சொல்.., இல்லன்னா நான் என் ரூமை மாத்திக்கறேன்னு போய் சொல்றேன்..” இருக்கையில் இருந்து எழ முயன்றாள்.

நிஹாசினியின் அமைதி அவளை கோபப்படுத்தியது மட்டும் உண்மை.

“ப்ளீஸ்.., அந்த ரூம்ல நான் மட்டும் தனியான்னா.., வேண்டாமே..” கெஞ்சியே விட்டாள்.

“இதுக்கு மட்டும் பதில் சொல்லத் தெரியுது.., நான் முதல்ல கேட்டதுக்கு என்னன்னு பதில் சொல்..” எனக்கு தெரிந்தே ஆகவேண்டும் என்னும் பிடிவாதம் அவளிடம்.

“உங்களுக்கு சொன்னால் புரியாது..” உரைத்தவளுக்கோ.., இதை எப்படிச் சொல்ல.., அப்படிச் சொன்னால்.., கைக்குழந்தையை விட்டுவிட்டு அப்படியென்ன படிப்பு பெரிதா என கேட்டுவிட்டால்? அதற்கு என்ன பதில் சொல்வது..?

“சொன்னால் தானே எனக்குப் புரியுமா இல்லையான்னு தெரியும்.., நீயே முடிவெடுத்தால் எப்படி..? சொல்ல முடியாதுன்னு சொல்லு.., அதைவிட்டு ஒரு சப்பை காரணம் வேற..” தன் கையை அவளிடமிருந்து உருவிக் கொண்டாள்.

ஏனோ லதாவின் விலகல் அவளை அதிகமாய் காயப்படுத்தியது. கல்லூரியில் அவளுக்கு இருக்கும் ஒரே ஆறுதல், துணை. அவளும் விலகிவிட்டால், இங்கேயும் தன் நாட்கள் நரகமாகிவிடும் என்பது உறுதி.

‘‘ப்ளீஸ் லதா.., இப்படி கோபமா பேசாதீங்களேன்..’’ இருக்கையில் இருந்து எழுந்தவள், அவள் கரத்தை மீண்டுமாக பற்றிக் கொண்டாள்.

‘‘வீணா இங்கே சீன் கிரியேட் பண்ணாதே..’’ அங்கிருந்த மாணவிகள் ஒன்றிரண்டுபேர் தங்களைப் பார்க்கவே சின்னக்குரலில் அழுத்தமாகவே உரைத்தாள்.

நிஹாவின் லதா என்ற அழைப்பு.., அவளை ஒரு மாதிரி நட்புக்குள் இழுத்தது மட்டும் உண்மை. ஆனாலும்.., தன் நெகிழ்வை காட்டாமல்.., அவள் மனதை திறக்கச் செய்வதே பிரதானமாக இருந்தது.

வந்த நாள் முதல்.., தனக்குள்ளாக விம்மித் தணியும் அவள் செய்கை.., உடன்பிறவா சகோதரியாகவே அவளைக் காண.., தேற்ற தூண்டியது.

‘‘இல்ல நிஹா.., என் முடிவை நான் மாத்திக்கிறதா இல்லை. இன்னும் ரெண்டு வருஷம்.., நாம ஒரே ரூமில் இருந்தாகணும். அப்படி இருக்கும்போது.., மினிமம் நம்பிக்கை கூட இல்லாமல்

அது சாத்தியமே இல்லை. நாம இப்படியே விலகிக்கிறது பெஸ்ட்..'' அவள் வார்த்தைகள் நிஹாசினியை பலமாகத் தாக்கியது.

அட்லீஸ்ட்.., ஒரு இரண்டு வருட சேர்ந்த பயணத்துக்கே மினிமம் நம்பிக்கை வேண்டும் என்கையில், வாழ்க்கை முழுவதற்குமான இணைந்த திருமண பந்தத்தில்.., தான் அந்த நம்பிக்கையை துளியளவு கூட கொண்டிருக்க வில்லையே.., என்ன மனுஷி நான்..,

ராஜாவை வார்த்தைகளால் கீறி, காயப்படுத்தி.., வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கி.., இப்பொழுது அவனது அன்பைப்பெற போராடுவதர்க்கே.., அந்த நம்பிக்கையின்மைதானே காரணம்.., முடியாது.., இதற்குமேல் வாழ்க்கையில் எதையும் இழக்க அவள் தயார் இல்லை.

முடிவெடுத்துவிட்டாள்.., லதாவிடம் அனைத்தையும் கொட்டிவிடுவது என்று. அவளிடம் சொன்னாலாவது இந்த மனதில் இருக்கும் அழுத்தம், பாரம் குறையுமென்றால்.., அதை செய்ய அவள் தயாராகிவிட்டாள்.

''நான் சொல்றேன்..'' அவள் கை பிடித்து அறைக்கு அழைத்து வந்தவள், அவளை கட்டிக் கொண்டவள், அவள் தோள் சாய்ந்து அழுகையில் குலுங்கினாள்.

‘‘நீங்க சொன்னீங்களே.., மினிமம் நம்பிக்கை.., அது கூட இல்லாமல்தான், இப்போ பெத்த பிள்ளையைக் கூட விட்டு.., அதுவும் பால்குடிக்கும் குழந்தையை விட்டு.., என் கணவனை விட்டு.., அம்மா, தங்கச்சி.., எல்லாரையும் விட்டு.., அநாதை மாதிரி இங்கே வந்திருக்கிறேன்..’’ அழுகையினூடே புலம்ப, லதாவுக்கு என்ன சொல்வது என்றே தெரியாத திகைப்பு.

அதிலும் பால்குடிக்கும் குழந்தையை விட்டு என்று சொன்னது.., ‘ஆண்டவா.., இவ என்ன சொல்றா..?’ அவளைப் பிரித்தவள், அங்கே இருந்த இருக்கையில் அமர வைத்துவிட்டு, பாட்டில் நீரை எடுத்து அவளுக்கு குடிக்கக் கொடுத்தாள்.

மறுக்காமல் அதை வாங்கிக் குடித்தவள், அழுகையைத் தொடர்ந்தாள்.

‘‘ஏய்.., இங்கே பார்.., இப்போ எதுக்காக அழற? நீ அழுதால் எல்லா பிரச்சனையும் சரியாகும்னா சொல்லு.., நானும் உக்காந்து அழறேன்..’’ அவளை உலுக்க, அதிர்ந்துபோய் அவளைப் பார்த்தாள்.

‘‘என்ன முழிக்கற? இந்த அழுகையால் ஒரு மண்ணும் பண்ண முடியாது. இதில் நிர்வாக படிப்புவேற.., இப்படி கோழையா இருக்குறவங்களுக்கு இந்த படிப்பெல்லாம் வெறும் அலங்காரம்தான். படிப்பு நம்மளோட தன்னம்பிக்கையையும்

தைரியத்தையும் வளர்க்கணும்.., அதைவிட்டு.., இப்படி தொட்டாச்சிணுங்கியா இருந்தால் படிப்பு வேஸ்ட்.

‘‘அதனால்.., இதுக்கு முதல்ல மூடுவிழா பண்ற.., இனிமேல் நீ இப்படி உக்காந்து அழறதைப் பாத்தேன்.., அப்படியே இழுத்துவச்சு அறஞ்சுடுவேன் புரியுதா..?’’ அதைச் செய்வேன் என நின்றாள்.

‘‘சரி இப்போ சொல்லு.., எதுக்கு கிளாஸ்க்கு நடுவில் ஹாஸ்டல் வர?’’ அவள் எதிரில் அமர்ந்தாள்.

‘‘அது.., தயங்கியவள்.., ‘‘நம்ம டாய்லெட்ல ஒரு வெள்ளைத்துணி எப்பவுமே இருக்கே.., அது ஏன்னு உங்களுக்குத் தெரியுமா?’’ அவள் கேட்க,

‘‘நான் என்ன கேக்கறேன்.., நீ என்ன உளர்ற..?’’ அவளுக்குப் புரியவில்லை.

‘‘என் குழந்தைக்கு அஞ்சு மாசம்தான் ஆகுது.., அவளுக்கு.., நான் இங்கே வர வரைக்கும் பர்ஸ்ட் பீட் தான் பண்ணிட்டு இருந்தேன்..’’ சின்னக் குரலில் உரைக்க.., ‘‘ஓ மை காட்..’’ தலையிலேயே கை வைத்துவிட்டாள் லதா.

‘‘ஏய்.., என்ன சொல்ற..? அப்போ.., அந்த துணி.., அன்னைக்கு நைட் நீ கஷ்டபட்டதுக்கும் அதுதான் காரணமா..?’’

கேட்டவளுக்கு ஒரு தலையசைப்பே விடையாகக் கிடைக்க, சத்தியமாக அதை ஜீரணிக்கவே முடியவில்லை.

‘‘பச்சப் புள்ளையை விட்டுட்டு வந்து படிக்கிற அளவுக்கு..’’ கேட்டுகொண்டே வந்தவள்..,

‘‘ஓகே.., எனக்குப் புரியுது.., நீ எதுவும் சொல்ல வேண்டாம்..’’ உரைத்தவளுக்கு, அவளது அழுகை.., குமுறல்.., வெறித்த பார்வை.., கூடவே, இப்படி ஒரு குழந்தையை விட்டு வந்திருக்கிறாள் என்றால்.., அவளது குடும்ப வாழ்க்கையில்தான் ஏதோ சிக்கல் என்பதை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது.

ஆனாலும்.., கைக்குழந்தையை பிடுங்கிக் கொண்டு.., அவளை இங்கே அனுப்புவதென்றால்.., அவர்கள் எவ்வளவு கல்நெஞ்சம் படைத்தவர்களாக இருக்க வேண்டும்.., எண்ணியவளுக்கு, நிஹாவின் கணவன்மேல் கட்டுக்கடங்காமல் கோபம் பெருகியது.

அதையே அவள் வார்த்தையில் வெளியிட.., ‘‘இல்ல.., அவர்மேல் எந்த தப்பும் இல்லை.., எல்லாம் நான்தான்.., என்னால்தான்..’’ வேகமாக உரைத்தாள்.

‘‘நீ ஆயிரம்தான் தப்பு செய்தாலும்.., உன் குழந்தை என்ன பாவம் பண்ணா? உன்மேல் இருந்த கோபத்தில் உன்

குழந்தையை பழிவாங்கி விட்டாரே..'' அவளால் முடியவே இல்லை.

முட்டிய அழுகையை லதாவின் கோபத்துக்காக அடக்கியவள்.., ''அவரோட சூழ்நிலை அப்படி.., அலையை அவங்க நல்லா பாத்துப்பாங்க'' கணவனைத் தாங்கியே உரைத்தாள்.

''தாய்ப்பால் யார் கொடுப்பா? அதுக்கும் ஆள் வச்சிருக்காங்களோ..?'' நக்கலாக மொழிந்தாள்.

''உன் புருஷனை மட்டும் என் கண்ணு முன்னாடி வர விட்டுடாதே.., இருக்குற கோபத்தில் அப்படியே..'' கழுத்தை நெரிப்பதுபோல் கையைக் காட்டியவள், ஆத்திரமாக கையை கீழே போட்டாள்.

''இல்ல.., முழு உண்மையும் தெரிய வந்தால் நீங்க இப்படி சொல்ல மாட்டீங்க. தப்பு முழுக்க என் மேல்தான்.., நான்தான்.., அவர்மேல் நம்பிக்கையே இல்லாமல் வார்த்தையால் அவரை கொன்னுட்டேன்..,

''அவ்வளவு ஆசையா என்னை கல்யாணம் பண்ணிகிட்டவரை, அவர் பக்கம் என்ன நடந்ததுன்னே கேட்காமல்.., தினம் தினம் அவரை வார்த்தையால் வதைத்து..,

அவர் உணர்வுகளைக் கொன்னு.., இப்படி ஒரு முடிவை அவர் எடுக்க காரணமே நான்தான்.

“இப்போ கூட.., எங்கே என்னை காயப்படுத்தி விடுவோமோ என்பதாலேயே இப்படி தள்ளி வைத்திருக்கிறார். நான் இங்கே வர மாட்டேன்னு ஒரு வார்த்தை சொல்லியிருந்தால்.., என்னை இங்கே அனுப்பியே இருக்க மாட்டார்.

“நான்தான்.., என் தப்புக்கு தண்டனை வேண்டும்னு இங்கே வந்திருக்கிறேன்..” மெல்லியதாக விசும்பினாள்.

“ஹையோ ஆண்டவா.., இந்த பொண்ணுங்களை ஏன் இப்படி படைச்ச..?” வாய்விட்டே புலம்பியவள், “சரி.., உன் தப்புக்கு நீ தண்டனை அனுபவிப்பது சரி.., உன் குழந்தை..” அவளிடம் கேட்க,

“அவளுக்கு அவங்க அப்பாவை நான் கொடுக்கணும்.., அவருக்கு அவரோட மகளை நான் முழுசா கொடுக்கணும், அதான்..” அவள் அதற்கும் ஒரு விளக்கம் சொல்ல, தன் தலையிலேயே அடித்துக் கொண்டாள்.

“இப்போ தப்புக்கு தண்டனைன்னு சொல்லி.., விருப்பப்பட்டுதானே இங்கே வந்திருக்க.., பிறகு ஏன் இந்த அழுகை..? செய்தது தப்புன்னு தெரிஞ்சுட்டாலே பாதி சரியான

மாதிரிதான். மிச்சத்தை காலம் கவனிக்கும்.., நீ இனிமேல் எதையும் போட்டு குழப்பிக்காதே சரியா.., காலேஜ்ல நான் பேசிக்கறேன்..'' விஷயத்தை அத்தோடு முடித்துக் கொண்டாள்.

ஆனாலும்.., நிஹாசினியின் கணவனைக் கண்டால்.., நாக்கைப் பிடுங்கிகொள்ளும் அளவுக்கு கேள்வி கேட்க வேண்டும் என்பதை மட்டும் உறுதியாக எண்ணிக் கொண்டாள். ஆனால்.., அவனை நேரில் பார்க்கையில் அது முடியாது என்பது பாவம் அவளுக்கு அப்பொழுது தெரிந்திருக்கவில்லை.

அதன் பிறகு நிஹாசினியை தனிமையில் அவள் விடவே இல்லை. கல்லூரிப் பாடங்களை தனக்குத் தெரிந்த அளவில் விவரிப்பது துவங்கி, நோட்ஸ் கூட கலெக்ட் செய்து கொடுத்து உதவினாள். அவர்களுக்குள் ஒரு ஆழமான நட்பு அங்கே உதயமானது.

மேலும் இரண்டு நாட்கள் கடக்க.., நிஹாசினி பாதி தேறிவிட்டாள் என்றுதான் சொல்ல வேண்டும். வார இறுதி நாளில் சுஜா அவளைக் காண வருவதாகச் சொல்லவே.., ஆவலோடு அவர் வருகையை எதிர்பார்த்தாள்.

ராஜா வருகிறானா என்ற கேள்வியையே அவள் கேட்கவில்லை.., நிச்சயம் அவன் வருவான் என அவளுக்குத் தெரியும்.

காலையில் ஒரு முறை மட்டும் தன் மார்பின் கனத்தை இறக்கியவள், அதன் பிறகு குழந்தையின் வருகைக்காக காத்திருக்கத் துவங்கினாள்.

அவள் மனதின் ஓட்டத்துக்கு கடிகாரம் ஓடுமா என்ன? அலைபேசியில் அழைக்கலாம் என்றாலோ.., வருகிறேன் என அவர்கள் உரைத்துவிட்ட பிறகு, இடையில் பேச அவளுக்கு தயக்கமாக இருந்தது.

‘‘நிஹா.., வீட்டில் இருந்து ஆட்கள் வராங்கன்னு சொன்ன உடனே, முகமெல்லாம் மத்தாப்பூவா வெடிக்குது..’’ அவளை கேலி செய்தவள், ‘‘குழந்தையை இங்கே தூக்கிட்டு வா சரியா.., எனக்கு உன் பொண்ணை பாக்க ஆசையா இருக்கு..’’.

‘‘கண்டிப்பா கூட்டி வரேன்..’’ உரைத்தவள்.., ஆர்வமாக காத்திருந்தாள். நேரம் பத்துமணியைக் கடக்க.., மார்பின் கனம் ஏறத் துவங்கியது. தான் சுத்தம் செய்த பிறகு குழந்தை வந்துவிட்டால்.., அந்த நினைவிலேயே அமைதியாக இருந்து கொண்டாள். குழந்தையின் நினைவில், அமுதம் அதிகமாகவே சுரந்தது.

நேரம் பதினொன்றை எட்ட.., அப்பொழுதுதான் அவளுக்கு விசிட்டர் வந்திருப்பதாக வந்து அழைத்தாள் ரமா.

“லதா.., நான் வரேன்..” கிட்டத்தட்ட ஓடினாள். ஆனால்.., அங்கே விசிட்டர் அறையில் யாரும் இல்லாமல் போகவே.., கேள்வியாக பார்வையைச் சுழற்ற, “அம்மா.., ஆபீஸ் ரூம்ல அவங்க இருக்காங்கன்னு சொல்ல முன்னாடி வந்துட்டீங்க..” ரமா உரைக்கவே.., கால்களை எட்டிப் போட்டாள்.

கல்லூரிக்குச் செல்ல ஆன இரண்டு நிமிடத்தில்.., என்னவோ ஏழு மயில் ஓடி வந்த களைப்பு அவளை ஆட்கொண்டது. சுஜா வராண்டாவில் குழந்தையோடு இருக்க.., குழந்தை அழுதுகொண்டிருப்பதை அவளால் உணர முடிந்தது.

“அக்கா..” பாய்ந்தோடியவள்.., குழந்தையை கைகளில் அள்ளிக்கொண்டாள். நொடியில் நூறு முத்தங்களை இட்டவள்.., “அலை.., செல்லம்.., அம்மாடா..” அவள் அழுகை குறையாமல் போகவே, குழந்தையிடம் கொஞ்சினாள்.

“நிஹா.., அவ பசியில் இருக்கா.., முதல்ல பசியாத்து..” சுஜா உரைக்க, சட்டென எங்கே செல்வது என்றே புரியவில்லை.

“காருக்கு போ..” அவளிடம் உரைக்க.., குழந்தையை தூக்கிக்கொண்டு விரைந்தாள்.

தாயைக் கண்ட சந்தோஷத்தில்.., இன்னும் அதிகமாக அழுது தன் தேவையை உணர்த்தினாள் குழந்தை. காரின் பின்னிருக்கையில் ஏறி அமர்ந்தவள்.., குழந்தையை மடியில்

கிடத்திய பிறகுதான் தான் புடவையில் இல்லை.., சுடிதாரில் இருக்கிறோம் என்பதே புரிந்தது.

குழந்தையோ பசியில் வீறிட.., "ம்.., ங்.., ங்கா.." இன்னும் ஏன் கொடுக்கவில்லை என்னும் விதத்தில் அழுகையைத் தொடர்ந்தாள். ஐந்துமாத குழந்தைக்கு அழுவதைத் தவிர வேறு என்ன தெரியும்?

தன் துப்பட்டாவை விசிறியவள்.., "இல்லடி செல்லம்.., இப்போ கொடுத்துடறேன்.." சுடிதார் டாப் வேறு சற்று இறுக்கமாக இருக்க.., அவளுக்கு அழுகையே வந்துவிடும்போல் இருந்தது.

ஒரு வழியாக குழந்தைக்கு பசியாற்ற துவங்கிய பிறகே நிமிர்ந்து பார்த்தாள். ரிவர்ஸ் வியூ கண்ணாடியில் அவள் பார்வை பதிய, காரின் முன்னிருக்கையில்.., இமைகளை அழுந்த மூடி.., சீட்டில் தலை சாய்த்து படுத்திருந்தான் ராஜா. அவன் கருமணிகள் சுழல்வதில் இருந்தே, அவன் உறங்கவில்லை என்பதை அவளால் உணர்ந்துகொள்ள முடிந்தது.

ஒரு வாரத்துக்குப் பிறகு தன்னவனைப் பார்க்கிறாள். இமைக்க மறந்தாள்.., அவனுக்கோ.., அவ்வளவு நேரமாக அவள் தவித்த தவிப்பு.., குழந்தையின் அழுகையையும் மீறி.., அவளது தவிப்பே அவன் கண்முன் நிழலாடியது.

‘உன்னை ரொம்ப கஷ்டப்படுத்தறேன் இல்ல..’ மனதுக்குள் அவளிடம் கேள்வி கேட்டாள். குழந்தைக்கு நிகராக இருந்த அவளது தவிப்பை கண்டவனுக்கு, தான் மனித தன்மையே இல்லாமல் நடந்து கொண்டுக்கிறோம் என்பது புரிய தாங்க முடியவில்லை.

‘ஹையோ.., என்ன செய்து வைத்திருக்கிறேன் நான்? இதை எப்படி சரி செய்ய போகிறேன்? குழந்தையையும் தாயையும் பிரித்து..’ அவனுக்கு கண்கள் கலங்கும்போல் இருந்தது.

அவளுக்கோ, அவனிடம் பேச அவள் மனம் தவித்தாலும்.., என்ன பேசுவது என்றே தெரியவில்லை. ராஜாவோ.., அந்த இடத்தில் இருக்க முடியாமல்.., சட்டென கார்க் கதவைத் திறந்து வெளியேறினான்.

தலையை அழுந்த கோதிக் கொண்டவனுக்கு.., மனதின் அழுத்தம் குறையவில்லை. இலக்குத் தெரியாமல் அவன் கால்கள் பயணிக்க.., “ராஜா.., நீ எங்கே இங்கே..?” ஒரு ஆச்சரியக்குரல் அவனைத் தேக்க.., அப்பொழுதுதான் தான் நடந்தவாறே ஹாஸ்டல் இருக்கும் பகுதிக்கு வந்தது தெரிந்தது.

சட்டென திரும்பியவன்.., “லதா.., நீ.., இங்கே.., இங்கேயா வொர்க் பண்ற..?” அதே ஆச்சரியத்தை அவனும் வெளிப்படுத்தினான்.

# அத்தியாயம் 17

கிட்டத்தட்ட இரண்டு வருடங்களுக்குப் பிறகு லதா, ராஜாவைப் பார்க்கிறாள். அவனது திருமணத்துக்கு செல்ல வேண்டிய நேரத்தில்.., அவளது தாய்க்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் அவளால் அங்கே செல்ல முடியவில்லை.

இன்று எதிர்பாராத விதத்தில் அவனைப் பார்த்தது அவளுக்கு ஆச்சரியமே.

“நான் இங்கேதான் வொர்க் பண்றேன்.., அது இருக்கட்டும்.., உன் மேரேஜ் லைப் எப்படிப் போகுது? லவ் மேரேஜ்ன்னு எனக்குத் தெரியும். யார் அந்த லக்கி கேர்ள்..? அவங்களும் வந்திருக்காங்களா? எனக்கு பாக்கணும்..” தன் நண்பனைப் பற்றி அவளுக்குத் தெரியுமாகையால் ஆர்வம் கொப்பளித்தது.

“சத்தியமா ராஜா.., அவங்களைப் பாக்க முன்னாடியே, அவங்கமேலே எனக்கு பொறாமையா இருக்கு. ராஜாவோட காதல் அவங்களுக்கு கிடைச்சிருக்கே.., அப்படியே உள்ளங்கையில் வச்சு தாங்குவியே..” பொறாமை என உரைத்துவிட்டாலும், அவள் குரலில் மருந்துக்கும் அது இருக்கவில்லை.

லதா தன் மனைவியைப் பற்றி சொல்லச் சொல்ல.., அவன் முகம் வேதனையில் கசங்கியது. ‘‘ம்ச்..’’ மெல்லியதாக சலித்துக் கொண்டான்.

‘‘ராஜா.., என்ன..? ஏன் இப்படி இருக்க?’’ அவள் திகைத்தாள். அவளுக்கு தெரிந்த ராஜா இப்படி கிடையாது. அவனிடம் எப்பொழுதும் ஒரு உற்சாகம் கொப்பளிக்கும். பெண்கள்மேல் அவ்வளவு மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தவன், தன் காதல் தன் மனைவிக்கு மட்டுமே என காத்திருந்தவன் ஆயிற்றே.

‘‘இப்போ நீ சொன்னதுக்கு நேர் ஆப்போசிட்டா நடந்துட்டு இருக்கேன்..’’ வேதனையாகவே உரைத்தான்.

‘‘இல்ல.., நான் நம்ப மாட்டேன்..’’ ராஜாவால் அப்படி நடக்கவே முடியாது என அவள் மனம் அடித்துச் சொன்னது.

‘‘நீ நம்பவில்லை என்றாலும் அதுதான் உண்மை..’’ நிதானமாகவே உரைத்தான்.

‘‘ஓ.., அப்படின்னா அவங்க உன் காதலை புரிஞ்சுக்கலைன்னுதான் நான் சொல்வேன்..’’ தன் தோழி தன்மேல் வைத்திருக்கும் நம்பிக்கையில் ஒரு சதவீதம் கூட, ஹாசினி ஏன் வைக்கவில்லை..’ அவன் மனம் ஊமையாய் கேள்வி கேட்டது.

அங்கே சட்டென ஒரு அமைதி நிலவ, ‘‘ஓகே ரிலாக்ஸ்.., இங்கே யாரைப் பாக்க வந்த?’’ கேள்வியை இலகுவாக்கினாள். அவனைப் பார்த்த முதல் நாளே, அவனது பெர்சனல் வாழ்க்கையை துருவ முடியாதே.

‘‘நிஹாசினி இங்கேதான் படிக்கறா..?’’ அவன் உரைக்க, அவன் சொன்ன பெயரில் ஆணியடித்தாற்போல் அப்படியே நின்றுவிட்டாள்.

‘‘ராஜா.., அப்போ நீயா நிஹாவோட ஹஸ்பண்ட்..?’’ குரல் காற்றாகத்தான் வெளிவந்தது. அவளால் ராஜாவை ஒரு சதவீதம் கூட நிஹாவின் கணவனோடு பொருத்திப் பார்க்க முடியவில்லை. நிஹாவின் கணவனை ஒரு கொடுமைக்காரனாக, மனசாட்சி இல்லாதவனாக, அன்பற்றவனாக கற்பனை செய்து வைத்திருந்தவளுக்கு அது பேரிடியாகத்தான் இருந்தது.

அவள் முகத்தில் இருந்த அதிர்ச்சியிலேயே அவள் மனதைப் படித்தவனுக்கு, என்ன விளக்கம் சொல்வது என நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனால், லதாவுக்கு தன்னை மீட்டுக்கொள்ள சற்று நேரம் தேவைப்பட்டது. அவள் மௌனத்தை அவனும் கலைக்கவில்லை.

‘‘எப்படி ராஜா உன்னால் முடிந்தது? கைக்குழந்தையிடமிருந்து அதோட அம்மாவைப் பிரிச்சு.., உன்

மனைவியைப் பிரிஞ்சு.., சத்தியமா, இப்படி ஒரு செய்கையை நான் உன்கிட்டே எதிர்பார்க்கவே இல்லை. அவ உன் மனைவியாக மட்டும் இருந்திருந்தால் இதை நான் உன்னிடம் கேட்டிருக்கவே மாட்டேன்.

“ஆனா அவ ஒரு கைக்குழந்தைக்கு தாய். அது உனக்கு தெரியவே இல்லையா? ஒரு பெண்ணாக அவளது மனநிலை என்னவாகவும் இருக்கட்டும், ஆனா ஒரு தாயாக அவள் மனசு என்ன பாடுபடும்? அத்தோட..” துவங்கியவள், ஒரு பெண்ணாக நிஹாவின் உடல் நிலையைக் குறித்து அவளால் பேச முடியவில்லை. அதை நிஹாதான் அவனிடம் தெரிவிக்க முடியும்.

சற்று நிதானித்தவள், “என்னோட ப்ரண்ட் ராஜாவுக்கு அன்பு காட்ட மட்டும்தானே தெரியும். இது., என்ன ராஜா.., ஏன்..?” அவளால் அந்த விஷயத்தை ஜீரணிக்கவே முடியவில்லை.

“தெரியலை லதா.., எங்க ரெண்டுபேர் பக்கமும் தப்பு இருக்கு. ஆனா.., திருமண பந்தத்தின் அடிப்படையான நம்பிக்கை.., அது இல்லாமல் போனதால் ஏற்பட்ட விளைவுதான் இது எல்லாம்..” விரக்தியாக உரைக்க, ராஜாவை அவளால் இப்படிப் பார்க்கவே முடியவில்லை.

“அதுக்காக.., இவ்வளவு பெரிய தண்டனையை நீ நிஹாவுக்கு கொடுத்திருக்க வேண்டாம்..” அவளால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

“தெரியலை.., நான் செய்யிறது சரியா, தப்பா.., எதுவுமே எனக்குப் புரியலை. ஒண்ணு மட்டும் புரிஞ்சது.., அவ என்னோடவே இருந்திருந்தால்.., கண்டிப்பா அவளை ரொம்ப காயப்படுத்திடுவேன்னு புரிஞ்சது.., அதான்.., அவளை மொத்தமா பிரியிறதுக்கு.., இந்த தற்போதைய பிரிவு பரவாயில்லைன்னு தோணிச்சு. ஆனா இப்போ..,

“குழந்தையைப் பிரிந்து அவ படுற கஷ்டத்தைப் பாக்குறப்போ.., எனக்குதான் தெரியலை.., புரியலை.., அவளுக்குத் தெரியும்தானே.., அவ சொல்லியிருக்கலாமே..” ஆற்றாமையாகக் கேட்டான்.

“இதே கேள்வியை நான் அவகிட்டே கேட்டப்போ.., அவளோட குழந்தைக்கு அப்பாவை முழுசா கொடுக்கணும்னு நினைச்சேன்னு சொன்னா..” அவள் சொல்ல,

“அப்படியா சொன்னா..? லதா.., ஆபீஸ்ல, கடையில நான் எடுக்கும் எல்லா முடிவும் மிகச்சரியா இருக்கு. ஆனா.., வாழ்க்கையில்.., எல்லாமே தப்பாவே முடியுது..” வேதனையை

விழுங்கிக் கொண்டான். அவனுக்கு சற்று முன்பாகவே உறைத்த விஷயத்தை அவள் சொல்ல, மனம் தவித்துப் போனான்.

‘‘அதுக்குக் காரணம் ஒண்ணே ஒண்ணுதான்.., வாழ்க்கையின் முடிவுகளை நீங்க சேர்ந்து எடுக்கணும் ராஜா. என் முடிவை நீ ஏத்துக்கணும்னு சொல்றது முட்டாள்த்தனம்..’’ நிதானமாகவே உரைத்தாள்.

‘‘ஹம்.., புரியுது.., கண்டிப்பா இனிமேல் அப்படியே செய்யறேன்..’’.

‘‘ராஜா.., நேத்து வரைக்கும் உங்களுக்கு நடுவில் என்ன நடந்தது என்பதைப் பற்றி எனக்கு அக்கறையில்லை.., ஆனா.., இப்போ சொல்றேன்.., பழசை எல்லாம் விட்டுடு.., இன்னைக்குதான் உங்க வாழ்க்கை ஆரம்பிக்குதுன்னு நினைச்சுக்கோ.., மாற முயற்சி பண்ணு.

‘‘அவளும் தான் செய்தது தப்புன்னு புரிஞ்சுகிட்டா. நீயும் தப்பு பண்ணேன்னு சொல்ற.., அப்போ.., அதை விட்டுட்டு புதுசா துவங்குங்க. கஷ்டப்பட்டுட்டே இருந்தால் யாருக்கு லாபம்? அவகிட்டே பேசு.., இங்கே வந்தது முதல் அவ முகத்தில் சந்தோஷத்தையே என்னால் பார்க்க முடியலை.

“உன்னைப் பார்த்தால்.., நீயும் சந்தோஷமா இருக்குற மாதிரி தெரியலை சோ.., பீ ஹேப்பி ஆல்வேஸ்..” அவள் சொல்லி முடிக்கையில், குழந்தையோடு அங்கே வந்தாள் நிஹா.

“லதா.., அலை..” குழந்தையை அவள் கையில் கொடுக்க முயல, அவளோ தாயை விட்டு வர மாட்டேன் என தாயின் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

அதைப் பார்த்தவள்.., “ரொம்ப நாள் கழிச்சு கிடைத்த அம்மாவை அவளுக்கு விட மனசில்லை அதான். நீயே வச்சுக்கோ.., உரைத்தவள்.., ‘பார்த்தாயா..’ என்பதுபோல் அவனை பார்வையால் சுட்டுவிட்டு,

“ராஜா, குழந்தை அப்படியே உன்னை மாதிரி.., எப்படி துருதுருன்னு இருக்கறா பார்..” குழந்தையின் கன்னத்தை கிள்ளினாள்.

“உங்களுக்கு இவரைத் தெரியுமா..?” அவர்கள் பேசிகொண்டிருந்த விதத்தைப் பார்த்தே அவளுக்கு புரிந்தது.

“தெரியுமாவா.., காலேஜ்ல என்னோட பெஸ்ட் ப்ரண்ட் இவன்தான். சரி.., நீங்க பேசிட்டு இருங்க.., நான் பிறகு வரேன்..” அவர்களுக்கு தனிமை கொடுத்து விலகினாள்.

அவள் செல்லவே.., “காலேஜ் பிடிச்சிருக்கா ஹாசினி? புட் எல்லாம் ஓகேயா? ரூம் வசதியா இருக்கா..?” நீண்ட

நாட்களுக்குப் பிறகு தன்னிடம் இயல்பாக உரையாடும் அவனை விழி விரிய பார்த்திருந்தாள். நிஹாவை இதற்குமேல் தவிக்க விடும் எண்ணம் அவனுக்கு சிறிதும் இருக்கவில்லை.

அவள் பார்வைக்கான அர்த்தம் புரிந்தாலும், அதை அவன் கண்டுகொள்ளவில்லை.

“ம்.., எல்லாம் வசதியா இருக்கு. வீட்ல எல்லாரும் எப்படி இருக்காங்க..?”

“எல்லோரும் நல்லா இருக்காங்க..” பதில் கொடுத்தவன், அவளிடமோ, அவள் அவனிடமோ எப்படி இருக்கிறாய் என்று கேட்கவில்லை. பதில் தெரிந்த கேள்வியை கேட்பதால் யாருக்கு என்ன பயன்?

“வெளியில் போயிட்டு வரலாமா? இல்ல.., உனக்கு எதுவும் வேலை இருக்கா?” அவளை அப்படியே விட்டுச் செல்ல அவனால் முடியவில்லை.

“வேலை இருந்தாலும்.., நீங்க கூப்ட்டு நான் வராமல் இருப்பேனா?” இரு பொருள்பட உரைக்க, அவனுக்குத்தான் என்ன சொல்வது என்று தெரியவில்லை.

குழந்தையோ.., அவளது தாலிக்கொடியை எடுத்து வாயில் வைத்து சப்பிக்கொள்ள, அதைப் பார்த்தவனுக்கு நிச்சயம் குழந்தைக்கு தான் நியாயம் செய்யவில்லை என்று தோன்றியது.

கண்களில் காதலைத் தேக்கி அவனைப் பார்க்க, அவனும் அவளைத்தான் பார்த்துக் கொண்டிருந்தான்.

இதுவரை அவள் கண்களில் அவன் தேடிய காதல், இப்பொழுது காணக் கிடைக்கையில், அனுபவிக்க முடியாத சூழலில் தான் நிற்பதை எண்ணி கலங்கி நின்றிருந்தான்.

அப்படியே நிற்பதால் என்ன பயன், நினைத்தவன், “அலை.., வா..” அவன் அழைக்க.., தாயிடமிருந்து அவனிடம் செல்ல மறுத்து, அவள் கழுத்து வளைவில் முகத்தை புதைத்துக் கொண்டாள்.

ஒரு குழந்தையிடம் அப்பாவையும், மாமாவையும் காட்டி உனக்கு யார் வேண்டும் எனக் கேட்டால்.., தயங்காமல் அப்பா வேண்டும் என உரைக்கும். அதேபோல்.., அப்பாவா.., அம்மாவா எனக் கேட்டால்.., நிச்சயம் தாயிடம்தான் ஒட்டிக்கொள்ளும். அதற்காக அவளுக்கு அப்பாவை பிடிக்காது என்பதில்லை.., மாறாக.., அப்பாவைவிட அம்மா ஒருபடி மேலே அவ்வளவுதான்.

அதை அவன் சரியாக உணர்ந்த நொடி அதுதான்.

“எவ்வளவு நேரம்தான் கையிலேயே வைத்திருப்பாய்.., கை வலிக்கப் போகுது..” அக்கறையாகக் உரைத்தான்.

“பரவாயில்லை.., கொஞ்ச நேரம் தானே.., நானே வச்சுக்கறேன்..” எங்கே அவளைக் கொடுத்தால், அவன் கூட்டிக்கொண்டு போய்விடுவானோ.., என்ற பயத்தை அவள் கண்களில் பார்க்க, தவித்துப் போனான்.

“வெளியே போகலாமான்னு கேட்டேனே..” அவன் நினைவூட்ட.., முகம் பூவாய் மலர, அவனோடு நடக்கத் துவங்கினாள்.

“ஹாசினி.., புடவை மாத்திக்கோ.., நாம வர நேரமாகலாம்..” இன்று முழுவதும் உன்னோடுதான் என அவன் சொல்லாமல் சொல்ல, நிஹாசினியின் முகத்தில் அவ்வளவு மகிழ்ச்சி.

“இப்போ வரேன்..” குழந்தையை அவன் கையில் கொடுக்க, அவளோ.., அவளது தாலிக்கொடியை விடாமல் பற்றிக் கொண்டாள்.

“அம்மா இப்போ வரேண்டா.., அப்பாகிட்டே இரு..” அவள் கையில் இருந்து தாலியை விடுவித்துக் கொள்ள, அலையோ அழுகையில் சிணுங்கினாள்.

“என் செல்லமில்ல.., அம்மா வந்துடுவேன்.., அம்மா எங்கேயும் போக மாட்டேண்டா..” அவளை சமாதானப்படுத்த, ‘என்னாலும்தான் உன்னை விட்டு இருக்க முடியலை..’ அவன்

முகம் தன் ஏக்கத்தை பிரதிபலிக்க, ஒரு நொடி அவனை வெறித்தவள், அவன் முகத்தில் இருந்த பாவனையில், தேகம் சிலிர்த்துக் கொண்டாள்.

அவன் கரத்தை ஆதரவாக ஒரு நொடி பற்றியவள்.., வேகமாக திரும்பிச் சென்றாள். அவள் செல்லவே, அவள் கரத்தை பற்றியவன், “சாரி..” அவன் உணர்ந்து சொல்ல, கலங்கிய கண்களை மறைத்தவள், விலகிச் சென்றாள். கொஞ்சம் கூட ஈகோ பார்க்காமல் அவன் கேட்கும் மன்னிப்பு அவளை சுட்டது என்றே சொல்லலாம்.

இப்படி வருந்துபவனிடம், நான் மார்பில் பால் கட்டி வலியில் தவிக்கிறேன் என அவளால் சொல்ல முடியவில்லை. சொன்னால் தாங்குவானா என்றும் தெரியவில்லை. அவன் தெரிந்து இதைச் செய்யவில்லை என்று அவளுக்குத் தெரிகிறதே.

இப்பொழுது அவன் மனதை புரிந்து கொண்டதைப்போல், சற்று முன்பும் செய்திருந்தால், இந்த பிரிவுக்கு அவசியமே இருந்திருக்காதே, எண்ணியவள், தன் தவறுக்கான தண்டனையை அனுபவித்தே ஆகவேண்டும் என எண்ணியவளாய்.., சென்ற வேகத்தில் புடவை மாற்றி திரும்பி வர, காரை எடுத்துக்கொண்டு கிளம்பினார்கள்.

அவர்களை மலர்ந்த முகத்தோடு பார்க்க சுஜாவுக்கு அவ்வளவு சந்தோஷமாக, நிறைவாக இருந்தது. அவர்கள்

வாழ்க்கை சீக்கிரமே சரியாகிவிடும் என்ற நம்பிக்கையை அவருக்கு அளித்தது.

முதலில் தங்களது கடை இருக்கும் இடத்துக்குச் சென்றவர்கள், ‘‘ஹாசினி.., உனக்குத் தேவையானதை எடுத்துக்கோ..’’ உரைத்தவன், மேனேஜரை அழைத்து, அங்கிருக்கும் நிலவரங்களை கேட்டறிந்தான்.

அத்தோடு.., நிஹாவை அழைத்தவன், ‘‘சுப்பிரமணி.., இவங்கதான் இனிமேல் இந்த கடையை பாத்துப்பாங்க. ரிப்போர்ட் எல்லாம் இவங்களுக்கு அனுப்புங்க, ஏதாவது இஷ்யூ இருந்தாலும் இவங்களையே நீங்க கன்சல்ட் பண்ணுங்க ஓகே..’’ இருவருக்கும் பொதுவாக உரைக்க, நிஹாவுக்கே ஒரு நிமிடம் எதுவும் புரியவில்லை.

கூடவே.., அங்கே இருந்த தனக்கான அறையில் நுழைந்தவன், ஒவ்வொரு தளத்தில் இருந்த சூப்ரவைசர்களை அழைத்து, அவளை அறிமுகப்படுத்தினான். கூடவே.., ஒவ்வொரு தளத்தில் இருந்து பத்து பத்து பேராக அழைத்தவன், அவர்களுக்கும் தங்கள் முதலாளியை அடையாளம் காட்டினான்.

‘‘ஓகே.., நீங்க எல்லாம் போகலாம்..’’ அனைவரையும் அனுப்பினான். கூடவே சுப்ரமணியிடம், ‘‘மணி.., எவ்விரி

சாட்டர்டே மார்னிங் காரை அனுப்பி நிஹாவை கூட்டி வர வேண்டியது உங்கள் பொறுப்பு..'' அவனையும் அனுப்பினான்.

அவன் செய்கையில் ஏற்கனவே முடிவெடுத்த ஒரு நிதானம் தெரிய, இது அவசர முடிவாக அவளுக்குத் தெரியவில்லை.

ஆனால்.., இதை தன்னால் செய்ய முடியுமா? மிகப்பெரும் வினா கண்முன் எழ, ''நிஹா.., கண்டிப்பா உன்னால் செய்ய முடியும்.., எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு. நீ கடையை ஒரு முறை பாத்துட்டு வா..'' அவளுக்கு பதில் கொடுக்கவே வாய்ப்பு கொடுக்கவில்லை.

அவள் திகைத்து நிற்கவே.., அவள் அருகில் வந்த சுஜா, ''நிஹா.., என்ன அப்படியே நின்னுட்ட.., கொஞ்சம் கொஞ்சமா கத்துக்கலாம். முதல்ல கடையைப் போய் பார். அனுபவப் பாடத்தை எந்த ஏட்டும் நமக்கு கத்துக் கொடுக்காது..'' அவள் தோளில் தூங்கிவிட்ட குழந்தையை தன் கைகளில் வாங்கிக் கொண்டார்.

''சரிக்கா..'' உரைத்தவள், ராஜாவை நிமிர்ந்து பார்க்க, ''ஆல் தி பெஸ்ட்..'' அவள் கரத்தைப் பிடித்து அழுத்தமாக குலுக்கியவன், மென்மையாக அணைத்து விலகினான்.

நிச்சயம் அது அவளுக்கு கொடுத்த நம்பிக்கை பெரிது. கடையைப் பார்க்க கிளம்பியவள், அடுத்த ஒரு மணி நேரம்

எப்படி சென்றது எனத் தெரியாத அளவுக்கு, ஒவ்வொரு பகுதியையும் அலசினாள். அதில் சில குறைகளையும் அவளால் உணர முடிந்தது.

'இதை நிவர்த்தி செய்ய முடியுமா?' கேள்வியான மனநிலையோடு, ராஜா இருந்த அறைக்கு வர, அவளை புன்னகை முகமாகவே வரவேற்றான் ராஜா.

"என்ன பாத்தாச்சா? முதல் பார்வையில் ஏதாவது சஜஷன்..?" அவன் எதிரில் இருந்த இருக்கையைக் காட்டினான்.

அதைப் பார்த்து அவள் திகைக்க, "எதுக்கு இப்படி முழிக்கற? இனிமேல் இதுதான் உன்னோட சீட்.., உக்காரு நானும் பார்க்கட்டும்.." அவன் உரைக்க,

சுஜாவோ ஒரு படி மேலே போய்.., " இப்போ நேரம் கூட நல்லா இருக்கு உக்காரும்மா.." கைபிடித்து அழைத்து உக்கார வைத்தார்.

சத்தியமாக நடப்பது எதையும் அவளால் நம்ப முடியவில்லை. ஆனால்.., நடப்பவை அனைத்தும் உண்மைதான் என ராஜா அடுத்து பேசிய பேச்சு உணர்த்தியது.

"ஹாசனி.., நான் கேட்டதுக்கு பதில் சொல்லவே இல்லையே.." அவளுக்கு நினைவூட்ட,

“இப்போதான் முதல் முறையா பாக்கறா.., உடனே கேட்டால் எப்படி ராஜா” சுஜாதான் அவனை அடக்கினார்.

“இல்லம்மா.., ஏதோ இருக்கு” அவன் அடித்து சொல்ல, தன் முகத்தைப் பார்த்தே எப்படி அவனால் கணிக்க முடிகிறது என வியந்தாள்.

“இல்ல.., நம்ம கடையில் வேலை செய்யிறவங்களுக்கு லீவ் கொடுப்பது கிடையாதா?” அவள் கேட்க,

“லீவ் கொடுப்பதுன்னா.., அவங்க கேட்டா கண்டிப்பா கொடுப்போம். ஆனா ஒரு நாள் சேலரி கட் ஆகும்னு நினைக்கறேன். இது முன்னாடியே இருப்பது.., அதில் நான் எதுவும் மாற்றலை..” தன் தாடையை வருடியவாறு உரைத்தான்.

“ஓ.., மாசத்துக்கு ஒரு நாள் கொடுக்கலாமே.., அதுவும் அவங்க ரெண்டு நாள் முன்னாடியே கேட்கும் பட்ச்சத்தில் அதை செய்யலாம்னுதான் நினைக்கறேன். அதே மாதிரி.., மாசத்துக்கு ஒரு பெர்மிஷன்.., அதுவும் ஒரு மணி நேரம் கொடுக்கலாம்..” அவள் உரைக்க,

“கண்டிப்பா செய்.., ஆனா.., ஒரே நாள்ல மொத்தமா எல்லாரும் லீவ் எடுத்தால் கஷ்டம் பாத்துக்கோ. அதே மாதிரி பெஸ்டிவல் நாள்ல ரொம்ப சிக்கலாயிடும்..” அனைத்தையும் யோசித்தான்.

‘‘அது சரிதான்.., ஆனா.., பெஸ்டிவல் நாள் மட்டும் டபிள் சேலரின்னு சொன்னா.., சாரி.., எனக்கு அக்கவுண்ட்ஸ் நிலவரம் என்னன்னு தெரியாது.., நான்பாட்டுக்கு சொல்லி அது சிக்கலாயிடக் கூடாது..’’ வேகமாக உரைக்க, சிரித்துக் கொண்டான்.

அவன் சிரிப்பதைப் பார்த்து.., ‘‘ஏன் சிரிக்கறீங்க..?’’ மெல்லியதாக சிணுங்கினாள்.

அதில் கவரப்பட்டவன்.., வேகமாக பார்வையை திருப்பிக் கொண்டான். தன்னை நொடியில் சுதாரித்தவன், ‘‘சும்மாதான்..’’ அவன் இன்றுதான் இவ்வளவு இலகுவாக இருப்பதாக சுஜாவுக்குத் தோன்றியது. அவனது அந்த ஒரு நொடி பார்வை மாற்றம் கூட நிஹாவை வருடிச் சென்றது.

‘இன்னும் என்னை ரசிக்கிறார்..’ ஒரு மனைவியாக பெருமை கொண்டாள். வாழ்நாள் முழுவதும் அவனுக்கு பிடித்தவளாக இருந்துவிட்டுப் போகவேண்டும் என்பதைத் தவிர, அவளுக்கு வேறு விருப்பங்கள் இல்லையே.

‘‘அது ஒண்ணுமில்லம்மா.., மாசம் நாம எவ்வளவு டேக்ஸ் கட்டுறோம் அது தெரியாமல் பேசுறியேன்னு சிரிக்கறான் போல. படவா.., வீட்டு வரவு செலவு எல்லாம் அவளுக்கு

சொல்லியிருக்கியா என்ன..? கேலி பண்ற..'' வாஞ்சையாக அவன் தலை கோதினார்.

''எல்லாம் பக்காவா பண்ணிடலாம்.., சூப்ரவைசர்கள் கிட்டே பேசு.., ரெண்டு மாசம் பார்.., அது சரியா இருந்தால் கண்டினியூ பண்ணலாம்..'' உடனே ஒத்துக்கொண்டான்.

''நீங்களே பேசிடுங்க..'' அவள் வேகமாக உரைக்க,

''நோ வே.., பொறுப்பை உன்கிட்டே கொடுத்துட்டேன்.., நீதான் செய்யணும். ஓகே.., எனக்கு ரொம்ப பசிக்குது.., ஹோட்டல் போகலாம்..'' அங்கிருந்து கிளம்பினார்கள்.

அவளுக்கு என்ன பிடிக்கும் என கேட்டு ஆடர் செய்தவன்.., அன்று நிச்சயம் திருப்தியாக உண்டான். மாலை நான்கு மணி வரைக்கும் நேரம் போனதே தெரியாமல் ஊர் சுற்றியவர்கள்.., கல்லூரிக்கு வர, பிரிவின் தாக்கம் யாரை அதிகம் தாக்கியது என்றே சொல்ல முடியவில்லை.

பசியாறிய குழந்தை மீண்டும் உறங்கி விட்டிருக்க.., சுஜா காருக்குள் ஏறி அமர்ந்துகொண்டார்.

''ஹாசினி.., ரொம்ப ஸ்ரெயின் பண்ணிக்காதே.., ஜஸ்ட் பாசானால் போதும். இந்த படிப்பு சும்மா பேருக்குதான் புரியுதா..'' ஏதாவது பேச வேண்டுமே என்று இருந்தது அவனது பேச்சு.

‘‘ம்..’’ முனகியவளின் குரலில் கண்ணீர்த்தடம்.

‘‘இங்கே எதுவும் கஷ்டமா இல்லையே..’’ இதை கேட்கும்பொழுதே எவ்வளவு அபத்தம் என்பதை உணர்ந்து கொண்டான்.

‘இங்கே எதுவும் கஷ்டமா இல்லை.., இங்கே இருப்பதுதான் கஷ்டமா இருக்கு..’ மனதுக்குள் புலம்பியவள், மறுப்பாக தலை அசைக்க,

‘‘சரி.., அப்போ நான்..’’ இங்கே வரும்பொழுதே அவளிடம் தன் பாராமுகத்தை காட்டக் கூடாது என முடிவெடுத்து வந்தவனுக்கு, அதை செய்துவிட்ட திருப்தி நிச்சயம் இருந்தது.

தன் முடிவுக்காக.., எனத் துவங்கிய பேச்சு.., ஒரு சுழலுக்குள் சிக்கியதுபோல், அவளோடு இயல்பாக உறவாடத் தூண்டியதில் லயித்துத்தான் போயிருந்தான். விடைபெறுகையில்.., அதிகம் வலித்தது.

‘இது தேவையே இல்லையே.., இப்படியே கூட்டிக்கொண்டு போய்விடுவோமா?’ ஒரு நிமிடம் எண்ணியவன், அவளது தன்னம்பிக்கையை தனித்துவத்தை கலைக்க வேண்டாம் என மனதை இறுக்கினான்.

அவன் கார்க் கதவைத் திறக்க, ‘‘வில் மிஸ் யூ ராஜ்.., மிஸ் யூ பேட்லி…’’ சற்று நெருங்கியவள் முனக.., அந்த

இடத்தைவிட்டு நகர முடியும் என்றே அவனுக்குத் தோன்றவில்லை.

அவளை அப்படியே இறுக்கிக்கொள்.., என மனம் உந்த, சுற்றிலும் ஒரு நொடி பார்வையை சுழற்ற, ஆங்காங்கே இருந்த ஹாஸ்டல் மாணவிகளைப் பார்த்து தன் முடிவை வேகமாக மாற்றிக் கொண்டான். ஆனாலும், இவ்வளவு தவித்து நிற்பவளை எப்படி அப்படியே விட்டுச் செல்ல,

அவள் கரத்தை அழுத்தியவன், தன் அருகே இழுத்துக் கொண்டான். இதழ்கள் முட்டிக்கொள்ளும் அளவுக்கான நெருக்கம்.., அவள் இதயம் வேகமாய் துடிக்க, நெஞ்சுக்கூடு விம்மித் தணிந்தது. ஏனோ அந்த நொடியின் கனத்தை தாங்கிக் கொள்ளவே முடியவில்லை. “ரெண்டு நாள்ல வரேன்.., டேக் கேர்..” அவள் நெற்றியில் மென்மையாக இதழ் பதித்து விலக, அவன் சட்டையை கொத்தாக பற்றிக் கொண்டாள்.

அவள் செய்கை, சற்று முன்னர் அலை அவளது தாலிக்கொடியை பற்றிக்கொண்டு விலக மறுத்ததை ஒத்திருக்க, அப்படியே அவளை அழைத்துக்கொண்டு சென்றுவிட தேகம் பரபரத்தது.

“ஹாசினி.., கண்டிப்பா வரேம்மா.., ஜஸ்ட் டூ டேஸ்.., உன் முன்னாடி நிப்பேன்..” அவள் தவிப்பதை உணர்ந்த பிறகு அவனால் சென்னையில் இருக்க முடியுமா என்ன?

அவளுக்கோ.., அவனைவிட்டு விலகவே முடியவில்லை. ‘என்னால் முடியலை..’ கதறத் துடித்த நாவை அடக்கியவள், “நிஜமா..” அவள் கண்களில் தவிப்போடு வினவ, அலைக்கும் அவளுக்கும் அவனுக்கு வித்தியாசமே தெரியவில்லை.

தன் சட்டையை கொத்தாக பற்றியிருந்த அவள் கரத்தின்மேல் கை வைத்து அழுத்தியவன்,

“பிராமிஸ்..” உரைத்தவனுக்கு, நிச்சயம் அது சாத்தியமாகாது எனத் தெரிந்திருந்தால் சொல்லியிருக்க மாட்டானோ..

இரண்டு நாட்கள் பதினைந்து நாட்களாக மாறினால்..., நிஹாவின் நிலை???

# அத்தியாயம் 18

அடுத்த இரண்டு நாட்கள் மின்னல்போல் கடந்தாற்போல் இருந்தது. ராஜாவுக்கு தனக்கும் நிஹாவுக்கும் நடுவில் பேசி தீர்க்க வேண்டிய பிரச்சனைகள், விஷயங்கள் அதிகம் இருக்கிறது எனத் தெளிவாகத் தெரிந்ததுதான்.

ஆனாலும்.., மேலே பேசிபேசி ஒருவரை ஒருவர் காயப்படுத்திக் கொள்வதால் என்ன பயன் என்பதால் அமைதியாகவே இருந்தான். அவனுக்கு ஒரு விஷயம் உறுதியாகத் தெரிந்தது.., அது நிஹாவை விட்டு தன்னால் இருக்கவே முடியாது என்பது.

அன்று அங்கே இருந்து கிளம்புகையில் அவள் கண்களில் தெரிந்த தவிப்பு, ‘இந்த பிரிவை தேர்ந்தெடுத்திருக்க கூடாது..’ லட்சம் முறையாக எண்ணிவிட்டான். ஆனால், இப்பொழுது அவள் படிப்பில் காட்டும் ஆர்வத்தை பார்த்த பிறகு, அவளை வீட்டுக்குள், குழந்தையைக் காட்டி முடக்கவும் அவன் விரும்பவில்லை.

ஏற்கனவே அந்த படிப்புக்காக அவள் எவ்வளவு ஆசைபட்டாள் என்பது அவனுக்குத் தெரியுமே.

அன்று காலையிலேயே சுஜாவிடம் சொல்லிவிட்டான்.., நேரம் கிடைக்கும்போது விழுப்புரம் சென்று அவளை பார்த்துவிட்டு திரும்புவேன் என, உடனடியாக அதை நிஹாவுக்கு தெரிவித்துவிட்டார்.

கல்லூரியில் பாடத்தில் கவனம் பதிய முடியாமல்.., எப்பொழுது தன்னை வந்து அழைப்பார்கள் என காத்துக் கொண்டிருந்தாள். நேரம் ஓடிக்கொண்டு இருந்ததே தவிர, மதிய இடைவேளை வரை அவளது எதிர்பார்ப்பு நிறைவேறவே இல்லை.

தாங்க முடியாமல் சுஜாவுக்கு அழைக்க, அந்த அழைப்பு எடுக்கப்படாமல் நீண்டுகொண்டே சென்றது. நேரடியாக ராஜாவுக்கு அழைத்தால்.., அவனது அலைபேசி அணைத்து வைத்திருப்பதாக உரைக்கவே குழம்பிப் போனாள்.

அதே நேரம்.., மலர் மருத்துவமனையில், ஐசியூவின் முன்னால் மொத்த குடும்பமும் பதைபதைப்பாய் காத்துக் கொண்டிருந்தது. இந்த முறை அங்கே இருந்தவர் தனா.

காலை பதினோரு மணி வாக்கில்.., தலை சுற்றலாக இருக்கிறது என உரைத்தவர் அப்படியே சரிந்துவிட, மொத்த குடும்பமும் ஆடிப் போனது.

மருத்துவமனை, ஆம்புலன்ஸ் என ஒவ்வொரு இடத்திற்கும் அழைப்பு பறக்க, ராஜாவுக்கு சொல்ல வேண்டாம் என்பதையும் மீறி அவனுக்கு விஷயத்தை உரைத்தவர் குணாவே.

குணாவுக்கு அவ்வளவு திறமையாக நிலைமையை சம்மாளிக்க முடியவில்லை. அந்த வீட்டின் ஆணிவேர்.., அடியோடு சாய்கையில், அதைத்தாங்கும் கிளையான ராஜாவைத்தார் அவர் தேடினார். அவன் இல்லையென்றால், எதையும் தன்னால் செய்ய முடியாது என்பது அவருக்குப் புரிந்தே இருந்தது.

அதற்குமேல் சுஜாவால் ராஜாவின் வரவை தடுக்க முடியவில்லை. அதன் பிறகு கணவனைத் தவிர வேறு சிந்தை அவருக்கு இருக்கவில்லை.

விழுப்புரத்துக்குச் செல்ல பாதி வழியில் இருந்தவன், தன் வாகனத்தை அப்படியே திருப்பிவிட்டான். நிஹாவுக்குச் சொல்ல வேண்டும் என்றே அப்பொழுது யாருக்கும் தோன்றவில்லை. அங்கே இருந்த சூழல் அப்படி. குடும்பத்தின் ஆணிவேர், அதுவே சாயக் கிடக்கையில், யாராலும் எதையும் யோசிக்க முடியவில்லை.

மருத்துவர் வேலுவோ.., உடனடியாக தனாவுக்கு ஆப்பரேஷன் பண்ண வேண்டும் எனச் சொல்ல.., திகைத்துப்

போனார்கள். கூடவே.., தனாவுக்கு பிபி அதிகம் இருக்க, அதுவும் ரிஸ்க் என்றே உரைத்தார்கள்.

ராஜாதான் அதிகம் மனதொடிந்து போனான். தான் மட்டும் சரியாக, திடனாக இருந்திருந்தால்.., இவ்வளவு தூரத்துக்கு வர விட்டிருக்க மாட்டேன்.., என புலம்பியவன், தயங்கியது சில நிமிடங்கள்தான். அடுத்த நிமிடம், என்னென்ன வழிகள் இருக்கிறது என ஆராயத் துவங்கினான்.

இப்பொழுது ஓப்பன் ஹார்ட் சர்ஜரியே சாதாரணமாகப் போய்விட்டாலும், பாமர மக்களுக்கு அது பெரிய விஷயம் தானே. சர்ஜரி இல்லாமல் வேறு என்ன செய்யலாம் என நெட்டில் தேட, டெல்லி எய்ம்ஸ் மருத்துவமனையில், அறுவை சிகிச்சை இல்லாமல் இதயத்தின் அடைப்பை நீக்கும் சிகிச்சை அளிப்பதை கண்டுகொண்டவன், அடுத்த இரண்டு நாட்களில் அவரை அழைத்துக்கொண்டு டெல்லிக்கு விரைந்தான்.

அங்கே அவரது உடல்நிலையை ஆராய்ந்து.., பிபியை சீராக்கி.., சிகிச்சை துவங்க மேலும் நான்கு நாட்கள் ஓடியே விட்டது. மேலும் ஒரு வாரம் அவரது உடல்நிலை சீராக எடுத்துக்கொள்ள.., கிட்டத்தட்ட பதினைந்து நாட்கள் கழித்து அவர்கள் சென்னையை அடைந்தார்கள்.

குழந்தைக்கு விடாமல் லூஸ் மோஷன் ஆக.., குழந்தைக்கு புட்டிப்பால் ஒத்துக்கொள்ளவில்லை என்று மருத்துவர் அவர்களை காய்ச்சி எடுத்துவிட்டார்.

குழந்தையை துளசியும், தாரிணியும்தான் பார்த்துக் கொண்டார்கள். துளசியும் ராஜாவிடம் எவ்வளவோ சொல்லிப் பார்த்துவிட்டார். நிஹாசினியை அழைக்கலாம் எனச் சொல்ல, பிடிவாதமாக அதை மறுத்துவிட்டான்.

அவனது வார்த்தையை மீறி அவராலும் எதுவும் செய்ய முடியவில்லை. ஒரு வார்த்தை தனாவின் உடல்நிலையைப் பற்றியாவது சொல்லலாம் என்றால், அவள் மறு நிமிடம் இங்கே வந்து நிற்பாள் என்பதால் அதையும் மறுத்துவிட்டான்.

சென்னை வந்து இறங்கிய அன்று.., சுஜா, அவனை நிஹாசினியைப் பார்க்கப் போகச்சொல்லி விரட்டினார். கூடவே.., அவளை கையோடு அழைத்துவர கட்டளை இட்டார். வரும்பொழுது துளசி வீட்டில் இருந்து குழந்தையையும் கூட்டி வரச் சொன்னார். பொதுவாக அவரது பேச்சை அவன் மீறுவதில்லை என்பதால்.., உடனடியாக கிளம்பிவிட்டான்.

அதைவிட, அவனுக்குமே அவளைக் காண மனம் தவியாய் தவித்தது. இரண்டு நாட்களில் வருகிறேன் எனச் சொன்னவன்.., பதினைந்து நாட்களாக ஒரு போன் கூட செய்யவில்லை

என்றால்.., அவள் எவ்வளவு தவித்திருப்பாள் என அவனுக்குப் புரியாமல் இல்லை.

ஆனால்.., அவள் இங்கே வந்திருந்தாலும் குழந்தையோடு இருந்திருக்க முடியும் என்பதைத் தவிர வேறு எதுவும் பெரிதாக நடந்திருக்காது என்பது அவனது எண்ணம்.

அவனுக்கு அவளது மனநிலை புரிந்த அளவு, அவளது உடல்நிலை புரியவில்லை என்றே சொல்லலாம். தாய்ப்பால் கொடுக்கும் ஒரு தாய்க்கு, குழந்தைக்கு பால் கொடுக்கவில்லை என்றால், அவள் எப்படிப்பட்ட வலியை அனுபவிப்பாள், அதன் பின்விளைவு எதுவும் அவனுக்குத் தெரியவில்லை.

கூடவே.., கல்லூரியில் சேர்ந்த உடனே, லாங் லீவ் என்றால்.., அதையும் அவன் யோசித்தான். அவன் யோசிக்காமல் விட்ட விஷயம்.., அவள் ஒரு தாய் என்பதைத்தான்.

இந்த பதினைந்து நாட்களில்.., அவள் குற்றுயிராகிப் போனாள் என்று சொன்னால் அது மிகையில்லை. கல்லூரியை அடைந்தவன், அன்று வேலை நாள் என்பதால்.., நேரடியாக பிரின்சிபாலை போய்ப் பார்த்தான்.

அவன் காத்திருந்த அந்த வேளையில்.., அலுவலகத்துக்கு வந்த லதா.., அவனைப் பார்த்தவள், “உன்கிட்டே இதை நான் எதிர்பார்க்கவே இல்லை ராஜா. நீ இப்படி செய்ததுக்குப் பதிலா,

அவளைக் கொன்னு போட்டிருந்தால் நான் சந்தோஷப் பட்டிருப்பேன்.

“அவளை உன் மனைவியா பார்க்க வேண்டாம்.., சக மனுஷியா பார்த்திருக்கலாமே.., அவ ஒரு குழந்தையோட அம்மா என்பது உனக்கு கொஞ்சம் கூடவா ஞாபகத்துக்கு வரவில்லை.., ச்சே..”

“உன்னை இப்போ ஒரு மனுஷனா கூட என்னால் நினைக்க முடியலை ராஜா. அட்லீஸ்ட் ஒரு தகவல்.., ஏன் வர முடியலன்னு ஒரு விளக்கம்.., அதை செய்யக் கூடவா உன்னால் முடியலை. யாருக்கு அழைத்தாலும் பதில் இல்லை, அவ மனுஷியா இல்ல மெஷினா.., போடா..” உச்ச கோபத்தில், ஆத்திரமாக மொழிந்தவள், அதே வேகத்தில் விலகிச் சென்றாள்.

அதிர்ந்துபோய்.., உறைந்துபோய் அவன் நிற்க, கண்களில் மட்டும் உயிரைத் தாங்கி.., கிட்டத்தட்ட ஓடி வந்தாள் நிஹாசினி.

“ராஜ்.., அலை.., குழந்தை எங்கே..?” ஒரு தாயின் பரிதவிப்பு அவளிடம்.

அன்று தன்னை மிஸ் செய்வதாக உரைத்தவள், இன்று தன்னைப் பார்த்து ஒரு மலர்ச்சி கூட இல்லாமல், குழந்தையைத் தேட, அவனுக்கு கோபம் கிளர்ந்தது. இத்தனைநாள் ஏன்

வரவில்லை, எங்கே சென்றாய்.., எதுவும் கேட்காமல்.., குழந்தைதான் பெரிதாகப் போய்விட்டாளா?

ஒரு ஆண்மகனாக அவனுக்கு சிந்தை இப்படித்தான் போனது. ஒரு வார்த்தை கூட செல்லாமல் அவன் காருக்குச் செல்ல, அவன் பின்னால் ஓடினாள்.

“அலை கார்ல இருக்காளா..?” அவனுக்கு முன்னால் ஓடியவள், காரில் அவள் இல்லாமல் போகவே திகைத்தாள். காரைத் திறந்து உள்ளே ஏறியவள்.., குமுறி அழ, அவள்மேல் கோபமாக இருந்தாலும், அவள் அழுவதை அவனால் பார்க்க முடியவில்லை.

அவள் அருகில் அமர்ந்தவன்.., “அலையைப் பார்க்கப் போகலாம்., அழாதே..” அவளை சமாதானம் செய்ய முயன்றான்.

“எனக்கு இப்போ அலை வேணும்.., அம்மா.., என்னால் முடியலையே..” அரற்றியவள்.., கால்களைக் குறுக்கி, முகத்தை புதைத்துக் கொண்டாள்.

“அதான் வீட்டுக்குப் போகலாம்னு சொல்லிட்டேனே..” அவன் கோபம் கொண்டான். அவள் படும் துன்பத்தின் அளவு அவனுக்கு புரியவே இல்லை.

நிஹாசினிக்கோ.., தன் நிலையை வார்த்தையால் விவரிக்க முடியாத நிலை. பால் கட்டிய மார்புகள் இரண்டும்

பாறாங்கல்லாக மாறியிருக்க, அதனால் ஏற்பட்ட வலியில்.., உச்ச காய்ச்சலில் கொதித்துக் கொண்டிருந்தாள். இவை எதையுமே அவன் உணராமல் பேச.., தன் நிலையை அவனுக்கு விளக்க முடியாமல்.., அவன் கரத்தை பற்றி.., கல்லாகிப் போயிருந்த இடத்தில் வைத்து அழுத்தியவள்.., வலியில் வீறிட்டாள்.

‘‘ச்சே.., என்ன பண்ற நீ..? இதுக்கு அலைந்துதான் உன்னைப் பார்க்க வந்தேன்னு நினைத்தாயா..?’’ வார்த்தைகளால் அவளை வதைத்தவன், வேகமாக காரில் இருந்து இறங்கி நின்றான்.

அவ்வளவுதான்.., நொறுங்கிப் போனாள் நிஹா. காரில் இருந்து இறங்கியவனுக்கு அப்பொழுதுதான் அந்த விஷயம் உறைத்தது. தன் கையில் பாறாங்கல்லைத் தீண்டியதுபோல்.., அதைவிட.., தன்னைப் பிடித்த நிஹாவின் கரத்தின் வெப்பம்..,

‘‘ஓ மை காட்..’’ தன் தலையிலேயே வேகமாக அடித்துக் கொண்டவன், காருக்குள் பாய்ந்தான்.

அவளை தன்னோடு இறுக்கியவன், ‘‘ஹாசினி.., உனக்கு உடம்பு சரியில்லையா..? இங்கே பாரும்மா.., என்ன பண்ணுது? இது ஏன் இப்படி..?’’ அவள் முகத்தை நிமிர்த்தினான். சத்தியமாக அவனுக்குப் புரியவில்லை.

‘‘எனக்கு அலை வேணும் ராஜ்.., என்னால் முடியலை..’’ பரிதாபமாக உரைக்க, சற்று நடுங்கிப் போனான். ‘இதற்கும், அலைக்கும் என்ன சம்பந்தம்?’ சிந்தித்தவன்,

‘‘இல்ல.., இப்போ உடனே ஹாஸ்பிட்டல் போகணும்..’’ அவன் பதறினான்.

‘‘வேண்டாம்.., என்னை அலைகிட்டே கூட்டி போய்டுங்க ப்ளீஸ்..’’ அழுதாள்.

‘‘உடம்பு இப்படி நெருப்பா கொதிக்கிதேம்மா.., ஏன் காய்ச்சல்? எத்தனை நாளா? அதைவிட.., ஏன் இப்படி..?’’ கல்லாகிப் போயிருந்த அவள் பால்கட்டிய மார்பு எதனால் என்பது அவனுக்குப் புரியவில்லை.

அவனுக்கு பதில் சொல்லும் நிலையில் அவள் இல்லையே. ‘‘வீட்டுக்குப் போகலாம்..’’ அவள் அதிலேயே இருந்தாள்.

‘‘சரி.., உடனே போய்டலாம்.., நீ படுத்துக்கோ..’’ அவளை படுக்க வைத்தவன், காரைக் கிளப்பினான். எவ்வளவுதான் வேகமாகச் சென்றாலும்., செல்லும் தூரத்தை குறைக்க முடியாதே. கார் கிட்டதட்ட நூற்றி ஐம்பது, இரநூறு கிலோமீட்டர் வேகத்தில் பறக்க, இரண்டே மணி நேரங்களில் சென்னையை தொட்டுவிட்டான்.

அவள் வீட்டுக்குச் செல்ல மேலே அரைமணி நேரமாக.., “இங்கே ஏன்..?” அவள் தன் வீட்டைப் பார்த்து கேட்க, “அலை இங்கேதான் இருக்கா..” அவ்வளவுதான்.., அடுத்த நொடி, வீட்டுக்குள் ஓடினாள்.

“அம்மா.., அலை எங்கே..?” திடுமென மகளது குரல் வீட்டுக்குள் கேட்க, கையில் இருந்த பாத்திரத்தை வைக்க கூட நேரமின்றி, கீழே தவற விட்டவர், ஹாலுக்கு விரைந்தார்.

“நிஹா.., நீ எப்படி.., என்னடி.., உடம்பு சரியில்லையா..? பால் கட்டியிருக்கா?” மகளது நிலைமையை நொடியில் புரிந்து கொண்டார்.

“அம்மா.., அலை எங்கே..?” அவள் இதைத்தவிர வேறு எதையும் கேட்கவில்லை.

“முதல்ல நீ உள்ளே வா..” மகளை அவளது அறைக்கு இழுத்துச் சென்றவர், “நான் சொன்னதை செஞ்சியா இல்லையா? ஏண்டி இப்படி என் உயிரை வாங்குற..?” அவளைப் பிடித்து உலுக்கினார். “ரெண்டு பேருமே பெரியவங்க பேச்சை கேக்கலன்னா என்னதாண்டி செய்யட்டும்?” புலம்புவதைத் தவிர அவரால் எதுவும் முடியவில்லை.

“ஐயோ அம்மா.., நான் அலைகிட்டே போறேன்..” அவள் கிளம்ப முயல,

“இப்போ எப்படிடி அவளுக்கு பால் கொடுக்க முடியும்? பால் கெட்டுப்போயிருக்கு.., முதல்ல அதை சுத்தம்பண்ணு..” கலங்கிய தன் மனதை மறைத்து கோபமாகவே உரைத்தார்.

“அம்மா.., கை வைக்கவே முடியலம்மா..” கதறினாள்.

“காலையில் இருந்து எதுவும் பண்ணலையா..?” அதிர்வாக அவர் கேட்க,

“ரெண்டு நாளா எதுவும் பண்ணலை..” அவள் உரைக்க, அவ்வளவுதான்.., அவளை இழுத்து ஒரு அறை விட்டார். அதை வெளியே இருந்து பார்த்தவன், அதிர்ந்துதான் போனான்.

அவ்வளவு நேரமாக அங்கிருந்து செல்ல போராடிக் கொண்டிருந்தவள், தன் கன்னத்தை பற்றியவாறு விக்கித்து நின்றுவிட்டாள்.

“அம்மா..” அதிர்ச்சியாக அழைக்க,

“இப்படிப் பண்ணி வச்சிருக்கியேடி.., இப்போ நான் என்ன செய்வேன்..” தன் தலையிலேயே கை வைத்தவர், “முதல்ல டிரெஸ்ஸை மாத்திட்டு அந்த டவ்வலை எடுத்து கட்டு.., நான் சுடுதண்ணி போட்டு எடுத்துட்டு வரேன்..” அவர் குரலில் இருந்த கண்டிப்பில், அதை மீறும் துணிவு அவளுக்கு இருக்கவில்லை.

அவர்கள் பேசியதை இவ்வளவு நேரமாக கேட்டுக் கொண்டிருந்தவனுக்கு சுத்தமாக எதுவும் புரியவில்லை. “அத்த..” அவரைத் தடுக்க,

“நீங்க கொஞ்சம் வெளியே போயிட்டு கொஞ்ச நேரம் கழிச்சு வாங்க..” அவனுக்கு நின்று கூட பதில் கொடுக்க முடியாமல், கிச்சனுக்குள் நுழைந்தவர், கொதிக்கும் நீரோடு வெளியேறினார். முதல் முறையாக அவர் தன் கோபத்தை அவனிடம் காட்டுகிறார். அதிர்ந்துபோய் நின்றுவிட்டான்.

‘எதையே பெரிதாக செய்துவிட்டேன்..’ அவன் மனம் அதிர்ந்தது.

அதைப் பார்த்தவன், சோபாவில் இருந்து எழுந்து நிற்க, அங்கே ஒருவன் இருப்பதையே அவர் கண்டுகொள்ளவில்லை.

“முதல்ல இங்கே வா.., இந்தா.., இந்த தண்ணியை கொஞ்சம் சூட்டை பொறுத்துகிட்டு ஊத்து..” அவர் கத்த, “அம்மா.., தண்ணி கொதிக்குதும்மா..” நீரை பயப்பார்வை பார்த்தாள்.

“இப்போ நீ ஊத்துறியா இல்ல.., நான் ஊத்தவா..?” அவள் அருகில் நெருங்க, வேகமாக பின்னால் நகர்ந்தவள், “அம்மா.., நான் பாத்துக்கறேன்.., நீங்க வெளியே போங்க..” பாத்ரூம் சுவற்றில் ஒட்டிக் கொண்டாள்.

அடுத்த நிமிடங்களில் ‘‘ஐயோ.., அம்மா..’’ என்ற நிஹாசினியின் அலறல் மட்டுமே அங்கே கேட்க, அறைக்கு வெளியே ராஜா துடித்துப் போனான்.

‘குழந்தைக்கு பால் கொடுக்கவில்லை என்றால் இப்படியெல்லாமா ஆகும்..?’ தனக்குத் தானே கேட்டுக் கொண்டான்.

‘இவர்கள் பேசிகொண்டதைப் பார்த்தால்.., அதற்கான தீர்வை அத்தை சொல்லி அனுப்பியது போலல்லவா இருந்தது..’ தலையில் கை வைத்துக் கொண்டான்.

‘ஹையோ.., ஹையோ..’ உள்ளே ஓடிபோய் அவளை அணைத்துக்கொள்ள கால்கள் தவித்தது.

‘‘அம்மா.., கல்லு மாதிரி இருக்கும்மா..’’ தீனமாக முனக, ராஜாவின் நெஞ்சில் ரத்தம் வழிந்தது. ‘ஹையோ ஆண்டவா.., நான் என்ன செய்து வைத்திருக்கிறேன்’ தவியாய் தவித்தான்.

‘‘அப்படித்தான் இருக்கும்.., கொஞ்சம் வலி பொறுத்துகிட்டு அழுத்தி விடு..’’ துளசிக்கும் கடினமாகத்தான் இருந்தது.

‘‘ஆ..’’ அவள் அலற, ‘‘என்னம்மா..?’’ துளசி பதறினார்.

‘‘கை வைக்கவே முடியலம்மா..’’ கதறி உரைக்க, துளசி அழுதே விட்டார்.

“அப்படியே விட்டுட்டா ஹாஸ்பிட்டல் போய் ஆப்பரேஷன்ற பேர்ல கொன்னே போடுவாங்க.., கொஞ்சம் கஷ்டம் பார்க்காமல் செய். இல்லையா.., கதவைத் திற.., நான் வரேன்..” கதவைத் தட்டினார்.

“இல்ல.., நான் பாத்துக்கறேன்..” சொல்லிவிட்டாலும்.., அவளால் மார்பில் கட்டியிருந்த பாலை ஒரு சொட்டு கூட வெளியேற்ற முடியவில்லை.

“ஐயோ.., அம்மா..” அவள் அலறல் மட்டுமே கேட்க, துளசியால் எதுவும் செய்ய முடியவில்லை.

“எல்லாம் நீயே இழுத்துவிட்டுகிட்டது தானே.., இப்போ இப்படின்னா.., நான் என்னதான்டி செய்யட்டும். இப்படி துன்பப்படுறதுக்கு நீ செத்து..” “அத்த..” அதற்குமேல் எதையும் கேட்டுகொண்டிருக்க முடியாமல், கதவைத் திறந்து உள்ளே வந்துவிட்டான்.

“இப்போ என்னதான் பிரச்சனை அத்த.., சொன்னால்தானே தெரியும்.., அவ இவ்வளவு கஷ்டப்படுறா.., நீங்க என்னன்னா.., அவளை திட்டிகிட்டே இருக்கீங்க..?” சற்று கோபமாகவே கேட்டான்.

“நான் என்ன சொல்ல..? எல்லாம் அவ தலையெழுத்து. என்னால் இந்த கொடுமையை எல்லாம் பாக்க முடியலை.., நான்

வெளியே போயிட்டு வரேன். அவளுக்கு என்ன செய்யணுமோ செய்யட்டும்..'' வெளியே கிளம்பிவிட்டார்.

அவர் செய்கையை நம்ப முடியாமல் பார்த்துக் கொண்டிருந்தான் ராஜா. அவர் செல்லவே.., வாசல் கதவை அடைத்தவன், அறைக்குத் திரும்பினான்.

ஹாசினியின் அழுகுரல் இன்னும் உள்ளே கேட்டுக் கொண்டிருக்க, ''ஹாசினி.., வெளியே வா..'' கதவைத் தட்டினான்.

தயக்கமாக அவள் வெளியே வர.., முகம் முழுவதும் அழுகையில் வீங்கி, கண்கள் சிவந்து.., மூக்கு நுனி தடித்து.., பார்க்கவே பரிதாபமாக இருந்தாள்.

'இங்கே வா..' கை விரித்து பார்வையால் அழைக்க, ஒரு பாய்ச்சலில் அவன் கைகளுக்குள் அடைக்கலமானாள்.

மெதுவாக விசும்பியவள்.., ''ரொம்ப வலிக்குது ராஜ்..'' இதழ் கடித்து, வலியைப் பொறுக்க முயன்றாள்.

''பாப்பாவுக்கு பால் கொடுக்கலன்னா இப்படி ஆகிடுமா?'' அவன் வினவ, அமைதியாக தலை அசைத்தாள்.

''இது தெரிஞ்சும் நீ ஏன் காலேஜ் போன..? போக மாட்டேன்னு சொல்லியிருக்க வேண்டியதுதானே..'' அவன் கேள்விக்கு அவள் பதில் கொடுக்கவில்லை. ''அன்னைக்கு வந்தப்போவும் இப்படித்தான் கஷ்டப் பட்டுட்டு இருந்தியா? ஏன்

என்கிட்டே சொல்லலை..? சொல்லியிருந்தால்..'' அவன் குரலில் அப்படி ஒரு கவலை.

''சொன்னா நீங்க இப்படி வருத்தப்படுவீங்கன்னுதான் சொல்லலை..'' அவள் உரைக்க, தன்னோடு இறுக்கிக் கொண்டான்.

''ஹாசினி.., உன்னோட இந்த துன்பத்தை விட, என் கஷ்டம் பெருசா. இப்போ.., என்னால் தாங்க முடியலை ஹாசினி. நான் என்ன செய்ய? நான் எவ்வளவு பெரிய பாவத்தை செய்து வைத்திருக்கிறேன்..'' அவன் கண்ணீர் விட, அவனைவிட அதிகம் தவித்துப் போனாள்.

''ராஜ்.., இல்ல.., நீங்க அழாதீங்க.., நான் செய்த தப்புக்கு நீங்க ஏன் அழறீங்க. இல்ல.., எனக்கு வலிக்கலை..'' அவனுக்கு ஆறுதல் சொன்னவள், வலியில் தவிப்பதை அவள் கண்கள் உணர்த்த, உள்ளுக்குள் நொறுங்கிக் கொண்டிருந்தான்.

'என்னிடம் தோழனாக பழகிய அம்மா கூட இதைப்பற்றி சொல்லவில்லையே..' சிந்தித்தவன், தங்கள் வீட்டில் இப்படி ஒரு சூழலை யாரும் சந்தித்திருக்க மாட்டார்கள் என்பதை நினைக்க, அந்த எண்ணம் அப்படியே வடிந்தது.

கடந்த பத்து நாட்களாக, துளசி நிஹாவை அழைக்கச் சொல்லி கிட்டத்தட்ட கெஞ்சியது நினைவிற்கு வர, உள்ளுக்குள்

சிதைந்து கொண்டிருந்தான். அவன் செய்கையை அவனால் மன்னிக்கவே முடியவில்லை.

தன் கைகளை நகர்த்தி அவளை உணர்ந்தவன், 'ஆண்டவா.., இதை எப்படி தாங்கிட்டு இருக்கா?' அவனுக்கு இதயம் கனத்துப் போனது.

அவன் நெஞ்சில் முகத்தை அழுத்தியவள்.., அவன் சட்டையை இறுக பற்றிக் கொண்டாள். "ம்.." அழுகையோடு, இன்னும் அழுத்தி வைத்துக் கொண்டாள்.

"சாரி ஹாசினி.., எனக்கு.., இப்படி ஆகும்னு தெரியாது.." கண்ணீர்க் குரலில் உரைத்தான்.

"நீங்க என்ன வேணும்னா செய்தீங்க.., விடுங்க.." அவன் வருத்தப்படுவது பிடிக்காமல் உரைத்தாள்.

"இப்போ என்ன செய்ய..? இன்னொரு முறை ட்ரை பண்ணி பாக்கறியா..?" அவன் கேட்க, அவள் தேகம் நடுங்குவதை அவனால் உணர முடிந்தது.

"சரிம்மா.., வேண்டாம்.., செய்ய வேண்டாம்.." அவளை கஷ்டப்படுத்தி ஒன்றை செய்வதா என்ற எண்ணம். ஆனால், அவள் கல்லூரியில் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பாள் என்பது புரிய, அவனால் தன்னையே மன்னிக்க முடியவில்லை.

‘இதை எத்தனை நாளாக தாங்கிட்டு இருந்தான்னு தெரியலையே. அத்தை அத்தனை முறை சொல்லியும், கொஞ்சம் கூட இரக்கமே இல்லாமல்..’ அவனுக்கும் அழுகை முட்டியது.

அவன் சாதாரண ஆண்மகன் இல்லை.., அவள்மேல் உயிரையே வைத்திருப்பவன், அவளுக்காக எதையும் செய்ய தயங்காதவன், அவள் கண்ணில் தூசி விழுந்தாலே கலங்கிப் போவான்.., அப்படி இருக்கையில் இது..,

அவனுக்கு இதைப்பற்றி ஒரு சதவீதமாவது தெரிந்திருந்தால், தன் உயிரே போனாலும் பரவாயில்லை என்று அவளை அனுப்பியிருக்கவே மாட்டானே.

‘‘நான் வேண்ணா ட்ரை பண்ணவா..?’’ அவன் கேட்க, அவளது அமைதி மட்டுமே பதிலாக, அவளுக்கு வலியில் இருந்து விடுதலை பெறுவது மட்டுமே முக்கியம் என்பது புரிய, அதைச் செய்தவனுக்கு, ‘ஐயோ.., அம்மா..’ என்ற அவளது அழுகை மட்டுமே கிடைத்தது, அந்த முயற்சியை கைவிட்டான்.

‘‘ஹாசினி.., ஹாசினி.., என்னம்மா..’’ தவித்து போனான்.

‘‘ராஜ்.., வேண்டாம்..’’ வலி தாங்கியவள் முனகினாள்.

தான் இதில் என்ன செய்ய முடியும்..? யோசித்தவனுக்கு ஒரு வழியும் காண முடியவில்லை. அவளை அழைத்து வந்து

படுக்கையில் அமர்த்தியவன், ‘‘நான் என்ன செய்யட்டும்..?’’ அவளிடமே கேட்க, அவன் நெஞ்சிலே சாய்ந்து கொண்டாள்.

சில நொடி மௌனங்கள் பாரமாய் கடக்க, அவன் நெஞ்சுக்குள்ளே புகுந்துவிட முயன்றாள். மெல்லியதாக விசும்பியவள், ‘‘ரொம்ப வலிக்குது ராஜ்..’’ ‘ஏதாவது செய்யேன்..’ அவள் குரல் அவனிடம் கெஞ்சியது.

‘‘இது.., இதை..’’ தடுமாறியவனின் குரலும் கலங்கிபோய் இருந்தது. இன்னும் அழுத்தமாக அவளை அணைத்துக் கொண்டவன், வேகமாய் சிந்தித்தான். அவளை இந்த வலியில் இருந்து விடுவிப்பது மட்டுமே பிரதானமாய் தோன்றியது.

தன் கோபம், பாராமுகம்.., அனைத்தும் மறந்து போனது. தன்னில் அடைக்கலமாகி இருக்கும் அவளை காப்பது மட்டுமே முக்கியமாகத் தோன்றியது.

இறுதியில் அவனுக்கு ஒரு வழி கிடைக்க.., அவள் கன்னம் தாங்கியவன், அவள் இதழ்களை மென்மையாக பற்றிக் கொண்டான். அவன் கண்களில் உருண்ட கண்ணீர், அவள் கன்னம் நனைக்க, அவளுக்கோ நடப்பவை எதையும் உணர முடியாத அளவுக்கு வலி உயிர் போனது. முதலில் மென்மையாக இருந்த இதழ் தீண்டல்.., அழுத்தமாக உரு மாற.., மெதுவாய் அவள் தேகம் நெகிழ்ந்தது.

“ஹாசினி.., ரிலாக்ஸ்.., கொஞ்சம் பொறுத்துக்கோ..” மென்மையாக முனகியவன்,

அவளை படுக்கையில் சரித்து அவள்மேல் படர்ந்தவன்.., தன் இதழை தூரிகையாக்க.., சில நிமிடங்களில் தன் மார்பின் கனம் குறைவதை அவளால் உணர முடிந்தது. அவன் சிகைக்குள் கை கோர்த்து நெரித்தவள், “ராஜ்..” முனகினாள்.

அவன் கண்ணீர் அவள் மார்பைச் சுட, தன்னோடு இறுக்கிக் கொண்டாள். இப்பொழுது அவள் சற்று இயல்பாகி இருந்தாள்.

அவளுக்கு வலியில் இருந்து விடுதலை கிடைக்க, அவனுக்கோ.., அவளை விட்டு விலக முடியாத நிலை. அழுத்தமாக அவள் மேனியில் புதைந்தவனது உணர்வுகள் அவளைத் தீண்ட, அவனது நிலையை உணர்ந்து கொண்டவளோ, அவனை இன்னும் தன்னோடு ஆதரவாக புதைத்துக் கொண்டாள்.

அவள் கழுத்தில் முகம் புதைத்து, அவள் வாசம் உணர்ந்தவன்.., “ஹாசினி..” அவள் காதுமடல் தீண்டி, கன்னத்தில் புதைந்தவன், இதழ்களில் தொலைந்து போனான்.

‘இப்பொழுதே அவள் வேண்டும்..’ அவன் உணர்வுகள் வெடிக்கும் நிலைக்குச் செல்ல, இன்னும் அழுத்தமாக அவள்மேல் படர்ந்தான்.

இன்னும் ஒரு நொடி கடந்தால் அனைத்தும் முடிந்துவிடும் என்ற நிலையில், “ராஜ்..” என்ற அவளது அழைப்பு அவனைத் தீண்ட, ஒரு மழைநாளில் நடந்த நிகழ்வுகளும், அதைத் தொடர்ந்த சம்பவங்களும் கண்முன் நிழலாட, தீச்சுட்டாற்போல் அவளிடமிருந்து விலகினான்.

அவளோ.., நம்ப முடியாமல், அவன் விலகலை தாங்க முடியாமல் வெறிக்க, “குளிச்சுட்டு ரெடியாகு.., வீட்டுக்கு போகலாம்..” வேகமாக அறையில் இருந்து வெளியேறினான். அவன் விலகிச் செல்ல, அவன் விட்டுச் சென்ற நிலையிலேயே உறைந்திருந்தாள்.

சில உணர்வுகள் இருவருக்கும் பொதுவல்லவா.., அவள் மட்டும் இயந்திரமா என்ன? அதைவிட, தன் துன்பத்தில் இருந்து தனக்கு விடுதலை அளித்தவன், தன் துன்பம் தாங்கிச் சென்றதைத்தான் அவளால் தாங்க முடியவில்லை.

இதைச் செய்ய அவன் எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பான் என்பது புரிய, ஒரு மனைவியாக தான் அவனுக்கு ஒரு சதவீதம் கூட நியாயம் செய்யவில்லை என்பது புரிந்தது. இப்பொழுது கூட ஒரு கணவனாக தன் கடமையை அவன் சரியாகத்தான் செய்தான்.., ஆனால் நான்.. வெடித்த விம்மலை அடக்க முடியாமல் அவள் கதறினாள்.

அவனோ.., 'ச்சே.., என்ன செய்கிறேன் நான். இப்பொழுதும் என் உணர்வுகளுக்கு அடிமை ஆகிறேனா? வலியில் இருப்பவளிடம் என்ன செய்யப் பார்த்தேன்?' அறைக்கு வெளியே நின்று தன்னை நிலை நிறுத்தியவன், அவளது கதறல் கேட்கவே, அடுத்த நொடி அறைக்குள் சென்றிருந்தான். இன்னும் அவள் அதே நிலையில் இருக்க, அவள் அருகில் பாய்ந்தோடியவன்,

''ஹாசினி.., இல்ல.., இங்கே பார்.., அழாதே.., ஐ'ம் ஓகே.., ஜஸ்ட் ஒரு நிமிஷம் தடுமாறிட்டேன்.., அவ்வளவுதான்.., இல்லம்மா.., நான் தடுமாறியிருக்க கூடாது..'' ஒரு குழந்தையைத் தாங்குவதுபோல் அவளைத் தாங்க, எழுந்து அவன் கழுத்தை கட்டிக் கொண்டாள்.

''சாரி ராஜ்.., எப்பொழுதும் என்னால் நீங்க கஷ்டத்தை மட்டுமே அனுபவிக்கறீங்க'' ஒரு மனைவியாக அவள் மனநிலை அவனுக்காகவே உருகியது.

''அப்படியெல்லாம் எதுவும் இல்லை.., நான்தான் தன்னிலை இழந்துவிட்டேன். என்மேல்தான் தவறு.., விடு..'' இப்பொழுது ஒரு தாயாக அவளைத் தாங்கினான்.

சற்று நேரம் அவள் அழ, ''ஹாசினி.., வீட்டுக்கு போகலாம்மா.., முதல்ல குளி..'' அவளை குளியலறையில்

விட்டவன், அவள் நெற்றியில் இதழ் ஒற்றி, கன்னம் தீண்டி.., தலை கோதி.., அவளைத் தங்கியவன், அவள் குளிக்கத் துவங்கிய பிறகே வெளியேறினான்.

அவள் கிளம்பி வருவதற்குள்ளாகவே.., இதற்கு ஒரு முடிவெடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவனுக்கு வலுப் பெற்றது. அவர்கள் வீடு வந்து சேரும் வரைக்கும், அவர்களுக்குள் எந்தவிதமான பேச்சுக்களும் இடம்பெறவில்லை. அவன் முகத்தை ஏக்கமாக பார்த்தவாறு அமர்ந்திருந்தாள் ஹாசினி.

# அத்தியாயம் 19

**வீ**ட்டுக்குள் வந்த மறு நிமிடம் குழந்தையை கார்த்திகா தூக்கி வந்து அவளிடம் கொடுத்தவள்.., ‘‘சாரி.., நீங்க உங்க அம்மா வீட்டுக்கு போய்ட்டு வரீங்களா? நான் இப்போதான் அங்கே இருந்து குழந்தையை தூக்கிட்டு வந்தேன்..’’ தயக்கமாக உரைத்தவள், நிஹாசினியின் முகம் பார்த்தாள்.

‘‘ம்..’’ ஒரு முனகலோடு குழந்தையை வாங்கியவள், அங்கே இருந்த யாரையும் நிமிர்ந்து பார்க்கவில்லை. அவள் முகத்தில் இருந்த மாறுதல்.., முகம் சற்று வீங்கிப்போய்.., அவளைப் பார்க்கவே இயல்பற்று இருந்தாள்.

ராஜா மருத்துவமனையில் இருந்து வந்தபொழுது தங்கியிருந்த அறைக்குள் நுழைந்தவள், கதவைச் சாற்றிக் கொள்ள, ராஜாவோ.., அங்கிருந்த சோபாவில் தலையில் கைவைத்தவாறு அமர்ந்துவிட்டான். அவன் நிலையைப் பார்த்த சுஜா அவன் அருகில் வர, ‘‘ரொம்ப பெரிய தப்பு பண்ணிட்டேம்மா.., ஹாசினி..’’ சொல்வதற்குள் குரல் அடைக்க அப்படியே நிறுத்திவிட்டான்.

அவனை தோளோடு அணைத்தவர், வார்த்தைகளை உதிர்க்கும் நிலையில் இருக்கவில்லை. இந்த பதினைந்து நாளில் நிஹா எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பாள் என்பது அவருக்குத் தெரியாதா என்ன?

அறைக்குள், குழந்தைக்கு பசியாற்ற முயன்றவளுக்கோ.., குழந்தை தன் மார்பை கவ்வாமல் முரண்டு பிடிக்க, நிலை குலைந்துதான் போனாள்.

அவள் எடுத்த முயற்சிகள் அனைத்தும் வீணாக.., கண்கள் கலங்கும்போல் இருந்தது. ஆனால் குழந்தையோ.., ஒரு வாய் இழுத்தவள், மறு நிமிடம் அவள் மார்பை விட்டுவிட்டு, அருகில் இருந்த பால் புட்டியை கை நீட்ட.., அவ்வளவுதான்.., “ராஜ்..” அந்த வீடே அதிரும் அளவுக்கு குரல் கொடுத்தாள்.

“ஹாசினி..” என்னவோ ஏதோ என்று பதறிப்போய் அவன் அறைக்கு விரைய, கூடவே ஓடினார்கள் மற்றவர்கள்.

“என்னம்மா..” அவளை நெருங்கினான். குழந்தை அவளது கத்தலில் அழுகைக்குச் செல்ல, அவளை சமாதானம் செய்யக்கூட அவள் முயலவில்லை.

“பாப்பா என் பாலை குடிக்க மாட்டேங்கறா.., இந்த பால் புட்டிதான் வேணுமாம்..” கலங்கிய குரலில் உரைத்தவள்,

“அப்போ.., இவளுக்கு அம்மா வேண்டாம்னுதான் இத்தனைநாள் என்னை பார்க்க வரலையா?” குரலில் அவ்வளவு ஆதங்கம்.

அவள் கேள்வியில் ஆடிப் போனான். “அப்படி இல்லம்மா.., ஒரே ஒரு நிமிஷம் நான் சொல்வதைக் கேள்.., பிறகு நீ என்ன சொல்றியோ நான் கேக்கறேன்..” அப்பட்டமாகவே கெஞ்சினான்.

அறையில் இருந்த மற்றவர்கள் வெளியேற.., அவள் கையில் இருந்த பால் புட்டியை கீழே வாங்கி வைத்தவன்.., “பதினைந்து நாளா உன்கிட்டே பால் குடிக்காததால் கொஞ்சம் மறந்துட்டாளா இருக்கும். முதல்ல அவளுக்கு பசியாற்று.., ஏன்னு நான் சொல்றேன்..” அவள் அருகில் அமர்ந்தவன்.., குழந்தையின் கால்களைப் பற்றிக் கொண்டான்.

ஒரு நிமிடம் அமைதியாக இருந்தவள்.., குழந்தை அழுவது தாங்காமல்.., கொஞ்சம் கட்டாயப்படுத்தி குழந்தையின் வாயில் தன் மார்பைத் திணித்தவள், அவள் பால் புட்டியில் வெகு சுலபமாக பாலை அருந்தி பழகியதால், அழுத்தம் கொடுத்து இழுக்க மறுக்கிறாள் என்பதை உணர்ந்து, அவள் வாயில் பாலை பீய்ச்சி விட, சில நொடிகளில் தானே பால் அருந்தத் துவங்கினாள்.

அதை உணர்ந்தவன், அறையிலிருந்து வெளியேற முயல, அவன் கரத்தைப் பற்றி தடுத்தாள். ‘முன்பும் இப்படித்தானே செய்வாள்..’ யோசனையாக அவளை ஏறிட,

‘‘நீங்க பக்கத்தில் இருந்தால் அலை திருப்தியா பசியாறுவா. சோ ப்ளீஸ்’’ போகாதே.., விழிகள் அவனிடம் யாசித்தது.

பட்டென அவள் அருகில் அமர்ந்தவனுக்கு.., ‘அப்படியென்றால், முன்னர் என்னை அருகில் அமர்த்தியதற்கும் இதுதான் காரணமா? என்னை வதைக்க வேண்டும் என செய்தது கிடையாதா?’ யோசனை ஓட, மனம் திறந்து பேசாமல், வாழ்க்கையை எவ்வளவு சிக்கலாக்கி விட்டோம்.., கண்கள் கலங்கியது.

அவளை இழுத்து தன் தோளோடு அணைத்துக் கொண்டான். அவளும் விலக விரும்பாதவளாக அவன் கழுத்து வளைவில் முகம் புதைத்தவள், தன் வேதனையை மறக்க முயன்றாள்.

இப்பொழுதே அதை தெளிவுபடுத்த விரும்பியவன், ‘‘எப்பவுமே நான் பக்கத்தில் இருந்தால் குழந்தை இப்படித்தான் பீல் பண்ணுவாளா..?’’ அவளிடம் கேட்க, குழந்தையின் முகத்தில் பார்வையை பதித்திருந்தவள், அமைதியாய் தலை அசைத்தாள்.

“ஏன் ஹாசினி இதை முன்னாடியே சொல்லலை..?” அவன் குரலில் இருந்த வருத்தம் அவளைத் தாக்க, “சொல்லியிருக்கணும்...” குரல் நடுங்க அவள் உரைக்க, இருவரும் அமைதியானார்கள்.

அதன் பிறகு.., தன்னைத் தேற்றியவன், தனாவின் உடல்நிலைக் குறித்தும், மருத்துவமனை வாசத்தைக் குறித்தும் உரைக்க, முகத்தில் எந்த ஒரு உணர்வையும் காட்டாமல் கேட்டுக் கொண்டவள், அவனிடம் எதையும் பேசவில்லை.

“ஏதாவது சொல்லு ஹாசினி..” அவளது அமைதி அவனுக்கு பயத்தைக் கொடுத்தது.

“இதில் நான் சொல்ல என்ன இருக்கு? அதான் எல்லாம் முடிஞ்சு போச்சே..” விரக்தியாக உரைத்தவள், எதையும் மேலே சொல்லவில்லை.

“ஹாசினி.., இப்படியெல்லாம் ஆகும்னு தெரிந்திருந்தால்.., நிச்சயமா உன்னை இங்கே அழைத்து வரச் சொல்லியிருப்பேன். என்னை நம்பு..” அவள் கரத்தை பற்றிக் கொண்டான்.

“நான் நம்பறேங்க.., ஒரு முறை நம்பிக்கை இல்லாமல் நான் பட்ட துன்பம் போதும்...” தொண்டையை நெரிக்கும் அளவுக்கு இருந்த துன்பத்தை அப்படியே விழுங்கிக் கொண்டாள்.

“அப்படி இல்லம்மா..” மனம் அவளுக்காய் துடித்தது.

“ஹாசினி.., நான் ஒண்ணு கேக்கவா..? ஏன் அத்தனைநாள் பண்ண விஷயத்தை ரெண்டு நாளா பண்ணவே இல்லை..” தன் மனதை அவ்வளவு நேரமாக அழுத்திய கேள்வியை கேட்டுவிட்டான். முன்பு போல் எதையும் மனதில் வைத்து புழுங்க அவன் தயாராக இருக்கவில்லை.

“ஏன்..? ரொம்ப ஈசியா கேட்டுட்டீங்க. ரெண்டு நாள்ல வரேன்னு சொல்லிட்டு வந்தவர்.., வரவில்லை என்பதே அதிர்ச்சின்னா.., ஏன் வரலைன்னு ஒரு சிங்கிள் டெக்ஸ்ட் மெஸ்சேஜ் கூட அனுப்பாதது.., இந்த உலகத்தில் எதிர்பார்ப்பு ஒண்ணு இல்லன்னா.., ஏமாற்றமே இருக்காதாம்.

“ஆனா.., சொல்றது ரொம்ப ஈஸி.., அதை செய்யிறது..” வெறித்த பார்வையாக உரைத்தவள்,

“ஒவ்வொரு நாளின் விடியலும் எதிர்பார்ப்பில் துவங்கி, ஏமாற்றத்தில் முடியும் வலி இருக்கே.., உங்ககிட்டே இருந்து மெஸ்சேஜ் வராதுன்னு தெரிந்தும், நொடிக்கொருதரம் போனைப் பாக்கும்போது ஏற்படும் வலி..” அழுகையை அவள் அடக்க.., தொண்டைக்குழி கசந்து வழிந்தது.

“சாரிம்மா..” அவள் முகத்தை தன் தோள் வளைவில் புதைத்துக் கொண்டான்.

‘‘எங்கே நினைத்து நினைத்தே என் நெஞ்சே வெடிச்சுடுமோன்னு பயம் வந்த பிறகு.., அதை மறக்க.., எனக்கு இன்னொரு வலி தேவையா இருந்தது அதான், கடந்த ரெண்டு நாளா.., பாலை வெளியேற்றவில்லை. இந்த ரெண்டு நாளா.., மனசோ மூளையோ.., எதையுமே யோசிக்கலை தெரியுமா..?’’ எதையோ சாதித்ததுபோல் அவள் உரைக்க, சற்று முன்னர் அதற்காக அவள் அனுபவித்த வலி அவன் கண்முன் நிழலாட, அவள் வலியை வாங்கிக் கொள்பவன்போல், தன்னோடு அவளை இறுக்கிக் கொண்டான்.

‘‘இனிமேல் உன்னை இப்படி கஷ்டப்பட விட மாட்டேன் ஹாசினி.., இட்ஸ் மை ப்ராமிஸ்..’’ அவன் வாய் விடாமல் புலம்பியது.

அவள் மனமோ.., ‘என்கிட்டே ஒரு வார்த்தை சொல்லணும்னு கூட யாருக்கும் தோணலை இல்ல. அந்த அளவுக்கு நான் வேண்டாதவளா மாறிப் போயிட்டேன். இனிமேல் இதுதான் இங்கே என் நிலை..’ விடாமல் அரற்றியது.

குழந்தை உறங்கிவிடவே.., அவளை தூக்கிக்கொண்டு தங்கள் அறைக்கு அவள் செல்ல, ஹாலில் வந்து அமர்ந்தான் ராஜா.

“அம்மா.., பீவர் டேப்லட் கொடுங்க..” வாங்கியவன்.., தங்கள் அறைக்குச் சென்று, அவள் கையில் கொடுத்தவன், அவளை விழுங்க வைத்த பிறகு கீழே இறங்கி வந்தான்.

“என்ன நடந்துச்சு ராஜா.., அவளுக்கு உடம்பு சரியில்லையா? ஏதாவது பேசு..” சுஜா அவன் அருகில் அமர்ந்தவாறு கேட்டார்.

“பெரிய தப்பு பண்ணிட்டேம்மா.., ரொம்ப பெரிய தப்பு..” உரைத்தவன், நடந்தவற்றை உரைக்க, கேட்டுகொண்டிருந்த அனைவருக்கும் நெஞ்சம் கனத்துப் போனது.

“நான் எத்தனை முறை கேட்டேன்.., கெஞ்சிகூட நீங்க மசியவே இல்லையே, இப்போ நல்லா அனுபவிங்க..” கார்த்திகாதான் ஆத்திரத்தில் வெடித்தாள்.

“ஏய்.., சும்மா இருடி..” தாரிணி அவளை கண்டிக்க,

“ஆமா.., என்மேலேயே பாய்.., அங்கே உன் பப்பு வேகாது.., ஊருக்கு இளைச்சவன் பிள்ளையார் கோயில் ஆண்டின்னு.., உனக்கு ஏவ நான்தானே கிடைப்பேன். இப்படியே இவரை ஏத்திவிட்டு நல்லா வேடிக்கை பாருங்க.

“என்ன குடும்பமோ.., உலகத்தில் யாருமே தப்பு பண்ண மாட்டாங்களா? தண்டனை கொடுக்குற மூஞ்சிகளைப் பாரு.., நல்லா நாலு அறை விட்டு, புத்தி சொல்றதை விட்டு.., விட்டுப்

பிடிக்கறாங்களாம்.., எனக்கு நல்லா வருது வாயில..'' படபட பட்டாசாய் பொரிந்தாள்.

''வாயை கொஞ்சம் மூடேண்டி.., அவனே உடைஞ்சுபோய் இருக்கான்..''

''ஆமா.., அவர் உடைஞ்சு போய் இருக்கார்.., எல்லாரும் சேர்ந்து ஒட்ட வைங்க..'' தன் தலையிலேயே அடித்துக் கொண்டவள்,

அவனிடம், ''டேய் அத்தான்.., உன்னாலதான் அவளை விட்டு இருக்க முடியாதுன்னு தெரியுதுல்ல.., உன் வீம்பெல்லாம் தூக்கி உடப்பில் போட்டுட்டு அவகூட ஒண்ணா இருக்கப் பார்.., அத விட்டுட்டு.., அவள காயப்படுத்திடுவேன்னு பயம்மா இருக்கு.., அவ நொறுங்கி போயிடுவான்னு கேணத்தனமா உளறுன.., எதையாவது தூக்கி போட்டு உன் மண்டையைப் பொளந்துடுவேன்..'' சகட்டு மேனிக்கு அவனைச் சாடினாள்.

''நீங்க எல்லாம் என்ன.., எப்போபார் அவர் முன்னாடி இருந்து சோகமா பிடில் வாசிக்க வேண்டியது.., தூரப் போங்க.., வீட்டுக்குள்ள இருக்கவே மூச்சு முட்டுது..'' அங்கிருக்கும் நிலையை சர்வ சாதாரணமாக போட்டு உடைத்தவள், அவன் கையைப் பிடித்து எழுப்பினாள்.

“அதான் அவ இவ்வளவு கஷ்டபட்டுட்டு வந்திருக்கான்னு தெரியுதுல்ல, பிறகு என்ன டேஷுக்கு நீங்க இங்கே வந்து உக்காந்து இருக்கீங்க. அவளோட போய் இருங்க.., அவ ரெண்டு நாளா தூங்கினாளோ என்னவோ..” அவன் முதுகைப் பிடித்து தள்ளினாள்.

அவன் செல்லவே.., “கார்த்தி.., என்னடி இதுதான் சாக்குன்னு அவனை, ‘அவன்’ ‘இவன்னு’ கண்ட மாதிரி பேசுற..?” தாரிணி கேட்க,

“அதெல்லாம் ஒரு ப்ளோல வரதுதான்..”.

“ப்ளோல என்ன வேண்ணா வருமா..?”

“ஆமா.., சமயத்தில் கெட்ட வார்த்தை கூட வரும்.., இப்போ என்னங்குற.., அதையும் என் வாயால் கேக்கணுமா?” தாரிணியிடம் எகிற.., அங்கிருந்த அனைவரும் இப்பொழுது வாய்விட்டே சிரித்தார்கள்.

ராஜா அறைக்குச் செல்ல.., குழந்தையை அணைத்தவாறு.., இமை மூட மறுத்து அமர்ந்திருந்தாள் நிஹாசினி. வேகமாக அவளை நெருங்கியவன், “ஹாசினி.., கொஞ்ச நேரம் தூங்கும்மா.., ஏன் இப்படியே உக்காந்திருக்க” அவள் தோளைத் தொட்டான்.

“கண்ணை மூட முடியலை.., யாரோ.., அலையை என்கிட்டே இருந்து புடுங்கிட்டு போற மாதிரி.., கெட்டக் கனவா வருது..” தன் தோளில் இருந்த அவன் கையில் தன் கன்னம் உரசியவள், இமைகளை களைப்பாக மூடினாள்.

குழந்தையைத் தூக்கி, அவளது சிறிய கட்டிலில் படுக்க வைத்தவன், நிஹாவின் அருகில் சாய்ந்து அமர்ந்து, அவளை தன்மேல் சாய்த்துக் கொண்டு, அவள் இடையோடு கட்டிக் கொண்டான்.

அவள் தலைமேல் தன் கன்னத்தை வைத்து அழுத்தியவன், “நான் கூடவே இருக்கறேன்.., கொஞ்ச நேரம் தூங்கு..” அவள் கூந்தலை வருடினான். அவள் உச்சந்தலையில் இதழ் பதித்தவன், கோடி முத்தங்கள் பதித்திருப்பான். அவளோ, இன்னும் வேண்டும் என்பதுபோல் அவனோடு ஒட்டிக்கொள்ள, அவளை குழந்தைபோல் தாங்கிக் கொண்டான்.

கொஞ்சம் கொஞ்சமாக அவள் ஆழ்ந்த உறக்கத்துக்குச் செல்ல, கார்த்திகா சொன்னது எவ்வளவு சரியானது என வியந்து போனான். அவனுமே கடந்த நாட்களில் ஆழ்ந்த உறக்கம் இல்லாமல் இருந்தவன், தானும் உறங்கிப் போனான்.

குழந்தையின் சிணுங்களில் அவன் கண் விழிக்க, ஹாசினியை அருகில் கிடத்தியவன், அவள் எழுந்துவிடும் முன்பு, குழந்தையைத் தூக்கினான்.

நேரத்தைப் பார்க்க.., அதுவோ.., மாலையை நெருங்கிக் கொண்டிருந்தது. கிட்டத்தட்ட மூன்றுமணி நேரமாக உறங்கிவிட்டதை உணர்ந்தவன், குழந்தையை தூக்கிக்கொண்டு வெளியே வந்தான்.

கொஞ்ச நாள் பழக்கத்தில்.., அவளை தோளில் போட்டு சற்று நேரம் உலாவினான். கொஞ்ச நேரம் அவளுக்கு விளையாட்டு காட்டியவன், அவள் கட்டைவிரலை வாயில் வைத்து சப்பத் துவங்கவே, இதற்குமேல் தாமதிக்க முடியாது எனத் தெரிய, அறைக்குள் விரைந்தான்.

நிஹாசினி இன்னும் ஆழ்ந்த உறக்கத்தில் இருக்க, அவள் நெற்றியில் கை வைத்துப் பார்க்க, இப்பொழுது காய்ச்சல் கொஞ்சம் கட்டுக்குள் வந்திருப்பதை உணர்ந்து நிம்மதி பெருமூச்சு விட்டான். அவளை எழுப்ப மனம் வரவில்லை. ஏனோ பால் கலக்கிக் கொடுக்க அவனுக்கு இப்பொழுது விருப்பமில்லை.

குழந்தையை நிஹாவில் அருகில் படுக்க வைத்தவன், ஆபத்துக்கு பாவமில்லை என, அவள் பசியாறும் விதத்தில் செய்தவன்.., சற்று நகர்ந்து அமர்ந்துகொண்டான்.

நிஹாசினியோ.., உறக்கத்தில் இருந்தாலும்.., குழந்தை பசியாறுவதை உணர்ந்தவள், அவள் தலையை தன்னோடு இறுக்கிக் கொண்டவள், உறக்கத்தைத் தொடர்ந்தாள். அவளது செய்கையில், ராஜாவுக்கு உள்ளம் கனிந்தது.

‘எத்தனை நாளாக தூங்கலையோ..’ எண்ணியவன்.., அவள் கூந்தல் ஒதுக்கி, நெற்றியில் இதழ் ஒற்றியவன், குழந்தை விளையாடத் துவங்கவே, தூக்கிக்கொண்டு கீழே வந்தான்.

‘‘வந்து சாப்பிடு ராஜா..’’ சுஜா அழைக்க, குழந்தையை கார்த்திகா கையில் கொடுத்தவன், மறுக்காமல் சென்று உணவு உண்டான்.

உணவை உண்டு முடித்தவன், ‘‘ம்மா.., நான் விழுப்புரத்தில் ஏதாவது வீடு வாடகைக்கு கிடைக்குமான்னு பாக்கலாம்னு இருக்கேன்..’’ மெதுவாக உரைக்க,

‘‘அதுக்கென்னப்பா.., தாராளமா செய்..’’ உடனே அனுமதி வழங்கினார்.

‘‘ம்மா.., ஆனா.., அங்கே குழந்தையை கவனிக்க.., காலேஜ்க்கு நடுவில் ஹாசினிகிட்டே அவளை கூட்டி போக யாரை அனுப்புறதுன்னு தெரியலம்மா..’’ வீட்டின் சூழலில், சுஜாவையோ, தாரிணியையோ அனுப்ப முடியாது என்பது அவனுக்குத் தெரியுமே.

“நம்ம லஷ்மியை அனுப்பலாம்ப்பா.., கூடவே மேல் வேலை செய்ய வேற யாரையாவது ஏற்பாடு பண்ணலாம்..”

“லஷ்மி இங்கே இல்லாமல்..” அவன் தயங்க,

“இங்கேதான் ஒண்ணுக்கு நாலுபேர் இருக்காங்களே.., மிஞ்சிப்போனால் இன்னும் ஒரு ஆறு மாசமோ, ஒரு வருஷமோ தானே.., சம்மாளிக்கலாம். அதோட.., வீக் எண்டு அவங்க இங்கே வந்துடுவாங்க.., பிறகென்ன..?” அவனை சமாதானப் படுத்தினார்.

அவன் வாடகைக்கு வீடு தேட ஆரம்பிக்க.., அது சற்று சிரமமாகத்தான் இருந்தது. அந்த கல்லூரி மெயின் ரோட்டில் இருந்து சற்று உள்ளே இருக்க, அதன் அருகில் வீடுகள் இப்பொழுதுதான் முளைத்துக் கொண்டிருந்தன.

புரோக்கர் சொன்ன வீடுகளும் கல்லூரியை விட்டு தூரத்தில் இருக்க, ராஜாவுக்கு அதில் விருப்பம் இருக்கவில்லை. அப்பொழுது..., அந்த தரகர்.., விஜே வில்லாஸ் அங்கே அருகில் கட்டி முடிக்கப்பட்டு, விற்பனைக்கு தயாராக இருப்பதாகச் சொல்லவே.., கொஞ்சம் கூட தயங்காமல் அவற்றில் ஒன்றை விலைக்கு வாங்க முடிவெடுத்தான்.

ஒரு வருடத்துக்கு வேண்டி.., ஒரு வில்லாவை வாங்க வேண்டுமா என யாரும் அவனிடம் கேட்கவில்லை. மறுநாளே

அதைப் போய் பார்த்து, பேசி முடிக்கலாம் என முடிவெடுக்க, அனைவரும் மனப்பூர்வமாகவே சம்மதித்தார்கள்.

இவை அனைத்தும் அடுத்த இரண்டுமணி நேரங்களில் நடந்து முடிந்திருந்தது. நிஹா தூங்கி எழ.., நேரம் ஆறுமணியை எட்டக் காத்துக் கொண்டிருந்தது.

‘ஹையோ.., இவ்வளவு நேரமா தூங்கிட்டேன்..’ எண்ணியவளுக்கு.., குழந்தையின் மெல்லிய சிணுங்கல், தூக்கத்தில் பசியாற்றியது அனைத்தும் நிழலோவியமாக நினைவிற்கு வர.., ‘அவ்வளவு அசந்தா தூங்கிவிட்டோம்.., அவர் என்னை எழுப்ப கூட இல்லையே..’ எண்ணியவள், முகம் கழுவிவிட்டு, கீழே விரைந்தாள்.

‘‘நிஹா.., பீவர் இப்போ எப்படிம்மா இருக்கு..?’’ தாரிணி அவள் நெற்றியில் கை வைத்துப் பார்த்தாள்.

‘‘கொஞ்சமா இருக்குக்கா..’’ உரைத்தவள்.., பார்வையைச் சுழற்ற,

‘‘குழந்தை ராஜாவோட தோட்டத்தில் இருக்கறா.., அக்கா.., மாமாவுக்கு சூப் கொடுக்கப் போயிருக்காங்க. இரு.., உனக்கு ரசம் கரைச்சு எடுத்துட்டு வரேன்.., ரொம்ப களைப்பா இருக்க..’’ வேகமாக அதைக் கொண்டுவந்து அவள் கரத்தில் கொடுத்தார்.

அதே நேரம்.., தங்கள் அறையில் இருந்து சுஜா வெளியே வர, அவர் கையில் இருந்த கிண்ணத்தை கிச்சனில் வைத்துவிட்டு, அவள் அருகில் வந்து அமர்ந்தார்.

தன் உணவை முடித்தவள்.., “மாமாவுக்கு இப்போ எப்படிக்கா இருக்கு?” ஒட்டாத குரலில் கேட்டாள்.

அவள் கரத்தில் இருந்த பாத்திரத்தை வாங்கி, லஷ்மியை அழைத்து கொடுத்து விட்டவர்.., “அவர் நல்லா இருக்கார். சாரி நிஹா.., என்னால் சொன்னதை நிறைவேற்ற முடியலை.., நடுவில் அவருக்கு இப்படி ஆக.., எதையுமே யோசிக்க முடியலை. இங்கே இவ்வளவு குழப்பம் ஆகி இருக்கும்னு எனக்கு தெரியலை..” சங்கடமாக உரைத்தார்.

“சூழ்நிலை இப்படி ஆகும்போது நம்மளால் எதுவும் செய்ய முடியாதுக்கா.., விடுங்க.., நான் மாமாவைப் பாக்கலாமா?” அவள் வார்த்தைகளில் இருந்த சமாதானம் குரலில் வர மறுத்தது.

‘எய்தவன் இருக்க, அம்பை நொந்து என்ன செய்ய..?’ எண்ணியவள், தன்னை மாற்ற முயன்றாள்.

“என்ன கேள்வி இது..? நீ வா..” அவளை அழைத்துக்கொண்டு அறைக்குச் சென்றார்.

படுக்கையில் சற்று சாய்வாக அமர்ந்திருந்த தனா, அவளைப் பார்த்து நேராக எழுந்து அமர்ந்தார். ‘‘வாம்மா.., சுஜா சொன்னா.., என்னால் உங்க எல்லோருக்கும் கஷ்டம்..’’ உண்மையான வருத்தம் அவர் குரலில்.

‘‘மாமா.., என்ன பேசறீங்க..? உடம்புக்கு வந்தால் கவனிக்காமல் விட முடியுமா? எல்லாம் நான் வாங்கி வந்த வரம்.., சரி அதை விடுங்க.., இப்போ உடம்பு எப்படி இருக்கு..?’’ அவர் எதிரில் இருந்த இருக்கையில் அமர்ந்தாள்.

‘‘நான் ரொம்ப நல்லா இருக்கேன்னு சொன்னால் யாரும் கேட்டுக்க மாட்டேங்கறாங்க.., நீயாவது நம்பும்மா. இந்த ரூமுக்குள்ளேயே இருக்குறதுதான் கஷ்டமா இருக்கு..’’ பம்பரமாக சுழன்றவரை ஒரு இடத்தில் அமர வைத்தால்.., அவருக்கு வேறு எப்படி இருக்கும்?

‘‘இன்னும் ஒரு வாரம் பொறுத்துக்கோங்க.., பிறகு பாத்துக்கலாம்..’’ சற்றுநேரம் அவரோடு விழுப்புரம் கடையைப் பற்றியும், அங்கே தான் உணர்ந்துகொண்ட, தெரிந்த விஷயங்களையும் பற்றி பேச.., சின்ன விஷயத்தையும் அவள் கவனிக்கும் பாங்கை எண்ணி வியந்தார்.

‘‘மாமா.., கடையில்.., கிட்ஸ் செக்ஷனை பாஸ்ட் ப்ளோருக்கு கொண்டு வந்தால் நல்லா இருக்கும். அதே மாதிரி.., லேடீஸ்

செக்ஷன்.., அதாவது சுடிதார் எல்லாத்தையும் செகண்ட் ப்ளோர் கொண்டு போய்ட்டா பெஸ்ட்.., கிட்ஸ் செக்ஷன்ல.., நம்ம டாய்ஸ் கொஞ்சம் டிஸ்ப்ளே வைத்தால்.., அதுவும் இம்ப்ரூவ் ஆகும்.

‘‘அந்த செக்ஷன் கொஞ்சம் டல் அடிக்குது அதான். டாய்ஸ் பாக்குற குழந்தைங்க கண்டிப்பா அதைக் கேப்பாங்க.., வாங்கிக் கொடுக்கறவங்க நிச்சயம் அதை யூஸ் பண்ணுவாங்க.., அதேமாதிரி.., ஸ்டெப்ஸ் எல்லாத்தையும் எஸ்கலேட்டரா மாத்தினால், லிப்ட்ல ரஷ் குறையும்..’’ ஒவ்வொன்றையும் அவள் உரைக்க, அவருக்கு அவ்வளவு வியப்பு.

‘‘பிரம்மாதம்மா.., நீ சொல்ற ஐடியா ரொம்ப நல்லா இருக்கு. அப்போ நம்ம சென்னை கடைகளையும் கொஞ்சம் பாத்து.., என்ன சேஞ்சஸ் பண்ணலாம்னு பாரும்மா.., சுஜா.., பாத்தியா என் மருமகளை.., எப்படி பின்றா பாரு.

‘‘இதுதான் நிர்வாகத் திறன்னு சொல்றது.., ஒரு பார்வையில் என்ன சேஞ்சஸ் பண்ணலாம்னு முடிவெடுத்துட்டா பார்..’’ அவருக்கு அவ்வளவு சந்தோசம்.

அதைக் கேள்விப்பட்ட ராஜாவுக்கு அவ்வளவு பெருமை.., அன்று இரவு உணவை அனைவரும் சேர்ந்து உண்ண, மறுநாள் வெள்ளிகிழமை என்பதாலும், அடுத்து வீக்எண்டு விடுமுறை

என்பதால், நிஹாசினி கல்லூரிக்குச் செல்ல வேண்டாம் என சுஜா உரைக்க, அமைதியாக அதைக் கேட்டுக் கொண்டாள்.

அடுத்து வந்த நாட்களில் அந்த வீட்டில் தொலைந்திருந்த நிம்மதி திரும்ப வந்துவிட்டது என்றே சொல்லலாம். ராஜா முகத்தில் பழைய நிம்மதியும், சந்தோஷமும் திரும்பி இருந்தது. ஆனால்.., ராஜாவும், நிஹாவும் ஒரு விஷயத்தை உணர்ந்தே இருந்தார்கள்.., அது அவர்களுக்குள் பேசி தீர்க்க வேண்டிய பிரச்சனைகள் அப்படியேதான் இருக்கிறது என்பதை.

நிஹாவுக்கு ராஜாவிடம் அந்த வித்தியாசம் நன்றாகவே தெரிந்தது.., அது என்னவென்றால்.., அவன் தன்னிடம் சாதாரணமாக பேசினாலும், தன் நெற்றியில் இதழ் ஒற்றி பிரித்தாலும், கையணைப்பில் உறங்க வைத்தாலும், ஒருவித ஒதுக்கம்.., ஒரு கவனம்.., அது ஏன் என்பதை உணர்ந்தவளுக்கு, எதுவும் செய்ய இயலாத நிலை.

அன்று அவ்வளவு நெருக்கத்திலும், தவிப்பிலும்.., தன்னை விட்டு விலகிச் செல்ல, தன் நெருக்கத்தை அவன் தவிர்ப்பதை உணர்ந்து மனதுக்குள் மருகித்தான் போனாள்.

அவள் அங்கே இருந்த நாட்களில் சென்னை கடைகளையும் சென்று பார்த்து வந்தாள். அன்று ஞாயிற்றுக்கிழமை, கடைக்கு ஒரு வேலையாக அவளையும் அழைத்துச் செல்ல, பெட்டிகேஷ் கொடுக்கையில்.., அதை அவள் கையால் கொடுக்கச் சொல்ல..,

சாதாரணமாக அதைச் செய்தவள், அடுத்த வேலையில் மூழ்கிப் போனாள்.

அன்று மாலையில்.., அந்த கடையின் வருமானம் இரண்டு மடங்காக உயர்ந்திருப்பதாக தேவாரம் போன் செய்ய.., அவளது கைராசி என குடும்பமே கொண்டாடியது. எதிலும் அவள் கவனம் செல்லவில்லை. மறுநாள் காலையில் கல்லூரிக்கு கிளம்ப வேண்டும் என்பதே பெரும் கவலையைக் கொடுத்தது.

அதைவிட.., ராஜா கொடுத்த டிவோஸ் பேப்பரை பார்க்கையில்.., அவன் இன்னும் தன் முடிவை மாற்றிக் கொள்ளாததை எண்ணி மனம் நைந்தாள். அதிகாலை நான்கு மணிக்கே கிளம்பிச் செல்லவேண்டும் என முடிவெடுத்திருக்க, அங்கே புது வீட்டில் பால் காய்ச்சி.., உணவு தயாரித்து, கல்லூரிக்குச் செல்ல அதுவே சரியாக இருக்கும் எனத் தோன்றியது.

காலையில் எழுந்து கிளம்பினார்கள். ராஜா குழந்தையை தூக்கிக் கொண்டவன், “ரெடியா.., கிளம்பலாமா..?” முன்னால் நடந்தான்.

“இல்ல.., ஒரு விஷயம் முடிக்கணும்..” அவன் சட்டைப் பையில் இருந்து பேனாவை எடுத்தவள், அவன் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே.., டிவோஸ் பேப்பரில் கையொப்பம்

இட்டவள்.., பேப்பரை இருந்த இடத்திலேயே வைத்துவிட்டு, முன்னால் நடந்தாள்.

# அத்தியாயம் 20

நிஹாசினி இப்படிச் செய்வாள் என எதிர்பார்த்திராத ராஜா திகைத்துப் போனான். அனைத்தையும் சீராக்கி.., மறந்து.., வாழத்துவங்க வேண்டும் என எண்ணும் இந்த நேரத்தில்.., இப்படி ஒரு முடிவு எதற்காக..? என்னைவிட்டுப் பிரிவதில் அவளுக்கு சம்மதமா?

அப்படியென்றால்.., இந்த நான்கு நாட்கள் தன்னோடு உரையாடி மகிழ்ந்ததன் காரணம்? அவனுக்கு தலையே வெடித்துவிடும்போல் இருந்தது. அவளிடம் என்னவென்று கேட்க முயல்கையில்.., அவன் அலைபேசியில் அழைப்பு வர, அனைவரும் கீழே காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற நினைவு வர.., வேகமாக அவள் பின்னால் ஓடினான்.

தனாவைத் தவிர அனைவரும் வர.., தங்களது காரில் சுஜாவும், கார்த்திகாவும் இருக்கவே.., நிஹாசினியிடம் ஏன் இப்படிச் செய்தாய் என அவனால் கேட்கக் கூட முடியவில்லை.

தாங்கள் இருவரும் சேர்ந்து வாழ்ந்துவிடுவோம் என அவர்கள் நினைத்திருக்க, அது இல்லை.., என அவனால் எப்படி உரைக்க முடியும்?

‘ஏன்..? ஏன்..?’ இந்த வினா மட்டுமே அவனைச் சுற்றி வந்தது. அத்தோடு.., எதையும் அவசரப்பட்டு செய்துவிடக் கூடாது என்பதும் நினைவிற்கு வர, தன்னை நிதானத்துக்கு கொண்டு வந்தான்.

அங்கே சென்று அனைத்து வேலைகளையும் முடிக்கும் வரைக்கும், இருவருக்கும் தனிமை என்பது கிடைக்கவில்லை. துளசிக்கோ.., ராஜாவின் முகத்தில் இருந்த கலக்கம்.., ஏனென்றே தெரியாமல் பயம் மனதைக் கவ்வியது.

மகள் கொஞ்சம் தனிமையில் கிடைக்கவே.., “நிஹா.., மறுபடியும் உங்களுக்குள் சண்டையா? ஏண்டி மாப்பிள்ளை முகமே சரியில்லை..” சின்னக்குரலில் கேட்டார்.

“இல்லம்மா.., இந்த சண்டையை மொத்தமா முடிச்சுக்கலாம்னு பாக்கறேன்.., அவ்வளவுதான்..” இலகுவாக உரைக்க,

அவள் உரைத்த பாவனையா.., இல்லை அவர் புரிந்துகொண்ட விதமா ஏதோ ஒன்று அவரை கலவரமாக்க.., “என்னடி சொல்ற..?” பதறினார்.

“நீங்க பயப்படுற மாதிரி எதுவும் இல்லம்மா..” அவள் ஆறுதல் சொன்னாலும், அவர் மனம் சமாதானமடைய மறுத்தது.

“நீ பண்ணி வைக்கிற குழப்பங்களை பாக்குற அளவுக்கு இந்த அம்மா மனசிலும் சரி.., உடம்பிலும் சரி தெம்பில்லம்மா. உன் வாழ்க்கை என்ன ஆகுமோ.., ஏதோன்னு நினைச்சே எனக்கு ராத்திரியெல்லாம் தூக்கம் வர மாட்டேங்குது.

“அந்த புள்ளை அவ்வளவு ஆசையா உன்னை கல்யாணம் பண்ண கேட்டப்போ, அவ்வளவு சந்தோஷப்பட்டேன். ஆனா.., நடுவில் நடந்த குழப்பம், உன்னோட பிடிவாதம்.., இதையெல்லாம் பாத்தே ஓஞ்சு போயிட்டேன்.

“உன் கழுத்தில் தாலியேறிய பிறகு கூட, என்னால் சந்தோஷப்பட முடியலை. உன் கோபம்தான் கண்முன்னே நிழலாடுச்சு.., அவ்வளவோ புத்தி சொல்லியும் நீ பண்ணிவச்ச குழப்பம்.., போதும்மா.., இதுக்குமேலே எதையும் செய்யாதே..” மன்றாடினார்.

“அம்மா.., இப்போ எதுக்கு தேவையில்லாமல் எமோஷனல் ஆகறீங்க? நான் நல்லா வாழப்போறதை நீங்க பாக்கத்தான் போறீங்க. சும்மா மனசை போட்டு குழப்பிக்காதீங்க.., போங்க..” அவர்கள் பேச்சைக் கேட்ட ராஜாவுக்கு சுத்தமாக எதுவும் புரியவில்லை.

‘இவ்வளவு தெளிவாக பேசுபவள், பிறகு ஏன் அதைச் செய்தாள்..?’ கேள்வி மனதைக் குடைய, அங்கிருந்து அகன்றான்.

காலை உணவை முடித்தவர்கள் அனைவரும் கிளம்ப, ராஜா மாலையில் வருவதாக உரைக்கவே, துளசியும் அவனோடு இருந்துகொண்டார்.

நிஹாசினியை கல்லூரியில் இறக்கி விட்டவன், லதாவை சந்திக்க வேண்டி காத்திருந்தான். நிஹாசினிக்குத் துணையாக லஷ்மியை ஏற்பாடு செய்துவிட்டாலும், அந்த வீட்டில் ஒற்றை ஆளாக, அவளுக்கு பேச்சுத்துணைக்கு கூட யாரும் இல்லாமல் இருப்பதை அவன் விரும்பவில்லை.

எனவே லதாவிடம் கேட்க முடிவெடுத்தான். நிஹாசினி சென்று அவளை அனுப்பவே.., சற்று கோபமாகவே வந்தாள் லதா. வந்தவள், சகட்டு மேனிக்கு அவனைச் சாட, அவள் கோபத்தில் இருந்த நியாயம் புரியவே.., அமைதியாகவே அவள் திட்டியதை வாங்கிக் கொண்டான்.

‘‘நான் இவ்வளவு திட்டறேன் பேசாமலே நிக்கற..?’’.

‘‘நான் செய்தது தப்புதானே.., அதான்..’’ அமைதியாக ஒத்துக்கொள்ள, எதிர்த்து வாதிடுபவனிடம் எதையாவது சொல்லலாம். ஆனால் மண்டியிடுபவனிடம் என்ன சொல்ல?

சட்டென அமைதியானவள், “இப்போ எதுக்கு என்னைக் கூப்ட்ட..? அவ அழுதால் பாத்துக்கன்னு சொல்லவா?” ஆத்திரமாக கேட்டாள்.

“இல்ல.., அவளும் குழந்தையும் சேர்ந்து இருக்க இங்கே ஒரு வீடு வாங்கியிருக்கேன்.., அங்கே அவளுக்குத் துணையா நீயும் இருந்துக்கறியான்னு கேக்கத்தான் வந்தேன். சாரி.., உன் பேமிலி சூழல் எனக்குத் தெரியாது.., திடீர்ன்னு இப்படிக் கேக்கறேனேன்னு நினைக்காதே.., எனக்கு வேற வழி தெரியலை அதான்..” தயக்கமாகவே கேட்டான்.

“எனக்கு வீட்டு ஆட்கள் என்ன சொல்லுவாங்க என்பது பிரச்சனையில்லை, என் ஹஸ்பன்ட் ஓகே சொன்னால் நான் அவளோட இருக்கறேன். ஆனா.., ரெண்டு வருஷம் கழிச்சு நான் என்ன செய்யிறதாம்..?”

“வீட்டை வாடகைக்கு எடுக்கலை.., சொந்தமாகத்தான் வாங்கி இருக்கிறேன். சோ.., அதுக்குப் பிறகு உன்னோட கோ டீச்சர்ஸ்சை வேண்ணா கூப்ட்டு வச்சுக்கோ.., வாடகை எல்லாம் கொடுக்க வேண்டாம்..” வேகமாக உரைத்தான்.

“நல்ல விவரமாத்தான் பேசற.., என் ஹஸ்பன்ட் ஆன்சைட் ப்ரோக்ராம்ல தான் போயிருக்கிறார். இன்னும் ரெண்டு வருஷத்தில் வந்துடுவார்.., சோ பரவாயில்லை..” அவள்

உரைக்கவே.., நிச்சயம் அவளது கணவனை சம்மதிக்க வைத்துவிடுவாள் என்றே தோன்றியது.

‘‘தேங்க்ஸ்..’’ அவன் மனமார உரைத்தான்.

‘‘அதை நீயே வச்சுக்க.., எனக்கு தேங்க் பண்றதா இருந்தால்.., நிஹாவை நல்லபடியா வச்சுக்க.., அது போதும்..’’.

‘‘சரி.., எப்போ வீட்டுக்கு வர..?’’.

‘‘ராஜா.., இப்போதானே சொன்னேன்.., அவர்கிட்டே கேக்கணும்னு..’’.

‘‘ஓ.., ஓகே.., பாய்..’’ அங்கிருந்து கிளம்பிவிட்டான்.

மாலையில் நிஹாசினி வீட்டுக்கு வர, குழந்தையோடு அவளை எதிர்கொண்டார் துளசி.

‘‘முதல்ல குளிச்சுட்டு வந்து குழந்தையை கவனி.., மாடியில் இருக்க ரூம்ல மாப்பிள்ளை இருக்கறார் போ..’’ அவளை அனுப்பினார்.

மாடிப்படியில் கால் வைக்கையிலே கால்கள் சற்று பின்னிக் கொண்டது. நிச்சயமாக காலையில் தான் செய்துவைத்த வேலையைப் பற்றி கேட்பான் என்பது அவளுக்குத் தெரியும். தன்னை திடப்படுத்திக் கொண்டு அறைக்குள் நுழைந்தாள்.

அவளுக்காகவே காத்திருந்தாற்போல் வாசலையே பார்த்தவாறு அமர்ந்திருந்தான் ராஜா. குழந்தையை அவன்

கையில் கொடுத்தவள், குளித்து, உடை மாற்றி.., குழந்தைக்கு பசியாற்றி முடிக்க, அவ்வளவு நேரமாக அமைதியாக இருந்தவன்,

‘‘ஏன் அப்படிப் பண்ண..?’’ நிதானமாகவே கேட்டான்.

குழந்தையை தோளில் போட்டு தட்டிக் கொடுத்தவள், ‘‘நீங்க கேட்டு நான் ஒன்றை கொடுக்கவில்லை என்று இருக்க வேண்டாமேன்னுதான்..’’ அவளும் அதே நிதானத்தோடு பதில் கொடுத்தாள்.

‘இதில் எதுவும் உள் விஷயம் இருக்கிறதா?’ யோசித்தவனுக்கு அப்படி எதுவும் இருப்பதுபோல் இருக்கவில்லை. அவளுக்கோ.., மழைநாளின் நினைவுகள் மழைச்சாரலாய் மனம் நனைத்தது.

‘‘உனக்கு கொஞ்சம் கூட வருத்தமாகவே இல்லை இல்ல.., நம் வாழ்க்கையோட மிகப்பெரும் முடிவு அதில் இருக்குன்னு உனக்கு தோணவே இல்லையா..?’’ குரலில் எதையும் காட்டாமல் கவனமாகக் கேட்டான்.

‘‘உங்க மனசுக்குள் இருப்பதையோ.., என் மனசுக்குள் இருப்பதையோ அந்த வெற்று காகிதத்தால் உணரவே முடியாது. அப்படி இருக்கையில்.., நம் வாழ்க்கையின் முடிவு அந்த

பேப்பரில் இருக்குன்னு எப்படி சொல்றீங்க..?'' அவள் பதிலில் குழம்பிப் போனான்.

''பிறகு ஏன் சைன் பண்ண..?'' ''அதுக்குதான் ஏற்கனவே பதில் சொல்லிட்டேனே..''

''அப்போ நானும் அதில் சைன் பண்ணவா..?'' ''அது உங்க இஷ்டம்..'' ஒரு முடிவே தெரியாத விவாதம்.., தலை சுற்றிப் போனது.

''நான் முதலில் சைன் பண்ணியிருந்தாலும் இப்படித்தான் பேசியிருப்பியா?'' அவன் கேட்க,

''உயிரோட செத்துப் போயிருப்பேன்..'' அவள் பதிலில் ஆடிப் போனான்.

வேதனை நெஞ்சை அடைக்க.., ''என்னை எத்தனை முறைதான் சாகடிப்ப நிஹா. நீ செய்தது எனக்கும் அப்படித்தான் இருக்கும்னு உனக்குப் புரியவே இல்லையா?'' தன் இருக்கையில் இருந்து எழுந்து சென்று அவள் முன்னால் அமர்ந்தான்.

குழந்தையை கட்டிலில் கிடத்தியவள்.., ''இப்போ.., இந்த நிமிஷம்.., இதோ இந்த தாலியோட, முழு உரிமையா இருக்கும்போதே உங்களுக்கு இப்படி இருக்கே.., ஆனா.., அன்னைக்கு.., உரிமையா தொட்டுட்டு போனவர் வருவார்ன்னு நான் காத்துட்டு இருந்தப்போ.., எனக்கு மாப்பிள்ளை பார்த்து

அனுப்பி வச்சீங்களே.., நான் ரொம்ப சந்தோஷப்பட்டிருப்பேன்னு நினைச்சீங்களா..?'' கையில் தாலியை எடுத்துக் காட்டி அவள் கேட்க, சர்வாங்கமும் ஒடுங்க நின்றிருந்தான்.

அது ஒரு நொடிதான்.., அடுத்த நிமிடம்.., ஆவேசமாக அவளை அருகே இழுத்தவன்.., அவள் இதழ்களை வன்மமாய் சிறை செய்தான். அவள் திமிறவோ.., தலையை அசைக்கவோ கூட இல்லை. அந்த தீண்டலில் கரையக் கூட இல்லை.

எவ்வளவு நேரமோ.., தன் கோபம் முழுவதையும் அந்த முத்தத்தில் காட்டியவன், உவர்ப்பாய் அவள் ரத்தத்தை சுவைத்த பிறகே.., தன் வேகம் தணிந்தான். அவன் அவளை விட்டு விலக.., அவ்வளவு நேரமாக மூச்சடக்கி காத்திருந்தவள், வேகமாக மூச்சு விட்டாள். வலியெடுத்த தன் கீழுதட்டை வாய்க்குள் இழுத்துக் கொண்டவள், கேள்வியாக அவனை ஏறிட்டாள்.

''உனக்கு யார் சொன்னது..?'' அவன் குரலில் கொப்பளித்த கோபம்.., அவன் கையில் கிடைத்தால்.., கொன்று போட்டுவிடும் வெறி அவன் விழிகளில் தெறித்தது.

அதில் திடுக்கிட்டவள்.., அதை இவன் செய்திருந்தால் நிச்சயம் இந்த கோபம் சாத்தியமே இல்லை என்றே தோன்றியது.

‘‘சொல்லு..’’ அவளை உலுக்கினான். அவனது சத்தத்தில்.., துளசி மேலே விரைந்தார்.

‘‘அ..ம்..மா..’’ அவள் திணற.., அதே நேரம் அங்கே பிரசன்னமானார் துளசி.

அவ்வளவுதான்.., அத்தனை நேரம் அவனிடம் குடிகொண்டிருந்த கோபம் சட்டென வடிய.., துளசியின் பக்கம் திரும்பினான்.

‘‘அத்த.., இவளுக்கு நான் வேற மாப்பிள்ளை பார்த்திருக்கேன்னு இவகிட்டே சொன்னீங்களா..?’’ என் காதல் அடிமுதல் நுனிவரைத் தெரிந்த நீங்களா இப்படிச் சொன்னது..? அவன் கேள்வியில் அந்த பாவனையே தொங்கி நின்றது.

‘‘ஆமா சொன்னேன்..’’ துளசி உரைக்க, நம்ப முடியாமல் அவரை வெறித்தான்.

‘‘ஏன் அத்த..?’’.

‘‘என்னை வேற என்னதான் செய்யச் சொல்றீங்க? உங்கமேலே இருந்த கோபத்தில் கல்யாணத்துக்கு ஒத்துக்கவே மாட்டேன்னு ஒரு பிடிவாதம். ஒண்ணா ரெண்டா.., எத்தனைநாள் அவகிட்டே எல்லோரும் தொங்கறது?

‘‘அதான்.., அதாவது.., வீட்ல சின்ன குழந்தைகள் இருந்தா.., டிவியை ரொம்ப சத்தமா வச்சு பாப்பாங்க. நாம சத்தத்தை

குறைன்னு சொன்னா கண்டுக்கவே மாட்டாங்க.., அதே நேரம்.., டிவியை ஆப் பண்றியா..? இல்ல சத்தத்தை குறைக்கறியான்னு கேட்டுப் பாருங்க..,

“சட்டுன்னு சத்தம் கம்மியாயிடும்.., அதே தான் அவ விஷயத்திலேயும் செய்தேன். ஒண்ணு.., அவளால் செய்யவே முடியாத ஒரு விஷயம்.., இன்னொன்னு அவளால் செய்ய முடிந்த ஒரு விஷயம்.., வேற ஒருத்தனை கட்டிக்கோ.., இல்ல மனசுக்கு பிடிச்சவனை கட்டிக்கோ.., அவ்வளவுதான்..” அவர் பக்கம் பார்த்தால் அவர் செய்தது சரியே.

ஆனால்.., நிஹாசினியின் பக்கம் யோசித்தால்..? அது எவ்வளவு பெரிய கொடூரமான செய்கை.., “ஏம்மா இப்படிப் பண்ணீங்க..? ஏன்..? என் மனசு என்ன பாடுபடும்னு நீங்க யோசிக்கவே இல்லையா..?” நிஹாசினி கேட்க,

“ஒரு அம்மாவா என் இடத்தில் இருந்து பார்.., அப்போ புரியும். வேண்டாம் என்னை எதையும் சொல்ல வைக்காதே. ஆத்தில் தள்ளி விடத்தான் முடியும். நீச்சல் அடிச்சு தப்பிக்கிறதும்.., தண்ணீ குடிச்சு செத்துப் போறதும் உன் விருப்பம். ஆனா.., நீ ரெண்டாவது ரகமா போயிட்டியே என்பதுதான் என் வருத்தமே..” குழந்தையை தூக்கிக் கொண்டு கீழே சென்றுவிட்டார்.

அவர் செல்லவே.., அறைக்குள் ஒரு அமானுஷ்ய மௌனம் நிறைய, தன்னை தேற்றிக் கொண்டவள்.., “சாரி ராஜ்..” மெதுவாக அவன் தோள் தொட்டாள்.

“லட்சத்தில் ஒரு பாகம் கூட நான் அப்படி செய்திருக்கவே மாட்டேன்னு உனக்குத் தோணலையா ஹாசினி.., இந்த உலகத்தில் எதுக்காகவும், யாருக்காகவும் என்னால் உன்னை விட்டுக் கொடுக்கவே முடியாதே.., அப்படி இருக்கும்போது..” மாரடைப்பு வந்த பொழுது இருந்த அதே கசங்கிப்போன முகத்தில் அவன் கேட்க, அவன் நெஞ்சிலே சாய்ந்து கொண்டாள்.

அவன் நிலையில் மாற்றம் இல்லாமல் போகவே.., கட்டிலில் அவனை அமர்த்தி.., அவன் முகத்தை தன் மார்போடு இறுக்கியவள்.., “ஐ லவ் யூ ராஜ். வேண்டாம்.., எதைபற்றியும் யோசிக்க வேண்டாம். முட்டாள்த்தனமா இருந்துட்டேன்.., என்னை மன்னிச்சுடுங்க..” அவன் தலை கோதினாள்.

முதல் முறையாக தன் எமோஷனைக் கடந்து போக முயன்றான். தன் கோபத்தை விடுத்தவன், மனதுக்குள் அமைதியடைய முயன்றான். ‘இல்ல ஹாசினி.., நான் எங்கேயோ உன்னை தவற விட்டுட்டேன்..., அது எந்த இடம்னு எனக்குப்

புரியவே இல்லை. எனக்கு யோசிக்கணும்.., நிறைய யோசிக்கணும்..,

'அவங்க சொன்னது உனக்கு எவ்வளவு கஷ்டமா இருந்திருக்கும்னு தெரியுது.., அதையும் மீறி..' தனக்குள் புலம்பியவன் விடை தேட முயன்றான். அதை அவளிடம் கேட்க முயலாததுதான் பிழையா?

இப்பொழுது யோசிக்கையில், அந்த விவாகரத்து பத்திரத்தில் அவள் கையெழுத்து போட்டதுக்கும் ஏதாவது காரணம் இருக்குமோ..?' என எண்ணத் தூண்டியது. ஆனாலும், அவள் அதில் கையெழுத்து போட்டுவிட்டாள் என்ற உண்மையை தாண்டி வேறு யோசிக்க முடியவில்லை.

அவளோ.., தன் நேசத்தை அவனுக்கு உணர்த்தும் விதமாக, அவன் தலை கோதி, தனக்குள் புதைத்துக் கொள்ள, அவள் எத்தனையோ முறை வார்த்தைகளில் வடிக்க முயன்ற உணர்வுகளை தவிர்க்க முடிந்த அவனால், அவள் நேசத்தை வெளிப்படுத்துகையில் அடங்கிப் போகவே முடிந்தது.

அவள் கைகளுக்குள் அடங்கிக் கொண்டவன், சிந்தைகளை சற்று நேரம் ஒதுக்கி வைக்க முயன்றான்.

# அத்தியாயம் 21

அன்று மாலையே கிளம்புவதாக இருந்தவர்கள்.., ராஜா காலையில் போகலாம் என உரைக்கவே.., துளசியும் அதற்கு ஒத்துக் கொண்டார். ராஜா சற்று அமைதியாக இருப்பதே பெரும் நிம்மதியாக இருந்தது நிஹாவுக்கு. ஆனாலும்.., தன் மனதில் இருக்கும் விஷயங்களை அவனிடம் சொல்ல பெரும் தயக்கம்.

படுக்கையில் விழுந்தவர்களுக்கு உறக்கம் என்பது எட்டாக் கனியாகவே இருந்தது. மூளைக்குள் எதையோ அறிந்துகொள்ளும் தேடல் எழும்பி அவனைத் தூங்க விடாமல் அலைக்கழித்தது.

அவளுக்கோ.., அவன் தனக்கு மாப்பிள்ளை பார்த்து அனுப்பவே இல்லை, என்ற உண்மை தெரிய வந்ததில் நிலை குலைந்து போயிருந்தாள். அவன்மேல் தான் கொண்ட எந்த கோபத்துக்கும் அடிப்படையே இல்லாத நிலை, தான் எவ்வளவு முட்டாளாக, கண்களை இறுக மூடி, செவிகளைத் தொலைத்து இருந்திருக்கிறோம்.., எண்ணியவளால் தன்னையே மன்னிக்க முடியவில்லை.

தனது தேவையற்ற கோபத்தால் அவனை வதைத்த நிமிடங்கள் பூதாகரமாக மிரட்ட, நெஞ்சே வெடித்துவிடுமோ என

அஞ்சினாள். அந்த நிமிடம், அவன் தன்னை எவ்வளவு வதைத்தாலும் பரவாயில்லை என்றே தோன்றியது.

ஆனால்.., அருகில் படுத்திருப்பவன் தன்னை வதைப்பதற்கு பதில், அவனையே தண்டித்துக் கொள்கிறானே.., அவளால் அதை தாங்க முடியவில்லை.

‘‘ராஜ்.., கொஞ்சம் அமைதியா இருங்க..’’ அவன் புரள்வது பொறுக்காமல் சொன்னாள்.

‘‘என்னை பழிவாங்கத்தான் அந்த பேப்பர்ல சைன் பண்ணியா ஹாசினி..’’ திடுமென அவன் கேட்க,

‘‘என்னை நானே பழி வாங்க முடியுமா..?’’ அவள் திருப்பிக் கேட்க, அவனுக்கு தலை சுற்றியதுதான் மிச்சம்.

‘‘ஏன் இப்படி என்னை பாடா படுத்தற? உன்மேல் முழுசா கோபப்பட கூட முடியலை. என்னை நானே வருத்திக்கணும்னு தோணுதே தவிர..’’ அவளை நெருங்கியவன், இறுக்கமாக அணைத்துக் கொண்டான். அந்த நிமிடம், அவனுக்குள் தொலைந்து போக தவித்தது அவள் மனம்.

‘‘முடியல ஹாசினி.., என்னவோ பயித்தியமே பிடிக்கற மாதிரி இருக்கு..’’ அவள் கழுத்தினடியில் முகம் புதைத்தவனுக்கு.., அவளது தாய்மை வாசனை கிறங்க வைத்தது.

எதையுமே செய்ய முடியாத நேரத்தில்.., ஏதாவது செய்து அந்த இறுக்கத்தை தவிர்க்க முயல்வோமே.., அப்படி இருந்தது அவன் செய்கை.

அவள் வேண்டும் எனவும்.., வேண்டாம் எனவும் மனதுக்குள் ஒரு தள்ளாட்டம். இன்னும் அழுத்தமாக முகத்தை புதைத்தவன்.., அவள் இடையை கட்டிக் கொண்டான்.

அவன் சிகை கோதியவள்.., அமைதியாக அவன் நிலையை உள்வாங்கியவாறு படுத்துக் கிடந்தாள். அவள் அருகில் இறுக்கமாக இணைந்தவன், ஒரு மாதிரி அவளுக்குள் புதைய முயன்றான். அதை உணர்ந்தவளுக்கோ.., தேகத்தில் மெல்லிய சிலிர்ப்பு.

ஒரு மாதிரி அவஸ்தையான உணர்வு.., “ராஜ்..” உன் தேவை எனக்குப் புரிகிறது.., என்னும் படியான அழைப்பு.., அவ்வளவுதான்.., அவள் குரலில் இருந்த பாவனையில்.., அதே மழைநாளின் அவள் அழைப்பு நினைவிற்கு வர, கிளர்ந்திருந்த அவன் உணர்வுகள் வடிந்து போனது.

“குட் நைட்..” உரைத்தவன் அவளிடமிருந்து விலகி படுத்துக்கொள்ள, சிலிர்த்த அவள் தேகம் சில்லிடத் துவங்கியது. அவன் தன்னை நெருங்கி வருவதும்.., கிளர்ந்தெழும் நொடிகளில் விலகிச் செல்வதும்.., அவள் என்ன உணர்வுகள் அற்ற ஜடமா?

ஒரு பெண்ணான அவளால் அவன் செய்கையை அமைதியாக ஏற்க முடிந்தாலும்.., அவன் மனைவியாக, அவன் துன்பப்படுவதை கண்டும் காணாமல் இருக்க முடியவில்லை.

‘‘ஏன் ராஜ்..? ஏன் இப்படி..?’’ தன்னை மீறி அவள் கேட்க,

‘‘உணர்ச்சிவசப்படும் நிமிடங்களில் இன்னும் அதிகம் கவனமா இருக்கணும்னு நினைக்கறேன்..’’ அவன் குரல் உணர்வுகளின் தாக்கத்தில் கரகரத்தது.

‘நீங்க கவனமா இருக்கணும்னு நினைக்கறீங்க.., ஆனா நான்.., உங்களோட சேர்ந்து தொலைந்து போக தவிக்கிறேனே..’ நினைத்ததை அவளால் சொல்ல முடியவில்லை. தனக்கான அவனது தேடலும், தேவையும், தாபமும் புரிகையில், அது தெரியவில்லை என எப்படி நடிக்க?

தனக்கு முதுகு காட்டி படுத்திருந்த அவன் முதுகோடு ஒட்டிக் கொண்டவள், அவன் நெஞ்சின் குறுக்காக கை போட்டு தழுவிக் கொண்டாள். அவன் கால் மேல் காலை தூக்கிப் போட்டவள், அவன் உணர்வுகளை தனக்குள் வாங்க முயன்றாள்.

‘என்னை எடுத்துக்கொள்..’ என இதைவிட ஒரு பெண்ணால் எப்படி அவனுக்கு உணர்த்த முடியும்? தன் இதழை அவன் கழுத்தில் ஒற்றியவள் விலக்கிக் கொள்ளவே இல்லை. தன் முதுகில் உணர்ந்த அவளது ஸ்பரிசம்.., அவளது அழகிடம்

கொடுத்த அவஸ்தையான உணர்வு.., அவளது முத்தம்.., அவன் உணர்வுகள் தாறுமாறாக சிதறத் துடித்தது.

‘விலகிவிடு..’ என அவன் மனம் உந்த, அப்படிச் செய்தால், அவள் தாங்கிக் கொள்ள மாட்டாள்.., என அவனுக்குள் இருக்கும் காதலன் குரல் கொடுக்க, அசைவின்றி படுத்துக் கிடந்தான்.

அவனது இறுகிய தேகத்தை உணர்ந்தவளுக்கு அழுகை பொங்க, கலங்கும் கண்களை இறுக மூடியவள்.., அசையாமல் அவனோடு ஒட்டிக் கொண்டு கிடந்தாள். ஒரு கட்டத்துக்குமேல் அவனால் அதை தொடர முடியாமல் போக, நிமிர்ந்து படுக்க, அவன்மேல் பாதியாக படர்ந்தவள், அவன் கழுத்து வளைவில் முகம் புதைத்துக் கொண்டாள்.

அவனுக்கோ.., அவளை மொத்தமாக ஆண்டுவிடும் வேட்கை கொழுந்துவிட, அதை செய்ய முடியாத நிலையில், தன் உணர்வுகளைத் தூண்டும் அவளை விலக்கித் தள்ள கைகள் பரபரத்தது.

அதே நேரம்.., அவன் கழுத்து வளைவில் அவன் உணர்ந்த ஈரம்.., ‘அழுகிறாளா..?’ துடித்துப் போனவன், தன் கரத்தால் மொத்தமாக அவளை வளைத்துக் கொண்டான். அதற்குமேல் செல்ல அவன் விரும்பவில்லை.., உணர்ச்சிவசப்படும்

தருணங்களை அவன் கடந்தே ஆகவேண்டும்.., மீண்டும் இறுகிப் போனான்.

அவன் மனம் புரிந்தவளுக்கு, அவனது கோபத்திலும் தன்னை காயப்படுத்த முயலாத அவனது செய்கையில், உள்ளம் நனைந்தது. ‘இவரைப்போய் வதைத்தேனே..’ அவளுக்கே அவளைப் பிடிக்கவில்லை.

அவன் கன்னம் தீண்டி, இதழ் பதித்துவிட அவள் மனம் தவித்தாலும், கட்டுப்பாடாக இருக்க அவன் தவிக்கையில், தன் செய்கை அவனை மேலும் காயப்படுத்திவிடக் கூடாதே என்ற கவனம் பிறக்க, உறக்கம் வராத இமைகளை அழுத்தமாக மூடிக் கொண்டாள்.

இரவே விடியாதோ.., என நீள.., இருவரும் எப்பொழுது உறங்கினர் என அவர்களுக்கே தெரியவில்லை. விடியலில்.., கதவைத் தட்டும் ஓசையில் எழுந்தவள், பாத்ரூமில் நீர் விழும் ஓசை கேட்கவே.., ராஜா அங்கே இருப்பதை உணர்ந்துகொண்டவள், அறைக் கதவைத் திறந்தாள்.

அவள் கையில் பூஸ்ட்டை திணித்த துளசி.., மாப்பிள்ளை ஊருக்குப் போக என்னை கிளம்பச் சொல்லியிருந்தார்.., சீக்கிரம் கீழே வா...” உரைத்தவர் சென்றுவிட்டார். அடுத்த ஒருமணி நேரத்தில் அவர்கள் கிளம்பிச் செல்ல, அவளோ கல்லூரிக்குச் சென்றாள்.

சென்னைக்குச் சென்றவன்.., முதல் வேலையாக அவள் சைன் செய்த பேப்பர்களை பிரித்துகூட பார்க்க தைரியமற்றவனாக தூக்கி கப்போடுக்குள் போட்டு மூடினான்.

***கார்த்திகா ராஜாவின் வீட்டில் இருந்து கல்லூரிக்குச் சென்று வர, கல்லூரிக்கு வந்து அவளது தாய் அவளை சந்தித்துச் சென்றார். ஒற்றை மகளை பிரித்து இருக்கும் வருத்தம் அவரிடம் அதிகம் இருந்தது. தாயின் கண்ணீரைக் கண்ட அவளால், நிம்மதியாக இருக்க முடியவில்லை.

உடனே சீனிக்கு அழைத்தவள் அழுது புலம்ப, அன்று மாலை அவளை வீட்டில் வந்து சந்திப்பதாக உரைத்தவன் அலைபேசியை வைத்து விட்டான். மாலையில் அவன் வரவுக்காக சற்று ஆர்வமாகவே காத்திருந்தாள்.

அவனை சந்தித்து சில நாட்கள் கடந்துவிட்டது. ஏனோ அவனுக்கும் அவளை நேரில் சந்திக்கும் தைரியம் இருக்கவில்லை. அவள் வீட்டை விட்டு அவளை தனியாக அழைத்து வந்து விட்டோமே என்று கவலை கொண்டான்.

மாலையில் ராஜாவின் வீட்டுக்கு வர, அவனை வரவேற்ற தாரிணி, காபி கொடுக்க, சுஜா, தாரிணி, சீனி, தனா என அனைவரும் அமர்ந்து சற்று நேரம் உரையாடினர். அதன் பிறகு பெரியவர்கள் அனைவரும், சிறியவர்களுக்கு தனிமை கொடுத்து விலகிச் செல்ல,

“கார்த்தி.., சீனியை ரூமுக்கு கூட்டி போய் பேசு..” சுஜா உரைக்க, அவனை அழைத்துக் கொண்டு, அவளுக்காக ஒதுக்கியிருக்கும் அறைக்குச் சென்றாள்.

அறைக்குள் நுழைந்த அடுத்த நிமிடம், அவன் நெஞ்சில் விழுந்து அவள் அழ, அவளை எப்படி சமாதானப்படுத்த என்றே அவனுக்குத் தெரியவில்லை. “இல்லம்மா.., ஒண்ணும் இல்லை.., எல்லாம் சரியா போய்டும்.., அம்மாவை பாக்கணும்னா வீட்டுக்கு போகலாம்..,

“நான் அழைச்சுட்டு போறேன்.., நீ இப்படி அழுதால் நான் என்ன செய்யட்டும்.., அதான் உங்க அம்மா நம்ம பக்கம் இருக்காங்களே.., கல்யாணம் முடிஞ்ச பத்தே மாசத்தில் ஒரு பேரனோ, பேத்தியோ பெத்து உங்க அப்பா மூஞ்சியிலேயே உச்சா போக வச்சால், மனசு மாறிட்டு போறாங்க..” அவன் நிலைமையை இலகுவாக்க முயல, அது சரியாக வேலை செய்தது.

“எப்போ பாத்தாலும் அதே நினைப்பு தானா..? கொஞ்சம் சீரியஸா இருங்களேன்..” அவன் நெஞ்சில் குத்தியவள், சற்று விலகிக் கொண்டாள்.

“கல்யாணம் ஆகப்போற மாப்பிள்ளைக்கு வேற என்ன நினைப்பு இருக்குமாம்..?” உல்லாசமாக உரைத்தவனின் கண்கள்,

தன்னவளை வருட, இன்னும் தூரமாக போய் நின்று கொண்டாள்.

அவள் அவ்வாறு விலகவே.., கை நீட்டி அவளை சற்று முரட்டுத் தனமாக இழுக்க, அவன் இழுத்த வேகத்தில், அவன் நெஞ்சோடு சற்று பலமாகவே மோதிக் கொண்டாள்.

“அம்மா.., போலீஸ் எல்லாம் முரட்டு ஆசாமிங்கன்னு என் ப்ரண்ட்ஸ் சொன்னது சரியாத்தான் இருக்கு..” அவன் நெஞ்சுக்கு குறுக்காக தன் கை வைத்து தடுத்தவள், அவன் தேகத்தோடு இணைவதை தடுக்க முயன்றாள்.

அதை உணர்ந்தவன், “உனக்கு யாரு இப்படி பொய்யான தகவல் எல்லாம் தரது..” அவள் கையை விலக்கியவன், அவளை தன் நெஞ்சோடு இறுக்க, அவன் கள்ளத்தனம் புரிந்தவள், பலம் கொண்ட மட்டும் அவனை விலக்கப் போராடியவள், அது முடியாமல் போகவே, அவனோடு ஒட்டிக் கொண்டாள்.

அவனோ.., அவள் தேகம் கொடுத்த மெல்லிய உணர்வுகளை ரசித்தவாறே அவளை ப் பார்க்க, “எதுவா இருந்தாலும் தொடாமல் பேசுங்க..” அவன் கண்களில் இருந்த வேட்கை கண்டு சற்று உதறலாகத்தான் இருந்தது.

அவள் பயம் உணர்ந்தவன், "சரி போ.." வேகமாக தன் கரத்தை விலக்கிக் கொள்ள, அவள் உள் மனம் செல்லமாய் சிணுங்கியது.

அதை அவனிடமிருந்து மறைத்தவள், சுவர் ஓரமாக சென்று நின்றுகொள்ள, அவள் அருகில் நெருங்கியவன்.., "ஜஸ்ட், உன் கையை மட்டும் புடிச்சுக்கவா..?" அவன் அனுமதி வேண்ட, முகத்தை அவனுக்கு காட்டாமல் பக்கவாட்டில் திருப்பியவள், கீழுதட்டை பற்களால் பற்றிக் கொண்டாள்.

'இவ்வளவு நேரம் யார்கிட்டே பெர்மிஷன் கேட்டாராம்..?' மனதுக்குள் எண்ணியவள், அவனைப் பார்க்கவில்லை.

அவள் அமைதியே அவனுக்கு போதுமாக இருக்க, தன் பெருவிரல் கொண்டு, அவள் நுனி விரல்களைத் தீண்ட, விரல் நுனியில் மின்சாரம் பாயும் உணர்வு. 'ஹையோ.., கொல்றானே..' அவன் கரம் மெதுவாய் அவள் முழங்கை வரைக்கும் வருட, தன் நெஞ்சுக்கூடு விம்மித் தணிய, திண்டாடிப் போனாள்.

"கையை தானே தொட்டேன்.." அவள் நிலை கண்டு அவன் சீண்ட, வேகமாய் அவன் பக்கம் திரும்பியவளின் கன்னத்தில் உரசியது அவனது முரட்டு தாடையின் ரோமம். அவ்வளவுதான்.., தேகம் மொத்தமும் சிறிதாக நடுங்க, அவன் இதழ்களுக்கும், அவள் இதழ்களுக்கும் நடுவில் சில மில்லி

மீட்டர் இடைவெளி மட்டுமே. அந்த உணர்வை எப்படி வர்ணிக்க என்றே அவளுக்குத் தெரியவில்லை..,

அடி வயிற்றில் ஒரு பிரளயம்.., தேகத்தில் அலையலையாய் ஒரு பிரவாகம்.., அது வெகுவாக பிடிக்கவும் செய்தது.., அதை மறுக்கவும் தோன்றியது.., திணறியவளாக நின்று போனாள்.

அந்த இடைவெளியையும் அவனது மீசை ரோமம் ஈடுசெய்ய முயல, இப்பொழுது அவள் சுவற்றில் ஒற்றிய பல்லிபோல் நிற்க, இமைகள் இரண்டும் சாசர்போல் விரிந்து, இருவரின் மூச்சுக் காற்றும் மற்றவருக்கு பரிமாறப்பட்டுக் கொண்டிருந்தது.

'தள்ளிப்போ..' என சொல்ல இதழ் விரித்தால் கூட, அவன் இதழோடு அவள் இதழ்கள் உரசிக்கொள்ளும் என அஞ்சியவளாய், சற்று உலர்ந்துபோன தன் இதழ்களை ஈரம் செய்துகொள்ள, மெதுவாய் அவள் நாவு முயல, இவ்வளவு நேரமாக அவள் கண்களில் இருந்த அவன் பார்வை, சட்டென அவள் இதழ்களில் பதிந்து போனது.

அவ்வளவுதான்.., 'நீ ஏன் கஷ்டப்படுகிறாய்..' என்பதுபோல் அவன் பார்க்க, கப்பென இதழ்களை அழுத்தமாக மூடிக் கொண்டாள். அவன் கரமோ அவள் கரத்தை மெதுவாக அழுத்த, இப்பொழுது அவசரமாக கரத்தை இழுத்துக் கொண்டாள்.

‘இமைகளை மூடிக்கொள்..’ அவள் மனம் ஓலமிட, எங்கே இமைகளை மூடிக் கொண்டால், இதழ்களை முற்றுகையிடுவானோ என்ற பயத்தில், இமைக்க கூட மறந்து, நெஞ்சுக்கூடு விம்மித் தணிகையில், அவன் முரட்டு தேகத்தில் அவள் தேகம் மென்மையாக உரச, படு அவஸ்தையான நிலையில் அவள்.

அவனுக்கோ.., அணுவணுவாய் அவள் அவஸ்தையை ரசிப்பது மட்டுமே வேலையாக இருக்க, ‘ஆண்டவா.., இவன் கட்டிப்புடிச்சு முத்தம் கொடுத்தால் கூட பரவாயில்லை.., இப்படி கொல்றானே..’ இதயம் திடும் திடுமென அதிர, இமைகளோ படபடவென அடித்துக் கொண்டது.

‘‘ஏய்.., ஒண்ணே ஒண்ணு மட்டும்..’’ அவன் கண்கள் அவள் இதழ்மேல் நிலைக்க, மறுக்கும் நிலையிலா அவள் இருக்கிறாள்?

‘‘சீனி..’’ அவள் மென்மையாக முனக, அடுத்த நிமிடம், அவளது உலர்ந்து போன இதழ்கள், அவனது இதழ்களால் ஈரமாக.., அவனை இறுக்கிக் கொண்டாள். அவளது இமைகள் அழுத்தமாக மூடிக் கொள்ள, இதழ்களோ அவனை வரவேற்று தழுவிக் கொண்டது.

சற்று அழுத்தமான இதழமுதம்.., புரியாத உலகில் சஞ்சரிக்கும் உணர்வு.., கால்கள் இரண்டும் துவள, அவள் நிலை உணர்ந்து, தன் கையால் அணைத்து, தன்னோடு இறுக்கிக்

கொண்டான். முதல் முதலாக உணரும் பெண்ணின் ஸ்பரிசம்.., அவள் இதழ்களின் மென்மை.., அவள் இதழ்கள் வெண்ணையாக தனக்குள் கரையும் உணர்வு.

அவள் கரம் உயர்ந்து அவன் சிகைக்குள் ஆதரவாக அலைய, அதுவே அவனை முன்னேறத் தூண்டியது. அவள் இதழ்கள் என்ன அமுத சுரபியா? அவள் இதழ்தேனில் மூழ்கும் வண்டாகிப் போனான். அவளுக்குத்தான் வாய் உலர்ந்து போனது.

அவன் மேலும் மேலும் முத்தமிட, எங்கே அந்த உணர்வில் தன் நினைவு தப்பிவிடுமோ என அஞ்சினாள்.

ஒரு வழியாக அவள் மூச்சுக்காற்றுக்கு திணறுகையில் அவளை விட்டு விலக, அவளுக்கோ, அவன் முகம் காண முடியாத வெட்கம்.., “போலீஸ்காரன் முரட்டுத்தனமா நடந்துப்பான்னு சொன்னால் இனிமேல் நம்பாதே..” அவள் காதுக்குள் அவன் முனக, அவனை செல்லமாக அடித்து, அவன் தோள்மேல் சாய்ந்து கொண்டாள்.

“பொறுக்கி போலீஸ்..” அவள் முனக, வாய்விட்டே சிரித்தான்.

“இப்போ ஓகேயா..? எப்படி அய்யாவோட டிரீட்மென்ட்..” அவனை ஆதூரமாக அணைத்துக் கொள்ள, அந்த காதல்

திருடனை காதலாக பார்த்து தலை அசைத்தாள். இப்பொழுது அவள் மனதில் ஒரு அமைதி புகுந்திருந்தது.

***அடுத்த ஒரு மாதம்.., கார்த்திகாவின் திருமண வேலைகளில் கவனம் செலுத்தி ராஜா.., வேறு எதைப் பற்றியும் சிந்திக்கவில்லை.

நிஹாசினியோடு லதாவும் அவர்கள் வீட்டில் தங்க வந்துவிட.., சற்று நிம்மதியாகவே உணர்ந்தான். இடையில் இரண்டுமுறை நிஹாசினியைச் சென்று பார்த்தவன்.., அங்கே தங்குவதைத் தவிர்த்தான்.

அதை உணர்ந்தாலும்.., எதுவும் சொல்ல முடியாமல் அமைதியானாள். அன்றும் அப்படித்தான்.., குழந்தையைப் பார்க்கவென்று அவன் மாலையில் கிளம்பி வர, விழுப்புரத்தின் அருகே நெருங்குகையில்.., அங்கே அதிசயமாக மழை பெய்து கொண்டிருந்தது.

வழியில் அவனது கார் டயர் பெரிய சத்தத்தில் வெடிக்க.., சற்று நிலை தடுமாறினாலும்.., முயன்று காரை நிறுத்தினான். மழை பொழியும் நேரம்.., டயர் வேறு பஞ்சர் ஆக.., வண்டியை சாலையின் ஓரம் நிறுத்தியவன், வேறு வாகனம் எதுவும் கிடைக்கிறதா எனப் பார்த்தான்.

அந்த நெடுஞ்சாலையின் விரைந்த வண்டிகள் அனைத்தும் இவனை கண்டுகொள்ளாமல் போக.., ஆட்டோ கிடைக்குமா

எனப் பார்த்துக் கொண்டிருந்தான். கிட்டத்தட்ட இரண்டுமணி நேரத்துக்குப் பிறகு அங்கே ஒரு ஆட்டோ வர, அதைப் பிடித்துக்கொண்டு வீட்டுக்கு விரைந்தான்.

உள் சாலையில் ரோடு மிகவும் மோசமாக இருக்கவே.., ஆட்டோக்காரன் ஒருமையில் தூரத்துக்கு முன்பாகவே அவனை இறக்கி விட்டு சென்றுவிட்டான்.

அந்த இடம் இப்பொழுதுதான் வளர்ந்துவரும் இடமாகையால்.., சாலை விளக்குகள் எதுவும் சரிவர இயங்கவில்லை. போன் செய்து.., நிஹாசினிக்காக அமர்த்தியிருக்கும் காரை வரச் சொல்லலாம் என்றாலோ.., மழையில் நனைந்த போன் அதன் உயிர்ப்பை விட்டிருந்தது.

‘‘ச்சே.., இது வேற..’’ வாய்விட்டே புலம்பியவன்.., நடையை எட்டிப் போட்டான்.

அவ்வளவு விரைவாக வர நினைத்தாலும்.., அவன் அவர்கள் வீட்டை அடைய இரவு பத்துமணி ஆகி விட்டது. வீட்டின் அழைப்புமணியை அழுத்திவிட்டு காத்திருக்க.., லஷ்மி வந்து கதவைத் திறந்தாள்.

‘‘தம்பி.., என்ன இப்படி தொப்பலா நனைஞ்சு வந்திருக்கீங்க?’’ உள்ளே ஓடியவள் ஒரு டவ்வலோடு திரும்பி வந்தாள்.

ஹாலை ஒட்டியிருந்த பாத்ரூமில் உடை மாற்றியவன்.., “நிஹா படுத்துட்டாளா?” அவரிடம் கேட்டான்.

“அவங்க எல்லாம் இன்னைக்கு சீக்கிரமே படுத்துட்டாங்க தம்பி. சாப்பாடு ஏதாவது செய்யவா..?” கிச்சனுக்கு செல்லப் போனார்.

“இல்ல.., நீங்க படுத்துக்கோங்க.., நான் பிஸ்க்கட் சாப்ட்டுக்கறேன்..” அவர் பதிலை எதிர்பார்க்காமல் மாடி ஏறினான்.

வெளியே மழை கொட்டிக் கொண்டிருந்தது. கதவு பூட்டியிருக்க.., கதவைத் தட்டப் போனவன், அந்த சத்தத்தில் குழந்தை விழித்துக்கொள்ளக் கூடாதே என்பதால்.., கதவை வெறுமனே சாத்தி வைத்திருக்கிறாளா எனப் பார்ப்போம் என எண்ணியவன், குமிழைத் திருக்க, கதவு திறந்துகொண்டது.

மெதுவாக நுழைந்தவன்.., படுக்கையைப் பார்க்க, அதுவோ வெறுமையாக இருந்தது. ஒரு வேளை லதாவோடு படுத்திருப்பாளோ.., என அவன் நினைக்க, அதற்கு வழியே இல்லை என்னும் விதத்தில், குழந்தை தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தாள்.

‘குழந்தையை விட்டுட்டு எங்கே போனா..?’ யோசித்தவன் வெளியே வந்து, நெற்றியை தேய்த்துக் கொண்டான்.

‘ஒரு வேளை மாடிக்குப் போயிருப்பாளா..?’ கொட்டும் மழையில் அது சாத்தியமே இல்லை என்று எண்ணினாலும்.., அவன் கால்கள் தாமாகவே படிகளில் ஏறியது.

மாடிக் கதவு மூடியிருக்க.., திரும்பிவிட எண்ணியவன்.., காற்றுக்கு அது சற்று திறந்து மூடுவது கண்டு.., கதவைத் தள்ளிக்கொண்டு வெளியே எட்டிப் பார்த்தான். இருட்டுக்கு கண்கள் தடுமாற, வலதுபக்கம் இருந்த சுவிட்சை தேடி அழுத்தினான்.

வெளிச்சம் வெளியே பரவ.., கொட்டும் மழையில் கைகளை மார்புக்கு குறுக்காக கட்டிக்கொண்டு நின்றிருந்தாள் நிஹாசினி. திடுமென விளக்கு எரியவே, திடுக்கிட்டு திரும்பியவள், அங்கே ராஜாவை நிச்சயம் எதிர்பார்க்கவில்லை.

‘‘ஹாசினி.., கொட்டுற மழையில் என்ன பண்ற..?’’ அவளிடம் விரைந்தான்.

‘‘நீங்க இருங்க.., நான் வரேன்..’’ சற்று இரைந்து உரைத்தவள், அவனை எதிர்கொண்டாள்.

‘‘இந்த நேரத்தில் யாராவது மழையில் நனைவாங்களா? உடம்புக்கு ஏதாவது வந்துட்டா என்ன பண்றது?’’ அவள் கைபிடித்து அழைத்து வந்தவன்.., கொடியில் கிடந்த டவ்வலை எடுத்து அவள் கையில் கொடுத்தான்.

அதை வாங்கியவள் தலை துவட்ட.., ‘‘இப்போ எதுக்கு மழையில் நனைஞ்சுட்டு இருக்க..?’’ கடிந்துகொண்டான்.

‘‘பொதுவா எனக்கு மழை பிடிக்காது.., ஆனா இப்போ ரொம்ப பிடிச்ச விஷயத்தில் இதுவும் ஒண்ணு.., அதான்..’’ அவன் கண்களுக்குள் உற்று பார்த்து உரைத்தவள், அவனைத் தாண்டிக்கொண்டு அறைக்கு விரைந்தாள்.

‘என்ன சொல்றா..? மழை இப்போ பிடிக்குமா..? ஏன்..?’ போன வருடத்து மழைநாள் அவனுக்கு நினைவிற்கு வர.., ‘இவள் அதையா சொல்கிறாள்..?’ அவனால் நம்பவே முடியவில்லை.

‘அப்படியென்றால்.., அன்று நடந்ததற்கு அவளுக்கு கோபம் இல்லையா?’ என்னவோ இத்தனைநாள் மனதை அடைத்துக் கொண்டிருந்த ஒரு விஷயம் மனதை விட்டு அகன்றார்போல்.., உற்சாகம் மனதை நிரப்பியது.

உடனே அதை அறிந்துகொண்டே ஆகவேண்டும் என்ற வேகம் எழ, வேகமாக கீழே இறங்கினான். பாத்ரூமுக்குள் நீர் விழும் ஓசை கேட்கவே, படபடவென கதவைத் தட்டினான்.

அவன் தட்டிய வேகத்தில்.., அவசரமாக கதவைத் திறந்தவள், ‘‘அலை எழுந்துட்டாளா..?’’ கதவின் பின்னால் இருந்து தலையை மட்டும் வெளியே நீட்டி கேட்டாள்.

“அதெல்லாம் இல்லை.., எனக்கு ஒண்ணு கேக்கணும்..” அவன் குரலில் ஒரு பரபரப்பு.

“என்ன..?” அவ்வளவு அவசரமாக என்ன கேட்கப் போகிறான்?

“உனக்கு.., அன்னைக்கு நடந்ததுக்கு என்மேல் கோபம் இல்லையா..?” கண்களில் ஒரு எதிர்பார்ப்பு மின்னியது. எதைக் கேட்கிறான் என்று அவளும் கேட்கவில்லை.., அவனும் சொல்லவில்லை.

பழைய ராஜா.., கண்களில் ஒரு மின்னலோடு, குறும்பு புன்னகையில்.., தன்னை நெருங்கி.., தவிக்க விட்டு.., விலகிச்செல்லும் அதே ராஜாவாக இப்பொழுது அவள் கண்களுக்குத் தெரிந்தான்.

அந்த நொடியில், அவன் கண்களுக்குள் இருந்தது அப்பட்டமான ஒரு ஆர்வமும், எதிர்பார்ப்பும் மட்டுமே. அவனது கோபமோ வருத்தமோ துளியும் அதில் தெரியவில்லை. சட்டென, நொடியில் மந்திரக் கையிற்றை சுழற்றியது போன்ற அவனது மாற்றம்.., தனது ஒரு வார்த்தைக்கு இவ்வளவு சக்தியா? தனக்குள் வியந்து போனாள்.

‘அப்போ.., நான் கொஞ்சம் மாறினால்.., அவன் முழுவதும் மாறி விடுவானா?’ நொடிகளில் அவள் மூளைக்குள் ஒளிப் பிரவாகம்.

“இப்போவே சொல்லணுமா.., இல்ல குளிச்சுட்டு வந்து சொன்னால் போதுமா?” குரலில் கொஞ்சம் குறும்பு இருந்ததோ? ஒரு நொடி அவளை சுருட்டிகொள்ளும் பார்வை பார்த்தவன்,

“ஓ.., சாரி.., நான் அதை மறந்துட்டேன்..” மெல்லியதாக அசடு வழிந்தான்.

கதவைச் சாற்றியவள்.., மெல்லியதாக சிரித்துக்கொள்ள.., அவனோ.., ஒரு மாதிரி குதித்துக் கொண்டான். அப்பொழுதுதான் குழந்தை அலையின் நினைவு வர, வேகமாக அவளை எட்டிப் பார்த்தவன், அவள் நல்ல உறக்கத்தில் இருப்பதை பார்த்த பிறகுதான் ஆசுவாசமானான்.

ஹாசினி வருவதற்கு ஆன ஐந்து நிமிடங்களில், ஆயிரம் முறை பாத்ரூம் வாசலை பார்த்துக் கொண்டான்.

உடை மாற்றவேண்டும் என்ற எண்ணம் கூட சுத்தமாக மறந்து போனது.

வெளியே வந்தவள்.., ட்ரையரால் முடியைக் காய வைக்க, அவள் பின்னால் இருந்துகொண்டு, கண்ணாடியில் தெரிந்த அவள் பிம்பத்தையே வெறித்தான்.

கண்ணாடி வழியே அவனைப் பார்த்தவள், ‘‘நீங்களும் நனைஞ்சுட்டீங்களா? கார்ல வரலியா..? வேற எப்படி வந்தீங்க..? ட்ரெஸ் மாத்திக்காமல் அப்படியே இருக்கீங்க..’’ அவள் கேட்ட பிறகுதான் உடை மாற்றவில்லை என்ற விஷயமே உறைத்தது.

‘‘வழியிலே கார் ரிப்பேர் ஆயிடுச்சு.., சோ.., ஆட்டோ பிடிச்சு வந்தேன். போன் பண்ணி டிரைவரை கூப்பிடலாம்ன்னா.., போனும் மழையில் காலி..’’ உரைத்தவன், சாட்சும், டிஷர்ட்டும் அணிந்து கொண்டான்.

வாய் பதில் சொன்னாலும்.., விழிகளோ.., எதிர்பார்ப்பில் மின்னியது.

‘‘சாப்ட்டீங்களா?’’ அவள் கேட்க.., பசி இருந்தாலும், தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் பிரதானமாகப் பட்டது.

‘‘நான் கேட்டதுக்கு, வந்து பதில் சொல்றேன்னு சொன்னியே..’’ தயக்கமாய் இழுத்தான்.

‘‘ஆமா.., என்ன கேட்டீங்க..? அங்கே சரியா கேக்கலை..’’ அவனைப் பார்த்து திரும்பி அமர்ந்தாள்.

‘‘அதான்.., அன்னைக்கு நடந்ததுக்கு என்மேல் கோபம் இல்லையான்னு..’’ வார்த்தைகளை அவனால் முடிக்க முடியவில்லை.

“எதுக்கு கோபம்..?” அவனிடமே திருப்பிக் கேட்க, விழித்தான். ‘வர வர நான் ஒரு கேள்வி கேட்டால், திருப்பி இன்னொரு கேள்வியையே பதிலாக்குவது இவளுக்கு வேலையா போயிற்று..’ மனதுக்குள் எண்ணியவன்,

“நடந்ததுக்கு..” ஒருவேளை புரியாமல் கேட்கிறாளோ என திரும்ப உரைக்க, “அதான் எதுக்குன்னு கேட்டேன்..?” அவனுக்கு தலையை பிய்த்துக் கொள்ளலாம் போல் இருந்தது.

“ப்ளீஸ் ஹாசினி.., தெளிவா சொல்..”.

“இதற்குமேல் தெளிவா சொல்லவே முடியாது ராஜ். சரி வாங்க.., தோசை ஊத்தி தரேன்.., சாப்பிடுங்க..” அறையில் இருந்து வெளியேற, குழம்பிய மனநிலையில் அவளைப் பின்தொடர்ந்தான்.

சட்டென அவள் கரம் பற்றி இழுத்தவன், தன் இடையோடு அவளை இறுக்கிக் கொண்டு, அவள் விழிகளுக்குள் துழாவினான்.

நீண்ட நாட்களுக்குப் பிறகான தீண்டல்.., சற்று சீண்டலாக அவளைப் பார்த்தவன், “அப்போ.., வேற எதுக்கு கோபம்..?” தன் அழகிடம் அவனிடம் ஒட்டிக்கொள்ள, ஒரு அவஸ்தையான நிலையில் நெளிந்தவள், “சொல்லத் தெரியலை..” முனகியவள்.., அவன் நெஞ்சில் கைவைத்து தள்ளிவிட்டு விலகி நடந்தாள்.

ப்ரிட்ஜில் இருந்து மாவை வெளியே எடுத்து வைத்தவள்.., சாம்பாரையும் சூடாக்க வைத்துவிட்டு, தோசைக்கல்லை மற்றொரு அடுப்பில் ஏற்றினாள். கல் சூடாகியது.., முதலில் ஒரு தோசை வார்த்தவள்.., சுற்றிலும் நெய் ஊற்றி, சற்று முறுகலாக்கி எடுத்து, ஒரு தட்டில் போட்டு எடுத்தாள்.

“ஹால்ல உக்காருங்க..” அவள் உரைக்க, மறுத்தவன்,

கிச்சன் மேடையில் ஏறி அமர்ந்தான்.., அவள் முகம் பார்த்தவாறே இருக்க, “தட்டைப் பார்த்து சாப்பிடுங்க.., தோசை மேலே எக் ஊத்தவா? சாப்பிடுறீங்களா?” கேட்டவள்.., அவன் பதில் சொல்லும் முன்பே, அடுத்த தோசையில் எக் போட்டு.., மூடி போட்டு வேக வைத்து எடுத்துக் கொடுத்தாள்.

அவள் தோசை வார்த்த விதமே.., தனக்கு எப்படி பிடிக்கும் என தெரிந்து வைத்திருக்கிறாள்.., வியந்துகொண்டான்.

‘தன் உணவு முறையையும் கவனித்திருக்கிறாள்..’ எண்ணியவன்.., ‘அன்னைக்கு நடந்ததுக்கு கோபம் இல்லைன்னு சொல்றா.., மழையே பிடிக்கதவள் மழையில் நனையிறா.., ஒரு வாய் சாப்பாடு ஊட்ட மறுத்தவள், எனக்கு என்ன பிடிக்கும்னு கவனிச்சிருக்கா.., அப்படின்னா.., இவ நடந்துகொண்ட முறைக்கெல்லாம் என்னதான் காரணம்..’ குழம்பிப் போனான்.

அவன் பார்வை ஒரு மாதிரி அவஸ்தைக்கு உள்ளாக்க.., முன்பு அவன் தன்னை நெருங்குகையில் ஏற்படும் படபடப்பை உணர்ந்தாள். கன்னங்கள் தானாக சூடேற.., அவன் அருகாமையும், அந்த நிலையும்.., மிகவும் பிடித்தது.

அவன் உண்ணாமல் தன்னையே நோக்க, மெதுவாக அவன் கண் நோக்கியவள், "என்ன.., அப்படியே வச்சுட்டு இருக்கீங்க? சீக்கிரம் சாப்பிடுங்க.." அவள் உரைக்கவே.., ஒரு விள்ளல் பிட்டு.., அவள் வாய்க்கருகில் நீட்டினான்.

விழி விரிய பார்த்தவள், மறுக்காமல் வாங்கிக் கொண்டாள். அடுத்த தோசையை அவள் வார்க்க.., "ஹாசினி.., ஐ பீல் லைக் கிஸ் யூ.." அவன் ஆழ்ந்த குரலில் உரைக்க, அவன் முகத்தை நிமிர்ந்து பார்க்கவே இல்லை.

"'நோ'வா.." அவள் அமைதியைப் பார்த்து ஏக்கமாக கேட்க,

"என்ன திடீர்ன்னு.." இப்பொழுதும் அவனைப் பார்க்க மறுத்தாள்.

"இதுக்கெல்லாம் லெட்டர் போட்டா கேப்பாங்க.." அவன் பார்வையோ.., லஷ்மியின் கவனிப்பில், சற்று மினுமினுப்பாக மாறியிருந்த அவள்மேல் தழுவி மீண்டது. அவனது குறும்பு இம்சிக்க.., தோசைக்கல்லிலேயே பார்வையைப் பதித்திருந்தாள்.

அவன் பதிலில் இதழ் ஓரம் சிரிப்பில் விரிய.., அவன் கண்களை ஏறிடாமல், அடுத்த தோசையை அவன் தட்டில் வைத்தவள், சாம்பாரை ஊற்ற.., வலக்கையால் தட்டை பிடித்தவன்.., இடக்கரத்தால் அவள் இடையை வளைத்து, அவள் முகம் நோக்கி குனிந்தான்.

“இது கிச்சன்..” அவன் இதழ்கள், அவள் இதழை நெருங்க.., மெதுவாக முனகினாள்.

“நான் என்ன ஈபிள் டவர்ன்னா சொன்னேன்..” கேட்டவன்.., கையில் இருந்த தட்டை கிடைத்த இடத்தில் வைத்துவிட்டு.., வலக்கரத்தால், அவள் தோளை வளைத்தான். விலகிக் கொள்ளவெல்லாம் தோன்றவில்லை.., அவனோடு இப்படியே ஒட்டிகொண்டால் போதும்.., அவள் மனம் ஏங்கியது.

இதழ்களைத் தீண்டாமல்.., மூக்கால் மூக்கை உரசியவன், “இங்கேயும் லக்ஸ் சோப் தான் யூஸ் பண்றியா..” அவள் கன்னத்தில் மீசை முடியால் கோலமிட்டான்.

‘இல்ல.., எருமைச்சாணி..’ கடுப்பில் மனதுக்குள் முனகியவள், ‘ஆண்டவா.., ஒரு முத்தம் கொடுக்க என்ன ஆராய்ச்சி எல்லாம் பண்றான்..’ மனதுக்குள் எண்ணிக் கொண்டவள்.., அமைதியாக நின்றிருந்தாள். அவள்

நினைத்திருந்தால் விலகியிருக்கலாம்.., ஆனால் மனமோ அதைப்பற்றி கொஞ்சம் கூட சிந்திக்கவில்லை.

‘‘அப்படியே வெல்வெட் மாதிரி இருக்கு..’’ அவள் கன்னத்தில் இதழ் பதித்தவன், மெல்லியதாக இதழ் பதித்து உளறினான்.

நிஹாசினியின் கால்கள் தள்ளாட.., அவன்மேல் மெதுவாக சாய்ந்து கொண்டாள். மறு கன்னத்திலும் இதழ் பதித்தவன்.., இதழ்களை அவள் இதழ்களுக்கு இடம் மாற்றினான். மொத்தமாக உள் வாங்கியவன்.., அழுத்தமாய் சுவைக்க.., அவன் டிஷிர்ட்டை கொத்தாக பற்றிக் கொண்டாள்.

இன்னும் இன்னும் அழுத்தி முத்தமிட்டவன்.., அவள் இதழ்களுக்குள் ஒரு ஆராய்ச்சியே நிகழ்த்தினான். அவன் முத்த வேட்கையில்.., மயங்கி, கிறங்கித்தான் போனாள் நிஹாசினி.

‘‘ம்..’’ அவள் மென்மையாக முனக., அவள் முனகல், அவனை மேலும் மேலும் முத்தமிடத் தூண்டியது.

அவள் இடையில் பதிந்திருந்த அவனது கரம் அவள் மேனியில் இடம் மாற, மொத்தமாக நிலை குலைந்தாள். தேகம் முழுவதும் வெம்மையாய்.., அலையலையாய் ஒரு சுகம் பரவ.., அவன் கரத்தை வேகமாக தடுக்க முயல, அது வெற்றிகரமாக தோல்வியைத் தழுவியது.

காற்றில் பறக்கும் நிலையில்.., அவள் கால்கள் துவள.., சரியாக அதே நேரம்.., ''நிஹா.., நடு ராத்திரி கிச்சன்ல என்ன பண்ற..?'' லதாவின் குரலில், பதறி விலகியவள்.., அவளுக்கு முதுகு காட்டி நின்றுகொண்டாள்.

ராஜா வேகமாக தன் தட்டை தேட.., அங்கே இருந்த சூழலைப் பார்த் தவள், ''ஓ.., சாரி..'' கையில் இருந்த பாட்டிலில் தண்ணீர் எடுக்காமலேயே அங்கிருந்து விரைந்தாள் லதா.

''ஐயோ.., என் மானமே போச்சு.., அப்போவே சொன்னேன்.., இது கிச்சின்னு கேட்டீங்களா..?'' லதா எவ்வளவு தூரம் பார்த்தாளோ என்ற நினைவே நிஹாவை வெட்கம் கொள்ள வைத்தது.

ராஜா தோசையை உண்ணாமல் கையைக் கழுவ.., ''தோசையை சாப்பிடலையா..?'' அவனைக் கேட்டாள்.

''ஸ்வீட் சாப்ட்ட பிறகு நான் வேற எதையும் சாப்பிட மாட்டேன்..'' அவள் இதழ்களைப் பார்த்தவாறு உரைக்க, அவள் முகமோ செவ்வானமாய் சிவந்து போனது.

அவள் முகத்தில் தெரிந்த பாவனையில் கிறங்கியவன், ''பியூட்டி..'' குழைந்துபோய் அழைக்க, எப்பொழுதும் அவளை நெகிழ்ந்து, உருகச்செய்யும் அந்த அழைப்பின் கனம் தாளாமல்..,

உருகி நின்றவள், அவனை இறுக்கிக்கொள்ள எழுந்த வேகத்தை கட்டுப்படுத்தி, அங்கிருந்து ஓடியே போனாள்.

நொடி நேரத்தில் அவள் முகத்தில் தெரிந்த பாவனையில், மயக்கத்தில், உறைந்துபோய் நின்றான் ராஜா. இத்தனை நாட்களாக அவன் அழைக்கையில் தன் உணர்வுகளை வெளிக்காட்டியிராதவள், முதல் முறையாக வெளிப்படுத்தியிருக்க, அந்த இரவின் தனிமையில் மீண்டும் குழம்பிப்போய் நின்றிருந்தான்.

நின்றது ஒரு நொடிதான்.., கிச்சனில் விளக்கை நிறுத்திவிட்டு தங்கள் அறைக்கு விரைந்தான். படுக்கையில், அவனுக்கு முதுகுகாட்டி அவள் படுத்திருக்க, அவள் பார்வை, வார்த்தைகள் கொடுத்த தைரியத்தில் அவளை நெருங்கினான்.

அவள் இடையில் கை கோர்த்தவன், அவளை தன்பக்கம் திருப்ப, தன்மேல் படர்ந்தவனை விலக்கவும் இல்லை, அணைக்கவும் இல்லை. அவள்மேல் முன்னேறியவனுக்கு சட்டென அந்த வித்தியாசம் உறைத்தது.

“என்ன..? விருப்பம் இல்லையா..?” அவளை விட்டு விலகியவன் கேட்டான்.

“ஒரே ஒரு விஷயம் தெரிஞ்சுக்கணும்.., இப்போ நடக்கப்போவதால்.., இதனால்.., நமக்குள் இருக்கும் பிரச்சனை

முடிஞ்சுடும்ணு நீங்க நினைக்கறீங்களா?’’ அவள் நிதானமாகக் கேட்க, சட்டென விலகிக் கொண்டான்.

# அத்தியாயம் 22

**ஹா**சினிக்கு அவனது விலகல் அவளுக்கு வலித்தாலும், உணர்ச்சிவசப்படும் தருணங்களில் அதிக கவனமுடன் இருக்க முயல்கிறேன் என உரைத்து, தன்னை விட்டு விலகிப் போனவன், இப்பொழுது அப்படி ஒரு நிலையில், தன்னை எடுத்துக் கொண்டால், குற்ற உணர்வில் தவித்துப் போவானோ என எண்ணியே அதைக் கேட்டாள்.

மேலும், மேலும் அவனை குற்றவுணர்வில் குறுக வைக்க அவளால் முடியாது. அவனுக்கு அவள் வேண்டும் என உறுதியாக அவன் முடிவெடுத்த பிறகே அவனோடு ஒன்றாக கலக்க வேண்டும் என எப்பொழுதோ முடிவெடுத்து விட்டாள்.

அதைவிட.., இந்த நிமிடம்.., ‘எனக்கு கோபம் போகுமா எனத் தெரியாது.., ஆனால் நீ வேண்டும்..’ என அவன் உரைத்திருந்தால், சந்தோஷமாகவே அவனுக்கு இசைந்திருப்பாள்.

ஆனால்.., அதைச் செய்யாமல் அவன் விலகிய விதம்.., ‘அப்போ, இப்பொழுதும் உணர்ச்சிவசப் பட்டுதான் என்னை நெருங்கினாரா? அவருக்கு நான் முழுதாக வேண்டாமா?’ அந்த நினைவு கொடுத்த வலியை சுமப்பது கடினமாகத்தான் இருந்தது.

ஆனால் அதைவிட, அவனை மேலும் குற்றவுணர்வில் தள்ளாமல் விலகிக் கொண்டோம் என நினைக்கையில் ஒரு பக்கம் நிம்மதியாகவே உணர்ந்தாள். கூடவே, தன் கேள்வி நிச்சயம் அவனை சிந்திக்கத் தூண்டும் என்பதில் அவளுக்கு கொஞ்சமும் ஐயமில்லை.

அவன் தன்னோடு வாழப்போகும் நாள் வெகு தொலைவில் இல்லை என அவள் மனம் உறுதியாக நம்பியது. எனவோ, அப்பொழுதும் விலகிப் படுத்திருந்த அவனோடு, அவன் முதுகில் இணைந்து படுத்துக் கொண்டாள்.

அவள் கேள்விகள் ஒன்றாகவும்.., செய்கை வேறாகவும் இருக்க, ‘என்மேல் இவ்வளவு காதலாக இருக்கும் இவள் ஏன் அப்படிக் கேட்டாள்? பிறகு இப்படி இழைந்தால் அதன் அர்த்தம் என்ன..?’ குழம்பியவனுக்கு, அப்பொழுது நிச்சயம் அவள்மேல் கோபம் இல்லை.

***சென்னைக்கு காரில் விரைந்துகொண்டிருந்தான் ராஜா. தனது காரை சரி செய்ய வேண்டி.., ஒரு மெக்கானிக்கையும் அழைத்துக்கொண்டு, நிஹாசினிக்காக நிறுத்தியிருந்த கார், டிரைவரோடு கிளம்பிவிட்டான்.

அவனது கார் நிறுத்தியிருந்த இடத்துக்கு வந்தவன், ஸ்டெப்பினியை மாற்ற வைத்துவிட்டு, தன் காரை எடுத்துக்கொண்டு சென்னைக்கு கிளம்பினான்.

எப்பொழுதும் காரை அதி விரைவில் பறக்க விடுபவன், அன்று மிகவும் நிதானமாக ஓட்டினான். நிஹாசினியின்மேல் நிச்சயமாக கோபம் இல்லை. ஆனால்.., அவள் கேள்விக்கான காரணம் மட்டும் அவனுக்குப் புரியவில்லை.

அதே கேள்வியை தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். நேற்று அந்த உறவு நடந்திருந்தால், அவள்மேல் இருக்கும் கோபம் போயிருக்குமா? ஆம் என வைத்துக் கொண்டால்..? சிந்தித்தவன், ‘அப்படியென்றால்.., அதற்காகவா இத்தனைநாள் அவள்மேல் கோபம் கொண்டிருந்தேன்?’ தனக்குள்ளே கேட்டுக் கொண்டவன், சட்டென காரை நிறுத்தி விட்டிருந்தான்.

அவள் கேள்வியில் ஏதோ நியாயம் இருப்பதுபோல் தோன்றியது. ‘சரி.., இப்போ இல்லை என வைத்துக் கொண்டால்..?’ தன் நெற்றியை தேய்த்துக் கொண்டவன், பின்னால் வந்த கார் ஒன்று வேகமாக ஹாரன் அடித்து அவனைக் கலைக்க, அப்பொழுதுதான் வண்டியை வழியிலேயே நிறுத்திவிட்டது புரிந்தது.

வேகமாக காரைக் கிளப்பி ஓரத்தில் விட்டவன்.., காருக்குள் ஒரு மாதிரி உணர, காரை விட்டு இறங்கி, அதில் சாய்ந்து நின்றான்.

இமைகளை மூடியவன், தன் டிரிம் செய்திருந்த தாடையை அழுத்தமாக தேய்த்துக் கொண்டான். ‘இல்லை என்றால்..,’

மீண்டுமாக எண்ணியவன், தன் புருவ மத்தியை அழுத்தமாக பற்றிக் கொண்டான்.

‘அந்த உறவுக்கு அர்த்தம் இருந்திருக்குமா?’ அதே கேள்வி.., மீண்டும் மீண்டும் எழுந்ததே தவிர, விடை நிச்சயமாக கிடைக்கவில்லை. அதற்கு விடை அறிந்தே ஆகவேண்டும்.., வேகமாக தன் அலைபேசியில் தாயை அழைக்க முயன்றவன், தன் அலைபேசி செயலிழந்ததே அப்பொழுதுதான் நினைவிற்கு வந்தது.

அதற்குமேல் தாமதிக்காமல் காருக்குள் ஏறியவன், சென்னைக்கு வண்டியைச் செலுத்தினான். சென்னையை அடைந்தவன், முதலில் தேடியது தன் தாயைத்தான்.

‘‘அம்மா..’’ அழைத்தவன், அவர் வருவதற்கு கூட காத்திராமல், அவரது அறைக்கு விரைந்தான்.

‘‘என்னப்பா..?’’ அவன் குரலைக் கேட்டவர், அவன் அறைக்கதவை தட்டும் முன்பே கதவைத் திறந்திருந்தார்.

‘‘உங்ககிட்டே பேசணும்..’’ அவன் உரைக்க, விலகி வழி விட்டவர், கதவைச் சாற்றிவிட்டு, அங்கிருந்த சோபாவில் அவனை அமர வைத்து, தானும் அமர்ந்து கொண்டார்.

அங்கிருந்த தனா மனைவியிடம் பார்வையால் என்னவென்று கேட்க, ‘பொறுமையா இருங்க சொல்லுவான்..’ அவரும் பார்வையாலேயே பதில் கொடுத்தார்.

தனாவை ஒரு பார்வை பார்த்தவன், தாயிடம் திரும்பி, “அம்மா.., ஒரு புருஷனும் பொண்டாட்டியும் சண்டை போட்டுகிட்டா.., ம்ஹூம்.., இல்ல.., அது இல்ல.., அது என்னன்னா.., ஒரு நிமிஷம் இருங்க.., நான் கரெக்ட்டா சொல்றேன்..” கைகள் இரண்டையும் ஒரு மாதிரி பிசைந்து கொண்டவன், தொண்டைக்குழிக்குள் இருக்கும் கேள்வி வெளியே வராமல் திணறினான்.

அதாவது.., இப்போ நமக்கெல்லாம் ரொம்ப தெரிஞ்ச பாட்டு.., கொஞ்ச நாள் கேக்காம விட்டிருப்போம். திடீர்ன்னு ஒரு நாள்.., அந்த பாட்டோட ஒரு வரி மட்டும் ஞாபகம் வரும்.., அந்த முதல் வரி தெரியாமல் திணறுவோமே.., அப்படி ஒரு நிலை.

அதைக் கவனித்தவர்.., “ராஜா, ரிலாக்ஸ்.., ஒண்ணும் அவசரமில்லை. நான் இங்கேதான் இருக்கேன்.., நீ நிதானமா யோசிச்சு சொல்லு..” அவன் தோளைத் தட்டினார்.

“நான் வேண்ணா வெளியே இருக்கவா..?” தனா வேகமாகக் கேட்க,

“அப்பா.., நீங்கவேற ஏன்..? சும்மா இருங்க.., அது போதும்..” ராஜா அலுத்துக்கொள்ள, கப்பென வாயை மூடிக் கொண்டார். சுஜாவோ கணவனைப் பார்த்து சிரித்துக் கொண்டார்.

‘உனக்கு சிரிப்பா இருக்குல்ல..’ தனா, மனைவியை செல்லமாக முறைக்க, அதற்கும் சிரித்தார். தனாவுக்கு ஆச்சரியமாக இருந்தது.., பெற்ற தாயிடம் கூட தன்னால் உரிமையாக கேட்க முடியாத, பேச முடியாத விஷயங்களை, ராஜா சுஜாவிடம் பேசுவதில் வியந்துகொண்டார்.

சுஜா அவனுக்கு தாயாக மட்டும் இல்லை.., ஒரு சிறந்த தோழியும் கூட என்பதை அப்பட்டமாக அவர் உணர்ந்த தருணம். ஏற்கனவே அது தெரியும்தான் என்றாலும்.., தனிமையில் அவர்கள் பேசிக்கொள்வதை விட, தன் முன்பாக பேசுவது.., மனைவியை எண்ணி பெருமை பட்டுக் கொண்டார்.

சில நிமிஷங்கள் மூச்சுவிட்டு தன்னை நிதானத்துக்கு கொண்டு வந்தவன், ஒரு முடிவுக்கு வந்தவனாக, நேற்று நிஹாசினி கேட்ட அதே கேள்வியை, தாயிடம் ஒப்பித்தான்.

“அதுக்கு நீ என்ன சொன்ன..?” சற்று பரபரப்பானார். ராஜா எதையும் சொதப்பி வைத்திருக்கக் கூடாது என அவர் மனம் அடித்துக் கொண்டது.

“எனக்கு.., பதில் சொல்லத் தெரியலம்மா.., அப்படியே கிளம்பி வந்துட்டேன்..” கைகளில் தலையைத் தாங்கிக் கொண்டான்.

“ஏன்..?” அவன் பதில் சற்று ஏமாற்றமாக இருந்தாலும், மொத்தமாக குழப்பி வைக்காததில் சற்று நிம்மதியே.

“ம்ச்.., என்ன ஏன்..? அதான் தெரியலன்னு சொல்லிட்டேனே..” சத்தியமாக கடுப்பானான்.

“சரி.., சரி.., இப்போ யாருக்கு யார்மேலே கோபம்..?” சுஜா கேட்க,

“நான்தான் அவமேலே கோவமா இருக்கேன்..” வேகமாக பதில் கொடுத்தான்.

“அது அவளுக்கும் தெரியும்தானே..”.

“ம்மா.., சத்தியமா முடியலம்மா.., பளிச்சுன்னு சொல்லுங்க. நீங்களும் அவளை மாதிரியே.., எனக்கு இப்போ மழை பிடிக்கும்.., நடந்ததுக்கு எதுக்கு கோபம்ன்னு கேட்டு டார்ச்சர் பண்ணாதீங்க..” அவன் சற்று இலகுவாகி இருப்பது அவன் பேச்சில் தெரிந்தது.

“அதெப்படிடா.., பத்து வேலையை ஒரே நேரத்தில் முடிக்க முடியுது.., ஒரே ஒரு சின்ன விஷயம் புரிய மாட்டேங்குது?”

அவன் தலையைக் கலைத்தவர், ‘‘ஆமா.., இல்லை..’’ ரெண்டு பதில்ல ஒண்ணை சொல்ல என்ன குழப்பம்.

‘‘ஆமான்னு சொன்னா.., அப்போ இத்தனைநாள் இருந்த கோபத்துக்கு என்ன அர்த்தம்? அது நடந்தால் உடனே எல்லாம் சரியாயிடுமா? என்ன கொஞ்சம் ரிலாக்ஸ்டா இருக்கும். நம்ம பொண்டாட்டிக்கு நம்ம மேலே காதல் இருக்குன்னு புரியும்.

‘‘அவமேலே இருக்க கோபத்தை தள்ளி வச்சுட்டு அவகூட இயல்பா பேச முடியும் அவ்வளவுதான். என்னைக்காவது ஒரு நாளைக்காவது.., அவ கோபத்துக்கெல்லாம் என்ன காரணம்னு கேக்காமல் மனசு அடங்காதுதானே..’’ படபடவென பொரிந்தான்.

‘‘அப்போ இல்லைன்னு சொல்லியிருக்க வேண்டியதுதானே..’’ அவன் பதிலில் உள்ளுக்குள் நிம்மதியாக உணர்ந்தவர், அவனிடம் கேட்டார்.

‘‘இல்லன்னு சொல்லிட்டு.., அவகூட எப்படி சேர முடியும்?’’ அவன் குரல் உள்ளே போய்விட்டது.

இதற்கு சுஜா பதில் சொல்லாமல் அமைதியாக, ‘‘என்னம்மா.., சைலன்ட் ஆகிட்டீங்க..?’’ தான் எதுவும் தப்பாக சொல்லிவிட்டோமோ என சிந்தித்தான். அவனுக்கு அப்படி எதுவும் தெரியவில்லை.., அவர் முகத்தையே பார்த்திருந்தான்.

சுஜாவுக்கு நிஹாசினியின் மனது புரிந்தது. ஒரு பெண்ணாக.., செக்ஸ் என்ற விஷயம், சமாதானம் செய்ய ஏற்பட்ட கருவியாக இருப்பதை எந்த பெண்ணாலும் தாங்கிக்கொள்ள முடியாது. ஆனால்.., ராஜா இல்லை என சொல்லியிருந்தால்.., வருத்தப்பட்டிருந்தாலும், நிச்சயம் அவனுக்கு மறுப்பு சொல்லியிருக்க மாட்டாள்.

ஒரு பெண்ணாக உணரும் விஷயத்தை, ஒரு ஆணுக்கு புரிய வைப்பது கடினம் என்றே அவருக்குத் தோன்றியது.

“ம்மா..” அவரை உலுக்க,

“நேற்று அவ உனக்கு தேவைப்படலை ராஜா..” அவன் அதிர்ந்து விழிக்க,

“அப்படி தேவைப்பட்டிருந்தால்.., நீ உண்மையைச் சொல்லியிருப்ப.., இப்போ இங்கே வந்து நின்னிருக்க மாட்ட. சில விஷயங்களை நீயேதான் உணரணும் ராஜா. அதை யாராலும் உனக்கு புரிய வைக்க முடியாது..” உரைத்தவர், அமைதியாக அங்கிருந்து எழுந்து சென்றார்.

அவர் செல்லவே.., “என்னப்பா.., அம்மா இப்படி சொல்லிட்டு போறாங்க..?” தாயின் முதுகையே வெறித்தான்.

“ராஜா.., ஒரு சின்ன விஷயமும் நம்மை நிலை தடுமாற வச்சுடும். ஆனா, பொண்ணுங்களுக்கு அந்த நேரம்தான் அதிக

கவனம் ஏற்படும். இந்த விஷயத்தால்தான், ஆம்பளைங்க நாம தடம் மாறாமலும், ஸ்டெடியாகவும் இருக்கோம்.., பொண்ணுங்க நமக்கு அரணா இருக்காங்க.

“இதெல்லாம் உனக்குப் புரிய இன்னும் கொஞ்ச நாள் ஆகலாம்.., அதுவரைக்கும் பொறுமையா இரு. ஆனா.., உன்னோட இந்த மாற்றமே எனக்கு சந்தோஷமாத்தான் இருக்கு.., போ..” அவனை அனுப்பி வைத்தார்.

சுஜாவோ, முதல் வேலையாக நிஹாசினிக்கு அழைத்தவர், சற்று நேரம் அவளிடம் உரையாடிவிட்டு அலைபேசியை அணைத்தார்.

நிஹாசினிக்கு ராஜாவின் விலகல் வருத்தத்தை அளித்திருந்தாலும், சில பொய்யான நம்பிக்கைகளை விட, கடினமான உண்மைகள் மேலானது என தன்னையே தேற்றிக் கொண்டாள்.

அதே நேரம்.., தன் இருப்பு ராஜாவை தடுமாற வைப்பதையும், அதே நேரம் அவன் அதை தாங்க முடியாமல் தடுமாறுவதையும் உணர்ந்தவளுக்கு, சில பிரிவுகள் நல்லது என்றே தோன்றியது.

காலை முதல் லதாவின் கேலிகளுக்கு சளைக்காமல் ஈடுகொடுக்கவும் வைத்தது. ராஜாவுக்கோ.., சுஜாவின் பேச்சே மனதுக்குள் ஓடியது. ‘அப்படியென்றால்.., நிஹாசினியின் பேச்சு,

செய்கை ஏற்படுத்திய தடுமாற்றம்தான் தன் செய்கைக்கான காரணமா? உண்மையாகவே அவள் எனக்கு வேண்டாமா?' கேட்டுகொண்டவனுக்கு, நிச்சயம் அவள் வேண்டும் என்றுதான் தோன்றியது.

தன் குழப்பத்தை ஒற்றி வைத்தவன், கடைக்கு விரைந்தான். கடையின் வேலைகளில் மூழ்கி இருக்க, அவன் அலைபேசிக்கு ஒரு வெளிநாட்டு எண்ணில் இருந்து அழைப்பு வந்தது.

அந்த எண்ணைப் பார்த்தவுடனே.., அது லண்டன் எண் என்பதை உணர்ந்து கொண்டான்.

''ஹல்லோ..'' .

''ஹாய் ராஜ்.., ஹவ் ஆர் யூ..? டு யூ பார்காட் மீ..?'' ஒரு கிள்ளைக்குரல் செவிகளைத் தீண்ட, அவன் முகம் ஒரு பூரிப்புக்குப் போனது.

''ஹாய் எலீனா.., இஸ் இட் யூ.., அன் பிலீவபிள்..'' தன் வேலையை அப்படியே நிறுத்தியவன் எழுந்து செல்ல, அவனை வியப்பாய் பார்த்திருந்தார் தேவாரம்.

கடை வேலையில்.., முக்கியமான கட்டத்தில் நிற்கையில், அவனது செய்கை ஆச்சரியத்தையே அளித்தது. பொதுவாக அக்கவுண்ஸ் பார்க்கையில், அலைபேசியை தொடவே

செய்யாதவன் இப்படி நடந்துகொண்டால், அவர் வியக்காமல் என்ன செய்வார்?

“சொல்லு எலீனா.., என்ன திடீர்ன்னு என் ஞாபகம்..?” நுனிநாக்கு ஆங்கிலத்தில் கேட்க, அவள் சொன்ன விஷயத்தைக் கேட்டு அவனுக்கு துள்ளிக் குதிக்க வேண்டும்போல் இருந்தது.

அவள் சொன்னதன் சாராம்சம் இதுதான்.., லண்டனில் பிரபலமான தொலைகாட்சி நிறுவனம் ஒன்று, குழந்தைளைக் கவர, நாற்பது எபிசோட் கொண்ட கார்ட்டூன் தொடரை தயாரிக்கவுள்ளது.., அதற்கான ஆனிமேஷன் டீமை அவர்கள் செலக்ட் செய்வதால்.., உடனடியாக அவனது ரெசியூமை அனுப்பி வைக்க சொல்லவே அழைத்திருந்தாள்.

அவனால் அதை நம்பவே முடியவில்லை. ஏற்கனவே அவன் லண்டனில் படிக்கும் போது செய்த ப்ரொஜெக்ட் அனைத்தையும் பார்த்தவர்கள், திருப்தி அடைந்திருந்தார்கள். இந்த இன்டர்வியூ கூட ஜஸ்ட் ஒரு பார்மல் மட்டுமே என உரைக்க.., தன் லட்சியத்தை எட்டப்போகும் முதல் படியாகவே அது அவனுக்கு இருந்தது.

உடனடியாக அதை அனுப்புவதாக உரைத்தவன்.., தன்னை நினைவில் வைத்திருந்து அழைத்த எலீனாவுக்கு ஆயிரம் நன்றிகள் உரைத்து அலைபேசியை வைத்தான்.

இந்த விஷயத்தை முதலில் நிஹாசினியிடம் உரைக்க வேண்டும் என எண்ணியவன், உடனடியாக அழைத்தான்.

பாட வேளையின் நடுவில் அவனது அழைப்பு வர, பேராசிரியரிடம் அனுமதி வேண்டிவிட்டு வெளியே வந்தவள்.., உடனடியாக அவன் அழைப்பை ஏற்றாள்.

“ராஜ்.., சொல்லுங்க..” அவள் குரலில் ஒரு பயத்தை உணர்ந்த பிறகே, நேரத்தைப் பார்த்தவன், தன் தலையிலேயே மானசீகமாக தட்டிக் கொண்டான்.

“ஹேய் கூல்.., ஒரு சந்தோஷமான விஷயம்.., அதை முதல்ல உன்கிட்டதான் சொல்லணும்னு..” அவன் விஷயத்தை உரைக்க, அவளுக்கும் அவ்வளவு சந்தோசம்.

தன் வாழ்வின் லட்சியமே சினிமா துறையில் ஏதாவது சாதிக்க வேண்டும் எனச் சொன்னதை எண்ணியவள், கண்களில் மெல்லியதாக நீர் கோர்த்துக் கொண்டாள். அதே நேரம்.., அவன் அதைச் சொன்ன நிமிடங்கள் கண்ணுக்குள் உலா போக, அந்த நாட்கள் மீண்டும் வாராதா என மனம் ஏங்கியது.

“கங்கிராட்ஸ் ராஜ்.., நிச்சயம் நீங்க சாதிப்பீங்க.., எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு..” அவள் உரைக்க, நெகிழ்ந்து போனான். அவளை வகுப்புக்கு போகச் சொன்னவன், தன் குடும்பத்தில் இருப்பவர்களுக்கும் அதை தெரிவித்தான்.

இன்னும் பதினைந்தே நாட்களில் கார்த்திகாவின் திருமணம். புடவை எடுப்பது, நகை வாங்குவது என தாரிணி, சுஜா ஒரு பக்கம் பிசியாக, சத்திரம், சாப்பாடு என வேலைகளை ஒப்படைப்பதில் ஆண்கள் ஈடுபட்டார்கள்.

கடையே அவர்கள் வீட்டுக்கு தேடி வந்தாலும், செலக்ட் செய்வதில் பெண்கள் ஒன்றுபோல்தானே.., இது நல்லா இல்லை.., வேற கொண்டு வாங்க.., அதைக் கொண்டுவந்தால்.., அன்னைக்கு கொண்டுவந்ததில் ஒரு பிங்க் நல்லா இருந்தது.., இருக்கும் பிங்க் எல்லாம் எடுத்து வந்தால்.., நான் பார்த்தது இதைவிட திக்கா இருக்கும், லைட் வெயிட்டா இருக்கும்.., அம்மம்மா.., ஆண்கள் விழி பிதுங்கிய தருணங்கள்.

தனாவோ ஒரு படி மேலே போய்.., “ராஜா.., என்னை கடைக்கே கூட்டி போய்டுடா.., அங்கே ஆயிரம் பேரை சம்மாளிக்கலாம் போல, இந்த மூணு பொம்பளைங்க படுத்துற பாடு தாங்கலை..” அலறியே விட்டார்.

அதற்கு அவர்களிடமிருந்து செமத்தியாக வாங்கியும் கொண்டார் என்பது வேறு விஷயம். அந்த பரபரப்பில் தன் மனைவியை மிகவும் மிஸ் செய்தான் ராஜா.

அவளை ஒரு இரண்டுநாள் வந்து போகுமாறு அழைக்க.., மாடல் எக்ஸாம் நடப்பதால் வர முடியவில்லை என

மறுத்துவிட்டாள். அவளது மறுப்பு அவனுக்கு கடினமாகத்தான் இருந்தது.

“மிஸ் யூ..” அலைபேசியில் குறுஞ்செய்தியை அடித்தவன், அதை அனுப்பாமல் டெலிட் செய்துவிட்டு வேலையைப் பார்க்கப் போனான்.

ரெசியூம் அனுப்பி.., ஆன்லைன் இன்டர்வியூ முடிக்க.., அடுத்த இரண்டு மாதத்தில் வேலைகள் துவங்கிவிடும் என உரைக்கவே.., தானும் அதற்குள் தயாராவதாக உரைத்தான்.

கார்த்திகாவின் திருமண நாளும் வர, ஒரு நாள் முன்னதாகவே வந்தாள் நிஹாசினி. வீட்டின் சூழலில் குழந்தை சற்று சிணுங்கிக் கொண்டே இருக்க, அவளை தாய் வீட்டுக்கு அனுப்பி வைத்தவன், முகூர்த்ததுக்கு முன்னர் அவளை வந்து அழைத்துக் கொள்வதாக உரைத்தான்.

எப்பொழுது வீட்டுக்கு வந்தாலும், அவனோடு சட்டென ஒட்டிக்கொள்ளும் வினோ, அன்றும் அவ்வாறே அவனை விடாமல் பேச, அவர்கள் ஒட்டுதல், அவளுக்கு சிறு பொறாமையை அளித்தது.

‘மாமா..’ என அவள் வார்த்தைக்கு வார்த்தை அழைத்துப் பேச, எப்படி இவ்வளவு இயல்பாக ஒட்டிக்கொண்டாள் என்றே தோன்றியது. அந்த நிமிடம்தான் அவளுக்கு ஒன்று தோன்றியது.., ‘அன்னைக்கு.., மாமா வந்திருக்காங்க..’ என

இவள் சொன்னது இவரையா? அப்பொழுதே இவளுக்கு இவரைத் தெரியுமா?

‘அன்று அம்மாவிடம் பேசியதாக மட்டும்தானே சொன்னார்..’ அவள் சிந்தை ஓட, வினோ கேட்டுகொண்டாள் என்பதால், அங்கே சற்று நேரம் அமர்ந்தவன், அவளோடு பேசிக் கொண்டிருக்க, அவன் அலைபேசிக்கு அழைப்பு வந்தது.

‘‘அம்மா.., இதோ இப்போ வரேன்.., மண்டபத்துக்கு கிளம்பறீங்களா? ஓ.., நானும் கிளம்பிட்டேன்..’’ உரைத்தவன் எழுந்து கொண்டு, அவர்களிடம் விடை பெற்றான்.

அவன் வெளியே சென்ற பிறகுதான், கார் கீயை வைத்துவிட்டு வந்துவிட்டோம் என்பது புரிய, வீட்டுக்குள் சென்றான்.

‘‘வினோ.., அன்னைக்கு எனக்கு காய்ச்சலா இருந்தப்போ மாமா வந்திருக்காங்கன்னு சொன்னியே.., அது ராஜையா..?’’ கேட்கையில் குரல் சற்று நடுங்கியது.

‘‘ஆமா.., வேற யாரை நான் மாமான்னு சொல்லியிருக்கேன்? உனக்கு முன்னாடியே உன் லவ் எனக்குத் தெரியும்.., மாமா ரொம்ப பாஸ்ட். என்னை ஸ்கூல்க்கே வந்து பாத்து பேசினாங்க.., கூடவே, வாரத்தில் ரெண்டுநாள் எனக்கு மேத்ஸ் சொல்லிக் கொடுப்பாங்க.., உங்க கல்யாணத்துக்குப் பிறகு

அதை நான் ரொம்ப மிஸ் பண்றேன்..'' அவள் சொல்லிக்கொண்டே போக, வேகமாக தன் அறைக்குள் புகுந்து கொண்டாள்.

'இவ என்ன புதுசா கேக்கற மாதிரி கேக்குறா..? அப்போ இவளுக்கு நான்தான் வந்தேன்னு தெரியாதா..?' ஒரு நொடி குழம்பிப் போனான்.

வினோவோ.., 'இவளுக்கு என்ன ஆச்சு..?' தனக்குள் எண்ணியவள், அலையை தூக்கிக்கொண்டு தன் அறைக்குச் செல்ல, வேகமாக நிஹாவின் அறைக்குள் நுழைந்தான் ராஜா.

''ஹாசினி..'' அவன் அழைக்க, ''ஏன் ராஜ்..? ஏன்..? அன்னைக்கு வந்துட்டு ஏன் வாசலோட போயிட்டீங்க..?'' கேட்டவள்.., அவனை அணைத்துக் கொண்டாள்.

அவன் பதில் சொல்ல முயல்கையில்.., மீண்டும் அலைபேசி ஒலிக்க, ''அம்மா.., நான் வந்துட்டே இருக்கேன்.., இன்னும் பத்தே நிமிஷம்..'' போகவேண்டிய கட்டாயம் அவனை கட்டுப்படுத்தியது.

''நீங்க கிளம்புங்க..'' வேகமாக விலகிக் கொண்டாள். அதன் பிறகு, பேசும் சந்தர்ப்பம் அவர்களுக்கு அமையவே இல்லை.

திருமணம் முடிந்த பிறகு, அன்று மாலைதான் வரவேற்பு என்பதால்.., மறுநாளும் அவன் ரொம்ப பிசியாகவே இருந்தான்.

வரவேற்பின் நடுவிலேயே நிஹாசினி விழுப்புரத்துக்கு கிளம்ப வேண்டி இருந்தது.

மறுநாள் செமஸ்டர் என்பதால்.., அவள் செல்வதை யாராலும் தடுக்க முடியவில்லை. கார்த்திகாதான் கொஞ்சம் வருத்தப்பட்டாள். ஆனாலும், அவளது ஸ்டடி ஹாலிடேசில் தன் திருமணத்துக்காக அவள் வந்ததே பெரிய விஷயமாக அவளுக்குத் தோன்றியது.

மீண்டும் அவன் விழுப்புரம் செல்ல நினைத்தாலும், விசா ப்ராசஸ்.., கடைகளில் அனைத்தையும் பொறுப்பாக ஒப்படைப்பது, இத்தனைநாள் தான் கவனித்ததை தனாவிடம் ஒப்படைப்பது என, அவனுக்கு நிமிரவே நேரம் இருக்கவில்லை.

அவளுக்கு செமஸ்டர் முடிந்து பத்து நாட்கள் விடுமுறைக்கு வர, அவனுக்கோ.., அந்த பத்து நாட்கள், டெல்கி, மும்பை என டீலர்களை சந்திக்கும் வேலையில் சுற்றிக் கொண்டிருந்தான். காலச் சக்கரம் அவர்களை காணக் கூட அனுமதிக்காமல் சுழன்றது.

அவன் மும்பையில் இருந்து சென்னைக்கு வர, அவளோ.., இரண்டாம் வருட படிப்புக்காக விழுப்புரத்தில் இருந்தாள். ராஜாவுக்கோ.., வாழ்க்கையே வெறுத்தாற்போல் இருந்தது. நிஹாசினியை முழுதாக காணக் கூட முடியாமல், வேலைகள்

அவனை சுழட்டி அடிக்க, தன் லட்சியத்தை நோக்கிய பயணத்துக்கு வேண்டி அனைத்தையும் தாங்கிக் கொண்டான்.

போனில் உரையாடினாலும்.., நேரில் கேட்க வேண்டிய விஷயத்தை அலைபேசியில் தெரிந்துகொள்வது அவனுக்கு சரியாகத் தோன்றவில்லை.

அவன் லண்டன் செல்வது உறுதியாக.., இன்னும் ஒரு வாரத்தில் வரச் சொல்லி சொல்லிவிட்டார்கள். அதற்கான வேலைகள், பேக்கிங் என அடுத்த ஓட்டம். அலைபேசியில் அவளிடம் விஷயத்தை உரைக்க, ஒரு நொடி அமைதியாக இருந்தவள், தன் வாழ்த்துக்களை உரைத்தாள்.

கடை வேலைகளை தனாவோடு சேர்ந்து பார்த்துக்கொள்ள உரைத்தவன், அவள் அனைத்தையும் பார்த்துக் கொள்வதாகச் சொல்லவே சற்று நிம்மதியானான்.

அவனுடன் இருந்து, அவனை வழியனுப்ப கொள்ளை ஆசை இருந்தாலும், அதைச் சாதாரணமாக செய்துவிட முடியும் என்று அவளுக்குத் தோன்றவில்லை. அவன் கிளம்பும் நேரத்தில், எங்கே போகாதே எனச் சொல்லிவிடுவோமோ என்ற பயம் அவளைப் பிடித்து ஆட்டியது.

அவனுக்கும் அதே தவிப்பு.., அவள் முகத்தைப் பார்த்தால்.., தன்னால் செல்ல முடியாமல் இங்கேயே இருந்துவிடுவோமோ என்ற பயம்.., தாரிணியும், சுஜாவும்,

நிஹாசினியை அழைக்கச் சொல்ல, அந்த பயத்தைச் சொல்லியே அவர்கள் வாயை அடைத்தான்.

சுஜா அதை நிஹாவிடம் உரைக்க.., அழுகையினூடே.., தனக்கும் அவனைப் போகாதே எனச் சொல்லிவிடுவோமோ என்ற பயம் இருப்பதாகச் சொல்லவே, இருவரின் எண்ணமும் ஒன்றாக இருப்பதை எண்ணி சந்தோஷப்படுவதா? இல்லை.., இவ்வளவு காதலை வைத்துக்கொண்டு பிரிந்து இருக்கிறார்களே என துக்கப்படுவதா என்றே தெரியவில்லை.

ஊருக்குப் போவதற்கு இரண்டு நாட்கள் முன்னர், அவளைப் பார்க்கப் வர, இருவராலும் ஒரு வார்த்தை கூட பேச முடியவில்லை. அலைக்கு இப்பொழுது பதினொன்று மாதங்கள் ஆகியிருக்க, தள்ளாடி நடை பயின்று கொண்டிருந்தாள்.

ஒரு சிறிய டவ்வலை எடுத்துக் கொண்டு, அவனிடம் கொடுப்பதும், அதை வாங்கி, தன் தாயிடம் கொடுப்பதுமாக, உற்சாக மனநிலையில் இருந்தவள் அவள் மட்டுமே.

கடை விஷயம், அவள் படிப்பு, உடல்நிலை.., என ஆயிரம் விஷயங்கள் பேச எண்ணியவனுக்கு, வார்த்தைகள் வர மறுக்க, அமைதியாகவே அமர்ந்திருந்தான். கூடவே, அங்கிருந்து செல்ல நினைத்தாலும் முடியாமல், விடை பெற முடியாமல் திணறித்தான் போனான். அலை அங்கிருந்து வெளியே வர.., அவளைத் தூக்கிக்கொண்டு வெளியேறினாள் லதா.

சில மணி நேரங்களாகவே அவர்களுக்குள் பேச்சுவார்த்தையே இருப்பதுபோல் தோன்றவில்லை. கூடவே, கணவன் வெளிநாடு செல்கையில் அவள் உணராத தவிப்பா.., அப்படித்தானே நிஹாவுக்கும் இருக்கும் என எண்ணியவள், அவர்களுக்கு தனிமை கொடுக்க வேண்டியே அலையை தூக்கிச் சென்றாள்.

மாலையிலேயே கிளம்பியிருக்க வேண்டியவன், அது முடியாமல், நேரத்தை கடத்திக் கொண்டிருந்தான். ஒரு கட்டத்துக்குமேல் ஒருவித இறுக்கம் அங்கே சூழ, “டைம் ஆச்சு..” இருக்கையில் இருந்து எழுந்து கொண்டான்.

அவள் வேண்டும் என செல்கள் அனைத்தும் திணறுகையில், அவளை அருகில் வைத்துக் கொண்டு விலகியிருப்பது பெரும் அவஸ்தையாக இருந்தது. அதைவிட, ஒற்றை உறவோடு மீண்டும் அவளை விட்டு பிரிந்து செல்வதா?’ அவன் மனம் கேள்வி கேட்க அங்கிருந்து சென்றுவிட முடிவெடுத்தான்.

அறையை விட்டு செல்ல முயன்றவன்.., செல்ல முடியாமல், தன் பின்னால் வந்தவளை, ஒருவித வேகத்தில் இறுக்கிக் கொண்டான். எங்கே முத்தமிட்டான்.., எவ்வளவு முத்தமிட்டான்.., கணக்குகள் அற்றுப்போக.., தன் கரங்களுக்குள் இருந்தவளை,

மொத்தமாக கொள்ளையிடத் துடித்தது அவன் தேகமும், இதழ்களும்.

கொஞ்சம் கூட மறுக்காமல் அவற்றை தாங்கியவள்.., அவன் இதழ் தீண்டலில் தொலைந்து போனாள். அவன் உணர்வுகள் பொங்க, ஆவேசமாய் அவளை இறுக்கியவன்.., தன் உணர்வை மொத்தமாய் அவளிடம் வெளிப்படுத்த, தவித்துப் போனாள்.

ஒரு மாதிரி அவஸ்த்தையான அணைப்பு.., கணவனுக்கே உரிய உரிமையான, தயங்காத தீண்டல்கள்.., அவன் கரங்களோ.., மொத்தமாய் அவளை உணர்ந்தது. தன்னிடம் போராடியவனை, என்ன செய்து தேற்றுவது எனப் புரியாமல் திகைத்தாள்.

“ராஜ்.., என்னம்மா..” அவன் சிகை கோதி.., கண்ணீர்க்கோடுகள் கன்னத்தில் இறங்க, அவனைத் தாங்கியவளுக்கு, நிச்சயம் ஒரு மனைவியாக தான் அவனுக்கு நியாயம் செய்யவில்லை என்றே தோன்றியது.

இதற்குமேல் சுத்தமாக அவளிடமிருந்து விலக முடியாது என அவன் தேகம் நெருப்பாய் தகிக்க, அவன் பாக்கெட்டில் இருந்த அலைபேசி கரடியாய் கத்தியது.

அடுத்த நொடி.., அவளை விட்டு விலகியவன்.., படிகளில் தாவி இறங்கி ஓடியே போனான். லதாவிடம் சொல்லிக்கொள்ள வேண்டும், லஷ்மியிடம் அவளை நன்றாக பார்த்துக்கொள்ள சொல்ல வேண்டும்.., எதுவும் அவன் நினைவில் இல்லை.

காரை அசுர வேகத்தில் செலுத்தினான். நிஹாசினியோ.., அதே இடத்தில் மடிந்து அமர்ந்தவள்.., அவன் விட்டுப்போன உணர்வுகளின் தாக்கம் தாளாமல் குமுறி அழுதாள்.

## பகுதி – 23.

சென்னையில்.., தன் அறையில், படுக்கையில், விட்டத்தை வெறித்தவாறு படுத்திருந்த ராஜாவுக்கு, தான் எப்படி எந்த விபத்தையும் ஏற்படுத்தாமல் வந்து சேர்ந்தோம் என்பதே ஆச்சரியமாக இருந்தது.

உடை கூட மாற்றாமல் அவன் படுத்திருக்க, அவன், நிஹாரசினியை அணைத்ததால், அவளிடம் இருக்கும் ஒரு பிரத்தியேக வாசனை தன் உடையின்மேல் ஒட்டியிருப்பதை அவன் நாசி அவனுக்கு உணர்த்தியது.

சட்டையைக் கைகளால் பற்றி.., மீண்டுமாக அந்த வாசனையை ஆழ்ந்து அனுபவித்தவனுக்கு, நிஹாரசினி வேண்டும் என்ற உணர்வை நிச்சயம் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

அவளை அணைத்துக் கொண்ட அந்த நொடி, அவளுக்குள் புதைந்து கொள்ளத் தூண்டிய உணர்வை அடக்க முடியாமல் திண்டாடித்தான் போயிருந்தான். அங்கேயே தங்கி விடுவோமா..? ஒரு நொடி நினைத்தவன், மறு நிமிடம் அதை மாற்றிக் கொண்டான்.

ஒருமுறை அவளைத் தொட்டுவிட்டு விலகிச் சென்றதைப்போல.., இந்த முறையும் நடந்துவிடக் கூடாது என ஒருவித கவனம் எட்டிப் பார்க்கவே செய்தது. அந்த நேரம்தான்.., கடையில் இருந்து அழைப்பு வந்திருக்க, அதைச் சாக்கிட்டு கிளம்பிவிட்டான்.

அந்த நிமிடம் தைரியமாக முடிவெடுத்து விட்டாலும், இன்னும் குறைந்தது இரண்டு மூன்று மாதங்களுக்கு அவளைக் கண்ணால் கூட காண முடியாது என்பதை நினைக்கையில்.., அவளோடு வாழ்ந்துவிட்டிருக்கலாம் என்றே தோன்றியது.

அப்படி நடந்திருந்தால்.., அந்த நினைவுகளே.., அவனை இன்னும் சில நாள் உயிர்ப்புடன் வைத்திருந்திருக்கும்.., ஒரு மனமோ, தாள முடியாமல் தவித்தது. இன்னும் இரண்டே நாள்.., அதை அவளோடும், குழந்தையோடும் செலவழித்திருக்கலாம்.., நினைவு ஒவ்வொன்றும் அவளையே சுற்றி வந்தது.

இப்பொழுது அவள்மேல் கோபம் சிறிதும் இருக்கவில்லை, மாறாக, எதையோ தவறாக புரிந்துகொண்டாள்.., அதனால் தன்னை வாட்டி இருக்கிறாள் என்பது வரைக்கும் அவனுக்கு தெளிவாக புரிய, தாங்கள் மனம் விட்டு பேசாததால் ஏற்பட்ட விளைவு என்று அவனுக்குப் புரிந்தது.

அதே நேரம்.., இருவரும் நடந்ததையே நினைத்து வாழ்க்கையை தொலைப்பது வருத்தமாக இருந்தது. அவளோடு வாழ்ந்துவிடச் சொல்லி அவனது மனம் உந்த, இந்த நேரத்தில் என்ன செய்ய எனத் தெரியாமல் திணறி திண்டாடிப் போனான்.

கட்டிலில் கவிழ்ந்து படுத்தவன், இமைகளை மூடினாலும், உறக்கம் என்னவோ வருவதாக இல்லை. இன்னும் பல நிமிடங்கள், நிமிர்ந்து படுப்பதும், கவிழ்ந்து படுப்பதும், இந்தப்பக்கமும், அந்தப்பக்கமும் உருண்டவன், இறுதியில் எழுந்து அமர்ந்தே விட்டான்.

எப்படியும் உறக்கம் வரப்போவதில்லை என்பது புரிய, எழுந்தவன், தான் அடுக்கி வைத்திருந்த பெட்டியை மீண்டும் அடுக்கினான். வேறு ஏதாவது வேண்டுமா.., என கப்போர்டுக்குள் தேட, அப்பொழுதுதான், அங்கே போட்டு வைத்திருந்த டிவோஸ் பேப்பர்ஸ் அவன் பார்வையில் விழுந்தது.

சட்டென மனதை பாரம் அழுத்த, 'அவ என்னதான் சொன்னாலும்.., இதில் கையெழுத்து போட அவள் மனம் எப்படி ஒப்பியது..?' நினைத்தவன், மீண்டுமாக கப்போடுக்குள் அதை வீசினான்.

முன்னர் கத்தையாகவே விழுந்த பேப்பர்.., இப்பொழுது சிதற, அதில் அவளது கையொப்பத்தை பார்த்தவன், திகைத்துப் போனான்.

'என்ன இது..?' வேகமாக பேப்பர்களை எடுத்தவன் அடுத்த அடுத்த பேப்பர்களை திருப்பிப் பார்க்க, அனைத்திலும், கையொப்பம் இடவேண்டிய இடத்தில் 'ஐ லவ் யூ ராஜ்' என எழுதி வைத்திருந்தாள்.

"உஃப்.." வேகமாக காற்றை வாய் குவித்து வெளியேற்றியவன், 'இதை எழுதிட்டுதான் அவ்வளவு தைரியமா இருந்தியா..?' கப்போர்டை அடித்து சாற்றியவன், கையால் கதவைக் குத்தினான்.

அது ப்ளைவுட் கதவாக இருந்திருந்தால், அவன் குத்துக்களுக்குப் பிளந்திருக்கும். ஆனால்.., அது தேக்குமரம் ஆகையால்.., அவனது அடிகளை வாங்கிக்கொண்டு, கம்பீரமாக நின்றது.

கூடவே.., அவளிடம் பேசி தெரிந்துகொள்ள வேண்டிய விஷயங்கள் வேறு நினைவிற்கு வர, 'அப்போ.., அன்னைக்கு நான்தான் அங்கே போயிருந்தேன் என்பது அவளுக்குத் தெரியாதா..? அதனால்தான் என்மேல் அவளுக்கு அவ்வளவு கோபமா?' எண்ணியவனுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை.

'என்மேல் நம்பிக்கை இல்லையா..?' என்ற கேள்வியே அப்பொழுது எழவில்லை. நடந்து முடிந்த சம்பவங்கள்.., அதன் தாக்கம்.., ஹை பீவர், குழப்பம்.., சோர்வு.., அந்த நேரம் என்னை எதிர்பார்த்து காத்திருந்தவளிடம், மொட்டையாக, 'மாமா' என வினோ சொல்லியிருந்தால்.., அவள் யாரை மாமா என்று அழைப்பாள் என்பது அவளுக்கு எப்படித் தெரியும்?

'கூடவே.., யாரையோ தன் தங்கை மாமா என அழைப்பதாக அவள் புரிந்துகொண்டதில் வியப்பேதும் இல்லையே. அவளுக்கு என்னை நன்றாகத் தெரியும் என்பது நிஹாவுக்கு தெரிந்திருக்க வாய்ப்பில்லையே..' எண்ணியவன், அன்றைய அவள் மனநிலையை அனுமானிக்க முயன்றான்.

நிச்சயம் அது பயங்கரமாகத்தான் இருந்திருக்கும் என்பது அவனுக்குப் புரிந்தது. அந்த நேரம், தான், தனது குற்ற உணர்வில் மூழ்கியிராமல் போயிருந்தால், அடுத்து நடந்த குழப்பங்கள் அனைத்தையும் தடுத்திருக்கலாம் என எண்ணியவனுக்கு, அது காலம் கடந்த நினைவு என்றே தோன்றியது.

சற்று நேரமாக அமிழ்ந்திருந்த உணர்வுகள் கிளர்ந்து எழ, வேகமாக தன் அலைபேசியை எடுத்தவன், "ஐ லவ் யூ டூ பியூட்டி.." வாட்ஸ்ஆப் மெஸ்சேஜ் அடித்தவன், அவளுக்கு அனுப்பினான்.

அங்கே உறக்கம் வராமல் புரண்டுகொண்டிருந்தவளது அலைபேசிக்கு மெஸ்சேஜ் வரவே.., 'இந்த நேரத்தில் யார்..?' நினைத்தவள், சிறு ஆர்வமும், படபடப்புமாக அலைபேசியை எடுத்துப் பார்த்தாள்.

அவ்வளவுதான்.., கைகளில் இருந்த அலைபேசி நழுவி விழ, வேகமாக அதை எடுத்தவள், மீண்டும் மீண்டும் வாசித்தாள்.

'ஒரு வேளை.., அந்த பேப்பரை பார்த்திருப்பாரோ..?' சிந்தை வேகமாக சுழன்றது. அவள் அப்படி நினைக்கக் காரணமே.., அவன் 'ஐ லவ் யூ டூ' என போட்டிருந்ததுதான்.

அவள் பார்த்துக் கொண்டிருக்கும்பொழுதே "மிஸ் யூ.." அடுத்த செய்தி வந்து விழ, அலைபேசியை கீழே படுக்கையில் வைத்தவள், நடுங்கும் கரத்தை கோர்த்துக் கொண்டாள்.

அவன் ஆன்லைனில் காத்துக் கொண்டிருப்பது புரிய, "மீ டூ.." இதயம் படபடக்க அனுப்பினாள்.

"மிஸ் யூ பேட்லி.." செய்தியை அனுப்பியவனுக்கு, கால் செய்து பேச முடியும் என்றே தோன்றவில்லை.

'இதற்கு என்ன அனுப்புவது..?' எண்ணியவள், இருளில் ஒளிரும் திரையை வெறித்தவாறு இருந்தாள். அவன் நிலை அப்பட்டமாக புரிந்தாலும், ஒரு பெண்ணாக.., எதையும் வெளிப்படையாக பேசவோ, மனதைத் திறக்கவோ முடியாத நிலையில் இருந்தாள்.

"தூங்கிட்டியா..?" அடுத்த கேள்வி.., ஏனோ அவனது ஏக்கமான தொனியில் ஒலிப்பது போன்ற பிரம்மை.

"நோ.." ஒற்றை வார்த்தையே அவனுக்கு பதிலாகக் கிடைத்தது.

"நீங்க தூங்கலையா..?" அவன் செய்தி அனுப்ப தாமதமாக, இவளே கேட்டாள்.

"தூங்கணும்.." 'அது முடியும்னு தோணலை..' மனதுக்குள் எண்ணியவன், அவளை இரவில் தொல்லை செய்வதை உணர்ந்து, தன்னை மீட்டுக்

கொண்டவன், "ஓகே.., உனக்கு நாளைக்கு காலேஜ் போகணுமே.., நீ போய் தூங்கு.." அவள் பதிலை எதிர்பாராமல் ஆஃப்லைன் போனான்.

அதைப் பார்த்தவள், அலைபேசியை கைகளில் பற்றியவாறு, படுத்துக் கொண்டாள். மாலையில் நடந்ததே மனதுக்குள் இம்சிக்க, அவன் கரங்களின் தீண்டலை, மூச்சுக்காற்றின் வெம்மையை, இப்பொழுதும் உணர்ந்தாள்.

காலையில்.., குழந்தையின் உலுக்கலில் கண் விழித்தவள், முதல் வேலையாக அலைபேசியை எடுத்துப் பார்த்தாள். அவள் எதிர்பார்த்தது பொய்க்கவில்லை.

"குட் மார்னிங்.., இன்னும் ஒரு விடியல் மட்டும் என் வசம்.." செய்தியில், அங்கிருந்து நகரக் கூட அவளால் முடியவில்லை.

ஆனாலும்.., குழந்தையை கவனிக்கவேண்டும் என்பது புரிய, அவளை தூக்கிக்கொண்டு கீழே சென்றாள். அன்று கல்லூரியில் ஒரு செமினார் வகுப்பை தான் எடுக்க வேண்டி இருக்க, கல்லூரிக்கு அவள் கட்டாயம் சென்றே ஆகவேண்டிய நிலை.

செமினாரின் இடையில்.., அலைபேசி அதிர, அதைப் பார்த்தவள், "நாளைக்கே நான் கிளம்பணும் ஹாசினி.." ஏக்கமான அந்த வார்த்தைகளில், ஒரு நொடி தடுமாறி மீண்டும் தொடர்ந்தாள்.

மதிய இடைவேளைக்குப் பிறகு, லதாவிடம் சொல்லிவிட்டு, காரில் குழந்தையோடு கிளம்பிவிட்டாள். அவள் சென்னையை அடையும் முன்னர், மேலும் பல தகவல்கள் வந்து விழ, காருக்குள் முகம் மாறாமல் காக்க மிகுந்த சிரமப்பட்டாள்.

மாலையில் வீட்டில் வந்து இறங்கிய ஹாசினியைப் பார்த்து வீடே சந்தோஷப்பட்டது.

"ஹப்பா.., நீ வந்துட்டியா..? ஒரே நாள்ல என்னவோ பத்துநாள் பட்டினி கிடந்தவன் மாதிரி ஆகிட்டான். நீ போய் அவனை சாப்பிட கூட்டி வா.., காலையில் சாப்ட்டவன்.., அத்தோட சரி. காபி கூட குடிக்க வரலை.." சுஜா குழந்தையை வாங்கிக் கொண்டார்.

படிகளில் ஏறிச்செல்ல அவகாசம் இல்லாமல்.., லிப்டில் நுழைந்தவள், நொடியில் தங்கள் அறைக்கு முன்னால் இருந்தாள். தங்கள் அறைக்குள் நுழைந்தவள், அலைபேசியில் செய்தியை டைப் பண்ணிக் கொண்டிருந்த ராஜாவைக் கண்டாள்.

வேகமாக அவன் கையில் இருந்த அலைபேசியை பிடுங்கியவள், "என்ன சொல்லணுமோ நேரிலேயே சொல்லுங்க.." அலைபேசியை கட்டிலில் வீசினாள்.

"ஹாசினி.." நம்ப முடியாமல் அழைத்தவன், படுக்கையில் இருந்து துள்ளி எழுந்தான். வார்த்தைகள் வெளிவர மறுக்க, நம்ப முடியாத திகைப்பில் அவளை வெறித்தான்.

ஹாசினியைப் பற்றி அவனுக்கு நன்கு தெரியும்.., முதல்நாள் அவள் தன்னைத் தொட வருவதை அவன் தடுத்த பிறகு, மறந்தும் கூட தன்னை நெருங்காதவள், இன்று, தன்னைத் தேடி வந்திருக்கிறாள் என்றால்.., அவள் மனம் அவனுக்குப் புரிந்தது.

"ஆமா.., நான்தான்.., இப்போ என்ன..? டெக்ஸ்ட் மட்டும்தான் பண்ணத் தெரியுமா? பேசத் தெரியாதா..? ஏண்டா என்னை இப்படி படுத்துற..?" அவன் அருகில் தொப்பென அமர்ந்தாள். அவள் தேகம் நடுங்கிக் கொண்டிருந்தது.

இங்கே வந்து, அவனைப் பார்ப்பதற்குள் அவள் தவித்த தவிப்பு அவளுக்குத்தானே தெரியும்..,

அவளை அணைத்தவன், தன்னோடு இறுக்கிக் கொண்டான். கண்டிப்பாக அதில் கணவனுக்கான தேடல் இருக்கவில்லை. ஒரு ஆறுதல் தேடும் அணைப்பு. அவளுக்கும் அது தேவையாக இருக்க, அவன் முதுகில் கை கோர்த்தவள், அமைதியாக அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

சற்று நேரம் அமைதியாக இருந்தவள், "வாங்க.., சாப்பிடப் போகலாம்.." அவனை கை கோர்த்து எழுப்பினாள்.

அங்கிருந்து எழ மறுத்தவன்.., "இல்ல.., நான் வரலை.., எனக்கு எதுவும் வேண்டாம்.." ஒரு மாதிரி பிடிவாதம் பிடித்தான்.

"இதென்ன பிடிவாதம்.., வாங்க.." அவள் கட்டாயப்படுத்த,

"ம்ச்.., அதான் வேண்டாம்னு சொன்னேனே.., என்னை சாப்பிட வைக்கவா இவ்வளவு தூரம் வந்த..? அப்படின்னா.., எனக்கு சாப்பிடத் தெரியும்.., நீ போ.." அவனது தகிக்கும் உணர்வுகள் அவள் வேண்டுமென்று போராட, அவனுக்கு வேறு எதுவும் தேவை இருக்கவில்லை.

அவன் தேவை என்னவென்று தெளிவாக புரிய, "ஏன் வந்தேனா..?" ஆத்திரமாக கேட்டவள், தான் தூக்கிப் போட்டிருந்த அலைபேசியை எடுத்து, அவன் அனுப்பிய குறுஞ்செய்திகளை அவன் முகத்துக்கு நேராகக் காட்டினாள்.

"இதையெல்லாம் பாத்துட்டு.., என்னால் எப்படி அங்கே நிம்மதியா இருக்க முடியும்..? அதான் வந்தேன்.." அவன் சட்டையை கொத்தாக பற்றிக் கொண்டாள்.

"ஹாசினி.., நான் இப்போ இருக்கும் மன நிலையில்.., வேண்டாம்.., ஒரு நாள் செய்த தவறையே இன்னும் சரி செய்ய முடியாமல் போராடிட்டு இருக்கேன். இதில்.." அவன் வாய் உரைத்தாலும், கரங்களோ.., அவள் இடையில் கை கோர்த்து தன் பக்கம் இழுக்க, முகத்தை அவள் மார்புக்கு மத்தியில் அழுத்தமாக புதைத்துக் கொண்டான்.

தன் கரத்தை அவன் சிகைக்குள் கோர்த்தவள் மென்மையாக கோதி.., "இப்போ என்னை என்னதான் செய்யச் சொல்றீங்க..?" அவனிடம் கேட்டாள்.

"எனக்குத் தெரியல.., உணர்ச்சிவசப்படும் நேரத்தில் ரொம்ப கவனமா இருக்கணும்னு புத்தி சொல்லுது.., ஆனா.." முகத்தை இன்னும் அழுத்தமாக அவள் மார்பில் புரட்டியவன்.., இதழ்களால் கோலமிட்டான்.

"இப்படியே நான் கிளம்பிப் போனால்.., உன் நினைவிலேயே.., இந்த உணர்விலேயே.., இதைத் தாங்க முடியாமல்.." படுக்கையில் அப்படியே விழுந்தவன், அவளை தன்மேல் போட்டுக் கொண்டான். விலகிக்கொள்ள மனமில்லாமல், அவன் நெஞ்சிலேயே படுத்துக் கொண்டாள்.



INFAA ALOCIOUS

அவன் கரங்களோ, அவள் இடையை அழுத்த, அவளை முழுதாக தனக்குள் புதைத்துக்கொள்ள முயன்றான்.

“உனக்கு அப்படியெல்லாம் இல்லையா..? எனக்கு மட்டும்தான் இப்படி இருக்கா..? கொஞ்ச நாளாவே.., உன்னை நினைத்தாலே.., நான் நானா இல்ல ஹாசினி.., இப்படியே போனால்.., எங்கே என்னையே கட்டுப்படுத்த முடியாதோன்னு பயமா இருக்கு..” அவள் கன்னம் தாங்கியவன், தன் முகம் காண வைத்தான்.

அவன் விழிகள் இரண்டும் அவளிடம் யாசித்தது.., அவன் யாசிப்பதை தாங்க முடியாமல்,

அவன் விழிகளை நேராகப் பார்த்து.., “நீங்க சொன்னீங்களே.., உணர்ச்சி வசப்படும் போது ரொம்ப கவனமா இருக்கணும்னு நினைக்கறீங்கன்னு. ஆனா.., எனக்கு.., நீங்க உணர்சிவசப்படுறப்போ.., அப்படியே.., மொத்தமா.., உங்களுக்குள்ளே கரைஞ்சு, காணாம போயிடணும்னு இருக்கு.., இதுக்கு நான் என்ன செய்யட்டும்..?

“ஒவ்வொரு முறையும் நீங்க என்னை நெருங்கி வந்து விலகிப் போகும்போது, நீங்க அதில் இருந்து நொடியில் வெளியேறினால்.., நான் அதில் இருந்து வெளியே வர முடியாமல் போராடுவதை உங்களுக்கு எப்படி புரிய வைக்க?

“காதலியா இருக்கும்போதே நீங்க கேட்டதுக்கு மறுக்காதவள், இப்போ மனைவியா இருக்கும்போது..” அதற்குமேல் அவனிடம் விளக்க முடியாமல், அவனை விட்டு விலகி எழ முயன்றாள்.

கொட்டிவிட்ட வார்த்தைகளின் கனத்தை அவன் சரியாக புரிந்து கொள்ளாமல் போனால், அதன் அர்த்தம் என்னவாகிப் போகும் என்பதை எண்ணி, ஒரு பெண்ணாக பெரும் கவலைக்கு ஆளானாள். ஒரு பெண்ணால் கணவனிடம் கூட தன் உணர்வுகளை வெளிப்படுத்த முடியாதே.

அவள் பேச்சில் திகைத்துப் போயிருந்தவன், அவளை விலகி எழ அனுமதிக்கவில்லை. அவளை படுக்கையில் புரட்டி, அவள்மேல் படர்ந்தவன், இமைக்காமல் அவளைப் பார்த்தான். அவன் பார்வையின்

வீச்சு தாளாமல்.., விழிகளை அவள் பிரித்துக்கொள்ள, "ஹாசினி.." உருகும் குரலில் அழைத்தான்.

"ம்.." முனகலோடு அவனை ஏறிட, "இப்போ.., என்னோட சேர்ந்து கரைஞ்சு போய்டறியா..?" அப்படி ஒரு தவறான நினைப்பே தனக்கு இல்லை என்பதுபோல், அவள் இதழில் மென்மையாக முத்தமிட்டான்.

"இப்போ.., எனக்குள் இருக்கும் வேகத்தை உன்னிடம் கொட்டினால்.." ஒரு மாதிரி ஆவேசமான முத்த வேட்கை அவன் நிகழ்த்த, "ம்.., ம்.." அவள் உருகினாள்.

இதழ்களில் புதைந்த அவன் முழு வேட்கையை வெளிப்படுத்த, அவன் வேகத்துக்கு ஈடுகொடுக்க அவளால் முடியவில்லை. மூச்சுக்காறுக்கு அவள் திணற, நிதானமாக தன் இதழைப் பிரித்தான். இமைகளை மூடி, நெஞ்சுக்கூடு விம்ம, வாய் திறந்து, வேகமாக காற்றை உள்ளிழுத்துக் கொண்டாள்.

அவன் தன்னை பார்த்துக் கொண்டிருக்கிறான் என்னும் உணர்வே இன்னும் அதிக அவஸ்த்தையாக இருக்க, இமை திறக்க மறுத்தாள்.

அவள் தேகம் முழுவதும் அலையலையாய் ஒருவித உணர்வு பரவ, அவன் கரமோ.., அவள் வயிற்றில் ஊர்ந்தது. சிறு அவஸ்தையாக அவள் நெளிந்தாள்.., "கொஞ்சம் தொப்பை போட்டுட்ட போல..?" கேட்டவன்.., கரத்தை மேலே நகர்த்த, அவசரமாக அவன் கரத்தை தடுத்தாள்.

அது முடியாமல், தோல்வியில் முடிய, "இப்போ எந்த கஷ்டமும் இல்லையே.." காதுக்குள் மென்மையாக கேட்க, அவன் எதைக் கேட்கிறான் எனப் புரிய, இதழ் கடித்துக் கொண்டாள்.

"ஏதாவது ஹெல்ப்.." அவளைச் சீண்டி சிவக்க வைக்க, பட்டென விழி திறந்தவள், அவன் கண்களில் வழிந்த விஷமத்தில், "ச்சீ.." வெட்கமாய் முனகினாள்.

அவள் வெட்கம் அவனைத் தீண்ட, மீசைமுடியால் அவள் கன்னம் தீண்டி அவளை சிலிர்க்க வைத்தவன். காதுமடலில் இதழ் ஒற்றி, கழுத்தினடியில் முகம் புதைத்தான். சில்லென்ற பனிச் சாரலாய் தேகம் சிலிர்க்க, அவன்

அங்கே முத்தமிட, அவள் கரங்களோ, அவன் வெற்று முதுகில் பிடிப்பின்றி அலைந்தது.

ஆழமாய் மூச்செடுத்து அவள் வாசம் உணர்ந்தவன், இன்னும் தன் முகத்தை நகர்த்த, "ம்ஹூம்.." பலகீனமாய் மறுத்தாள். அவள் இதழ்களை அழுத்தமாக பற்றிக் கொண்டான். கைகள் இரண்டும் தன் தடைகளை விலக்க, இதழ்களோ.., தனக்குப் பிரியமான இடங்களில் தொலைந்து போனது.

வெட்கம் கொண்டு, தயக்கமாய் அவனைத் தடுக்க.., "ப்ளீஸ் ஹாசினி.." அவன் கெஞ்சலில் தன் முடிவை அவசரமாய் மாற்றிக் கொண்டாள். அவளுக்கோ, ஒரு பெரும் சுழலுக்குள் சிக்கிக்கொண்ட நிலை. அவன் நிதானம் கொஞ்சம் கொஞ்சமாய் தொலைந்து போக, திணறிப் போனாள்.

அவன் தீண்டும் இடங்கள் தீயாய் தகிக்க, அவன் சிகைக்குள் கை கோர்த்து நெரித்தவள், தன் உணர்வை அடக்க போராடினாள்.

இத்தனைநாள் இருந்த வேட்கை மொத்தமாய் கட்டவிழ்க்க, முரட்டுத்தனமாய் அவளை அணுகினான். அவன், வேட்கை கண்டு பயந்தவள், "ராஜ்.., மெதுவா.." இதழ் கடித்து முனகினாள்.

"நோ.." அவள் கோரிக்கையை அவன் மறுக்க, அவனுக்கு ஈடுகொடுப்பதை தவிர அவளுக்கு வேறு வழியே இருக்கவில்லை.

"எனக்குத் தெரியுது.., நான் முரட்டுத்தனமாதான் நடந்துக்கறேன்னு.., ஆனாலும்.." அவளை முழுதாக கொள்ளை கொள்ளும்வரை அவன் ஓயவில்லை.

இத்தனை மாத துன்பத்துக்கு அந்த இணைப்பு அருமருந்தாகத்தான் இருந்தது. அவன் கோபம் தாண்டி, அவள் வேண்டும் என்ற அவன் தேடல்.., சமாதானமாக இல்லாமல்.., சரணாகதியாகத்தான் இருந்தது. அவன் சிகை கோதி.., முதுகை வருடி, அவன் உணர்வுகளை, வேகத்தை உள்வாங்கிக் கொண்டாள்.

அவள் நெற்றியில் இதழ் ஒற்றி விலகியவன், அவளை தன்மேல் சாய்த்துக் கொண்டான். கலைந்திருந்த அவள் கூந்தலை விலக்கியவன், "தேங்க்ஸ்.."

அவன் திருப்தியாக உரைக்க, தன் முகத்தை அவன் நெஞ்சில் அழுத்தமாக உரசிக் கொண்டாள்.

“ஹாசினி.., இன்னைக்கு நம்மளோட ஃபெஸ்ட் நைட்..” அவன் உரைக்க, அவள் கண்கள் கலங்கித்தான் போனது. திருமணம் முடிந்து கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் கழித்து.., அவள் சிந்தை உரைக்க, கண்களில் இருந்து சில துளி வழிந்து, அவன் நெஞ்சை சுட்டது.

அதை உணர்ந்து பதறியவன், “கஷ்டப்படுத்திட்டேனா..?” அவன் தவிப்பாய் கேட்க, மறுப்பாக தலை அசைத்தவள், அவன் முகம் தாங்கி, முகம் முழுக்க முத்தமிட்டவள், அவனோடு ஒட்டிக்கொண்டாள். மீண்டுமாய் அவன் தேடல் துவங்க, அவள் வெட்கமாய் அதற்கு இசைய, அவனுக்குத்தான் அவளை விட்டு விலகவே முடியவில்லை.

“இன்னும் மூணு மாசம்..” பிரிவின் நாட்களை எண்ணி அவன் முனக, தன் களைப்பை ஒற்றி வைத்தாள். நேரம் ஆறுமணியை நெருங்கவே, “ராஜ்.., போதுமே.., டைம் ஆச்சு.., கீழே எல்லாரும் தேடுவாங்க..” தன் களைப்பை பொருட்படுத்தாமல், தனக்காக பார்க்கும் இந்த ஹாசினி அவனுக்குப் புதியவள்.

வேகமாக குளித்து வெளியே வந்தவள், உடைமாற்றும் தடுப்புக்குச் செல்ல, அவள் பாதி உடை மாற்றியிருக்க, “நீ ஐ லவ் யூன்னா சைன் பண்ணுவ..?” திடுமென அவன் குரல் கேட்க, துள்ளி திரும்பியவள், கையில் இருந்த உடையை கீழே தவற விட்டு, பின்னர் வேகமாக எடுத்து தன்மேல் போட்டு மறைத்துக் கொண்டாள்.

திகைப்பும் வேட்கமுமாக அவன் முகம் நோக்க, அவனோ.., குறும்பு கொப்பளிக்கும் விழிகளோடு, தன் பார்வையை இன்ச் இன்ச்சாக அவள் மேனியில் நகர்த்தினான்.

தன் காதுமடல் சூடாக.., அதை நன்கு உணர்ந்தவள், அவனுக்கு முதுகு காட்டி கூட திரும்ப முடியாமல், அவஸ்தையாய் உணர்ந்தாள். அவளது பதிலை அவன் எதிர்பார்த்ததாகவே தெரியவில்லை. பார்வையில் சுவாரசியம் கூட, கைகளை குறுக்காக கட்டிக் கொண்டவன், லேசாக சாய்ந்து நின்றுகொண்டான்.

“நான் ட்ரெஸ் மாத்தணும்..” விழிகளை அறைக்குள் சுழற்றியவள், அவன் பதில் சொல்லாமல் போகவே.., “கீழே எல்லாரும் வெயிட் பண்ணிட்டு இருப்பாங்க..” அவன் பார்வை தன்மேல் நழுவுவதை உணர்ந்தவளாக முனகினாள்.

“நான் இங்கே தானே நிக்கறேன். உன் கிட்டே வந்தேனா.., இல்ல..” மேலே எதையோ சொல்லிக்கொண்டே போக, “ராஜ்..” முகம் குங்குமமாய் சிவந்துபோக, சிணுங்கலாய் அழைத்து அவனை நிறுத்தினாள்.

“நான் இங்கே இருந்து ஒரு இன்ச் கூட நகர மாட்டேன். இப்போ என்ன செய்யப் போற..? இப்படியே நிக்கப்போறியா..? அப்போ சரி..” அழுத்தமாக நின்றுகொண்டான்.

மூச்சுக்காற்றில் வெம்மை ஏற, உடை மாற்றவும் முடியாமல், அவன் சொன்னதைச் செய்யவும் முடியாமல் திணறிப் போனாள். இறுதியில், “ராஜ் ப்ளீஸ்..” இமைகள் சுருக்கி, முகம் சிவந்து, கெஞ்சலாக அழைத்தவள், கண்களாலும் கெஞ்சினாள்.

“பியூட்டி..” உச்சக் குழைவில் அவன் அழைக்க, அவள் நெஞ்சுக்கூடு வேகமாய் விம்மித் தணிந்தது. ‘என் அழைப்பு இந்த அளவுக்கா அவளை உருக வைக்கிறது..’ எண்ணியவன், “இந்த ப்ளீஸ் எப்பொழுதும் ஹெல்ப் பண்ணாது ஓகே..” அங்கிருந்து விலகிச் சென்றான்.

அவன் சென்ற பிறகே நிம்மதியாக மூச்சு விட்டவள், வேகமாக உடை மாற்றி வந்தாள். இரவு உறங்கச் செல்லும் வரைக்கும், மொத்த குடும்பமும் குழுமி உரையாட, அவன் பார்வையோ.., மற்றவர் அறியாமல், நிஹாரசினியை நொடிக்கொருமுறை தழுவி மீண்டது.

“நிஹா.., மேலே.., என்னோட ரூம்ல ஒரு பார்சல் இருக்கும் எடுத்துட்டு வா..” தாரிணி உரைக்க, அவர் அறைக்குச் சென்று, அந்த பார்சலை எடுத்துக் கொண்டு திரும்ப, வாசலை அடைத்துக்கொண்டு நின்றிருந்தான் ராஜா.

அவனைத் தாண்டிச் செல்ல முயல, அவள் நகரும் பக்கம் நகர்ந்து, அவனுக்கு வழி விட மறுத்தான். “ராஜ்.., என்ன இது..? யாராவது பார்த்தால் என்ன நினைப்பாங்க..” பார்வையை அவன் முதுகுக்குப்

பின்னால், வெளியே செலுத்தியவாறு கேட்டாலும், அலுவலகத்தில் முன்னர் அவள் ரசித்த அதே ராஜாவாகவே அவன் தெரிந்தான்.

“மத்தவங்க நினைப்புக்கு என்னைக்காவது நான் கவலைப் பட்டிருக்கேனா என்ன?” ஒற்றை புருவம் உயர்த்தி வினவ, இந்த ராஜா அவளது பழைய ராஜாவை ரசித்தாள்.

“இப்போ நமக்கு கல்யாணம் ஆகிடுச்சு.., அது ஞாபகம் இருக்கா இல்லையா? என்னவோ காலேஜ் பையன் மாதிரி சைட் அடிக்க டைம் பாத்துட்டே இருக்கீங்க..” அவன் நெஞ்சில் கை வைத்து பின்னால் தள்ளியவள், அவனைத் தாண்டி நடந்தாள்.

“அப்படியா..? இது எனக்குத் தெரியாமல் போச்சே..” தன்னை தாண்டிப் போனவளது கை பிடித்து இழுத்தவன், அவள் கன்னத்தில் இதழ் பதித்துவிட்டு விலகி நடந்தான். செல்லும் முன்னர்.., “இப்படி விளையாடுறது கூட நல்லாத்தான் இருக்கு..” இமை சிமிட்டி உரைக்க, அவள் இதழ்களில் ஒரு அழகான புன்னகை.

அவள் கொண்டுவந்த பார்சலை, தாரிணி, ராஜாவிடம் கொடுக்க, அதைப் பிரித்தவன், அதில் இருந்த ஒரு ‘கோட்’டைப் பார்த்து,, “மன்னி.., என்ன இது..?” அவளிடம் கேட்டான்.

“ராஜா.., உன்கிட்டே நிறைய கோட் இருக்கும்னு எனக்குத் தெரியும். ஆனா.., இந்த கலர் உனக்கு எடுப்பா இருக்கும்னு தோணிச்சு அதான் வாங்கினேன். பிடிக்கலையா..?” ராஜாவின் உடைகளை பொதுவாக சுஜா தெரிவு செய்வதே வழக்கம்.

முதல் முறையாக தாரிணி வாங்கிக் கொடுக்க, சற்று திகைப்பாகத்தான் இருந்தது. தன்னை சம்மாளித்தவன், “ரொம்ப நல்லா இருக்கு. என்கிட்டே இல்லாத கலர்.., இந்த ஷெட் ரொம்ப நல்லா இருக்கு..” அவன் சொன்னது போல் அது அழகாகத்தான் இருந்தது.

இரவு நேரம் செல்லச் செல்ல.., ஒருவித இலகுத்தன்மை குறைய, அவன் முகம் ஒரு மாறுதலுக்குச் சென்றது. அதைப் பார்த்தவளுக்கும், மனதைப் பிசைந்தது.

மறுநாள் மதியம் இரண்டுமணிக்கு விமானத்தை பிடிக்கவேண்டும் என்பதால், அதற்கு மூன்றுமணி நேரத்துக்கு முன்பாகவே அவன் அங்கே இருக்க வேண்டி இருந்தது.

குழந்தையை சுஜா தன்னோடு வைத்துக்கொள்வதாக உரைக்க, தங்கள் அறைக்குத் திரும்பினார்கள். அந்த இரவும் சரி.., மறுநாள் அவன் விமான நிலையத்துக்கு கிளம்பும் வரைக்கும் அவளை விட்டு விலக அனுமதிக்கவே இல்லை.

அதைப் பார்த்த பெரியவர்களின் மனம் நிறைந்தது எனச் சொன்னால் மிகையில்லை. விமானம் ஏற செல்லும் முன்னர், "என் கோபம் எல்லாம் இன்னும் குறையலை.., பட்.., நீயில்லாம எனக்கு வாழ்க்கையே இல்லன்னு மட்டும் தெரியுது ஹாசினி.." அவள் கரம் கோர்த்து உரைக்க, அவன்மேல் காதல் பெருகியது.

தன் கோபத்துக்கான எந்த காரணத்தையும் ஆராயாமல், கேட்காமல், தன்னோடு வாழ்க்கையை துவங்கிய அவனது காதலுக்கு முன்னால், தன் செய்கைகள் அனைத்தும் சிறுபிள்ளைத்தனமாகவே தோன்றியது. அதைவிட, அவனது அன்பின் ஆழத்தில் மூழ்கித் திளைத்தாள்.

"ஐ லவ் யூ ராஜ்.., இதற்குமேல் என்ன சொல்லன்னு தெரியலை. யூ ஆர் மை சோல்.., லைப்.." அவனை அணைத்துக் கொள்ள, அந்த நேரம் அவர்களது மனக் கசப்புக்கள் அனைத்தும் அகன்றுதான் போனது.

ராஜாவை ஏர்போர்ட் அழைத்துச் செல்ல விநாயகம் வந்திருக்க, கார் ஏர்போர்ட் செல்லும் வழியெங்கும் நண்பனை நொடிக்கொருமுறை திரும்பிப் பார்த்தவாறே வந்தான்.

அவன் பார்வையை உணர்ந்தவன், "என்னடா.., உன் முழியே சரியில்லை.., மறுபடியும் ஏதாவது வம்பு பண்ணிட்டியா..?" சற்று கோபமாகவே இரைந்தான். அவனுக்கு தன் நண்பனைப் பற்றி தெரியாதா என்ன?

"அப்படியெல்லாம் எதுவும் இல்லடா.., அன்னைக்கு ஹாஸ்பிட்டல்ல.., தங்கச்சி.., உன்னைப் பாக்க வந்துட்டு ரொம்ப அழுதுட்டு இருந்தா.., அதான்.." மென்று முழுங்கினான்.

நிச்சயம் ராஜாவின் முகத்தைப் பார்த்து, அன்று நிஹாசினி பேசியவற்றை பதிவு செய்தேன்.., எனச் சொல்லும் தைரியம் சுத்தமாக வரவில்லை.

"ம்ச்.., அதான் எனக்கு அன்னைக்கே தெரியுமே.., விடு.., அப்போ ஏதோ கோபம், மிஸ்அண்டர்ஸ்டாண்டிங்.., இப்போ எல்லாம் சரியாயிடுச்சு.., அவ இல்லாமல் என்னாலோ.., நான் இல்லாமல் அவளாலோ இருக்க முடியாதுன்னு எங்களுக்கு நல்லாவே தெரிஞ்சுடுச்சு.." முந்தைய இரவின் நினைவில் அவன் முகம் அவ்வளவு மென்மையை ஏற்று இருந்தது.

அதைப் பார்த்த விநாயகம்.., "ராஜா.., எனக்கு.., நான் என்ன சொல்ல வரேன்னா..?" அவன் திணற,

"அதான் எல்லாம் சரியாயிடுச்சுன்னு சொல்றேனே.., இன்னும் என்ன உனக்கு? அப்படியெல்லாம் உன் தங்கையை விட்டுட மாட்டேன் போதுமா? விட்டால் 'மலர்ந்தும் மலராத'ன்னு பாட்டு பாடுவ போல, நீ ஆபீஸ் விஷயத்தை மட்டும் கேர்புல்லா பாரு.. மத்ததெல்லாம் நான் பாத்துக்கறேன்.

"நான் இங்கே இல்லன்னு ஏதாவது வாலாட்டுன.., ஒட்ட நறுக்கிடுவேன் பாத்துக்கோ.." ராஜா உரைக்க, அதற்குமேல் அந்த வீடியோவைப் பற்றி பேசும் தைரியம் சுத்தமாக அற்றுப் போனது.

ஒரு வேளை ராஜா அந்த வீடியோவை பார்த்திருந்தால் இன்னும் தெளிந்திருப்பானோ? அவள் மனதை புரிந்திருப்பானோ என்னவோ?

INFAA ALOCIOUS

# அத்தியாயம் 24

**ரா**ஜா லண்டன் சென்று ஒரு வாரம் முழுதாக ஓடியே போய்விட்டது. அங்கே சென்று சேர்ந்துவிட்டேன் என போன் செய்த பிறகு, அவனிடமிருந்து வேறு எந்த தகவலும் இருக்கவில்லை.

வீட்டில் பெரியவர்கள் துவங்கி, குழந்தை அலை வரைக்கும் அவனை தேடினார்கள் என்றாலும், ஹாசினி ஒரு படிக்கு மேலேயே தேடினாள். ஒரு நாள் முழுவதுமாக கூட அவனோடு வாழ முடியாத வாழ்க்கை.., அரை நாளுக்குள் தன்னோடு முழுவதுவாக வாழ்ந்துவிடத் துடித்த அவனது தவிப்பு, நெஞ்சை விட்டு நீங்க மறுத்தது.

தன்னை கைகளுக்குள் அடைகாக்க முயன்ற அவனது செய்கை.., ஆயிரம் முத்தங்களில் தன்னை அர்ச்சித்த விதம், ஒற்றை முத்தத்தில் துவள வைத்த அவன் செய்கை.., கண்களுக்குள் காதலை வழியவிட்ட அவனது தவிப்பு, ஒற்றை இரவில், இமை மூட மறுத்து அவன் நடந்துகொண்ட விதம்.., தன்னை விட்டு பிரிய முடியாத அவனது வருத்தம், லட்சியத்தை விட முடியாத அவனது மருகல்.., கண்களுக்குள் நிழலாடியது.

அவனை விட்டு விழுப்புரத்துக்கு வந்தபொழுது கூட, நினைத்தால் அவனைப் பார்க்க முடியும் என்ற எண்ணத்தில் சற்று தைரியமாக இருக்க முடிந்தது. ஆனால் இப்பொழுது.., நினைத்த நேரத்தில் அவனைப் பார்க்க முடியாது என்ற நினைவே கொடுமையாக இருந்தது.

இவை அனைத்தையும் விட, ஒரு நாளில் தன்னை புயலென ஆக்கிரமித்தவன், விலகிச் சென்ற பிறகு, வார்த்தையாகக் கூட தேடாததை நினைக்கையில், தவிப்பாக இருந்தது.

கல்லூரிப் படிப்பு, கடைகளின் பொறுப்பு, இடையில் அவனது நினைவு என சற்று துவண்டு போனாள். அவனது குரலையாவது கேட்டுவிட உள்ளம் தவித்தது. ஆனால்.., அவன் ப்ரீயாக இருந்திருந்தால் நிச்சயம் அழைக்காமல் இருந்திருக்க மாட்டான் என்கையில், இவளாக எப்படி அவனை அழைக்க?

இன்னும் இரண்டு வாரங்களில் குழந்தையின் முதல் பிறந்தநாள்.., இந்த இரண்டு வருடங்களில், அவனது பிறந்தநாள், அவளது பிறந்தநாள், அவர்களது முதல் திருமணநாள்.., என எதையுமே அவர்கள் கொண்டாடியது கிடையாது. அந்த நாட்களில் ஒரு சிறு வாழ்த்தை வழங்கவோ, பெறவோ கூட முயன்றது இல்லை.

அப்படி இருக்கையில்.., குழந்தையின் பிறந்தநாளை மிகவும் ஆவலாக அவள் எதிர்பார்த்தாள். அவனோடு உடலாலும், மனதாலும் வாழத் துவங்குவதற்கு முன்பே.., குழந்தையின் பிறந்த நாளுக்கு அவனோடு இருக்க வேண்டும் என முடிவெடுத்திருந்தாள்.

அவளே எதிர்பாராத விதத்தில் அவனோடு வாழ்ந்துவிட்ட பிறகான இந்த பிரிவு.., அவளை அதிகமாக துவளச் செய்தது. அரை நாளில் அவன் காட்டிய அன்பு, நெருக்கம் அனைத்தும், தினமும் வேண்டும் என அவள் காதல் கொண்ட மனது அடம் பிடித்தது.

மனதின் குழப்பங்களை படிப்பிலோ, வேலையிலோ கலந்துவிடாமல் சாமர்த்தியமாகவே சம்மாளித்தாள். அதற்கு லதா பேருதவியாக இருந்தாள் எனச் சொன்னால் மிகையில்லை.

ராஜாவுக்கோ.., அங்கே போய்ச்சேர்ந்த பிறகு, எதைபற்றியும் எண்ண நேரம் இருக்கவில்லை. அங்கே பிறந்து வளர்ந்தவர்களையே வேலை விஷயத்தில் காம்ப்ரமைஸ் செய்ய அனுமதிக்காதவர்கள், அந்நிய தேசத்தில் இருந்து வந்த அவனை அனுமதிப்பார்களா என்ன?

இரண்டு மாதங்கள் என அவர்கள் சொன்னபொழுது அவன் நம்பவே இல்லை. ஆனால்.., வேலையில் அவனை மூழ்கடித்த விதத்தில், இரண்டு மாதங்கள் என்பதை நாற்பது நாளுக்குள்

முடிக்க வேண்டும் என அவர்கள் காட்டிய வேகத்தில் அவன் சற்று திணறித்தான் போனான்.

இரவு உறங்கும் நேரம் கூட அவனுக்கானதாக இருக்கவில்லை. அவன் துறையில் அவனே பெர்பெக்ட் என்றால்.., அங்கோ.., அவனை விட பெர்பெக்ஷன் பார்த்தார்கள். அவர்களுக்கு ஈடுகொடுக்க, தன் உடல் பொருள் ஆவி என அனைத்தையும் அவன் கொடுக்க வேண்டி இருந்தது.

நாற்பது எபிசோட் என்பதை.., இருபது எபிசோட் முடித்த பிறகுதான் டெலிகாஸ்ட் செய்வதாக இருக்க, அதற்கான வேலைகள் ஜரூராக நடந்தேறியது.

ஒருவாரம் என்பது இரண்டு வாரங்களைக் கடந்து, மூன்று வாரங்களை எட்டிய பிறகும் அவன் விடுபட முடியாமல் மூழ்கிப் போயிருந்தான். மூன்று வாரங்களின் முடிவில், விடிந்தால் அவனது குழந்தைக்கு முதல் பிறந்தநாள் என்பதையே அவன் மறந்து விட்டிருந்தான்.

அவனுக்கு தொடர்புகொள்ள அனைவரும் முயல, அவனோ.., கடந்த இரண்டு நாட்களாக தன் அலைபேசியை அணைத்துப் போட்டவன், உயிர்ப்பிக்கவே இல்லை. நிஹாசினியோ அவனுக்கு அழைக்க முயலவே இல்லை. அதற்கு மிகப்பெரிய காரணம்.., தான் அழைத்து, அதை அவன்

ஏற்கவில்லை என்றால், அதை தன்னால் தாங்கமுடியும் என்றே அவளுக்குத் தோன்றவில்லை.

அலையின் பிறந்தநாளை வெகு விமரிசையாகச் செய்ய வீட்டார் விரும்பினாலும், ராஜா இல்லாத கொண்டாட்டத்தை யாரும் விரும்பவில்லை. ஆனாலும்.., குழந்தையின் முதல் பிறந்தநாளை அப்படியே விட மனமில்லாமல், வீட்டில் உள்ளவர்கள் மட்டுமாக கொண்டாட முடிவு செய்தனர்.

நிஹாசினி, குழந்தையை சுஜாவின் கையில் கொடுத்து கேக் கட் பண்ண வைத்தவள், முதல் பீஸ் கேக்கை சுஜாவுக்கே கொடுக்க வைத்தாள். ராஜா இல்லாத அந்த கொண்டாட்டம் வேம்பாக கசந்தது. அதைவிட, ஒரு தகவலும் கொடுக்காத அவன் செய்கை.., அவன் வேலையில் மூழ்கிவிடுவேன் என சொல்லிச் சென்றான்தான்.., அதற்காக.., இப்படி இருக்கும் என அவள் கனவு கண்டாளா என்ன?

‘அங்கே போய்விட்டால் எனக்கு எதற்குமே நேரம் இருக்காது. எப்போ போன் செய்வேன்னு தெரியாது.., பட்.., உன் நினைவில் இருப்பேன் என்பதை நீ மறக்கக் கூடாது. இந்த உலகத்தில், எனக்கு உன்னைவிட எதுவும் பெரிதில்லை.., அதை நீ புரிஞ்சுக்கணும்..’ போகும் முன்னர் அவன் உரைத்த வார்த்தைகளில் அர்த்தம் அவளுக்கு இப்பொழுதுதான் புரிந்தது.

மற்றவர்கள் முன்னால் தன்னை தைரியமானவளாக காட்டிக் கொண்டாலும், மனதுக்குள் அவள் மருகுவது அவர்களுக்குத் தெரியாதா என்ன? துளசிக்கு கூட மகள் கடை வேலையில் பங்குகொள்வது மிகப்பெரும் பெருமைதான். அதையும் தாண்டி.., மகள் கணவனோடு வாழ்கிறாள் என்பதுதானே அவருக்கு சந்தோஷத்தைக் கொடுக்கும்.

கேக் கட் செய்து முடித்து, இரவு உணவை உண்ட பிறகு, நிஹாசினி அறையில் தனித்திருக்க.., “அம்மாடி.., நிஹா.., அம்மா வீட்டில் ஒரு ரெண்டு நாள் இருந்துட்டு போறியா..?” மகள் தனியாக மனதுக்குள் போராடுவதை அவரும் எவ்வளவு நேரம்தான் பார்த்துகொண்டு இருப்பார்? எனவே ஆறுதலாக கேட்டார்.

மறுப்பாக தலை அசைத்தவள், தன் பேகை எடுத்து வைக்கத் துவங்கினாள். “மாப்பிள்ளை போன் பண்ணலன்னு வருத்தப்படுறியா..?” தனக்கு முதுகுகாட்டி நின்றவளின் தோளைத் தொட்டு தன் பக்கம் திருப்பினார்.

“இல்லம்மா.., அவங்க ப்ரீயா இருந்திருந்தால் கண்டிப்பா கூப்ட்டு இருப்பாங்க. விடுங்க.., நீங்க வீணா மனசை போட்டு குழப்பிக்காதீங்க...” தன் மனக் காயத்தை மறைத்து தாயிடம்

உரைக்க, துளசிக்கு அவளது புரிதலை நினைத்து மகிழத்தான் முடியவில்லை.

நினைத்த நேரத்தில் பார்த்து பேசி.., கூடிக் கழித்து வாழாத அவர்கள் வாழ்வு என்ன வாழ்வு என்ற சிந்தை எழுந்து அவரை அலைக்கழித்தது.

மீண்டும் அவர்களது நாட்கள் அதே விதத்தில் கடக்க, முதல்நாள் ஷோ ஒளிபரப்பப்பட்டு, அது வெற்றியடைந்த பிறகே சற்று மூச்சு விட்டான் ராஜா.

அந்த சந்தோஷமான விஷயத்தை முதல் வேலையாக நிஹாசினியிடம் தெரிவிக்க வேண்டி உடனே அழைத்தான். அலைபேசியில் ஒளிர்ந்த அவன் வெளிநாட்டு எண்ணைப் பார்த்த உடனேயே, அழைப்பது யாரென புரிய, அவளது சட்டென இதயத்துடிப்பு வேகமெடுத்தது.

“ராஜ்..” கண்கள் சட்டென கலங்க, அவன் பெயரை உச்சரிப்பதற்குள் வெறும் காற்று மட்டுமே வெளிவந்தது.

“ஹாசினி.., ப்ரோகிராம் சக்சஸ்.., ஹப்பா.., எனக்கு இப்போ எப்படி இருக்கு தெரியுமா..? அந்த ஃபீலை வார்த்தையால் சொல்லவே முடியலை. முதல் ஷோவே சும்மா அள்ளிடுச்சு..” அவனது உற்சாகக் குரல் அவள் செவிகளைத் தீண்ட, அவளுக்கோ என்ன சொல்வது என்றே புரியாத நிலை.

‘‘கண்டிப்பா நீங்க நல்லா பண்ணியிருப்பீங்கன்னு எனக்குத் தெரியும்..’’ தொண்டையில் அடைத்ததை விழுங்கிக்கொண்டு அவள் உரைக்க, அவள் குரலில் இருந்த பேதத்தை அவன் உணர்ந்துகொண்டான்.

‘‘ஹாசினி.., சாரிம்மா.., நீ என் காலுக்காக வெயிட் பண்ணிட்டு இருந்திருப்பன்னு எனக்குத் தெரியும்.., ஆனால்.., இங்கே இருந்த டென்ஷன்..’’ அவன் சமாதானப்படுத்த, அவ்வளவு நேரமாக சம்மாளித்துக் கொண்டிருந்தவள் சட்டென உடைந்து போனாள்.

‘‘என..க்குப்.. புரி..யுது..’’ அழுகையில் துடிக்கும் இதழ்களை அவள் பற்களால் கடித்துக்கொள்ள.., அங்கே அவன் தவித்துப் போனான்.

‘‘ஹாசினி.., இங்கே பார்.., ம்ச்.., அழாதம்மா.., அதான்.., நீ வருத்தப்படக்கூடாதுன்னுதான் ஏற்கனவே சொல்லி இருந்தேனே.., நீ இப்படி அழுதா நான் எப்படி இங்கே நிம்மதியா இருக்கறதாம்..? ஹாசினி..’’ அந்த நொடி, தான் அவள் அருகில் இல்லையே என துடித்துப் போனான்.

‘‘நீங்க சொன்னீங்கதான்.., இங்கே..’’ குழந்தையின் பிறந்தநாளை எண்ணி கலங்கியவள்,

“வாட்ஸ்ஆப் பாத்தீங்களா?” அதை நேரடியாக உரைக்க முடியாமல் கேட்டாள்.

“இல்லம்மா.., இப்போதான் எனக்கு சேனல்ல இருந்து கால் வந்தது.., உடனே உனக்குத்தான் பேசறேன்..” அவள் அழுகை அதிகரிக்கவே.., “ஓகே.., நான் வாட்ஸ்ஆப் பாத்துட்டு வரேன்.., வெயிட் பண்ணு..” அலைபேசியை வைத்தவன், வேகமாக தன் அலைபேசியை ஆராய்ந்தான்.

அப்பொழுதுதான் அவள் அலைபேசியில் இருந்து மட்டுமல்லாமல், மற்றவர்களும் அனுப்பியிருந்த பிறந்தநாள் புகைப்படங்கள், குறுந்தகவல்கள், கணக்கில் அடங்காத அலைபேசி அழைப்புக்கள் என அனைத்தையும் பார்த்தவன், அலையின் பிறந்தநாளுக்கு தான் ஒரு போன் கூட செய்யாததை எண்ணி வருந்தினான்.

வேலையில் மூழ்கி.., ஒரு அழகான தருணத்தை நழுவ விட்டதை எண்ணி கலங்கித்தான் போனான். அந்த நாளில் நிஹாசினி தன்னை எவ்வளவு தேடியிருப்பாள் என்பதும், ஒரு தகவலாவது வராதா என ஏங்கியிருப்பாள் என்பதும் புரிய, இதை எப்படி சரி செய்வது என்றே அவனுக்குத் தெரியவில்லை.

அந்த அழகிய தருணத்தை புகைப்படத்தில் ரசிக்க வேண்டிய தன் நிலையை எண்ணி அழுவதா சிரிப்பதா என்றே

அவனுக்குப் புரியவில்லை. லட்சியத்துக்காக குடும்பத்தை இழப்பதா? அவன் மனம் கேள்வி கேட்க, அதற்குமேல் அங்கே இருக்க முடியும் என்றே தோன்றவில்லை.

வேகமாக மீண்டும் அவளுக்கு அழைக்க, இப்பொழுது இருவராலும் பேச முடியவில்லை. இருவரின் மூச்சுக்காற்றில் ஓசை மட்டுமே மற்றவரைத் தீண்ட, அந்த மௌனம் நீண்டுகொண்டே செல்ல, “ஹாசினி..” உயிர் உருகும் குரலில் அழைத்தான்.

“நான் இப்போவே கிளம்பி வரேன்.., இங்கே.. எனக்கு.., இது எதுவும் வேண்டாம். உன்னை இவ்வளவு வருத்தப்பட வைத்துதான் எனக்கு இது கிடைக்கும்னா.., எனக்கு இது தேவையில்லை..” உறுதியாய் உரைக்க, அவனுக்கு தன்மேல் இருக்கும் காதலை எண்ணி பூரித்தாள்.

அதே நேரம்.., அவன் லட்சியத்துக்காக எத்தனை நாள் காத்திருந்தான் என்பதும் புரிய, அதற்கு தன் காதலே தடையாக இருப்பதை அவள் விரும்பவில்லை.

“இல்ல.., நீங்க அப்படி செய்யக் கூடாது.., நீங்க ஜெயிக்கணும்.., அதுதான் எனக்கு முக்கியம். இன்னும் எத்தனை மாதங்கள் ஆனாலும் நான் காத்துட்டு இருப்பேன். என்மேல் இருக்கும் காதலுக்காக நீங்க எதையும் இழப்பதை என்னால்

தாங்கிக்க முடியாது ராஜ்.., உங்க லட்சியம் ஈடேறணும்'' தன் வருத்தத்தை வேகமாக தள்ளி வைத்தாள்.

அவள் புரிதலிலும், காதலிலும் உருகியவன்.., 'என்மேல் இவ்வளவு காதலும், என் லட்சியத்தின்மேல் இவ்வளவு அக்கறையும் இருப்பவள் எப்படி என்னை வார்த்தைகளால் முன்பு வதைத்தாள்..?' மிகப்பெரும் வினா எழுந்தது.

''இப்போ இப்படி சொல்றவ, அன்னைக்கு ஏன் அவ்வளவு கோபப்பட்ட ஹாசினி..?'' அவனால் கேட்காமல் இருக்க முடியவில்லை.

அதற்கு அவள் அமைதியாகிவிட, அந்த பேச்சை இப்பொழுது எடுத்திருக்கக் கூடாது என்பது புரிய, சட்டென அதை விடுத்து, ''அலை என்னை மிஸ் பண்ணாளா..?'' பேச்சை மாற்றினான்.

''ம்.., அலையோட அம்மா ரொம்ப மிஸ் பண்ணா..?'' அவன் பேச்சை மாற்றுவது புரிய தானும் அதற்கு இசைந்தாள். ஆனால்.., இதே கேள்வி தன்னை வாழ்நாள் முழுவதும் துரத்தும் என்பதை நினைக்கையில், மனம் பாரமாய் கனத்துப் போனது.

அன்று அவன் மருத்துவமனையில் இருந்தபொழுது உரைக்க முடிந்த விஷயங்களை, அவன் முகம் பார்த்து உரைக்க அவளால் முடியவில்லை. அவனுக்குமே தான் வந்த விஷயமே

அவளுக்கு தெரியவில்லை என்பது புரிந்தாலும், அதன் பிறகான அவளது நடத்தை, மனநிலை.., எதுவும் புரியவில்லை.

அவளை எடுத்துக்கொண்டது கோபம் இல்லை எனச் சொல்கிறாள்.., அப்படியென்றால்.., குழந்தை பற்றிய அவளது பேச்சுக்கள்.., ‘பியூட்டி..’ என குழந்தையை கொஞ்சியதற்கு அவள் பேசிய பேச்சு.., இந்த கேள்விகள், குழப்பங்களோடே வாழ்க்கை கழியுமா? அவனுக்கு ஆயாசமாக இருந்தது.

“இனிமேல் அலையோட அம்மா என்னை தேடினால்.., அவ நினைத்த நேரம் அவ முன்னாடி இருப்பேன்னு சொல்லிடறியா..?” அவளைபோல் அவனும் உரைக்க, சட்டென மறைமுகப் பேச்சை கைவிட்டாள்.

“ரியலி ஐ மிஸ் யூ ராஜ்..” அவள் உரைக்க, எப்படி ஒரு நாளில் அவளை விட்டு வந்தோம் என்பது புரிய, தலையை அழுத்தமாக கோதிக் கொண்டான்.

“ஒரு நாள் பண்ண அதே தவறையே மறுபடியும் பண்ணிட்டு இங்கே வந்திருக்கேன் ஹாசினி.., என்னால், என்னையே மன்னிக்க முடியலை. பட் ஐ ப்ராமிஸ் யூ.., இனிமேல் இப்படியான தவறுகள் என் பக்கம் இருந்து நடக்காது..” உறுதி அளித்தான்.

அதில் தொங்கி நின்ற வருத்தத்தை உணர்ந்தவள், ‘‘அந்த தவறை நினைத்து, எனக்கு என்னைக்குமே வருத்தம் இல்லை ராஜ்.., பிகாஸ்.., ஐ ட்ரஸ்ட் யூ.., அண்ட் ஐ லவ் யூ..’’ சட்டென அலைபேசியை கட் செய்தவள் அதை அணைத்துப் போட்டாள்.

அவள் பேச்சை கேட்ட அவனுக்குத்தான் தலை சுற்றிப் போனது. பேசவேண்டிய பேச்சுகள்.., கேட்க வேண்டிய கேள்விகள்.., அதற்கான பதில்கள், இதையெல்லாம் அவள் வாய் திறந்து உரைக்காமல் தெளிவாக முடியாது என்னும்போது.., அதை முழுதாக மறுப்பவளிடம் என்ன கேட்க? எப்படி பதில் பெற? அவனுக்கு ஒன்றும் புரியவே இல்லை.

தன் குழப்பங்களை சற்று ஒற்றி வைத்தவன்.., வீட்டில் அனைவரிடமும் உரையாடிவிட்டு, வைத்தவன், விநாயகத்திடமும் பேசி அதிக நாட்கள் ஆகவே, அலுவலக விஷயங்களை அறிய அவனுக்கு அழைத்தான்.

அலுவலக விஷயங்கள் அனைத்தையும் பேசி முடித்தவர்கள், அலைபேசியை வைக்கப் போக, அப்பொழுதுதான் நினைவிற்கு வந்தவனாக.., ‘‘விநாயக்.., ஹாசினி உன்கிட்டே ஹாஸ்பிட்டல்ல வச்சு ஏதாவது சொன்னாளா..?’’ திடுமென அவன் கேட்க, சுத்தமாக விநாயக்கிற்கு எதுவும் புரியவில்லை.

“எதைப்பத்தி மச்சான் கேக்கற..?” புருவம் சுருக்கியவனுக்கோ.., தான் செய்துவைத்திருக்கும் ரெக்கார்ட் ஃபயிலை எண்ணி உள்ளுக்குள் உதறலாக இருந்தது.

“அன்னைக்கு என்னவோ அவளுக்கு அவ்வளவு சப்போட் பண்ண.., அதான்.., உன்கிட்டே ஏதாவது சொன்னாளான்னு தெரிஞ்சுக்கதான் கேட்டேன்.., வேற எதுவும் இல்லை..” அலைபேசியை வைத்து விட்டான்.

விநாயகத்துக்கோ குப்பென வியர்க்க.., கைகள் கூட சற்று சில்லிட்டு போனது. அந்த மெயில் தன்னிடம் இருக்கும் வரைக்கும், வாழ்நாளில் ஒரு நாள் கூட தனக்கு நிம்மதி என்பதே இருக்காது எனப் புரிய, என்ன நடந்தாலும் பரவாயில்லை என்று அவனுக்கு மெயிலை அனுப்பியவன், வாட்ஸ்ஆப்பில் மெயில் பார்க்குமாறு குறுந்தகவலை அனுப்பிவிட்டு போனை அணைத்துப் போட்டான்.

ராஜாவோ அந்த செய்தியைப் பார்த்தாலும், ஏதாவது அலுவலக விஷயமாக இருக்கும் என எண்ணியவன், “நீயே பாத்துக்கோ.., இல்லையென்றால் ஸ்ரீதரிடம் அனுப்பு..” என டைப் செய்தவன் அவனுக்கு அனுப்பிவிட்டு, அடுத்த கட்ட வேலைகளை கவனிக்கச் சென்றான். மேலும் மூன்று மாதங்கள் கடந்த பிறகே அவனது வேலைகள் அங்கே முடிய, அது

வரைக்கும் ராஜாவால் வேறு எந்த வேலையிலும் கவனம் செலுத்த முடியவில்லை.

நிஹாசினியிடம் தினமும் இரவில் ஒரு வார்த்தையாவது பேசாமல் உறங்கவில்லை. நிஹாசினியின் இரண்டாம் வருட செமஸ்டர் முடிந்திருக்க, சென்னையில் இருந்தவள், அவள்தான் கடைகளின் முக்கிய பொறுப்புக்களை கவனித்துக் கொண்டாள். அதற்கு தனா பேருதவியாக இருந்தாலும், அவரும் பொறுப்புக்களை அவள் வசமே ஒப்படைத்தார்.

குணா அவள் சொல்வதை செயல்படுத்துவதற்கு அவளுக்கு உதவி புரிந்தார். துளசிக்கு அதைப் பார்த்து, மகளது கனவு நனவானதில் அவ்வளவு சந்தோசம்.

ராஜாவுக்கோ.., நிஹாசினியை பிரிந்திருப்பது மிகவும் கடினமாக இருந்தது. அதிலும், குழந்தையின் பிறந்தநாளை தவற விட்ட பிறகு, தினமும் அவளோடு உரையாடினாலும், அவள் அருகாமையை மனம் அதிகம் நாடியது.

தன் வேலையை விட்டுவிட்டு, அவளைத் தேடி வர கால்கள் பரபரத்தாலும், ஒத்துக்கொண்ட விஷயத்தை பாதியில் விட்டு வர அவனது மனசாட்சி இடம் கொடுக்கவில்லை.

அன்று அவளிடம் அலைபேசியில் உரையாடியவன், மனதுக்குள் சிறு போராட்டமாக உணர, “ராஜ்.., அங்கே எதுவும் பிரச்சனையா? வேலை ரொம்ப கஷ்டமா இருக்கா..?” அவன்

குரல் இயல்பாக இல்லை என்பதை உணர்ந்து அவளாகவே கேட்டாள்.

“வேலை எல்லாம் கஷ்டமா இல்லை.., ஆனா..” வெகுவாக தயங்கியவன், “உன்னை பார்க்காமல் இருப்பதுதான் கஷ்டமா இருக்கு ஹாசினி. நீ என்மேல் கோபமா இருந்தப்போ கூட, உன்னை பார்க்காமல் என்னால் இருக்க முடியாது. ஆனா இப்போ.., சந்தோஷமா சேர்ந்திருக்க வேண்டிய நேரத்தில் இந்த பிரிவு.., ரொம்ப கொடுமையா இருக்கு ஹாசினி..” தயங்காமல் தன் மனதில் இருப்பதை அவன் வெளிப்படுத்தினான்.

அதை கேட்டுகொண்டிருந்தவளுக்குத்தன் என்ன சொல்வது என்றே தெரியவில்லை. அவனுக்கு குறையாத தவிப்பில்தான் அவளும் இருக்கிறாள் அப்படி இருக்கையில்.., வாய் திறந்து தன் தவிப்பை வெளியிடும் அவன் உணர்வுகளை அவள் எப்படி உணராமல் போவாள்?

“ஒரு நாள் வாழ்க்கையும்.., அதைத் தொடர்ந்த மாதக்கணக்கான பிரிவும்.., கஷ்டமா இருக்கு ஹாசினி. சாரி.., உனக்கும் இப்படித்தான் இருக்கும்னு எனக்குத் தெரியுது.., ஆனாலும்..” அவளைக் கண்டே ஆகவேண்டும் என்ற தவிப்பை வார்த்தைகளில் வடிக்க முயன்றான்.

“ராஜ்.., ரிலாக்ஸ்.., எல்லாம் சரியாகப் போய்டும்..” தன்னை தேற்றியவளாக, ஆயிரக்கணக்கான மயில்களுக்கு அப்பால் இருப்பவனை சமாதானப் படுத்துவதே பிரதானமாக அவளுக்குத் தோன்றியது.

“எப்படி சரியா போகும்..?” அவளிடம் கேட்க, மௌனத்தையே பதிலாக்கினாள்.

“ஒரு பத்து நாள்.., இங்கே வந்துட்டு போறியா..?” ஏக்கம் இழையோட அவன் கேட்க, அவளால் மறுக்க முடியவில்லை. ஆனால், விழுப்புரத்தில் இருந்து சென்னைக்கு வரவே அவள் அவ்வளவு யோசித்திருக்க, அவனோ.., சென்னையில் இருந்து லண்டனுக்கு அழைக்கிறான்.

அதை அவ்வளவு சுலபமாக அவளால் செய்துவிட முடியுமா? அவனுக்கு அவள் வேண்டும் என்றால், அவன்தான் தன்னைத் தேடி வர வேண்டும் என அவள் நினைப்பதில் தவறு ஒன்றும் இல்லைதான். ஆனால்.., அவனுக்குத் தேவையான நேரத்தில்.., தான் சென்று அவனைப் பார்ப்பது என்பது ஒரு விதத்தில் வேண்டுமானால் சரி.

அதுவே, படுக்கையறை விஷயத்தில்.., அவனைத் தேடி, நாடி போய் செய்வது என்பது, அவளால் அறவே முடியாத காரியம். ஏற்கனவே விழுப்புரத்தில் இருந்து அவனை நாடி

வந்ததற்கே அவள் மனதை வெகுவாக அவள் சமாதனம் செய்ய வேண்டி இருந்தது.

அப்படி இருக்கையில்.., இங்கே இருந்து லண்டன் போய் அவனைப் பார்க்கப் போவது என்பது.., முழு மனதோடு தன்னால் செய்துவிட முடியுமா? அவனோடான கூடலில், முழு மனதோடு இசைய முடியுமா? கேள்விகள் ஒவ்வொன்றாய் படையெடுத்தன.

அவள் மௌனத்தை உணர்ந்தவன், “வரலையா..?” ஏக்கத்தை மீண்டுமாக அவன் வழியவிட, “வரேன்..” அவள் வாய் அவனுக்குத் தேவையான பதிலை கொடுத்து விட்டது.

# அத்தியாயம் 25

நிஹா லண்டன் வருகிறேன் என சொன்ன அடுத்த நாள் முதல், ஏற்பாடுகள் துரிதகதியில் நடந்தேற.., அவனைக் காண விமானத்தில் பயணப் பட்டுக் கொண்டிருக்கிறாள் நிஹாசினி.

முதல் முறை விமானப் பயணம்.., கூடவே தனிமை, மனக் குழப்பம்.., இருக்கையில் கண்களை மூடி அமர்ந்து கொண்டவளுக்கு, மனதின் குழப்பத்தை தவிர்க்கும் மார்க்கம் மட்டும் புரியவே இல்லை.

பல மணிநேர பயணம் முடிவிற்கு வர, ராஜாவை காணப்போகும் ஆர்வமே இறுதியில் மிகுந்தது. தன் லக்கேஜை எடுத்துக்கொண்டு வெளியே வர, பார்வையோ மொத்தமாக அலசியது.

அவள் தேடலுக்கான விடை இல்லாமல் போக, ‘‘எக்ஸ்கியூஸ்மீ.., நிஹா..?’’ கேள்வியைச் சுமந்துகொண்டு அங்கே நின்றிருந்தான் ஒரு புதியவன்.

‘‘எஸ்..’’ அவள் அவனை ஏறிட, ‘‘ஐ’ம் டேவிட்.., ராஜா சென்ட் மீ பிளீஸ் கம்..’’ அவளது லக்கேஜை வாங்கிக் கொண்டவன் முன்னால் நடந்தான்.

தன் ஆர்வம், எதிர்பர்ப்பு மொத்தமும் வடிய, அவனைப் பின்தொடர்ந்தாள். மனதுக்குள் பெரும் ஏமாற்றம் குடியேற, காரில் ஏறியவள்.., ‘‘வேர் இஸ் ராஜா..?’’ அவனிடம் கேட்க தயக்கம் தடுத்தாலும், அவளுக்கு வேறு வழி இருக்கவில்லை.

‘‘ஹி இஸ் லிட்டில் பிஸி..’’ அவளுக்கு பதில் கொடுத்தவன், காரை ஓட்டுவதில் கவனமாக அதற்குமேல் அங்கே பேச்சுக்கு இடம் இருக்கவில்லை.

ஒரு மணிநேர பயண இறுதியில், ஒரு பங்களாவின் முன்னால் வாகனத்தை நிறுத்தியவன், ‘‘ப்ளீஸ்..’’ கார் கதவைத் திறந்து, லக்கேஜோடு வீட்டுக்குள் சென்று, ஒரு அறைக்குள் அவளது பேகை வைத்தவன், ஒரு தலையசைப்பில் அவளிடமிருந்து விடை பெற்றுச் சென்றான்.

அந்த பங்களாவில் அவள் தனித்து விடப்பட, ‘‘இங்கே வந்து தனியா இருக்கவா வரச் சொன்னாராம்..’’ சற்று கோபமாகவே எண்ணிக் கொண்டாள்.

எவ்வளவு நேரம்தான் அப்படியே இருப்பது..? வயிறு தன் இருப்பை உணர்த்த, கிச்சனுக்குச் சென்றவள், பிரிஜ்ஜில் இருந்த ப்ரெஷ் ஜூஸ், இரண்டு பிரட் ஸ்லைசை உண்டவள், அறைக்குள் நுழைந்து, பயணக் களைப்பில் உறங்கிப் போனாள்.

“எலீனா.., ஆண்டர்சன் இன்னைக்கு கொஞ்சம் டென்ஷனா இருந்தாரே.., ஏன்? ப்ரோகிராம் நல்லா போகுது தானே..”, ராஜாவின் குரல் ஒலிக்க, கூடவே.., “எவ்ரிதிங் கோயிங் வெல்.., அவருக்கு வேற டென்ஷன்..” ஆழ்ந்த உறக்கத்தில் சில குரல்கள் கலங்கலாக செவிகளைத் தீண்ட, முயன்று விழி திறந்தாள் ஹாசினி.

ஒரு நொடி தான் எங்கே இருக்கிறோம் என்றே தெரியவில்லை. சில நொடிகளுக்குப் பிறகே, தான் இருக்கும் இடம் புரிய, வேகமாக படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தாள்.

“இன்னைக்கு வொர்க் ரொம்ப எக்சலன்ட்டா இருக்குன்னு பீட்டர் சொன்னார். நான் கொஞ்சம் பார்க்கலாமா..?” எலினாவின் கொஞ்சல் குரல் அவளைத் தீண்ட, ஏனென்றே தெரியாமல் எரிச்சலாக உணர்ந்தாள்.

“sure.., கம்..” ராஜா தன் மடிக்கணினியை எடுப்பதை, பார்க்காமலேயே நிஹாவால் உணர முடிந்தது.

‘என்னை வந்து பார்ப்பதை விட, அவருக்கு அவளோடு பேசுவதுதான் பெரிதாகப் போயிற்றா..?’ எரிச்சலின் அளவு கூடிகொண்டே போனது.

சற்று நேரத்தில் அவர்கள் வேலையில் மூழ்கிவிட்டது புரிய, அதற்குமேல் பொறுமையாக இருக்க முடியாமல், தன் அறையில் இருந்து வெளியே வந்தாள்.

அவள் வந்தது கூட தெரியாமல் அவர்கள் கவனம் முழுவதும் லேப்ட்டாப் மீதே இருக்க, ‘‘ம்கும்..’’ தொண்டையை மெதுவாக கனைத்து தன் வரவை உணர்த்தினாள்.

அதில் சட்டென கலைந்தான் ராஜா. கண்களில் மின்னல் தெறிக்க, ‘‘ஹாசினி..’’ பட்டென சோபாவில் இருந்து எழுந்தவன், ‘‘எலீனா.., மீட் மை வைஃப் ஹாசினி.., ஹாசினி.., திஸ் இஸ் எலீனா.., மை ப்ரண்ட்..’’ இருவருக்கும் ஒருவரை மற்றவர் அறிமுகப் படுத்தினான்.

‘ஒண்ணும் வேண்டாம்..’ கோபமாக வெடிக்கத் துடித்த நாவை அடக்கி அமைதியாக நின்றிருந்தாள். ஒருமுறை அவளது கோபத்துக்கான விளைவுகளையே இன்னும் சம்மாளிக்க முடியாமல் திணறுகையில் புதிதாக எதையும் செய்துவைக்க அவள் விரும்பவில்லை.

ஆனாலும், அவனுக்காக, அவனைக்காண என்று அவள் வந்திருக்க, தான் வந்தது கூட தெரியாமல், நினைவில்லாமல், தன்னை அழைக்கவும் வராமல், இப்பொழுது தன்னைக் கண்ட

பிறகு, ஒப்புக்கான அவனது அறிமுகப் படுத்தும் படலம்.., சிறு வெறுப்பாக இருந்தது.

“ஹாய் ஹாஷி.., ஹவ் வாஸ் ஜெர்னி..” எழுந்து வந்து அவளை மென்மையாக அணைத்தவள் வினவ, “ஹாய்.., குட்..” மெல்லிய புன்னகையில் அவளுக்கு பதில் கொடுத்தாள்.

தன் கோபத்தை எலீனாவிடம் வெளிப்படுத்த அவள் தயாராக இருக்கவில்லை.

எலீனா.., பிங்க் நிறத்தில், குழந்தையின் மிருதுவில், அக்மார்க் லண்டன் பெண்ணாக இருந்தாள். அவளது புன்னகையில் சிறு வசீகரம் இருப்பதை உணர்ந்தவளுக்கு, நிச்சயம் மெல்லிய பொறாமை எழவே செய்தது.

“யூ கேரி ஆன்..” அவர்களின் வேலைக்கு இடைஞ்சல் இல்லாமல் விலகியவள், இரவு உணவுக்கு எதையாவது தயாரிக்கலாம் என கிச்சனுக்கு நகரப் போனாள்.

அவள் எண்ணம் உணர்ந்து, “ஹாசினி.., டின்னர்க்கு பிட்ஸா ஆர்டர் பண்ணியிருக்கேன்.., சோ, நோ குக்கிங்..” அவள் முதுகின் பின்னால் உரைத்தவன், அடுத்த இரண்டுமணி நேரம் கூட வேலையை விட்டு நகரவே இல்லை.

அவன் பார்வையோ விடாமல் அவள்மேல் பதிய, பேச்சற்ற அவன் செய்கை அவளை வருடிச் சென்றது.அவன் கண்கள்

இரண்டும் வஞ்சனையே இல்லாமல் அவளைப் பருக, எலீனா இருப்பதை அவன் கண்டுகொள்ளவே இல்லை.

அவனது அந்த பார்வை அவளது கோபத்தை சற்று குறைத்தது என்றே சொல்லலாம். கூடவே.., 'என்ன பார்வை இது..?' அவனை பார்வையால் கடிந்தவள், அங்கிருந்து எழுந்து செல்ல முயல, 'போகாதே..' அவன் பார்வை அவளிடம் யாசிக்க, அப்படியே அமர்ந்து கொண்டாள்.

வேலைக்கு நடுவிலேயே பிட்ஸாவும் வந்து, அதை உண்டவாறே அவர்கள் வேலையும் நடக்க, அரை மனதாக அவர்களோடு அமர்ந்து உண்டவள், ராஜாவை ஒரு பார்வை பார்த்தவாறே.., ''யூ கண்டினியூ.., ஐ பீல் ஸ்லீபி..'' தனக்கான அறைக்குள் சென்று புகுந்து கொண்டாள்.

நிச்சயம் அவன் வருவான் என அவள் உள்ளுணர்வு உரைக்க, அதை பொய்யாக்காமல் அங்கே பிரசன்னமானான்.

''ஹாசினி.., சாரிம்மா.., கொஞ்சம் வேலை ஜாஸ்த்தி.., அதான் உன்னை பிக்கப் பண்ண ஏர்ப்போர்ட் வர முடியலை. ஜர்னி ஓகே தானே..?'' கேட்டவன் அவளை முழுதாக தழுவிக் கொண்டான். ஆவேசமான அணைப்பு, அதில் அப்படி ஒரு இறுக்கம்.., இதழ்களோ அவள் முகத்தில் அவசரமாக பதிந்து மீண்டது.

“ரொம்ப சீக்கிரம் கேட்டுட்டீங்க..” காலை முதல் அனுபவித்த தனிமை அவளை இவ்வாறு பேசத் தூண்டியது. கோபத்தை அவனிடம் வெளிப்படுத்தக் கூடாது என நினைத்தாலும் அவளால் முடியவில்லை.

அதை உணர்ந்தவன், “ஹாசினி.., ஐ நோ.., ரொம்ப தப்பு பண்றேன்.., உன்னை கூப்பிட நான் ஏர்போர்ட் வந்திருக்கணும், ஆனா என்னால் வர முடியலை.., அதுதான் உண்மை. ஒரு டூ டேஸ்.., எனக்காக.., ப்ளீஸ்.., இங்கே ரொம்ப ரென்ஷன்.., என்னால்..” அவள் கன்னம் தாங்கியவன், விளக்கம் சொல்ல முடியாமல், அவள் முகத்தை கெஞ்சலாகப் பார்த்திருந்தான்.

அவன் சொன்னதில் இருந்த உண்மை புரிய, தன் கோபம் குறைத்தவள், அவன் கரம் விலக்கி, அவன் நெஞ்சில் சாய்ந்து கொள்ள, அவளை ஒரு நிமிடம் அப்படியே இறுக்கிக் கொண்டவன், மீண்டுமாக அவள் கன்னம் தாங்கி, அவள் முகம் நோக்கினான்.

கண்களுக்குள் ஊடுருவிய அவன் பார்வை, அவள் உயிர்வரைத் தீண்டி சிலிர்க்கச் செய்ய, ‘என்ன..’ என்பதுபோல் அவள் புருவம் உயர்த்த, “நீ இங்கே.., என்னோட.., இந்த வீட்டில் இருக்க என்பதையே என்னால் இன்னும் நம்ப முடியலை” அவள் நெற்றியில் முட்டியவன், மூக்கோடு மூக்கை

உரசினான்.

‘‘குழந்தையை விட்டுட்டு வர வச்சுட்டேன்னு வருத்தம் இல்லையே.., இப்போவும் அவளுக்கு பீட் பண்றியா..?’’ கேட்டவனது கரங்கள் மெதுவாய் நகர்ந்து அவளை உணர, இதழ் கடித்து தன் உணர்வுகளை தாங்கியவள், ‘‘இப்போ.., ஒரு நாளைக்கு ஒரு வேளைதான் பீட் பண்றேன்.., சோ..’’ அவன் கேள்விக்கு பதில் உரைத்தவள், வேகமாய் அவன் கரங்களுக்கு அணை போட்டாள்.

‘‘ஹாசினி..’’ ஒரு மாதிரி ஹஸ்க்கி வாய்சில் அழைத்தவனது இதழ்கள் அவள் இதழ்களை தீண்ட முயல, ‘‘ராஜ்.., சீ திஸ்..’’ எலீனாவின் குரல் அறைக்கு வெளியே கேட்க, வேகமாக அவனை விட்டு அவள் விலக முயல,

‘‘நோ.., ஐ வாண்ட்..’’ பிடிவாதமாக அவள் இதழில் தன் இதழ் பதித்தவன், முழுதாக ஒரு நிமிடம் அவளை விட்டு விலகவே இல்லை.

அவளுக்குள் மூழ்கிவிட அவன் தவிக்க, ‘‘ராஜ்.., வெளியே.., போங்க..’’ அவனை விட்டு பிடிவாதமாக விலகியவள் அவனை அனுப்ப முயன்றாள்.

மீண்டும் அவள் இதழ் ஒற்றி விலகியவன், “நீ ரெஸ்ட் எடு.., நான் பிறகு வரேன்..” அவள் நெற்றியில் அவசரமாக இதழ் ஒற்றிவிட்டு வெளியேறினான்.

அவன் செல்லவே.., அவன் வேலை அவசரம் புரிந்தவள், படுக்கையில் படுத்து விழி மூடிக் கொண்டாள்.

அவள் உறங்கி நடு இரவில் விழித்தபொழுது கூட அவன் அறைக்கு வந்திருக்கவில்லை. அறைக்கு வெளியிலும் அவர்களது பேச்சு சத்தம் கேட்காமல் போகவே, அறைக்கதவை திறந்து வெளியே வர, ஹால் முழுவதும் இருளில் உறைந்திருந்தது.

‘எங்கே போனார்கள்..?’ கேள்வி மனதைக் குடைய, அவர்களை எங்கேயும் சென்று தேட மனமின்றி, அறைக்கு திரும்பிவிட்டாள்.

மறுநாள் காலையில், அவள் படுக்கைக்கு அருகில் சிறு நோட்ஸ் இருக்க, அதைப் பார்த்தவளுக்கு ஆத்திரமாக வந்தது. ‘இவர் என்னதான் நினைச்சுட்டு இருக்கார்.? இங்கே வான்னு சொல்லிட்டு, அவர்பாட்டுக்கு வேலையை பார்த்துக் கொண்டிருந்தால் நான் எதற்கு இங்கே..?’ மனம் பொருமினாள்.

அவள் குளித்து கிளம்ப, அவளுக்காக ஹாலில் காத்திருந்தான் டேவிட். ‘‘ஹல்லோ.., கார் இஸ் வெயிடிங் பார் யூ’’ அவன் உரைக்க, குழப்பமாக அவனை ஏறிட்டாள்.

‘ஓ.., ஊர் சுற்றிப் பார்க்க கார் ஏற்பாடு செய்திருக்கிறேன் என நோட் எழுதியிருந்தாரே.., இதுதானா.’ எண்ணியவள், தனக்கு கார் வேண்டாம் என உரைத்து அவனைத் திருப்பி அனுப்பினாள்.

அடுத்த இரண்டு நாட்களும் இதுவே தொடர, மூன்றாம் நாள் இரவில், ராஜா மாலையிலேயே வீட்டுக்கு வர, ‘‘நான் லண்டன் வீட்டை பாத்ததே இல்லன்னு உங்ககிட்டே சொன்னேனா..?’’ கோபமாக அவன் முன்னால் நின்றாள்.

‘‘இல்லையே..’’ வேகமாகத் துவங்கியவன், அவளது கோபம் புரிய, தனக்குள் சிரித்துக் கொண்டான்.

‘‘வீட்டை சுத்திப் பாத்து போர் அடிக்குதா? அதான் நான் கார் ஏற்பாடு பண்ணேனே..’’ அவள் இடையில் கை கோர்த்து தன்னோடு மென்மையாக இறுக்கிக் கொண்டான்.

அவனுக்கு மறுக்காமல் அவனோடு இசைந்தவள், ‘‘நான் இந்தியா போறேன். டிக்கெட் போடுங்க..’’ அவன் முகம் பார்க்காமல், பார்வையை அவன் முதுகின் பின்னால் செலுத்தினாள்.

“ஹாசினி.., நீ இங்கே.., என்னோட இருக்கிறாய் என்ற நினைப்பே எனக்கு யானை பலம் கொடுக்குது. அதை ஏன் புரிஞ்சுக்க மாட்டேங்கற?” சிறு வருத்தமாக உரைத்தான்.

“ம்ச்.., எல்லாம் சும்மா..” வீம்புக்காக உரைத்தாலும், அவனோடு இருப்பது அவளுக்கும் மகிழ்ச்சி தானே.

“நிஜம்..” உரைத்தவன், அவள் கழுத்தில் முகம் புதைத்து, இன்னுமாக இறுக்கிக் கொள்ள, அவள் கரம் உயர்ந்து அவன் தலையை மென்மையாக வருடியது.

“நீ இப்படியே.., என் கூடவே இருந்தால் போதும் ஹாசினி..” பிதற்றியவன், அவன் வாசம் உணர்ந்தான்.

வந்தது முதல், உணவு, உறக்கம் அனைத்தையும் தொலைத்து, வேலையிலேயே அவன் மூழ்கி இருப்பதை பார்த்துக் கொண்டுதானே இருக்கிறாள். எனவே.., அவனது பேச்சையும், மெல்லிய சீண்டலையும் ரசித்தவாறே.., அவன் முதுகை ஆதரவாக வளைத்துக் கொண்டாள்.

“இப்படியே வேலை செய்துட்டே இருந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்?” அவளுக்கு கவலை தொற்றிக் கொண்டது.

“இன்னும் கொஞ்ச நாள் தானே..” உரைத்தவன், இன்னும் அழுத்தமாக தன் இதழ்களை புதைத்தான். அதில் குழைந்தவள்,

“சரி.., போய் குளிச்சுட்டு வாங்க.., சூடா டீ போட்டு தரேன். டீ தூள் எடுத்துட்டு வந்தேன்..” அவனை மென்மையாக விலக்கினாள்.

“ம்ச்.., டீயை விட.., உன்னோட அருகாமை இன்னும் ப்ரெஷ்ஷா பீல் பண்ண வைக்குது..” அவளை விட்டு பிரிய மறுத்தான்.

“ஆமா.., இப்போ சொல்லுங்க.., ரெண்டு நாளா ஒரு பார்வைக்கு கூட பஞ்சமா இருந்தது..” அவள் குறைபட்டுகொள்ள, அதைக் கண்டுகொள்ளாமல் இன்னுமாக தன் முகத்தை அவள் மேனியில் இறக்கினான்.

அவனுக்கு வாகாக இசைந்தவள்.., “ம்ச்.., இதென்ன குழந்தை மாதிரி..” அவன் செய்கை அவளுக்கு அப்படித்தான் இருந்தது. அவனோ.., இன்னுமாக தன் முகத்தை அவள் மேனியில் புதைத்தவன், “இப்படி ஒரு நாள் என் வாழ்வில் வருமான்னு எத்தனை நாள் ஏங்கி இருக்கேன் தெரியுமா..?” கேட்டவன் இதழ்களால் கோலம் போட, இப்பொழுது அவனை விலக்கும் எண்ணம் இன்றி உறைந்து போனாள்.

அவன் சிகைக்குள் அழுத்தமாக கரத்தை கோர்த்தவள், தன்னோடு அவனை அழுத்தமாக புதைக்க, “ஹாசினி..,

ஹாசினி..'' புலம்பியவன், தன் இதழ்களை அவள் கன்னத்துக்கு இடம் மாற்றினான்.

அவன் தீண்டலில் குழைந்து போனவளாக அவள் நிற்க, ‘‘ராஜ்..'' எலீனாவின் குரல் மீண்டுமாக அவர்களுக்கு நடுவில் இடையிட, இருக்கும் இடம் ஹால் என்பதால், வேகமாக அவனை விட்டு விலகி நின்றாள்.

‘‘இவளுக்கு இதே வேலையா போச்சு.., முதல்ல அவளை அனுப்புங்க.., ராஜாம் ராஜ்..'' அவனிடம் கோபமாக பொரிந்துவிட்டு, அறைக்குள் சென்று புகுந்து கொண்டாள்.

சற்று நேரம் பேச்சுக்கள் எதுவும் நிகழாமல் போகவே.., ஹாசினி வெளியே வந்து பார்க்க, எலீனா தன் லாங் ஓவர்கோட்டை கழட்டிவிட்டு, அவனுக்கு எதிரில் அமர்ந்து எதையோ உரையாடுவது அவள் பார்வையில் விழுந்தது.

அதை விட, அவளை கோபப்படுத்தியது அவளது உடையே. உள்ளாடை அணியாத மேனியின் அபாயகரமான உடையின் இறக்கமும், அவள் அணிந்திருந்த கருப்பு வர்ண உடைக்கு, அவளது மேனியின் வசீகரம் தூக்கலாகத்தான் இருந்தது.

ராஜாவுக்கு அவளை இப்படி பார்ப்பது சாதாரணம் என்பதுபோல் இயல்பாக அவன் உரையாட, நிஹாசினிக்குத்தான் கடுப்பாக இருந்தது.

நிஹாசினி அங்கே வந்ததைப் பார்த்த எலீனா.., “ஹாய்..” உரைத்தவள், ராஜாவிடம் பேசுவதில் கவனமாக, ஓர விழியில் நிஹாசினியைப் பார்த்த ராஜாவுக்குதான் அவள் கோபமாக இருப்பது புரிய, அவஸ்தையாக எச்சில் விழுங்கிக் கொண்டான்.

அவனுக்கு தன் கோபத்தை காட்டும் விதமாக, தங்.., தங்கென நடந்து செல்ல, ‘ஹையோ.., கோபமா இருக்கா போலையே..’ எண்ணியவன்.., ஏதோ ஒன்றைச் சொல்லி, முதலில் எலீனாவை அனுப்பிவிட்டு அவளைத் தேடிச் சென்றான்.

“ஹாசினி.., இங்கே என்ன பண்ற..?” கேட்டவன், கிச்சனில் எதையோ செய்ய முயன்றுகொண்டிருந்த அவளுக்கு பின்னால் இணைந்து, அவள் இடையை வளைத்துக் கொண்டான்.

“நான் ஒண்ணும் உங்களை டிஸ்டப் பண்ணலையே.., போங்க.., போய் அவகிட்டே பேசுங்க.., பாக்கவும் கண்ணுக்கு குளிர்சியாதான் இருக்கா..” அவன் கரத்தை ஆத்திரமாக விலக்கினாள்.

“ஏய்.., என்ன பேசுற..? கண்ணுக்கு குளிர்ச்சி.., அது.., இதுன்னு.., அவ அப்படி ட்ரெஸ் பண்ணா அதுக்கு நான்

பழியா..? இது அவளோட இயல்பு..'' உரைத்தவன், ஹாசினியை தன் பக்கம் திருப்பினான்.

அவளோ முகத்தை இன்னும் தூக்கி வைத்துக் கொண்டிருக்க, ''எனக்கு கண்ணுக்கு குளிர்ச்சியா நீ இருக்கும்போது.., நான் எதுக்கு யாரையோ பாக்கணும்..?'' கேட்டவனது பார்வை அவளை சிவக்கச் செய்ய..,

''வர வர நல்லா பேசறீங்க..'' அவன் நெஞ்சில் செல்லமாக குத்தினாள்.

''பேச மட்டும்தான் செய்யிறேனா..?'' ஒற்றை புருவம் தூக்கி அவன் வினவ, அவன் நெஞ்சிலே ஆசையாக சாய்ந்து கொண்டாள்.

''எனக்கு சொந்தமானதையே நான் இன்னும் முழுசா..'' அவன் வார்த்தைகளை முடிக்கும் முன்னர் வேகமாக அவன் வாய் பொத்தினாள்.

''ராஜ்.., நீங்க ரொம்ப மோசம்..'' முகம் சிவந்து போனது.

''கண்டு புடிச்சுட்டியா..?'' அவளைச் சீண்ட, அவன் நெஞ்சில் புதைந்து போனாள்.

இரவு உணவை அவள் தயாரிக்க.., இருவரும் சேர்ந்து உண்டவர்கள், சற்று நேரம் அவன் தான் செய்த ஆனிமேஷன்

ப்ரோகிராமை அவளுக்கு போட்டுக் காட்ட, அதில் மூழ்கித்தான் போனாள்.

“ரொம்ப அருமையா இருக்கு ராஜ்..” ஒவ்வொரு எபியும் ரசித்து பார்த்தாள்.

“ஓகே.., ரொம்ப லேட் ஆகிடுச்சு.., வா தூங்கலாம்..” அவளை கைகளில் அள்ளிக் கொண்டான்.

“ராஜ்.., என்ன பண்றீங்க..?” சிணுங்கினாலும், அவன் கழுத்தை கட்டிக் கொண்டாள். படுக்கையில் அவளை விட்டவன், தானும் அவள் அருகில் படுக்க, சட்டென அவள் தேகம் ஒரு அதிர்வுக்குப் போனது. எப்பொழுதாய் இருந்தாலும், இதை எதிர்கொண்டுதான் ஆக வேண்டும். ஆனால்.., நடக்கப்போவதை ஏற்க அவளுக்கு பெரும் தயக்கமாக இருந்தது.

அதை உணர்ந்தவன்.., “ஜஸ்ட் ரிலாக்ஸ் ஹாசினி.., ஏன் இவ்வளவு பதட்டம்? நாளைக்கு வெளியே போகணும்.., சோ.., நிம்மதியா தூங்கு..” அவளை இறுக அணைத்தவாறு விழி மூடிக் கொண்டான். நம்ப முடியாத திகைப்பில் விழி மூடியவள், உறங்கிப் போனாள்.

அவள் உறங்கிவிட, தன் விழிகளைத் திறந்தவன், அவள் முகத்தையே யோசனையாகப் பார்த்திருந்தான். வந்தது முதல்

தன்னிடம் உரையாடியதிலோ, தன் இதழ் தீண்டலில் கரைந்ததிலோ, தன்னோடு குழைந்ததிலோ எந்த விதமான தயக்கமும் இருக்கவில்லை.

ஆனால், இப்பொழுது மட்டும் ஏன்..?' யோசனை அவனுக்குள் ஓட, எது எப்படி என்றாலும், தான் அழைத்ததற்காக அவள் இங்கே வந்ததே பெரிதெனத் தோன்ற தன்னை தேற்றிக் கொண்டவன், அவளை இறுக்கிக் கொண்டு விழி மூடினான்.

மறுநாள் எழுந்து குளித்தவள், ஒரு ஜீன்சும் குர்தாவும் அணிய, ''ஏய்.., இந்த குர்தாவோடையா வெளியே வர.., இரு வரேன்..'' உரைத்தவன், வேகமாக ஒரு டிஷர்ட் டாப்போடு வந்தான்.

''இதை போட்டுக்கோ..'' அதை அவள் கைகளில் கொடுக்க, ''என்ன இது..?'' அந்த சிறிய உடையைவாங்கியவள், திகைப்பாய் கேட்டாள்.

''உனக்காக வாங்கினேன்.., ஜஸ்ட் ட்ரை..'' உரைத்தவன், படுக்கையில் அமர்ந்து கொண்டான்.

''இதெல்லாம் போட்டு எனக்கு பழக்கமில்லையே..'' அவள் தயங்க, ''இதெல்லாம் இந்தியால போட முடியாது.., சோ ப்ளீஸ்..'' அவன் கண்களில் சிறு ஆர்வம் கொப்பளித்தது.

அதை உணர்ந்தவள் அரை மனதாக சம்மதிக்க, உடையை கையில் வைத்துக் கொண்டு, அவனை தயக்கமாக ஏறிட்டாள். அவள் பார்வைக்கான பொருள் புரிந்தாலும், புரியாதவனாக பாவித்து, கண்களில் குறும்போடு அவளை ஏறிட, “ராஜ்.., இட்ஸ் டூ பேட்..” சிணுங்கியவள், அவனை நெருங்கி, அவன் கண்களை மூடினாள்.

“நான் ஓகே சொல்லுற வரைக்கும் இப்படியேதான் இருக்கணும்..” போலியாக அவனை மிரட்ட,

“இது போங்காட்டம்..” அவனும் போலியாகவே சிணுங்கினான்.

“பரவாயில்லை.., அப்படியே இருக்கட்டும்..” அவனுக்கு முதுகு காட்டி நின்றவள், நொடியில் உடை மாற்ற, அந்த சின்ன சீண்டல், மிகவும் நிறைவாகவே இருந்தது.

“ராஜ்..” அவள் அழைக்க, விழி திறந்தவனால், தன் கண்களை அவள்மேல் இருந்து எடுக்கவே முடியவில்லை.

அவளுக்காகவே அளவெடுத்து தைத்தாற்போல்.., அந்த உடை கச்சிதமாக அவள் மேனியை தழுவி இருக்க, “வாவ்.., சூப்பர்..” வாய் பிழந்தான்.

“ராஜ்.., ஒரு மாதிரி.., ஏதாவது ஓவர்கோட் போட்டுக்கவா..?” சங்கடமாக வினவினாள்.

“இதுவே ரொம்ப அழகா இருக்கு.., ப்ரீயா விடு..” எழுந்து அவளை இடையோடு அணைத்துக் கொள்ள, அவன் கரங்கள் அவள் வெற்றிடையை உணர, கூச்சமாய் நெளிந்தாள்.

“இப்போ நாம வெளியே போகவா வேண்டாமா..?” அவள் தன்மேல் ஒட்டிக்கொள்ள, சரசமாய் அவன் வினவ, போலியாக அவனை முறைத்தவள், தன் கைப்பையை எடுத்துக் கொண்டாள்.

“இன்னைக்கு வொர்க் இல்லையா..?” அவனோடு நடந்தவள் வினவ, “மூணு நாள் நான் லீவ்..” காரை கிளப்பியவனாய் உரைக்க, அன்று முழுவதும் லண்டனை அவளுக்கு சுற்றிக் காட்டினான்.

நெருக்கமான வீதிகளில் அவள் கை கோர்த்து நடக்க, உலகையே வென்ற பெருமிதம் அவனிடம். “இந்த வீதிகளில் ஒத்தையில் நடக்கும்போது.., என்னோடவளை கூட்டி வந்து.., இப்படி கையை கோர்த்து நடக்கணும்னு எத்தனை நாள் ஆசைப் பட்டிருக்கேன் தெரியுமா..?” அவள் விரல் கோர்த்து அவன் உரைக்க, உருகிக் கொண்டிருந்தாள்.

மாலையில் டிஸ்கோ அழைத்துச் சென்றவன்.., அந்த மெல்லிய இருளில்.., இசைக்குத் தக்க, அவளோடு ஒட்டிக்கொண்டு நடனமாட, அவளுக்கு தெரியவில்லை

என்றாலும், அவனது சந்தோஷத்துக்காக அவன் சொன்னவாறே நடனமாடினாள்.

இடை இடையே அவன் இதழ்கள் அவள் முகம் வருடிச் செல்ல, “ராஜ்.., நோ..” மெல்லியதாக தன் மறுப்பை வெளியிட்டாள்.

“ஏன்.., பிடிக்கலையா..?” தயக்கமும், பயமும் கலந்து அவன் வினவ,

“ம்ச்.., இப்போ எதுக்கு முகத்தை இப்படி வச்சுக்கறீங்க..? நான் மறுத்ததுக்கு காரணம் பிடிக்கலை என்பதால் இல்லை. நாலு சுவத்துக்குள் காட்ட வேண்டிய அன்னியோன்னியத்தை, நெருக்கத்தை.., நாற்பது பேருக்கு மத்தியில் அரங்கேற்றுவதில் எனக்கு விருப்பம் இல்லை.., அவ்வளவுதான்..” அவன் கண்களுக்குள் பார்த்து உரைக்க, அதை மறுக்காமல் ஏற்றுக் கொண்டான்.

மூன்லைட் டின்னர்ரோடு அந்த இரவு நிறைவுக்கு வர, காருக்குள் ஒரு நிறைவான அமைதி நிலவியது. “ஹாசினி.., தேங்க்ஸ்..” அவள் கரத்தை அழுத்தமாக பற்றிக்கொண்டு அவன் உரைக்க, அவனது வலக்கரத்தை கோர்த்தவள், அவன் தோளில் சாய்ந்து கொண்டாள்.

## பகுதி – 26.

அடுத்து வந்த நாட்கள் எப்படிக் கடந்தது எனக் கேட்டால் எதுவும் நினைவில்லை. மூன்று நாட்கள் விடுப்பு எடுத்திருப்பதாக உரைத்தவன், அது முடிந்த பிறகும் வேலைக்குச் செல்லாமல் போக, கேள்வியாய் அவனை ஏறிட்டாள்.

“ராஜ்.., ஸ்டுடியோ போகலையா..?” கிச்சனில் அவனுக்காக உணவு தயாரித்துக் கொண்டிருந்தவள் வினவ,

“இல்ல.., நீ இந்தியா போற வரைக்கும் வரலைன்னு சொல்லிட்டேன். ஐ வான்ட் டு பீ வித் யூ ஹாசினி.., ஐ டோன்ட் வான்ட் டூ மிஸ் திஸ் ஆப்பர்ச்சூனிட்டி..” குழைந்துபோய், கொஞ்சலும், கெஞ்சலுமாக அவன் உரைக்க, செய்து கொண்டிருந்த வேலையை அவளால் தொடரவே முடியவில்லை.

“எப்படி ராஜ்.., உங்களால் மட்டும் இப்படி இருக்க முடியுது..?” கண்களில் சிறு கண்ணீர் துளியோடு வினவ, சட்டென இருக்கையில் இருந்து எழுந்தவன், அவளை தோளில் சாய்த்துக் கொண்டான்.

“இப்போ எதுக்கு இப்படி எமோஷனல் ஆகற..?” மெல்லியதாக கடிந்து கொண்டான்.

“ஏன்னு உங்களுக்குத் தெரியாதா..?” கேட்டவள், அவன் சட்டையை இறுக பற்றிக் கொண்டாள்.

இதுவே அவன் இடத்தில் தான் இருந்து, தன் இடத்தில் அவன் தான் பேசிய அளவுக்கு பேசியிருந்தால்.., கண்டிப்பாக தான் அவன் முகத்தில் கூட விழித்திருக்க மாட்டோம் என்பதை எண்ணுகையில்.., அவன் காதலின் அளவை எண்ணி நெகிழ்ந்து போனாள்.

அதைவிட.., முதல் நாளில் தன்னை சற்று ஆர்வமாக நெருங்கியவன், தனக்கு விருப்பம் இல்லை என்பதை உணர்ந்த பிறகு, பார்வையில் கூட தன் தேவையை வெளிப்படுத்தாத விதம்.., நினைக்கையில் நெஞ்சம் நனைந்தது.

"நான் உங்களுக்கு நியாயமே செய்யலை ராஜ்.." குரல் அடைக்க அவள் உரைக்க,

"ஹாசினி ப்ளீஸ்..., இங்கே சந்தோஷமான உணர்வுகளை மட்டுமே நாம அனுபவிக்கணும்னு நினைக்கறேன். நாம கஷ்டபட்ட வரைக்கும் போதும். இப்போ இங்கே நமக்கு வேற எதுவும் வேண்டாமே.." வேகமாக அவள் இதழ்களை கைகளால் மூட, தன்னை நினைத்தே நாணினாள்.

இங்கே வருவதற்கு கூட தான் தயங்கியதும்..., அவன் நெருக்கத்தை இயல்பாக ஏற்க முடியாமல் மருகியதையும் உணர்ந்தவளுக்கு, நிச்சயம் தான் அவன் காதலுக்கு தகுதியானவள் இல்லை என்றே தோன்றியது.

"சாரி ராஜ்..., இங்கே வந்தும் நான் உங்களை அவாய்ட் பண்றேன்ல்ல.." மேலே சொல்ல முடியாமல் திணறியவள், அவனை இறுக அணைத்து, அவன் நெஞ்சுக்குள் புதைந்து தன் அடைக்கலத்தை அவனுக்கு உணர்த்த முயன்றாள்.

முதல் நாளில் அவனோடு ஒன்றிக்க முடியாது என தோன்றிய விஷயம், இப்பொழுதோ..., அவனுக்கு எதையும் கொடுக்காமல் போய்விட்டால், இந்தியா சென்றும் தன்னால் நிம்மதியாக இருக்க முடியாது என்று தோன்றத் துவங்கி விட்டது.

"நீ எங்கே என்னை அவாய்ட் பண்ண..? இதோ..., இப்போ கூட என் கைக்குள்ளே தானே இருக்கிறாய்..., இதைவிட எனக்கு வேற என்ன வேணும்..?" அவளை இலகுவாக்க முயன்றான். அதை உணர்ந்தவளது அழுகை கூடியதே தவிர குறையவில்லை.

முயன்று அவளை தேற்ற..., அவளோ..., தேறவே விரும்பாதவளாக, அவன் நெஞ்சில் விழுந்து குமுறினாள். இப்பொழுது இங்கே நடப்பதற்காக அழுதாளா? இல்லையென்றால், இதற்கு முன்னர் அவனிடம் தான் நடந்துகொண்ட முறைக்காக அழுதாளா? ஏதோ ஒன்று..., அவனே ஆதாரம் என பற்றிக்கொண்டு அழுகையைத் தொடர்ந்தாள்.

சற்று நேரம் அவளை தேற்ற முயன்றவன், அது முடியாமல் போகவே, அவளாகவே அழுது ஓயட்டும் என விட்டு விட்டான். அவள் தலை தடவி, முதுகை வருடி, முயன்ற அளவுக்கு அவளுக்கு ஆதரவாக நின்றான்.

ஆன மட்டும் அழுது ஓய்ந்தவள், “சாரி..” மூக்கை உறிஞ்சி, கண்கள் சிவந்துபோய், மூக்குநுனி தடித்து அவள் உரைக்க, “சரி.., சரி..” அவளை தேற்றி அமர வைத்தவன், மீதி சமையலை தான் செய்து, அவளை உண்ண வைத்து உறங்க வைத்தான்.

அவள் இந்தியா செல்ல இன்னும் ஒரு நாளே இருக்க, அவளை அழைத்துக்கொண்டு ஷாப்பிங் சென்றான். அவள் எவ்வளவோ மறுத்தாலும் அவளுக்காக என அவன் வாங்கிக் குவிக்க, மற்றவர்களுக்காக ஒவ்வொன்றையும் அவள் பார்த்து பார்த்து வாங்கினாள்.

குழந்தைக்கென ஒரு தனி பேகையே அவள் ஒதுக்க வேண்டி இருந்தது. அவளுக்குத் தேவையான உடை, சப்பல் துவங்கி, டாய்ஸ்.., சாக்லேட் என வாங்க, அதை பூரிப்பாய் பார்த்திருந்தான்.

அதைவிட, அவனுக்காக என டைமண்ட் வாட்ச் வாங்கியவள், அதை அவனுக்கு அணிவிக்க, அவனுக்கும் சந்தோசம் தாங்கவில்லை. அங்கே குளிர் தாங்க வேண்டி சிறிய உல்லன் ஸ்கார்ப் துவங்கி, நீள கோட்.., தடிமனான ஷூ என வாங்கித் தள்ள.., ஆனந்தமாகவே அனைத்தையும் பார்த்திருந்தான்.

ஒரு வழியாக அவளது பயணத்துக்குத் தேவையான அனைத்தையும் செட் செய்து முடிக்க, “டின்னருக்கு வெளியே போய்டலாம்..” அவளை அழைத்துக் கொண்டு சென்றான்.

போகும் வழியில்.., அவனது ஸ்டூடியோ ஆள் ஒருவர் அவனை எதிர்கொண்டார். “மிஸ்டர் ராஜா.., உங்ககிட்டே கொஞ்சம் தனியா பேசணுமே..” அவர் ராஜாவின் மனைவியை பார்த்தவாறே.., சிறு தயக்கத்தோடு கேட்டார்.

“ராஜ்.., நீங்க பாருங்க.., நான் வெயிட் பண்றேன்..” அவள் உரைக்க, இரு ஆண்களும் அருகில் இருந்த கட்டிடத்துக்குள் நுழைந்தார்கள்.

வந்தவர் அவனது வேலையைப் பாராட்டியவர்.., டிஸ்னிலாண்ட் ப்ரொஜெக்ட் ஒன்றை துவங்கப் போவதாகவும், அதற்கு அவனது

பெயரையும் தான் பரிந்துரைத்திருப்பதாகவும் உரைக்க, அதைப் பற்றிய பேச்சில் மூழ்கித்தான் போனான்.

அவன் நினைவில் ஹாசினி வந்தபொழுது கிட்டத்தட்ட மூன்று மணி நேரங்கள் கடந்திருந்தது. சற்று திடுக்கிட்டுத்தான் போனான். அதன் பிறகு வேகமாக பேசி முடித்தவன், அவளைத் தேடி கிட்டத்தட்ட ஓடினான்.

குளிருக்கு இதமாக தன் கரத்தை இடையோடு கோர்த்திருந்தவள், அந்த நடை பாதையில் உலவிக் கொண்டிருந்தாள்.

"ஹாசினி.., சாரிம்மா.., பேசிட்டு இருந்ததில் டைம் போனதே தெரியலை. வீட்டுக்கு போயிருக்கலாமே.., குளிர் வேற அதிகமா இருக்கு. உடம்புக்கு ஏதாவது வந்துட்டா கஷ்டமா போய்டுமே.." நிச்சயம் பதைத்துதான் போயிருந்தான்.

"ராஜ் ப்ளீஸ்.., இனிமேல்.., நம்ம வாழ்க்கையில் வரப்போகும் நாட்களில், நீங்க தப்பே செய்திருந்தாலும், என்கிட்டே மன்னிப்பு கேட்க கூடாது.., கூடவே கூடாது.., புரியுதா..?" கிட்டத்தட்ட எமொஷனலில் கத்தியிருந்தாள்.

ஏனோ அவன் மன்னிப்பை வேண்டும் நேரங்களில் எல்லாம்.., அவன் தன் காலில் விழுந்த காட்சி நினைவிற்கு வர, அந்த பாவத்தை எங்கே கரைப்பது என தெரியாமல் திணறும் உணர்வை மறைக்கவே அவளால் முடியவில்லை.

"ஹாசினி.., நீ செய்யாதேன்னு சொன்னால் நான் செய்ய மாட்டேன்.., எதுக்கு பழசை எல்லாம் நினைத்து உன்னையே நீ வருத்திக்கற?" வாழ்க்கை இப்படியே பழையதில் உழல்வதை அவன் விரும்பவில்லை.

"ராஜ்.., ஒவ்வொரு நாள் விடியும்பொழுதும்.., நீங்க என்னை தாங்கும் போது.., மனசுக்குள்ளே நான் வெந்து போய்டறேன். என்னோட ஒவ்வொரு பேச்சும், செய்கையும் நினைவுக்கு வரப்போ.., உங்க முகத்தை பாக்க கூட என்னால் முடியலை.." அங்கே இருந்த இருக்கையில் தளர்ந்துபோய் அமர்ந்தாள்.

"ஹாசினி.., அதையெல்லாம் நீ தெரிந்தே செய்யலை தானே.." அப்பொழுதும் அவளைத் தாங்கியே உரைக்க, இருக்கும் சூழல் மறந்து அழுகை பொங்கியது.

"ப்ளீஸ் ராஜ்.., என்னை மேலும் மேலும் குற்ற உணர்வில் குறுக வைக்காதீங்க.." முகத்தை கைகளால் மறைத்துக் கொண்டாள்.

"இதெல்லாம் நம்ம வாழ்க்கையில் குறுக்கே வர வேண்டாம்னுதான் நான் நினைக்கறேன் ஹாசினி. இப்போவாவது சொல்லேன்.., உன் மனசுக்குள் அப்போ என்னதான் இருந்தது? நாம பேசி முடிச்சுக்கலாம்.., உனக்கு நான் தொட்டதில் கோபமில்லை.., உன்னை தேடி வராதது மட்டும்தான் கோபமா.., அதற்காக மட்டுமா அப்படி நடந்து கொண்டாய்..?" இது இத்தோடு முடிந்துவிடட்டும் என்ற எதிர்பார்ப்பும், ஏக்கமும் போட்டி போட்டது அவனிடம்.

ஆனால்.., மடை திறந்த வெள்ளமாக அனைத்தையும் கொட்ட அவளால் முடியவில்லை. அவை அனைத்துமே சப்பை கட்டுகளாக இப்பொழுது தோன்ற, வார்த்தைகளை கோர்க்க அவளால் முடியவில்லை.

அதை அப்படியே புதைத்தவள், "நீங்க என்னை வீட்டில் போய் தேடிட்டா இங்கே வந்தீங்க..?" அவள் கேட்க, பழைய பேச்சை அவள் அப்பட்டமாக மறுப்பதை உணர்ந்து, 'இல்லை' என்பதுபோல் மறுப்பாக தலை அசைத்தான்.

மனமோ.., 'இவள் மனதுக்குள் வைத்து புழுங்குவதை எப்பொழுது நிறுத்துவாள்?' தவிப்பாக எண்ணிக் கொண்டான்.

"என்னை நீங்க இங்கே விட்டுட்டு போனீங்க.., எவ்வளவு நேரம் ஆனாலும் கண்டிப்பா இங்கே வந்து தேடுவீங்கன்னு எனக்குத் தெரியும். அப்படி இருக்கும்போது.., நான் எப்படி வீட்டுக்கு கிளம்பி போவேனாம்? உங்களை இனிமேல் மறந்தும் கூட ஏமாற்ற என்னால் முடியாது ராஜ்.." உணர்ச்சிவசப் பட்டாள்.

"ஹேய்.., ஓகே.., முதல்ல சாப்ட்டுட்டு பிறகு பேசலாம்.." அவளை அழைத்துச் சென்றவன், தான் சுவை பார்த்திருந்த உணவுகளில் சிறப்பானவற்றை ஆர்டர் செய்து அவளை உண்ண வைத்தான்.

மனமோ.., அவள் பேசியவற்றையே சுற்றி வந்தது. உணவு உண்டு.., வீட்டுக்கு வரும் வரைக்கும், அவன் சிந்தை அவள் பேச்சிலேயே உழன்றது.

வீட்டுக்கு வந்தவன்.., "ஹாசினி.., கேக்கறேன்னு தப்பா நினைக்காதே.., முதல்நாள்.., உன்னைத் தேடி நான்தான் வந்திருக்கேன்னு உனக்குத் தெரியாதா? அத்தை கூடவா சொல்லவில்லை..?" அவனுக்கு தெரிந்த விஷயம்தான், மேலும்.., அவள் இந்த பேச்சை எடுத்தாலே பதில் சொல்ல மாட்டாள் எனத் தெரிந்தாலும், அவளிடம் அவனுக்கு கேட்டே ஆகவேண்டும் என்ற வேகம்.

"அம்மாவும் சரி, வினோவும் சரி.., மாப்பிள்ளை.., மாமான்னு சொன்னாங்களே தவிர.., ராஜான்னு சொல்லவே இல்லை. எனக்கு அப்போவே தெரிந்திருந்தால்.." நடந்து முடிந்த பெரும் அனர்த்தங்களை தவிர்த்திருக்கலாமே என அவள் மறுகிப் போனாள்.

"நான்தான் வந்திருப்பேன்னு ஒரு சதவீதம் கூட நீ நினைக்கவே இல்லையா ஹாசினி.." ஏனோ அதை அவனால் தாங்கவே முடியவில்லை.

அவள் என்ன சொல்வாள்..? அவனைக் கண் முன்னால் காணவில்லை, என்ற ஒற்றை சிந்தையிலேயே உள்ளம் உழல, அதை மீறி எதையும் சிந்திக்க அவளால் முடியவே இல்லையே. மூளை மழுங்கிப் போன உணர்வு. அதை எப்படி அவனுக்கு புரிய வைக்க? உள்ளுக்குள் தவித்தாள்.

ஆனாலும்.., அவனுக்கு பதில் சொல்லாமல் இருக்க முடியாமல்.., "அந்த நேரம்.., நீங்கதான் வந்திருப்பீங்கன்னு என்னால் நினைக்கவே முடியலை, ஆனா.., என்னைக்காவது ஒரு நாள் நீங்க வந்து விடுவீங்க என்ற நம்பிக்கையில்தான், என் வயிற்றில் கருவை தாங்கினேன் என்பது மட்டும் உண்மை.." உரைத்தவள், வேகமாக தன் அறைக்குள் புகுந்து கதவடைத்துக் கொண்டாள்.

அவளை தொல்லை செய்யாமல் விலகிச் சென்றவன்.., அவள் மனதில் இருப்பதை முழுதாக அறிய முடியவில்லையே என தவித்துப் போனான். ஆனால்.., அவளாகச் சொல்லாமல், தன்னால் எதையும் அறிய முடியாது என எண்ணுகையிலேயே, மனம் பாரமாகிப் போனது.

'எதையும் நினைக்காதே.., எல்லாம் சரியாகிவிடும்..' தனக்குத் தானே உரைத்துக் கொண்டவன், உறங்கச் சென்றான்.

மறுநாள் அவள் இந்தியா கிளம்ப.., ஏர்போர்ட்டில் அவளை இறுக்கமாக அணைத்து விலகியவன், "தேங்க்ஸ் பார் கம்மிங்.., லவ் யூ ஹாசினி.." அவளைப் பிரிவதை நினைத்து, தொண்டை அடைத்தது.

அவளுக்குமே பேச முடியாமல் போக, தன்னை மீறி அவன் கன்னத்தில் இதழ் பதித்தவள், "டேக் கேர்.., கால் பண்ணுங்க.., சீக்கிரம் வந்துடுங்க.." ஒவ்வொரு வார்த்தையையும் உதிர்த்தவள், அவனை அணைத்து விடுவித்தாள்.

கண்கள் இரண்டும் அவனிடம் மன்னிப்பை யாசித்தது. இரண்டு நாட்களாக அவனோடு இணக்கமாக இருக்க அவள் முயல, நாசூக்காக அவன் மறுத்ததை அவள் சுட்டிக்காட்ட.., ஒரு புன்னகையில் அதை கடந்து விட்டான்.

ஏனோ அந்த பிரிவை இருவராலும் சாதாரணமாக எடுத்துக் கொள்ளவே முடியவில்லை. அவள் சென்னைக்கு வந்து, வழக்கமான பணிகளுக்குள் நுழைய, ராஜாவும் தன் வேலையில் மூழ்கினான்.

அன்று அவளுக்கு அழைத்தவன்.., "உன்னை எதுவும் நான் ஹெர்ட் பண்ணலையே.." திடுமென கேட்க, அவன் எதைக் கேட்க வருகிறான் என அவளுக்கு புரியவே இல்லை.

"நீங்க எதுக்கு என்னை ஹெர்ட் பண்ணப் போறீங்க?" அதையே அவள் வார்த்தையில் கேட்க,

"இல்ல.., உன்னை இங்கே லண்டனுக்கு அழைத்து.., ஹெர்ட் பண்ணிட்டனோன்னு பயந்துட்டேன் அதான். உனக்கு என்னோடு இணைவதில் மனதளவில் ஏதோ தயக்கம் இருக்குன்னு எனக்குத் தெரிந்தது.., அதான் நான் விலகி இருந்தேன்.

"ஆனா.., இறுதி நாட்களில் அப்படி இல்லைன்னு நீ உணர்த்த முயன்ற பொழுதும் என்னால் என் தடையை மீறி உன்னை நெருங்க முடியலை,

அதான் கேட்டேன்.." அவன் குரலில் மலையளவு தயக்கம் எட்டிப் பார்த்தது.

"ராஜ்.., ப்ளீஸ்.., என்னை ரொம்ப பேம்பர் பண்றீங்க.., என்னால் அதை தாங்கிக்க முடியலை.." அவன் அனுசரணை அவளை குற்ற உணர்வில் குறுக வைத்தது.

அவனை தேடிச் சென்று எதையும் கொடுக்க முடியாது என அவள் நினைக்க, அவனோ.., அவளது மனநிலையை உணர்ந்து, விலகி இருந்து தன்னை வழியனுப்பி இருப்பதை எண்ணி அவன் காதலை அடைந்ததற்காக கர்வப் பட்டாள்.

அதே நேரம்.., "ஹாசினி.., நான் ஒண்ணே ஒண்ணு சொல்லவா.., உன் மனசுக்குள், எப்படி நாமாக தேடிப்போய் அவனோட இணைவது என்ற தயக்கம் இருந்தது சரிதான்.., ஆனா, எனக்கு நீ தேவை என்னும்போது தயங்காமல் நான் வருகிறேன் தானே..,

"நீ வேணும்.., அதுவும் இப்போவே.., அப்படியே வேணும்னு கேக்கறேன் தானே. அப்படி இருக்கும்போது, நீ என்னைத் தேடி வரும்போது, நான் உன்னை எடுத்துக் கொள்வது எப்படி தவறாகும்? சில உணர்வுகள் ரெண்டு பேருக்கும் பொதுவானது.

"அங்கே இந்த ஈகோவுக்கு இடமே இருக்கக் கூடாதுன்னு நான் நினைக்கறேன். ஒரு வேளை, என்னோட வாழ்நாளில் பெரும் பகுதியை நான் இங்கே செலவழிக்க வேண்டி வந்தால்.., அப்பொழுதும் உன் நிலைப்பாடு இதுவாகத்தான் இருக்குமா?

"நிச்சயம் இதை உன்னை ஹெர்ட் பண்ண கேக்கலை. இனிமேல் நம் மனசுக்குள் நினைப்பதை வெளிப்படையா பேசிக்கணும் என்பதால் தான் கேக்கறேன். எனக்கு உன்னோட வாழணும் ஹாசினி. திகட்ட திகட்ட வாழணும்.., வாழ்க்கையை உன்னோட சேர்ந்து அனுபவிக்கணும்.

"அது ஒரு நிமிடமாக இருந்தாலும், ஒரு ஜென்மம் முழுக்க என்றாலும் உன்னோட வாழணும். நான் எந்த நிமிஷம் தவறினேன்னு தெரியலை. என்னைத் தேடி நீ வந்தால், உன்னை தவறா நினைப்பேன்னு நீ எப்படி நினைக்கலாம்?

"அப்போ, இப்போ, இந்த நிமிஷம் நீ வேணும்னு நான் நினைத்து, உன் முன்னால் வந்து நின்றால்.., அதுவும் தவறாகத்தான் இருக்குமா? எனக்குப் புரியலை.., நீ சொல்லு.., எனக்கு தெரிஞ்சுக்கணும்.." ஒரு அடிபட்ட குழந்தையின் பாவனை அவனிடம் வெளிப்பட, சிதைந்து போனாள்.

"ராஜ், ப்ளீஸ்.., அது அன்னைக்கு.., ஏதோ ஒரு வேகத்தில் நினைத்தது, மற்றபடி, உங்களோட வாழ்வதில் எனக்கு எந்தவிதமான தயக்கமும் இல்லை. ஐ'ம் யுவர்ஸ்.." தன்னையே தண்டித்துக்கொள்ளும் வேகம் அவளிடம்.

"ப்ளீஸ் ஹாசினி.., நடந்த தவறுகள் அனைத்தும் முடிந்ததாக இருக்கட்டும். இனிமேல் நாம வாழப் போகும் நாட்களில்.., இப்படிப் பேசினால் தப்பா போய்டுமா.., ஏதாவது தவறாக நினைத்து விடுவேனா..? இப்படியான குழப்பங்கள் உன் மனதில் இருக்க கூடாதுன்னு நினைக்கறேன்.

"நானும் அப்படித்தான் நடந்துகொள்ள விரும்பறேன். சோ.., உனக்கு பிடித்தாலும் சரி, பிடிக்கவில்லை என்றாலும் சரி.., என் செய்கை என்னவாக இருந்தாலும் அதை வெளிப்படையா என்கிட்டே பேசிடு.., நானும் அதனால்தான் இப்போ பேசினேன். அதே போல்.., என் கேள்வி உன்னை தொடரும் என்ற பயத்தை விட்டுடு..

"என்னைக்கு உன் மனசில் இருந்ததை உன்னால் சொல்ல முடியுமோ அன்னைக்கு சொல்.., இல்லையா.., அது எனக்கு தெரியாமலே போகட்டும். நீ எப்படி இருந்தாலும் நான் உன்னை காதலிப்பேன்.., என்ன சரியா..? சந்தோஷமா இரு.

"எதையும் யோசிக்காதே.., கடை வேலையை முடிந்த அளவு செய்.., முடிய வில்லையா.., கூட துணைக்கு ஆள் போட்டுக்கோ.., உன் கனவில் நீ ஜெயிக்கணும்.., எனக்கு அதுதான் முக்கியம்.., சரியா.." அவன் கேட்க, அமைதியாக அவன் பேச்சை உள்வாங்கிக் கொண்டாள்.

"ராஜ், என்னைக்கு இங்கே வரீங்க..?" திடுமென அவள் கேட்க,

"இன்னும் ரெண்டு மாசத்தில் வந்துடுவேன்னு நினைக்கறேன்.., ஏன்..?" அவன் கேட்க,

"எனக்கு நீங்க வேணும்.., இப்போ.., இந்த நிமிஷம்.."

"ஹாசினி.."

"எஸ்.., ஐ மீன் இட்.."

"ஹாசினி.."

"எப்போ வரீங்க..?"

"ஹாசினி.."

"என்னை ஏண்டா அப்படியே அனுப்பிட்ட..? ஃபூல்.., இடியட்.., பதில் சொல்லுடா.."

"நீ ஏண்டி சொல்லவே இல்லை.."

"இதெல்லாம் சொல்லித்தான் செய்வியாடா..?"

"நேர்ல வந்தால் தாங்க மாட்ட ஹாசினி.."

"அது என்னோட கவலை, ரெண்டு நாளா அப்படி ஒட்டிகிட்டு இருக்கேன், பெரிய இவனாட்டம் அப்படியே திருப்பி அனுப்பிட்டு, இப்போ வாயைத் திறந்து பேசுன்னு சொல்றீங்க.., சொல்லிட்டேன்.., இப்போ என்ன செய்யப் போறீங்க.., பதில் சொல்லுங்க.."

"இப்போ இவ்வளவு பேசுறவ, அப்போ சொல்லியிருக்க வேண்டியது தானே.." அவன் குறைபட,

"அப்படியெல்லாம் எனக்கு பேசத் தெரியாது. எனக்கு தெரிந்த மாதிரிதான் நான் செய்வேன்.., இப்போ என்னங்கறீங்க.." அவள் சிலிர்த்துக் கொள்ள, அதன் பிறகான பேச்சுக்கள் எப்படி முடிக்கவெனத் தெரியாமல் போக, ஒரு கட்டத்தில், இருவரும் மௌனத்தையே கையில் எடுத்தார்கள்.

"ஹாசினி.., ஆர் யூ சீரியஸ்..?" விட்டால் இந்த நிமிடமே கிளம்பி வந்துவிடுவேன் என ஒலித்தது அவன் குரல்.

"டு ஹண்ட்ரட் பெர்சண்ட் சீரியஸ்.., நீங்க தானே மனசுக்குள் இருப்பதை வெளிப்படையா சொல்லச் சொன்னீங்க.., சொல்லிட்டேன்.., முடிவை நீங்க எடுங்க.." அலைபேசியை வைத்து விட்டாள்.

அந்தப் பக்கம் அவள் வைத்ததை கூட உணர முடியாமல், தான் என்ன செய்வது எனத் தெரியாமல் குழம்பிப் போனான். இருக்கும் சூழலில் அங்கே இருந்து நகரக் கூட முடியாது எனத் தெரியும்.., ஆனாலும் ஹாசினி இவ்வளவு சொன்ன பிறகு, இங்கே இருப்பதா? என்ற எண்ணம் வலுபெற்றுக் கொண்டே செல்ல, அவனது அலைபேசி குறுஞ்செய்தி வந்த ஓசையை வெளியிட்டது.

வேகமாக அதை எடுத்துப் பார்க்க, 'யூ ஷூட் வின். ஐ வில் வெயிட்..' ஒரு புன்னகைக்கும் சுமைலியோடு நிஹாவின் செய்தி இடம்பெற்றிருக்க, பொத்தென படுக்கையில் விழுந்தான்.

மனம் முழுவதும் ஒருவித குழப்பம் வியாபித்தது.

***நாட்கள் அதே நிலையில் நகர, தொடர்ந்த நாட்களில், ஹாசினி கடையின் பொறுப்புக்களை முழுதாக கவனிக்கும் நிலைக்கு முன்னேறி இருந்தாள். அதே நேரம்.., இரண்டு மாத வேலையை, இரண்டே வாரங்களில் முடித்துக் கொடுத்தான் ராஜா.

ஹாசினி தன்னை இவ்வளவு தூரம் தேடிய பிறகு, அதற்குமேல் அங்கே இருக்க அவனால் முடியவில்லை. இரவு பகல் பாராத அயராத உழைப்பு, ஹாசினியின் முன்னால் சென்று தான் நிற்க வேண்டும் என்ற வேகம்.., அவன் ஊருக்கு வருவதை யாரிடமும் சொல்லவில்லை.

ராஜா இன்னும் ஒரு வாரத்தில் இந்தியாவிற்கு வர முடிவெடுத்தான். கூடவே.., ஒரு மூவியின் சிஜி வேலைகள் தனக்கு கிடைக்கும் வாய்ப்பு இருப்பதாக உரைக்க, நிஹாசினிக்கு சந்தோஷம்தான் என்றாலும், மீண்டும் அவன் தங்களை விட்டு தூரமாகச் செல்வதை எண்ணி பெரும் கவலையாகப் போயிற்று.

"அந்த வேலை உங்களுக்கு வேண்டாம்.." என நுனி நாக்குவரை வந்த வார்த்தைகளை சிரமப்பட்டு விழுங்கினாள்.

நிர்வாகம் செய்யவேண்டும் என்ற தன் லட்சியத்துக்காக, ஆசைக்காக, ஒரு பெண்ணாகிய அவளே எவ்வளவு கஷ்டப்படவும் தயாராக இருக்கையில், சினிமாவில் சாதிக்கவேண்டும் என்ற அவனது லட்சியத்துக்கு குறுக்காக தான் போகக் கூடாது என தன்னையே கட்டுப்படுத்திக் கொண்டாள்.

ராஜாவின் வேலைகள் முடிந்த பிறகும் அவன் ஒரு வாரம் அங்கே தங்கியிருக்கக் காரணமே.., ஒரு வேளை ஏதாவது மாற்றம் வேண்டும் என அவர்கள் உரைத்தால், அதை செய்து கொடுக்க வேண்டியே அங்கே தங்கி இருந்தான்.

அப்பொழுதுதான் தன் பெர்சனல் மெயிலை ஓப்பன் செய்தவன்.., குவிந்து கிடந்த மெயில்களை பார்வையிட்டவன், "வெரி வெரி இம்பார்ட்டன்ட்.." என்ற தலைப்பில், விநாயகத்திடம் இருந்து மீண்டுமாக வந்திருந்த மெயிலை வேகமாக ஓப்பன் செய்தான்.

அதில் அட்டாச் ஆகியிருந்த வீடியோவை டவுன்லோட் செய்தவன்.., ப்ளே செய்துவிட்டு, படுக்கையில் நன்றாக சாய்ந்து அமர்ந்தவன், 'அப்படியென்ன முக்கியமான வீடியோ..' என்ற கேள்வியோடு அதைப் பார்க்கத் தயாரானான்.

அந்த வீடியோவை பார்த்த உடனேயே.., அது மொபைலில் எடுக்கப்பட்ட வீடியோ என அவனால் உணர முடிந்தது. சரியாக போக்கஸ் செய்யாமல், ஒரு அறையின் மூலைக்கும்.., படுக்கைக்கும் இடையில் அதன் வியூ இருக்க, 'இது என்ன..? அவனை இந்த மாதிரி செய்யக் கூடாதுன்னு எத்தனை முறை சொல்லியிருக்கேன்....

'அதை செய்துவிட்டு, எனக்கே அனுப்பி இருக்கிறான்.., அதுவும் ரொம்ப முக்கியம்னு வேற போட்டு..' பற்களைக் கடித்தவன், அதை நிறுத்த போகையில், "ஏன் ராஜ் அப்படிப் பண்ணீங்க..? ஏன் பண்ணீங்க?" நிஹாவின் குரல் மட்டும் வெகு தெளிவாக கேட்க, அவன் கைகள் அப்படியே நின்று போனது.

'இது நிஹாவோட குரலாச்சே..?' அவன் எண்ண.., "என்னை அவ்வளவு ஆசையாக எடுத்துக்கொண்ட பிறகு, ஏன் என்னைவிட்டு விலகி ஓடிப் போனீங்க? ஏன் கோழை மாதிரி ஒளிந்து கொண்டீங்க..? அதை..,

அதைத்தான் என்னால் தாங்க முடியலை.., ஆனா.., என் அடிப்படை கோபத்துக்கே ஆதாரம் இல்லை என்பதை, நீங்க வாய் திறந்து சொல்லும்வரைக்கும் நான் அறியாமலே போயிட்டேனே.., அதுதான் இத்தனைக்கும் காரணம்.

"என் செய்கைக்கும் பின்னால்.., என் கோபத்துக்குப் பின்னால்.., என் வார்த்தைகளுக்குப் பின்னால்.., என் வதைப்புக்குப் பின்னால் என்ன காரணம் இருந்தது என்பதை நான் உங்ககிட்டே சொல்லியே ஆகணும்.." அவளது கண்ணீர் குரல் அந்த அறையின் நிசப்தத்தை நிறைக்க, வேகமாக தன் ஹெட்போனை தேடி எடுத்தவன், அதை மாட்டிவிட்டு, இமைகளை மூடி, அவள் பேச்சை கவனிக்கத் துவங்கினான்.

அவள் பேசிய ஒவ்வொரு விஷயத்தையும் கேட்க கேட்க, அந்த நொடியே, அவள் முன்னால் சென்று நிற்க வேண்டும் என கால்கள் இரண்டும் பரபரத்தது.

"நீங்க என்னை ஆசைப்பட்டு கல்யாணம் பண்ணிகிட்டதாகத்தான் இருக்கணும்.., நடந்த தவறை சரி செய்ய என்று இருக்கக் கூடாது என நான் நினைத்தேன்..,

"ஆனா.., எது நடக்கக் கூடாது என நான் நினைத்தேனோ.., அதையே நீங்க செஞ்சு வச்சுட்டீங்களே.." அவள் கேட்கையில்.., இந்த நிமிடம், அவளை இறுக அணைத்து, உன்னை ஆசைபட்டுதாண்டி கட்டிக்க நினைத்தேன்.., என கத்தவேண்டுபோல் இருந்தது.

அதைவிட.., அவளது அடி மனதின் ஆழத்தில் இருந்த கோபத்துக்கான காரணம் அப்பட்டமாக புரிய, 'பெண்ணின் மனம் கடலை விட ஆழமானது என சும்மாவா சொன்னாங்க..?' எண்ணியவன், 'ஒரு பொண்ணோட மனசை எத்தனை காலம் ஆனாலும் ஒரு ஆணால் புரிந்துகொள்ளவே முடியாது என்றே தோன்றியது.

குழந்தையைப் பற்றிய அவளது பேச்சு.., டெலிவரி நேரம்.., அவனுக்கான தேடல், குழந்தையை தவிர்த்த காரணம்.., அவனை உடன் இருக்கச் செய்ததற்கான விளக்கம்.., ஒவ்வொன்றையும் கேட்கையில்..,அவள் மனதை உணராமலே போனோமே என வெட்கினான்.

இறுதியில்.., 'எனக்கு இப்போ.., இந்த நிமிஷம் நீ வேணும் ஹாசினி.., அடுத்த நிமிஷமே எனக்கு மரணம் வந்தால் கூட பரவாயில்லைன்னு' நீங்க சொன்னீங்களே.., அதைக் கேட்ட பிறகு, எனக்கு உங்களை தவிர்க்க மனமில்லை.

இந்த வார்த்தைகளை ஒரு நூறு முறையாவது திரும்ப திரும்ப கேட்டுவிட்டான்.., அப்படி ஒரு நிலையில் கூட, தன் பேச்சு இந்த அளவுக்கு அவள் அடிமனதில் உறைந்திருக்கிறது என்றால்.., அவள் எந்த அளவுக்கு தன்னை நேசித்திருக்க வேண்டும்..' அவள் காதலின் அளவில் மெய் சிலிர்த்தது.

அவள் உயிருக்கு அதிகமாக நினைக்கும் ஒரு விஷயம்.., காப்பாற்ற துடிக்கும் விஷயம்.., அதையே தனக்காக அந்த நொடி விட்டுக் கொடுத்திருக்கிறாள் என்றால்.., என்மேல் எவ்வளவு நம்பிக்கை இருந்திருக்க வேண்டும்.., இவளிடம்போய் என்மேல் நம்பிக்கை இல்லையா எனக் கேட்டேனே.., என்ன ஒரு முட்டாள்த்தனம்.., தன்னையே நொந்து கொண்டான்.

மீண்டும் ப்ளே செய்தவன் கேட்கத் துவங்கினான். "உங்களை மீறிய.., உணர்ச்சிவசப்பட்ட அந்த நிலையில் கூட, என்னோடு வாழ்ந்துவிட்டுப் போகணும்னு நீங்க சொன்ன வார்த்தை.., அந்த நிலையில் கூட என்னைத் தாக்கியது என்றால், அடுத்த நிமிடம் நானும் உங்களோட வாழத் தயார் ஆகிட்டேன்.

"துவக்கம் வேண்டுமானால் பிழையாக இருக்கலாம்.., ஆனா.., முடிவு.., நானும் முழு மனசோடுதான் இணைந்தேன்...., இதைச் சொல்வதில் எனக்கு எந்த விதமான தயக்கமோ, அவமானமோ இல்லை. நீங்க என்னை ஏமாற்றிவிடுவீங்க என்ற பயம் ஒரு சதவீதமாவது இருந்திருந்தால், அடுத்த நாளே நான் வேறு முடிவைத் தேடி இருப்பேன்.."

இதைக் கேட்கையில், 'என்மேல் உனக்கு நம்பிக்கையே இல்லையா..?' என தான் எவ்வளவு அபத்தமாக அவளிடம் கேட்டிருக்கிறோம் எனப் புரிய, தன்னையே அறைந்து கொண்டான்.

அதைவிட..., அந்த நிமிடத்தில் கூட, தான் பேசிய பேச்சுக்கள் அவள் நினைவில் இருக்கிறது என்றால்..., அவன் தேகம் முழுவதும் அவளுக்கான தேடல் அலையலையாய் கிளர்ந்து எழுந்தது.

"இந்த அளவுக்கா என்னை நேசிக்கிறாய்..?" வாய்விட்டே அவளிடம் கேட்டான்.

"முதல்நாள் என் முன்னால் வந்து நின்று..., 'பியூட்டி...'ன்னு கூப்ட்டீங்களே.., அப்போ.., அந்த நிமிஷம், என்னால் புரிந்துகொள்ள முடிந்தது..., நான் உங்களை எவ்வளவு மிஸ் பண்ணியிருக்கேன்னு.

"என் எல்லா கோபத்தையும் மீறி..., ஓடிவந்து உங்க நெஞ்சில் விழணும்னு தோணிச்சே..., அந்த நிமிஷம்..., எனக்கு என்மேலேயே எழுந்த கோபம்..., அதுதான் அவ்வளவு வன்மமா வார்த்தைகளில் வெடித்ததே தவிர, உங்கள்மேல் உள்ள கோபம் இல்லை..." அவள் வீடியோவில் உரைக்க...,

"ஹாசினி..., ஹாசினி.." புலம்பித் தீர்த்தான்.

"கார்த்திகா பற்றிய பேச்சு..., குழந்தையை 'பியூட்டி..' என அவன் அழைத்ததில் எழுந்த பொசசிவ்..., அனைத்தையும் கேட்டவனுக்கு..., இந்த நிமிடம் அவள்மேல் எந்த கோபமும் இருக்கவில்லை.

அதைவிட..., அவள் தன்மேல் கொண்ட காதலே தெரிந்தது. அடுத்த நிமிடம், தன் அலைபேசியில் இந்தியாவிற்கு டிக்கட் புக் செய்தவன், தன் வீட்டுக்கு வருவதற்குள், நூறு முறை அந்த பேச்சை கேட்டு விட்டான்.

சொல்லாமல் கொள்ளாமல் வீட்டில் வந்து இறங்கியவனைப் பார்த்து குடும்பமே வியக்க, "ம்மா.., நான் இன்னைக்கு இங்கே வரவே இல்லை சரியா..?" சுஜாவை கட்டி அணைத்து, அவர் கன்னத்தில் முத்தமிட்டவன் படிகளில் விரைய, "என்னக்கா இது..?" தாரிணி வியக்க, சுஜா சந்தோஷமாய் சிரித்தார்.

"என் பையன் வாழத் தயார் ஆகிட்டான்.." சுஜா உரைக்க, அதற்குமேல் அங்கே யாரும் எதுவும் பேசவில்லை.

தங்கள் அறைக்குள் நுழைந்தவன், கண்களால் அறையைத் துழாவ, உடைமாற்றும் தடுப்புக்குப் பின்னால் சிறு அசைவை உணர்ந்தவன், கதவை பூட்டிவிட்டு, ஒரே பாய்ச்சலில் அங்கே விரைந்தான்.

"பியூட்டி.." அங்கே யாரும் இல்லை என்ற நினைப்பில், சுதந்திரமாக உடைமாற்றிக் கொண்டிருந்தவள், திடுமென கேட்ட அழைப்பில், நம்ப முடியாமல் திடுக்கிட்டவள், தன்னை மறந்து அவனை ஏறிட, அவன் பார்வை சென்ற இடம் புரிய, வேகமாக தன் கைகளால் தன் அழகை மறைத்தாள்.

"இந்த வெட்கம் உனக்கு எப்பொழுதும் ஹெல்ப் பண்ணாதுன்னு சொன்னேனே.." கேட்டவன், புயலென அவளை நெருங்கி உடும்பாய் அவளை அணைக்க, வெடவெடத்துப் போனாள்.

"ராஜ்.." அதிர்ச்சியும், ஆச்சரியமும் கலந்து அழைக்க, "உன் ராஜ் தான்.." உரைக்கும் முன்பு, நூறு முத்தங்கள் பதித்தான்.

"அன்னைக்கு என்னவோ சொன்னியே.., இப்போ சொல்லு.." முத்தங்களுக்கிடையில் அவன் கேட்க, மறுப்பாக தலை அசைத்தாள்.

ஆனாலும், தனக்காக.., தன் வார்த்தைகளுக்காக இரண்டே வாரங்களில் தன் முன்னால் நின்ற அவனது காதலை அவளால் வியக்காமல் இருக்க முடியவில்லை.

அவளை அப்படியே கைகளில் அள்ளிக்கொள்ள.., அவன் முத்தத்தில் கிறங்கிப் போயிருந்தவளுக்கு அப்பொழுதுதான் உணர்வே வந்தது.

"ஹையோ.., என்ன பண்றீங்க..? ட்ரெஸ் மாத்திட்டு வரேன்.." அவள் வெட்கமாய் சிணுங்க,

"ம்ச்.., அதுவேற எனக்கு எதுக்கு ஒரு எக்ஸ்ரா வேலை.., வேண்டாம்.." அவளை படுக்கையில் கிடத்தியவன், பார்வையால் அவளை மொய்த்தான்.

"டோர்.. திறந்திருக்கு.." அவள் பதறி தன்னை மறைக்க முயல,

"அப்படியா..?" அவளிடம் கேட்டவன், தன் பார்வையை விலக்கிக் கொள்ளவே இல்லை.

அவன் பார்வையில் தேகம் மொத்தமும் சூடேறி சிலிர்க்க, வெட்கம் மறைக்க அவள் ஆடை தேட, அதை அவன் தடுக்கவே.., வேகமாக அவன் விழிகளை கைகளால் மூடினாள்.

"நோ வே.." அவள் கரத்தை விலக்கியவன்.., "இப்போ.., இந்த நிமிஷம்.., எனக்கு நீ வேணும் ஹாசினி.." குரலில் போதையை கலக்க முடியுமா? அப்பட்டமாய் செய்தான்.

அவன் நெருங்கினாலே குழைபவள்.., வார்த்தைகளில் கேட்டால் மறுப்பாளா.? அவனை இழுத்து தன்மேல் போட்டு, தனக்கு ஆடையாக்கியவள், "இதுக்கு நான் பதில் சொல்லணுமா?" அவன் காதுக்குள் கிசுகிசுத்தாள்.

அவள் இதழ்களை மொத்தமாய் தனக்குள் சுருட்டிக்கொள்ள.., கரங்களோ அவளை அங்கம் அங்கமாய் வருடியது. தேகம் முழுவதும் கூசி சிலிர்க்க, அவன் இதழ்களுக்குள் கரையத் துடித்தாள்.

"ம்.., ஸ்.." மென்மையாக அவள் முனக, அவன் உணர்வுகள் வெடித்து சிதற துடித்தது.

"ஹாசினி.." உளறிக் கொட்டியவன், பல்தடம் பதிய அவளை கடிக்க, தன் உணர்வுகள் தாளாமல், அவன் முதுகில் அழுத்திக் கட்டிக் கொண்டாள்.

வெடிக்கத் துடித்த உணர்வுகளை அடக்கி.., அவளை சிலிர்க்கச் செய்யும் வேலையில் அவன் இறங்க, அவன் அறிமுகப்படுத்தும் உணர்வுகளின் கனம் தாளாமல் சிதறிக் கொண்டிருந்தாள் ஹாசினி.

"ராஜ்.., ஏண்டா படுத்தற..?" ஒரு கட்டத்தில் அவளால் அவன் அறிமுகப்படுத்தும் உணர்வுகளை தாங்க முடியாமல் போக, புலம்பினாள்.

"கிஸ் மீ ஹாசினி.." அவன் கேட்க, அவனை இழுத்து அணைத்தவள், தன் பூவிதழ்களை அவன் முரட்டு இதழ்களில் பூட்டினாள்.

அடுத்த நிமிடம்.., அவளுக்கு நெருக்கமாக மாறியவன் அதிரடியாக இயங்க, அவன் வேகத்தில் மிரண்டுதான் போனாள். "ராஜ்.., மெதுவா.., முடியலை.." அவள் போதைக்குரல் அவனை தூண்டவே செய்தது.

எத்தனை முறை அவளை நாடினான் என்ற கணக்குகள் அற்றுப்போக, மொத்தமாக துவண்டு போனாள் ஹாசினி.

"போதும்மா.." இறுதியில் அவனிடம் தயக்கமாய் கெஞ்ச, "எனக்கு போதாது.." அவன் சீண்ட, அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

அவள் நிலை உணர்ந்து, தன்னை கட்டுப்படுத்தியவன், அவளை விட்டு விலகி, தன்மேல் அவளை போட்டுக் கொண்டவன், அவள் முகம் நிமிர்த்தி, அவள் கண்களுக்குள் நோக்க, வெட்கமாய் இமை மூடிக் கொண்டாள்.

"ஹேய் பியூட்டி.., நான் 'அலை'யை பியூட்டின்னு சொன்னா உனக்கு கோபம் வருமா..?" கேட்டவன், வாயைக் குவித்து, வியர்வை துளிர்த்திருந்த அவள் நெற்றியில் ஊதினான்.

இமை மூடி அதை ரசித்தவள், "ஆமா.., அது என்னோட செல்ல பேர்.., நீங்க கூப்பிட்டாலே குழைந்து போகும் நேம்.., சோ.." இமைகளை இன்னும் அவள் திறக்கவே இல்லை.

சற்று முரட்டுத்தனமாய் அவள் இதழ் தீண்டி விலக்கியவன், "உனக்கு என்மேல் அவ்வளவு காதலா ஹாசினி.." அவன் கேட்க,

"ஏன் இருக்கக் கூடாதா..?" அவனிடமே திருப்பிக் கேட்டாள்.

"சரி.., அப்போ சொல்லு.., உனக்கு என்மேல் என்ன கோபம்..?" அவள் மூக்கை இதழ்களால் உரசினான்.

"அது.., சொல்லத் தெரியலை.., ஆனா.., முட்டாள்த்தனமான கோபம்னு மட்டும் புரியுது.., அதற்குமேல் அது வேண்டாமே.." அவனிடம் கெஞ்சினாள். பழைய நினைவுகளை துடைத்து போட ஏற்கனவே முடிவு செய்திருந்ததால் அவ்வாறு உரைத்தாள்.

"நான் சொல்லவா..?" கேட்டவன்.., அவள் சொன்னவற்றை அவன் யூகிப்பாக உரைத்து முடிக்க, விழி விரிய அதைக் கேட்டிருந்தாள்.

விநாயகத்தை அவள் தவறாக எண்ணிவிடக் கூடாது என்பதால், ராஜா, அவளிடம் அந்த வீடியோ பற்றி சொல்லவில்லை.

“நான் சொன்னது சரியா..?” அவளிடம் கேட்க, ‘ஆம்..’ என தலை அசைத்தாள். “இருந்தாலும் நான் அந்த தவறை செய்திருக்கக் கூடாது.., அந்த நேரம்.., என்னோட கட்டுப்பாட்டிலேயே நான் இல்லை ஹாசினி.., ரியலி..” அவன் மன்னிப்பை வேண்டும் முன்னர், அவன் இதழை கைகளால் மூடி இருந்தாள்.

“எனக்கு அதில் எந்த வருத்தமும் இல்லைன்னு சொல்ல மாட்டேன். ஆனா, உங்க மேலே கோபமெல்லாம் இல்லை. என்னைத் தேடி நீங்க வரலையேன்னு நினைத்து கோபப்பட்டேனே தவிர, வேறு எதற்காகவும் இல்லை.

“ஆனா, என் அடிப்படை கோபத்துக்கே ஆதாரம் இல்லை என தெரிய வந்தப்போ, என்னால் அதை தாங்கிக்க முடியலை. அதைவிட, நான் பேசாமல் உங்களை வதைத்து, மரணத்தின் விளிம்புக்கே அனுப்பியதை நினைக்கும்போது, என்னை என்னாலேயே மன்னிக்க முடியலை.

“அதே மாதிரி.., நீங்க என் மனசுக்குள் இருப்பதை சொல், என சொல்லும்போது, எதை என்று சொல்ல.., எனக்குதான் உங்க மேலே ஒரு சதவீதம் கூட கோபம் இல்லையே.., ஆனாலும் உங்களை அவ்வளவு வதைத்ததுக்கு காரணம், எனக்கு உங்களோட அன்பும், காதலும், நெருக்கமும் அப்போ தேவைப் பட்டது.

“ஆனா.., என்னைத் தேடி வராதவரிடம் நான் அதையெல்லாம் எதிர்பார்க்கிறேனே என்ற கோபம்.., அதுவும் என்மேலேயே இருந்த கோபம்தான் அப்படி வெளிப்பட்டது. நான் உங்க அன்புக்காக ஏங்கினேன்னு உங்ககிட்டே வெளிப்படையா சொல்ல எனக்கு தயக்கம், அந்த தயக்கம்தான் இத்தனை நான் என் வாயை கட்டிப் போட்டது.

“அன்னைக்கு சொன்னீங்களே.., எதுவா இருந்தாலும் வெளிப்படையா சொல்லுன்னு, அதான்.., அதான் இப்போ சொல்லிட்டேன். எனக்கு உங்க அன்பு முழுசா வேணும்.., நீங்க என்னோடவே இருக்கணும், நான் கோபமா இருந்தால் கூட, நீங்க என்னைத் தாங்கணும்..” உரைத்தவள்,

அவன்மேல் முழுதாக ஒட்டிக் கொள்ள, அவள் தலை கோதியவன், கைகளால் வளைத்துக் கொண்டான்.

"ஹாசினி.." மென்மையாக அவன் அழைக்க,

"நான் ரொம்ப பொசசிவ் ராஜ்.., அதை இது வரைக்கும் உங்ககிட்டே சொன்னதில்லை. ஆனா.., இப்போ சொல்றேன். நீங்க என்னைவிட அலையை ரொம்ப நேசிக்கறீங்க என்று சொன்னால் கூட என்னால் தாங்கிக்க முடியாது.

"அப்படி இருக்கறப்போ.., கார்த்திக்கு வேண்டி நீங்க ஓடிப் போனப்போ என்னால் அதை தாங்கிக்க முடியலை, அதான்.., அன்னைக்கு அப்படி பேசிட்டேன். இப்போ கூட இதை நான் உங்ககிட்டே சொல்லலைன்னா.., உங்க காதலுக்கு நான் தகுதியானவளா இருக்க முடியாது அதான் சொல்லிட்டேன்.." அவள் மனதுக்குள் இருப்பதை, அவளது வாய் வார்த்தையாய் கேட்க, திகைத்துப் போய்தான் இருந்தான்.

"என்னை சீண்ட என்று கூட, நீங்க அலையை பியூட்டி என சொல்வதை என்னால் தாங்கிக்க முடியாது.., என்னா.., நான் அவ்வளவு பொசசிவ்.., இந்த உலகத்திலேயே நான் உயிரா நேசிக்கும் உறவு நீங்க மட்டும்தான். உங்களுக்கு நானும் அப்படி இருக்கணும்னு ரொம்ப ஆசைப் படறேன்.." தன் மனதில் இருப்பதை கொட்ட, அவளால் அவன் முகம் காண முடியவில்லை.

ராஜாவுக்கு இப்பொழுது அவளது கோபத்துக்கான முழுக் காரணமும் புரிய, அதை எப்படி எடுத்துக்கொள்ள என்றே தெரியவில்லை. முயன்று அவள் முகத்தை நிமிர்த்தியவன், "ஹாசினி.., இந்த ராஜா ரெண்டு அம்மாவுக்கு சொந்தம், ரெண்டு அப்பாவுக்கு சொந்தம்.., கார்த்திகா கிட்டத்தட்ட என் தங்கை.., அலை.., அலை என் ரத்தம்.., என்னால் அவங்களை அவாய்ட் பண்ணவே முடியாது.., உனக்குப் புரியுதா..?" அவளுக்கு புரிய வைக்கும் கட்டாயத்தில் அவன் இருந்தான்.

"ம்ச்.., அதெல்லாம் அப்போ எனக்கு பெருசா இருந்ததால் தான் கோபப்பட்டேன். இப்போ இல்ல.., ஆனாலும் சில நேரம் பொசசிவ்

ஆயிடறேன்.." அவள் சிறு குறும்பாக உரைக்க, அப்பொழுதுதான் அவனால் சீராக மூச்சு விடவே முடிந்தது.

"என் வாழ்க்கையில் என்னைச் சுற்றி எத்தனை பேர் இருந்தாலும், என் ஹாசினி எனக்கு எப்பவும் ஸ்பெஷல் தான்.." அவன் விளக்க முயல,

"ராஜ்.., என் மனசுக்குள் இருந்ததை நான் சொல்லிட்டேன். உங்களைப் பற்றி எனக்கு முழுசா தெரியும். நீங்க விளக்கவே வேண்டாம். இப்போ, இந்த ராஜாவை சுஜா அக்காவோட பையனாவும் எனக்கு புடிச்சிருக்கு. இப்படி ஒரு அம்மா, பிள்ளை உறவை இந்த உலகத்தில் யாராலும் உருவாக்க முடியாது.

"ஆனா.., நீங்க ரெண்டு பேரும், நிஜ அம்மா மகனை விட ஒரு படி மேலே போயிட்டீங்க. உங்க ரெண்டு பேரையும் பாக்குறப்போ.., நான் எங்க அப்பாவை ரொம்ப மிஸ் பண்றேன்.." அவள் உரைக்க,

"நான் முதல் முதல்ல நம்ம கடையில் வைத்து உங்க அப்பாவோட பார்த்தப்போ நான் அப்படித்தான் நினைத்தேன்.." அவன் இடை புக,

"ராஜ், நீங்க என் அப்பாவை பாத்திருக்கீங்களா..?" பரபரப்பானாள்.

"உன் அப்பா, அம்மா, உன் குட்டி தங்கையோட சேர்த்துதான் உன்னைப் பார்த்தேன். பிஸினஸ் பண்ணணும்னு உன் அப்பாகிட்டே சொல்லிட்டு இருந்தப்போ, அந்த நிமிஷம்.., உன் ஆசை நிறைவேறும் என நினைத்தேன். அதுவும் நம்ம கடையை மனசுக்குள் வைத்து.." அவன் சொல்ல, ஆறு வருடங்களுக்கு முன்னர் அவளைப் பார்த்தேன்.., என அவன் உரைத்தது நினைவுக்கு வர, அவள் கண்களில் ஆனந்த அதிர்ச்சி.

"ராஜ், அப்போவேயா..?" அவள் ஆச்சரியப்பட,

"நிஜமாவே அந்த நேரம் என்னை நானே திட்டிட்டு விலகிட்டேன். ஆனா, உன்னோட புரொபைலை பாத்தப்போ.., பிசினஸ் செய்ய ஆசைப்பட்டவ, இங்கே எப்படி என நினைத்து பாத்துதான், உன் அப்பா இந்த உலகத்தில் இல்லை என்பதை தெரிஞ்சுகிட்டேன்.

"அந்த நிமிஷம், உனக்காக நான் இருக்கேன்னு சொல்லணும்னு தான் தோணிச்சு.." அவன் சொல்ல, அவன் இதழ்களில் அழுத்தமாக முத்தமிட, சில நிமிடங்கள் முத்த வேட்கையில் கடந்தது.

சில நொடிகள் கடந்து அவள் விலக, "ஏண்டா சொல்லல.." அவள் கேட்க,

"எங்கேடி சொல்ல விட்ட..? சொன்னப்போ மிரண்டு ஓடின.." அவன் சீண்ட, அவன் நெஞ்சில் போலியாக குத்தினாள்.

"குத்தாத.., வலிக்குது.." அவன் போலியாக அலற, அப்பொழுதுதான், அவ்வளவு நேரமாக தான் அவன்மேலே படுத்திருப்பதை உணர்ந்தவள், வேகமாக விலக முயல,

"என்ன ஆச்சு..?" அவன் அவளைத் தடுக்க,

"அதான் வலிக்குன்னு சொன்னீங்களே.., எவ்வளவு நேரம்தான் வெயிட்டை தாங்குவீங்க..?".

"இந்த வெயிட்டை நான் காலம் பூரா தாங்குவேன்.." அவன் உரைக்க, வெட்கமாய் சிணுங்கியவள், வாகாக ஒட்டிக் கொண்டாள்.

"இன்னும் உன் மனசுக்குள் ஏதாவது இருக்கா ஹாசினி.., இருந்தால் சொல்லிடு.." அவன் கேட்க,

"இல்ல ராஜ்.., என் மனசு இப்போ ரொம்ப தெளிவா இருக்கு. நான் இப்போ சொன்னது எல்லாம் கடந்த கால என் எண்ணம் மட்டுமே. இப்போ.., என் ராஜ் யார்.., அவரோட குடும்ப சூழல், அவரோட கடமை, அவரோட பொறுப்பு, எல்லாம் எனக்குத் தெரியும்.

"சோ.., இதை நினைச்சுட்டு நீங்க எதையும் மனசுக்குள் போட்டு குழப்பிக்க கூடாது. என் ராஜ் எப்பவும் இப்படியே இருக்கணும். அதே மாதிரி, நானும் இனிமேல் மனசுக்குள் எதையும் போட்டு குழப்பிக்க மாட்டேன்.., இதுவரை நான் செய்த எல்லாத்துக்கும்.., சாரி.., சாரி.., சாரி.." அவள் உணர்ந்து உரைக்க,

"நடந்து முடிந்ததைப் பற்றி இனிமேல் பேச வேண்டாம்.., நடக்கப் போவதைப் பற்றி மட்டும் பேசலாம்.." அவன் உரைக்க, சம்மதமாய் தலை

அசைத்தாள். இருவரின் மனமும் நிர்மலமாக, தெளிந்த நீரோடையாக மாற, பெரும் நிம்மதியை உணர்ந்தார்கள்.

## பகுதி – 27.

அவனது அடுத்த மூவி வேலைகள் துவங்க ஆறு மாதம் ஆகும் என்பதால்.., வீட்டில் அனைவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சி. ஹாசினியின் முதல் செமஸ்டர் தேர்வுக்காக அவள் வருகைப்பதிவு சரியாக இருக்க வேண்டும் என்பதால் அவள் கல்லூரிக்குச் செல்ல வேண்டிய நாளில், தலை சுற்றலில் அவள் மயங்கி விழவே, மொத்த குடும்பமும் பதறியது.

மருத்துவர் வீட்டுக்கு விரைய, அவள் கர்ப்பமாக இருப்பதாக உரைக்கவே, அனைவருக்கும் இரட்டிப்பு சந்தோசம்.

"இப்பவும் நான் அவசரப்பட்டுட்டேன் தானே.." சிறு குற்ற உணர்வில் அவன் கேட்க, "ம்ச்.., இதை நீங்க விடவே மாட்டீங்களா? எனக்கு எவ்வளவு சந்தோசம் தெரியுமா..? நம்ம வீட்டு பெரியவங்க முகத்திலும் சரி, எங்க அம்மா முகத்திலும் சரி இப்போதான் நான் நிம்மதியைப் பாக்கறேன்.

"கூடவே.., எனக்கு ஒரு குட்டி ராஜா வேணும்.." வெட்கமாய் அவன் தோள் சாய, சந்தோஷமாக அவளை அணைத்துக் கொண்டான். தொடர்ந்த நாட்கள் அவர்கள் வீட்டில் சந்தோசம் மட்டுமே நிறைந்திருந்தது.

வாரத்தில் ஐந்து நாட்கள் ஹாசினி விழுப்புரத்தில் இருந்தாலும், ராஜா நான்கு நாட்கள் அவளோடுதான் இருந்தான். அலை அந்த வீட்டின் முடிசூடா ராணியாகவே வலம் வந்தாள். வீட்டில் அனைவருக்கும் அவ்வளவு செல்லம் அவள்.

அதைவிட ராஜாவுக்கும் அவளுக்கும் இருக்கும் நெருக்கம் அபரிமிதமானதுதான். அவளுக்கு இப்பொழுது தாய்ப்பால் கொடுப்பதில்லை என்பதால், அலையை சுஜாவிடமே விட்டு விட்டார்கள். அலையைப் பிரிந்து பெரியவர்களால் இருக்க முடியவில்லை என்பதாலேயே அந்த முடிவு.

சுஜா மட்டுமா.., தாரிணிக்கும் குழந்தை இல்லாமல் முடியாது. தனாவையும் குணாவையும் கூட வசியம் செய்துவிட்டாள் குழந்தை. வீட்டின் முதல் வாரிசு என்பதால் அவளுக்கு கொடுக்கும் செல்லம்,

அவளை கொஞ்சம் பிடிவாதக்காரியாகவே மாற்றி விட்டது என்று சொல்லலாம்.

சுஜா அவளது பிடிவாதத்தை சற்று கண்டித்தாலும், தாரிணியும் மற்றவர்களும் அவள் என்ன செய்தாலும் கண்டு கொள்ளாததால் அவள் அதை பெரிதாக கண்டுகொள்ளவில்லை. அது சுஜாவுக்கு பெரும் கவலையை அளித்தது.

வீட்டுக்கு வரும் நாட்களில் நிஹா கண்டிப்பாள் என்றாலும், தாயை அவள் ஒரு பொருட்டாக கொள்ளவில்லை. அனைவரையும் ஒருமையில் அழைப்பது, இருந்த இடத்தில் இருந்து வேலை வாங்குவது என வயதுக்கு மீறி அவள் செயல்பட, அதை அவர்கள் வீட்டுக்கு வருகையில் பார்க்கும் துளசிக்கு பெரும் கவலையை அளித்தது.

அன்றும் அப்படித்தான்.., நிஹா வீக் எண்டு வீட்டுக்கு வந்திருக்க, ராஜாவோ மனைவியை தாங்குவதையே வேலையாகக் கொண்டு அவள் பின்னால் சுற்றிக் கொண்டிருந்தான். அதுவும் உருவாகியிருப்பது இரட்டை குழந்தைகள் எனத் தெரிந்த பிறகு, கவனம், கவனிப்பு, அன்பு இன்னும் அதிகரித்தது.

அவள், அவன்மேல் கோபமாக இருந்தபொழுதே அவளுக்காக அனைத்தையும் செய்தவன், இப்பொழுது அவன்மேல் உயிராக இருக்கையில் விட்டுவிடுவானா என்ன?

அவளது மசக்கை, வாந்தி.., தலைசுற்றல்.., என அனைத்திலும் அவளுக்கு துணை இருந்தான். அவளது இந்த உபாதைகளால் குழந்தை அலையை அவளால் சற்று கவனிக்க முடியவில்லை.

மகள் வீட்டுக்கு வந்திருக்கிறாள் என்பதை அறிந்த துளசி அவளைக் காண வர, "நீ ஏன் வந்த..? போ.." அலை அவரை வாசலில் கண்டே விரட்ட, சுஜாவால் அதை பார்த்துக் கொண்டு இருக்க முடியவில்லை.

தாரிணிக்குமே சில நேரங்களில் அலையின் செய்கை சிறு வருத்தம் அளித்தாலும், கண்டிக்கும் அளவுக்கு அவருக்கு தைரியம் வரவில்லை என்றே சொல்லலாம். எங்கே அவளை கண்டித்தால் ராஜாவின் கோபத்துக்கு மீண்டும் ஆளாக வேண்டி இருக்குமோ என பயந்தார்.

சுஜாவுக்கு அப்படியொன்றும் பயம் இல்லையே.., கூடவே அவளை வளர்ப்பது அவரது பொறுப்பாகையால், “அலை.., பாட்டியை அப்படி சொல்லக் கூடாது..” சற்று குரல் இறுகவே உரைத்தார்.

அலையோ.., அதை கண்டுகொள்ளாமல்.., “நான் அப்படித்தான் சொல்வேன்” எதிர்த்து உரைக்க, அனைவரின் முகங்களிலும் ஒரு திடுக்கிடல்.

துளசியோ.., ‘குழந்தை தானே, விடுங்க..’ எனச் சொல்லத்தான் நினைத்தார். ஆனால், அவள் ஏதோ ஒரு முறை சொல்லியிருந்தால் பரவாயில்லை, எப்பொழுதும் அனைவரையும் எடுத்தெறிந்து பேசுவதை அவரால் அனுமதிக்க முடியவில்லை.

“சம்பந்தி.., நீங்க வாங்க..” அவரை அழைத்த சுஜா, “அலை.., உள்ளே போ..” குரலை மாற்றாமலே உரைத்தார்.

“நீ போ..” சுஜாவைப் பார்த்து தலை அசைத்தவள், “நீ வராதே.., உங்க வீட்டுக்கு போ..” துளசியை பிடித்து வெளியே தள்ள முயல, சுஜாவால் அதை தாங்க முடியவில்லை.

துளசியின் முகத்தில் கோபத்தை பார்த்திருந்தால் எப்படி உணர்ந்திருப்பாரோ, ஆனால், அவரது முகத்தில் இருந்த அதீத கவலை, பயம்.., அவரது மனதை தெளிவாக படிக்க முடிந்தது.

சுஜா, தாரிணியைப் பார்க்க, வேகமாக அவள் அருகில் வந்தவர் அவளை தூக்கிக் கொள்ள முயல, தன் கையில் வைத்திருந்த பொம்மையை வைத்து அவரை அடித்தே விட்டாள்.

அவ்வளவுதான்.., துளசிக்கு வந்த கோபத்தில் அவளை நாலு வைக்க முயல, அதற்கு முன்பாகவே அவளை நெருங்கிய சுஜா, அவள் காலில் ஒரு அடி போட்டவர், அவளை அழுத்தமாக பற்றி, “சாரி சொல்லு.., சின்ன பாட்டியை அடிப்பியா நீ..?” நிச்சயம் இப்பொழுது அவர் குரலில் முழு கோபம் இருந்தது.

அங்கே இருந்த அனைவரையும் அவள் பார்க்க, துளசியும், தாரிணியும் அவள் உதவிக்கு வரும் விதமே காணோம். இதுவரை சுஜாவின் கோப

முகத்தை கூட பார்த்திராதவள், குரல் உயர்த்தி அவளிடம் யாரும் இதுவரை பேசியதே இல்லை, அப்படி இருக்கையில், அவர் மெதுவாக அடித்ததை அலையால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

முதல் முறையாக மற்றவர் முன்னால் அவள் கண்டிக்கப் படுகிறாள்.., அதுவே பெரும் விம்மலை வெளிப்படுத்த, குரல் எடுத்து அழவே துவங்கி விட்டாள்.

"அலை.., முதல்ல சாரி சொல்லு.., இல்லன்னா இனிமேல் பாட்டி உன்கிட்டே பேச மாட்டேன்.." இப்பொழுது இதை நீ செய்தே ஆக வேண்டும்.., என கட்டளையிட, முதல் முறையாக பணிய முயன்றாள். ஆனாலும் இவ்வளவுநாள் பழகிவிட்ட பிடிவாதத்தை அவளால் விட முடியவில்லை.

இதுவரைக்கும் ஒருவர் கண்டித்தால் மற்றவர் அவளை கொஞ்ச முன்வருவர்.., இப்பொழுது அனைவருமே அமைதியாக இருக்கவே, தான் செய்தது தவறோ என சிந்திக்க முயன்றாள்.

ஆனாலும், பிடிவாதம் தலை தூக்க.., "போ.., நான் அப்பாகிட்டே போறேன்.." அவர் கரத்தை தள்ளி விட்டவள், வீட்டுக்குள் ஓடியே போனாள்.

அவள் செல்லவே, யாருக்கு என்ன பேசுவது எனத் தெரியவில்லை. துளசி கவலையாக அவரை ஏறிட, சுஜா அவரை சங்கடமாக ஏறிட்டார்.

"பொம்பளைப்புள்ளை.., இவ்வளவு பிடிவாதம்.." எதையோ சொல்லத் துவங்கிய துளசி, தான் பேசுவது அவர்களுக்கு பிடிக்காதோ என நினைத்து அப்படியே வார்த்தைகளை நிறுத்தி விட்டார்.

அவர்களுக்குத் தெரியாததா என்ன? ராஜாவையே அவர்கள் தானே வளர்த்தார்கள்.., ஆனாலும்.., பேரப்பிள்ளை என்று வருகையில் செல்லம் கொடுத்து கெடுத்து விடுவார்களோ என்ற பயம்தான் அதிகம் இருந்தது.

அதை மறைத்தவர், அங்கே நிலவிய அமைதி பிடிக்காமல், "நிஹாவை பாக்க வந்தேன்.." உரைத்தவர் வீட்டுக்குள் வர, அனைவரும் வீட்டுக்குள் வந்தார்கள்.

அலையோ.., அழுதவாறே மாடிப் படிகளில் ஏறிச் செல்வது தெரிந்தது.

துளசி அவளை ஒரு பார்வை பார்க்க, "சம்பந்தியம்மா.., ஒரே குழந்தைன்னு கொஞ்சம் செல்லம் அதிகமாயிடுச்சு.., நீங்க கவலைப் படும் அளவுக்கு விட்டுட மாட்டோம்.." அவர் கரத்தை பற்றிக் கொண்டார் சுஜா.

தாரிணி அவருக்கு காபி எடுத்துவரச் சொல்ல, லஷ்மி கொண்டுவந்து கொடுக்கவே அதைப் பெற்றுக் கொண்டவர், "இப்போ என் கவலை அது இல்லை. பொண்ணு அழுதுட்டு போறாளே.., அவ அம்மா என்ன சொல்வாளோன்னு யோசிக்கறேன்.." எங்கே மகள் எதையும் முன்புபோல் செய்து வைக்கக் கூடாதே என பயந்தார்.

"விடுங்க பாத்துக்கலாம்.." துளசியிடம் தைரியமாகச் சொல்லிவிட்டாலும், அவருக்குள்ளும் சிறு கவலை ஓடி மறைந்தது.

'ராஜாவுக்கு தாயாக நான் வந்தேன்.., ஆனால் அலை.., அவளது தாய் நிஹா ஆயிற்றே.., நான் கண்டித்திருக்க கூடாதோ..?' துளசியிடம் பேசினாலும் யோசனை உள்ளுக்குள் ஓடியது.

அதை மறைத்தவர், "வினோ எங்கே ஆளையே காணோம்.., காலேஜ் சேர்ந்த உடனே பெரிய மனுஷி ஆயிட்டாளோ..?" அவரிடம் கேட்க,

"அதெல்லாம் ஒண்ணுமில்லை.., இப்போ கூட வரேன்னுதான் சொன்னா.., நான்தான் கடைக்கு போய்ட்டு அப்படியே போகணும்.., நீ வர வேண்டாம்னு சொல்லிட்டு வந்தேன்.." அவர்கள் உரையாடிக் கொண்டிருக்க, தாரிணியும் அவர்களோடு இணைந்து கொண்டார்.

"கார்த்தி வந்தாளா..?" தாரிணியிடம் கேட்க,

"எங்கே.., சீனிதான் சேலத்துக்கு டிரான்ஸ்ஃபேர் வாங்கிட்டு போயிட்டானே.., அவளுக்கு விசேஷம்னா கூட்டி வந்து விடறேன்னு சொல்லிட்டு போனான்.." அனைவரும் உரையாடினாலும், அவர்கள் கவனம் முழுவதும் மாடியிலேயே இருந்தது.

தங்கள் அறைக்கு அழுதுகொண்டு வந்த மகளைப் பார்த்து ராஜா துடித்துப் போனான் என்பதுதான் உண்மை.

"அம்முகுட்டி.., ஏண்டா.., என்ன ஆச்சு..? பூச்சி கடிச்சுடுச்சா..?" அவளை கைகளில் அள்ளிக் கொண்டவன், அவளை ஆராய்ந்தான்.

"இல்ல.., சுஜா பாட்டி அடிச்சுட்டாங்க.." அவள் தெளிவாக உரைக்க, ராஜா திடுக்கிட்டுத்தான் போனான்.

"என்ன.., அடிச்சுட்டாங்களா..? எதுக்கு..?" பதைத்துபோய் வினவியவன், மனைவியை ஏறிட்டான்.

தன் தாய் மகளை அடித்திருக்கிறார் என்றால் நிச்சயம் அதில் நியாயமான காரணம் இருக்கும் என்பது அவனுக்குத் தெரியும். ஆனால், ஹாசினி என்ன நினைத்துக் கொள்வாளோ என்பதே அவனது பெரும் கவலையாக இருந்தது.

அதை அவனது பார்வை வெளிப்படுத்த அதை கண்டு கொள்ளாத நிஹா, "அலை, நீ என்ன செய்த..?" அவர்கள் அருகில் வர,

"துளசி பாட்டிய போ சொன்னேன்.., அடிச்சுட்டாங்க.." அவளுக்கு பொய் சொல்லத் தெரியாததால் உண்மையை உரைக்க, இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"உன்னை நானே உதைக்கணும்னு இருந்தேன்.., பெரியவங்களை நீ வா போ ன்னு பேசாதேன்னு அன்னைக்கே சொன்னேனா இல்லையா? வீட்டுக்கு வந்தவங்களை வான்னு சொல்லாமல் போ ன்னு சொன்னியா நீ.." நிஹாவும் கண்டிக்க, அவளது அழுகை அதிகரித்தது.

ராஜாவுக்குதான் என்ன சொல்வது என்றே தெரியவில்லை. ஒரு பக்கம் தான் உயிரையே வைத்திருக்கும் மகள், மறு பக்கம் பெரியவர்கள்.., அவன் சற்று திணற, "அலை.., முதல்ல முகம் கழுவு போ.." நிஹா, மகளை அவன் மடியில் இருந்து இறக்கிவிட, தந்தையை பரிதாபமாக ஏறிட்டாள்.

"அம்மா சொல்றாங்கல்ல போ.." அவனும் சொல்லவே, சென்றாள்.

அவள் செல்லவே.., "ராஜ், சொல்றேன்னு தப்பா நினைக்காதீங்க. அலையை நாம வளர்க்கும் விதம் சரியில்லை. அவ பெரியவங்களை மதிக்கவே மாட்டேங்கறா. லஷ்மியை கூட வேலை வாங்கறா.., அவங்க வயசுக்கு மரியாதை கொடுக்கணுமா இல்லையா..,

“நாங்க சொன்னா கேக்க மாட்டா.., நீங்கதான் அவளோட ஹீரோ.., நீங்க சொன்னா கண்டிப்பா கேப்பா.., இதை இன்னைக்கே சரி பண்ணுங்க. இனிமேல் அவளுக்கு அவசியத்துக்கு செல்லம் கொடுத்தால் போதும்னு சொல்லிடுங்க.., அவங்க கண்டிச்சு வளக்கட்டும்.

“இல்லையா.., நான் அவளை விழுப்புரம் கூட்டி போய்டறேன்.., அவளை எப்படி சரி பண்ணனும்னு எனக்குத் தெரியும்..” மனைவியின் பேச்சில் இருந்த நியாயம் புரிய, அமைதியாக கேட்டுக் கொண்டான்.

குழந்தை வரவே.., அவளை தூக்கிக் கொண்டவன், சற்று நேரம் அவளிடம் பேசியவன், மனைவியை அழைத்துக் கொண்டு கீழே வந்தான்.., அனைவரின் பார்வையும் அவர்கள் பக்கம் திரும்ப, “அலை.., பாட்டி கிட்டே சாரி சொல்லு..” சற்று கோபமாகவே உரைக்க, தகப்பனை ஒரு பார்வை பார்த்தவள்,

சுஜா, துளசி, தாரிணி அனைவரிடமும் மன்னிப்பை வேண்ட, ‘அப்படி கோபமாக போன குழந்தையா இது..’ என அனைவருமே ஆச்சரியப் பட்டார்கள்.

கூடவே.., “லஷ்மி.., இங்கே வாங்க..” அவரை அழைத்தவன், அலையை வெளியே விளையாட வைக்கச் சொல்லி அனுப்ப, அவர்கள் செல்லவே, “ம்மா.., பேத்தின்னு சொன்ன உடனே ரொம்ப செல்லம் கொடுக்கறீங்களாம், ஹாசினி ஒரே கம்பிளெயின்ட்.., அவ குழந்தை ராஜா மாதிரி வளர்ந்தால் மட்டும் போதாதாம்.., ராஜாவை மாதிரியே.., அதாவது என்னை மாதிரி வளக்கணுமாம்..” அவன் சொல்ல, அவன் முதுகிலேயே ஒரு அடி போட்டாள் ஹாசினி.

அப்பொழுதுதான் மற்றவர் முகத்தில் நிம்மதி. அத்தோடு, “அம்மா.., அவளுக்கு மத்தவங்களோட அருமை தெரியணும்.., அப்படி தெரிந்தால்தான் கடை பொறுப்பை எடுக்கும்போது அவங்க மனநிலையை புரிஞ்சுக்க முடியும்.

“இப்போவே அவளுக்கு கத்துக் கொடுக்க வேண்டியதை சரியா பண்ணிடுங்க. நாங்க என்ன நினைப்போம்னு தயங்காதீங்க..” அவன் தாயின் அருகில் அமர, அவன் தலையை பாசமாய் வருடினார்.

'என் பிள்ளையை எனக்குத் தெரியாதா..' என்பதுபோல் இருந்தது அவரது செய்கை. அதன் பிறகு அலை விஷயத்தில் அனைவரும் சற்று கவனமாகவே நடந்து கொண்டார்கள். நாட்கள் மாதங்களைக் கடக்க, நிஹாசினியின் நான்கு மாத கல்லூரி படிப்பும் முடிந்து வீட்டுக்கே வந்துவிட்டாள்.

கணவனும் மனைவியும் தங்கள் கடை வேலைகளை சேர்ந்தே கவனித்துக் கொள்ள, தொடர்ந்த இரவுகள் இருவரின் நெருக்கம் அதிகரித்தது என்றே சொல்லலாம். முதலில் சில நாட்கள், வயிற்றில் குழந்தையோடு அவனோடு 'கூட' பயப்பட, அடுத்த மாதம் மருத்துவரிடம் அதைப்பற்றி கேட்டுவிட்டாள்.

"நிஹா.., அதற்கும் உங்க தாம்பத்தியத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. உங்களுக்கு கஷ்டம் இல்லாத வரைக்கும் தாராளமா நீங்க சேரலாம்.." அவர் சொல்லிவிட, ராஜாவின் நெருக்கத்தை அவள் அதன் பிறகு மறுத்ததே இல்லை.

ராஜா நிஹாவை உள்ளங்கையில் வைத்து தாங்கினான் என்று சொன்னால் மிகையில்லை. அதைவிட, அவனது அடுத்த பட வேலைகள் துவங்கும் நாள் நெருங்கவே, நிஹாவை விட்டுப் பிரிந்து செல்ல மிகவும் வருத்தப் பட்டான்.

இன்னும் ஒரு மாதம் மட்டுமே மீதமிருக்க, நிஹாவுக்கும் அவனை விட்டு பிரிவது மிகவும் கடினமாகத்தான் இருந்தது. ஆனாலும், அவனது லட்சியத்தின் அடுத்த படியை அவன் நெருங்குகையில், அதற்கு தடையாக இருக்க அவள் விரும்பவில்லை.

அன்று காலையில் அவன் சாப்பிட்டுக் கொண்டிருக்க, அங்கே வந்தாள் வினோ.., "மாமா.., என்னை காலேஜ்ல டிராப் பண்ணுவீங்களா மாட்டீங்களா?" கோபமாக குரல் கொடுத்தவள், அவன் அருகில் அமர,

"ஏண்டி.., வந்ததும் வராததுமா சத்தம் போடுற.., அதான் உனக்கு காலேஜ் பஸ் அரேஞ் பண்ணி கொடுத்திருக்காரே.., போகாமல் இங்கே வந்து உயிரை வாங்குற..?" நிஹாதான் குரல் கொடுத்தவாறே வந்தாள்.

"அக்கா.., நான் உன் பேச்சுக்கே வரலை.., நான் மாமா கிட்டேயே பேசிக்கறேன்.." சாப்பிட்டுக் கொண்டிருந்த அவனது வலக் கையை பிடித்துக் கொண்டாள்.

அவள் செய்கையைப் பார்த்த சுஜாவும், தாரிணியும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்துக் கொண்டார்கள்.

"அக்கா.., நம்ம ராஜாவுக்கு எங்கேயோ மச்சமிருக்கு.., அப்போ கார்த்தி, இப்போ வினோ.." சுஜாவின் காதில் கிசுகிசுக்க, அவர்களது பேச்சை கேட்ட நிஹறா, தனக்குள் பொங்கிய சிரிப்பை மறைத்தவாறே அவனை முறைத்தாள்.

அவள் அவ்வாறு பார்க்கவே.., நிஜமாகவே மிரண்டுதான் போனான். 'இப்போதான் கொஞ்சம் சந்தோஷமா இருக்கேன்.., அது பொறுக்கலையா இவளுக்கு..' எண்ணியவன்,

"ஏய் வாலு.., முதல்ல எழுந்து போ.., நீ காலேஜ் பஸ்ஸிலேயே போ.." அவளை விரட்டினான்.

"மாட்டேன்.., இன்னைக்கு நீங்கதான் என்னை கூட்டி போறீங்க. என் ப்ரண்ட்ஸ் கிட்டே எல்லாம் சொல்லிட்டேன்.., இன்னைக்கு எங்க ராஜா மாமாவை கூட்டி வரேன்னு.., நீங்களும் அங்கே வந்தால், எல்லாரையும் சைட் அடிப்பீங்க தானே.." அவள் முகம் சுருக்கி கெஞ்ச,

அங்கே வந்த குணா.., "அம்மாடி.., நான் வேண்ணா கூட்டி போகவா..?" சாப்பாட்டு மேஜை அருகில் இருந்த இருக்கையில் அமர்ந்தார்.

"தாரிணி அக்கா கிட்டே கேட்டு சொல்றேன்.., அக்கா.., சின்ன மாமா என்னவோ கேக்கறாங்க.." அவள் உரைக்க, அவள் காதை வந்து திருகியவர்,

"அடிக்கடி இங்கே வந்து கலகம் பண்ணாமல் இருக்க மாட்டியா..?" அவர் கேட்க, போலியாக அலறினார்.

"மாமா காப்பாத்துங்க.." அவள் அலற, அங்கே வந்தார் தனா.

"சின்ன புள்ளையை ஏன் அழ வச்சுட்டு இருக்கீங்க..?" அவளது அலறலை உண்மை என்று எண்ணி அவர் கேட்க,

"பெரிய மாமா என்னை காப்பாத்துங்க. ராஜா மாமாவை இன்னைக்கு ஒரு நாள் காலேஜ் கூட்டி போகச் சொன்னால்.., ரொம்ப பிகு பண்ணிக்கறாங்க. அதுக்கு உங்க வீட்டம்மா எல்லாம் சப்போட்.., நீங்களே கேளுங்க.." அவர் தோளில் சாய்ந்து கொண்டாள்.

வினோவும் அவர்கள் வீட்டில் இன்னொரு மகளே.., என்ன.., அடிக்கடி வந்து நிஹாவை கொஞ்சம் வெறுப்பேற்றிவிட்டு செல்வாள். அவளது குறும்பை நிஹாவும் ரசித்தாலும், வெளியே காட்டிக் கொள்ள மாட்டாள்.

அந்த வீட்டின் உயிரோட்டத்தை, கலகலப்பை மீண்டும் கொண்டுவர அவள் முயன்று கொண்டிருந்தாளே. அப்படியிருக்கையில், வினோவின் குறும்பை, கணவனின் தவிப்பை, பெரியவர்களின் கேலியை.., அதை உருவாக்கும் தங்கையை அவள் எப்படி கண்டிப்பதாம்?

அதைவிட, அந்த வீட்டில் இன்னொரு மகளாக உலாவும் தங்கையை இப்பொழுது தனக்கும் மகளாகவே பார்க்கத் துவங்கி விட்டாள். அவள் விரும்பிய படிப்பு, அவள் விரும்பிய கல்லூரி அனைத்தையும் ராஜாவிடம் அவள் சொல்ல, மறுக்காமல் அவனை வைத்து நிறைவேற்றிக் கொடுத்தவள் அவள் தானே.

அதைவிட, அவளுக்குத்தான் ஏற்கனவே தெரியுமே.., ராஜாவை அவள் தன் தகப்பன் ஸ்தானத்தில் வைத்து பார்க்கிறாள் என்று. ஆனாலும்.., அதை வெளியே காட்டிக் கொள்ளாமல், அவளது விளையாட்டையும், குறும்பையும், ராஜாவின் திணறலையும் ரசிக்கவே அவ்வாறு செய்வாள்.

இன்றைக்கும் அதே விளையாட்டு நடக்க, அந்த வீட்டில் நிலவும் உயிரோட்டமான நிலையை ரசித்தவாறே நின்றாலும், வெளியே கோபம்போல் ராஜாவை முறைத்துக் கொண்டிருந்தாள்.

"ராஜா.., அதான் வினோ ஆசைப்படுறாளே.., கூட்டி போ.., நீ காருக்கு போ, அவன் வருவான்.." தனா அவளை அனுப்பிவிட,

ராஜா நிஜமாகவே பரிதாபமாக நிஹாவை ஏறிட்டான். அவனும் எத்தனையோ முறை, வினோ அவனிடம் விளையாடுவதை உரைத்து விட்டான். ஆனாலும், வினோ வரும் நாளெல்லாம் தன்னை கோபமாக பார்க்கும் நிஹாவைக் கண்டு அவன் திணறித்தான் போவான்.

“யாஹூ..., இப்போ என்ன செய்வீங்க..., இப்போ என்ன செய்வீங்க..” கேட்ட வினோ, ஒரு குத்தாட்டம் போட்டுவிட்டு, தன் அக்காவைப் பார்த்து, நாக்கை துருத்திவிட்டு செல்ல,

“போடி..” அவளும் போலியாகவே அவளை விரட்டினாள்.

அதை உணர்ந்தாலும், அவளைக் கண்டுகொள்ளாமல்..., அவள் அருகில் வந்தவள், “அக்கா..., பையன் உதைக்கறானா..?” கேட்டு அவள் வயிற்றில் கை வைக்க, தன் மேடிட்ட வயிற்றை பார்த்து, தங்கையையும் ஒரு பார்வை பார்த்தவள்,

“எல்லாம் உதைக்கறான்..., நீ முதல்ல உதை வாங்காம போ..” அவளை அனுப்பவே, சாப்பாட்டை முடித்த ராஜா கை கழுவ எழுந்தவன், நிஹாவை வா என்பதுபோல் அழைத்துவிட்டுச் செல்ல, அவன் பின்னால் சென்றாள்.

கை கழுவும் இடம் சென்றவன்..., கை கழுவி விட்டு, தன் அருகில் நின்றவளிடம், “ஹாசினி..., அவ சும்மா விளையாடறா..., ப்ரண்ட்ஸ் கிட்டே கெத்து காமிக்கணும்னு இப்படி பண்றா..., நீ நிஜம்னு நினைக்காதே..” அவன் விளக்கம் கொடுக்க, அவள் முகத்தில் கீற்றாக ஒரு புன்னகை.

கூடவே..., “நீங்க அந்த அளவுக்கெல்லாம் ஒர்த்தே கிடையாதுன்னு எனக்குத் தெரியும்..” அவள் உரைக்க,

“என்ன சொன்ன..?” அவன் திகைக்க,

“சைட் அடிக்கிற அளவுக்கு சொன்னேன்..” அவள் இமை சிமிட்ட, அவளை அருகே இழுத்தவன், அவள் இதழ்களுக்கு தக்க தண்டனை வழங்க, வேகமாக அவனை விலக்கியவள்,

“எல்லோரும் இருக்காங்க..., இங்கே வச்சு..., உங்கள..., முதல்ல போய் அவளை டிராப் பண்ணிட்டு வாங்க..., ரொம்ப நாளா ஆசைப்படறா..” அவள் உரைக்கவே, ஆச்சரியமாக அவளை ஏறிட்டான்.

அவன் பார்வை புரியவே.., "எல்லாம் எனக்குத் தெரியும்.., அந்த லூசு என்னை வெறுப்பேத்துறாளாமா? அவளுக்கு நிஜமா நீங்க யார்ன்னு எனக்குத் தெரியும்.., அவ விளையாட்டை கெடுக்க மனசில்லை அதான்.." பொங்கிய சிரிப்பை அவள் அடக்கிக் கொள்ள,

"அடிப்பாவி.., அப்போ இத்தனை நாள் என்னை வேணும்னுதான் தவிக்க விட்டியா..?" அவன் போலியாக முறைக்க,

"என் ராஜ் அப்படி தவிக்கிற அன்னைக்கெல்லாம் என்னை ரொம்ப ஸ்பெஷலா கவனிப்பார்.." அவன் காதுக்குள் வெட்கம் கலந்து அவள் மெதுவாக முனக, அவனுக்குள் பெரும் பிரவாகம்.

அவள் சொல்வது சரிதான்.., வினோ வந்து செல்லும் நாளெல்லாம்.., நிஹா கோபமாக இருப்பாளோ என எண்ணி, அவளை சமாதானம் செய்ய, அவள்மேல் தனக்கு எவ்வளவு காதல் என நிரூபிக்க கொஞ்சி, கெஞ்சி, கூடி, கழித்து அவளை முத்த மழையில் அர்ச்சிப்பான்.

கூடவே.., படுக்கையில் அவளை விட்டு விலகவே மாட்டான்.., அதைத்தான் சொல்கிறாள் எனப் புரிய, ஒரு ஆனந்த அதிர்ச்சியும், சிறு கோபமும் எட்டிப் பார்த்தது.

"உன்னை கொஞ்சணும்ன்னா நேரடியா சொல்ல வேண்டியது தானே.., அதுக்காக இப்படியா..?" அவளை இடையோடு வளைத்து அவன் குறைபட,

"ம்ச்.., அந்த கிக் இதில் வராதே.." அவள் உரைக்க, அவள் மூக்கோடு மூக்கை உரசியவன், தன் மனைவியின் குறும்பை ரசித்தான் என்று சொன்னால் மிகையில்லை.

"இப்போ மட்டும் எதுக்கு சொன்னியாம்..?" கேட்டவன், அருகில் இருந்த அறைக்குள் அவளை இழுத்துக் கொண்டான்.

"ம்.., ஊருக்கு கிளம்பப் போறப்போ உங்களை அப்படியே அனுப்ப மனசில்லை அதான்.." உரைத்தவள், அப்பொழுதுதான் பேசியவாறே தன்னை அறைக்குள் இழுத்துக் கொண்டான் என்பதை உணர்ந்தவள்,

"ராஜ்.., ஹையோ.., ஆண்டவா.., எல்லோரும் என்ன நினைப்பாங்க.., என்னை விடுங்க.." அவனிடமிருந்து விடுபட முயல, அவனோ, அழுத்தமாக அவள் இதழ்களை பூட்டிக் கொண்டான்.

சிறு முத்த யுத்தம்.., அவனுக்குக் குறையாமல் அவளும் போட்டி போட, முடிக்க முடியாமல் இருவரும் சற்று திணறித்தான் போனார்கள். ஒரு கட்டத்தில் அவள்தான் பின்வாங்க வேண்டி இருந்தது. வேகமாக அவனை விலக்கி, "வர வர ரொம்ப படுத்தறீங்க.., வெளியே எல்லோரும் இருக்காங்க என்ன நினைப்பாங்க..?" போலியாக கடிந்துகொண்டாள்.

"யார் என்ன கேட்டாலும் என்னைச் சொல்லிடு.." அவன் பெரும் குறும்பில் உரைக்க, தன் தலையிலேயே வலிக்காமல் மெதுவாக தட்டிக் கொண்டாள்.

"ஹையோ.., நீங்களும் உங்க ஐடியாவும்.." அவள் சலித்துக் கொள்ள,

"ஈவினிங் உன்னை கவனிக்கறேன்.." உரைத்தவன், நழுவி அறையை விட்டு வெளியேறிச் சென்றுவிட்டான்.

அவன் சென்றுவிட்டான் அவளுக்குத்தான் நாணமாக போய்விட்டது.., வெளியே பெரியவர்கள் இருப்பார்களே என சற்று திணறி வெளியே வர, சுஜா மேஜையை ஒதுங்க வைத்துக் கொண்டிருக்க, தாரிணியோ, அவளை குறும்பாக பார்த்தவர்,

"அக்கா.., நீங்க ஏதாச்சும் பாத்தீங்க..?" பார்வை அவளிடமும், கேள்வி சுஜாவிடமும் இருக்க, அவள் முதுகில் ஒரு அடி போட்ட சுஜா,

"நான் எதையும் பாக்கலை.., நீயும் எதையும் பாக்கலை.., எழுந்திரி முதல்ல.." உரைத்தவரின் முகத்திலும் பெரும் புன்னகை இருக்க, தன் மேடிட்ட வயிற்றையும் பொருட்படுத்தாமல், ஓடி வந்து சுஜாவின் தோளில் முகம் புதைத்துக் கொண்டாள்.

"அக்கா.." 'நீங்களுமா..' என்னும் விதமாக அவள் சிணுங்க,

"நிஹா.., அவன் போய்ட்டான்.., இப்போ சிணுங்கி ஒரு பிரயோஜனமும் இல்லை.." தாரிணி அவளை கேலி செய்ய, "தாரிணி.." அவளை அடக்கினார் சுஜா.

இப்பொழுது வாய் விட்டே சிரித்தவள், "அக்கா.., இதுங்களுக்கு முதல்ல சுத்தி போடுங்க.., என் கண்ணே பட்டுடும் போல.., அப்போ அப்படி முட்டிகிட்டு இருந்தவங்களா இவங்கன்னு நம்மளையே யோசிக்க வைக்கிறாங்க.." இப்பொழுது அவர் குரலில் இருந்தது ஒரு தாயின் பரிவு மட்டுமே.

அப்பொழுது அங்கே அலை வர, "லஷ்மி பாட்டி.., எனக்கு பூஸ்ட் வேணும்.., தரீங்களா..?" உறக்கம் கலைந்த முகத்தோடு அங்கே வந்தவள், டைனிங் டேபிள் மேல் ஏறி அமர்ந்தாள்.

"இதோ வரேன் கண்ணு.." தன் வயதையும் மீறி ஓடி வந்தார் லஷ்மி.

அங்கே அனைவரையும் பார்த்தவள், "குட் மார்னிங் பாட்டீஸ்.., அம்மா.." கையில் சிப்பரை வாங்கியவள் உரைக்க, சில நாட்களுக்குள் தன் மகளை இப்படி மாற்றிய சுஜாவை பிரமிப்பாகத்தான் பார்த்திருந்தாள் நிஹா.

அந்த ஒரு மாதம் எப்படி ஓடியது என்றே தெரியாமல் போக, ராஜா வெளிநாடு செல்லும் நாளும் வந்தது. நிஹா தன் அழுகையை கட்டுப்படுத்திக் கொண்டு நிற்க, அலையோ முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு சுஜாவின் தோளில் இருந்தாள்.

"ஹாசினி.., உனக்கு தேவையான அப்போ நான் உன் முன்னாடி இருப்பேன். தினமும் கால் பண்ணுவேன்.., உடம்பை பாத்துக்கோ.., ஸ்கைப் வா.., பேசலாம்.." ஆயிரம் சமாதானம் சொல்லி அவன் கிளம்ப, அதன் பிறகு, அவளுக்கு நாட்கள் நகர மறுத்தன.

ஆனால் அனைத்தையும் சம்மாளிக்க பழகிக் கொண்டார்கள். ராஜா தன் கெரியரில் உச்சம் நோக்கி பயணிக்க, நிஹா அவர்களது கடையை திறம்பட நடத்திக் கொண்டிருந்தாள். நாட்கள் மாதங்களைக் கடக்க, அவள் மணி வயிறு வளர்ந்தது.

***மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பிரிவில் நிஹாசினியை அனுமதித்திருக்க, மொத்த குடும்பமும் பதைபதைப்பாய் வெளியே காத்திருந்தது. அதுவும் நிஹாசினிக்கு இரட்டை குழந்தைகள் என்பதால், அறுவை சிகிச்சையை தவிர்க்க முடியவில்லை.

ராஜா பட வேலை விஷயமாக அமெரிக்கா சென்றிருக்க, அவனை அழைத்துச் சொல்ல முயன்ற அவர்களை நிஹாசினி தடுத்துவிட்டாள். ஏற்கனவே அவன் அந்த படத்தை தவிர்க்க முயன்றிருக்க, அவள்தான் கட்டாயப்படுத்தி அனுப்பி வைத்தாள்.

ஆனால்.., சிசேரியன் துவங்கப் போன நேரம்.., அவள் இடக்கரத்தை, நீல உடை அணிந்த ஒருவர் பிடிக்க, அது யாரென சட்டென உணர்ந்து கொண்டாள் ஹாசினி.

“ராஜ்..” அரை மயக்கத்தில் அவள் அழைக்க, “உனக்கு எப்போ தேவையோ அப்போ உன்னோட இருப்பேன்னு நான் ப்ராமிஸ் பண்ணேனே.., பிறகு எப்படி வராமல் இருப்பேன்..?” அவள் நெற்றியில் இதழ் ஒற்ற, அவள் கடைவிழியோரம் ஆனந்த கண்ணீர்.

அவளுக்கு இரட்டை ஆண் குழந்தைகள் பிறக்க, ஒரே கொண்டாட்டமாக இருந்தது. அவள் மயக்கத்தில் இருக்க, குழந்தைகள் இருவரும் சுஜாவிடம் ஒரு குழந்தையும், துளசியிடம் ஒரு குழந்தையும் இருந்தார்கள்.

குழந்தைகள் இருவரும் பிரித்தறிய முடியாதவாறு ‘ஐடண்டிக்கல் டுவின்ஸ்’சாக இருந்தார்கள். அதுவும் நிஹாசினியை உரித்து வைத்தாற்போல், அவளது நிறத்தில் ரோஜாப்பூவாய் இருந்த குழந்தைகளைப் பார்க்க தெவிட்டவில்லை.

மயக்கம் தெளிந்தவள் குழந்தைகளைப் பார்த்து பூரித்தாள். “அலை எங்கே..?” அவள் கண்கள் பெரியவளைத் தேடியது.

“அவ வினோ கூட இருக்கா.., சாயங்காலம் கூட்டி வர்றோம்..” ராஜா உரைக்க, அமைதியாக கேட்டுக் கொண்டாள்.

பிறந்த குழந்தைகளை விட, அலையை அவள் அதிகம் கவனிக்க, “ஏய்.., அலை வளந்துட்டா.., அவளையே தூக்கி வச்சுக்கற.., அவளை நாங்க கவனிச்சுக்கறோம். நீ குழந்தைகளை கவனி..” அவன் உரைக்க,

“எனக்கு அலைதான் ஸ்பெஷல்..” அவனுக்கு மட்டும் கேட்குமாறு உரைக்க, அதைக் கேட்டவனுக்கு பெரும் வியப்பு. அன்று கூட,

விவாகரத்து கேட்டபொழுது கூட, குழந்தையை தர மாட்டேன் என்று தானே சொன்னாள்.

அதை நினைவுபடுத்தி அவளிடம் கேட்க, “இவ உங்க காதலோட அடையாளம்.., அதை என்னால் எப்படி விட்டுக் கொடுக்க முடியும்..?” அவனிடம் கேட்டவன், கூடவே.., “இப்போ கூட நாம பிரிய முடியாது. இப்போ ரெட்ட குழந்தைங்க.., பிரிச்சுக்க கஷ்டமா இருக்கும்.., சோ..” குறும்பாக கண்ணாடிக்க,

“அடிப்பாவி.., உனக்கு ரொம்ப கொழுப்பாயிடுச்சு..” போலியாக அவள் காதைப் பிடித்து முறுக்க, முகம் கொள்ளா புன்னகையில் அவனை ஏறிட்டாள்.

அதே நேரம், கதவைத் தட்டிக்கொண்டு உள்ளே வந்தான் விநாயகம்.

“அண்ணா.., வாங்க.., என்ன உங்களைப் பார்த்தே ரொம்ப நாளாச்சு..” அவள் கேட்க, ராஜாவை பரிதாபமாக ஒரு பார்வை பார்த்துக்கொண்டு நின்றிருந்தான்.

ராஜாவிடம் அவன் வாங்கிய அடி கொஞ்சமா நஞ்சமா? அவன் வீடியோவை எடுத்ததற்கு அடித்திருந்தால் கூட தாங்கியிருப்பான். ஆனால்.., வீடியோவை சரியாக போக்கஸ் செய்து எடுக்கவில்லை, எனச் சொல்லி அடித்ததைத்தான் அவனால் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை.

கூடவே.., அதை ஏன் இத்தனை வருடமாக அவனிடம் காட்ட வில்லை எனக் கேட்டும் குமுறியிருக்க, நொந்தே போனான்.

“என்னண்ணா.., நான் கேட்டுட்டே இருக்கேன்.., நீங்க அவங்களையே பாத்துட்டு இருக்கீங்க..?” அவனைக் கலைக்க,

“ஆபீஸ்ல வேலை ஜாஸ்திம்மா..” உரைத்தவனது அலைபேசியோ ஒரு ஸ்டாட்டிங் மாடல் சாம்சங் போனாக இருந்தது.

“அண்ணா.., இந்த போனா யூஸ் பண்றீங்க? எங்கே உங்க ஆப்பிள் போன்?” அவனிடம் கேட்க, “அந்த மாடல் போன் யூஸ் பண்றது இல்லன்னு சபதம் எடுத்திருக்கேம்மா அதான்..” அவன் உரைக்க, ஆர்ப்பாட்டமாக சிரித்தான் ராஜா.

ராஜாவின் சிரிப்புக்கான காரணமும், விநாயகத்தின் முக இறுக்கத்துக்கான காரணமும் புரியாமல் விழித்தவள், ராஜாவை கண்களால் அடக்க, முயன்று சிரிப்பை அடக்கியவன், "மச்சான்.., மாமா ஆயிட்ட.., குழந்தைக்கு என்ன வாங்கிட்டு வந்த..?" அவனைச் சீண்ட,

"ம்.., செருப்பு.." கடுப்பாக உரைக்க,

"ரெண்டு ஜோடி வாங்கிட்டு வந்தியா..?" அவன் கோபத்தை கண்டுகொள்ளாமல் ராஜா கேட்க, அங்கேயே அவனை கொன்றுவிடும் வேகம் அவனிடம்.

"அடேய்.., நீ நல்லா வருவடா.., ரொம்ப நல்லா வருவ. என் வாயைப் புடுங்காதே சொல்லிட்டேன்..." கோபம் காட்டியவன், "இல்ல.., உன்னை இப்படியே விட்டா நீ சரிப்பட மாட்ட.., உன்ன.." நண்பனை அடிக்கப் பாய, ராஜா அறைக்குள்ளாகவே ஓட, பழைய ராஜாவை திரும்பக் கண்டவளுக்கு அவ்வளவு நிறைவு.

வாழ்க்கையில் தன் முன்கோபத்தால் எவையெல்லாம் இழந்துவிட்டோம் என ஒடுங்கிப் போயிருந்தவள், இன்று பழைய ராஜாவை மீட்டுவிட்ட பூரிப்பில் அவர்களையே பார்த்திருந்தாள். தன் மனைவியின் பார்வையை உணர்ந்து, நண்பனிடம் சில அடிகளை பெற்றுக் கொண்டவன், ஆதூரமாக அணைத்துக் கொள்ள, அப்பொழுது அங்கே வந்த பெரியவர்களின் மனமும் நிறைந்து போனது.

கூடவே.., சீனியும், கார்த்திகாவும் எங்கே வர, அவள் உரைத்த நல்ல சேதியில், அவர்களது மகிழ்ச்சி இரட்டிப்பு ஆனது. அவர்கள் அனைவரின் வாழ்க்கையும் இதேபோல் மலர்ந்து மணம் வீசிக் கொண்டிருக்கும் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை.

நன்றி.

INFAA ALOCIOUS